I
V211,31 N91
N92.10.2
161609

வெளியீடு 29-5-1992 Issued 29-5-1992

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
4 ஆக 1992
எழும்பூர், சென்னை-600008
4225

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, செப்டம்பர் 25, 1991 - தொகுதி 10 - எண் 2
Wednesday the 25th September, 1991 - Volume 10 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

V211.31 'N91

N91.10.2



பக்கங்கள்

7. மானியக் கோரிக்கைகள், 1991—92 விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி. 483—665

(அ) கோரிக்கை எண் 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம். 483—544

1. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா 483—484, 520—543
2. திரு. மா. சுந்தரதாஸ் .. .. 484—492
3. திரு. வெ. நடேசன் பால்ராஜ் .. 492—495
4. திரு. எ. தெய்வநாயகம் .. 495—499
*5. திரு. ஆ. கு. சீனிவாசன்.. .. 499—502
*6. திரு. உ. பலராமன் .. .. 502—508
*7. திரு. ச. இராமச்சந்திரன் .. 508—512
8. திரு. எஸ். எஸ். ராம சுப்பு .. 512—520

(ஆ) கோரிக்கை எண் 10 - பால் வழங்கு திட்டங்கள்.
(இ) கோரிக்கை எண் 21 - மீனவளம்
(ஈ) கோரிக்கை எண் 22- கால்நடை வளர்ப்பு
(உ) கோரிக்கை எண் 45 - காட்டு வளத்துறை.
(எ) கோரிக்கை எண் 59—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.
} 544— 549

1. மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் 544-549, 639—659
2. *திரு. எஸ். டேனியல் ராஜ் .... ..549—556
3. *திரு. ஆர். கோடிமாரி .. .. ..556—560
4. *டாக்டர் தே. குமாரதாஸ் .. ..560—570

161609



பக்கங்கள்

5. *திரு. பி. ஈஸ்வரமூர்த்தி .. .. ..571—574
6. *திருமதி க. பழனியம்மாள் .. ..574—578
7. *திரு. ஒ. ஆர். இராமச்சந்திரன் ..579—583
8. திரு. ஜி. பழனிசாமி .. .. ..584-589
9. டாக்டர் ச. சுந்தரராஜ் .. ..589—593
10. *திரு. தேனி பன்னீர்செல்வம் .. ..593—599
11. திரு. ஆர். தங்கராஜ் .. .. ..599—602
12. திரு. து. மூர்த்தி .. ..602—607
13. *திரு. வே. தம்புசாமி .. ..607—612
14. *திரு. எச். எம். ராஜு .. .. ..612—617
15. திரு. நா. சா. பழனிசாமி .. ..617—620
16. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் .. ..621—623
17. திரு. கே. குப்பன் .. .. ..624—626
18. *திரு. தா. வேடியப்பன் .. .. ..627—629
19. திரு. மா. சுந்தரதாஸ் .. .. ..629—639

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. ..665—667

இணைப்புகள் ..667—802

# உள்ளடக்கம்

25—09—1991.

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் .. 431—459

2. உரிமை மீறல் பிரச்சினை—

பேரவை குறித்து அவதூறாகக் கட்டுரை வெளியிட்டுள்ள இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா பத்திரிகை ஆசிரியர் மீதும் கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் என்பவர் மீதும். 459 469

3. தகவல் கோரல்—

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அரசு கருவூல பெண் ஊழியர் இருவர் கொலை செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து. 470—473

4. அறிவிப்புகள்—

பல்கலைக் கழகங்களின் ஆட்சி மன்ற நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு. 473—474

5. கவன ஈர்ப்பு—

(அ) தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகளுக்கு ரொக்கத்திற்கு உரம் வழங்காதது குறித்து. 475—480

(ஆ) தொட்டியம் தொகுதியில் உள்ள சில பகுதிகளுக்குக் காவிரி குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க சர்வே செய்தும் பணிகள் துவங்கப் பெறாதது குறித்து. 480—482

6. அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு .. .. 482—483

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 9, பிரஜோற்பத்தி - திருவள்ளுவர் ஆண்டு 2022
1991, செப்டம்பர் 25, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :
"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து, அவற்றை நீக்கிடும் ஆற்றல் மிக்க வினைத் திறனோடு செயல் படுவதே வரவேற்கத்தக்கதாகும்.

1. வினாக்கள் - விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள்.—
வினா எண் 68. திரு சோ. இராசாராமன், திரு. ஓ. எஸ்.
அமர்நாத், திரு. கே. ஆர். முருகானந்தம், திரு. ஆ. சுப்பு
ரத்தினம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

இதையொட்டிய பொருள் பற்றியதாகவே அடுத்த வினாவும் இருக்கிறது. எனவே அடுத்த வினாவும் இதோடு சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகிறது.

வினா எண் 69. திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். இரு கேள்விகளுக்கும் சேர்த்தே பதில் சொல்லலாம்.

மதுரையில் உயர் நீதிமன்றத்தின் பிரிவு அமைத்தல்.

1085. திரு. சோ. இராசாராமன்:
68-திரு. ஓ. எஸ். அமர்நாத்:
68. திரு. கே. ஆர். முருகானந்தம்:
68. திரு. ஆ. சுப்புரத்தினம்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

சென்னை 600 009

மாண்புமிகு திரு. மை. ரு. ஜருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நேற்று இரவே மானியக் கோரிக்கையின் போது மதுரையில் உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும், வாய்ப்புகளையும் தெளிவாகவே வெளியிட்டிருக்கிறேன். நேற்றையதினம் எனக்குக் கிடைத்த மேலும் ஒரு நல்ல செய்தி சென்னை உயர் நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி 3 நீதிபதிகளை நியமித்து, மீண்டும் அதனுடைய சாத்தியக் கூறுகளை, மதுரை சென்று நீதிபதிகள் தங்குகிற இடம், அதனுடைய வசதிகளை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு அனுப்புவதாக தகவல் அனுப்பியிருக் கிறார்கள். ஆகவே, இது துரிதப்படுத்தப்படும் என்பதையும் அந்த நல்ல செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 69.

69—திருச்சியில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு அமைத்தல்.

*1816 திரு. ம. சின்னச்சாமி :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) உயர்நீதிமன்றத்தின் பிரிவு திருச்சியில் ஏற்படுத் துமாறு மைய அரசுக்கு பரிந்துரை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உயர்நீதிமன்றத்தினுடைய பெஞ்ச் உருவாக் கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப் பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டம் 226-வது பிரி வின்படி மதுரையில் உயர்நீதி மன்றத்தின் பிரிவு ஒன்று அமைக் கப்பட வேண்டுமென்றால் மத்திய அரசினுடைய ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். மத்திய அரசு ஒப்புதல் வழங்கிவிட் டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே; கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பெற்றிருக்கிறது. துரிதமாக நடவடிக்கை எடுக்கப் பட இருக்கிறது.





திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய பிரிவு ஒன்றை அமைப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையிலே அங்கே இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் வாய்ப்புகளை எல்லாம் உயர்நீதிமன்றத்தினுடைய குழு ஒன்று வந்து பார்வையிட வேண்டுமென்று சொல்கிறார் கள். மூன்று மாவட்டங்களுடைய நீதிபதிகள், அந்த அலு வலகங்கள் எல்லாம் இப்போது அந்தந்த மாவட்டங்களுடைய தலைநகரங்களுக்கு, காமராஜர் மாவட்டம், பசும்பொன் தேவர் முத்து இராமலிங்கம் மாவட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மாற்றப்படுகின்றன. அந்தந்த கட்டடங்களுக் கான வசதிகள் மற்றும் வாய்ப்புகள் எல்லாம் அங்கே இருப் பதனாலே விரைவில் அது அமைக்கப்படக்கூடிய வழி இருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போலத்தான் அரசும் உயர்நீதிமன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. மாண்புமிகு தலைமை நீதிபதி அங்கே செல்கிறபோது இந்தச் சாத்தியக் கூறுகளை எல்லாம் அனுதா பத்தோடு பரிசீலனை செய்வார்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சிக் காலத்திலே மதுரை மாநகரில் உயர்நீதி மன்றத்தினுடைய பிரிவை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் துரிதப்படுத்தப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். மிக்க மகிழ்ச்சி. அப்படி அமைக்கப்பட இருக் கக்கூடிய உயர் நீதி மன்றப் பிரிவிலே எத்தனை நீதிபதிகள் இடம் பெற உள்ளார்கள்? அதே சமயத்தில் தற்சமயம் சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரே ஒரு பெண் நீதிபதி மட் டுமே உள்ளார். புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே எந்தத் துறையை எடுத்தாலும் பெண்களுக்கு சிறப்பான பிரதிநிதித்துவம் அளித்து வரக்கூடிய காலக் கட்டத்திலே இன்னும் நிரப்பப்பட இருக்கக்கூடிய 9 நீதிபதி பதவிகளிலே மேலும் சில பெண் நீதிபதிகள் நியமிக்கப்படு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாக பெண்களுக்கு உரிய இடத்தை, நியாயமான இடத்தை, எல்லா துறைகளிலும் நல்க வேண்டும் என்பதை அவர்கள் ஒரு உறுதியான

கொள்கையாக வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு நீதிபதிகள் நியமிக்கப்படுகின்றபோது, இதை அவர்கள் நிச்சயமாகக் கணக்கில் எடுத்துக் கொண்டு, உரிய நியாயமான இடங்களை பெண் நீதிபதிகளுக்கு அளிப்பார்கள்.

முற்பகல் 9.35

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தினுடைய பிரிவு மதுரையில் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால் நான் அது திருச்சியிலே வர வேண்டுமென்பதற்காகச் சொல்வதற்குக் காரணம், நம்முடைய இதய தெய்வம் அமரர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சென்னையில் இருக்கிற தமிழகத்தினுடைய தலைநகரைத் திருச்சிக்கு மாற்றலாமென்று ஒரு காலக் கட்டத்தில் தீவிரமாக, பரிசீலனை செய்தார்கள். திருச்சியை இரண்டாவது தலை நகரமாக்கலாம் என்று அன்றைக்கு அவர்கள் யோசனை செய்து கொண்டிருந்தார்கள். திருச்சியைப் பொறுத்த வரையில் பூகோள ரீதியாக தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கிறது. ஆகவே, மதுரையில் உயர் நீதிமன்றத்தின் பிரிவை ஏற்படுத்த கொள்கை அளவில் மத்திய அரசு ஒத்துக் கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை மறு பரிசீலனை செய்து மத்தியப் பகுதியாக இருக்கிற திருச்சிக்கு அது மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70— பேராசிரியர் (திருமதி) கவிநிலவு தர்மராஜ், திரு. வே. பெரியசாமி, திரு. ஆர். சிங்காரம், டாக்டர் சு. மணிமேகலை, திரு. வ. சத்தியமூர்த்தி, திரு. ப். கவியபெருமாள்— மாண்புமிகு கல்வி அமைச்சர்.

70 — மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியை பயிற்சி.

*318 பேராசிரியர் (திருமதி) கவிநிலவு தர்மராஜ்,
திரு. வே. பெரியசாமி
திரு. ஆர். சிங்காரம்
டாக்டர். (திருமதி). சு. மணிமேகலை
திரு. வ சத்தியமூர்த்தி
திரு. ப. கவியபெருமாள்

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—





தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகளில் நடத்திவந்த இடை நிலை ஆசிரியை பயிற்சியை மீண்டும் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே,

இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 31—8—1990-ல் உள்ள கணக்குப்படி சுமார் 54,570 பேர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் காத்திருக்கின்ற நிலையில், மேல்நிலைப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர் பயிற்சியை மீண்டும் கொண்டுவர அவசியமில்லை என அரசு முடிவு செய்துள்ளது.

பேராசிரியர் (திருமதி) கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்தமிழ், பெருந்தமிழ், நற்றமிழ் பொற்றமிழ், எத்திக்கும் புகழ் பரப்பும் தித்திக்கும் தேன்தமிழ் தெய்வத் தமிழ், தாய்த் தமிழ், கன்னித் தமிழ் என்னும் தமிழும் தமிழனும் தமிழ்த் தேவதையும் வாழ்த் திட, வணங்கிட, போற்றிட, புகழ்ந்திட, மங்கையரினுடைய பங்கை இந்த மாநிலம் முழுவதும் உரிமைக் குரல் கொடுக்கக் கூடிய அவையிலே பறைசாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நான் வணங்கும் நடமாடும் தெய்வம், எங்களுடைய மாண்பு மிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே முதல் நிலையிலிருந்து ஐந்தாம் நிலைவரை பெண்களே ஆசிரி யைகளாக நியமிக்கப்பட வேண்டுமென்று அன்பு ஆணை பிறப் பிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நாளிலே என்னுடைய மொடக்குறிச்சி தொகுதியிலே உள்ள பெண்கள் எல்லாம் மிகவும் பின் தங்கிய நிலையிலே, அதுவும் தனக்குத் தானே ஒரு வாழ்வை ஏற்படுத்திக் கொள்ளமுடியாத ஒரு சூழ்நிலை யிலே, தன்னம்பிக்கை இழந்து இருக்கக்கூடிய காரணத்தால் மேல்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர் பயிற்சியை இணைப்பதால் அரசுக்கு எவ்விதமான நிதி நெருக்கடியும் வராதென்ற சூழ் நிலையில், அதற்குத் தனிப்பட்ட ஆசிரியர்கள் நியமனம் செய்யவேண்டியதில்லை என்ற காரணத்தின் அடிப்படையிலும், பெண்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்ட வேண்டுமென்ற அடிப் படையிலும் மங்கையருக்கு வாழ்வளிக்க காத்துக் கொண்டி ருக்கக்கூடிய எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியிலே மொடக்குறிச்சி தொகுதியிலே மட்டுமல்ல, இந்த தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை தாய்மார்களும் பெருமைப்படக்கூடிய விதத்திலே மேல்நிலைப் பள்ளிகளிலே மீண்டும் ஆசிரியர் பயிற்சியைக் கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும் புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலிலே குறிப்பிட்டுள்ளதுபோன்று இப்போது பயிற்சி பெற்ற ஆசிரியை, ஆசிரியர்கள் மிகப் பெரிய அளவிலே வேலையில்லாமல் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற 96 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் ஆண்டுதோறும் சுமார் 4,200 பேர் பயிற்சி பெற்று வெளியிலே வந்துகொண்டிருக்கிறார்கள். அரசைப் பொறுத்த வரையில் 5,000 அல்லது 5,500 பேர்களுக்கு உள்ளேதான் ஆண்டுதோறும் ஆசிரியர் பயிற்சிக்கு இடம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போதுள்ள சூழ்நிலையில் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு 10 ஆண்டுகளாகும். இந்தப் பத்து ஆண்டுகளிலே ஆண்டுதோறும் 5,000 பேர்களுக்கு மேலே ஆசிரியர் பயிற்சி பெற்று வெளியிலே வந்து கொண்டிருப்பார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் எதிர்காலத்தைக் கணக்கிடாமல் இந்தப் பயிற்சியை அளிப்பதென்பது கல்வித் துறைக்கு உரிய கொள்கையும் அல்ல, அது இந்த நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றதுமல்ல.

முற்பகல் 9.40

அதிலும் இந்த ஆசிரியர் பயிற்சியைப் பொறுத்த வரை, இந்த ஆண்டு பயிற்சி பெற்றவர்கள் ஒரு பத்தாண்டு காலம் பொறுத்திருந்து அல்லது 15 ஆண்டு காலம் பொறுத்திருந்து வேலைவாய்ப்பைப் பெறுகிற ஒரு சூழ்நிலை வருமானால், 15 ஆண்டு காலத்திற்குப் பின்னால் கல்வி எவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்கும் என்பதை எண்ணினால் இன்றைக்கு ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்கிற ஆசிரியைகள் சரியான பயிற்சியைப் பெறவேண்டிய ஒரு மாணவராகத்தான் இருப்பார்களே, அவர் பயிற்சியை நடத்துகிற ஒரு ஆசிரியராக இருக்கமுடியாது. ஆகவே இந்த குறிப்பிட்ட ஆசிரியர் பயிற்சியைப் பொறுத்த வரையில், காலத்திற்கேற்றவாறு நாம் கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டும், திட்டமிட வேண்டும்.

அந்த வகையில்தான் இப்போது இந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தனியாக 96 என்ற எண்ணிக்கையில் நடந்து கொண்டிருக்கிறபோது, இந்த மேல்நிலைப் பள்ளிகளிலும் இந்தப் பாட வகுப்பைச் சேர்ப்பதற்குப் பதிலாக வேறு தொழில் கல்விக்கு அதிலே வாய்ப்பு அளிப்பது சிறந்ததாக இருக்கும் என்று அரசு முடிவெடுத்துள்ளது.





திரு. வே. பெரியசாமி : காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ; கரைசேர்த்தால் தாமரையின் வாசம் போமோ; பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ: பேரழகே தீந்தமிழே பெரியோய். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பெரியசாமி, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். கேள்வியாகத்தான் கேட்கிறேன்.

காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ;
கரைசேர்த்தால் தாமரையின் வாசம் போமோ;
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ;
பேரழகே தீந்தமிழே பெரியோய் உனைத்
திரையிட்டு மறைத்துவிட்டால் மறைந்தா போவாய்?

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப் போன்று, எங்கள் தானைத்தலைவி, தங்கத் திருமகளை, எந்தச் சக்தியாலும், எந்தக் கொம்பனாலும் அசைக்க முடியாது என்று சொல்லி இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில், தாய்மார்களுக்கு, பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற எங்களுடைய தலைவி அவர்கள் முன்பாக பெண்களுக்கு மேல்நிலைப் பயிற்சி அளிக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும், நான் அதை வற்புறுத்தாமல் விட்டுவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம், பெரியசாமி போல் இல்லாமல் கேள்வியாகக் கேட்கவும். (சிரிப்பு.)

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற தாய்மார்கள் எல்லாம் இளநிலைப் பயிற்சி பெற்று ஆசிரியப் பணி செய்ய வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அதிலும் தாய்க்குலத்தின் தானைத் தலைவி, புரட்சித் தலைவி ஆட்சியில், நம்முடைய தாய்க்குலத்தின் தலைவியின் ஆட்சியில் இருக்கின்ற காரணத்தால், இந்த நேரத்திலாவது தாய்க்குலம் எல்லாம் முன்னேறுவதற்கான வழிவகை உண்டா? பல்வேறு முயற்சிகளை செய்து கொண்டிருக்கிற நேரத்தில், மீண்டும் அதைப்

பரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், தனி நபர் பள்ளிகளில்
ரூ 15,000 என்றும் ரூ.20,000 என்றும் வாங்கிக் கொண்டிருக்கிறார்
கள். ஆகவே இந்தப் பள்ளிகளில் ஆசிரியர் இளநிலைப் பயிற்சியை,
துவக்க மீண்டும் பரிசீலித்து அரசு முடிவெடுக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1-வது வகுப்பு முதல் 5-வது
வகுப்பு வரை ஆசிரியைகளையே நியமிக்க வேண்டுமென்று
மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்
ஆணையிட்டு இருக்கிறார்கள். அதற்குப் பிறகு உயர்நிலைப்
பள்ளி அளவிலும் 50 சதவீதம் பேர் பெண்களையே
ஆசிரியைகளாக அமர்த்துவதற்காக முயற்சிக்க வேண்டு
மென்றும் ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே,
பெண்களுக்கு இந்த ஆசிரியர் பயிற்சியில் குறிப்பாக பெண்கள்
ஆசிரியைகளாக இருந்தால், அந்தப் பள்ளிக் கூடங்கள் ஒழுங்
காக நடைபெறும், தாய்மை உணர்வோடு அந்த ஆசிரியப்
பணி நடைபெறும் என்ற உணர்வோடுதான் மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆணையை பிறப்
பித்திருக்கிறார்கள். நான் முன்னாலே தெளிவாகக் குறிப்
பிட்டிருக்கிறேன். பெண்களையும் ஒரு பணிக்கு அல்லது
தொழிலுக்கு தயாரிக்கிறபோது தேவையான சூழ்
நிலைக்கேற்ப அவர்களை தயாரிக்கவேண்டுமே தவிர,
இன்றைக்குப் பெண்களை பி.ஏ., எம்.ஏ. என்று பட்டம்
பெற வைத்துவிட்டு அவர்களை எந்தப் பயனுக்கும் உப
யோகப் படுத்தாமல் அவர்களுடைய திறமையையும் பயன்
படுத்திக் கொள்ள முன்வராமல் வீட்டிலேயே அடங்கிக் கிடக்கிற
ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்குவதைப் போல, இந்த ஆசிரியப்
பயிற்சியையும் அவர்களுக்கு அளித்து எதிர்காலத்தில் எந்த
வேலையும் கிடைக்கவில்லை என்ற சூழ்நிலை உருவாகக்
கூடாது. என்ற காரணத்தினாலேதான் திட்டமிட்டு காரியங்
கள் நடைபெற வேண்டுமென்று கருதுகிற மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்த ஆசிரியர்
பயிற்சிக்கும் திட்டமிடுகிறது என்பதை அன்போடு தெரி
வித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

டாக்டர் (திருமதி) சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மேல் நிலைப் பள்ளிகளில்
நடத்தி வந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சியை மீண்டும்
கொண்டுவர முடியாத சூழ்நிலையில், தொழிற் கல்வியைக்
கூறினார்கள். அதிலே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து
அவர்களுக்கு முன்னுரிமையைக் கொடுப்பார்களா என்று
அறிய



மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி
யில் ஒரு சிறிய திருத்தம். அரசு கொண்டுவர முடியாது என்ற
காரணத்தாலே இதை நிறுத்தவில்லை. இப்போது கொண்டுவரத்
தேவையில்லை என்கிற காரணத்தாலேதான் இந்த ஆசிரியர்
பயிற்சி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே எந்த வேலைக்கும்
பெண்கள் உரியவர்கள்தான் எந்த வேலையையும் அவர்கள்
கற்றுக்கொண்டு செய்யமுடியும் என்பதைத்தான் இந்த நாட்
டிலே பெண்கள் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு
எடுத்துக்காட்டாகத்தான் தமிழகமே ஒரு புதிய வரலாற்றை
இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் படைத்துக்
கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட வேலை வாய்ப்புகளை
உருவாக்குகிறபோது மேல்நிலைப் பள்ளிகளில் 'வொகேஷனல்
ஸ்ட்ரீம்' என்று சொல்லப்படுகிற வேலை வாய்ப்போடு
இணைந்த கல்வியை அறிமுகப்படுத்துகிற ஒவ்வொரு பகுதி
களிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து அங்கே வேலை
வாய்ப்புக் கல்வி அறிமுகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 54,570 பேர் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள்
இருக்கின்ற காரணத்தினாலே அரசு மேல்நிலைப் பள்ளிகளில்
ஆசிரியர்கள் பயிற்சி தேவையில்லை என்று அரசு கருதுகிறது
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
அந்த நிலை இருக்கும்போது தமிழகத்தில் அரசு அங்கீகாரம்
பெற்றதாக தவறாக விளம்பரப்படுத்தி ஆசிரியர் பயிற்சியை
சில தனியார்கள் அளித்து வந்து அங்கீகாரம் பெறப்படாத
நிலையில் தேர்வு எழுதப்பட்டப் பிறகு கடந்த சில ஆண்டு
களில் அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. அப்படிப்
பட்டத் தவறு நடைபெறுவதற்கு சில தனியார் பயிற்சி
நிறுவனங்களில் முயற்சி நடைபெறுவதாகத் தெரிகிறது.
அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா?
அதனைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு இதற்கான
விளக்கத்தைக் கொஞ்சம் விரிவாகச் சொல்ல வேண்டுமென்று
நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி
அவர்கள் தெரிவிக்கிற இந்த தனியார் ஆசிரியர்கள் பயிற்சி
நிறுவனங்கள் என்பது தமிழகத்தில் ஒரு காட்டுக்குள்ளே
நுழைந்து வேட்டை ஆடுவதைப் போல ஒரு நிகழ்ச்சியாக

சில ஆண்டுகளாக நடைபெற்று வந்தன. அரசினுடைய அங்கீகாரம் பெறாமல், அனுமதியைப் பெறாமல் தனியார் அப்படிப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்கினார்கள். அதிலும் சிறுபான்மைப் பிரிவைச் சார்ந்தவர்கள் பெரும்பகுதியாக அத்தகைய நிறுவனங்களைத் தொடங்கினார்கள். அப்படி அவர்கள் தொடங்குவதற்கு அரசினிடத்திலே அனுமதியைப் பெறத் தேவையில்லை என்று அரசியல் சட்டம் வழங்கியிருக்கிற உரிமையின்படி நாங்கள் எங்களுடைய இஷ்டப்படி இந்த நிறுவனங்களைத் தொடங்கலாம் என்று தொடங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று மாணவர்கள் இடத்திலே 'காப்பிடேஷன் ஃபீ' என்று வெளியே தெரிந்தோ தெரியாமலோ ரூ. 25,000, ரூ. 20,000, ரூ. 15,000 என்று அவர்களிடத்திலே முதற் கட்டணம் வசூலிக்கப்பெற்று, அதற்குப் பிறகு டியூசன் ஃபீஸ், கல்விக் கட்டணம் எல்லாம் வசூலிக்கப்பட்டதைத் தெரிந்த அரசு எச்சரிக்கை செய்த நேரத்தில் அவர்கள் அந்த வகுப்புக்களையெல்லாம் முடித்ததற்குப் பிறகு பரிட்சை எழுதுகிறபோது அரசாங்கத்தினிடத்திலே வருகிறார்கள். அரசாங்கம் அவர்களை பரிட்சை எழுத அனுமதிக்க முடியாது என்று மறுத்தது. உடனடியாக உயர்நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். அரசியல் சட்டத்தின்படி ஒரு சிறுபான்மை பிரிவினர் தங்களுக்குள்ள அந்த உரிமையின்படி இந்த நிறுவனங்களை நடத்தலாம் என்று ஆணை கேட்கிறார்கள். உயர் நீதிமன்றமும் சரி, மனிதாபிமான அடிப்படையில் இப்படி அவர்கள் உரிமையின்படி நடத்தினாலும், அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்றாலும், இந்த மாணவர்களுடைய எதிர்காலம் பாழாகிவிடக் கூடாது என்று நீங்கள் இந்த ஆண்டு அவர்களுக்குத் தேர்வு எழுத அனுமதியளியுங்கள் என்று ஒவ்வொரு வருடமும் உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தது. அரசின் சார்பிலே உச்ச நீதிமன்றத்திலே நாம் மேல் முறையீடு செய்து சமீபத்தில் உச்சநீதிமன்றம் மிகத் தெளிவான, திட்டவட்டமான ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

முற்பகல் 9-50

சிறுபான்மைப் பிரிவினர், சிறுபான்மை வகுப்புகளை, மதத்தைச் சார்ந்தவர்கள் தங்களுக்கு உள்ள அந்த உரிமையோடு, இந்த நிறுவனங்களைத் தொடருவது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், அரசு அவர்களைத் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டுமானால், அப்போது அவர்கள் இந்த அரசினுடைய சட்ட திட்டங்களுக்கு, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஆக வேண்டும். ஆகவே, அரசாங்கம் இதிலே மிகத் தெளிவாக இருக்கலாம். அரசு விதிகளுக்கு உட்பட்டுத்தான் இனிமேல் இத்தகைய பயிற்சி நிறுவனங்கள் நடைபெற வேண்டும் என்று மிகத் திட்டவட்டமான ஒரு



தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கி இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே தான் இன்றைக்கு பல்வேறு தனியார் நிறுவனங் கள் மாணவர்களுக்கு பயிற்சியை அளித்ததற்குப் பிறகு பரீட்சை எழுத வேண்டுமென்று அரசாங்கத்தினிடத்திலே இப்போது கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில பயிற்சி நிறுவனங்கள் நாங்கள் நீண்ட காலமாக நடத்திக் கொண்டி ருக்கிறோம்; எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவைகளை மிகுந்த எச்ச ரிக்கையோடும், கவனத்தோடும் அரசு பரிசீலித்துக் கொண்டி ருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைக்கு அந்தப் பரிசீலனை அனுப்பப்பட இருக்கிறது.

மாண்புமிகு சத்தியமூர்த்தி போன்றவர்கள் இவைகளைத் தடுக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நான் உங்கள் மூலம் இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்வேன். இத்தகைய முறையற்ற ஒரு கட்டுப்பாடற்ற சூழ்நிலை வளருவதற்கு தெரிந்தோ தெரி யாமலோ நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக இருந்துவிடக்கூடாது என்கிற வேண்டுகோளையும் வைத்து இன்றைக்கு அரசினுடைய நிலை, இப்படி கட்டுப்பாடற்ற யாருக்கும் கட்டுப்படமாட்டோம் என்கிற உணர்வோடு ஆரம் பிக்கப்பட்ட நிறுவனங்களைப் பற்றி அரசு மிகுந்த எச்சரிக் கையோடும், இன்னும் கண்டிப்போடும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி கடந்த காலத்தில் தொடங்கப்பட்டது இப்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது தனியார் அந்தப் பயிற்சி நிலையத்தைத் தொடங்கி நடத்துவதை அரசு அறி யுமா அல்லது அதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கலியபெருமாள், அமைச்சர் இவ்வளவு விரிவாகச் சொன்னார். அரசு அறிந்து தான் இவ்வளவு விளக்கமும் உங்களுக்கு சொல்லி இருக்கிறார். நீங்கள் 'அறியுமா' என்று கேட்கிறதைவிட, அதைப் பற்றி வேறு ஏதாவது கேள்வி இருந்தால் கேளுங்கள். தடுக்க சட்டம் வருமா என்று கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள் : அதைத் தடுக்க சட்டம் வருமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் வழங்கி இருக்கிற உரிமையைப் பயன்படுத்தி சிறு

பான்மைப் பிரிவினர் தொடங்கி விடுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் அப்படித் தொடங்க முடியாது. அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் தொடங்க வேண்டும். ஆனால், அரசியல் சட்டத்தைப் பயன்படுத்தி சிறுபான்மைப் பிரிவினர் தான் அப்படித் தொடங்கி இருக்கிறார்கள். ஆகவே, தொடக்கத்திலே நிறுத்துவதற்கு நம்மிடத்திலே இப்போது அதிகாரம் இல்லை. தொடங்கியதற்குப் பிறகு பரிட்சை எழுத வேண்டுமென்று வருகிறபோது அந்த வாயிற்படியிலே அரசாங்கம் நிற்கிறது. ஆகவே, காவல்காரனாக நின்றுகொண்டு, பரிசோதனை போட்டு உள்ளே அனுப்புகிற அந்த இடத்திலே தான் அரசு நிற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதிலே சட்டம் கொண்டுவருவது என்பது எல்லோருக்கும் பொதுவான ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த மக்களால்தான் இப்படி முயற்சிகள் நடக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சிறுபான்மைப் பிரிவு என்று சொல்லுகிற பொழுது இதிலே இரண்டு வகையான கருத்துக்கள் நிலவுவதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக்கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஆர்கனைஸ்டு சர்ச், அன்-ஆர்கனைஸ்டு சர்ச் என்று கிறிஸ்தவ சபைகளிலே சொல்கிறார்கள். அதாவது தொண்டு செய்வதற்காகப் பிறந்து இருக்கிற நிறுவனங்கள் வேறு; மைனாரிட்டி என்கிற ஒரு அந்தஸ்தை வைத்துக்கொண்டு பணம் பண்ணுகிற பிரிவு வேறு. இது இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை அமைச்சர் நிச்சயம் உணர்ந்து இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். எனவே இப்பொழுது மைனாரிட்டி ஸ்டேடஸ் வேண்டுமென்று சொன்னால் சிவில் கோர்ட்டிலே போய் ஒரு சூட் தாக்கல் செய்து, இது மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன் என்று ஒரு டெக்ளரேஷன் பெறுகிறார்கள். அதை மாற்றி, அரசே ஆதற்காக ஒரு டிரிப்யூனலை நியமித்து, உண்மையிலேயே தொண்டு செய்கிற நிறுவனங்களை மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன் என்று டெக்ளர் செய்வதற்கு அரசே முன்வருமா? கல்வித் துறையிலே அதற்காக ஒரு பிரிவு, ஒரு விசாரணை அதாவது இப்பொழுது டிரான்ஸ்போர்ட்டிலே ஒரு ஜுடிஷியல் மெம்பரை போட்டு இருப்பதைப்போல கல்வித் துறையிலே அப்படி ஒரு அமைப்பை ஏற்படச் செய்து, எது உண்மையான மைனாரிட்டி, எது போலி மைனாரிட்டி என்று



பார்த்து, எந்த மைனாரிட்டி உணர்வுகளைப் பாதுகாப்பதற்காக அரசியல் சாசனம் இயற்றப்பட்டதோ that spirit of the Constitution நிறைவேறுவதற்கு அரசே ஒரு ஏற்பாடு செய்யுமா? ஒட்டு மொத்தமாக எல்லா தொண்டு நிறுவனங்களுக்கும் இந்தக் கெட்ட பெயர் வந்து, சேவை செய்யக்கூடிய நிறுவனங்கள் கூட மக்கள் மத்தியிலே ஒரு அவப்பெயர் பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? அதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று ஆர்கனைஸ்டு சர்ச், அன் ஆர்கனைஸ்ட் சர்ச் என்று சமுதாயத்திற்குள்ளே இருப்பதைப் போன்று அந்தப் பிரிவுகளைப் பற்றி நமக்கு ஓரளவுக்குத்தான் தெரியும். ஆனால் இந்த நிறுவனங்களை நடத்த முன்வருபவர்கள் எந்தத் தலைப்புக்குள்ளே வருகிறார்கள் என்பதைச் சமுதாயத்தைச் சார்ந்த அமைப்புகள், சமுதாயத்திற்கு தலைமையேற்கிற சான்றோர்கள்தான் நிர்ணயித்துச் சொல்ல முன்வர வேண்டும். இப்போது மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப் போல அவர்களே முயன்று, கிருஸ்தவ சமயப் பெரியார்களிடத்தில், அதிலே இருக்கிற பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த தலைவர்களிடத்தில் சொல்லி அதற்கு நெறிமுறைகளை வகுத்து அரசுக்கு வழங்குவார்களானால் அரசு அது பற்றி பரிசீலிக்கும்.

முற்பகல் 9-55

மேலும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதுபற்றி யெல்லாம் அரசாங்கமும் பரிசீலித்து, எது உண்மையில் தொண்டு நிறுவனம், எது போலியாகப் பணம் சம்பாதிப்பதற்காக பெயரை வைத்துக்கொண்டு வருகிற, வேஷம் போடுகிற தொண்டு நிறுவனம் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக ஒரு குழு அமைத்து அரசு உதவி செய்யுமா என்று கேட்டார்கள். இன்றைக்கு இந்தியாவினுடைய சூழ்நிலையில் அரசியல் சட்டத் திலே பல்வேறு பிரிவுகள் விவாதத்திற்கு, பரிசீலனைக்கு உட் படுத்தப்பட்டு ஒரு மாறுதல் கட்டத்தில் இருந்து கொண்டி ருக்கிற காலம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய ஆலோசனையையும் அரசு பரிசீலிக்கும். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே முயன்று, அந்தச் சமயத்தைச் சார்ந்த சான்றோர்களிடத்தில் சொல்லி, அதற்கு ஒரு வரன்முறை, நெறிமுறையை உருவாக்குகிற அந்தத் திட் டத்தை அல்லது கருத்துருவை அரசாங்கத்திற்கு அளிப்பார் களேயானால் அரசாங்கம் மிகுந்த நன்றியோடு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசு நிறுத்தும் போது இதில் தனியார் பள்ளிகளும் சேர்ந்து அடங்குமா? குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெங்களூர் போன்ற இடங்களில் படித்து வேலையற்ற பல் வேறு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தமிழக அரசால் கல்வித் துறையால் அவர்களுடைய சான்றிதழ்கள் எவாலு வேஷன் பண்ணப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்குமா என்பதை அறிய விரும் புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய தகவலைத் தருகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் இல்லாமல், வேறு மாநிலங்களிலிருந்து பயிற்சி பெற்றவர்கள் வேலைக்காக காத்திருக்கிறார்கள். என்று சொல்கிறார்கள். ஆகவே, நம்முடைய கருத்து இன்னும் வலுப்பெறுகிறது. ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதா, இல்லையா என்பது அல்ல. எவ்வளவு காலத்துக்கு முன்னால் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கிறார் ள் என்பதைப் பார்த்து தான் முன்னுரிமை அளிக்க வே டி ருக்கிறது. அதே நேரத் தில் மிகப் பழைய காலத்தில் ப ன்றவர்கள் என்ற காரணத் தால், இப்போது வேலை கொடுத்தால், இன்றைக்கு இருக்கிற மாணவர்கள் சில சமயங்களில் ஆசிரியர்களைவிட மிகக் கெட்டிக்காரர்களாக வளர்கிறார்கள். ஆகவே, அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டுதான் இந்த முடிவு எடுக் கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 71 திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

71—

பீடி சுற்றும் பெண் தெ ழிலா ர்களுக்குத் தனி ப ஸ் புத்தகம் வழங்கல.

*43. திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில், பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களுக்கு போது மான அளவு தூள், இலை மற்றும் தனி பாஸ் புத்தகம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பான விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

பீடித் தொழிலாளர்களுக்கு பீடி சுற்றுவதற்குத் தேவை யான மூலப்பொருட்கள் வழங்குவதில ஏற்படும் தகராறு தொடர்பாக 1968-ம் ஆண்டு தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளின் விதி 32-ன் கீழ் சம்பந்தப்பட்ட தொழிலாளர் ஆய்வா ளர் முன்பு கோரிக்கை மனு தாக்கல் செய்து நிவாரணம் காண வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, போதிய அளவு இலை, தூள் வழங்கப்படாமலிருந்தால் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் திருநெல்வேலி தொழிலாளர் ஆய்வர் முன்பு தாவா எழுப்பி நிவாரணம் காணலாம். இருப்பினும் ராதா புரம் பகுதியிலுள்ள பீடி நிறுவனங்களை ஆய்வு செய்து தொழிலாளர்களுக்குப் போதுமான அளவு மூலப் பொருட்கள் பீடி சுற்றுவதற்கு வழங்கப்படுகிறதா என்பதை விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் துணை ஆணையர் மற்றும் தொழிலாளர் ஆய்வாளர் ஆகியோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பீடித் தொழிலாளர்கள் பீடி நிறுவனத்திலிருந்து புகையிலை தூள் வெளியே எடுத்துச் சென்று தங்களது வீட்டில் வைத்து பீடி சுற்றி அவ்வாறு தயாரித்த பீடியை நிறுவனத்தில் ஒப் படைப்பதை கண்காணிப்பதற்காகவும் கணக்கு வைப்பதற் காகவும் மத்திய சுங்க வரி ஆய்வாளர்களின் சான்றொப்பத் துடன் நிர்வாகத்தினரால் தொழிலாளர்களுக்கு பாஸ் புத்தகம் வழங்கப்படுகிறது. இப்புத்தகம் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் அல்லது தொழிலாளர் துறையில் வழங்கப் படுவதில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பீடித் தொழிலை மேற்கொண்டு செயல்படுகிற பெண்மணிகள் நிறைய பேர் கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது ஒரு நபர் - ஒரு ஆணை தான் வைத்துக்கொள்கிறார்கள். அந்த ஆணுக்கு ஒரு பாஸ்புக் இருக்கிறது. அதைப் பயன் படுத்தித்தான் பல பெண்கள் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருக்கும் போது பேறு காலத்துற்கான உதவித் தொகை, மருத்துவ உதவிகள் எல்லாம் பெற முடி யாமல் போகிறது. அதுமட்டுமல்லாமல் படிக்காத பெண்கள் சில நேரங்களில் கணக்கை சரியாக வைத்துக் கொள்ள முடி யாத சூழ்நிலை ஏற்படுகிறது. அவர்கள் சொல்வது தான்

[1991 செப்டம்பர் 25
[திருமதி ரமணி நல்லதம்பி]

கணக்கு என்று வருகிறபோது, அந்த விவரமுள்ள பாஸ்புக் ஹோல்டர்ஸ் இவர்களைச் சுரண்டி பிழைப்பதற்கு, அல்லது இவர்கள் பணத்தை கைப்பற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தொழிலைச் செய்கிற ஒவ்வொரு பெண்ணும் மனு கொடுத்தால் அவர்களுக்கு ஒரு பாஸ்புக் அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத்தலைவர் அவர்களே, இப்படி பெண்களுக்கு பாஸ்புக் கிடைக்காமல் பெண்கள் தொழில் செய்வது சட்டப்படி வெளியே தெரியாமல் போகிற காரணத்தால், பெண் தொழி லாளர்கள் உரிய உரிமைகளை அவர்கள் அனுபவிக்க முடி யாமல் இருக்கிற இந்த நிலைமைகள் அரசுக்கு தெரியப் படுத்தப்பட்டிருக்கிறது. அதன்பேரில் வீட்டுக்கு வீடு ஆய்வு செய்து அந்தப் பெண் தொழிலாளர்களை இனம்கண்டு அவர்களுக்கு தக்க உதவி செய்வதற்காக 6 உதவி ஆய்வர் பதவிகள் தேவையென்று துறையில் கேட்டார்கள்.

அது இந்த நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கப்பட்டு, அது அனுமதி பெற இருக்கிறது. அப்படி புதிய ஆய்வாளர்கள் வந்த தற்குப் பிறகு, அவர்கள் மேற்கொண்டு தீவிரமாக வீட்டுக்கு வீடு ஆய்வு செய்து, அந்தப் பெண் தொழிலாளர்களுடைய நிலைமைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர இருக்கிறார்கள். பாஸ் புத்தகங்கள் தருகிற அதிகாரம் சுங்க வரி இலாக்காவிற்கு, அதாவது மத்திய அரசுக்கு இருக் கிறது. ஆனால் தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. அந்த அடிப்படை யிலே இப்போது புதிதாக பதவிகளுக்கு வர இருக்கிற 6 உதவி ஆய்வாளர்களைப் பயன்படுத்தி நாம் இந்தக் குறைபாட்டை தீர்க்க முயற்சிக்கலாம்.

முற்பகல் 10.00

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்தப் பீடித் தொழிலை நடத்துகின்ற அந்த முதலாளிமார்கள் அந்த தொழிலைச் செய்கின்ற பெண் மணிகளுக்கு கொடுக்கின்ற தூளும், இலையும் அளவு குறைவாக இருக்கிறது. அதனாலே அவர்கள் தங்களுடைய ஊதியத்தி லிருந்து அதிகத் தொகையைக் கொடுத்து வாங்கிச் செய்யும் போது, அவர்களுடைய ஊதியத்திற்குரிய வருவாய் குறை கிறது உழைப்புக்குரிய வருவாய் குறைகிறது. ஆகவே, இப்படிப் பெண்மணிகள் ஆங்காங்கே குறை கூறுவார்களே யானால், அதை நிவர்த்தி செய்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 25]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த பீடி இலையை வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறார்கள். அதனுடைய தரத்திற்கு ஏற்றபடியும் அளவுக்கு ஏற்றபடியும், பீடிகளைச் சுற்றி இந்தத் தொழிலாளர்கள் தர வேண்டியதாக இருக் கிறது. ஆகவே, வேலை தருகின்ற முதலாளிமார்கள் இவ்வளவு பீடி என்று நிர்ணயித்த அளவை குறிப்பாக வைத்துக் கொண்டு, அதை எதிர்பார்க்கிறார்களே தவிர, அதற்குத் தேவையான மூலப் பொருள்களைத் தந்திருக்கிறோம் என்ற அந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்றுவதில்லை என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற பிரச்சினையாகும். இது தொடர்பாக நாம் ஆய்வை நடத்தியதில, 15 தொழி லாளர்களுக்கு தரப்பட்ட மூலப்பொருட்களை நாம் கணக் கிட்டுப் பார்த்ததில், அதிலே 12 பேர்களுக்கு சரியாகத் தந்திருக்கிறார்கள். 3 பேர்களுக்கு சரியாகத் தரவில்லை, என்று கண்டிருக்கிறோம். குறைவாகத் தரப்பட்டாலும் அந்தத் தொழிலாளர்கள், அதை எதிர்த்து நம்முடைய கவனத் திற்குக் கொண்டுவர முடியவில்லை. காரணம் வேலை போய் விடும் என்று அச்சப்படுகிறார்கள். இருப்பினும், நாம் ஒரு முறையான ஆய்வை மேற்கொள்ள இருக்கிறோம். அதற் கான அறிவுரைகள் அதிகாரிகளுக்கு தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். நாகூர் மீரான்.

திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பீடி சுற்றுகின்ற தொழி லைப் பரவலாக தாய்மார்கள் மேற்கொண்டிருக்கிறார்கள், எனவே அவர்களுக்கு பாஸ் புத்தகம் இருந்தால்தான், போனஸ், மருத்துவ வசதி போன்றவைகளைப் பெறமுடியும். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தளவிலே, ஒருசில பெரிய பீடி முதலாளிகள் தான் இத்தகைய பாஸ் புத்தகங்களை வழங்குகிறார்கள். சிலர் போலி பீடி கம்பெனிகளை வைத்துக் கொண்டு, பாஸ் புத்தகங்களை வழங்காமல், பீடித் தொழிலாளர்கள் நசுக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, இத்தகைய போலி பீடிக் கம்பெனிகளின் அதிபர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசுக்குப் புகார் செய்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடி சுற்றும் தொழிலில் பெரும்பாலான பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதி முழுவதிலுமே, அந்தத் தொழில் அதிகமாக இருக்கிறது. ஆனால், அந்தப் பெண்கள் கிராமத்திலேயிருந்து அந்த மூலப்பொருட்களை வாங்குவதற்கு அந்த கடைக்கு வந்து போய், மீண்டும் தாங்கள் சுற்றிய பீடிகளை அந்தக் கடையிலே கொடுத்து பணம் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு அந்த மூலப் பொருட்களை வீடுகளிலேயே கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி ஒரு வழக்கு உச்ச நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டு அதிலே அவர்களுடைய 11 பிரச்சினைகளை, இங்கே குறிப்பிட்ட பெண் தொழிலாளர்கள் பிரச்சினைகள் உட்பட 11 பிரச்சினைகளைத் தனிமைப்படுத்தி, அதைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அந்த அடிப்படையிலே நாம் முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்டி, பீடி நிர்வாகம், பீடித் தொழிலாளர்கள் ஆகியோர் பிரதிநிதிகளும், பொது சேம நல நிதி அமைப்பு மற்றும் மத்திய சுங்க வரித் துறை அதிகாரிகளும், நம்முடைய தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு திட்டம் தயாரித்து அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே இந்தப் பிரச்சினையும் வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 72, திரு. கே. தவசி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

72—

ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனை யாக்குதல்.

*791 திரு. கே. தவசி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆண்டிப்பட்டியில் செயல்பட்டு வந்த அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதை



மீண்டும் அரசு மருத்துவமனையாகவே மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆண்டிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற பகுதி II திட்டத்தின் கீழ் செயற் குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நுண்கதிர் வசதியும் பொருத்தப்பட்டுள்ளது.

(ஆ) அரசின் ஆணை வெளியிட்ட பின்பு, மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10.05

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு முதலமைச்சராகவும் இருக்கிறபொழுது முதலில் ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தது அரசு மருத்துவமனைகளாக செயல்படும் என்று அறிவித்தார். அதற்கேற்ப எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்பட்டு இன்னும் செயல்படவில்லை. படுக்கைகள் வாங்குவதற்கான அனுமதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தற்போது ஆண்டிப்பட்டி மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாகவே உள்ளது. மேலும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது இரண்டு ஆண் மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். பெண் மருத்துவர்கள் இல்லை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. தவசி : எனவே இப்போதுள்ள சூழ்நிலையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சில குறிப்பிட்ட மருத்துவமனைகளை அப்'கிரேட்' செய்து அறிவிப்பதாக இருக்கிறார். அது இந்த ஆண்டில் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டுக்கு முன்பு அது அரசாங்க மருந்தகமாக இருந்தது. 1—6—87-லே அது ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. அன்றையிலிருந்து அது ஆரம்ப சுகாதார நிலையமாகத்தான்

இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அங்கே போதிய அளவிற்கு மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. இப்போது அது தாலுக்கா தலை நகரமாக உயர்த்தப்பட்டிருக் கின்ற காரணத்தால் 32 படுக்கைகளைக் கொண்ட தாலுக்கா மருத்துவமனையாக அதை நிலை உயர்த்த வேண்டுமென்று கருதி, இப்போது அரசாங்கத் துறையின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் திட்டத்திலே அதை சேர்க்கிற அளவிற்கு அது வந்து சேரவில்லை. அடுத்த ஆண்டு அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தேனி பன்னீர் செல்வம்.

**திரு. தேனி பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனைகளாக மாற்றுகின்ற இந்த நிலையிலே மதுரை மாவட்டத்தில் இதே போன்று, ஆரம்ப சுகாதார நிலையங்களை மீண்டும் அரசு மருத்துவ மனைகளாக மாற்று கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படியிருந்தால், எங்களுடைய போடி தொகுதி யில் தேவாரத்திலுள்ள......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஆண்டிப்பட்டி. முதல் கேள்வியோடு நிறுத்திக் கொள்ளுங்கள். காரணம் ஸ்பெசிபிக்காக பதில் வராது.

**திரு. தேனி பன்னீர்செல்வம் :** ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்று கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போடுகின்ற பொழுது அதற்கு முழு விளக் கத்தையும் சொல்ல முடியும். எனவே, இந்த ஆரம்ப சுகா தார நிலையத்தைப் பொறுத்த வரையில், அதற்குத் தேவை யான பணியாளர்களை நியமிப்பதைப்பற்றி திட்டம் 2-ன் கீழ் அதற்கான பரிசீலனைக்கு இப்போது அனுப்பியிருக்கிறார் கள். அதையும் கூட அடுத்த ஆண்டுதான் பரி சீலிக்கமுடியும். மதுரை மாவட்டம் முழுவதும் எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை உயர்த்துவது என்பதைப் பற்றிய தகவல் இப்போது என்னிடமில்லை. அதைப்பற்றி தனியாக கேள்வி போடுகின்ற போது தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.



**சங்கரத்தேவன்கால் அணைக்கட்டு மற்றும் பாளையாறு அணைக்கட்டு கட்டுமானப் பணிகள்.**

73—
*213. **திரு. வ. சத்தியமூர்த்தி :**
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம்,
கடலாடிப் பகுதியில் சங்கரத்தேவன்கால் அணைக்கட்டு
மற்றும் பாளையாறு அணைக்கட்டுகளின் கட்டுமானப் பணிகள்
தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,
மேற்படி கட்டுமானப் பணிகளை 1991—92 ஆம்
ஆண்டுக்குள் எடுத்து முடிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சங்கரத்தேவன் கால்வாய் என்பது ஒரு தனித்
திட்டம். பாளையாறு என்பது ஒரு தனிதிட்டம்
இரண்டு திட்டங்களிலும் ஒரு பகுதி வேலைகள்
நடைபெற்று பாதியில் முடக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மிகுதி
தொகை எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்பு
மிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
குறிப்பிட்டதைப் போல் இரண்டும் வெவ்வேறு திட்டங்கள்
என்பதை இந்த அரசு அறியும். அந்தத் திட்டத்திலே ஊரக
வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைகள் நடத்தப்பட்டு,
அதிலே குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான உரிய
நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத்
திட்டம் இடையிலே தடைபட்டுவிட்டது. இந்த அரசு
வந்தவுடனே நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு
இந்தத் திட்டத்தைப் பற்றி கவனத்திற்கு கொண்டு வந்து,
உடனே உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்து, சங்கரத்
தேவன்கால்வாயை சீரமைப்பதற்காக ஏறத்தாழ
ரூ. 85 இலட்சமும், பாளையாறு அணைக்கட்டுத் திட்டத்திற்
காக சுமார் ரூ. 4.36 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டி
ருக்கிறது. ஏற்கனவே இந்தத் திட்டத்திலே குறைபாடு இருந்த
காரணத்தினால் இந்த திட்டம் நிறுத்தப்பட்ட காரணத்தினால்
கண்காணிப்புப் பொறியாளர் அளவிலே ஒருவரை நியமித்து
அந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று
உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, கண்காணிப்புப்பொறியாளர்
அளவில் அருப்புக்கோட்டை வட்ட கண்காணிப்பு

[1991 செப்டம்பர் 25

பொறியாளரை நியமித்து, இந்தத் திட்டத்தை உடனடியாக நல்ல முறையிலே இந்த ஆண்டுக்குள் முடித்து தரப்படும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களும் 1982-ல் 'புட் ஃபார் வொர்க்' என்ற திட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டு என்.ஆர்.இ.பி. என்ற திட்டத்திலே உயிர் கொடுக்கப் பட்டு, ஆர்.எல்.இ.ஜி.பி. என்ற திட்டத்தில் 1986-87 ஆம் நிதி ஆண்டில் துவக்கப்பட்டது. அடுத்து வந்த ஆளுநர் ஆட்சியிலே முடக்கப்பட்டு விட்டது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : கடந்த இரண்டாண்டு தி.மு.க ஆட்சியில் கேட்பாரற்ற நிலையில் இருந்தது. ஏழை விவசாயிகளுடைய தேவை தன்னுடைய தலையாய சேவை என்று கொண்டுள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் உங்களுடைய கண்காணிப்பு பொறியாளருக்கு நடப்பு பாசனத்திற்கு பயன்பெறுகிற வகையில் இதை உடனடியாக துவக்க வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பி, நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அரசை பொறுத்தமட்டிலும் அவருடைய அரசு சில திட்டங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி காலதாமதம் செய்வதைக் கூட விரும்பவில்லை. இந்தத் திட்டம் முக்கியமான திட்டம் என்ற காரணத்தால், கடந்த கால அரசு இதை கிடப்பிலே போட்டிருந்தாலும் நான் ஏற்கனவே கூறியதைப் போல் நம்முடைய அரசு பொறுப்பேற்ற உடனேயே உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நான் ஏற்கனவே கூறியது போல கண்காணிப்புப் பொறியாளரை வைத்து இத்திட்டம் இந்த ஆண்டிற்குள் முடிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 751. திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.



1991 செப்டம்பர் 25]

74—கள்ளக்குறிச்சி நகரில் மாற்றுப்பாதை அமைத்தல்.

*751. திரு ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கள்ளக்குறிச்சி நகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்றுப்பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இம்மாற்றுப் பாதை அமைக்கும் திட்டம்ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதரசு"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப வருகிற வருமானத்தை வகுத்து செலவு செய்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் இந்த நெருக்கடியான நிதி நிலையிலும் சாலை போக்குவரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பதால், கள்ளக்குறிச்சியின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல இந்த சாலைகளுடைய முக்கியத்துவத்தை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் சாலைகள் ஒழுங்காக முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்பது தான் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டமாகும். இருந்தாலும் தமிழகம் முழுவதும் ஒரே ஆண்டு காலத்திற்குள்ளாக அவைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்றால், பல கோடி ரூபாய் தேவையிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையை ஏற்று இந்த பிரச்னை குறித்து இந்த நிதி ஆண்டில் முடியா விட்டாலும், அடுத்த நிதி ஆண்டில் கனிவோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி)

[1991 செப்டம்பர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கள்ளக்குறிச்சி பை-பாஸ் பற்றிய கேள்வி. வினா எண். 75. திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

75—

குடவாசல் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையைப் பழுதுபார்த்தல்

*1550. திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையை பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றிகூறி, இந்த ஆய்வு மாளிகை மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கிறது. இந்தப் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற குடவாசல் பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை 1930-லே கட்டப்பட்டது. பல ஆண்டு களாக அந்த மாளிகை சீரமைக்கப்படாமல் மிகவும் மோச மான நிலையிலே இருந்து வந்தது. நம்முடைய இதய தெய்வம் ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்கள், ஆட்சியிலே இந்த குறைபாடுகள் நம்முடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நேரத்திலே உடனடியாக இந்த அரசு 35 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி 5—9—1991-ஆம் நாளன்று ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு இன்றைக்கு வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகவும் சீர்கேடான நிலையில் இருப்பதாலும், பல ஆண்டுகளாக பணி துவக்கப்படாமல் மாசமான நிலையில் இருப்பதாலும், இந்தப் பணம்



1991 செப்டம்பர் 25]

போதாது என்ற நிலையில் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற நிலையில் வேண்டுகோளை வைத்து அவ்வாறு செய்யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு மாளிகை என்று வருகின்ற போது அடிப்படை வசதிகளை முதலிலே செய்து கொடுப்ப தற்கு இந்த அரசு முன்வந்து இருக்கிறது. ஆகவே இப் போது கொடுக்கப்பட்டிருக்கின்ற பணத்திலே முறையாக தங்குவதற்கு அந்த மாளிகையில் வசதிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இப்போது ஒதுக்கப்பட் டிருக்கின்ற தொகை அளவிலேயே நல்ல முறையிலே அந்த பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை சீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 76. திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

76—

சத்துணவுக் கூடங்கள் நன்கொடை மூலம் கட்டுதல்

*3325 திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவுக் கூடங்களை தொழில் அதிபர்களின் நன்கொடை மூலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதற்கான மதிப்பீடு எவ்வளவு?

(இ) இதனால்அரசுக்கு மிச்சப்படுகிற நிதி எவ்வளவு?

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) & (ஆ) & (இ) சமூக நலத்துறையினுடைய மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இதற்கு விளக்க மான பதிலை மாவட்ட வாரியாக தெரிவிக்கப்பட்டுவிட்டதால், இப்போது இந்த பதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞான சேகரன் அவர்களுக்குத் தேவைப்படாது என்று கருதுகிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவுக் கூடங்கள் ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்படியும் கட்டப்படுகின்றன. அதேபோல தொழிலதிபர்களுடைய நன்கொடையாலும் கட்டப்படுகின்றன.

ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்படி கட்டப் படுகின்ற சத்துணவுக் கூடங்கள் எத்தனை, தொழிலதிபர் களுடைய நன்கொடையால் கட்டப்படுகின்ற சத்துணவுக் கூடங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் தெரி விப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு மாவட்டத்திற்கு 75 சத்துணவுக் கூடங்கள் என்று கட்டப்படுகின்றன. தொழிலதிபர்களுடைய சார்பாக கட்டப்படுகின்ற அந்த சத்துணவுக் கூடங்கள்— ஏற்கனவே கட்டப்பட்டு பழுதடைந்து, அதற்குப் பின்னால் சமையல் கூடங்கள் மேல் தளங்கள் இல்லாமல் இருக்கின்ற இவைகளை மட்டுமே, இன்றைக்கு தொழிலதிபர்கள் கட்டிக் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்போது சத்துணவுக் கூடங்கள் இல்லாத இடங்கள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் தெரி விப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வியிலே வராது. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலதிபர்கள் நன்கொடை மூலம் கட்டப் படுகின்ற சத்துணவுக் கூடங்களுக்கு, அப்படி அவர்கள் அளிக்கின்ற அந்த நன்கொடைக்கு வருமானவரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக வருமான வரி யினுடைய செயலாளர் அவர்களுக்கு எழுதி கேட்கப்பட்டு இருக்கிறது. இன்னும் பதில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறு கேள்வி கிடை யாது. திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய கடைசி பகுதி, இதனால் மிச்ச மாகிற பணம் எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். எவ்வளவு



பணம் மிச்சமாகிறது? அந்த மிச்சமாகிற பணத்தை எந்த வழியாக அரசு செலவிட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 8 மாவட்டத்திற்கு மூன்று கோடியே ஏழு இலட்சத்து பதினோராயிரம் ரூபாய் மிச்சப்படுத் தப்பட்டிருக்கிறது. அதை எந்த வகையிலே செயல்படுத்தி திரும்பவும் அது பொதுமக்களுக்கு நல்ல வகையில் பயன் படக்கூடிய வகையில் எப்படி செயல்படுத்துவது என்பதை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி ஜி. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் கோட்டையான புவனகிரி தொகுதியில் சத் துணவுக் கூடங்களுக்கு தகுந்த கட்டிடங்கள் இல்லாமல், மரத்தடியிலும், வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கும் நிலையை மாற்றி, அவைகளுக்கு கட்டிடங்கள் கட்ட அரசு முன்னுரிமை அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் ஏறக்குறைய 86 லட்சம் ரூபாய்க்கு தொழில் நிறுவனங்கள் அந்த பணிகளைத் துவங்கியிருக்கின்றன என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் (திருமதி) பியாட் ரிக்ஸ் டி'சோசா.

Dr. (TMT.) BEATRIX D' SOUZA ; Hon'ble Speaker Sir, I would like to know whether the Hon'ble the Chief Minister will consider extending the Nutritious Meal Scheme to Anglo Indian Schools. There will be no need for construction or Meals Centres. We have our own Boarding School and convent kitches. There will be no extra financial commitment. to the Government.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலிப்பார்கள் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

[1991 செப்டம்பர் 25

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் :
வினா எண். 77, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்

77—

ஆதிதிராவிடர் நல ஓராசிரியர் பள்ளி.

*3353. திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பனவாசல் ஊராட்சி வாடிக்காட்டிலும், பின்னவாசல் ஆதிதிராவிடர் தெருவிலும் ஆதிதிராவிடர் நல ஓராசிரியர் பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தானைத் தலைவி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சேனை தலைவி, ஆதிதிராவிட மக்களுடைய தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லை என்று புரட்சிகரமான காரியங்கள் பறந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொல்லுவது நியாயம் தானா ? மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தான் ஆதிதிராவிட மக்களுக்கு சிறப்புத் திட்டங்கள் போட்டு சிறப்பித்து, ஆதிதிராவிட மக்களை திருப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இதுவரையில் ஓராசிரியர் பள்ளி ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் நடத்தப்படவில்லை. புதிதாக உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிறார்கள். இதற்கு தற்போது சாத்தியக்கூறு இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராசிரியப் பள்ளி என்பது முதன் முதலில் ஆரம்பிக்கின்ற பள்ளியைப் பொறுத்தவரைக்கும் ஒரு ஆசிரியரைப் போட்டு தான் துவக்குகிறார்கள். அதே நேரத்தில் ஆதிதிரா



1991 செப்டம்பர் 25]

மக்களுக்கு பல்வேறு ஆட்சிக் காலத்தில் எல்லாம் நிரம்ப பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பிக்கும்போது ஓரசிரியர் பள்ளி என்று போடுவது வழக்கம். ஆகவே தான் நான் ஓராசிரியர் பள்ளி என்று போட்டு இருக்கிறேன். நான் சொன்ன இந்த வாடிக்காட்டிலும், பின்னவாசலிலும் ஆதிதிராவிட பிள்ளைகள் நிரம்ப இருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகள் வேறு பள்ளிக்குச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். ஒரு கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர், அரை கிலோ மீட்டர் தூரம் என்ற பிரச்சினை இல்லை. ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரையில் எந்த இடத்திலே பிள்ளைகள் அதிகமாக இருந்தாலும் துவக்க வேண்டும் என்று விதி இருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, தயவு செய்து மீண்டும் பரிசீலனை செய்து இந்த இரண்டு பள்ளிகளை துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 3 வருடங்களாக நான் முயற்சி செய்து கொண்டு வருகிறேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்திலும், அதற்கு முந்தைய சட்டமன்ற கூட்டத்திலும், பல கேள்விகளைக் கொடுத்திருக்கிறேன். கொடுங்கோல் ஆட்சி நடந்த காலத்தில் அதை செய்ய முடியவில்லை. சாத்தியக் கூறு இல்லை. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்டு என்ற பதிலை அளிப்பார்கள் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் கனிவோடு பரிசீலிக்கலாம் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமை மீறல் பிரச்சினை

பேரவை குறித்து அவதூறாக் கட்டுரை வெளியிட்டுள்ள 'இல்லஸ்டிரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' பத்திரிகை ஆசிரியர் மீதும் கட்டுரையாளர் திரு. கே. பி. சுனில் என்பவர் மீதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'இல்லஸ்டிரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' என்ற பத்திரிகை ஆசிரியர் மீதும், அந்த பத்திரிகையில், நமது பேரவைக்குறித்து கட்டுரை எழுதியுள்ள திரு. கே. பி. சுனில் என்பவர்

மீதும் அவை உரிமை மீறல் பிரச்சினைக் குறித்து ஓர் அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு வேண்டுகிறேன் ; மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லஸ்டிரேடட் வீக்லி ஆஃப் இந்தியா' என்கிற பத்திரிகை 4 மாநகரங்களிலிருந்து வெளியிடப்படுகின்ற ஆங்கில வார ஏடு. பம்பாய், பெங்களூர், கல்கத்தா, நியூ டெல்லி ஆகிய 4 ஊர்களிலிருந்து இந்த வார ஏடு வெளியிடப்படுகிறது. ஓரளவு பரவலாக வாசகர்களைக் கொண்ட ஏடாகவும் அந்த ஏடு இருக்கிறது. அண்மையிலே செப்டம்பர் 21—27 தேதியிட்ட, பெங்களூரிலிருந்து வெளிவருகின்ற அந்த ஏட்டில் நம்முடைய அவையைப் பற்றி ஒரு கட்டுரை வந்திருக்கிறது. அந்தக் கட்டுரை இந்த அவைக்கு அவப் பெயர் ஏற்படுகின்ற முறையிலும், தாங்கள் அளித்த தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பிக்கின்ற நோக்கத்துடனும், இந்த அவைக்கு இருக்கிற நல்ல பெயரை பொதுமக்கள் மத்தியில் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும் எழுதப்பட்டு இருக்கிற கட்டுரையாக இருக்கிறது. அந்தக் கட்டுரையின் தலைப்பு 6-வது பக்கத்தில் பாலிடிக்ஸ் என்ற பகுதியில் "Tamil Nadu Assembly fast gaining notoriety" என்ற தலைப்பிட்டு அந்தக் கட்டுரை வந்திருக்கிறது. அந்த 'நோட்டோரிட்டி' என்கிற சொல்லுக்கு ஆங்கில—தமிழ் அகராதியில், நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்தாலே வெளியிடப்பட்ட தமிழ் அகராதியிலே 'வசைப் பெயர் எடுத்த', 'தகாவழி பெயர் போன', 'இகழார்ந்த', 'அரிபெரியான' என்கிற அர்த்தங்கள் அதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் அபகீர்த்தி என்கிற சொல் பொருத்தமான சொல்லாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதை எப்படி எடுத்துக் கொண்டாலும் நம்முடைய சபையினுடைய கண்ணியத்தையும், மதிப்பையும் குறைக்கின்ற வகையில் அந்தக் கட்டுரை துவங்குகிறது.

முற்பகல் 10-25

ஆரம்பத்திலே அவர் சொல்கிறார் :

All that is Past history. முன்பிருந்த பெருமையெல்லாம் பழைய வரலாறு என்று.

"The Tamil Nadu Assembly is fast gaining notoriety that is unmatched by even the uncouth behaviour in legislatures in Bihar and Haryana."

தம்முடைய அவையின் பெயரை மட்டும் அவர் கெடுக்கவில்லை ; குறைத்து சொல்லவில்லை. வேறு இரண்டு மாநிலங்களைப் பற்றியும் அவர் அதிலே சொல்லியிருக்கிறார்.



"The latest blow to legislative dignity of the state came in the form of the ejection from the House of a newly-elected DMK Member, Parithi Ilam Vazhuthi in his undergarments. His dhoti was snatched unceremoniously by members of arrival party."

அவருடைய வேஷ்டியை வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகவும் தகாத தன்மையிலே பிடுங்கிக் கொண்டார்கள் ; பறித்து வைத்துக் கொண்டார்கள் என்ற செய்தியை, தவறான செய்தியினை வெளியிட்டிருக்கிறது. அது உண்மையான செய்தியல்ல என்பதை இந்த அவையிலே பலரும் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். நாம் அத்தனை பேரும் பார்த்துக்கொண்டு இருந்தோம். அவர் உண்மைக்குப்புறம்பாகச் சொன்ன ஒன்றை இந்த பத்திரிகையினுடைய கட்டுரையாளர், அப்படி நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறார். அதேபோல, "Ilam Vazhuthi, known for his oratorial excellence.." என்று சொல்கிறார். அவருடைய கணிப்பு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. நான் அதை குறைத்துச் சொல்லக்கூட விரும்பவில்லை. எதற்காக அந்தச் சொல்லை இங்கே போட்டிருக்கிறார் என்று சொன்னால், அவருடைய வாதங்களை நம்மாலே சந்திக்க முடியாத காரணத்தாலே ஆளுங்கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அவரோடு சண்டைக்குப் போனதாக, அவரோடு சண்டை போட தயாராக இருந்ததாக இவர் உள்நோக்கம் கற்பித்து, அந்தச் சொற்றொடரை இங்கே பயன்படுத்தியிருக்கிறார்...

"As an example, he pointed out that even after the IPKF had taken up battle positions against the LTTE in Sri Lanka, MGR had gifted a massive Rs. 4 crores to the organisation."

இது உண்மைக்குப் புறம்பான செய்தி. இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இலங்கையிலே இந்திய அமைதி காக்கும் படை, எல்.டி.டி.இ.-க்கு எதிராகப் போரிடுவதற்குத் தயாராய் இருந்த நிலையில் எம்.ஜி.ஆர். 4 கோடி ரூபாயை வெகுமதியாகக் கொடுத்தார் என்பது தவறான செய்தி ; உண்மைக்குப் புறம்பானது. நாம் 4 கோடி ரூபாய் கொடுத்தது உடன்படிக்கைக்கு முன்னால் ; ஓராண்டு காலத்திற்கு முன்னால் கொடுக்கப்பட்ட தொகை அந்தத் தொகை. ஆனால் இந்தக் கட்டுரையின்படி, உடன்படிக்கைக்குப் பின்னால், இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்குச் சென்றதற்குப் பின்னால், இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக அவர்கள் போரிடத் துவங்கியதற்குப் பின்னால், இந்தப் பணம் இனாமாகக் கொடுக்கப்பட்டது ; வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது என்று இந்தக் கட்டுரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேபோல, தங்களைப்பற்றி, பேரவைத் தலைவரைப் பற்றி வருகின்ற இடத்தில்,

"'Speaker Sedapatti Muthiah, who assumed the Chair at this stage."... அதாவது பேரவைத் துணைத் தலைவர், அவர் முடித்துவிட வேண்டும் என்று சொன்னதற்குப் பின்னால் 'Speaker Sedapatti Muthiah, who assumed the Chair at this stagee announced that all the controversial remarks made by the DMK member remained expunged. As Ilam Vazhuthi started to protest all over again, the Speaker ordered the Marshals to have him evicted," என்று இருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் "Ilam Vazhuthi's objection were genuine." அவர் எழுப்பியது, அவர் சொன்னது நியாயமாக இருந்தது என்றாலும், பேரவைத் தலைவருடைய தீர்ப்பு அவரை வெளியேற்ற வேண்டுமென்று சொல்லிவிட்டதாக, பேரவைத் தலைவருடைய நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் தன்மையிலே அந்தச் சொற்றொடர் அமைந்து இருக்கிறது. அதேபோல, "Every time Ilam Vazhuthi had risen to clarify, he was asked by the Speaker not to talk out of turn.' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கடைசியாக, முடிக்கின்ற இடத்திலே, "Legislature violence is fast be coming routine, Clearly, the Assembly has degenerated from being an intellectual forum in to a combat arena.' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே அறிவார்ந்த வாதங்கள் நடக்கின்ற மன்றமாக இருப்பதற்குப் பதிலாக இது ஒரு மல்யுத்தக் களமாக, தமிழ்நாடு சட்டப் பேரவை, மல்யுத்தக் களமாக மாறி வருகிறது. "a dangerous trend என்றும், "arising out of the intolerance of the 'ruling party to criticism or opposition" என்றும் சொல்கிறார். ஆளுங்கட்சியினுடைய சகிப்புத் தன்மை குறைந்து வருகின்ற காரணத்தாலேதான் இதுபோல் நடைபெறுகிறது என்றும், அதிலே குறிப்பிட்டு இருக்கிறார்.

'Nothing, unfortunately, is unparliamentar today" என்று சொல்லி அவர் முடித்திருக்கிறார். அதோடு அந்தக் கட்டுரை முடிந்துவிடவில்லை.

பெட்டிச் செய்தி ஒன்று வந்திருக்கிறது. பெட்டிச் செய்தியிலே, "The House of discord—other occasions when the Tamil Nadu legislature was plunged into violent expressions of protest" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக இரண்டு சம்பவங்கள், இரண்டு நிகழ்ச்சிகள், நடைபெறாதவை, நடைபெற்றதைத் திரித்தும், நடைபெறாதவைகளையும் சொல்லியிருக்கிறார்.



"February 6, 1987: Labour Minister S. Raghavanandam and CPM member Nallasivam exchange blows." என்று இருக்கிறது. நல்லசிவம், நான் அறிந்தவரையில் இந்த அவையின் உறுப்பினராக ஒருபோதும் இருந்ததில்லை. என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்கின்ற வகையில் இங்கே இருக்கிற சி.பி.எம். உறுப்பினர் தம்புசாமி அவர்களிடத்திலே கூட கேட்டேன். அவரும், நான் அறிந்தவரையிலே, அவர் இந்த அவையிலே உறுப்பினராக இருந்ததில்லை என்று சொன்னார். முன்பு மேலவை உறுப்பினராக இருந்து இருக்கிறார். மேலவை, 1986 ஆம் ஆண்டோடு கலைக்கப்பட்டு விட்டது. இவர் சொல்வது, பிப்ரவரி 6, 1987 ஆம் ஆண்டில், அன்றைய தொழிலாளர் நல அமைச்சர் இராகவானந்தமும் நல்லசிவமும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள்; அடித்துக் கொண்டார்கள் என்று சொல்லி இருக்கிறார்.

முற்பகல் 10-30

அதேபோல, கடைசியாக (குறுக்கீடு) அவரும் அமைச்சராக அப்பொழுது இல்லை. அவரும் இல்லை. ஆக, இரண்டும் இல்லை. இறுதியாக,

"March 25, 1989; An AIADMK member assaulted Karunanidhi and tore up the budget papers, ushering in a free-for-all which culminated in PWD minister Durai Murugan tugging at Opposition leader Jayalalitha's shawl. This was compared to the disrobing of Draupadi in the Kaurava assembly" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரை, இங்கே என்ன நடைபெற்றது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அது மட்டுமல்ல, அன்றைய முதல்வர் கருணாநிதி கூட, தான் தாக்கப்பட்டதாக ஒருபோதும் சொல்லவில்லை. அவர் சொல்லவந்ததெல்லாம், " நான் பட்ஜெட் பேப்பர்களை— நிதி நிலை அறிக்கை காகிதங்களைக் கையிலே வைத்துக் கொண்டிருந்தபொழுது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என் கையிலேயிருந்து பறித்துக் கொண்டார்கள். அதனாலே நான் நிலை குலைந்து போனேன்; அதனாலே என்னுடைய கண்ணாடி கீழே விழுந்தது " என்றுதான் சொன்னாரே தவிர, என்னைத் தாக்கினார்கள், என்னை உதைத்தார்கள், என்னை அடித்தார்கள்' என்று சொல்லவில்லை.

அவர் அன்றே சொன்ன ஒரு சம்பவத்தைப் பின்னாலே மறுக்க வேண்டிய நிலைமை வந்தது. இன்றைய மாண்புமிகு அமைச்சர் —போக்குவரத்துத் துறை அமைச்சர் செங்கோட்டையன்தான் என் கையிலேயிருந்த காகிதங்களைப் பிடுங்கினார் என்று அவர்

சொன்னார். நான் அன்றே பேட்டி கொடுத்திருக்கிறேன். செங்கோட்டையன் அந்தக் கட்டத்திலே இருக்கையை விட்டு எழுந்து செல்லவில்லை என்று நான் சொல்லியிருக்கிறேன். பத்திரிகையிலே வந்திருக்கிறது. 'துக்ளக்' பத்திரிகையிலே பெரிய அளவிலே வந்திருக்கிறது. பிறகு, 3, 4 நாட்கள் கழித்து அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிக்கொண்டிருந்த நேரத்தில் எப்படி அவ்வளவு நிச்சயமாக செங்கோட்டையன் அல்ல என்று சொல்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் உடனே சொன்னேன், செங்கோட்டையன் எனது இருக்கைக்குப் பக்கத்திலே இருக்கிறார், எனக்குப் பக்கத்திலே ஆண்டி அம்பலம், அதற்கு அடுத்த இருக்கையிலே இருப்பவர் செங்கோட்டையன். அந்தக் கட்டத்திலே செங்கோட்டையன் இருக்கையை விட்டு எழுந்து வரவே இல்லை என்று நான் சொன்னேன். பிறகு இந்த அவையிலே முன்னாலே வந்து அவர் ஒப்புக்கொண்டார்கள். செங்கோட்டையனை எனக்கு அடையாளம் தெரியாது, எனவே அது செங்கோட்டையன் அல்ல என்று இப்பொழுது மற்ற நண்பர்கள் சொல்வதால் நான் ஒப்புக்கொள்கிறேன். ஒரு பத்திரிகை நிருபர் சொன்னதை வைத்துக்கொண்டு, அவர் செங்கோட்டையன் என்று சொல்லிவிட்டேன் என்று அன்றைய முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

வேடிக்கை என்னவென்று சொன்னால், அன்றையதினம் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்த இன்றைய மாண்புமிகு முதல்வரவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடந்தது என்பது அத்தனை பேருக்கும் தெரியும். அதிலே இரகசியம் கிடையாது. கடைசியாக அவருடைய சேலையைப் பிடித்து இழுத்தார்கள் என்பதை அத்தனைபேரும்—இங்கேயிருந்து அவர்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம்—இந்த அவையிலே பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இழுத்ததற்குப் பின்னாலே, இவர் திரும்பிக் கொண்ட காரணத்தினால்தான் அன்றையதினம் தப்பித்தாரே தவிர, நான் அறிந்தவரையில் என்னுடைய நினைவாற்றல சரியாக இருக்குமேயானால், மேலே அவர் அன்றைய தினம் எந்தச் சால்வையையும் போர்த்திக் கொண்டிருக்கவில்லை, சேலைதான் அணிந்திருந்தார். சேலையைத்தான் பிடித்து இழுத்தார்கள். இழுத்த வேகத்திலே, திரும்பிக்கொண்ட காரணத்தாலே கொஞ்சம் கிழிந்தாலும்கூட, சேலை உடலைவிட்டு நழுவிக் கொண்டு முழுவதுமாக வெளியே வரவில்லை என்பது உண்மை. அத்தனை பேரும் பார்த்துக் கொண்டிருந்த ஒன்று.

இவர் சொல்கிறார், சால்வையைப் பிடித்து இழுத்தார், அதைத்தான் திரௌபதியைத் துகிலுரித்த சம்பவத்தோடு இன்றைய தினம் இவர்கள் ஒப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். ஆனால், அத்தனையும்—இங்கே வந்திருக்கிற செய்திகள் அத்தனையும், விமர்சனங்கள் அத்தனையும் உண்மைக்குப் புறம்பானவை. இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள்



மீது வேண்டும் என்றே, பழி சுமத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, தங்களுடைய தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு, இந்த அவையினுடைய பெருமையைக் குலைக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்டவையாக இருக்கின்றன. இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக, அச்சமின்றிச் செயல்பட நீங்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

நாங்கள் இங்கே பேசுகின்ற பேச்சுக்கள், இங்கே செய்கின்ற விமர்சனங்கள் அத்தனைக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று சொன்னால், இதுபோன்ற தவறான விமர்சனங்கள், கட்டுரைகள் நிச்சயமாக ஏடுகளிலே இடம்பெறக் கூடாது. எனவே, இந்த அவையினுடைய —அவைக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு வெளியிடப்பட்டிருக்கின்ற இந்தக் கட்டுரையாளர் மீதும், அந்தப் பத்திரிகையின் மீதும் நீங்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'மே' அதற்கு, May's Parliamentary Practice, இதைப் பற்றிச் சொல்கிறார். In 1701, the House of Commons resolved that the print or publishing of any books or labels reflecting on the proceedings of the House is a high violation of the rights and privileges of the House. Indignities offered to their House by words spoken or writings published reflecting on character of persons have been constantly punished by both the Lords and the Commons upon the principle hat such acts do obstruct the House in the performance and function by diminishing the respect due to them.

அவர் சொல்வதெல்லாம், சுதந்திரமாகவும், அச்சமின்றியும் செயல்பட வேண்டும். அவர்களுடைய நடவடிக்கைகளைத் தடுக்கும் போக்கில் யாரும் எழுதினாலும், பேசினாலும் அது அவை உரிமைமீறல் ஆகும் என்று 'மே' அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அதோடு அல்லாமல், reflections upon Members, particular individuals not by name or otherwise indicated are equivalent to reflections on the House. தனிப்பட்ட நபர் ஒவ்வொரு கட்டத்திலேயும் குறிப்பிடப்பட வேண்டியது இல்லை என்றும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல.

முற்பகல் 10-35

நம்முடைய மக்களவையிலே, Karanjia Blitz Case என்று அந்தக் காலத்திலே நடைபெற்ற அனைவரும் அறிந்த ஒன்று 'பிளிட்ஸ்' இன் மீது அன்றைய தினம், இதுமாதிரி உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரப்பட்டபோது, அந்த ரிப்போர்ட் சொல்லப்பட்டிருக்கிறது.

"Both Houses will punish not only contempts arising out of facts of which the ordinary Courts will take cognisance but those of which they cannot, such contemptuous insults, gross calumny or foul epithets by word of mouth not within the category of actionable slander or threat of bodily injury" என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், "Actually a Newspaper writer should be more cautious than a private citizen as his critisims are widely published.

கடைசியாக 5-வது பாராவிலே,

"But if the comments contain personal attacks on individual members of Parliament on account of their conduct in Parliament or if the language of the comments is vulgar and abusive, they cannot be deemed to come within the bounds of fair, comment and justifiable criticism. Even the Press Commission held the view that a comment counts in vulgar or abusive language is unfair. Nor can fair comments be stretched to include irresponsible sensationalism. The scope of the freedom of the press has been described by the Supreme Court in its judgement in the searchlight case."
என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே, எப்படிப் பார்த்தாலும் நிச்சயமாக இந்தக் கட்டுரை நம்முடைய அவையின் உரிமை மீறல் செயலாக நான் கொள்கிறேன். எனவே, நான் பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்வது, இந்தப் பத்திரிகையாளர்கள் மீது, பத்திரிகை பதிப்பவர் மீது, பத்திரிகை ஆசிரியர் மீது, அவையின் உரிமை மீறிய குற்றங்களுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் இங்கே கொண்டுவந்த உரிமைப் பிரச்சினையைப்பற்றி, இந்த அவை ஆழ்ந்த தன்மையின் அடிப்படையிலே சிந்தித்து முடிவு எடுக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்பதை, அவர்கள் இங்கே தெளிவுற விளக்கிக் காட்டினார்கள். 'Illustrated Weekly of India'



என்பது, இந்தியாவிலே மட்டுமல்லாமல், உலகத்தின்
பல நாடுகளிலேயும் பேரும், புகழும் பெற்ற ஒரு ஏடு.
பரவலாக பரவியிருக்கிற ஒரு ஏட்டில் இப்படிப்பட்ட ஒரு கட்டுரை
எழுதப்பட்டிருப்பது, மிக மிக வருந்துதற்குரிய ஒன்றாகும்.
இந்தக் கட்டுரையின் எழுத்தாளர், எப்படிப்பட்ட நோக்கத்தி
னுடைய அடிப்படையிலே அதை எழுதியிருக்கிறார் என்பதை,
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே விளக்கமாக
எடுத்துச் சொன்னார்கள். ஆக, இந்த அவையைக் குறைத்து
மதிப்பிட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், இந்த அவையிலே
நடக்காத நிகழ்ச்சிகளை, உண்மைக்குப் புறம்பாக திரித்துக் கூறப்
பட்டிருக்கிறது பல வகைகளிலே என்பது மட்டுமல்லாமல், உள்
நோக்கம் வைத்து அவர்கள் எடுத்துச் சொல்லயிருக்கிறார்கள்
என்பது மட்டுமல்லாமல், இந்த அவையிலே நடைபெறாத நிகழ்ச்சி
களையெல்லாம் நடைபெற்றதாக எடுத்துச் சொல்லி, இந்த
அவைக்கே ஒரு களங்கம் ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல்,
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உரிய முறையில் சட்ட
விதியின் அடிப்படையிலே நின்று, இங்கு தீர்ப்புகள் வழங்கி இருக்
கிற அத்தகைய நிலையில், மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்கள் மீதே குற்றச்சாட்டுகள் சாட்டுகிற அளவுக்கும், அவர்
களுடைய தீர்ப்பு சரியான தீர்ப்பு அல்ல என்று வெளியிடுகிற
அளவுக்கும் கருத்துக்கள் தெரிவித்திருப்பதும், இவை எல்லாவற்
றிற்கும் மேலாக, இந்த அவையை இழித்து, பழித்து, கேவலமாக,
அவதூறாக சொல்கின்ற வகையிலும் அதிலே எழுத்துக்கள்
எழுதப்பட்டிருக்கின்றன, கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. இது
பல்வேறு வகையிலே உரிமை மீறல். ஒரு உரிமை மீறல் என்றுகூட
எடுத்துக்கொள்ள முடியாது. கடைசியாக அடுக்கிப் பார்த்தால்,
7, 8 உரிமை மீறல்கள் இதிலே வருகின்றன. ஆகவே, இதிலே
சந்தேகத்திற்கே இடம் இல்லாமல் இருப்பதன் காரணத்தினாலும்,
மிகவும் தெளிவாக இருப்பதன் காரணத்தினாலும், உள்ளங்கை
நெல்லிக்கனி போன்று இருப்பதன் காரணத்தினாலும், புலன்
விசாரணை அல்லது வேறு பல விசாரணைகள் ஏதும் தேவை
யில்லை என்கிற காரணத்தினாலும், மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்கள், இதை நேரடியாக உரிமைக் குழுவின் முடி
விற்கு விட்டு, உரிமைக் குழுவினுடைய அறிக்கையைப் பெற்று,
இந்த அவை தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் சிறந்த
தது. அப்படி இருந்தால்தான், எதிர்காலத்தில் இந்த அவையி
னுடைய கௌரவமும், இந்த அவையினுடைய பெருந்தன்மையும்,
இந்த அவையினுடைய கண்ணியமும் காப்பாற்றப்பட முடியும்.
அதற்கு வழிவகைகளைச் செய்கிற மாதிரி, இந்தப் பிரச்சினையை
உரிமைக்குழுவிற்கு விடலாம் என்ற கருத்தை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் இப்போது தெரிவித்த கருத்துகளுக்கு என்னுடைய முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'Illustrated Weekly of India' என்பது ஒரு காலத்தில் மிகவும் பிரபலமான பத்திரிகையாக இருந்தது. வெளிநாடுகளிலும் புகழ்பெற்ற பத்திரிகையாக ஒரு காலகட்டத்தில் இருந்தது. ஆனால், இப்போதுள்ள எடிட்டர் Pritish Nandy எப்போது எடிட்டர் பொறுப்பை ஏற்றாரோ, அந்த நாள் முதல், அந்தப் பத்திரிகையின் தரம் மிகவும் தாழ்ந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி.)

அதன் தரம் தாழ்ந்து விட்டது என்பது நாடறிந்த உண்மை. எனவே, படிப்படியாக அந்தப் பத்திரிகையின் சர்குலேஷன் குறைந்து கொண்டே வந்திருக்கிறது.

முற்பகல் 10-40

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக அது முன்பு ஆர்ட் பேப்பரில் பெரிய அளவில் வந்து கொண்டிருந்தது. பின்னர் அளவு குறைக்கப்பட்டது. இப்பொழுது மேகசைனாகவே வெளிவராமல்— இப்பொழுது இந்த மாதிரி ஒரு நியூஸ்பேப்பரைப் போல வெளியில் கொண்டுவர வேண்டிய நிலைக்கு அந்தப் பத்திரிகை தள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட எடிட்டர், ஆசிரியர் பொறுப்பேற்ற பின்னர் இப்படி நம் மாநிலத்தில் மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்களையும், முக்கியப் பொறுப்பில் உள்ள தலைவர்களையும், சட்டப் பேரவைகளையும் இழித்துப் பழித்து, அவதூறு பரப்புவதே இந்தப் பத்திரிகையின் வாடிக்கையாகிவிட்டது.

என்னைப்பற்றியே, எண்ணற்ற அவதூறுச் செய்திகளை இந்தப் பத்திரிகை தொடர்ந்து எழுதிக் கொண்டு வருகிறது. ஆனால் நம்முடைய நாட்டில் இருக்கின்ற Judicial system அவ்வளவு விரைந்து நியாயம் கிடைப்பதற்கு வழிவகை செய்யாததால், வேறுவழியின்றி நாம் இதற்கு உடனுக்குடன் நீதி கேட்டுப் பெறமுடியாத நிலையில் இருக்கின்றோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது ஒரிஸ்ஸா முதலமைச்சராக இருந்த ஜே. பி. பட்நாயக் அவர்களைப் பற்றி இதே ஆசிரியர், இதே பத்திரிகையில் மிகவும் தரம் தாழ்த்தி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார். இதற்காக அங்கு முதலமைச்சராக இருந்த ஜே. பி. பட்நாயக் அவர்கள் ஒரு அவதூறு வழக்கை 'Defamation cases' கொண்டு



வந்து ஒரு கோடி ரூபாய்க்கு நஷ்டஈடு கோரி, இறுதியாக இந்த எடிட்டர் பணிந்தார். அந்தப் பத்திரிகையிலேயே கொட்டை எழுத்துக்களில் 'நான் மன்னிப்புக் கேட்கிறேன்' என்று பிரசுரித்து இருந்தார். அந்த நிலையை நீங்கள் மீண்டும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இத்தகைய தவறுகளைத் தொடர்ந்து இந்தப் பத்திரிகை ஆசிரியர் செய்து கொண்டு வருகிறார். இந்தப் பத்திரிகையை அவர் இந்த மாதிரியான வழிகளில் துஷ்பிரயோகம் செய்து வருகிறார்.

எனவே, இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல், இந்த அவையைப் பழித்திருக்கிறார். மாண்புமிகு சபாநாயகராகிய தங்களைப் பழித்திருக்கிறார். ஆகவே, இந்த முறை நீங்கள் எடுக்கும் நடவடிக்கையின் வாயிலாக மீண்டும் இத்தகைய தவறுகள் நிகழா வண்ணம் மிகவும் கடுமையான தண்டனை வழங்கப் பட வேண்டுமென்றும், அதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியிருக்கிற இப்பிரச்சினையில் பூர்வாங்கமாகப் பார்க்கிற முதல் பார்வையிலேயே, அவை உரிமை மீறல் உள்ளது என்று கருத வாய்ப்பு இருக்கிற காரணத்தாலும், தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும், தெரிவித்திருக்கிற காரணத்தையொட்டியும், நம்முடைய பேரவை விதி 226 அவைத் தலைவருக்கு வழங்கியிருக்கிற அதிகாரமான

'Notwithstanding any thing contained in these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination. investigation and report என்று இருக்கிற காரணத்தாலும், இப்பிரச்சினையினுடைய தன்மை கருதி, இதை நேரிடையாக உரிமைக் குழுவிற்கு அனுப்பி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நானும் கருதுகிறேன். எனவே, இப்பிரச்சினையை, நடவடிக்கை எடுக்க, உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அரசு கருவூல பெண் ஊழியர் இருவர் கொலை செய்யப் பட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் இரண்டு அலுவலகப் பெண் ஊழியர்கள் கொலை செய்யப்பட்டிருந்தார்கள் என்கிற மிகவும் கொடிய ஒரு சம்பவத்தைக் கேள்விப்பட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஏறத்தாழ 18 மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. பி. ராஜு, திரு. சிங்கை கோவிந்தராசு, டாக்டர் அ. ஸ்ரீதரன், திரு. வி. பி. சந்திரசேகர், திரு. வெ. பழனிசாமி, திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. ஜி. பழனிசாமி, திரு. பெ. பொன்னுசாமி, திரு. வி. தண்டாயுத பாணி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. கே. செல்வராஜ், திருமதி ரமணி நல்லதம்பி, திரு. வி. கே. லட்சுமணன், திரு. மா. சுந்தரதாஸ், திரு. நா. சா. பழனிசாமி, திரு. வே. தம்பு சாமி ஆகிய 17 உறுப்பினர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அரசின் சார்பில் விளக்கம் பெற வேண்டுமென்றும் என்னிடத்தில் கோரிக்கை விடுத் துள்ளனர்.

முற்பகல் 10-45

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுபற்றி அவைக்கு தனக்குக் கிடைத்திருக்கிற தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இப் பிரச்சினை பற்றிய தன்னுடைய விளக்கத்தை அவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பெண் ஊழியர்கள் இரண்டுபேர் கொலை செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. ராஜு உட்பட 18 மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பின்வருமாறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

கோவை மாவட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கருவூலத்தில் பணிபுரியும் கோமதி என்ற கணக்காளரும், மகாலெட்சுமி என்ற இளநிலை உதவியாளரும் கொலை செய்யப்பட்டு, ரத்தக் காயங்களுடன் கழிவறையில் பிண மாகக் கிடந்தனர். இதனை 24—9—1991 அன்று காலை சுமார் 9½ மணியளவில் துப்புரவுத் தொழிலாளர் சண்முகம் கழிவறையைச் சுத்தம் செய்யச் சென்றபோது கண்டு பிடித்தார். வழக்கு பதிவு செய்து, புலன் விசாரணையை காவல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.



இறந்தவர்களில் ஒருவர் கோமதி, வயது 37, இவர் கோவை கருவூல அலுவலகத்தில் கணக்காளராக 2—7—1976 முதல் பணியாற்றி வருகிறார். இவர் எஸ்.எஸ்.எல். சி. வரை படித்தவர். இவரது கணவர் திரு. ராஜகோபால், இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார்.

இறந்த மற்றொருவர் மகாலெட்சுமி, வயது 43, இவர் இந்த அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 20—4—1982 முதல் பணியாற்றி வருகிறார். இவர் எஸ்.எஸ்.எல். சி. வரை படித்தவர். இவரது கணவர் திரு. சௌந்திரராசன். இவர் 'எல்டெக்ஸ்' தொழிற்சாலையில் பணிபுரிகிறார். கொலை செய்யப்பட்ட இருவரும் 23—9—1991 அன்று அலுவலகம் வந்திருந்தனர். அங்கே கொலை செய்யப் பட்டனர். வேலைக்குச் சென்ற இவர்கள் இருவரும் வீடு திரும்பவில்லை என்றவுடன் அன்றைய தினம் இரவே இவர்களுடைய கணவன்மார்கள் அலுவலகத்திற்கு வந்து இவர்களைத் தேடிச் சென்றனர்.

சம்பவம் நடந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவரும், கோவை நகர காவல் ஆணையரும் விரைந்து சென்று பார்வையிட்டுள்ளனர். புலன் விசாரணையை துரிதப் படுத்தி குற்றவாளியைக் கண்டுபிடிக்க தக்க நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளனர். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஒரு இரும்புக் கம்பி கைப்பற்றப்பட்டுள்ளது. கை ரேகை நிபுணர்கள் சம்பவம் நடந்த இடத்தையும் கிடைத்த இரும்புக் கம்பியையும் பரிசோதித்து உள்ளனர். குற்றவாளி களை விரைவில் கண்டுபிடிக்க சிறப்பாக இரண்டு உதவி ஆணையர்கள் தலைமையில் நான்கு போலீஸ் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. புலன் விசாரணை தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

காவல் துறையினரால் பிரேதங்கள் கைப்பற்றப்பட்டு, பிரேதப் பரிசோதனைக்காக கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டன. இதில் இறந்த மகா லெட்சுமியின் உடலில் 23 காயங்கள் காணப்பட்டன என்றும், இவற்றில் மரணத்தை விளைவிக்கக்கூடிய தலையில் காணப்படும் 3 காயங்களைத் தவிர இதர காயங்கள் சடலத்தைக் கழிவறையில் எடுத்துப் போடும் முயற்சியிலும், நகைகளைப் பறிப்பதிலும் ஏற்பட்ட சிறிய சிராய்ப்புக் காயங்கள் என்றும், இறந்த கோமதியின் உடலில் காயம் பட்ட 17 காயங்களில் மரணத்தை விளைவிக்கக்கூடிய 5 முக்கிய காயங்கள் தலையில் காணப்பட்டன என்றும், மற்ற காயங்கள் சடலத்தை இழுக்கும் முயற்சியிலும், நகைகளைப்

பறிக்கும் முயற்சியிலும் ஏற்பட்ட சாதாரண சிராய்ப்புக் காயங்கள் என்றும் மருத்துவர் கருதுகிறார். இருவருடைய உடலிலும், குற்றவாளிகள் கற்பழிக்க முயற்சிகள் ஏதும் செய்ததற்கான அறிகுறிகள் காணப்படவில்லை என்று மருத்துவர் கருதுகிறார். இவர்கள் இருவரும் தாக்கப்பட்ட சில வினாடிகளிலேயே இறந்திருக்கக்கூடும் என்றும் மருத்துவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இறந்த இருவரும் அணிந்திருந்த நகைகள் காணப்படவில்லை. மகாலெட்சுமி அணிந்திருந்த 4 பவுன் தங்கச் சங்கிலி, 3 கிராம் முடி மோதிரம், 4 கிராம் கல் மோதிரம், 1 ஜோடிக் கம்மல் கற்களுடன் 1½ பவுன், மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தாலி 1 பவுன், ஆக மொத்தம் 7½ பவுன் தங்க நகைகள் களவு போயிருக்கிறது.

இறந்த கோமதி அணிந்திருந்த நகைகள் தங்கச் செயின் 3 பவுன், கருகமணி பொட்டுத் தாலி ½ பவுன், தாலி குண்டுகள் ¼ பவுன், பட்டை வளையல் இரண்டு 1½ பவுன், ஒரு ஜோடி தோடு முக்கால் பவுன் ஆக மொத்தம் 6 பவுன் தங்க நகைகள் களவு போயிருக்கிறது.

இக்கொடூர சம்பவத்தைத் தொடர்ந்து, கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலகங்களில் பணியாற்றும் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒன்று கூடி, இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியபின், 24 மணி நேரத்திற்குள் கொலையாளியைக் கண்டுபிடித்து, நீதி வழங்கப்பட வேண்டும் என்றும், அதுவரை கருவூலகணக்குத் துறை அலுவலர்கள் யாரும் வேலை செய்ய மாட்டோம் என்றும், விரைவில் கொலையாளி கண்டு பிடிக்கப்படாவிட்டால் மாநில அளவில் பெரிய போராட்டம் நடத்தப்படும் என்றும் கருவூலத் துறைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முடிவு செய்துள்ளனர்.

காவல்துறையினர் குற்றவாளிகளை விரைவாக கண்டு பிடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். விரைவில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள்.

முற்பகல் 10-50

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து பெண்களுக்கும் உரிய பாதுகாப்பு கொடுக்க தக்க அறிவுரைகளை வழங்கியுள்ளேன். இதுபோன்ற கொடூரமான சம்பவம் இனி எந்த அரசு அலுவலகத்திலும் நடைபெற வாய்ப்பு இல்லாத வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் வசதிகளையும்



உடன் செய்து தர ஆணையிட்டுள்ளேன். அரசு அலுவலர்களுக்கு முழு பாதுகாப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை விரைவில் கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கருவூலத் துறை அலுவலர்களும் மற்ற துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் தற்போது அமைதி காத்து, அலுவலகம் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொலை சம்பவம் போன்றே கேரள மாநிலம் திருச்சூரில் சில சம்பவங்கள் சமீபத்தில் நடைபெற்றுள்ளதாக காவல் துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது. கோவை கொலைகளிலும் இவர்களுக்கு தொடர்பு உள்ளதா என்று அறிய காவல் படை ஒன்று திருச்சூர் விரைந்துள்ளது. மேற்கொண்டு இது குறித்த விவரங்கள் தெரிந்தவுடன் அவைக்குத் தெரிவிக்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்ற, நிர்வாகக் குழுக்களுக்கு, உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றக் குழு (Senate) மற்றும் நிர்வாகக் குழு (Board of Management) ஆகியவற்றிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துள்ளன.

மதுரை காமராஜர் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு நான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 5—12—1992 வரை ஆகும்.

பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

பாரதியார் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

அழகப்பா பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

மேற்குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழுவிற்கு இப்பேரவையில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் என்று இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிகளின் காலம் முடிவடையும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27—9—1991 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 28—9—1991 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 30—9—1991 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3—10—1991 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.



(அ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகளுக்கு ரொக்கத்திற்கு உரம் வழங்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்புகள் திருவாளர்கள் ஆர். சிங்காரம், எஸ். எஸ். ராமசுப்பு, திருமதி ரமணி நல்லதம்பி, எச். எம். ராஜு, கே. ஏ. மனோகரன், எ. சம்பத், கே. கே. சின்னப்பன், எ. புரட்சிமணி, எஸ். ஆர். ஜெயராமன், என். பன்னீர்செல்வம், சா. பன்னீர்செல்வம், பெ. பொன்னுசாமி, எஸ். ஆசைமணி ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகளுக்கு ரொக்கத்திற்கு உரம் வழங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கையை அவை முன் வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழகத்தில் தொடக்க கூட்டுறவு விவசாய வங்கிகளும், தொடக்க விற்பனை கூட்டுறவு சங்கங்களும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள், விதைகள் போன்ற இடுபொருள்களை விநியோகம் செய்கின்றன. தொடக்க கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்கும் பயிர்க் கடன்களில் ஒரு பகுதி ரொக்கமாகவும் ஒரு பகுதி உரமாகவும் வழங்கப் படுகிறது. பயிர்க் கடன்கள் ஆண்டுதோறும் நிர்ணயிக்கப் படுகிற நிதி அளவுகளுக்கு (Scale of finance) ஏற்ப ரொக்கமாகவும் உரமாகவும் வழங்கப்படுகின்றன. மேற்படி வங்கிகளில் உர விற்பனை பயிர்க் கடன்கள் வழங்குவதைப் பொறுத்தே உள்ளது. கடன் பெறும் விவசாயிகளுக்குப் பொருட் பகுதியை உரமாகவே வழங்க வேண்டியிருப்பதால் கடன் பெறும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆனால் கடன் பெறாத விவசாயிகளும் உறுப்பினர் அல்லாத விவசாயிகளும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் உரத்தை

வாங்கிக் கொள்ளலாம். அதற்கு எவ்வித தடையும் இல்லை. தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கு தேவையான அளவு உர வகைகளையும் இதர விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் சேர்த்து தங்கள் தேவைக்கு மாதந்தோறும் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக கூட்டுறவு இணையத்திலிருந்து உரங்களைப் பெற்றுக் கொள்கின்றன. தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட நிறுவனங்கள், தயாரிப்பாளர்களிடமிருந்து மொத்தமாக வாங்கி, தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கும், தொடக்க விற்பனை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ( Marketing Societies ) அவைகளின் தேவைகளுக்கு ஏற்ப உர வகைகளை வழங்கி வருகின்றன.

1. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்.
2. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்.
3. நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம்.

தமிழ்நாட்டில் மொத்த உர விற்பனையில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு 23 சதவிகிதம் மட்டுமே. எஞ்சியுள்ள 77 சதவிகித விற்பனை தனி வியாபாரிகள் மூலம் நடை பெறுகிறது. சென்ற இரண்டு ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நடைபெற்ற உர விற்பனையில் ரொக்க விற்பனை 15 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் அளவுக்கு மட்டுமே இருந்து வந்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடப்பு ஆண்டில் ஆகஸ்டு மாதம் வரை கடன்களுக்கு பொருட் பகுதியாகவும் ரொக்கப் பகுதியாகவும் பின் வருமாறு உர விற்பனை செய்யப்பட்டுள்ளது :

| மாதம். | ரொக்க விற்பனை. | பொருட் பகுதி. | மொத்தம். | மொத்த விற்பனையில் ரொக்க விற்பனையின் விழுக்காடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஏப்ரல் 1991 | 1,703 | 9,680 | 11,392 | 15 |
| மே 1991 | 2,207 | 20,223 | 22,430 | 10 |
| ஜூன் 1991 | 2,995 | 22,005 | 25,000 | 12 |
| ஜூலை 1991 | 4,991 | 13,779 | 18,770 | 27 |
| ஆகஸ்டு 1991 | 3,125 | 13,960 | 17,085 | 10 |



எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுமே ரொக்கத்திற்கு உர விற்பனை செய்கின்றன. மத்திய அரசு 25—7—1991-ல் உர விலையை அதிகரித்தபொழுது சில்லறை விற்பனை நிலையங்களில் உள்ள உரத்தை முந்தைய குறைந்த விலைக்கு விற்க வேண்டுமென்றும் 14—8—1991-ல் மொத்த விற்பனையாளர்களும் குறைந்த விலைக்கே விற்பனை செய்ய வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளது. இவ்வுரம் தவறான முறையில் பயன்படுத்தப்படாமல் உண்மையான விவசாயிகளுக்கே சேர வேண்டுமென்ற கருத்தில் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கி விற்பனை செய்யப்படுகிறது. ரொக்கத்திற்கு உரம் கோரும் விவசாயிகளுக்கும் அவர்கள் பயிர் செய்யும் பரப்பு மற்றும் பயிர்களைப் பொறுத்து தேவையான அளவு உரம் ரொக்க விற்பனை செய்யப்படுகிறது. இதுவரையில் விவசாயிகளுக்கு ரொக்கத்திற்கு தொடக்க கூட்டுறவு வங்கிகள் உரம் வழங்கவில்லை என்று எந்த புகாரும் வரவில்லை.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் எல்லா கூட்டுறவு சங்கங்களுக்கும் அவர்கள் கேட்கும் உரங்களை தட்டுப்பாடின்றி வழங்குகிறது.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதில், என்னிடம் வந்து வாய்ப்பு கேட்டிருக்கிற திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. ச. புரட்சிமணி, திரு. என். பன்னீர்செல்வம், திரு. எஸ். ஆசைமணி ஆகிய 5 உறுப்பினர்களை மட்டுமே துணைக் கேள்வி கேட்க விதியின்படி அனுமதிக்கப்படும். ஒரு கேள்வி. நேரடியாக கேள்வி மட்டும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே மானியத்தில் உரம் வழங்கப்படுகிறது. ஆனால் கடன் பெறாத விவசாயிகளுக்கு மானியத்திலே உரம் வழங்கப்படுவதில்லை. கடன் பெறாத விவசாயிகள் 80 பர்சன்ட் இருக்கிறார்கள். ஏன் என்றால் கடந்த காலத்தில் வாங்கிய கடன்களை எல்லாம் திரும்ப கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், இந்த அரசு கனிவோடு பரிசீலித்து தள்ளுபடி செய்வார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டுள்ள காரணத்தால் அவர்கள் பணம் கட்ட முடியவில்லை. அதைக் கட்ட முடியாத காரணத்தால் அவர்கள் புதிதாக லோன் பெற முடியவில்லை. அப்படி லோன் பெறாத காரணத்தினால் அத்தகைய விவசாயிகளுக்கு மானியத்திலே உரம் கொடுக்கவில்லை. தனி நபர்களிடம் போய் பார்த்தால் அவர்களும் உரங்களை பதுக்கி வைத்துக்

கொண்டு, பழைய விலைக்கு உரங்களைக் கொடுக்க மறுக் கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் 500 வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. ஆனாலும் சில தனி நபர்கள் தரமான உரங்களைக் கொடுப்பதில்லை. அந்த நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கிற அனைவருக்கும், பழைய பாக்கி இருந்தாலும், விவசாயிகள் அனைவருக்குமே, மானியத்திலே உரம் வழங்க வழிவகை செய்ய வேண்டும். அப்படி அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் பெறாத விவசாயிகளுக்கும் தற்போது உரம் வழங்கப்படுகிறது. எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் ரொக்கத்திற்கு உரம் விற்பனை செய்து வருகிறார்கள். 25—7—1991 முதல் உர விலையை அதிகரித்தபோது, சில்லறை விற்பனை நிலையங்களில் இருக்கக்கூடிய உரத்தை முந்தைய குறைந்த விலைக்கே விற்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடன் பெறாத விவசாயிகள் உரம் பெறலாம்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உரங்களை வழங்கும்போது சில நேரங்களில் ஏழை விவசாயிகளுக்கு இந்த உரங்கள் எல்லாம் சரியான முறையிலே கிடைக்காமல் இருப்பதனால், இந்த உரங்களை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வாங்கும்போது அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வரி போட்ட உடனே விலையை கூட்டி விட்டார்கள். இப்போது அரசாங்கம் வரியை 3½ சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகக் குறைத்திருந்தாலும் கூட உரத்தின் விலையை குறைக்காமல் அதிக விலைக்கு விற்கப்படுவதனால் கூட்டுற வுச் சங்கங்களே, கடைகளை ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தி, சாதாரணமாக '.ஓப்பன் மார்க்கெட் '-ல் இருப்பதுபோல, இந்த சங்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கு மட்டும்தான் விற்க வேண்டுமென்று இல்லாமல் எல்லா இடங்களிலும் விற்பதற்காக கூட்டுறவுச் சங்க கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்வார்களா ? அப்படி செய்வது விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்பதால் அந்த வகையில் கடைகள் திறக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள கடைகள் எல்லா கிராமங்களுக்கும் பயன் தருகின்ற வகையில் இயங்கி வருகின்றன. கடைகள் இல்லாத இடங்கள் இருக்குமேயானால் அவற்றைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. ச. [illegible]சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற நிலைகள் தமிழ்நாடு முழுவதும் இன்று காணப்படுகிறது. இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உர விநியோகம் சீராக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்த இடத்திலிருந்தும் தற்போது அரசுக்கு எந்தப் புகாரும் வரவில்லை.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே கொடுக்கப் படுகின்ற உரங்கள், சரியான முறையிலே விநியோகிக்கப் படுவதில்லை. அதுபோன்ற அமைப்பு உள்ள கடைகள் அதிகமாக இருந்தாலும் அவர்கள் கொள்முதல் செய்வதில்லை. உரங்களை சரியான முறையில் விற்பனை செய்வதும் இல்லை. ஆகவே, விவசாயிகள் விவசாய நேரத் திலே உரம் கிடைக்காமல் விவசாயம் தடைப்படும் சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆகவே, தனியார் துறையிலே கொடுப்பதற்கு அரசு இது குறித்து ஆவன செய்ய வேண்டு மாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். ஆவன செய்யப்படுமா ?

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மானிய உரங்கள் மட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஆகவே உர விநியோகத்தில் எந்த விதமான பிரச்சினையும் இல்லாமல் உர விநியோகம் நடைபெற்று வருவதை நான் அளித்துள்ள விவர அறிக்கையின் மூலம் அறிய முடியும்.

*திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உர விலையைக் கூட்டி அறிவித்த ஒரே நாளில், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் மொத்த மாக மூட்டைகளைப் பல்வேறு தனி நபர்களுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங் களின் மீது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஏற்கனவே உரம் கையிருப்பு வைத்திருக்கக் கூடிய சங்கங்களுக்கும், மொத்த விற்பனையாளர்களுக்கும் 14-8-1991-லே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பழைய விலைக்கே விற்பனை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) தொட்டியம் தொகுதியில் உள்ள சில பகுதிகளுக்குக் காவிரி குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க சர்வே செய்தும் பணிகள் துவங்கப் பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என். ஆர். சிவபதி அவர்கள் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. என். ஆர். சிவபதி.

*திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தொட்டியம் தொகுதியில் உள்ள ஜெமுநாதபுரம், தாத்தையங்கார்பேட்டை, மேட்டுப் பாளையம் போன்ற பகுதிகளுக்குக் காவிரி குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க சர்வே செய்தும் பணிகள் துவங்கப் பெறாதது குறித்து'' மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



அறிக்கை.

திருச்சி மாவட்டம், துறையூர் நகராட்சி, தாத்தையங் கார்பேட்டை பேரூராட்சி, மேட்டுப்பாளையம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி, உப்பிலியாபுரம் பேரூராட்சி மற்றும் 94 வழியோரக் கிராமங்களுக்காக ஜெமுனாதபுரமும் உள்ளடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று காவேரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு ரூ. 1,990.20 இலட்சங் களுக்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்பக் குழு, வாரியத்தின் ஒப்புதலுக்குப் பிறகு நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காக அரசுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து 21-12-1990ல் அனுப்பப்பட்டுள்ளது.

2. மேற்படி திட்டத்திற்கு அமைப்புச் செலவை ஏற்றுக் கொள்ளும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தீர்மானங் கள் மற்றும் அவைகளின் நிதிநிலை பற்றிய நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சான்று இன்னும் இதுவரை அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை. இவைகளை உடனே அனுப்பும்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவருக்கு ஒரு கடிதம் 31-1-1991 அன்று அனுப்பப்பட்டுள்ளது. நினைவூட்டுக் கடிதங்களும் 25-2-1991, 22-3-1991, 7-6-1991, 9-7-1991, 7-8-1991 மற்றும் 11-9-1991-ல் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை குடிநீர்த் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இனி எந்த திட்டத்திற்கும் நிர்வாக ஒப்புதல் 1-4-1992 வரை அளிக்க இயலாது என்று நிதித்துறை கூறியுள்ளது. இந்த நிதித் துறையின் குறிப்பின்மீது வாரியத்தின் அறிக்கை கேட்கப் பட்டுள்ளது. வாரியத்தின் கருத்து பெறப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி குடிநீர்த் திட்டம் மூலமாக திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார் பேட்டை ஒன்றியத்தில் அனைத்து கிராமங்களும், கிட்டத் தட்ட 94 கிராமங்கள் பயனடையக்கூடும். இந்தத் திட் டத்தை 'எசன்ஷியல் சர்வீஸ்' என்று கருதி, இந்த ஆண்டே துவங்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான டெக்னிக்கல் சேங்ஷன், தொழில்நுட்பக் குழுவினுடைய ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. அரசினுடைய நிர்வாக ஒப்புதலுக்காக இது அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தத் திட்டத்திற்குண்டான அமைப்புச் செலவை ஏற்கக்

கூடிய நகராட்சி மற்றும் பேரூராட்சிகளினுடைய தீர்மானங்கள் பெறப்படவில்லை. அதைக் கோரி, கடந்த 11-9-1991 அன்று வாரியத்திற்கு அரசு கடிதம் அனுப்பியிருக்கிறது. இந்த நிதி ஆண்டிலே குடிநீர்த் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதால் இனி எந்தத் திட்டத்திற்கும் நிர்வாக ஒப்புதல் 1-4-1992 வரை அளிக்க இயலாதென்று நிதித் துறை கூறியுள்ளது. இந்த நிதித் துறையின் குறிப்பின்மீது வாரியத்தின் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. வாரியத்தின் அறிக்கை பெறப்பட்ட பிறகு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சி, 'தட்டுங்கள் திறக்கப்படும்', கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற பொன்மொழிக்கேற்ப நடக்கின்ற ஆட்சி, ஆதலால் மிக பணிவுடன் கேட்டுள்ளேன். எப்போது கொடுக்கப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறையின் குறிப்பின் மீது வாரியத்தின் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. வாரியத்தின் அறிக்கை கிடைத்த பிறகு ஆவன செய்யப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 6. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் (வணிகம்) தொழில் துறை தொடர்பான பத்திகள் குறித்து, பொது நிறுவனங்கள் குழு 1985-86 ஆம் ஆண்டு அளித்த முப்பத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 11-வது அறிக்கை, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் 1985-86 ஆம் ஆண்டு நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்



மீது அரசு எடுத்த மேல் நடவடிக்கை பற்றிய குழுவின் 12-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) தொழில் துறை மற்றும் கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு 1985-86 ஆம் ஆண்டு அளித்த 3-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் 13-வது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-05

### 7. மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் தொடர்ச்சி.

மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 35,44,29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 917. திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொது விற்பனை வரி மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருமானம், பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 35,44,29,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையான '' தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் '' என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதிலே தமிழிலே இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அதை இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையையும், அரசு எடுக்கக் கருதியுள்ள சில முக்கிய முடிவுகளையும் தெரிவிக்கிறேன் என்பதைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு முன்னால், ஒதுக்கப்பட்டிருக்கிற கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முன்னாலிருந்த ஆட்சிக் காலத்தில் எதுவும் இல்லை என்று சொன்ன எங்கள் மாவட்டத்திற்கு ரூ. 420 கோடிக்கு திட்டத்தை அறிவித்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் கழிந்த சட்டமன்றத் தேர்தலிலே எங்களுடைய மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக இருந்த ரேஷன் கார்டு பிரச்சினையை நான் இந்த சட்டசபையில் சொன்னேன். அதற்கிணங்க மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரை அனுப்பி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். மேலும் நாங்கள் உயிருக்கு உயிராக நேசித்துக் கொண்டிருந்த எங்கள் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தங்களுடைய கடமையைச் செய்யத் தவறிய அதிகாரிகளைப் பற்றி சுட்டிக்காட்டினேன், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்ததற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த உரையைத் துவங்குகின்றேன்.

---

@ 235 முதல் 255 வரையிலான பக்கங்களில் இணைப்பு 1-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



இந்த மானியக் கோரிக்கையிலே பல்வேறு நல்ல காரியங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். நிதி நெருக்கடி இருந்தபோதிலும் அத்தியாவசிய பண்டங்களின் வரி குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் எங்களுடைய மாவட்டத்தில் மிக முக்கியமான பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. ரப்பருக்கு இதுவரை வரி இல்லாமல் இருந்தது. அதைப் பொறுத்தவரையில் நான் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு பல்வேறு தீர்மானங்களை அனுப்பியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முக்கியமாக ஒரு ஏக்கரிலிருந்து 5—6 ஏக்கர் வரைதான் அதிகமான பேர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 8 ஏக்கர் வரை நீங்கள் வரி போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னால் 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 8 ஏக்கர் இருக்கிறது என்று சொன்னால் ஒருவருக்கு ஒரு ஏக்கர் அளவுக்குத்தான் கிடைக்கும். இதில் லாஸ்ட் பாயின்டில் வரி போட்டிருக்கிறீர்கள். நான் கேரளா சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். காரணம், தமிழகத்திலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே 5 சதவீதம் ரப்பர் கிடைக்கிறது. கேரளாவிலே 90 சதவீதம் ரப்பர் கிடைக்கிறது. கேரளா அரசாங்கத்தின் சட்டத்தில் என்ன சொல்கிறது என்றால் It is said in the schedule to the Act that rubber shall be taxed at the point of last purchase that is last point of taxation. என்று போட்டிருக்கிறார்கள். லாஸ்ட் பாயின்ட்டில் வரி போட்டால் ஒன்றும் பிரச்சினை இல்லை: We have no objection to that.

முற்பகல் 11-10

ஆனால் அங்கே இருக்கிற பிரச்சினையைப் பற்றி மிகத் தெளிவாக ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். அதை தலைவர் அவர்களே உங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

Already the rubber growers in Kanyakumari district are passing through a very difficult phase, whereby the sale price of rubber is stagant but the cost of inputs are reising sharply including that of manure due to the Central Budget. Under these circumstances, the economy of the small growers will be seriously affected as rubber is the main bread winner for the people of Kanyakumari District. Levy of sales tax will be yet another heavy burden, on the already existing financial commitments of the people. Out of a total of about 12,000 hectares under rubber almost 4,000 hectares come under the purview of the Arasu rubber Corporation. Out of the balance of 8,000 hectares, 90 percent of the area belongs to small growers in the district. In the light of the above mentioned points, we request that the proposal to levy sales tax on rubber may be kindly dropped and the interests of the people of Kanyakumari District protected.

That is the resolution passed by the public.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே 11 ஆயிரம் ஏக்கர் அரசு ரப்பர் கழகத்தில்தான் இருக்கின்றன. மீதி இருக்கின்ற நிலங்களைப் பொறுத்தவரையில், 4 ஏக்கர், 3 ஏக்கர், 2 ஏக்கர் என்றுதான் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மேல் கடைசி பாயிண்ட்டில், பர்சேஸ் பாயிண்ட்டில் வரி போடுவதில் பிரச்சினை இல்லை. இப்போது அங்கே லாரிகளின் மூலம் பங்களூருக்கும், பம்பாய்க்கும், கல்கத்தாவிற்கும் அனுப்பப்படுகிறது. அப்போது அந்த லாஸ்ட் பாயின்ட்டில் வரியைப் போட்டால் பிரச்சினை இல்லை. ஏனென்றால் அங்கே லோக்கல் சேல்ஸ் கிடையாது. ஏனென்றால் அங்கே கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலைகள் இல்லை. ஆகவேதான் வெளியே கொண்டு போகிறார்கள். இப்போது சர்க்கரைக்கு 12 சதவீதம் வரி இருக்கிறது. 15 ஏக்கரில் கரும்பு பயிரிடுகிற விவசாயிகளுக்கு வரி போடுவீர்களா? அதைப் போலத்தான் இதுவும். நாங்கள் எல்லாம் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்துள்ள சிறு விவசாயிகள். எங்களுடைய நிலைமை இதுதான். நாங்கள் ஸ்மால் குரோயர்ஸ். எங்களைப் பொறுத்தவரையில் மேலும் வரி போடுவது சரியல்ல. ஏற்கெனவே விற்பனை வரி அதிகமாக இருக்கிறது. அதை வசூலிக்க அதிகாரிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். நான் வணிகவரித் துறை அதிகாரிகளை குறை சொல்ல விரும்பவில்லை. அவர்கள்தான் அதிகப் பணத்தை அரசுக்கு வாங்கித் தருகிறார்கள். ஆகவே அவர்களைப் பற்றி நான் குறை சொல்லத் தயாராக இல்லை. ஆனால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள் மீது வரி போடுவதன் மூலம் எந்த அளவிற்கு வரி வரும்? இதனால் வருவாய் அதிகமாக வரப்போவதில்லை. அரசு இரப்பர் கழகத்திடம் தான் 11 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. தனியார் வைத்திருப்பது ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்பதுதான். அதன்மேல் வரியை போடுவது சரியல்ல. கன்னியாகுமரியில் உள்ள மக்களில் ஏறத்தாழ 80 சதவீதம் மக்களுக்கு இரப்பர் பயிர் இருக்கிறது. ஏனென்றால் கடலோரப் பகுதியைத் தவிர மற்ற எல்லா பகுதிகளிலும் இரப்பர் விளைகிறது. ரப்பர் பிளைன்ஸில் வருவதில்லை. பாறைகள் உள்ள மலைப் பகுதியில் ரப்பர் வளர்கிறது. ஆகவே மிகவும் கஷ்டப்பட்டு பணி செய்துதான் நாங்கள் ரப்பரை வளர்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் அந்த ரப்பருக்கு வரி போடுவது சரியல்ல. ஆகவே கேரளாவில் இருப்பதைப் போல 'லாஸ்ட் பாயின்ட்டில்' வரி போடுவதால் பிரச்சினை



இல்லை. அப்படியில்லாமல் விவசாயிகள் ரப்பருக்கு வரியைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது, நான் கடுமையான வார்த்தைகளைச் சொல்ல விரும்பவில்லை. அது விவசாயிகளை நிச்சயமாகப் பாதிக்கும். எங்களுக்கு இரண்டு வரிகளும் உண்டு. ரப்பரை விவசாய வருமான வரியிலும் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே அந்த மக்களுடைய தீர்மானத்தை இந்த அவையிலே நான் படித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கு உரிய தீர்வைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமானால் கரும்புக்கு இருப்பதைப் போலவே வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இல்லாமல் விவசாயிகள் தான் வரியைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் நாங்கள் தினமும் வணிகவரி அலுவலகத்திலே நிற்க வேண்டும் என்றால் அது நிச்சயமாக எங்களால் தாக்கு பிடிக்க முடியாது. ஒரு ஏக்கரை வைத்துக் கொண்டு விவசாயம் செய்வதா? ரப்பர் பாலை விற்பதா? அதிகாரிகளுக்கு ஃபைன் கட்டப்போவதா என்ற பெரிய பிரச்சினை இருக்கிறது. இந்த வரியால் சிறு வருமானம்தான் வரும். அதை வசூலிக்க அதிகாரிகளை நியமிக்க வேண்டும். அந்த அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்கக் கூடிய அளவிற்குக் கூட வருமானம் இதிலே வராது என்று நினைக்கிறேன். மேலும் எட்டு ஏக்கர் என்று சொல்லும்போது, 15 ஏக்கர் வைத்திருப்பவர்கள் கூட எட்டு ஏக்கருக்குள்ளே கொண்டு வருவார்கள். அந்த அளவிற்கு வரி வாய்ப்புக் குறைவாக இருக்கிறது. மேலும் அந்த மாவட்டத்து மக்கள் மீது வரியைப் போடடார்கள் என்ற பெயரும் உருவாக வேண்டாம். ஆகவே தயவு செய்து அந்த வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மக்களுடைய தீர்மானத்தை இந்த அவையிலே படித்திருக்கிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த வரியைப் பொறுத்தவரையில் 4-9-1991 முதல் அமுலுக்கு வரும் என்று சொல்லியிருப்பது எந்த அளவிற்கு நியாயம் என்று தெரியவில்லை. இப்போதுதான் வரியைக் கூட்டியிருக்கிறோம், அல்லது குறைத்து இருக்கிறோம். ஆனால் அந்த வரி விதிப்பிற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்தால் எப்படி வரியை வசூல் செய்ய முடியும்? குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழகத்திலே ஒருவர் கம்பெனியை வைத்திருக்கிறார் என்றால் அவருக்கு 100 கிளைகள இருக்கும். அவர் 4-9-1991-ல் இருந்து புதிய வரியைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அவர் எந்த அளவிலே செய்வார்? பழைய கணக்கிலேயே விற்பார்கள். இதனால் அதிகாரிகளுக்கும், வணிகர்களுக்கும் நிச்சயமாக ஒத்து வராது. ஆகவே அங்கேதான் கரப்ஷன் வரும். புக் அட்ஜெஸ்ட்மெண்ட் என்று சொல்லும்போது, அதிகாரி எனக்குத் தெரியாதா நீ எவ்வளவு விற்றாய் என்று கேட்கும் பிரச்சினை வருகிறது. ஆகவே இனிமேலாவது வரியைப்

போடும்போது, வரி விதித்து பட்ஜெட் போட்ட மாதத்தின்
அடுத்த மாதம் 1 ஆம் தேதி முதல் புதிய வரி அமுலுக்கு வரும்
என்று வைக்க வேண்டும். அதாவது செப்டம்பரில் பட்ஜெட்
போட்டால் அடுத்த மாதம் அக்டோபர் 1 ஆம் தேதி முதல்
அந்த வரி விதிப்பு அமுலுக்கு வரும் என்ற சூழ்நிலை வந்தால்
நன்றாக இருக்கும். இதற்கு முன்னால் 4-9-1991-ல் இருந்து
அது அமலுக்கு வரும் என்று சொன்னால் நிச்சயமாக அது வணிகர்
களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலே பிரச்சினைகளை உருவாக்கு
கிறது. பெரிய பிசினஸ் நடத்துகிறவர்கள் வெளி மாநிலங்களி
லிருந்து மெட்ராஸை 'Base' ஆக வைத்து, பிராஞ்சுகளை
ஜில்லா விலே வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் கஷ்டமாக இருக்கும்.
ஆகையினால் அதைப் பொறுத்தவரையில் இனிமேலாவது இந்த
மாதிரி சப்சிகுவன்ட் மாதத்திலே போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதுபோல 1988-லே The entry tax i. e. exenption from
payment of additional sales tax for motor cars with a
capacity upto 900 cc has been withdrawn. இதனால்
அரசுக்கு இழப்புதான் வரும் என்று சொல்லக் கடமைப்
பட்டு இருக்கிறேன். 1988-க்குப் பிறகு தான் நம்முடைய
மாநிலத்திற்கு மாருதி போன்ற கார்கள் அதிகமாக வருகின்றன.
இந்த டாக்ஸை வித்டிரா செய்வது என்று சொன்னால்
tax is paid by the agent மாருதி காரோ, மற்ற அம்பாசடர் காரோ that
அவைகளை நாம் தயாரிப்பது இல்லை. அவைகளை வெளி
மாநிலங்களில் தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். ஏஜெண்ட்
மூலம் கொடுக்கிறார்கள். ஏஜென்ட் என்ன செய்கிறார்கள் என்று
சொன்னால், There is a turnover tax. டர்ன்-ஓவர்
டாக்ஸை நம் கையிலே எடுக்க முடியாது. கன்சூமர்களிடம்
வாங்க முடியாது. ஒரு மாருதி கார் விற்றால் டர்ன்-ஓவர்
டாக்ஸ் நாம் வாங்க முடியாது என்ற காரணத்தாலே அவர்கள்
இதைக் கொடுக்க வேண்டும். இப்போது பாண்டிச்சேரியில் டர்ன்-
ஓவர் டாக்ஸ் இல்லை. பாண்டிச்சேரியில் வைத்து கார்களை
சேல்ஸ் செய்கிறார்கள். நான் கூட பாண்டிச்சேரியில் வண்டி வாங்கி
இருக்கிறேன். ஆனால் இந்த நிலைமை ஏன் என்று சொன்னால்,
உதாரணத்திற்கு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்க்கு ஒரு வண்டியை
ஒரு மாவட்டத்தில் வாங்கினால் 5 சதவீதம் சேல்ஸ் டாக்ஸ்
கிறது. இப்போது நாம் 'என்ட்ரி டாக்ஸ்' வைத்து வரு
றோம். அதை இல்லை என்று சொல்லவில்லை. இருக்கி
5 சதவீதம் என்று சொன்னால் சர்சார்ஜ் ஆன் சேல்ஸ் டாக்ஸ்
15 சதவீதம் போடுகிறோம். அடிஷனல் சர்சார்ஜ் 5 சதவீதம்
சேல்ஸ் டாக்ஸ் போடுகிறோம். அதாவது 20 சதவீதம் டாக்ஸ்.
அந்த 5 சதவீதம் டாக்ஸிலே நாம் 20 சதவீதத்தை சர்சார்ஜ்
போடுகிறோம். அந்தப் பணம் நமக்கு வருகிறது. ஆனால் இந்த



டர்ன் ஓவர் டாக்ஸ் என்று சொல்வது, இந்த பிசினஸ்மேன் -அதாவது ஏஜென்ட், மாருதியினுடைய ஏஜென்டோ, அம்பாசடரினுடைய ஏஜென்டோ, ஃபியட்டினுடைய ஏஜென்டோ அவர்கள் கையில் இருந்து கொடுக்க வேண்டும். ஆகையினால் நாம் 2 சதவீதம் குறைவு செய்து கொடுத்தால் இந்த வண்டிகள் எல்லாம் இங்கே சேல்ஸ் ஆகும். இதை வித்ட்ரா செய்யலாம் என்று பழைய சர்க்காரில் பேசி இருக்கிறேன். கடந்த சர்க்காரில் கொடுத்தார்கள். ஏதோ அவர்கள் செய்ததற்காக நாம் கொடுக்கக் கூடாது என்று சொல்லக் கூடாது. ஏனென்றால், நமக்கு வருவாய் வருகிறது. நிச்சயமாக நாம் அவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால், அவர்கள் அனைவரும் பழையபடி பாண்டிச்சேரிக்கு போய்விடுவார்கள். நம்முடைய மக்கள் அங்கு போய் வாங்குவார்கள். ஆகையினால் அந்த டாக்ஸை இழப்பது சரியாக இருக்காது ; வித்ட்ரா செய்தது சரி இல்லை என்று சொல்கிறேன். இல்லை என்று சொன்னால் ஒரு வண்டி கூட இங்கே வராது. அது தான் பாய்ன்ட் என்று சொல்கிறேன். அதுபற்றி பழைய சர்க்காரிலே பேசப்பட்ட பிறகு தான் அதைக் குறைவு செய்து கொடுத்தார்கள். அதை நாம் தொடர்ந்து செய்தால் நன்றாக இருக்கும் என்று என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறேன். நிச்சயமாக அதைச் செய்தால்தான் நல்லது. இல்லை என்றால், நேற்று கூட என்னிடம் சொன்னார்கள், பழையபடி பாண்டிச்சேரிக்கு கர்நாடகத்துக்கு வண்டிகள் எல்லாம் கொண்டுபோய் விடுவார்கள் என்று. அதனால், நம்முடைய மாநிலத்தின் வருவாய் குறையும் என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுபோல அத்தியாவசியப் பண்டங்களைப் பொறுத்தவரையில் டாக்ஸ் குறைக்கப்பட்டு இருக்கிறது. ஹார்லிக்ஸ் போன்ற பொருள்களுக்கு பெர்மனன்ட் எக்சம்ப்ஷன் கொடுக்கலாம். சின்ன சின்ன தொழில் செய்கிறவர்களுக்கு அதைக் கொடுத்தால்தான் அதிகமானவர்கள் அந்தத் தொழிலைச் செய்வார்கள். வருமானம் கூடும். இப்போது நாம் அதிகாரிகளைக் கூட்ட வேண்டி இருக்கிறது. அதிகாரிகள் கூடும்போது அதில் வருகின்ற வருவாய் அவர்களுக்கே சென்றுவிடும். அது மக்களுக்கு கஷ்டமாக இருக்கின்ற காரணத்தால், ஸ்மால் டிரேடர்ஸ்களிடம் அந்த சேல்ஸ் டாக்ஸ் வசூலிப்பதை நிறுத்தினால் நன்றாக இருக்கும் என்று சொல்கிறேன்.

இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா டிக்கெட்டுகள் இருக்கின்றன. அவைகளிலே நாம் டாக்ஸ் விதிப்பதில்லை. ஏன்? விமானத்திலே வசதி படைத்தவர்கள் தான் போகிறார்கள். நம்முடைய மாநிலத்திலே கொடுக்கிற டிக்கெட்டுகளுக்கு நிச்சயமாக நாம் டாக்ஸ் வாங்க முடியும். நான் பல இடங்களிலே பார்த்து

இருக்கிறேன். சேல்ஸ் டாக்ஸ் போடவில்லை. ஏர் இண்டியா டிக்கெட், இந்தியன் ஏர்லைன்ஸ் டிக்கெட் — இவைகளை வாங்கி நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிற பெரிய மேக்னெட்ஸ் எல்லாம் வெளிநாடு செல்கிறார்கள். அவர்களுக்கு வரி போட்டால் யாரும் ஏன் என்று கேட்கப் போவதில்லை. நம்முடைய நிதிநிலைமை ரொம்பவும் கஷ்டமான நிலையில் இருக்கிறபோது நிச்சயமாக அதற்கு சேல்ஸ் டாக்ஸ் விதிப்பதில் எந்தத் தவறும் இல்லை என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல லைஃப் சேவிங் டிரக்ஸ்-ல் டாக்ஸ் குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆட்டோ முதலான பொருட்களுக்கு டாக்ஸ் குறைக்கப்பட்டது பாராட்டக்கூடிய விஷயம்.

இன்று பல இடங்களிலேயும் சேல்ஸ் டாக்ஸ் அலுவலகங்கள் ரென்டட் பில்டிங்ஸில் இருக்கின்றன. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே பல கட்டிடங்கள் கட்டப்பட்டன. ஆனால் அதற்குப் பின்னால் வந்த ஆட்சியில் புதிய கட்டிடங்கள் எதுவும் கட்டப்படவில்லை. இன்று வணிகர்கள் பணம் கட்ட வரும்போது இருப்பதற்கு இடம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் தான் நமக்கு 70 சதவீதம் வருவாய் தருகிறார்கள். அலுவலர்கள் இருப்பதற்குக்கூட இடமில்லாமல் டன்ஜன் பில்டிங்கிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். வணிகர்களே அவர்களை மதிப்பதில்லை. ஆகையினால் அந்த அலுவலர்களுக்கு வசதியாக புதுப்புது கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20.

அதேபோல் சேல்ஸ் டாக்ஸை பொறுத்தவரையில், அதிகாரிகள் பணம் நம்மிடம் வாங்குகிறார்கள் என்றாலும் கூட, நல்ல அதிகாரிகளும் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால் நான் மேலே பார்த்துச் சொல்வதாக நினைக்கக் கூடாது. நம்முடைய இந்த இலாகாவினுடைய கமிஷனர் கூட ஒரு திறமையான அதிகாரி. எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் காலத்தில் தான் அதிகமான டாக்ஸ் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்துகிற வகையில், போலீஸ் இலாக்காவில் இருப்பதைப் போல பதக்கங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல அதிகாரிகள் என்னிடத்தில் சொன்னார்கள். நேர்மையாகப் பணியாற்றினால் என்ன கிடைக்கிறது? அங்கே நமக்குத் தெரிகிறது பலபேர் ஊழல் செய்கிறார்கள். அவர்களுக்கும் ஒரே சம்பளம் தான். நேர்மையாக 24 மணி நேரமும் உழைக்கிறோமே எங்களுக்கு பலன் என்ன என்ற கேள்வியை பல்வேறு அதிகாரிகள் என்னிடத்தில் கேட்டிருக்கிறார்கள். எனக்குத் தெரியும், பல நேர்மையான நியாயமான, 24 மணி நேரமும் பணி



யாற்றுகிற அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய போலீஸ் இலாக்காவில் கொடுப்பதைப் போல பதக்கங்களைக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பெர்மனென்ட் பில்டிங்ஸ் கட்டும்போது, வணிகர்களிடத்தில் டாக்ஸ் வசூல் செய்வதற்கு ஒரு இடத்தை ஒதுக்கிக்கொடுத்து வசதியான முறையில் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ரேஸ் கோர்ஸ் இருக்கிறது. அதிலே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருக்கிறீர்கள். அதை ஒரு பப்ளிக் செக்டாராக உருவாக்குகிற நிலை இருந்தால் அதிகமான டாக்ஸ் வரும். அது வேண்டாம் என்று நாம் ஒதுக்கினால் கூட ஸ்டே வாங்கி நடத்துகிறார்கள். மக்கள் விரும்பினால் நடத்தலாம். இப்போது ரேஸ்கோர்சில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டிருக்கிறீர்கள். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் சர்வீசை அங்கே வேஸ்ட் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அதற்கு பதிலாக ஒரு பப்ளிக் அண்டர்டேகிங் போல உருவாக்கி, அதிலேயிருந்து அதிகமான டாக்ஸ் கலெக்ட் பண்ணுகிற அளவில் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எண்டர்டெயின்மெண்ட் டாக்சைப் பொறுத்தவரையில் நிச்சயமாகச் சொல்வேன். பல இடங்களில் டாக்ஸ் எவேஷன் இருக்கிறது. இப்போது சொல்கிறார்கள் வீடியோ வந்ததால் கலெக்ஷன் இல்லை என்று. அது சரியானதாக இருக்க முடியாது. எங்கள் பகுதியில் கிராமங்களைப் பொறுத்தவரையில், நகரங்களைப் பொறுத்தவரையில் எல்லா தியேட்டர்களும் சரியாகத்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் சீட் அடிப்படையில் டாக்ஸ் கலெக்ட் பண்ணுகிறார்கள். சில தியேட்டர்களில் என்ன சொல்கிறார்கள் என்றால் ஃபுல்லாக 10 ஷோக்களுக்கு வாங்கிவிடுகிறார்கள் அதை நடத்திவிட்டு நடத்தவில்லை என்று கணக்கு கொடுக்கிறார்கள். அதற்கு ஒருசில அதிகாரிகளும் உடந்தையாக இருந்து எண்டர்டெயின்மெண்ட் டாக்சை எவேட் பண்ணி அரசுக்கு நஷ்டத்தை உருவாக்குகிறார்கள். அரசுக்கு பணம் வரவில்லை என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வணிகர்களைப் பொறுத்தவரையில் லாரிகளில் சாமான்களைக் கொண்டு வரும்போது பல மணி நேரங்கள் கியூவில் நிறுத்தி பலவிதமான ஹராஸ்மெண்ட்ஸ் செய்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஹைவேஸ் ரோடுகளில் ட்ராபிக் ஜாம் ஆகிறது. இதிலே 100 வண்டிகளை நிறுத்தி அங்கே ஒழுங்காக டாக்ஸ் வசூலிப்பது இல்லை. மால் பேசுவதில், அட்ஜஸ்ட் செய்வதில்தான், எவ்வளவு

தொகை என்று பேசி பல்வேறு கணக்குகளைச்சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் ட்ராபிக் ஜாம் ஆகிறது. வரிகள் நம்முடைய அரசுக்கு வந்து சேர்வதில்லை. ஆகவே, அதை கண்காணிக்கிற வகையில் ஸ்குவாட் போட்டு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல அத்தியாவசிய பொருள்கள்—எடிபிள் ஆயில்—நம்முடைய உணவுப் பொருள்களுடைய வரி அதிகமாக இருக்கிறது. பாண்டிச்சேரியில் 2 சதவீதம் தான் இருக்கிறது. அதை இங்கும் 2 சதவீதமாக குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்கு தேவையான பொருள்களுக்கு டாக்சை குறைத்து—குறைத்து இருக்கிறீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. மேலும் குறைத்து—லக்சூரியஸ் ஐடம்ஸ்க்கு அதிகமாக வரி போடுவதை யாரும் குறை சொல்லப் போவதில்லை. ஸ்டார் ஹோட்டலுக்கு வரி அதிகமாக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கூட அதிகமாக்கலாம். அதைப்போல இண்டியன் மேட் ஃபாரின் லிக்கர்ஸ்க்கு அதிகமாக டாக்ஸ் போடலாம். இண்டியன் ஏர்லைன்ஸ், ஏர் இண்டியா டிக்கட்டுகளுக்கு அதிகமாகப் போடலாம். நிச்சயமாக அதிக வருவாய் நமக்கு வரும்.

அடுத்து ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கன்சைன்மெண்ட் டாக்ஸ் மத்திய அரசு அறிவித்ததில் நமக்கு ஒரு மாற்று கருத்து இருந்தது. அதில் நிலைமை என்னவென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் பதிலில் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. நடேசன் பால்ராஜ்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வணிகவரித்துறை மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய இலாக்காவில் வருகிற வருவாயை வைத்துதான் இந்த மாநிலமே நம்பியிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி நம்பியிருக்கிற நேரத்தில் நானும் இங்கே சில கருத்துக்களை மிகத் தாழ்மையோடு சொல்ல நினைக்கிறேன். இதைச் சொல்கிற இந்த நேரத்தில் என்னுடைய இரு கரங்களையும் அவர்களுடைய பாதங்களில் வைத்து நான் மிகப் பணிவோடு இந்தக் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1939 ஆம் ஆண்டு தான் வணிகவரிச் சட்டத்தை நம்முடைய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இங்கே அறிமுகப்படுத்தினார்கள். 20 ஆண்டுகளுக்குப் பிறகு 1959 ஆம் ஆண்டு அந்த வணிகவரிச் சட்டத்தை திருத்தம் செய்தார்கள்.



அதற்குப் பிறகு, இதுவரையிலும் எந்த ஒரு திருத்தங்களையும் கொண்டுவரவில்லை என்பதை மிக வேதனையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11-25

நம்முடைய ஆளுநர் உரையிலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அதைப்பற்றி உடனடியாக மேல்மட்டக் குழு போட்டு, ஆராய்ந்து அதற்கான திருத்தங்களைக் கொண்டு வருவோம் என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதை உடனடியாகக் கொண்டு வரவேண்டும் என்று மிகத் தாழ்மையோடு நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் என்றால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தொழில் மானியத்தில் இந்தந்தத் தொழில்களை எல்லாம் நீங்கள் ஆரம்பித்தால், 5 ஆண்டுகள் வரி விலக்கு, 10 ஆண்டுகள் வரித் தள்ளுபடி என்ற சலுகையைச் செய்தார்கள். அதைப்போலவே, 30 ஆண்டுகளுக்கு முன்பு வரிச் சலுகை செய்ததை இன்றும் அவர்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதைக் காட்டிக் காட்டி, வரிகளைக் கட்டாமல் பல கோடி ரூபாய்கள், நமக்கு வருகின்ற ரூபாய்கள் வராமல் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் மிகத் தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்லால், நம்முடைய தமிழகத்திற்கு அடுத்த மாநிலத்திலிருந்து வருகின்ற பண்டங்கள் அனைத்தும், விலைப் பட்டியல், அதாவது இன்வாய்போடுதான் வருகின்றன. அதை செக் போஸ்டிலே இருக்கிற சிறிய அதிகாரிகள் எடுத்து தனியாகச் சேர்த்து, 10 பட்டியல், 5 பட்டியல் என்று எடுத்துக் கொண்டு, நமக்கு ஒரு பட்டியலிலே 15 ஆயிரம் ரூபாய் வரி வசூல் வரவேண்டும் என்றால், அதை 2 ஆயிரம் ரூபாய்க்கு கொடுத்துவிட்டு, மாலையிலே அதை கலெக்ஷன் செய்துவிட்டுச் சென்று விடுகிறார்கள். அதற்கு நாம் மிகத் தெளிவோடு, அண்டை மாநிலத்திலிருந்து வருகின்ற இடத்திலே 10 ஏக்கர் நிலத்தை வாங்கி அதைச் சரியான இடத்திலே அமைத்து, அதிலே அந்த லாரிகள் உள்ளே சென்று, அங்கே, டி.சி., ஏ.சி., போன்றவர்களை வைத்து பரிசோதனை செய்து, அந்த இன்வாய்ஸ்களைப் பணத்தைப் போல பாதுகாத்து, இந்தத் துறைக்கு அனுப்பினால், நமக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ நிச்சயமாக 300 கோடி ரூபாய்க்கு மேலே வரும் என்பதிலே எந்த ஐயப்பாடும் இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த செக் போஸ்ட்டுக்கு ஏ. சி. என்று போடப்பட்டு இருக்கிறது

ஆனால் அந்த ஏ. சி. இருப்பதோ கிரீம்ஸ் ரோட்டிலே. புழலுக்கோ அல்லது பூந்தமல்லிக்கோ அந்த ஏ.சி. செல்லமாட்டார்.. ஆகவே இந்த இன்வாய்ஸ்களை அவர்கள் எடுத்து மிஸ்-யூஸ் செய்கிறார்கள் என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாம், நம்முடைய மாநிலத்தில் இருந்து நிறைய உற்பத்திப் பொருட்கள் அடுத்த மாநிலங்களுக்குச் செல்கின்றன. அந்த மாநிலத்திற்கு செல்கின்ற பொருட்களை, கன்சைன்மெண்ட் கூட்ஸ் என்று அனுப்பி அங்கேயே விற்றுவிடுகிறார்கள். அதற்கு இங்கே நம்மால் வரி போட முடியவில்லை. இதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மத்திய அரசாங்கத்திடத்திலே நாம் அனுமதி வாங்கவேண்டும் என்று சொல்கிறார்கள், இதை நாம் உடனே பெற்று அதைச் செய்தால், ஏறத்தாழ 400 கோடி ரூபாய்க்கு மேலே இதிலே வருவாய் வர இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வணிக வரியைப் பொறுத்தவரையில் நமக்கு 70 சதவீதம் இந்த மாநிலத்திலே வருவாய் அதிலேதான் அதிகமாக வருகிறது. ஆகவே இதை நம்பித்தான் நாம் இருக்கிறோம என்ற காரணத்தால், உங்களுக்கு சில நல்ல யோசனைகளை சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்திலேதான் இதையெல்லாம் சொல்கிறேன். அறிவுரை சொல்வதற்கு அல்ல. இவைகள் யோசனைகள் என்பதை மிகத் தாழ்மையோடு சொல்லிக் கொள்கிறேன்.

நாம் சலுகைகள் என்று அறிவித்து, இன்று 21 பண்டங்களுக்கு சலுகைகளை அளிக்கிறோம். ஆனால் 1959 ஆம் ஆண்டிலிருந்து சலுகைகள் அளிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான சாமான்களுக்கு இன்னும் வரி செலுத்தாமல இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக மேல்மட்டக் குழுவை நீங்கள் அமைத்து, ஒருங்கிணைந்து, இந்தச் சாமான்களுக்கு என்று வரையறுக்கப்பட்டு, இதை நாம் நிர்ணயிப்போமானால் நிச்சயமாக இன்னும் பல கோடி ரூபாய் நமக்கு வர இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய தினம் நம்முடைய சட்டமன்றம் முடிந்து 8 மணிக்கு நான் ஹாஸ்டலுக்குச் செல்லும்போது, ஏறத்தாழ 500 பேர்கள் ஏழைத் தொழிலாளிகள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். என்ன என்று கேட்டேன். எங்களுடைய குறைகளைச் சொல்வதற்கு யாரும் இல்லை. நீங்களாவது சொல்வீர்களா என்று சொன்னார்கள். என்ன குறை என்று



கேட்டேன். பின்னி கம்பெனி, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் போன்ற கம்பெனிகளிலே 5 ஆயிரம் பேர்கள் வேலை இழக்கிறார்கள் என்றால், அதைப் பெரிதுபடுத்துகிறார்கள்.

முற்பகல் 11-30

ஆனால் 3 இலட்சம் பேர் வேலை செய்வதிலிருந்து இப்போது 50,000—க்கும் குறைந்துவிட்டும், அலுமினியத் தொழிலானது ஏழை எளிய மக்களை பாதிக்கின்ற அளவிற்கு அலுமினியப் பாத்திரங்களை நாங்கள் கையால் அடித்து செய்கின்ற பாத்திரங்களுக்கு 21 சதவீதம் வரி போடுகிறார்கள் என்றார்கள். 4 சதவீதம் தானே என்று கேட்டேன், இல்லை, 6 சதவீதம் ingo. — லும் அதாவது பழைய சாமான்களுக்கும் 8 சதவீதம் விற்பனை வரி, 4 சதவீதம் சர்ச்சார்ஜ் 3 சதவீதம் ஆக மொத்தம் 21 சதவீதம் என்று வருகிறது என்ற புள்ளி விவரங்களைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதெல்லாம் நீங்கள் தயவு செய்து புரட்சித் தலைவியினுடைய இதயத்தை எட்டுகின்ற அளவிலே சரியாக சொல்வீர்களேயானால் எங்களுக்கு நிரந்தரமாக வாழ்வு கிடைக்கும் என்று மன்றாடி கேட்கிறார்கள். மத்திய அரசுடைய எக்சைஸ் தீர்வையால் ஆண்டுதோறும் இந்த அலுமினியம் விலை ஏறிக்கொண்டே போகிறது. நாம் 4 சதவீதம் அலுமினிய பாத்திரத்திற்கு போடுகின்றோம். அதை அடித்து மீண்டும் உருக்காலைக்கு வரும்போது 8 சதவீதம் வரி என்று தப்பாக போடப்பட்டிருக்கிறது என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன். ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற அலுமினியப் பாத்திரங்களுக்கு வரி விலக்கு கொடுத்து உதவ வேண்டும். 50,000 பேர்கள் இந்த மாகாணத்தில் தொழில் செய்கிறார்கள். அவர்களில் நல்லவர்களை எடுத்துச் சென்று, அடுத்த மாநிலங்களில் அங்கே பயிற்சிக்காக அனுப்பிவிட்டு, நம்முடைய மாநிலத்தில் அந்தத் தொழில் குறைந்து கொண்டே வருகிறது. என்பதைச் சொல்லி, நீங்கள் இதைக் கவனத்தோடு புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்புத் தந்த அவைத் தலைவருக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் என்ற மானியக்

கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்கின்ற வாய்ப்பினை எனக்கு தந்தமைக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தமட்டில் மாண்பு மிகு புரட்சித் தலைவர் காலத்தில் மாண்புமிகு நிதி யமைச்சராக இருந்த நாவலர் அவர்கள வரியைக் குறைத்து வசூலைப் பெருக்க வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்கித் தந்தார்கள். அதன்படியாக, படிப்படியாக இன்றும் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் 15 உபபொருட்களு க்கு வரிகளைக் குறைத்து வரி வசூலை செய்து நாம் நல்ல முறையிலே தமிழகத்திற்கு நல்ல பல திட்டங்களை செய்கின்ற நல்ல எண்ணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு வியாபாரி என்ற முறையில் இந்தச் சபையிலே கூறிக் கொள்வதெல்லாம் வியாபாரிகளுக்கும் அரசு அலுவலர்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தி. ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்கி நமக்கெல்லாம் ஒரு நல்ல திட்டத்தை வழிவகுத்துக் கொடுப்பதற்காகத்தான் இந்த வரிச் சலுகை இருக்கின்றது என்பதை வியாபாரப் பெருங்குடி மக்கள் எல்லாம எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்ற வாழ்த்துக்களை எல்லாம் நாம் சேகரித்துப் பார்ப் போமேயானால சென்ற ஆண்டு வரி விகிதங்கள் கிட்டத்தட்ட ரூ. 2,100 கோடிக்கு வியாபாரிகள் மூலமாக அலுவலர்கள் அரும்பாடுபட்டு நமக்கு எல்லாம், இந்த அரசுக்கு சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசு எப்படியெல்லாம் செலவழிக்கின்றது என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கின்ற போது நமது நிதி நிலை அறிக்கையிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 1,600 கோடிக்கு பல திட்டங்களை செயலாற்ற இருக்கின்றோம். அந்த செயலாற்றுகின்ற நோக்கினை பார்க்கும்போது இப்படி வரிகளை எல்லாம் ஒட்டுமொத்தமாக வசூல் செய்துதான் ஆக வேண்டும்.

வரி போடாமல் நாம் வசதிகளை பெருக்க முடியாது என்ற ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். உண்மை தான். இருந்தாலும் மக்களுக்கு, அதுவும ஏழை யெளிய மக்களுக்கு எப்படி எல்லாம் அந்த வரிச் சுமை சேர் கின்றது என்பதை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றும் தலைவர் தலைமை.)

இன்று சமையலுக்கு உபயோகிக்கப்படுகின்ற எண்ணெய் வித்துக்கள் பல வெளிமாநிலங்களிலேயிருந்து வாங்கிவந்து நமது மாநிலத்திலே வந்து சேர்வதற்கே கிட்டத்தட்ட ரூ. 1,200, ரூ. 1,300 ஆகின்றது கொள்முதல் விலை.



முற்பகல் 11.35

இந்த எண்ணெய் வித்துக்களில் குறிப்பாக நிலக்கடலையை எடுத்துக்கொண்டால் 1,250 ரூபாய்க்கு கொள்முதல் விலை என்றால், வரி விகிதமும் விற்பனை வரி விகிதமும் சேர்த்துப் பார்த்தால் நிலக்கடலையைப் பொறுத்தமட்டிலே வரி விகிதம் 50 ரூபாய்க்கு வந்து விடுகிறது. அந்த நிலக்கடலையை எண்ணெய்யாக பிழியும்போது அதனுடைய அடக்கவிலை 74 ரூபாய் 80 காசாக வந்துவிடுகிறது. புண்ணாக்கின் மீதும் வரி இருக்கிறது. இப்படி பார்க்கும்போது மொத்தம் 137 ரூபாய் அந்த நிலக்கடலை கொள்முதல் விலையின் மேல் வரியாக சுமத்தப்படுகிறது. அந்த 137 ரூபாயும் வரியாக சுமத்தப்படும்போது, அந்த வரியைச் செலுத்தும் வியாபாரி கள் அந்த லாபத்தையும் சேர்த்துத்தான் கணக்கிட வேண்டி யிருக்கிறது.

ஆனால் மற்ற மாநிலங்களில் பார்த்தால் குறிப்பாக பாண் டிச்சேரியில் பார்க்கும்போது கூடுதல் வரி கிடையாது. வரி விகிதமும் கம்மியாக இருக்கிறது. பாண்டிச்சேரியிலே வரி விகிதம் மொத்தமாக பார்க்கும்போது 57 ரூபாய்தான். நம்முடைய தமிழகத்திலே அது இரண்டு மடங்காக இருக்கிறது. ஆகவே சமையல் எண்ணெய் போன்ற பொருட்களில் இப்படி வரிச் சுமையைக் கூட்டிக்கொண்டே போனால், அந்த வரிச் சுமை ஏறிக் கொண்டே போகும்போது இதை எல்லாம் மக்கள் தலையிலேதான் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. வியாபாரிகள் தப்பைச் செய்கிறார்களா அதிகாரிகள் தப்பைச் செய்கிறார்களா என்று எண்ணிப் பார்க்கும் போது வியாபாரி களுக்கு இந்த வரிச் சுமை ஏற ஏற அவர்களுடைய கணக்குகள் இரண்டாகப் பாகுபாடு படுத்தப்படுகிறது. மறைக் கப்பட்ட கள்ளக் கணக்கு என்றும், உண்மையான கணக்கு என்றும் இரண்டாக பிரித்து வைக்கிறார்கள். அதிகாரிகளிடத் திலேயிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் அவர் களுடைய எண்ணம் பலமுனைகளிலே ஓடிக் கொண்டேயிருக் கிறது. வரியைக் குறைத்தோம் என்றால் நேரிடையாக கணக்கு வைத்து உண்மையான வரியைக் கட்டி அவர்கள் நேர்மையாக வியாபாரம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக வெல்லம். கரும்பு விவசாயிகளுக்குச் சென்று சேர வேண்டிய தொகையை எப்போதும் வியாபாரி கள் கொடுப்பது கிடையாது. கரும்பிலேயிருந்து வெல்லம் தயாரிக்கிறார்கள். தமிழகத்திலே பல இடங்களில் இருக் கிறது. அச்சு வெல்லம், மண்டை வெல்லம் என்று இருக் கிறது. இந்த வெல்லம் எல்லாம் நமது நாட்டிலே

அதிகமாக விற்பது கிடையாது. கேரளாவிற்கு அனுப்பிவிடுகிறார்கள். இங்கே வெல்லம் தயாரித்து விற்பனைக்கு வரும்போது 6 சதவிதம் வரி போடுகிறார்கள். அதற்குமேல் சர்-சார்ஜ், சி.எஸ். டி. என்று இப்படி பல இடங்களிலே வரிச் சுமையை ஏத்தும் போது மொத்தத்தில் கிட்டத்தட்ட 8, 9 சதவிகிதம் வரியாக வெல்லத்திற்கு வந்துவிடுகிறது. அதே போல கேரளத்திற்கு கொண்டு சென்றால் அங்கேயும் வரி விதிக்கப்பட்டு 8 சதவீத் வரியாக வந்து விடுகிறது. கிட்டத்தட்ட 18 சதவீதம் ஒரு பொருளுக்கு வரியாக மட்டும் சுமத்தப்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது வரி கூடக் கூட இந்த வியாபாரிகள் பல முறைகளிலும் தில்லுமுல்லுகள் செய்கிறார்கள். அதை ஒழிப்பதற்கு வரியைக் குறைத்து நேரிடையாக கணக்குகளை வைக்கச் சொல்லி, அதற்கு தகுந்த ரெக்கார்டுகளை செய்து, வரிகளை மிக வேகமாக நல்ல முறையிலே வசூல் செய்வதற்கு அதிகாரிகளை நாம் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும். அது மட்டுமல்ல பல இடங்களிலே வரி விகிதங்களை குறைத்தாலும் கூட, வரி வரவேண்டிய இனங்களையும் பார்க்க வேண்டும்.

அடுத்து கேளிக்கை வரி. சினிமாவிலே கேளிக்கை வரி நமக்கு ஓரளவிற்கு வந்து கொண்டிருந்தாலும் இப்போது கேபிள் டி. வியை ஓட்டுவதினால் சினிமா பாதிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த வரி விகிதத்திலும் வருவாய் குறைந்திருக்கிறது. ஏனென்றால் கிராமப்புறங்களிலே நாம் காமனாக டாக்ஸ் போடுகிறோம். டவுன்களிலே இந்த டாக்ஸ் போடும்போது அது கேபிள் டி.வி.யினால் பாதிக்கப்படுகிறது. அதனால் வரி விகிதம் குறைகிறது என்று அதிகாரிகளும் சொல்லுகிறார்கள். தியேட்டர் உரிமையாவர்களும் சொல்லுகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு கேபிள் டி. வியை தடை செய்ய வேண்டும். அன்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உடனடியாக நகரங்களில் கேபிள் டி. வியை அனுமதிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாக இருக்கிறது. மேலும் வரி விகிதங்கள் கூடக் கூட—இப்படி நாம் கூட்டிக் கொண்டே சென்று கொண்டிருந்தால், அது வரி ஏய்ப்புக்கும் ஏதுவாகப் போய்விடும். ஆகவே வரியைக் குறைத்து, இன்னும் பல அதிகாரிகளைப் போட்டு முனைப்பாக செயல் படுவீர்களேயானால் நிச்சயமாக வரி வசூலிலே இன்னும் நமக்கு கூடுதலாக வருவாய் வர வாய்ப்பு உள்ளது. ஏனென் றால் வியாபாரிகள் எதற்குமே கணக்குப் போட்டுப் பார்ப் பார்கள். எதில் லாபம் இருக்கிறது ? எதில் நஷ்டம் இருக் கிறது, வரியை செலுத்தியதற்குப் பின்னால் நமக்கு நஷ்டம்



வருகிறதா என்று எண்ணிப் பார்ப்பார்கள். எண்ணிப் பார்த்து, சரி அதிகாரிகளை சரிக் கட்டிக்கொண்டால் நமக்கு வரியிலிருந்து லாபம் கிடைக்கும், வரி ஏய்ப்பிற்கு ஏதுவாக இருக்கும் என்ற ஒரு குறுக்கு எண்ணத்தை யெல்லாம் அவர்கள் நாடுவார்கள். அந்த நாட்டத்திற்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்கு வரி விகிதங்களைக் குறைத்து, வரி வசூலை நாம் கூட்டிக்கொண்டே செல்வோமானால் நிச்சயமாக நமக்கு இப்போது இருக்கின்ற குறியீட்டைக் காட்டிலும் மேலும் அதிகமாக கிடைக்கும்.

முற்பகல் 11.40

அது மட்டுமல்ல. பல இடங்களிலே சோதனைச் சாவடிகள் நடந்துகொண்டிருக்கின்றன. சோதனைச் சாவடிகளில் பல சர்ட்டிபிகேட்டுகள், சி. எஸ். டி., ட்ரான்ஸ்போர்ட் சர்ட்டிபிகேட் இவையெல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்பதைச் சரிபார்ப்பதற்கு இன்னும் பல அதிகாரிகளை, மேல் அதிகாரிகளை அங்கே போட வேண்டும். ஏனென்றால் சாதாரண பியூன்கள் தான் அங்கே இருக்கிறார்கள். அந்த பியூன்கள் சரியாக அவைகளை கணக்கிடுவது இல்லை. அதனால் பல பொருள்களைக் கடத்திச் செல்வதற்கும் ஏதுவாக இருக்கிறது. வரி செலுத்துகிற ரசீதுகள் இருக்கின்றனவா, பில்கள் இருக்கின்றனவா, சி. எஸ். டி. பார்ம்கள் இருக்கின்றனவா என்பவற்றையெல்லாம் சரி பார்ப்பதற்கு, செக் பண்ணுவதற்கு நல்ல அதிகாரிகளை செக்-போஸ்ட்டுகளிலே போட ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும் வரி இனங்களில் பல நன்மைகள் செய்திருந்தாலும் வரி வசூலிலும் இன்னும் தீவிரமாக அதிகாரிகள் ஈடுபடுவார்கள். அப்படி அவர்களை ஈடுபட வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) திரு. ஆ. கு. சீனிவாசன்.

*திரு. ஆ.கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய நிலையில் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஆயிரத்தில் ஒருவரான புரட்சித் தலைவரின் வாரிசான புரட்சித் தலைவியே, எங்கள் தங்கமே, தாய்க் குலத்தின் தலைமகளே, தரணி போற்றும் தலைமகளே, உலக நாடு என்ற வீதியிலே செந்தமிழ் நாட்டினொரு பகுதியிலே புரட்சித்தலைவர் கொள்கையிலே, அண்ணா தி.மு.க. வளர்ந்தது

தமிழ் நாட்டினிலே நல்லாட்சி மலர்ந்தது. கோட்டையிலே, பொன்மனச் செம்மல் தலைமையிலே புரட்சித் தலைவரின் வாரிசாக கோட்டையில் ஜெயக் கொடியேற்றிய புரட்சித் தலைவியே, காவல்துறை பிரிவுகளை ஊக்குவிக்க வந்த தலைவியே, வரி ஏய்ப்பை ஒழிக்க வந்த ஓம் சக்தியே, ஆதி பராசக்தியே, காவல் துறையிலே காவல் தெய்வமாகப் போற்றப்படும் தாயே, தீயவர்களை ஒழிக்க பேனாவை ஆயுதமாக ஏந்தி வந்த தாயே, காவல் பணியைத் துறந்து தியாகச் செயல் செய்ய நான் தூதுவனாக வந்துள்ளேன் தாயே, மக்கள் நலன் கருதி பேசுவதற்கு பேசவாய்ப்புத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி மக்கள் சார்பிலேயும் என் சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று தமிழகத்தில் எந்த எந்த வகையில் வருமானங்கள் வருகின்றன அதை எப்படி தமிழக மக்களின் நலனுக்காக செயலாற்ற வேண்டும் என்ற முறையில் இந்த மாமன்றத்தில் எனக்குத் தெரிந்த சில யோசனைகளைக் கூறிக்கொள்கிறேன்.

முதலில் தமிழகத்திற்கு பலவிதங்களில் வருமானங்கள் வருகின்றன. வெளி மாநிலங்களில் தயார் செய்யப்படும் பொருள்களை தமிழகத்திற்கு கொண்டு வரும்போது லாரிகளிலும், ரெயில்களிலும் கூட்ஸ்களாக வருகின்றன. வருகின்ற சமயத்தில் சாதாரண நெடுஞ்சாலையைப் பாருங்கள். ஆயிரக்கணக்கான லாரிகள் வருகின்றன. சென்னை அருகே வரும்போது ஆங்காங்கே சில செக்-போஸ்ட்கள் இருக்கின்றன. கடைசியில் நூற்றுக்கணக்கான லாரிகளைத்தான் தணிக்கை செய்கிறார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான லாரிகள் பல கிளைச் சாலைகள் வழியாக வந்து சென்னையை வந்து அடைகின்றன. அவற்றைப் பார்க்கும்போது எவேஷன் ஆஃப் டாக்ஸ் -வரி ஏய்க்கும் திட்டத்தில் அவை செயல்படுகின்றன என்பது தெரிகிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றால் 24 மணி நேரமும் கிளைச் சாலைகளில் என்ஃபோர்ஸ்மென்ட் என்ற விங்குகளை நியமித்து அதை தணிக்கை செய்தால் ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் கூடுதலாக வரும் என்ற என்னுடைய யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்து சேல்ஸ் டாக்ஸ். தமிழகத்திலே பல பொருட்களை விற்பனை செய்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை சொல்ல வேண்டும் என்று சொன்னால், மின்சாரப் பொருட்களை வாங்கவேண்டும் என்று சொன்னாலும் சரி, மெக்கானிக்கல் ஸ்பேர்ஸ் வாங்கவேண்டும் என்று சொன்னாலும் சரி,





கடைகளில் வாங்கும் சமயத்தில் பில் போடாமல் ஒரு சிறிய சீட்டில் குறிப்பிட்டுக் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்காமல் அவைகளுக்கு எல்லாம் முழுமையாக ரசீதுகளாக கொடுத்தால் அரசுக்கு போதுமான வருமானம் வரும். இதனால் இதை விற்பனை செய்யும் முதலாளிகள் வரி ஏய்ப்பு செய்கிறார்கள். இதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, சென்னையில் பல கடைகள் இருக்கின்றன. பல வீதிகளில் உள்ள கடைகளில் வியாபாரம் செய்வதே தெரியாது. வீடுகள் போன்று இருக்கும், போன் மூலமாக தொடர்பு கொண்டு அந்த வியாபாரங்களைச் செய்வதால் அங்கே வரி ஏய்ப்பைச் செய்கிறார்கள். அதற்காக தனியாக ஒரு என்போர்ஸ்மெண்டு விங், மறைமுகமாக, ரகசியமாக இதைக் கண்டுபிடிக்க ஒரு விங்கை தயார் செய்தால் போதும். இந்த வரி ஏய்ப்பைத்தடுத்து அரசுக்கு வருமானம் வரும்.

அடுத்து, சொத்துக்களை விற்பதும், வாங்குவதும் பல வகைகளிலே நடைபெறுகின்றன. சென்னையிலே சாதாரணமாக ஒரு பிளாட் வாங்க வேண்டுமென்று சொன்னால் அல்லது வீடு வாங்க வேண்டுமென்று சொன்னால் 10 லட்சம் ரூபாய் 20 லட்சம் ரூபாய் என்று பேசுகிறார்கள். ஆனால் அதை ரிஜிஸ்டர் செய்யும்போது 2 லட்சம் ருபாய், 3 லட்சம் ரூபாய் அரசின் மதிப்பு என்று சொல்லி ரிஜிஸ்டர் செய்து விடுகிறார்கள்.

உதாரணமாக ஒரு லட்சம் ரூபாய்க்கு ரிஜிஸ்டர் செய்தால் அரசுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் வருமானம் வரும். ஆனால் கண்ணுக்கு தெரிந்து 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்தை ஒரு லட்சம் ரூபாய்க்கு ரிஜிஸ்டர் செய்கிறார்கள். 9 லட்சம் ரூபாய்க்கான வரி ஏய்ப்பைச் செய்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தால் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வருமானம் வரும். இதைத் தடுப்பதற்கும், தனியாக ஒரு என்போர்ஸ்மெண்ட் விங் தேவைப்படுகிறது. அதை சாதாரணமாக செய்யப் போகிறோம் என்று சொன்னாலே போதும். ரிஜிஸ்டர் ஆபிசில் போய் யார் விற்கிறார்கள், யார் வாங்குகிறார்கள் என்று பார்த்து, அவர்களிடம் போய் நேரில் என்ன விலை கொடுக்கிறீர்கள், என்ன விலைக்கு வாங்குகிறீர்கள் என்று கேட்டாலே உண்மை வெளிப்படும். அதனால் முழுமையான வருமானம் அரசுக்கு தெளிவாக வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வருவாய்க்கு தகுந்தாற்போல் செலவு செய்ய வேண்டும். நமக்கு தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட வருமானம் என்று இருக்கிறது. அதைச் செலவு செய்யும்போது

அதிகமாக செலவு செய்கிறோம். கதவுகள் மூலமாக வரும் வருமானத்தை ஜன்னல்கள் மூலமாக செலவு செய்தால் சிக்கனமாக இருக்கும் ஆனால் நம்முடைய வருமானம் ஜன்னல் மூலமாக வருகிறது. ஆனால் செலவை கதவுகள் மூலமாக செய்கிறோம். ஆகவே தான் சில பட்ஜெட்டுகளில் குறைவு ஏற்படுகிறது. இவைகளை எல்லாம் யோசனையாகத்தான் கூறுகிறேனே தவிர தவறான முறையில் சொல்லவில்லை. என்னுடைய சிறிய கருத்துக்களைத் தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் 5 ஏக்கர் நிலம் வைத்து இருக்கிறான் என்று சொன்னால் அவன் சாதாரண விவசாயி. அவனுக்கு 10 ஆயிரம் கொடுத்தால் கிணற்றை ஆழப்படுத்தி விவசாயத்தை பெருக்குவான். பொருளாதாரம் முன்னுக்கு வரும் என்ற நிலை இருக்கிறது. ஆனால் அந்த விவசாயிக்கு கிணற்றை ஆழப்படுத்துவதற்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது இல்லை. அதே சமயத்தில் நகரங்களில் 25 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பிளாட் வாங்கிவிட்டால் அவனுக்கு 2 லட்சம் ரூபாய் 3 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். நகரங்களில் இருக்கிறவனுக்கு கடன் கொடுத்து அவனை வளர்த்து விடுகிறார்கள். ஏழைகள் ஏழைகளாகத்தான் கிராமங்களில் இருக்கிறார்கள். வளர்ந்தவன் நகரங்களில் வளர்ந்தவனாக இருக்கத்தான் செய்கிறான். ஆனால் நம்முடைய பட்ஜெட்டில் இங்கே கீழ் நிலையில் இருக்கிற, கிராமப் பகுதிகளில் இருக்கிற மக்களை எல்லாம் வளர்ச்சிப் பெற செய்வேன் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே முதல் முக்கியத்துவம் கிராமப்புறங்களுக்குத் தருகிறேன் என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் தெரிவிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11.50

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) : திரு. உ. பலராமன்.

*திரு. உ. பலராமன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொதுவிற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும், நிர்வாகம் என்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இந்த மானியத்தின் மீது தெரிவித்து இருக்கிறார்கள். வியாபார பெருமக்கள் இந்த அரசுக்கு காமதேனுவாக இருக்கிறார்கள். இந்தியாவிலேயே விற்பனை வரி அதிகம் செலுத்துகிற மாநிலமாக தமிழகம்தான் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். மாநிலத்தின் மொத்த வருவாயில் சுமார் 70 சதவீதம் விற்பனை வரியாக வியாபாரப் பெருமக்கள் செலுத்துகிறார்கள். அது இந்த மாநில வருவாயின் முதுகெலும்பாக இருக்கிறது. அவர்களுக்கு இந்த ஆட்சியில் அளிக்கப்பட்ட சலுகைகளும் பாராட்டத்தகுந்த வகையில் இருக்கின்றன. புதிதாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற சலுகைகள், அவர்களே. தங்களுடைய கணக்கை மதிப்பீடு செய்து 5 இலட்சம் ரூபாய் வரை, வரி விலக்கு பெறுகின்ற வகையில் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்ட சலுகைதான். ஆனால் அதே சமயத்தில் அவர்களுக்கு பரிசோதனையாக அவர்கள் கொண்டு வருகிற கணக்குகளில் வரி மதிப்பீடு செய்கிற அதிகாரிகள், வருகிற ஆவணங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பார்த்து முடிவு செய்யலாம் என்ற ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறீர்கள். அது தேவையும் கூட. ஆனால் அதிகாரிகள் மத்தியில் அந்த "அங்கொன்றும் இங்கொன்றும்" என்கிற வார்த்தை—பாவம் இந்த வியாபாரிகளை ஒரு குற்றவாளி ஆக்குகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இந்த மாநிலத்திற்கு அதிக வரியைச் செலுத்துகிறார்கள். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்னதுபோல, அரசு சம்பளம் பெறாத ஒரு அற்புத ஊழியர்களாக வியாபாரிகள் இருக்கிறார்கள் என்று அவர்கள் அடைமொழி சொன்னார்கள். வியாபாரிகளிடத்திலே வரி வசூலிக்கிறபோது அவர் சொன்ன உவமை என்பது, பசுமாட்டை ரூபாய் கொடுத்து ரூபாய் கணக்கில் வாங்குகிறோம் அதன் காம்பு வழியாக பைசா கணக்கில் வியாபாரம் செய்கிறோம்; பசுவும் காப்பாற்றப்பட வேண்டும்; கன்றுக்கும் பால் இடவேண்டும்; வருமானத்தையும் ஒழுங்காக அதில் கணக்கு பார்க்க வேண்டும் என்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில் இந்த ஆட்சியில் ஓரளவு அவர்களுக்கு சலுகை அளிக்கப்பட்டிருந்தாலும், இங்கே புதிய வரி விதிப்புகளுக்காக மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு யோசனைகளைத் தெரிவித்தார்கள் ஆனால், வியாபாரிகளுக்கு இருக்கின்ற சங்கடங்கள் என்று எண்ணிப்பாக்கிற போது அவர்களுக்காகவும் சற்று பரிந்து பேசவேண்டிய அவசியம் இருப்பதால் இதைச் சொல்கிறேன் ஏனென்றால், உலகத்தில் நாகரீக

வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் ஏன் நாம் ருசியாகச் சாப்பிடுகிற பொருள்கள்கூட, உலகிலே இருக்கிற வியாபாரிகள் பண்டமாற்று செய்வதால் வந்த வளர்ச்சிதான். உதாரணத்திற்காகச் சொல்வதானால் மசால் வடையைச் சொல்வார்கள், இந்தியாவும் வெளிநாடுகளும் சேர்ந்து உருவாக்கப்படுவது மசால்வடை. அதில் உள்ள கருவேப்பிலை ஆந்திராவைச் சேர்ந்தது, பெல்லாரி வெங்காயம், உத்திரபிரதேசதப் பருப்பு லவங்கம்பட்டை என்பது இலங்கை பாமாயில் என்பது மலேசியாயாவிலே என்று சர்வதேச மார்கெட்டை உள்ளடக்கிய மசால் வடை. . . .

முற்பகல் 11.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னறக்கு நீங்கள் சொல்கிற இத்தனையும் இங்கேயே கிடைக்கிறது. (சிரிப்பு.)

திரு. உ. பலராமன் : எது கிடைத்தாலும் அதனுடைய மூலத்திலே இன்னொன்றையும் நான் விட்டு விட்ட கொஞ்சம் புதினாவையும் சேர்த்தீர்களானால், புதினா என்பதனுடைய தாய்வீடு சைனா. அது அரேபியாவுக்குச் சென்று அங்கிருந்து தமிழகத்திற்கு வந்தது. இப்படி சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற நம்முடைய பொருளாக இருக்கிற பலகாரமாக இருக்கிற மசால்வடைக்கு இப்பொழுது கொஞ்சம் மவுசு குறைந்திருக்கிறது. ஏனென்றால் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக எண்ணெய் விலை ஏறி இருக்கின்ற காரணத்தால், வெளிநாட்டு சக்தி ஒன்று (பாமாயில்) கட்டுப்படுத்தப்பட்டு, இங்கே மாண்புமிகு தலைவரவர்கள் சொன்னது போல, சுதேசி பொருள்களால் உருவாக்கப்படுகிறது. ஏன் என்றால், பாமாயில் இறக்குமதி இல்லை. ஆகவே, மசால் வடைக்கே இவ்வளவு பிரச்சினைகள். ஒரு மனிதனுடைய ருசியாக இருக்கிறது என்பதால் பல்வேறு வகையில் பொருள்களைத் திரட்டி வியாபாரப் பெருமக்கள் மக்களுக்கு அளிக்கிறார்கள். பல்வேறு முயற்சிகள் மூலம் நாட்டைக் காப்பாற்றுகிறார்கள். உலகத்திற்குத் தொண்டு செய்கிறார்கள்.

அவர்களிடத்தில் வசூலிக்கப்பட்ட வரி கிட்டத்தட்ட 2,167 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறீர்கள். இதனுடன் வியாபாரிகள் செலுத்துகிற, வரிக் கணக்கில் சேராத-சிதறுகிற கணக்கையெல்லாம் சேர்த்தால் மூன்று மடங்காகலாம். அரசியல் கட்சிகளுக்கு, உள்ளூர் தலைவர்களுக்கு, அடிக்கடி பிறந்த நாள்களுக்கு இனிப்பு வழங்குகிற வகையில் எல்லாம் வியாபாரிகள் விரயம் செய்கிறார்கள், கொடுக்கிறார்கள், பாவம்.



ஆனால், அவர்கள் எங்கே மாட்டிக்கொண்டு முழிக்கிறார்கள் என்றால், இங்கே முதலமைச்சரவர்கள் தன்னுடைய உரையினுடைய இறுதியில், ''விற்பனை வரி, அரசு கருவூலகத்திற்கு முக்கிய வருவாய் ஆதாரமாக இருப்பதால் வணிகவரித் துறை அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் பொது நலனில் அக்கறைகொண்டு நேர்மையுடனும் திறமையுடனும்'' இது வரையில் சரி, பிறகு ''முனைப்புடனும்'' என்ற இருக்கின்ற அந்தச் சொல்லை மட்டும், மீண்டும் கூறுகிறேன். ''முனைப்புடனும் தங்கள் கடமைகளைத் தொடர்ந்து ஆற்றுவர்'' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ''முனைப்புடனும்'' என்ற சொல்லை வைத்துக்கொண்டு அதிகாரிகள் என்ன செய்வார்கள் என்பதை எனது அனுபவபூர்வமாகச் சொல்கிறேன்.

ஒரு தொழிற்சாலையில் விற்பனை வரி அதிகாரி வந்தார். அந்தத் தொழிற்சாலையை நடத்துபவர் மிகத் தாழ்ந்த நிலையிலே இருந்தவர். அவருடைய சொந்த முயற்சியால் முன்னுக்குவந்தவர் அதிகப் படிப்பறிவு இல்லாதவர். ஆனால் வசதியாக இருக்கிறார். வந்த அதிகாரி, அவரை ஏளனமாகப் பேசினார் அவர் திருப்பி, ''நான் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவன். என்னை இப்படி பேசுகிறாயே'' என்று கேட்டார். அதற்கடுத்து வந்த மேலதிகாரி வழியிலேயிருந்த ஒரு பித்தளை தவலையைப் பார்த்து, இது கூட உங்களுடைய தொழிற்சாலையில் செய்யப்படுகிறதா என்று கேட்டார். அவர் வேடிக்கையாகச் சொன்னார். ஆனால் அந்தத் தொழிற்சாலை முதலாளி— உழைத்து முன்னுக்குவந்தவர் கோபப்பட்டு, அவருக்கு முன்னால் அந்தத் தவலையை எட்டி உதைத்தார். அதன் விளைவு, அந்தக் கம்பெனிக்கு 301 இலட்சம் ரூபாய் வரியாகப் போட்டார்கள்.

நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் முதலமைச்சர் சொல்கின்ற ''முனைப்புடன்'' என்ற சொல்லை அவர்கள் எடுத்துக் கொள்கிற விதம் என்பது பல்வேறு தொழிற்சாலைகள், சிறிய தொழிற்சாலைகள் மூடுவதற்குக் காரணமாக அமைந்தது. இன்று அதன் விளைவாகவே அந்தத் தொழிலை அவர் மூடிவிட்டு, வேறு சிறியசிறிய ஏஜன்சிகளை வேறு ஒருவரோடு சேர்ந்து நடத்துகிறார், இந்த வரி அதிகாரிகளினுடைய தொல்லையாலே தொழிலை மூடினேன் என்று சொல்கிறார். இப்படி அதிகாரிகளினுடைய தொல்லை இருப்பதற்கு என்ன காரணம்? ஏற்கெனவே, அவர்களை கசக்கிப் பிழிகிற அளவு 10 சதவிகித வரி இருந்த காரணத்தினால் தொல்லை இருந்தது. இன்று உங்களால் அறிவிக்கப்பட்டிருக்கிற சலுகை, 4, 5 சதவிகிதம் என்கிற

அளவில் இறங்கியிருக்கிற காரணத்தினால், வியாபாரிகள் முடிந்த அளவு நேர்மையாக நடப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதிகாரிகளும் முடிந்த அளவு நேர்மையாக நடந்து கொள்வார்கள் என்று நாம் எதிர் பார்க்கலாம்.

நண்பகல் 12.00

ஒட்டுமொத்தமாக, இந்தத் தமிழக மக்கள் இன்று விரும்புவது —பட்ஜெட்டில் நீங்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்கள் அத்தனையும் பார்க்கிறபோது, எதையும் அதிகமாகக் குறைபோட முடியாது என்றாலும் வெளிநாட்டு சரக்காக இருக்கிற பாமாயில் வராத காரணத்தால், தாய்மார்கள் படுகிற கஷ்டத்தையும் பார்த்து, அவர்களுக்கு வரவிருக்கும் எண்ணெயைக் குறைத்திருத்தாலும், ஒட்டு மொத்தமாகவே அந்த எண்ணெய் வகைகளுக்கு விதிக்கப்படுகிற வரியை முழுமையாக ரத்து செய்தால்; கொஞ்சம் கூடுதலாக நஷ்டம் ஆகும் என்றாலும், பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம், உங்களுடைய முதலாண்டு பட்ஜெட்டில் அதை அறிவிப்பது, பெண்களுக்கு, குடும்பப் பெண்களுக்கு அது ஒரு ஆறுதலாக இருக்குமென்ற என்னுடைய வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதியில் பூங்காநகர் தொகுதியில் அதிகமாக நடைபெறுகிற தொழில் எந்தத் தொழில் என்றால், எவர்சில்வர் பாத்திரத் தொழில், அந்தத் தொழிலை நடத்துகிற தொழிலாளர்கள் அத்தனை பேரும் முதலாளிகள் அல்ல. கல்வியறிவு பெற்றவர்கள் அல்ல. வருகிற சரக்குகள் 'ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்' தகடுகள் வடநாட்டு பகுதியிலே இருந்து குறிப்பாக ஹரியானா, டெல்லியிலே இருந்து வருகின்றன. நீங்கள் எல்லாம்கூட வாங்குகிற எவர்சில்வர் பாத்திரங்கள் இன்று தரமானதாக இருக்காது. காரணம் என்னவென்றால், வாங்குகிற கழிவுப் பொருட்களில் கொஞ்சம் இரும்பும் சேர்த்து, உருக்கி அது தகடாக வருகிறது. அதனுடைய விலை 48 ரூபாய் கிலோ. அதற்கு வரி என்று பார்த்தால் இங்கே ஒன்றும் இல்லை. செகன்ட் சேல்ஸ். ஆனால் 'மானுபேக்சரிங்' உற்பத்தி வரி என்று விதிக்கப்படுகிறது. பட்டறை வைத்துக்கொண்டிருக்கிற சாதாரண தொழிலாளிகள் அந்த தகட்டை கடைக்காரர்களிடத்திலே கடனுக்கு வாங்குகிறார்கள், அதன் மீது அவர்கள்.......(மணியடிக்கப் பெற்றது)...... கூலியை மட்டும் அதிகமாக வைத்து அவர்களுக்கே திருப்பி தருகிறார்கள். இங்கே வரி அதிகாரிகள்—நீங்கள் பறக்கும் படை என்றெல்லாம் வைத்திருக்கிறீர்கள். அவர்கள் மடக்குகிறார்கள். அந்தத் தொழிலாளிகள் கணக்கு வைப்பதில்லை;



அதற்குரிய சரியான பில் இருப்பதில்லை, அவர்கள் கணக்கு வைக்கிற அளவுக்கு படித்தவர்களும் அல்ல; பெருத்த மூலதனத்தைப் போட்டு, தொழில் நடத்துகிறவர்களும் அல்ல. ஆகவே, வரி செலுத்துகிற கட்டாயத்தில் இரண்டு, மூன்று முறை அவர்கள் விற்பனை வரி அதிகாரிகளிடத்திலே சிக்கினால், அவர்களுடைய பட்டறை அதோடு, 'க்ளோஸ்' ஆகிறது. பல்வேறு தொல்லைகளின் மத்தியில், அந்தத் தொகுதியில். ஆயிரக்கணக்கான பல்லாயிரக்கணக்சான தொழிலாளர்சள் செய்கிற தொழிலாக அது இருக்கிற காரணத்தினாலே, நீங்கள் ஏற்கெனவே எவர்சில்வர் பாத்திரத்திற்கு வரியைக் குறைத்திருக்கிறீர்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில், இந்த உற்பத்தி வரி என்பது, நேரடியாக உள்நாட்டுத் தகடாக இருக்கிற குறிப்பாக ஒரு ரீ-ரோலிங் ஷீட்டாக இருக்கிற தகட்டில் செய்யப்படுகிற பொருட்கள், அந்தச் சின்னச் சின்ன பட்டறைகளிலே இருந்து வருகிற காரணத்தினாலே, அவைகளுக்கு பரிசோதனையோ மற்றவையோ இல்லாமல், வேறு வகையில் வரியை விதிப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டு, ஒரு நாளைக்கு 20, 30 லோடுகள்...... (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே 3 நிமிடங்கள் கூடுதலாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. உ. பலராமன் : ........ தமிழகத்திற்கு வருகிறது. அங்கே சுங்கச் சாவடிகள் இருக்கின்றன என்பதை மட்டும் சொல்லி நிறுத்துகிறேன். ஆனால், உரிய வரி என்பது வருகிறதா என்பதை கேள்விக் குறியாக வைக்கிறேன். அதே போல் கன்னியாகுமரி பகுதியிலிருந்து ஒரு நாளைக்கு 100 டன் ரப்பர் வெளி மாநிலங்களுக்குச் செல்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், அதற்குரிய வரி இதுவரை விதிக்கப்படவில்லை. அது திருட்டுத்தனமாகப் போய் கொண்டிருக்கிறது அதையும் கண்டுபிடித்து, நீங்கள் வரி வசூலிப்பதன் மூலம் இந்த அரசுக்கு வருமானத்தை ஏற்படுத்தலாம். இது ஒன்று (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடம்தானே கேட்டீர்கள்.

திரு. உ. பலராமன் : முடித்தாகிவிட்டது........ இறுதியாக வருமானம் வருகிறபோதுதான் தகராறே வருகிறது. ஆகவே, அந்த வருமானத்திற்கு வழி செய்யலாம்.

தாய்மார்களுக்காக, எண்ணெய்க்கு விதிக்கப்பட்டிருக்கிற வரியை நீக்குவது நலம் என்று மட்டும் கேட்டு, அதேபோல் எவர்சில்வர் பாத்திரம் செய்கிற அந்த சிறிய தொழில் கூடங்களுக்கு எல்லா விதத்திலேயும் அரசு அனுசரணையாக, கருணையோடு இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி

பிற்பகல் 12.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் விதிக்கின்ற வரிகளை ஒழுங்காக வசூலித்து அரசுக்குத் தரவேண்டிய மிக இன்றியமையாத துறை இது என்பதை நாம் அறிவோம். இதிலே இரு முக்கியமான கருத்துக்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துறை செவ்வனே இயங்குவதற்கு அந்த இரண்டு கருத்துக்களும் முக்கியம் என்று கருதுகிறேன். இந்தத் துறையில் பொதுவாக குறை ஏற்படுவதற்கும், குற்றங்கள் உருவாவதற்கும் இவை தான் காரணம். ஒன்று (Demoralisingly High Taxation( மிக அதிகமான வரி விதிப்பு. அதன் விளைவாக ஒழுங்காக வரி கட்ட வேண்டும் என்று நினைக்கிறவர்கள்கூட வரி கட்ட முடியாத சூழ்நிலை. இரண்டாது (Red Tape இந்த நிர்வாகத் துறையிலே இருக்கின்ற சட்டங்கள், அதனுடைய விதிமுறைகள் அவற்றால் ஏற்படுகின்ற கால தாமதம், அதிலே இருக்கின்ற 'loopholes' சந்து பொந்துகள் என்று சொல்வார்களே அதைப் போல என்னென்ன பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன, என்னென்ன பொருள்களுக்கு வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் இந்த மன்றத்தின் முன் மசோதாக்களாக வருகின்றபொழுது நம்முடைய கருத்தை நாம் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் இதிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இந்த நிர்வாக சீர்திருத்தம். குறைந்த செலவிலே நிறைந்த வருவாயைப் பெறுவதற்கு இந்த நிர்வாகத்தை எவ்வளவு திறமையாக ஆக்க வேண்டுமென்பதுதான். ' Demoralisingly High Taxation ' என்று சொல்கிறபோது, அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தை அடிக்கடிச் சொல்வார்கள்.

''சில பேர் ஆயிரம் ரூபாய் வரையிலே யோக்கியர்களாக இருப்பார்கள். அவர்களிடத்திலே ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால் அவர்களைப் பற்றிச் சந்தேகம் வந்துவிடும். சிலபேர் ஐயாயிரம் வரையிலே நாணயமாக இருப்பார்கள்.



அவர்களிடத்திலே 10,000 ரூபாயைக் கொடுத்தால் வேறு விதமாகக் கூட நடந்து கொள்ளலாமே என்று சந்தேகம் வந்து விடும். ஆகையினால் நேர்மை என்று சொல்லுகிறபோது, மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். நாணயமாக நடக்க வேண்டுமென்று நினைக்கின்ற வணிகர்கள் கூட மிகுந்த உச்சபட்ச வரி விதிக்கப்படுகின்றபோது, நாம் இவ்வளவு உழைத்து, கஷ்டப்பட்டு வியாபாரம் செய்து சம்பாதிக்கிறோமே, அதை ஏன் இழக்க வேண்டுமென்று எண்ணுகிற மனோபாவம் உருவாவது இயல்பு. அதனாலேயே தான், வரி விதிக்கின்ற தன்மையைப் பற்றி ஆராய்கின்ற நிபுணர்கள் குறைவான வரி விதித்தால் நிறைவான வருமானத்தைப் பெறமுடியும். அதிகம் வரி விதிக்கப்படுகின்ற போது வரி ஏய்ப்பு, கள்ளக்கணக்கு, கள்ளப்பணம், இவை எல்லாம் ஏற்படும் ''என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இந்தத் துறையைப் பற்றி சொல்லுகிறபொழுது, வரி விதிப்பு விகிதத்தை வளர்த்துக் கொண்டே போவது, அது நியாயமற்ற தன்மையை, நேர்மையற்ற தன்மையை உருவாக்கும். ஆகவே, அதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும், இன்னனொன்று வரி விதிக்கின்ற பொருட்களில், சில பொருள்களின் மீது வரி விதிக்கின்ற போது, அதற்குக் கூடுதலாக வருமானம் வரும் சில பொருள்கள் பட்டியலிலே இருக்குமே தவிர அவற்றின் மீது வரி விதிக்கிற போது அத்தகைய வருமானம் வராது அதை ஆங்கிலத்திலே A, B, C. Classification என்று சொல்வார்கள். எல்லா இடத்திலும் எல்லாப் பொருட்களின் மீதும் வரி விதித்து, நிர்வாக இயந்திரத்தைப் பரவலாக்கி அதன் மூலம் ஏராளமான விரயத்தை செய்து, குறைந்த வருமானத்தைப்பெறுவதைவிட, எந்தெந்தப்பொருள்கள் அதிகமான வருமானத்தைத் தருமோ அவற்றை அடையாளம் கண்டு, அந்தப் பொருள்களுக்கேற்ப நிர்வாக இயந்திரத்தை முடுக்கி விடுவோமேயானால், அதன் மூலம் பெருமளவு வருமானத்தைக் குறைந்த செலவிலே பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வணிகர்களுக்கு என்று சொல்கிற போது, அவர்கள் சமுதாயத்திற்கு உதவுகிறவர்கள். அவர்கள் நேர்மையாக வரி கட்ட வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டியது இந்தத் துறையினுடைய மிகப் பெரிய கடமையாகும்.

பிற்பகல் 12.10

அதனாலேதான் இந்தத் துறையைப் பற்றி வெட்டுத் தீர்மானம் கொடுக்கிறபோது கூட 'செல்ஃப் அசெஸ்மெண்ட்', அதாவது, அவர்களாகவே தாங்கள் வ்யாபாரம் செய்த கணக்கை வைத்து, இவ்வளவு வியாபாரம், இவ்வளவு வரி

என்று அவர்களே தருவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அரசும் அதற்கான முயற்சியிலே ஒரு ஆரம்பக் கட்டமாக மேற்கொண்டு இருக்கிறது. மற்ற நாடுகளில அந்த முறை கையாளப்படுகிறது. வணிகர்கள் என்றாலே அவர்கள் ஏமாற்றுகிறவர்கள் அரசாங்கத்தை எப்படியாவது ஏமாற்ற வேண்டும் என்று நினைக்கிறவர்கள் என்று நினைப்பது சரியானதல்ல சிலபேர் தவறு செய்பவர்கள் இருக்கலாம். ஆனால் நாணயமாக வ்யாபாரம் செய்து நேர்மையாகக் கணக்கை வைத்து ஒழுங்காக வரி செலுத்த வேண்டுமென்று நினைக்கிற வணிகர்களுக்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை இந்தத் துறை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்கிறபோது தவறு செய்கிற வணிகர்களை நாம் அடையாளம் கண்டுகொள்ளவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் நிச்சயமாக அது வழி வகுக்கும்.

அதேபோல் இந்த வரி விதிப்பு முறைகளைப் பொருத்த வரையில்—சிவப்பு நாடா முறை அமலில் இருக்கிறது. நிர்வாகத்தில் இருக்கக்கூடிய முறைகள்—ரூல்ஸ், ரெகுலேஷன்ஸ், ப்ரோஃபார்மா பாரங்கள் இவைகளை எல்லாம் போட்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, கொஞ்சம் படிக்கத் தெரியாதவர்கள் அல்லது விவரம் தெரியாதவர்கள் இந்த வணிகத் துறையில் ஈடுபட்டு இருக்கிறபோது அவர்களால் அதை பூர்த்தி செய்து அனுப்புவதே மிகவும் கடினம். அதிலே இருக்கிற ஓட்டையை வைத்துக் கொண்டுதான், தவறு செய்யக்கூடிய அதிகாரிகள் பயன்படுத்துகிறார்கள். அதைத்தான் வைத்து மிரட்டுகிறார்கள். ஆக, எந்தெந்த அளவுக்கு அந்த விதிமுறைகளைத் தளர்த்த வேண்டுமோ, எந்தெந்த முறையிலே அந்தச் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டுமோ, அவற்றை எல்லாம் உடனடியாகத் தீர்த்து அவைகளை எளிதாக ஆக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்தால், அதிகாரிகளிலே தவறு செய்யக் கூடிய அதிகாரிகள் வணிகர்களை மிரட்டவோ அல்லது அவர்களை ஏமாற்றுவதற்கோ வழி ஏற்படாது. ஆகவே இந்த விதிமுறைகளை எந்த அளவுக்கு விரைவாகத் தளர்த்த வேண்டுமோ அந்த அளவுக்கு அவற்றைத் தளர்த்துகிற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே நேர்மையான வணிகர்கள், அவர்கள் நேர்மையாக இயங்கக்கூடிய சூழ்நிலையும், நேர்மையான அதிகாரிகள் அவர்களும் நேர்மையாக இயங்கக் கூடிய சூழ்நிலையும் ஏற்படுத்தப்படுமேயானால், நிச்சயமாக எதிர்பார்க்கிற வருமானத்தைவிட அதிகமாகவே வருவதற்கு வாய்ப்பு இருக்



கிறது. இன்றைக்கு விற்பனை வரித் துறை அதிகாரிகள் வருகிறார்கள் என்றாலே பயப்படுகிறார்கள். குறிப்பாக வணிக நிலையங்களிலும் சரி, தொழில் நிலையங்களிலும் சரி, அல்லது உணவு விடுதிகளிலும் சரி, என்ன கேட்பார்களோ, என்ன கணக்குப் புத்தகத்தைக் கேட்பார்களோ, எதைத் தேடுவார்களோ, எப்படி நடப்பார்களோ என்று பயப்படுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். அதற்கு மாறாக ஒரு நம்பிக்கை ஏற்படுத்துகிற சூழ்நிலையை இந்தத் துறை உருவாக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

மேலும் குதிரைப் பந்தைய வரிச்சட்டமும் இதிலேதான் வருகிறது. அந்த குதிரைப் பந்தயத்தை நடத்துவதன் மூலம் வருகிற வருவாயைப் பெருக்குவதற்கு வழிகள் இருக்கின்றன. அந்த நிர்வாகத்தில் இப்போது அரசுக்கு போதுமான, முடிவெடுக்கக்கூடிய அளவுக்கு அதிலே இடம் இல்லை ஆக அந்த நிர்வாகத்தைச் செவ்வனே நடத்துவதற்கான ஒரு வாய்ப்பினை அரசாங்கம் உருவாக்கிக் கொள்ளுமேயானால், அதன்மூலம் அரசின் வருவாயைப் பெருக்க முடியும். ஏழை எளிய மக்கள் அங்கே கட்டுகிற பணத்தில் பெருமளவு இப்போது குதிரையை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. அது மக்களுடைய நன்மைக்காக அரசாங்கத்திற்கு வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆக அந்த முயற்சியை அரசு மேற்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக நுழைவு வரிச் சட்டம் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிக்கும் வருகிறது. பொதுவாக ஒரு பெர்சன்ட் வரி உயர்த்தினால் அது என்ன ஆகிறது என்றால் வணிகர்கள் அந்த வரியை அப்படியே கட்டிவிடுவார்கள் என்பதில்லை அவர்களும் அந்த விலையை உயர்த்துகிறபோது அந்தப் பொருட்களை வாங்குகிற சாதாரண மக்களிடத்தில் தான் அந்தப் பளு போகிறது. ஆகவே வரியை உயர்த்தவேண்டும் என்று அரசு நினைக்கிற போது ஒரு தடவைக்கு இரு தடவை யோசிக்க வேண்டும். எனவே வரியை உயர்த்துவதால் எதிர்பார்க்கிற வருமானம் வராது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைளுக்கு வரி விதிப்பு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம். அதனுடையவிலையைக் இன்னும் கூட உயர்த்தலாம். ஏனென்றால் இன்றைக்கு அதில் வியாபாரம் மிகவும் அதிகம், ஆகையினால் அதன் விலையை உயர்த்துவதற்குக்கூட முயற்சிக்கலாம். அதுவும் மதுவிலக்கை அமல்படுத்தக்கூடிய ஒரு சிறந்த நடவடிக்கையாக ஆகும். அதன் விலையை உயர்த்துவதற்கு அதன்

மூலம் வருகிற வருமானத்தை வைத்து அரசாங்கத்தினு டைய நல்ல திட்டங்களுக்குச் செலவு செய்வதற்கும் முயற்சி களை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசு இன்னும் 'கன்சைன்மெண்ட் டேக்ஸ் ஆக்ட்' என்பதை நிறைவேற்றாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். காலம் காலமாக அந்தச் சட்டம நிறைவேற்றப்பட வேண் டும் என்றும் அதன்மூலம வருகிற வருவாய் வரவேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு வற்புறுத்திக்கொண்டே இருக்கிறது. அந்த 'கன்சைன்மெண்ட் டேக்ஸ்' போடுவதற்கான அந்தச் சட்ட முறையை, மசோதாவை கொண்டுவரவேண்டியதன் அவசியத்தை இந்திய அரசிடத்திலே வற்புறுத்த வேண்டு மென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இந்தத் துறையிலே வணிக் வரித்துறை அதிகாரி கள் வருகிறார்கள் என்றால் வணிகர்கள் அஞ்சுவதையும் வணிகர்கள் என்று அதிகாரிகள் நினைக்கின்றபோது, அவர்கள் ஏதோ அரசின் பணத்தை ஏமாற்றுகிறவர்கள் என்று நினைக்கிற அந்த சூழ்நிலையையும் மாற்றி இரு தரப் பாருக்கும் நம்பிக்கை ஏற்படக்கூடிய ஒரு நிர்வாக சீரமைப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

பிற்பகல் 12.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரி மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வருமானமே இல்லாத மிகவும் பின்தங்கிய தொகுதியில் உறுப்பினரான நான் இன்றைக்கு இந்த வணிக வரித் துறையிலே பேசுகிறேன். மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது சொன்னார்கள். எங் களுடைய தொகுதிக்கு இதை இதை எல்லாம் செய்ய வேண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த ஆட்சிக் காலத்தில் எங்கள் தொகுதியை வளப்படுத்த வேண்டும் என் றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நான் மிகவும் பின்தங்கிய பகுதியிலேயிருந்து வந்து இன்றைக்கு இந்த வருமானத்தை ஈட்டக்கூடிய வணிகவரி கொள்கைக் குறிப்பில் மானியத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

'சட்டியில் இருந்தால்தானே, அகப்பையில் வரும்' என்று ஒரு பழமொழி உண்டு. இன்றைக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுத்துவிட்டு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி



அவர்கள் தலைமையிலே இருக்கின்ற இந்த ஆட்சியிலே எங்களுடைய தொகுதிக்கு நான் கேட்டால் அது மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லி இந்த மானியத்திலே எனக்கு பேச வாய்ப்பு கொடுத்திருப்பதை நான் பெருமை யாகக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு திட்டங்களை இந்த கொள்கைக் குறிப் பிலே சொல்லியிருக்கிறார்கள். மிளகாய், புளி, மஞ்சள் போன்ற சாதாரண மக்கள் வாங்கக்கூடிய பல பொருட்களுக்கெல்லாம் வரி குறைக்கப்பட்டிருக்கிறது. 'செய்வார் கமிட்டி' என்ற ஒரு கமிட்டி போடப்பட்டிருந்தது, 1977-ல் அந்த கமிட்டி யானது சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் வாங்கக்கூடிய இந்த பொருள்களுக்கெல்லாம் வரியே விதிக்கக்கூடாது, இல்லை என்றால் வரியை குறைத்தாவது போடவேண்டும் என்று அன்றைக்கு சொன்ன அந்த அடிப்படையிலே இன்றைக்கு அந்த வரியைக் குறைத்திருப்பது உண்மையிலேயே பாராட்டத் தகுந்த நிகழ்ச்சியாகும். "Money is the pivot around which the economy science clusters" என்று 'மார்க்ஸ்' சொல்வர்கள். ஒரு அரசாங்கத்தினு டைய பொருளாதார திட்டங்களை, எல்லா முன்னேற்றத் திட்டங்களை வகுப்பதற்கு இதுபோன்ற இந்த வரித் திட்ட மானது நம்முடைய கமர்சியல் டாக்ஸ் என்று சொல்லக் கூடிய இந்த வருமானங்கள்தான் இந்த அரசை ஓட்டு வதற்கு வசதியாக இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். 'மணி' பணம். அதுதான் முக்கியமான ஆதாரமாக இருக்கிறது. பல்வேறு திட்டங்களை உருவாக் குவதற்கு பணத்தைத்தான் ஆதாரமாக பயன்படுவதால் அது வருகின்ற வழியை நாம் சிறப்பாக கவனிக்க வேண்டும் என்ற சூழ்நிலையிலே இருக்கிறோம்.

இன்றைக்கு நம்முடைய வரி திட்டத்தை நாம் பார்க்கும் போது வழக்குகள் இருக்கின்றன. ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. நிலுவையிலே சுமார் 4 ஆயிரம் வழக்குகள் இப்போது கமர்சியல் டாக்ஸ் டிப்பார்மெண்டிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஸ்பெஷல் அப்பலேட் டிரபியூனல் என்று ஒரு டிரபியூனல் ஏற்படுத்தப்பட்டு அந்த டிரபியூனல்லின் சார்பாக நிலுவையிலே உள்ள அந்த வழக்குகளையெல் லாம், சீக்கிரமாக முடிவு பெறச் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டு இருந்தாலும்கூட அது சரியாக செயலாக்கப் படாததனால் இன்றைக்கு சுமார் 1986-லிருந்து இப்படி நிலுவையில் ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. இந்த வழக்குகள் எல்லாம் முடிவுக்கு வரபெற்றால் சுமார் 500 கோடி ரூபாய் நமக்கு வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் வியாபாரிகளுக்கும்

வணிகவரி துறைக்கும் உள்ள பிரச்சினைகள். இந்த வழக்குகளை நிலுவையிலிருந்து அகற்றுவோம் என்றால், சீக்கிரமாக முடிக்கப்பெற்றால் அதிலேயிருந்து சுமார் 500 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருமானமாக கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இதை சீக்கிரமாக முடிப்பதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை இங்கே நான் வேண்டுகோளாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வைத்துக்கொள்கிறேன்.

சோதனைச் சாவடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சோதனைச் சாவடிகள் பல இடங்களிலே சுமார் 48 இடங்களிலே நமது தமிழகத்திலே இயங்கி வருகின்றன என்று இந்த கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி இந்த சோதனைச் சாவடிகளை எல்லாம் நாம் பார்க்கும்போது, சில இடங்களிலே கட்டிடங்கள் சரியாக இருப்பதில்லை. அந்த சோதனைச் சாவடிகளுக்கு சரியாக போன் வசதிகள் செய்துகொடுப்பதில்லை. ஒயர்லெஸ் வசதி கிடையாது சாதாரணமாக ஒரு குடிசை போல பல இடங்களில் அவைகளைப பார்க்கின்றோம். இதனால் அங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கு அங்கிருந்து வருகின்ற வாகனங்களை மறித்து சோதனையிடுவதற்கும் வரி வசூல் செய்வதற்கும் வசதியில்லாத சூழ்நிலை இருக்கிறது. நல்ல வசதிகளை நல்ல சூழ்நிலைகளை எல்லாம் செய்து கொடுப்பது மிகவும் அவசியமாகும். சோதனைச் சாவடிகள் எல்லாம் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல், சுமார் 301 வரி விதிப்பு வட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வட்டங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுக்கு அதிகமான இடங்கள் பிரித்து கொடுக்கப்பட்டிருப்பதனால் வரி வசூல் செய்வதில் பல இடர்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, இன்னும் அதிகமான வட்டங்களாகப் பிரித்து அதிகமான அதிகாரிகளையும் போட்டு வரி வசூலை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.20

சில இடங்களில் ஆர். சி. வாங்காமல் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படி ஆர். சி. வாங்கப்பட்டால் இந்த கடைகளை நிர்மானம் செய்வதற்கும் இந்த அதிகாரிகள் சீக்கிரமாகவும் தீவிரமாகவும் செயல்பட்டு அதன் மூலம் அரசுக்கு இன்னும் அதிகமான வரி வர ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



அதுபோல வணிக வரி அலுவலர்களுக்கு 3 மாத பயிற்சி கொடுக்கிறார்கள் என்றால் மிகவும் குறுகிய காலத்திற்குத் தான் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதில் பணியாற்றுகின்றவர்கள் வணிகர்களுக்கு ஒரு நல்ல வழி காட்டிகளாக இருக்க வேண்டும். ஆனால் சில நேரங்களில் அவர்கள் கடைகளை சோதனையிடும்போது வியாபாரிகளை கொள்ளைக் கூட்டத்தார்கள் போல, நின்று சோதனையிடுவதால், சில இடங்களில் வியாபாரிகள் அசந்து தொழிலையே விட்டு விட்டு போய் விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு டிரெயினிங் கொடுக்கும்போது, வியாபாரிகளை சோதனையிடும்போது நல்ல முறையில் அனுசரனையோடு அவர்களை நடத்த வருமானம் இன்னும் அதிகமாக வரும்வகையில் செயலாற்ற, அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படவேண்டுமென்பதை உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இப்போது கேளிக்கை வரி, சினிமா தியேட்டர்களுக்கு வரிகள் போடப்பட்டிருக்கின்றன. 40 சதவிகிதம் வசூலை அரசு வசூல் செய்ய முற்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்த சினிமா தொழில் மிகவும் சங்கடத்திற்கு உள்ளாகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. கிராமம் கிராமமாக வீடியோ படங்கள் காட்டப்படுகின்றன. இந்த வீடியோ படங்களுக்கு ஏதாவது ஒரு வரி போட வேண்டும். தற்போது வீடியோவுக்கு எந்தவிதமான வரியும் கிடையாது. கிராமங்களிலே வீடியோ போட்டு பணம் வசூலிக்கிறார்கள். இதனால் இந்த சினிமா தொழில் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட மினிமம் அமவுண்டை நிர்ணயித்து அதை வசூல் செய்து அரசின் வருவாயைப் பெருக்கக்கூடிய வகையிலே ஒரு சட்டம் இயற்ற வேண்டும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலம் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் இங்கே வந்தாலும் அரசின் பல்வேறு திட்டங்களுக்கு அது பயன்படும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை இன்னும் விரிவாக்கி பல பரிசு திட்டங்களையும் உருவாக்கி செயல்படுத்தினால் தமிழகத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலமாக பலகோடி ரூபாய் அதிகமாக வர வாய்ப்பாக இருக்கும் என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து லாட்டரிச் சீட்டு மூலமாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 2.43 கோடிதான் நிகர வருமானம் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது, ஒவ்வொரு கிராமத்தினரும் ஒரு ரூபாய்க்கு லாட்டரிச் சீட்டு வாங்கினால் கூட இன்றைக்கு பார்க்கிறோம்

பல கிராமங்களில் மக்கள் ரூபாய்களை அவர்கள் இந்த லாட்டரிச் சீட்டுகளை வாங்குவதன் மூலமாக தங்கள் கையில் இருந்து பணத்தை எல்லாம் இழந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணம் எல்லாம் அரசாங்கத்தினுடைய கஜானாவிற்கு வராமல் முடங்கிக் கிடக்கின்றன. அதுமட்டுமல்லாமல் வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற லாட்டரிச் சீட்டுகள் இங்கே விற்கப்படுவதனால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்கின்றன. இதற்கு ஒரு யூனிபார்ம் பாலிசி வைக்க வேண்டுமென்று ஹைகோர்ட்டிலே ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. அந்த ஹைகோர்ட் தீர்ப்பின்படி வெளி மாநிலங்களிலுள்ள லாட்டரிச் சீட்டுகளாக இருந்தால் 1 ரூபாய் 61 பைசா என்றும், இங்கே உள்ள லாட்டரிச் சீட்டுகள் என்றால் 1 ரூபாய் என்றும் விற்கப்படுகிறது. இப்படி வரும்போது, எல்லா மாநிலங்களிலும் உள்ள லாட்டரிச் சீட்டுகளுக்கும் யூனிபார்மாக ஒரு பாலிசி வைத்து இந்த வரிகளை அவர்கள் ஒழுங்காக கட்டக்கூடிய வகையில் லாட்டரிச் சீட்டுகளினுடைய முதலாளிகளிடமிருந்தோ அல்லது விற்பனையாளர்களிடமிருந்தோ அதை வசூல் பண்ணக்கூடிய அளவுக்கு செக் பண்ணக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்க வேண்டும். ஆனால் இப்போது அப்படி இல்லாத அளவுக்கு ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் இருந்து நீங்க அதை முறைப்படுத்தி, இந்த லாட்டரிச் சீட்டு மூலமாக ஒரு பெரிய வருமானத்தை நாம் இழந்துகொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து இந்த வருமானத்தை உயர்த்துவதற்கு அரசு நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று உங்கள் மத்தியிலே நான் இச் சந்தர்ப்பத்தில் சொல்லிகொள்ள விரும்புகிறேன். அதைப் போல டாக்ஸ் அசெஸ்மெண்ட் என்று சொல்லுகிறார்கள்.

பிற்பகல் 12.25

5 லட்சம் ரூபாய் வரைக்கும் டர்ன்-ஓவர் இருக்கும் கடைகளுக்கு, வியாபாரிகளுக்கு, தொழில்களுக்கு டாக்ஸ் அசெஸ் பண்ணும்போது இன்றைக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிச் சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் பிராபிட் அண்ட் லாஸ் அக்கவுண்ட் எல்லாம் காட்ட வேண்டுமென்று சொல்லி ஒரு டக் அப் வார் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் வருமான இழப்புகள் ஏராளமாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே இன்னும் சரியான முறையில் டாக்ஸ் அசெஸ்மெண்ட் செய்து 5 லட்சம் ரூபாய் என்பதை இன்னும் 1 லட்சத்தைக் கூட்டி, சாதாரண வியாபாரிகளுக்கு அதிகமான கட்டுப்பாடுகளை உருவாக்காமல் பெரிய வியாபாரிகளிடம் நல்ல முறையில் வருமானத்தை ஈட்ட வேண்டுமென்று உங்கள் மத்தியிலே சொல்லி கொள்ள விரும்புகிறேன்.



அதுமட்டுமல்ல. இன்றைக்கு சிங்கிள் பாயின்ட் டாக்ஸ், மல்டி பாயின்ட் டாக்ஸ் என்று இருக்கிறது. சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் என்று முந்தைய அரசு அறிவித்தது. சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் என்று போடும்போது, சில இடங்களிலே வவுச்சர்களை, பில்களைப் போலியாக அச்சடித்து போலி பில்களை வைத்து வியாபாரிகள் விற்பனை செய்கிறார்கள். அதனால் சிங்கிள் பாயின்ட் டாக்ஸ் மூலம் வரவேண்டிய வருமானம் இந்த அரசுக்கு வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டும். போலி பில் அச்சடிப்பதையே வியாபாரமாக தமிழகத்தில் வைத்திருக்கிறார்கள். எனவே, 2 சதவிகிதம் வரி எல்லா முனைகளிலும் போட்டு, ஏதாவது ஒரு முனையில் அரசுக்கு வரி வரும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும். வியாபாரிகளின் குழுவின் ஆலோசனையின் பேரில் இதை விதிக்க வேண்டுமென்று உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. வணிகத் துறைப் பணியாளர்களுக்கு பல நேரங்களிலே பல சிக்கல்கள் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்லும் போது, அவர்களுக்குத் தேவையான பிரின்டிங் அண்ட் ஸ்டேஷனரி சில நேரங்களில் கொடுக்கப்படாமல் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அவர்கள் எழுதுவதற்குத் தேவையான கணக்குப் புத்தகங்கள் சரியாக சப்ளை பண்ணப்படவில்லை என்ற குறை இருக்கிறது. அப்படி அது குறையாக இருக்கும்போது சிறிய வியாபாரிகளிடம் இது போன்ற கணக்கு புத்தகங்களையும், பாரங்களையும் வாங்கிக் கொடுங்கள் என்று சொல்லும் சூழ்நிலை இருக்கிறது. அதை வியாபாரிகள் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு டாக்ஸ் எவேஷன் என்று சொல்லக் கூடிய அளவுக்கு டாக்சை கட்டாமல் ஏமாற்றுவதற்கு வழிவகை ஏற்படுத்துகிறது. எனவே அவர்களுக்கு வேண்டிய பொருள்களை கொடுக்க வேண்டும்.

மொத்த வருமானத்தில் சுமார் 70 சதவிகித வருமானத்தை வணிக வரித் துறை மூலமாக அரசு பெறுகிறது. இந்த அளவு வருவாய் வரும் துறையை செம்மைப் படுத்த வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. பல இடங்களிலே, பல்வேறு ஊழல்கள் எல்லாம் இந்தத் துறையில் அதிகமாக இருக்கிறதென்று பரவலாக வியாபாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சொல்லக்கூடிய இந்தத் துறையை செம்மைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இந்தத் துறையைச் செம்மைப்படுத்திக் கொண்டு வந்தால், நிச்சயமாக பல கோடிக்கணக்கான ரூபாய் நமக்கு வருமானம் மேலும் வரும். வரி ஏய்ப்பவர்களைத்

தடுத்து, நல்ல முறையில் வியாபாரிகளுக்கு இன்ஸ்டிரக்ஷன்ஸ்
கொடுத்து சரியான முறையிலே வணிக வரிச் சட்டங்களைப்
பயன்படுத்தினால் பல கோடி ரூபாய் நமது அரசுக்கு வரு
மானமாக வரும்.

அடுத்து இன்றைக்கு சமையல் எண்ணெய் பற்றி மாண்பு
மிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஏழை எளிய
மக்கள், தாய்மார்கள் வாங்கிச் சாப்பிடும் சமையல் எண்
ணெயின் விலை அதிகமாக ஏறியிருக்கிறது. இதற்கு பாண்டிச்
சேரியில் 2 சதவிகிதம் ஒரு முனை வரி போடப்படுகிறதென்று
சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும்போது நம்முடைய
தமிழகத்தில் 10.8 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருப்பதால்,
இந்த வரியை முழுமையாக நீக்கி அல்லது கொஞ்சம்
குறைத்து விதித்தால் சமையல் எண்ணெய் வாங்குபவர்களுக்கு
வசதியாக இருக்கும்.

பிற்பகல் 12.30

அதைப்போல, வனஸ்பதிக்கும் அதிகமான வரி இங்கே
போடப்பட்டிருக்கிறது. பாண்டிச்சேரியில் குறைவான வரி
தான் போட்டிருக்கிறார்கள். ஆகவே அதை வைத்துக்
கொண்டு சில வியாபாரிகளும் வர்த்தகர்களும் அங்கே கரஸ்
பான்டன்ஸ் வைத்துக் கொண்டு வரி ஏய்ப்பு போன்றவற்றைச்
செய்ய முடிகிறது. இதனால் நமக்கு வரவேண்டிய
வருமானம் பாண்டிச்சேரிக்கு போகிற நிலை ஏற்படுகிறது.
ஆகவே இந்த சமையல் எண்ணெய்க்கு வரியைக் குறைத்துப்
போடவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன். அதைப்போல தொழில் வரி இப்போது
போடப்பட்டிருக்கிறது. பல மடங்கு போட்டிருக்கிறார்கள்.
சுமார் 10 மடங்கு அதிகமாக இருக்கிறது. 250 ரூபாய்
உள்ள அந்த வரி இப்போது 2500 ரூபாயாக விதிக்கப்பட்டி
ருக்கிறது. இதனால் வியாபாரிகள் வணிகர்கள் போன்ற
வர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் கட்டி விடுவார்
கள். ஆனால் சாதாரணமாக ஆபீஸ்களிலும் வங்கிகளில்
பணியாற்றுபவர்கள் தான் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.
அவர்கள் தான் விரைவில் அரசாங்கத்தால் அடையாளம்
கண்டு பிடிக்கப்படுவார்கள். இது மிகவும் அதிகமாக
இருப்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை
உள்ளம் கொண்டு அதைக் குறைத்துப் போடும்படி உங்கள்
மத்தியில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல், இன்றைக்கு 18 விதமான பொருட்களுக்கு
வரியைக் குறைத்திருக்கிறீர்கள். அது மிகவும் வரவேற்கத்
தக்க விஷயம். ஏனென்றால் வரியைக் குறைக்கும் போது
நமது அரசுக்கு வருமானம் குறைந்துவிடும் என்பது அல்ல.
வரியைக் குறைக்கும் போது வியாபாரிகளுக்கு உற்சாகம்



பிறக்கும். அதேபோல் பொது மக்களுக்கு வாங்கும் திறன்
அதிகரிக்கும். அதனால் வணிகம் பெருகும். அப்படி வணிகம்
பெருகும்போது ஒவ்வொரு தடவையும் அரசுக்கு வருமானம்
உயரக்கூடிய அளவில்தான் இருக்கும் என்பதால் அந்த வரிக்
குறைப்பை மிகவும் வரவேற்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறி
விப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

மோட்டார் பொருத்தப்படாத மிதி வண்டிகளுக்கு அதா
வது, சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு வரியே இல்லை என்று
சொல்லியிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல, சாதாரண விவசாயி
கள் வைத்திருக்கின்ற மாட்டு வண்டிகளுக்கும் வரியே இல்லை
என்று அறிவித்திருக்கிறீர்கள். அதேபோல மருந்துகளுக்கும்
வரி குறைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சாதாரண
மக்கள் வாங்கக் கூடிய வகையில் மருந்துகளின் வரியை
குறைத்திருக்கிறீர்கள். அதாவது வரியே இல்லை என்று
சொல்லக்கூடிய அளவில் வரியைக் குறைத்திருக்கிறீர்கள். அது
மிகவும் வரவேற்கத்தக்கது. இவையெல்லாம் ஏழை
மக்களை மகிழ்ச்சியடையச் செய்யக் கூடியது. அது மிகவும்
ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதை நான் இங்கே சொல்ல
விரும்புகிறேன்.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். டீசல்
14 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாக வரி உயர்த்தப்பட்டி
ருக்கிறது. ஏற்கெனவே மக்கள் பளுவை தாங்கிக்கொண்டி
ருக்கிற நிலையில் இருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் தான்
டீசலை உபயோகப்படுத்தி வருகிறார்கள். வாகனங்களுக்கு
ஏற்கெனவே உதிரி பாகங்களின் விலை உயர்த்தப்பட்டிருக்
கிறது. அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
இப்போது டீசல் விலையும் உயர்ந்தால் அவர்கள் மிகவும்
பாதிக்கப்படுவார்கள். இன்னும் சொல்லப்போனால்
சாதாரண மக்கள்தான் இதனால் பாதிக்கப்படுவார்கள்.
ஏனென்றால் அவர்கள் எளிதாக வாடகையை கூட்டி விடுவார்
கள். சாதாரண மக்களுக்கு அது மிகவும் பளுவாக இருக்கும்
என்பதால் அதைக் கூட்ட வேண்டிய அவசியமே இல்லை
என்பது எனது கருத்து ஆகும்.

இன்றைக்கு மிகவும் திறமையாக இந்த பட்ஜெட்டைப்
போட்டிருக்கிறீர்கள். முன்பு நான் இங்கே சட்டமன்ற உறுப்பி
னராக இருந்தபோது பல்வேறு சம்பவங்களைக் கண்டிருக்கி
றேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர்
மாண்புமிகு முதல்வர் அவர்களின் திறமைகளைப் பற்றி
சிறப்பாக பாராட்டியிருக்கிறார்கள். போன தடவை இந்த
சட்டமன்றத்திலே நாங்கள் இருந்தோம். எங்களது கட்சி
உறுப்பினர் சிங்காரம் அவர்கள் உருக்கமாகக் கூட சொன்

னார்கள், இங்கு நடந்த அந்த கோரக் காட்சிகளைப் பற்றி
சொன்னார்கள். இன்றைக்கு ஒரு வரலாற்றையே நமது
முதல்வர் அவர்கள் படைத்திருக்கிறார்கள். இந்த மாமன்றத்
தில் நாங்கள் தோழமைக் கட்சியாகவும் எதிர்க்கட்சியாக
வும் இருக்கிறோம். இரண்டும் சேர்ந்து இந்த சபையில்
அமர்ந்திருக்கிறோம். எங்களைப் பற்றி சிலர் கூட சொல்லும்
போது, நாங்கள் குங்குமம் சுமக்கும் கழுதை என்றார்கள்.
நாங்கள் அப்படி இல்லை உங்களுடைய ஆட்சியைக் காப்போம்
கண்ணை இமை காப்பதைப் போல இந்த ஆட்சிக்கு
தோழமைக் கட்சியாக இருந்து உறுதுணையாகவும் இருப்
போம். அதுமட்டுமல்ல, ஆக்க பூர்வமான எதிர்க்கட்சியாக
வும் பணியாற்றுவோம். நாங்கள் சொல்வது அதுதான்.
இந்த ஆட்சியை ஏற்படுத்துவதற்கு நாங்கள் எத்தனை
இடர்பாடுகளுக்கு உள்ளானோம் என்பது எல்லோருக்கும் தெரி
யும். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எவ்வளவு
இழப்புக்கு உள்ளானார்கள் என்பதை நாங்கள் இந்த சட்ட
சபையில் பார்த்தது உண்டு. இந்தச் சபையில் பார்த்ததோடு
மட்டுமல்லாமல், இந்தச் சபைக்கு வெளியிலேயும் பேசியது
உண்டு. நானும் வங்கியில் பணியாற்றியவன். வங்கியில் பணி
யாற்றிய நான் இப்போது சட்டசபைக்கு வந்திருக்கிறேன்.

பிற்பகல் 12-35

இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியைக் காண வேண்டுமா
இப்படி இந்த மன்றத்திலே நிகழ்ச்சி நடக்க வேண்டுமா
என்று வெளியே பேசியதுண்டு. வெளிப்படையாகச் சொல்
லுகிறேன், இவ்வளவு இடர்பாடுகளுக்கு மத்தியிலே பெரிய
புரட்சியைச் செய்து இன்றைக்கு ஆட்சியிலே அமர்ந்து அவர்
கள் சிறப்பாகவும் ஆட்சி புரிகிறார்கள் என்று பொதுமக்கள்
பேசக்கூடிய அளவிற்கு வரலாற்று நாயகியாக
இருக்கிறார்கள். அவரை மனமார வாழ்த்திக் கொண்டு
அவருடைய ஆட்சிக்காலத்திலே, இந்த வணிக வரித்துறை
மானியத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தன மக்கு
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி
அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் என்பதில்
பொது விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி, விற்பனை
மேல்வரி, மத்திய விற்பனை வரி, கேளிக்கை வரி, பந்தய வரி,



தங்கும் விடுதிகளில் அளிக்கப்படும் வரி, ஆடம்பர வசதிகள்
மீதான வரி, விளம்பர வரி, மற்றும் வாகனங்கள் மீதான
நுழைவு வரி ஆகியவைகள் அடங்கும்.

விற்பனை வரியின் சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்த்தால்,
அதன் ஆரம்பம் நீதியை நிலைநாட்டிய மனுச்சக்கரவர்த்தி
காலத்திலே தொடங்கப்பெற்றது என்பது நமக்கு வியப்பு
அளிப்பதாக உள்ளது. மனுச்சக்கரவர்த்தியின் காலத்திலே
அரசின் வருவாயில் முக்கிய பங்காக விளங்கியது விற்பனை
வரி. இவ்வரி, வாங்கி விற்பனை செய்யப்படும் பொருள்களின்
விலையில் 5 சதவீதமாக இருந்தது. எல்லாப் பொருள்
களைப் பற்றியும் ஆராய்ந்து, அனுபவம் மிக்கவர்கள் மூல
மாக பொருள்களின் விலை அறியப்பட்டு அவற்றின் மீது ஐந்து
சதவீத விற்பனை வரி வசூல் செய்யப்பட்டது. அக்காலத்தில்
வரியை பணமாக அன்றி அதற்கு இணையான பொருளாகவும்
செலுத்திட வழி இருந்தது. மக்கள் தங்களையும் தங்கள்
உடைமைகளையும் பாதுகாக்கும் அரசுக்கு, விற்பனை செய்
யப்படும் 50 பசுக்களுக்கு ஒரு பசுவும், தங்கத்தில் 50-ல்
ஒரு பங்கும், தானியங்களில பத்தில் ஒரு பங்குமாக வரி
செலுத்தி வந்தனர்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் விற்பனை வரியின்
ஆரம்பம 1939 ஆம் ஆண்டாகும். அரசின் மதுவிலக்குக்
கொள்கையினால் அப்போது மிக அதிகம் என கருதப்பட்ட
ரூபாய் ஐந்து கோடி வருவாய் இழப்பினை ஈடு செய்ய
அன்றைய சென்னை மாகாணப் பிரதம மந்திரி மூதறிஞர் என்று
அன்புடன் அழைக்கப்பட்ட மாண்புமிகு சர் சி. இராஜ
கோபாலாச்சாரியார் அவர்களால் விற்பனை வரி மசோதா, சட்ட
மன்றத்திலே கொண்டுவரப்பட்டது. அந்த மசோதாவை
அறிமுகப்படுத்தி அச்சட்டத்தின் நோக்கங்களினையும், காரணங்
களையும் விளக்கி அவர் ஆற்றிய உரையில் ஒரு சில பகுதி
களைப் படிப்பதற்கு உங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

''இந்த மசோதாவில் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி, விற்பனைத்
தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு பைசா என்ற அளவில்
உள்ளது. தரும காரியங்களுக்காக பெரும்பான்மையான
வணிகர்கள் வழக்கமாக தாங்கள் செய்யும் விற்பனைக்கு எந்த
அளவிற்கு வரி செலுத்த வேண்டுமோ அதைவிட மூன்று
மடங்கு அதிகமாக 'மகிமை' என்ற பெயரில் செலவிடும்
வழக்கம் வேறு ஒன்று உள்ளது. அரசின் தேவைகளை
ஈடுகட்ட புதிய வருவாய் வழிவகை தேடும் தற்போதைய
நிலையில் இந்தப் புதிய வரி அதிக சுமையாக இருக்காது
எனக் கருப்படுகிறது'' என்றார் இராஜாஜி அவர்கள்.

1939-ஆம் ஆண்டு நிலவிய அதே நிலைதான் தற்போது நிலவுகிறது என்பதை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையினைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதோடு பிற நல்வாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முற்படும் இவ்வேளையில் புதிய வருவாய் வழிவகைகளைக் கண்டறியும் நிலையில் இந்த அரசு உள்ளது. விற்பனை வரி அன்று இருந்ததைப் போன்றே இப்போதும் அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக தொடர்ந்து இருந்து வருகிறது. மாநிலத்தின் மொத்த வருவாயில் வணிக வரியின் பங்கு 70 சதவீதமாகும். அரசின் கொள்கைகள், மற்றும் வணிகர்களின் கோரிக்கைகள் ஆகியவற்றின் பெயரால் விற்பனை வரி விகிதம் மற்றும் வரி விதிப்பு முறை ஆகியவற்றில் பல்வேறு மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன.

பிற்பகல் 12-40 .

வணிகவரிச் சட்டத்தினைச் சீரமைக்கும் பொருட்டு ஆரம்பத்தில் பொருளாதார நிபுணர் திரு. பி. எஸ். லோகநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிலிருந்து ஆரம்பித்து தொடர்ந்து இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த திரு. எஸ். ஆர். கெய்வார், திரு. எஸ். பி. சீனிவாசன், திரு. கே. கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் அமைக்கப் பட்ட குழுக்கள் வணிகவரி சீரமைப்பிற்கான பல்வேறு ஆலோசனைகளை நல்கி உள்ளன. எங்களது தேர்தல் அறிக்கையில் வரி சீரமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். வரி விதிப்பு அலுவலர்கள் நேர்மையற்றவர்களாக இருக்கும்போது வரி ஏய்க்கும் போக்கு நிலவுகிறது. அதே நேரத்தில் வணிகர்களில் சிலர் நேர்மையற்ற வழி முறைகளைக் கடைப்பிடிக்கும் போது நேர்மையான அலுவலர்களின் நடவடிக்கைகள் கண்டிப்பானவையாகக் கருதப்பட்டு, வணிகர்கள் தொல்லைப்படுத்தப்படுகின்றனர் என்ற புகார்கள் வருகின்றன. உங்களுக்குத் தகவலுக்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ 8,640 நீதிப்பேராணை மனுக்களும், சுமார் 2,000 வரி வழக்குகளும் உயர்நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ளன. இதிலிருந்து பல வழக்குகளை தீர்ப்பாயத்திற்கும், நீதிமன்றத்திற்கும் எடுத்துச் செல்லும் வணிகர்களின் மனப்போக்கினை நாம் அறிகின்றோம். இதுபோன்ற வழக்குகள் உச்சநீதிமன்றத்திலும், மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களிலும், மேல்முறையீட்டு உதவி ஆணையர்களிடமும் தேங்கியுள்ளன. வழக்குகள் தேவையற்ற முறையில் நீட்டிக்கப்பட்டு, அரசிற்கு வரவேண்டிய வருவாய் செலுத்தப்படாமல் தாமதப்படுத்தப்படுகிறது. எனவே, வணிகவரிச் சட்டத்தினை எளிமைப்படுத்தி சீரமைக்க ஆய்ந்து





தகுந்த பரிந்துரைகளை அரசிற்கு வழங்க உயர்மட்ட விற்பனை வரி சீரமைப்புக் குழு ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளோம்.

அரசின் தற்போதைய நெருக்கடியான நிதிநிலையிலும், நாங்கள் விற்பனை வரிச் சலுகைகளை அளித்துள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இவற்றில் முக்கியமானது உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து மீதான வரியை அரை சதவீதம் குறைத்ததாகும். மத்திய அரசு உரங்கள் விற்பனை மீதான மானியத்தைக் குறைத்தும், சில வகை உரங்களின் விற்பனை விலையையும் உயர்த்தியுள்ள காலக் கட்டத்தில் விலை உயர்வினால் அரசிற்கு கிடைக்கக்கூடிய கூடுதல் வருவாயினையும் பொருட்படுத்தாது இந்த வரிக் குறைப்பு அறிவிக்கப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் பயன் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் நாங்கள் இந்த வரிக்குறைப்பினைச் செய்துள்ளோம்.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து வரிச் சலுகைகளையும் மீண்டும் தற்சமயம் நான் குறிப்பிட விரும்பவில்லை. எனினும் இந்நேரத்தில் சில முக்கியமான தகவல்களைத் தெளிவுப் படுத்திட விரும்புகிறேன். ஆண்டிற்கு ரூபாய் 5 இலட்சத்திற்குக் குறைவான மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் பயனடையும் வகையில் புதிய 'தன் மதிப்பீட்டு' வரிவிதிப்பு முறையினை (Self assessment Scheme) நாங்கள் அறிவித்துள்ளோம். சென்ற ஆண்டு வரையில், சில குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு கணக்குத் தணிக்கை இல்லாமல் முடிவுற்றதாகக் கருதப்படும் வரிவிதிப்பு முறை (Deemed Assessment) நடைமுறையில் இருந்தது. அதன் நிபந்தனைகள் பின்வருவன:

1. வணிகரின் ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ஐந்து இலட்ச ரூபாய்க்கு அதிகமாக இருக்கக்கூடாது.

2. மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழான விற்பனைக்குரிய படிவங்கள் பெற்றிருக்கக் கூடாது.

3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழான விற்பனைக்குரிய படிவங்கள், படிவம் 17, 20, 20-பி ஆகியவற்றைப் பெற்றிருக்கக் கூடாது.

4. விற்பனை வரிச்சட்டம் மற்றும் விதிகளில் கூறப் பட்டுள்ள எந்தவொரு விதிமுறைகளையும் மீறி இருக்கக் கூடாது.

கடைசியாக குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் காரணமாக இம்முறையினை செம்மையாக நடைமுறைப்படுத்த இயல வில்லை. மிகச் சிறிய தவறுகளுக்காக வணிகர்கள் இம்முறை யில் வரிவிதிப்பிற்கு உட்படும் தகுதியினை இழக்க நேரிட்டது. எனவே, எங்களது அரசு திருத்திய 'தன் மதிப்பீட்டு வரி விதிப்பு' (Self Assessment) முறையினை அமல்படுத்த உறுதியாக உத்தேசித்துள்ளது. விற்பனை வரிச்சட்டம் மற்றும் விதிகளை மீறும் வணிகர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படலாமெனவும், சிறிய தவறுகளுக்காக சுய மதிப்பீட்டு வரிவிதிப்பு சலுகையினை, வணிகர்கள் இழக்க வேண்டாம் எனவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். சில குறிப்பிட்ட விற்பனைக்குரிய படிவங் கள் பெற்றிராத, ஆண்டிற்கு ரூ. 5 இலட்சத்திற்குக் குறை வாக, மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு, இப்புதிய திட்டம் பொருந்தும். வணிகர்கள் பல்வேறு தொல்லைகளிலிருந்தும், சிரமங்களிலிருந்தும் விடுபட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அறிவிக்கப்படும் இத்திட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேற வணிகர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று நாங்கள், எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாண்டில் நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் பொழுது வணிகர்களுக்கு கணிசமான அளவில் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அதன் தொடர்ச்சியாக சில வரிவிகிதங்களில் மாற்றங்களையும் மற்றும் சலுகை களையும் அறிவிக்கின்றேன்.

பிற்பகல் 12-45

தற்போது முயல், குரங்கு, பன்றி ஆகியவற்றின் தீவனங் கள், மனிதத் தலைமுடி மற்றும் டோப்பா-விக் ஆகிய பொருள்களுக்கு 8 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இந்தப் பொருள்களுக்கு முழுவதுமாக வரிவிலக்கு அளிக்கப் படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

மரவள்ளிக்கிழங்கின் உப பொருள்களான இப்பி, இப்பி மாவு, மற்றும் கப்பி, அதனுடன் புளியங்கொட்டை மற்றும் நார், பழைய அலுமினியம்—அலுமினியம் ஸ்கிராப் மற்றும் இரப்பர் பலூன்கள் ஆகிய பொருள்களுக்கு தற்சமயம்



8 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இதை மாற்றி 4 சத வீதமாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

மேலும் கழிவுத் தாளின் வரிவிகிதம் 8 சதவீதத்தி லிருந்து 6 சதவீதமாகவும், பாட்டில் மூடிகள் 8 சதவீதத்தி லிருந்து 5 சதவீதமாகவும், இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பட்டு 'இம்போர்ட்டட் ரா சில்க்' 8 சதவீதத்தி லிருந்து 2 சதவீதமாகவும் வரி குறைப்பு செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

தற்போது பொது விற்பனை வரிச் சட்டத்தில் முதல் அட்டவணையில் 192 ஆவது வரிசை எண்ணாக கிரானைட் கருங் கல் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தப் பதிவை—என்ட்ரியை மாற்றி புதிய வரிசை எண்ணில் கிரானைட் கற்கள் மற்றும் மெருகேற்றப்பட்ட கிரானைட் பலகை ஆகியவற்றுக்கு ஒவ்வொன்றின் மீதும் 8 சதவீதம் வரி விதிக்கப்படும். இதனால் இந்தப் பொருளின் வரிவிதிப்பு தொடர்பான குழப்பங்கள் நீங்கும்.

கைவினைப் பொருள்களுக்கு 1—4—1990-லிருந்து 8 சதவீதம் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. ஆனால் ஒவ் வொன்றும் ரூபாய் ஆயிரத்திற்குக் குறைவான விற்பனை மதிப்புள்ள சில குறிப்பிட்ட கைவினைப் பொருள்களுக்கு 18—3—1987-லிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கடல் சங்குகளால் செய்யப்பட்டுள்ள விளை யாட்டுப் பொருள்களும் அடங்கும். கடல் சங்குகளால் பல விதமான கைவினைப் பொருள்கள் கைவினைஞர்களால், குடிசைத்தொழில் முறையில் செய்யப்படுகின்றன. இவ்வகை கைவினைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கடல் சங்குகளால் செய்யப்படும் அனைத்துப் பொருள்களுக்கும், விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வருவாய் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப் படுகிறது.

பொது விற்பனை வரிச் சட்டத்தில் முதல் அட்டவணை யில் உள்ள 36ஆவது வரிசை எண்ணாக தேயிலை சேர்க்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள முறைப்படி மொத்தமாக தேயிலைத் தூள் வாங்கி 20 கிலோவிற்குக், குறைவாகப் பிரித்து பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப் படும் தேயிலைக்கு மீண்டும் வரி செலுத்த நேரிடுகிறது. இதை மாற்றி தேயிலை விற்பனை மீது ஒரே கட்டமாக 6 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கான பால் உணவிற்கு அரசாங்கம் தற்போது 10 சதவிதத்திலிருந்து 4 சதவிதமாக வரியைக் குறைத்துள்ளது. ஹார்லிக்ஸ், விவா, ஸ்பர்ட் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவைகள் பால் உணவுகள் என்று தவறாக குறிப்பிட்டு 4 சதவித குறைந்த வரி செலுத்தப்படுகிறது. அரசின் நோக்கம் குழந்தைகளுக்கான பால் உணவிற்கு, அதாவது— பேபி மில்க் புட்டிற்கு— வரியினைக் குறைத்திடுவது ஆகும். எனவே, இது தொடர்பான அறிவிப்பில் திருத்தம் செய்யப்பட்டு குழந்தைகளுக்கான பால் உணவிற்கு மட்டுமே 4 சதவிதம் குறைந்த வரி வசூலிக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வரி பாக்கியை வசூலிப்பது சம்பந்தமான அறிக்கையை சமீபத்தில் அவையில் சமர்ப்பித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்கீழ் மட்டும் 1— 1— 1991 முடிய ரூ. 270.49 கோடி வரி பாக்கியாக உள்ளது. இதில் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் மேல் முறையீட்டு உதவி ஆணையர் ஆகியோரின் தடை ஆணையின் காரணமாக ரூ. 163.99 கோடி வசூலிக்க முடியாமல் உள்ளது. இதுதவிர வரி செலுத்தத் தவறியோர்களுடைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் பொது ஏலத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-50

இம்மாதிரி நடவடிக்கையின் மூலம் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ. 44.18 கோடி ஆகும். அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பிறகு வசூலிக்க இயலாது என கருதப்பட்டு தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை ரூ. 34.08 கோடி ஆகும். இத்தனை முயற்சிகளுக்குப் பிறகு ,மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது என்ற பழமொழிக்கேற்ப ரூ. 28.24 கோடிதான் வசூலிக்கக் கூடிய வரி பாக்கி என நான் அறிவிக்கிறேன். வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையிலுள்ள சுமார் 50 கோடியையும் இத்துடன் சேர்த்தாலும் கூட பழைய பாக்கியை வசூலிப்பதன் மூலம் நமது வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய நிதிப்பற்றாக் குறையை ஈடு செய்ய இயலாது. எனினும் சிறு துளி பெரு வெள்ளம் என்ற பழமொழிக்கு ஏற்ப வணிகவரித் துறை



அலுவலர்கள் கடுமையான முயற்சி எடுத்து வசூலிக்கக்கூடிய வரி பாக்கியை விரைவாக வசூலித்திடுமாறு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

பெரும்பான்மையான வரி விதிப்பு அலுவலகங்களில் போதிய வசதிகள் இல்லையென்பதை நானறிவேன். அநேக அலுவலகங்களில் வணிகர்கள் வந்து அமருவதற்கும் போதிய அளவு நாற்காலிகள் கூட இல்லை. அலுவலர்களைப் பார்க்க வரும் வணிகர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் வசதியாக அமர்ந்திருக்க தனியே வரவேற்பு அறை கிடையாது. அநேக இடங்களில் அலுவலகங்கள தனியார் கட்டிடங்களில் அமைந்துள்ளதால் அலுவலகப் பணியாளர்களுக்கும், வணிகர்களுக்கும் போதிய வசதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற தேவைகளை அரசுக் கட்டிடம் கட்டும்போது தான் செய்து தர இயலும். இதனை மனதில் கொண்டு வணிக வரித் துறையின் பல்வேறு அலுவலகங்களுக்கும் அரசு கட்டிடம் கட்டித் தர வேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள மொத்தம் 35 உதவி ஆணையர் அலுவலகங்களில், நாமக்கல், புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை உதவி ஆணையர் அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களில் உள்ளன. எனவே முதற் கட்டமாக இந்த நான்கு உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் அரசு கட்டிடம் கட்டித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.) இந்த இடங்களில் இயங்கும் பிற வரிவிதிப்பு மற்றும் செயலாக்கப் பிரிவைச் சார்ந்த 16 அலுவலகங்களுக்கும் இந்தக் கட்டிடத்தில் இயங்கும் வண்ணம் கட்டிடம் கட்டப்படும். கட்டிடம் கட்டத் தேவையான நிலத்தினை வணிக வரித்துறைக்கு வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை வழங்கப்படும். இதற்கு ரூ. 80 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பல அலுவலகங்களில் போதிய அளவு தளவாடங்கள் வெகுநாட்களாக வழங்கப்படவில்லை. அலுவலகங்களுக்கு வருகைதரும் வணிகர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொது மக்கள் போதுமான இருக்கை வசதியின்றி சிரமப்பட வேண்டியுள்ளது. வரி விதிப்பு அலுவலகங்களில் பொது மக்களுடன் நேரடித் தொடர்பு அதிகம் உள்ளது என்பதால் அனைத்து வரிவிதிப்பு அலுவலகங்களுக்கும் நாற்காலிகள் உடனடித் தேவையாக உள்ளன. இதுபோன்றே அரசு கூடுதல் வழக்கறிஞர் (வரிகள்) அலுவலகத்தில் 8,000-க்கும் மேற்பட்ட வரி வழக்குகள் தொடர்பான முக்கிய ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க இரும்பு அலமாரிகள் தேவையாக உள்ளன. மேற்கண்ட தேவைகளைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டில் இதற்காக ரூ. 6 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு

ஒவ்வொரு வரிவிதிப்பு அலுவலகத்திற்கும் 5 நாற்காலிகள் வீதமும், அரசு கூடுதல் வழக்கறிஞர் (வரிகள்) அலுவலகத்திற்கு ஐந்து இரும்பு அலமாரிகளும் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வணிக வரி வருவாய் கணிசமான அளவிலும், திருப்தி அளிக்கும் வகையிலும் உயர்ந்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். வணிகவரித் துறை அலுவலர்களின் உண்மையான உழைப்பினை மதிக்கும் பொருட்டு களப் பணியாற்றும் பணியாளர்களது அடிப்படைத் தேவைகளை ஓரளவிற்காவது அரசு நிறைவேற்றுவது நல்லது எனக் கருதுகிறேன். இதனைக் கருத்திற்கொண்டு சென்னைக்கு மாற்றலாகி வரும் உதவி ஆணையர்களுக்கு குடியிருப்பு வசதி செய்யும்பொருட்டு குடியிருப்புகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் வீட்டு வாடகை மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கணிசமான அளவில் குடியிருப்புகள் கட்டியிருந்தாலும் சென்னைக்கு மாற்றலாகி வரும் அனைத்து அலுவலர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவில் கட்டிடங்கள் இல்லை. எனவே, முதற்கட்டமாக திருவான்மியூரில் வணிகவரித் துறைக்குச் சொந்தமாக உள்ள இடத்தில் 14 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடிக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் கட்ட ஆகும் செலவினை அரசு நேரடியாக ஏற்காமல் இப்பணியினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடு கட்ட ஹட்கோ அல்லது நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று இச்செலவினை ஈடு செய்யும். இதற்காக பெறப்படும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மட்டுமே அரசு வீட்டு வசதி வாரியத்திற்கு நிதி வழங்க நேரிடும். தற்போதுள்ள நடைமுறைப்படி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் வாடகைக்கு குடியிருக்கும் அலுவலர்கள் தங்களது சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை வாடகையாகச் செலுத்தி வருகிறார்கள். அதைப்போன்றே, தற்போது கட்டப்பட உத்தேசிக்கபட்டுள்ள குடியிருப்புகளில் தங்கும் உதவி ஆணையர்களும் குறிப்பிட்ட வாடகையைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வீட்டு வசதி வாரியம் திருப்பிச் செலுத்தும் கடன் தொகையில் வாடகை மூலம் வசூலாகும் தொகை போக மீதியை அரசாங்கம் மான்யமாக அளித்திடும். இதனால் கட்டுமானப் பணிக்கு அரசாங்கத்தின் செலவு கணிசமாகக் குறைக்கப்படும்.



பிற்பகல் 12-55

வணிகவரித்துறையை நவீனப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள ஒரு சில நடவடிக்கைகளை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தற்போது கணக்குகள் பராமரிப்பதில் கணிப் பொறி இயந்திரங்கள் (கம்ப்யூட்டர்கள்) பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக வணிக வரித்துறை அலுவலர்கள், கணிப் பொறி இயந்திரங்களின் பயன்பற்றி அதிகம் தெரிந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு வணிகவரித் துறை பயிற்சி நிலையத்தில் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ. 5 இலட்சம் செலவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதவி ஆணையர்கள், வணிகவரி அலுவலர்கள், துணை வணிகவரி அலுவலர்கள் ஆகியோருக்கு கணிப்பொறி மூலம் கணக்குகளைப் பராமரிப்பது சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்படும்.

அண்ணா மேலாண்மைக் கழகத்தில் உயர்நிலை அலுவலர்களுக்கு ஏற்கனவே ஒரு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது வணிகவரித் துறையில் இயங்கி வரும் கணிப் பொறி மையம் மேலும் பயன் உள்ள வகையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மையம் வசூலிக்கப்படும் வரித்தொகை, அதிக அளவில் வரி செலுத்துவோர் பற்றிய விபரங்கள் மற்றும் வரிக்குட்படும் பலவகையான பொருட்கள் பற்றிய விவரங்களை உடனுக்குடன் அளிப்பதின் மூலம் வரி வசூலின் நிலைமை பற்றி விரைவாக ஆய்வு செய்து, தக்க முடிவுகள் எடுக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும், சோதனைச் சாவடிகளிலிருந்து எடுக்கப்படும் சில ஆவணங்களை உடனடியாக கணிப்பொறி மூலம் பாகுபாடு செய்து தேவையான விவரங்களைச் சேகரித்து சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலர்களுக்கு அனுப்பி, மாநிலத்தில் பொருட்களின் மீது செலுத்தப்பட வேண்டிய வரி முறையாக செலுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க முடிகிறது.

மேலும், செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் சிறப்பாகப் பணியாற்றிட சோதனைச் சாவடிகள், சுற்றுப்படை ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள கம்பியில்லாத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, சென்னையிலுள்ள செயலாக்கப் பிரிவை நவீனப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தற்போது 301 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் 102 வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும், 198 வட்டங்கள் வணிகவரி

அலுவலர் தலைமையிலும் ஏனைய 6 வட்டங்கள் உதவி ஆணையர் தலைமையிலும் இயங்குகின்றன. வரிவிதிப்புத் தரத்தை உயர்த்தி, வணிகர்களின் கணக்குகளை நுணுக்கமாக ஆய்வு செய்து, வருவாய் இழப்பு ஏற்படாதவாறு செயல்படுவது மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. இதன் பொருட்டு, அதிக வரிப் பளுவுள்ள 15 வரி விதிப்பு வட்டங்களைப் பிரித்து, கூடுதலாக 11 வரி விதிப்பு வட்டங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

சென்னையில் உள்ள 4 மத்திய வரி விதிப்பு வட்டங்களிலும், கோவையில் உள்ள 2 மத்திய வரி விதிப்பு வட்டங்களிலும், கூடுதலாக ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு துணை வணிக வரி அலுவலர் பணியிடம் ஏற்படுத்தி, பணித்தரத்தை உயர்த்தி, குறிப்பாக பெரிய வர்த்தக நிறுவனங்களின் கணக்குகளை மிகுந்த கவனத்துடன் பார்வையிட்டு, வசூலை துரிதப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது

இப்புதிய திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடப்பாண்டில், ரூ. 57.99 இலட்சம் தொடர் செலவிற்கும், ரூ. 18.25 இலட்சம் தொடராச் செலவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வணிகர் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு, வணிகர்கள் நலனுக்காக பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என எங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளோம். இவ்வாரியத்தின் தலைவராக முதலமைச்சர் செயல்படுவார். மற்ற அலுவலரல்லாத உறுப்பினர்கள் 5 நபர்களும், அலுவல் சார்ந்த உறுப்பினர் 6 நபர்களும் உறுப்பினர்களாக இடம் பெறுவார்கள். ஏற்கனவே அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக விளங்கும் வணிகவரித்துறைச் செயலர், நிதிச் செயலர், தொழில்துறைச் செயலர், வேளாண்மைத்துறை செயலர், வணிகவரி ஆணையர் மற்றும் இணை வணிகவரி ஆணையர் நிலையிலுள்ள உறுப்பினர்-செயலர், உறுப்பினராக செயல்படுவார்கள்.

இந்நலவாரியம் முன்பே நிறுவப்பட்டு ஒரு சில திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தும், அவைகள் சிறிதளவேனும் செயல்படுத்தப்படவில்லை. எந்த வணிகரும் உதவி அடையவும் இல்லை. இந்நிலையை மாற்றி, பயனுள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, வறிய நிலையிலுள்ள வணிகர்கள் பலருக்கு நலம் கிட்டும் வகையில், இவ்வாரியம் செயல்படுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.



பிற்பகல் 1-00

இந்நல வாரியத்தில் தற்போது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஒரு ஆண்டு பதிவு பெற்று வணிகம் செய்து வரும் வணிகர்கள் அனைவரும் தலா ரூ. 25 செலுத்தி உறுப்பினர் ஆகலாம். அவர்கள் தொடர்ந்து நபருக்கு ரூ. 25-ஐ ஒவ்வொரு ஆண்டும் செலுத்தி தங்களுடைய உறுப்பினர் தகுதியை புதுப்பித்துக் கொள்ளலாம். அதற்குப் பதிலாக ஆயுள் உறுப்பினர் என்ற முறையை மேற்கொண்டு ஆயுள் உறுப்பினர்களுக்கு ரூ. 150 என நிர்ணயித்து ஆயுள் உறுப்பினர்களைச் சேர்க்கலாம்.

இவ்வாரியத்தில் 1990-91-ல் உறுப்பினர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கை 1,009 நபர்கள் மட்டுமே. இந்த நிதியாண்டில் (1991-92-ல்) இது 1,900 நபர்களாக உயர்ந்துள்ளது. மீண்டும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவில் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆண்டு வருவாய் ரூ 15,000-க்கு மேற்படாமல் பெறுகின்ற வணிகர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டாலோ, அல்லது அவர்கள் இறக்க நேரிட்டாலோ, அவர்களுடைய குழந்தைகள் பாலிடெக்னிக், கலைக் கல்லூரி அல்லது அதற்கு சமமான முதுநிலை பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு, ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு ரூ 1,000-லிருந்து ரூ. 1,500 வரை உதவித்தொகை வழங்குவது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

வணிகர் குடும்பத்தில் பொருளீட்டும் நபர் இறந்தால், இறந்த உறுப்பினர் ஆண்டு வருமானம் ரூ. 15,000-க்கு மேற்படாமல் உள்ள உறுப்பினர் குடும்பத்திற்கு ஒரு முறை உதவித்தொகையாக ரூ. 5,000 வழங்கலாம் என்ற கருத்துருவும், ஆண்டு வருவாய் ரூ. 24,000-க்கு மிகைப்படாமல் இருந்தால், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, இருதய அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கு அரசு அனுமதித்துள்ள மருத்துவமனைகளில் ரூ. ரூ. 10,000 வரை வழங்கலாம் என்ற கருத்துருவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டங்கள் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படும். இதற்கு ஏறத்தாழ ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்படும்.

கொள்கை பற்றி விவாதிக்க வேண்டுமென்ற வெட்டுத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. குமாரதாஸ் மற்றும் திரு. ஆண்டி அம்பலம்

ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். அவைமுன் வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவான தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது விற்பனை வரி மூலம் அரசுக்கு, ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்ற ஒரு வெட்டுத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் கொடுத்திருக்கிறார். இந்த வெட்டுத் தீர்மானத்தில் பொது விற்பனை வரி மூலம் அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று மட்டும் கேட்கப்பட்டுள்ளது. அது எந்த ஆண்டைக் குறிக்கிறது என்று தெரியவில்லை. மேலும் பொது விற்பனை வரி என்பது தமிழ்நாடு பொது விற்பனை வரியை மட்டுமே குறிக்கும். ஆதலால், பொது விற்பனை வரியோடு மற்ற வணிகவரிச் சட்டங்கள் மூலம் அரசுக்கு சென்ற ஆண்டு, அதாவது 1990-91 ஆம் ஆண்டு கிடைத்துள்ள வருவாய் மற்றும் வருவாய் அதிகரிப்பு சதவீதம் ஆகியவை பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

1990-91 ஆம் ஆண்டில் பொது விற்பனை வரி மூலம் ரூ. 1,779.03 கோடியும், மத்திய விற்பனை வரி மூலம் ரூ. 276.07 கோடியும், கேளிக்கை வரி மூலம் ரூ. 63.96 கோடியும், உள்ளாட்சி மன்றங்கள் நிதி வரி மூலம் ரூ. 5.66 கோடியும், குதிரைப் பந்தய வரி மூலம் ரூ. 5.66 கோடியும், ஓட்டல்கள்— தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரி மூலம் ரூ. 17.04 கோடியும், விளம்பர வரி மூலம் ரூ. 0.07 கோடியும், மற்றும் மோட்டார் வாகன நுழைவு வரி மூலம் ரூ. 19.67 கோடியும் ஆக மொத்தம் ரூ. 2,167.16 கோடி வருவாய் கிடைத்தது. இந்த வருவாய் இதற்கு முந்தைய ஆண்டைவிட 23.3 சதவீதம் அதிகமாகும்.

வணிகர்கள், நிறுவனங்கள் மற்றும் வணிக இல்லங்கள் போன்றவற்றிற்கெதிராக வணிக வரி அதிகாரிகளிடம் முடிவுறாமல் இருக்கும் ஏராளமான வழக்குகள் பற்றியும் அவற்றைத் தீர்வு காண்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வெட்டுத் தீர்மானம் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுந்தரதாஸ் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

வணிகர்கள், நிறுவனங்கள் மற்றும் வணிக இல்லங்கள் போன்றவற்றிற்கெதிராக வணிகவரித் துறை அதிகாரிகள் முன்னிலையில் வழக்குகள் ஏதும் தொடுக்கப்படுவதில்லை



வரிவிதிப்பு ஆணைகளுக்கு மேல், வணிகர்கள் தான், மேல் முறையீடு, சீராய்வு மனு, வரி வழக்குகள் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட மேல் முறையீடு உதவி ஆணையர், துணை ஆணையர், மேல் முறையீட்டு நடுவர் மன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் முன்னிலையில் தாக்கல் செய்கின்றனர். நீதிமன்றங்கள் மற்றும் மேல்முறையீடு மன்றங்கள் முன்னிலையில் 1— 1— 1991 அன்று 28,189 வழக்குகள் நிலுவையாக இருந்தன. அம்மாதிரியான வழக்குகளில் சட்டத்திற்கு வெளியில் எந்த வகையிலும் தீர்வு செய்து கொள்ள வகையில்லை. மேல் முறையீடு உதவி ஆணையர்கள் வழக்குகளை விரைவில் முடிக்க மாதாந்திர குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் பல்வேறு வழக்குகளை விசாரிக்க வேண்டியுள்ளதால் வணிக வரி வழக்குகளை மட்டுமே முடிக்க இயலாது. அவற்றை விரைவில் முடிக்க வணிகவரி வழக்குகளை விசாரிக்க மட்டுமே '' சிறப்பு விற்பனை வரி நடுவர் மன்றம் '' அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

பிற்பகல் 1-05

வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக கடைக்குக் கடை சென்று புலனாய்வு மேற்கொள்ளப்படுவதன் அவசியம் பற்றிய வெட்டுத் தீர்மானம் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராஜாராமன் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். வணிகவரித்துறையில் பதிவு பெற்றுள்ள மொத்த வணிகர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிப்புக்குட்பட்டோர் 1,35,417 ஆவர். வரிவிதிப்புக்குட்படாதவர் 1,65,081 ஆவர். ஆக மொத்தம் 3,00,498 வணிகர்கள் வணிக வரித் துறையில் பதிவு பெற்றுள்ளனர்.

வரி விதிப்புக்குட்பட்ட வணிகர்கள் 74,328 பேர் ஆண்டுக்கு 3 இலட்சம் ரூபாய்க்குக் குறைந்த விற்பனை அளவு கொண்டோர் ஆவர். ஆண்டுக்கு 3 இலட்சம் ரூபாய்க்குக் குறைந்த விற்பனையளவு கொண்ட வணிகர்கள் சிறு வணிகர்களாகக் கருதப்படுவதால் சாதாரணமாக அவர்களுடைய வியாபார இடங்கள் தணிக்கை செய்யப்படுவதில்லை. எனினும், அவர்களைப் பற்றிப் புகார்களும் தெளிவான குற்றச்சாட்டுகளும் வருமானால் முறையான புலன் விசாரணைக்குப் பிறகு அவசியமான இனங்களில் மட்டும் அவர்களுடைய வியாபார மற்றும் தொழில் இடங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன

வணிக வரித்துறையில் பதிவு பெற்ற வணிகர்கள் கணிசமாக இருப்பதால் ஒவ்வோர் ஆண்டும் எல்லாக் கடைக்குச் சென்று தணிக்கை செய்வது சாத்தியமானதல்ல. ஆனால்,

ஆண்டுக்கு 3 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட விற்பனையளவு கொண்ட வணிகர்கள் குறித்து புகார்கள் மற்றும் குற்றச் சாட்டுகள் வந்தாலும், வராவிட்டாலும் ஆண்டுக்கு ஒரு முறையாவது தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. வணிகர்களுடைய வணிக நடவடிக்கை சந்தேகத்திற்கு இடமளிக்கும் போதோ அல்லது விற்பனையளவில் அசாதாரணமான வீழ்ச்சி ஏற்படும்போதோ தணிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. மீண்டும் மீண்டும் தணிக்கை செய்வதை, துறை தங்களுக்கு தொல்லை கொடுப்பதாக வணிகர்கள் கருதுவதால் ஒன்றுக்கு மேற்பட்ட தணிக்கைகள் சாதாரணமாக செய்வதில்லை. ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வணிகம் செய்யும் இடங்களில் புதிய வணிகர்கள் பற்றிய விவரங்கள் சரிபார்க்கப்படுகின்றன.

வரி செலுத்துவதை தவிர்க்க கள்ளச்சந்தையில் திரையரங்க நுழைவுச் சீட்டுகள் விற்கப்படுவதைத் தடுப்பதற்குக் கடுமையான நடவடிக்கை எடுப்பது பற்றிய ஒரு வெட்டுத் தீர்மானத்தினை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராஜாராமன் அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள்.

கள்ளச்சந்தையில் திரையரங்க நுழைவுச் சீட்டுகள் விற்கப்படுவது தடுக்கப்பட வேண்டும். அதிக விலைக்கு, திரையரங்கின் உள்ளேயோ அல்லது வெளியிலோ விற்கப்படும் நுழைவுச் சீட்டுகளில நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை கேளிக்கை வரியை உள்ளடக்கியதாகும். இந்த நுழைவுச் சீட்டுகள் எவ்வகையில் விற்கப்பட்டாலும் அரசுக்கு சேர வேண்டிய வரி வசூலிக்கப்பட்டு விடும். மேலும் இணக்க முறை (காம்ப் பவுண்டிங் சிஸ்டம்)-யில் கேளிக்கை வரி செலுத்தும் திரையரங்குகளைப் பொறுத்தவரையில் கள்ளச்சந்தையில் நுழைவுச் சீட்டு விற்கப்பட்டாலும் அரசுக்கு வரி இழப்பு ஏற்படாது. ஆனால், கள்ள நுழைவுச் சீட்டுகள் அச்சிட்டு விற்பனை செய்யப்படுமானால், கட்டாயம் அரசுக்கு வரி இழப்பு ஏற்படும். இம்மாதிரியான வரி ஏய்ப்புகளை செய்யும் திரையரங்குகள் வணிக வரித்துறையால் கண்டுபிடிக்கப்பட்டு உரிய சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குற்றங்களின் தன்மைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கள்ளச்சந்தையில் நுழைவுச் சீட்டுகள் விற்கப்படுவது காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இம்மாதிரியான கள்ளச்சந்தை விற்பனைகளை ஒழிக்க பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகர்களே விற்பனை வரி செலுத்தும் வகையில் சீரமைப்பு செய்வது பற்றிய ஒரு வெட்டுத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்



கொண்டு வந்துள்ளார். ஆண்டுக்கு விற்பனை அளவு 5 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக 'உள்ள வணிகர்களுக்கான முடிவுற்றதாகக் கருதப்படும் வரி விதிப்பு—டீம்டு அசெஸ் மென்ட் '—முறை தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தில் 1—4—1990 ஆம் நாள் முதல் சேர்க்கப்பட்டது. இந்த முறைக்கு பதிலாக மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ளவாறு தன்மதிப்பீட்டு வரி விதிப்பு முறை—' செல்ஃப் அசெஸ்மென்ட்டைப் பற்றி என்னுடைய வணிக வரித் துறை பதிலுரையில் விரிவாகக் கூறியுள்ளேன். இதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்பட்டு புதிய முறை அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1-10 மணி

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தெய்வநாயகம், திரு. உ. பலராமன், திரு. ராமசுப்பு ஆகியோர்கள் பேசுகின்ற போது எடிபிள் ஆயில்— சமையல் எண்ணெய் மீதான வரியை முற்றிலும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இப்போது சமையல் எண்ணெய் மூலம் மாநிலத்திற்கு ஆண்டுக்கு 14 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது. எண்ணெய் வித்துக்கள் மீது ஆண்டுக்கு 7 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைக்கிறது. எனவே இந்த வருமானத்தை அரசால் இழக்க இயலாது. இன்றைக்குள்ள நிதிநிலை நெருக்கடியில் இந்த வருமானத்தை இழக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சமையல் எண்ணெய் மீது விதிக்கப்படும் வரி 4 சதவிகிதம் ஆகும். எனவே ஒரு வகை சமையல் எண்ணெய் ஒரு கிலோ 30 ரூபாய் என்று விற்கப்பட்டாலும் கூட 4 சதவிகிதம் வரி என்றால், வரி ஒரு ரூபாய் இருபது பைசா என்ற கணக்கில் தான் விதிக்கப்படுகிறது எனவே இதனால் சமையல் எண்ணெயின் விலை இறங்கப் போவதில்லை. வணிகர் தான் இதனால் லாபம் அடைவார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் எண்ணெய் வித்துக்கள் மீது இப்போது விதிக்கப் படும் வரி 3 சதவிகிதம் ஆகும். சமையல் எண்ணெய் மீது விதிக்கப்படும் வரி 4 சதவிகிதம் தான். இண்டர் ஸ்டேட் சேல்ஸ் என்றால் விதிக்கப்படும் வரி 1 சதவிகிதம். எப்படிப் பார்த்தாலும் இந்த வரி விதிப்பு— ரேட்—அளவு மிகவும் குறைவானதே. ஏற்கனவே இத்துறையில் ஈடுபட்டுள்ள வணிகர்கள் என்னை அணுகி இண்டர் ஸ்டேட் சேல்ஸ் மீது விதிக்கப்படும் வரியை குறைந்த அளவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கிணங்க 1 சதவிகிதம் என்று தான் வரி விதிக்கப்படுகிறது. அப்படி இருப்பினும் இந்த வணிகர்கள் சரியான முறையில் வரியைச் செலுத்துவது இல்லை. டாக்ஸ் எவேஷன் என்பது பெருமளவில நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சமையல் எண்ணெய் என்றாலே, it is a commodity which is prone to tax evasion என்று இந்த வணிக வரித் துறையில் அதற்கு ஒரு பெயரே இடப்பட்டு இருக்கிறது. இதனால் ஆண்டு தோறும் அரசுக்கு வரவேண்டிய வருமானம் பெரிய அளவில் வராமல் போய் விடுகிறது.

சில விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமையல் எண்ணெய் மீது ஆந்திரத்தில் விதிக்கப்படும் வரி 6 சதவிகிதம். கர்நாடகத்தில் 4 சதவிகிதம். பாண்டிச்சேரியில் 2 சதவிகிதம். கேரளத்தில் 6 சதவிகிதம். தமிழ்நாட்டில் 4 சதவிகிதம். இதையெல்லாம் பார்க்கும்போது இங்கே தமிழ்நாட டில் விதிக்கப்படும் வரியின் அளவு அதிகமானது அல்ல என்பதை நீங்களே உணர்வீர்கள்.

எண்ணெய் வித்துக்கள் மீதான வரிகள் வருமாறு: ஆந்திரத்தில் 4 சதவிகிதம். கர்நாடகத்தில் 4 சதவிகிதம். தமிழ்நாட்டிலும் 4 சதவிகிதம். எனவே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சமையல் எண்ணெய் மீதும், எண்ணெய் வித்துக்கள் மீதும் இங்கே விதிக்கப்படும் வரி அதிகமானது அல்ல என்பதை நீங்கள் புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் பேசுகின்றபோது மாநில அரசுக்கு அதிக வருவாயை ஈட்டும் ஒரு வழியாக இண்டியன் ஏர்லைன்ஸ் ஏர் டிக்கெட்டுகள் மீதும், ஏர் இண்டியா டிக்கெட்டுகள் மீதும் ஏன் வரியை விதிக்கக் கூடாது என்ற ஒரு யோசனையைக் கூறினார். ஏர்லைன்ஸ் டிக்கெட்டுகள் அது இண்டியன் ஏர்லைன்ஸ் டிக்கெட்டாக இருந்தாலும், ஏர் இண்டியா டிக்கெட்டாக இருந்தாலும் 'கூட்ஸ்' என்ற டெஃபனிஷனின் கீழ் வராது. எனவே இந்த டிக்கெட்டுகள் மீது சட்டப்படி வரி விதிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு.)

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் ரப்பர் மீதான விற்பனை வரி பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் ரப்பரைப் பொறுத்தவரை, கடைசி கட்ட கொள்முதலில்தான் 5 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரை நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி ரப்பர் பயிரிடுவோர் ஏறக்குறைய 5,000 பேர்



என கணக்கிடப்பட்டுள்ளது. ஏறக்குறைய ரூபாய் 40 கோடி மதிப்புடைய ரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது. பெரிய ரப்பர் தோட்ட உரிமையாளர்கள் ரப்பரை உற்பத்தி செய்து விற்பனைக்காக மாநிலத்திற்கு வெளியே அனுப்பி விடுகிறார்கள். இதன் காரணமாக நமது மாநிலத்திற்கு வருவாய் கிடைப்பது இல்லை. கேரள மாநிலத்திலே டீ, காபி, ஏலக்காய் மற்றும் அறுக்கப்பட்ட மரம் போன்ற வணிகப் பொருட்களைப் போன்று ரப்பரும் கருதப்பட்டு வரி விதிக்கப்படுகிறது. இதுவரை நம் மாநிலத்திலே டீ ஒன்று தான் வணிகப் பொருளாக கருதப்பட்டு வந்தது தற்போது தான் ரப்பரை சேர்த்து உள்ளோம். புதிய சட்டத் திருத்தத்தின் மூலம் 8 சாதாரண ஏக்கர் ரப்பர் தோட்டம் வைத்து இருக்கும் விவசாயிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதால் பெரிய தோட்ட உரிமையாளர்கள் மட்டுமே வரி செலுத்த வேண்டி வரும். எனவே இந்த வரி விதிப்பினால் எந்த சிறிய தோட்ட அதிபரும் பாதிக்கப்படுவது இல்லை. வரி விதிப்புக்கு உள்ளாகும் தோட்ட உரிமையாளர்களும் 1,070 மட்டுமே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 1,070 பேரும் எல்லாம் பெரிய முதலாளிகள். பெரிய தோட்ட உரிமையாளர்கள். எனவே அவர்கள் நியாயமாக அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்துவதில் எந்தத் தவறும் இல்லை என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 1-15

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசுகின்றபோது ஆட்டோமொபைல்ஸ் சேல்ஸ் மீது விதிக்கப்படும் என்ட்ரி டாக்ஸ் பற்றி குறிப்பிட்டார்கள். பாண்டிச்சேரியில் கார்கள் விற்பனையின் மீது விதிக்கப்படும் வரி 3 சதவிகிதம். இங்கே கார்கள் விற்பனையின் மீது விதிக்கப்படும் வரி 5 சதவிகிதம். எனவே 1½ இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு காரின் மீது பாண்டிச்சேரியில் கட்ட வேண்டிய விற்பனை வரி 4,500 ரூபாய். ஆனால் அதே காருக்காக தமிழ்நாட்டில் கட்ட வேண்டிய விற்பனை வரி 7,500 ரூபாய். அதனால் நிறைய பேர் பாண்டிச்சேரிக்கு சென்று அங்கே சேல்ஸ் டாக்ஸ் கட்டி, அங்கே காரை வாங்கி இங்கே தமிழ்நாட்டுக்கு சென்னைக்குக் கொண்டு வருகிறார்கள். பாண்டிச்சேரியிலே என்ட்ரி டாக்ஸ் இல்லை. என்ட்ரி டாக்ஸ் எதற்காக இப்போது போட்டு இருக்கிறோம் என்றால், தம்முடைய மாநிலத்திலே இங்கேயே வண்டிகளை வாங்க வேண்டும்: அதற்கான, உரிய வரி இந்த மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான். இந்த என்ட்ரி டாக்ஸ் ஆட்டோமொபைல்ஸ் சேல்ஸ் மீது மட்டும் தான் விதிக்கப்படுகிறது. அரசினுடைய நோக்கம் காரினுடைய

நிலையை இதனால் உயர்த்த வேண்டும் என்பது அல்ல. ஆனால் இந்த கார் விற்பனை செய்கின்ற டீலர்கள் இந்த மாநிலத்திற்குள்ளே இந்த கார்களை விற்க வேண்டும். அப்படி அவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம் ஆகும். எனவே, இங்கேயே வாழ்கின்றவர்கள், இங்கேயே காரை பயன்படுத்துகின்றவர்கள் இங்கேயே வாணிபமும் செய்பவர்கள் இங்கேயே கார்களை விற்க வேண்டும்; அதற்கு நாம் வழிவகை செய்யவேண்டும் என்பது தான் அரசின் நோக்கம் ஆகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக சில பொருட்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, சில சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. 30 ஆண்டு காலமாக இந்த முறையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று கூறினார்கள். 1959-லிருந்து இதுவரை வணிக வரிச் சட்டத்தில் சில திருத்தங்கள் மட்டும் அவ்வப்போது கொண்டு வரப்பட்டுள்ளன.. ஆனால் இந்த சட்டத்தை முழுமையாக ஆய்ந்து உரிய, முழுமையான சட்டத் திருத்தங்கள் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள் கூறியுள்ளார். இந்த சட்டத்தை ஆய்ந்து உரிய திருத்தங்கள் கொண்டு வர அரசு உயர்நிலைக் குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் கன்சைன்மெண்ட் டாக்ஸ் என்பது என்ன ஆயிற்று, இன்று என்ன நிலையில் உள்ளது என்று அறிய விரும்பினார். வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படும் பொருள்கள் பிரான்ச் டிரான்ஸ்பர் மற்றும் கன்சைன்மெண்ட் சேல்ஸ் என்ற பெயரில் வரி ஏய்ப்பு ஏற்படுவதைத் தவிர்க்க மாநில அரசுகள் வற்புறுத்தியதன் பேரில் பிரான்ச் டிரான்ஸ்பரையும் வரி விதிப்புக்கு உட்படுத்தி '' கன்சைன்மெண்ட் டாக்ஸ் ஆக்ட் '' என்ற ஒரு சட்டம் கொண்டுவர மத்திய அரசு தெரிவித்து உள்ளது. ஆனால் இது சம்பந்தமான மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் உள்ளது. விரைவில் இந்த மசோதாவை நிறைவேற்ற நமது அரசு வற்புறுத்தி வருகிறது. '' கன்சைன்மென்ட் டாக்ஸ் ஆக்ட் '' கொண்டுவரப்பட்டால் நமது மாநில அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100 கோடியிலிருந்து ரூபாய் 120 கோடி வரையில் வருவாய் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பிற்பகல் 1-20

இந்த கன்சைன்மெண்ட் டாக்ஸ் என்பது நம் மாநிலத்திற்கு மிகவும் அவசியமான ஒன்று. இந்த கன்சைன்மெண்ட் டாக்ஸ் விதிக்கப்படாததால் பல கோடிக்கணக்கில் வரி இழப்பு இந்த அரசுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். இங்கே ஆட்டோமொபைல்ஸ் கட்டுகின்ற ஒரு நிறுவனம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் இங்கே அந்த வாகனங்களை, அவர்கள் கட்டுகின்ற வாகனங்களை இங்கே விற்றால் அதிகப்படியான வரி, விற்பனை வரி கட்டவேண்டி வரும். அதனால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில், பல்வேறு நகரங்களில் அவர்களுக்கு பிரான்ச் ஆபீஸ்கள் இருக்கின்றன. அங்கிருந்து ஆர்டர்கள் பெறப்படுகின்றன. டீலர் பெயரைக் குறிப்பிட்டு, இன்வாய்ஸ்-இல் குறித்து இருக்கிறார்கள். இந்த மாடல் வண்டி வேண்டும்; இந்த சேஸிஸ் நம்பர் வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். அதற்கேற்ப இங்கே ஆர்டர்கள் பெறப்பட்டு வாகனங்கள் தயாரிக்கப்படுகின்றன. It is actually a sale. ஆனால் அவர்கள் எப்படி காட்டுகிறார்கள் கணக்கில் என்றால் இங்கிருந்து அந்த வண்டிகள் வேறு ஸ்டேட்டுக்கு அனுப்பும்போது பிரான்ச் டிரான்ஸ்பர் என்று காட்டுகிறார்கள். It is only a consignment என்று சொல்லுகிறார்கள். பூனாவில் ஒரு பிரான்ச் ஆபீஸ் இருக்கிறது என்றால், ஆயிரம் வண்டிகள் இங்கிருந்து பூனா ஆபீசுக்கு செல்கின்றன. அங்கே அவர்கள் விற்பனை செய்கிறார்கள். அந்த மாநிலத்திற்கு, மஹாராஸ்டிரா மாநிலத்திற்கு அவர்கள் விற்பனை வரி செலுத்துகிறார்கள். ஆனால் இங்கேயே அந்த நிறுவனத்தை வைத்துக்கொண்டு, தொழிற்சாலையை வைத்துக்கொண்டு, இங்கேயே அவர்கள் தொழிலை நடத்திக்கொண்டு, இந்த மாநிலத்திற்கு நியாயமாக செலுத்த வேண்டிய வரியை அவர்கள் செலுத்த மறுக்கிறார்கள். இப்படி பல வகைகளில், நியாயமாக மாநில அரசுக்குச் சேர வேண்டிய டாக்ஸ் ஏய்க்கப்படுவதால், '' கன்சைன்மெண்ட் டாக்ஸ் ''-ஐ எப்படியும் அறிமுகப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தெய்வநாயகம் அவர்களும் பேசுகின்றபோது, செக்போஸ்டுகளில் சில தவறுகள் நடக்கின்றன, அவற்றை சீரமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இப்போதுகூட உள்ள செக்போஸ்ட்டுகள் 24 மணி நேரமும் பணியாற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. அங்கே பணிபுரியும் அலுவலர்கள் By shifts—Round the clock— வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள். இருப்பினும் எல்லா லாரிகளும், வாகனங்களும் செக்போஸ்ட் வழியாகச் செல்லுவது இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம். இதற்காக, Rowing squads—

Mobile Squads இருக்கின்றன. அவர்கள் முடிந்தவரை இந்த செக் போஸ்ட்டுகளுக்கு வராமல் ஏய்க்கின்ற லாரிகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள் குறிப்பிட்டது தொடர்பாக தற்போது வெளி மாநிலங்களிலிருந்து வரும் சரக்கு வாகனங்களை சோதனை செய்ய பெரிய அளவிலான சோதனைச் சாவடிகளையும்குறுக்கு வழிகளில்வரும் வாகனங்களைத் தணிக்கை. செய்ய சிறிய சோதனைச் சாவடிகளையும் அரசு அமைத்துஉள்ளது. பெரிய சோதனைச் சாவடிகள் வணிக வரி அலுவலர், கமர்சியல் டாக்ஸ் ஆபீஸர் நிலையில் உள்ள அலுவலரின் கீழ் நேரடிப் பார்வையில் இயங்குகின்றன. இவர்களது பணிகளை மேலதிகாரிகள் கண்காணிக்கின்றார்கள். ஒருசில இடங்களில் குறைபாடுகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அவற்றைத் தடுத்து, தவிர்க்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சோதனைச் சாவடிகளுக்கு அருகே வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி செய்துதர வேண்டுமென்றும் குறிப்பிட்டார். இக்கருத்தைப் பரிசீலனை செய்து தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி ச. இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில், இந்த மாநிலத்தில் விதிக்கப்படும் வரியின் விகிதாச்சாரம் மிகவும் அதிகமாக இருக்கிறது; இதைக் குறைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் தமிழகத்தில் Average rate of Sales Tax என்பது வெறும் 8 சதவிகிதம் தான். எனவே, இது அதிகம் என்று நாங்கள் கருதவில்லை. வணிகவரித் துறைக்கு உட்பட்ட விற்பனை வரிகளின் மூலமாக அரசிற்கு மிகவும் கணிசமான அளவு வருவாய் கிடைக்கின்றது. விற்பனை வரிகள்தான் அரசின் மிகப் பெரிய வருவாய் ஆதாரமாகும். இதன் வருவாயை நம்பித்தான் அரசின் பல்வேறு நலப் பணித் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன; செயல்படுத்தப்படுகின்றன. நமது தற்போதைய நிதிநிலை நெருக்கடியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். எனினும் சாதாரண ஏழை எளிய மக்களின் நல்வாழ்க்கையில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள எங்கள் அரசு அத்தகையோரின் வரிச் சுமையை அதிகரிக்கச் சிறிதுகூட இடம் அளிக்காது என்பதை எங்கள் நிதிநிலை அறிக்கையைப் படித்த அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் சட்டப்படி வரி கட்டுவோர் மதிக்கப்படவேண்டும்; வரி கட்டாமல் ஏமாற்றுவோர் தண்டிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படை வரி விதிப்புக் கொள்கையை எங்களது தேர்தல் அறிக்கையிலேயே தெளிவுபடுத்தியுள்ளோம். அதனையொட்டியே வரி விதிப்புக் கணக்கீடு எளிதாக்கப்படுதல், வரி வசூலிப்பு முறைகள் மாற்றியமைத்தல் போன்றவற்றினை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. வணிகவரித் துறை சீரிய முறையில், சிறப்புடன் செயல்படுகின்றது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.





நமது மாநிலத்தின் மொத்த வருவாயில் ஏறத்தாழ 70 சதவீதம் ஈட்டித் தரும் இத்துறை செயல்பாட்டில் தமிழகத்திலேயே முதலிடத்தை வகிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

சென்ற நிதியாண்டில் ரூபாய் 2,167 கோடி வருவாய் ஈட்டித் தந்த இத்துறை இந்த ஆண்டு குறியீடாக ரூபாய் 2,400 கோடியை ஏற்றுள்ளது. திறமையான அலுவலர்களையும், சீரிய தலைமையையும் கொண்ட இத்துறை நிச்சயமாக இந்த ஆண்டு குறியீட்டை எய்துவதோடு மட்டுமல்லாமல் அதிக அளவு வருவாயை அரசிற்கு ஈட்டித் தரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இத்துறையின் ஆணையர்-செயலர் மற்றும் அனைத்து அலுவலர்களையும் இத்தருணத்தில் நான பாராட்டக் கடமைப்பட்டுள்ளோன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், காவல் துறையில் சிறப்பாகப் பணி புரிவோருக்குப் பதக்கம் கொடுப்பதைப் போல், இந்தத் துறையின் அலுவலர்களுக்கும் பதக்கங்கள், பரிசுகள் தரப்பட வேண்டும் என்றார். இங்கே நம்முடைய ஆணையராக—பிரின்சிபல் கமிஷனராக இருப்பவர்—அம்மையார் அவர்களுக்கு எவ்வளவு பதக்கங்கள் கொடுத்தாலும் தகும் என்று இந்த நேரத்தில் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு இயங்குவதற்கு முக்கியத் தேவையான பொருளை ஈட்டித் தரும் பல துறைகளில் முதலிடம் வகிக்கும் மிக முக்கியத்துறையான வணிக வரித் துறையின் மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த தெளிவான, ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்கும், கொண்டுவந்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் பெரும்பாலும் என்னுடைய உரையில் பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். சில கருத்துக்களுக்குப் பதில் கிடைக்கவில்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பேட்டில் உள்ளன. அவைகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முதல்வரவர்கள் இவ்வளவு

சிறப்பான முறையிலே எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும் கரும்பு விவசாயம் ரெக்க வரியே கம்மியாக வருகிறது. ரெக்கவரி 8.5-க்கு 230 ரூபாய்தான் நிர்ணயம் செய்திருக்கின்றோம். அந்தக் கரும்புக்கு ஒரு டன்னுக்கு 70 ரூபாய் வரி என்று போட்டிருக்கிறோம்—சேல்ஸ் டாக்ஸ் என்று இருக்கிறது. ஆகையினாலே அதை 35 ரூபாயாகக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதோடு, மறுபடியும் அதை இப்பொழுது 1 பர்செண்ட் இன்கிரீஸ் பண்ணி விட்டார்கள். இதையும் ரத்து செய்ய முடியுமா என்பதைக் கரும்பு விவசாயிகளின் சார்பிலே கேட்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குப் பதில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வரி விதிப்பினால் விவசாயிகள பாதிக்கப்படுவதில்லை. கரும்பு விவசாயிகள் இதுவரை அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் கட்டி வந்தார்கள். இந்தமுறை அறிவிக்கப்பட்ட பட்ஜெட்டில் கரும்பு விவசாயிகளுக்கு அந்த வரியே ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு விற்பனை வரி விதிக்கப்படுகிறது என்றால், அந்த வரியைச் செலுத்துவோர் ஷுகர் மில்ஸ் ஓனர்கள் தான். விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுவதில்லை. எனவே, எனினும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரியபடி இதனைப் பரிவுடன் பரிசீலிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற புரட்சித் தலைவரினுடைய ஆட்சியின் காலத்திலே, சினிமாக் கொட்டகைகளுக்கு ஆங்காங்கு இருக்கின்ற வாரத்தினுடைய கலெக்ஷனுடைய அடிப்படையிலே பர்சென்டேஜ் என்ற வரி போடப்பட்டது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே சுற்றுபட்டிலே இருக்கக் கூடிய ஐந்து கிலோமீட்டருக்குள்ள தியேட்டர்களுக்கு வரி 40 பர்செண்ட் கொடுக்க வேண்டுமென்று, சராசரியாக அமைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் புரட்சித் தலைவர் காலத்திலே இருந்தது போன்று, டவுனிலுள்ள தியேட்டர்களுக்கு, புதிதாகப் படங்கள் எடுக்கப்படுகின்ற தியேட்டர்களுக்கு மட்டும் அந்த 40 சதவீத வரி என்பது விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன்னனுமதியோடு, அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 'என்ட்ரி டாக்ஸ்' பற்றி கேள்வி கேட்டதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். குறிப்பாக, வாகனங்களுக்கு, கார்களுக்கு நம்முடைய மாநிலத்திலே விதிப்பதைவிட, பாண்டிச்சேரியிலே குறைவாக விற்பனை வரி விதிக்கப்படுகிறது. அங்கே 3 சதவிகிதம், இங்கே 5 சதவிகிதம். எனவே, 'என்ட்ரி டாக்ஸ்' அதைச் சரிக்கட்டிவிடும் என்று சொன்னார்கள். ஆனால், நான் அறிந்தவரையில், பாண்டிச்சேரியிலே வாகனங்களை வாங்கியவர்கள், இங்கே 'என்ட்ரி டாக்ஸ்' கட்டாமல், அதை ஏமாற்றுவதற்கு கேரளாவிற்கு வண்டிகளைக் கொண்டு போய்விட்டு, பிறகு நம்முடைய ஊருக்கு வருகிறார்கள். ஆக, இரண்டு வகையிலே நமக்கு இழப்பு வருகிறது. ஒன்று, விற்பனை வரி வருவதில்லை; இரண்டு 'என்ட்ரி டாக்ஸ்'-ம் வருவதில்லை. ஆக, அதை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒன்று விற்பனை வரியைக் குறைப்பதன் மூலமாக, இங்கேயே வாகனங்கள் விற்பனையாவதற்கு வழி காண வேண்டும். இல்லாவிட்டால், 'என்ட்ரி டாக்ஸ்' ஏமாற்றுவதை நாம் நிறுத்தியாக வேண்டும். அதற்கு ஏதாவது புதிதாக—வரியைக் குறைக்கவோ அல்லது 'என்ட்ரி டாக்ஸ்' ஐ ஏமாற்றுவதற்கு இல்லாமல் வழிவகை காணப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிமுகப்படுத்தி இருக்கிற முறையை, ஒரு Experimental basis-இல், ஒரு 6 மாத காலத்திற்காவது நடைமுறைப்படுத்தி, இந்த முறை எப்படி செயல்படுகிறது; இதனால் இழப்பு ஏற்படுகிறதா; அல்லது அதிக இலாபம் கிடைக்கிறதா என்பதையெல்லாம் ஆராய்ந்து, பின்னர் தேவைப்பட்டால் இந்தக் கொள்கையில் மாற்றம் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்ததில், 'ஏமாற்றுவதற்கு' என்று உள்ளதை, 'ஏமாற்றுவதைத் தடுப்பதற்கு' என்று மாற்றிக் கொள்ளவும்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்,

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது.

'' பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 35,44,29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் '' என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள், இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை மீண்டும் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

7. மானியக் கோரிக்கைகள், 1991—92—

விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள். மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 4,47,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''

எனக்கோருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 828. திரு. மா. சுந்தரதாஸ்.

Thiru M. SUNDARADOSS : Mr. Speaker, Sir, to discuss the need to stop the practice of scale of milk in large quantity at automatic milk vending booths in Madras City to the milk vendors, tea shops and coffee bars thereby depriving the middle class consumers of proper supply of milk, I move—

"That the allotment of Rs. 4,47,74,000 under Demand No. 10 Milk supply schemes be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 824. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,47,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

(இ) கோரிக்கை எண். 21—மீனளம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 21—மீனளம். மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' மீனளம் பற்றிய 21-ஆம் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 14,10,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 851—திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சை மாவட்டம், புதுப்பட்டினம், அம்மணி சத்திரம், மந்திரிபட்டிணம், புதுத்தெரு—சோமனாதபட்டினம், சின்ன ஆவுடையார் கோவில் ஆகிய ஊர்களில் மீனவர்களுக்கு புயல் பாதுகாப்புக் கட்டிடம் கட்டித் தருவது குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 14,10,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராவூரணி தொகுதியில் உள்ள எல்லா ஊர்களையும் போட்டுவிட வேண்டியதுதான்.

வெட்டுத் தீர்மானம் எண். 840—டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 14,10,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 846, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தொண்டியக்காடு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் இறால் வளர்ப்பது குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 14,10,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு—மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.63,96,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 875. திரு. மா. சுந்தரதாஸ்.

THIRU M.SUNDARADOSS: Mr. Speaker, Sir, to discuss the need to set up daily farms in Kanniyakumary district to provide supply of milk products in large quantity in that district, I move—

"That the allotment of Rs.63,96,44,000 under Damand No.22 Animal Husbandry be reduced by Rs. 100".



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 871. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 63,96,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 877. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருத்துறைப்பூண்டி தாலுக்கா தலைநகரத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்ற வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 63,96,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(உ) கோரிக்கை எண் 45— காட்டு வளத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை. மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளத் துறை பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 35,44,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண். 904. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சந்தன மரத் திருடர்களைப் பிடித்து சந்தன மரங்களைப் பாதுகாக்கவும், இருக்கின்ற காடுகளையும் நன்கு பராமரிக்கவும் வேண்டியது குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" காட்டுவளத் துறை பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 35,44,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 899. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" காட்டுவளத் துறை பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 35,44,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

(எ) கோரிக்கை எண். 59— காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 59—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4-05

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 29,66,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண். 913 திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டத்து காடுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வகையில் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கும் அலுவலகத்தின் நிலை மற்றும் அவர்கள் குடியிருப்பு நிலை குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,66,17,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 910. திரு. ஜி. பழனிசாமி.



திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,66,17,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்பண்ணை வளர்ச்சித் துறை, மீன் வளத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, காட்டுவளத்துறை ஆகிய தலைப்புகளின் கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவையின் மாண்பு மிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவை யில் ஆற்றிய உரையாகக் கருதி, அதை இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கு மாறு கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர் களின் கருத்துக்களுக்கு என்னுடைய பதில் உரைகளையும் அரசு எடுக்கக் கருதியுள்ள சில முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக் கிறேன் என்று கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். டேனியல் ராஜ்.

*திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளம், மீன் வளம், கால்நடை பராமரிப்புத் துறை, வனத்துறை ஆகிய மானியக் கோரிக்கை களின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்க ளுடைய வாழ்வு வளம் பெறுவதற்காக பல நல்வாழ்வுத் திட்டங் களைத் தீட்டி அறிவித்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது கடலில் தொழில் செய்து வருகின்ற மீனவர் களின் கோரிக்கைகளையும், கால்நடை பராமரிப்புத் துறையிலே பணியாற்றி வருகின்ற மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுடைய

* 256முதல் 374 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் 2 முதல் 5-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

கோரிக்கைகளையும் பால் வள கூட்டுறவுச் சங்கங்களில்
பணியாற்றி வருகின்ற பணியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்
கள் ஆகியோருடைய கோரிக்கைகளையும், வனத்துறையில் பணி
யாற்றுகிற பணியாளர்களுடைய கோரிக்கைகளையும், நிச்சயமாக
நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்
அவர்கள் சார்பாக ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்தின்
முன்னால் வைப்பதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பால் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் பால் உற்பத்திக்குத்
தேவையான இடுபொருட்களின் அபரிமிதமான விலையேற்றம்
காரணமாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது பால் கொள்முதல் விலை
அந்த அளவுக்கு அதிகமாக வழங்கப்படுவதில்லை. குறைவாகவே
வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே பாலினுடைய
கொள்முதல் விலையை அதிகரித்துத் தருமாறு முதன்முதலாக
நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே
நேரத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், பால்
உற்பத்தியாளர் கூட்டுறவு இணையங்கள் நஷ்டத்தில் இயங்குவ
தாக இப்போது சொல்லப்பட்டுக் கொண்டு இருக்கிறது. பம்பாய்
நகரம், டெல்லி நகரம், கல்கத்தா நகரம் போன்ற நகரங்களில்
இன்றைய தினத்தில் விற்பனை விலையில் எற்படுகிற இழப்பு
களைச் சரிக்கட்டுவதற்கு அந்தந்த மாநில அரசுகளே அதைச்
சரி செய்துகொண்டிருக்கின்றன. அதேபோன்று தமிழகத்தைப்
பொறுத்தமட்டில் விற்பனை விலையில் வந்துகொண்டிருக்கிற
இழப்புகளைச் சரி செய்வதற்கு மாநில அரசு மானியங்களை
வழங்க வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4.10

அடுத்ததாக நுகர்வோர்களிடத்திலே 15 நாட்களுக்கு முன்
வசூலிக்கப்படுகிறது. பால்
மிருந்து பால் வாங்கப்படுகிறது. உற்பத்தியாளர்களிட
திலே அவர்களுக்கு 30 நாட்கள், 40 நாட்கள் கழித்து
பணம் பால் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாக
வழங்கப்படுகிறது. காரணத்தைக் கேட்டால் பால் கூட்டுறவு
இணையத்தின் மூலமாக பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு
உடனுக்குடன் பணம் வழங்காததன் காரணமாக கால
தாமதம் ஏற்படுகிறது என்று காரணம் காட்டி வருவதாகச்
சொல்கிறார்கள். இதன் காரணமாக பால் உற்பத்தி
யாளர்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த
தொழிலே நலிந்துவிடுமோ என்ற நிலை இப்போது ஏற்பட்டுக்
கொண்டிருக்கிறது. ஆகவே வாரத்திற்கு ஒரு முறை பால்



உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினுடைய ஒன்றியங்கள், பால் உற்பத்தியாளர்களுக்கு பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாளர்கள் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதுவரையிலே நிரந்தரத் தொழிலாளர்களாக அறிவிக்கப்படவில்லை. ஆகவே அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்வதோடு மட்டுமல்லாமல் குறைந்தது 600 ரூபாய் மாதச் சம்பளம் என்று தொகுப்பு ஊதியத்திலே அவர்களுக்கு பணியைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுடைய சட்டங்களைத் திருத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்காமல் இருந்தாலும் கூட, அவர்களை நியமன உறுப்பினர்களாக நியமித்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களை தலைவர்களாக ஆக்கினார்கள். ஆகவே புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த சட்டத்தைத் திருத்தி உண்மையான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கிற உறுப்பினர்களை வைத்து தேர்தல் நடத்தி சங்கங்களை அவர்களிடத்திலே மீண்டும் ஒப்படைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்த பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினுடைய தணிக்கையைப் பொறுத்தவரையில் இன்றைய தினத்திலே அந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நிர்வாகமே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தணிக்கையைக் கண்காணித்துக்கொண்டு இருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு என்று தணிக்கைத் துறை இயங்கி வந்துகொண்டிருக்கிறது. இப்போது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலேயே அவர்கள் தணிக்கை செய்தால், ‘வேலியே பயிரை மேய்கின்ற’ நிலைதான் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். ஆகவே கூட்டுறவுத் துறைக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தணிக்கைத் துறையிலே இந்த பால் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தணிக்கையையும் இணைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே, 17 கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்கள் உள்ளன. அதாவது பெரிய சங்கங்களாக, பால் உற்பத்தி செய்வதும், அதே

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1991 செப்டம்பர் 25

நேரத்திலே பாலை விநியோகம் செய்கின்ற ஒரு சங்கமாக, புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள் காலத்திலே இது நடைபெற்று வந்தது. அதை எப்படியாவது தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்த சங்கங்களை பிரித்து பால் உற்பத்தியாளர் சங்கமாகவும், பால் நுகர்வோர் சங்கமாகவும் பிரிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 3000-த்திற்கு மேற்பட்ட பணியாளர்கள் வேலை இழப்புக்கு ஆளாவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே பணி புரிகின்ற பணியாளர்களைப் பொறுத்த மட்டிலே வேலை வாய்ப்புத் துறையின் மூலமாக தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், அங்கே வேலையிலே நியமிக்கப்பட்டவர்கள். ஆகவே, அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கடமை இருக்கிற காரணத்தினாலே தற்போது எந்த நிலையிலே தொடர்ந்து அந்தச் சங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறதோ அதே நிலையில் தொடர்ந்து அந்தச் சங்கம் அப்படியே இயங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், ஒரு பால் பதனிடும் தொழிற்சாலை உருவாக்கப்பட வேண்டும். சிதம்பரனார் மாவட்டத்ினுடைய தலைநகரான தூத்துக்குடியிலே பால் பண்ணை கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகத்தையும் உருவாக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-15

அடுத்து, கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த மட்டில், இப்பொழுது மாடுகளுக்கு சினை ஊசி போடுவதற்குரிய உறை விந்து என்ற புதிய வழியை கண்டுபிடித்து அதன் மூலமாக மாடுகளுக்கு சினை ஊசி போடப்பட்டு வருகிறது. இந்த சினை ஊசியைப் பொறுத்த மட்டில், 15 நாட்களுக்கு ஒரு முறை திரவ நைட்ரஜன் ஊற்றப்படவேண்டும். அந்த அளவுக்கு திரவ நைட்ரஜன் இப்போது முறையாக சப்ளை செய்யப்படுவது கிடையாது. இதன் காரணமாக கிராமங்களிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். ஆகவே, திரவ நைட்ரஜன் எளிதாக கிடைப்பதற்காக தமிழகத்திலே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் திரவ நைட்ரஜன் ஆலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சினை ஊசி போடுவதற்காக ரூபாய் 7.50 வாங்கப்படுகிறது. இதைப் பொறுத்தமட்டிலே அரசு உடனடியாக



1991 செப்டம்பர் 25] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

இதற்கான விதியை தளர்த்தி, இலவசமாகவே சினை ஊசி போடுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரசு சுகாதார நிலையத்திலே பணிபுரிகின்ற டாக்டர்களுக்கு ஆரம்பச் சுகாதார நிலையத்திலே கட்டண சலுகையோடு குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. ஆனால் கால்நடை மருத்துவர்களுக்கு அப்படிப்பட்ட வசதி செய்து கொடுப்பதில்லை. அவர்களுக்கும், கால்நடை மருத்துவ கட்டிடம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் அதன் அருகில் கட்டண வசதியோடு குடியிருப்பு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

சம படிப்புக்கு சம ஊதியம், சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையிலே மனித இயல் மருத்துவர், பல் மருத்துவர், சித்தா மருத்துவர், ஆகியோர்களுக்கு இந்த 5-வது ஊதியக் குழுவின் மூலமாக அடிப்படைச் சம்பளம் ரூ. 2,200 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதே ஊதிய விகிதத்தை கால் நடை மருத்துவர்களுக்கும் வழங்க அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1,500 பேர் தான் கால்நடை மருத்துவர்களாக பணி செய்து வருகிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று கிராமப்புறத்திலே இருக்கின்ற மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு தற்போது ஆபத்து ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றுகின்ற கால்நடை மருத்துவர்களுக்கு இந்த ஆபத்து ஈட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை. ஆகவே, அதை இவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை மருத்துவமனையிலே பணியாற்றுகிற ஆய்வாளர்களுக்கு ஆபத்து ஈட்டுத் தொகை வழங்கப்படுவதுபோல கிராமபுறத்திலே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற கிராம உதவியாளர்களுக்கும் கால்நடை பராமரிப்பு ஆய்வாளர்களுக்குப் இந்த ஆபத்து ஈட்டுத் தொகையை வழங்குவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டத்திலே, தலைநகராகிய தூத்துக்குடியிலே இயங்கி வந்த கால்நடை நோய் புலன் ஆய்வுப் பிரிவு தற்போது இரண்டு வருட காலமாக இயங்கவில்லை. ஆகவே அந்தப் பிரிவை உடனடியாக இயங்க வைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மீனளத்தைப் பொறுத்தவரையில் கடலில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் அவர்கள் அந்தத் தொழிலை செய்து வருகிறார்கள். அதைப் புரிந்துதான் இன்றைய தினம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் விபத்தின் காரணமாக இறந்து போனால் காப்புறுதித் தொகையாக 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதை 21 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் காப்புறுதித் தொகையை உடனடியாக அந்தக் குடும்பத்திற்கு கொடுப்பது கிடையாது. கிட்டத்தட்ட 6 மாத காலம் கழித்துதான் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் துறையை பொறுத்தமட்டில் ஒரு மாத காலத்திற்குள்ளே அந்தக் குடும்பத்திற்கு வழங்க வழிவகைகளைச் செய்யவேண்டும். கேரள மாநிலத்தில் தற்போது கடலிலே தொழில் செய்யும் மீனவர்கள் வயதானவர்களாக ஆகிவிட்டால், அதாவது தொழில் செய்ய முடியாத மீனவர்களுக்கு இன்றைய தினம் ஓய்வூதியம் வழங்கி வருகிறார்கள். அதைப் போல தமிழகத்திலே கடல் தொழிலிலே ஈடுபட்டு, பல ஆண்டுகளாக மீன்பிடித் தொழிலைச் செய்து வந்த வயதான மீனவர்களுக்கு, வேலை செய்ய முடியாதவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 4-20

இன்றைய தினம் கிராமப்புறத்திலே, நகர்ப்புறத்திலே வாழ்கின்ற மீனவர்களுக்கு அரசின் மூலமாகப் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமெல்லாம் இருக்கிறது. ஆனால் கிராமப் புறத்திலே இருக்கும் ஏரி, ஆறு, குளம் போன்ற பகுதிகளிலே மீன் பிடித்துக்கொண்டிருக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படுவது கிடையாது. கடலில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகிறதோ அந்தச் சலுகைகளை உள் நாட்டு மீனவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கிராமப்புறத்திலே வாழ்கின்ற மீனவர்களுக்கு, அவர்களுடைய நீண்ட காலக் கடன்கள் இன்றையதினம் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் நகர்ப்புறத்திலே கடல் தொழில் செய்து கொண்டிருக்கும் மீனவர்களுக்கு அந்தக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படவில்லை. ஆகவே நகர்ப்புறத்திலே கடல் தொழில் செய்து கொண்டிருக்கும் மீனவர்களின் நீண்ட காலக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்பதோடு, மீன்பிடி சாதனங்களுக்கு விதிக்கும் வரியையும் விலக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

—



தூத்துக்குடியைப் பொறுத்த மட்டில் கடலில் தொழில் செய்யும் மீனவர்கள் காணாமல் போய்விடுகிறார்கள். ஆகவே அப்படி காணாமல் போகின்ற அந்த மீனவர்களை உடனடியாகக் கண்டுபிடிக்க தூத்துக்குடியில் ஆயத்த நிலையில் ஒரு ஹெலிகாப்டர் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் தூத்துக்குடியிலே இருக்கும் கோஸ்ட்-கார்ட் காணாமல் போகின்ற மீனவர்களைக் கண்டுபிடிக்க விசைப் படகுகளைத் தயார் நிலையில் வைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தூத்துக்குடி நகரிலே கிட்டத்தட்ட 2000-க்கும் மேற்பட்ட சங்கு குளி தொழிலாளர்கள் தொழில் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் கடலிலே குளிக்கின்ற சங்குகளை துறையிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அந்தத் துறையினர் அதை ஏலம்விட்டு அதன் மூலமாக வருகின்ற பணத்தில் 90 சதவிகித்தை தொழிலாளர்களுக்கும், 10 சதவிகிதத்தை அரசுக்கும் எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் ஏலம் எடுக்கின்ற வியாபாரிகளுக்குத்தான் லாபம் என்று கூறிக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) ஏலம் எடுக்கும் வியாபாரிகள் விலையைக் குறைத்து ஏலம் எடுக்கும் காரணத்தால், அதன் மூலமாகத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்காதது மட்டுமல்ல, அவர்கள் எதிர்பார்க்கின்ற விலையும் கிடைப்பது கிடையாது. ஆகவே அரசைப் பொறுத்த மட்டில் இந்த ஆணையைத் தளர்த்தி மீனவர்களுக்கு எப்படி சலுகைகள் வழங்கப்படுகிறதோ, அதாவது கடலில் மீன் பிடிக்கும் போது, அவர்கள் பிடிக்கும் மீன்கள் எப்படி அவர்களுக்கே சொந்தம் என்று அரசு அறிவித்திருக்கிறதோ அதைப்போல கடலிலே சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கும் அவர்கள் குளிக்கும் சங்குகள் அவர்களுக்கே சொந்தம் என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

பிற்பகல் 4.25

வனத்துறையைப் பொறுத்தமட்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே 1981 ஆம் ஆண்டு சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் 2840 பேர் சமூக வன ஊழியர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் இடைக்காலத்திலே வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே வனத்துறையில் பணியாற்றும் 600-க்கு மேற்பட்ட சமூக வன ஊழியர்களை உள்ளாட்சித் துறைக்கு மாற்றினார்கள். மாற்றியதோடு மட்டுமல்லாமல் இன்றையதினம் வேலை பார்க்க முடியாத அளவுக்கு அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

மானியத்துடன் கடன் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களின்பால் அன்பும், பாசமும் கொண்டுள்ள நமது இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் இக் கோரிக்கையை பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

பிற்பகல் 4.30

நாகப்பட்டினத்தை ஒட்டியுள்ள உப்பனாறும், கடலும் சங்கமிக்கும் இடத்தை ஒட்டி ரிவிட்மென்டும், தடுப்புச் சுவரும் கட்டுவதற்கு ரூ. 86 இலட்சம் செலவில் மதிப்பீடு முன்னாள் மீன் வளத் துறை இயக்குநர் இருக்கும்போது செய்யப்பட்டுள்ளது. தாங்கள் அருள்கூர்ந்து தடுப்புச் சுவரும், ரிவிட்மென்டும் கட்டித் தருமாறு பணிவுடன் வேண்டு கிறேன்.

நாகப்பட்டினத்திலிருந்து அக்கரைப்பேட்டை செல்லும் பாலம் மிகவும் முக்கியமான பாலம். அது மிகவும் பழமையான பாலம். கடல் கொந்தளிப்பு, புயல் ஏற்படுகிற போது தண்ணீர் பாலத்தின் மேல் அடிக்கிறது. அப்பகுதியில் அப்பாதையைக் கடக்க உள்ள பாலம் அந்த ஒரே பாலம்தான் உள்ளது. அப்படிக் கடக்கும்போது புயல், வெள்ளத்தால் மக்களுக்கு உயிர்ச்சேதம் நிறைய ஏற்படுகிறது. ஆகவே இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தயவு செய்து அதைக் கட்டித்தர வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன். மேலும் வேளாங்கண்ணி-செறுதூர் பாலம், வேட்டைக் காரனிருப்பு-தாளன் திருவாசல் பாலம் ஆகிய பாலங்களையும் கட்டித் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மீனவ சமுதாயத்தின் காவல் தெய்வமாக விளங்கும் என் தெய்வமே, மீனவர்களின் வாழ்க்கை நித்தம், நித்தம் செத்துப் பிழைக்கும் வாழ்க்கையாகவே அமைந்துள்ளது. கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவனின் மனைவி தன்னுடைய திருமாங்கல்யத்தை வைத்து பூசைசெய்து தன் மாங்கல்யம் நிலைக்க வேண்டி, பின்னர் தான் தன்னுடைய கணவனை கடலுக்கு அனுப்பும் நிலை உள்ளது. குறிப்பாக மிகவும் பின்தங்கிய பகுதியாகிய நாகப்பட்டினத்தை தலைநகரமாகக் கொண்ட காயிதேமில்லத் மாவட்டம் தந்த அமரர் புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு வடிவம் தந்து எங்கள் பகுதி மக்களின் வயிற்றில் பால் வார்த்திட்ட என் தாயே; யாராலும் ஒழிக்க முடியாது என்று சொன்ன சாராய சாம்ராஜ்யத்திற்குச் சாவுமணி அடித்து மலிவு விலை மதுவை, ஆட்சி கண்ட அடுத்த நாளே ஒழித்து தமிழகத்தின் மூன்றரைக் கோடி தாய்க் குலத்தின் மனம் பொங்கிப் பூரித்து புதுப் பொலிவான வாழ்வு தந்தமைக்கும், தமிழகத்தின் உயிர்நாடியான காவிரி நீர்ப் பிரச்சினையில் உறுதியான, நிலையான



முடிவினை சரியான நேரத்தில் எடுத்திட்ட தமிழகத்தின் காவல் தெய்வத்திற்கு என் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கை ஆக்குகிறேன்.

என்து சட்டமன்றத் தொகுதி நாகப்பட்டினம் தொகுதி. இந்திய ஒருமைப்பாட்டிற்கு விளக்கமாக உள்ள தொகுதி, அன்னை வேளாங்கண்ணி, நாகூர் ஆண்டவர், சிக்கல் சிங்கார வேலர் திருக்கோயில் இந்த மூன்று திருத்தலங்கள் உள்ளடக்கிய என்னுடைய தொகுதியில் ஒரு தேசிய ஒருமைப்பாட்டு மையம் ஏற்படுத்தி இந்தியாவிற்கே வழிகாட்டும் மையமாக ஏற்பாடு செய்ய வேண்டுமாய் என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவியை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் துறைமுகத்தில் சுமார் எட்டு ஆண்டுக் காலமாக ஏற்றுமதி, இறக்குமதி நின்றுவிட்டதால் அந்த துறைமுகத் தொழிலை நம்பி வாழும் பத்தாயிரம் குடும்பங்கள் வேலையின்றி வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். பயணிகள் கப்பலும் வருவது நின்றுவிட்டது. பயணிகள் கப்பல்கள் நின்றுவிட்டதால், சிங்கப்பூர், மலேசியா செல்லும் பயணிகள் சென்னை சென்று செலல வேண்டிய சூழ்நிலை உள்ளது. நாகப்பட்டினம் துறைமுகம் கடந்த 8 ஆண்டுக் காலமாக செயல்படாமல் உள்ளதால் நாகப்பட்டினம் பொது மக்கள் பொருளாதார வளம் இன்றி மிகவும் கஷ்டப் படுகின்றனர். ஆகவே பயணிகள் கப்பல்கள் நாகப்பட்டினம் துறைமுகத்தில் தங்கி ஏற்றிச் செல்வதற்கும், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உரம், சரக்கு கப்பல்கள் நாகப்பட்டினத்தில் தங்கி சரக்குகளை இறக்குவதற்கும் ஆவன செய்தால் துறைமுகத் தொழிலை நம்பி வாழும் அந்த பத்தாயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வறுமை நிலையிலிருந்து விடுபடுவார்கள். இன்று ஒரு வேளை சோற்றுக்குக்கூட மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். ஆகவே சென்னை துறைமுகத்திற்கும், தூத்துக்குடி துறைமுகத்திற்கும் கடலூர் துறைமுகத்திற்கு வரும் இறக்குமதி கப்பல்களில் கணிசமானவற்றை நாகப்பட்டினத்திற்கு ஒதுக்கினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். ஆகவே நாகப்பட்டினம் துறைமுகத்தை மறுமலர்ச்சி அடையச் செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கடலுக்குப் போங்கள், வேகமாக.

**திரு. ஆர். கோடிமாரி** : மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியால் அறிவிக்கப் பட்டுள்ள நாகப்பட்டினத்தைத் தலைநகராமாகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டத் துவக்க விழாவிற்கு

தெய்வத்தாயாய் வீற்றிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நாகப்பட்டினத்திற்கு வருகை தந்து துவக்கி வைத்து நலிவுற்ற நாகை தொகுதிக்கு நல்வாழ்வு அளிக்குமாறு தாயாய், தமிழாய் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது அன்பு வேண்டுகோள். கால்நடை உதவி மருத்துவருக்கும், கால்நடை ஆய்வாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படி வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுடன் இணைந்து பணி செய்யும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படியை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காட்டு வளத் துறை, மீனளத் துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்ததற்காக முதலாவது என்னுடைய பணிவான வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன். தமிழக அரசு நல்ல பல திட்டங்களை அறிவித்திருந்தாலும், மிகவும் பின்தங்கிய சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மக்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு முதலாவதாக உங்களிடம் சில வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4.35

பொதுவாக மீனளத் துறையைப் பொறுத்தவரைக்கும் அருமை மீனவ நண்பர்கள் பல காலமாக ஒரு கோரிக்கையினை வைத்து வருகிறார்கள். குறிப்பாக ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மீனினுடைய இன விருத்தி நடைபெறுகிற காலம். அந்தக் காலக் கட்டத்தில் டிராலர்கள் மூலம் மீன் பிடிக்கின்ற காரணத்தாலே மீன் குஞ்சுகளும் மீன் முட்டைகளும் அழிந்து விடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் டிராலர்கள் மூலம் மீன் பிடிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கையினை வலியுறுத்தி வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் இந்த மாத காலங்களில் மீன் பிடிப்பதனால் மொத்தத்திலே அது நமது நாட்டிற்குக்கூட பொருளாதாரத்தில் நஷ்டம் வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், குஞ்சுகளும் முட்டைகளும்



அழிகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்தக் காலக் கட்டங்களில் டிராலர் வைத்து மீன் பிடிப்பதை அரசு தடை செய்ய வேண்டும் என்ற அவர்களுடைய கோரிக்கையை நீங்கள் பரிவுடன் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கட்டுமரத்தில் சென்று மீன் பிடிக்கும்போது அப்படிப்பட்ட அவல நிலை ஏற்படுவதில்லை. எனவே, கட்டுமர தொழிலாளர்கள அப்படி மீன் பிடிப்பதில் தவறு இல்லை என்றும் கூறுகிறார்கள். அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல தலைச்சுமட்டில் மீன்களை சுமந்து விற்கின்ற மீனவ தாய்மார்கள் வெகு தூரம் செல்வதற்கு போக்குவரத்து வசதிக்காக நமது போக்குவரத்துக்கழகங்களிலே கூட அதற்கான ஏற்பாடுகளைச் செய்து மீன்களைக் கொண்டுபோவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல ஏ.ஆர்.டி. ஆர்.எஸ். எனும் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு, பொதுவாக விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்வதுபோல் மீனவர்களுக்கும் 10 ஆயிரம் வரைக்கும் கடன் தள்ளுபடி என்று அறிவித்து இருந்தாலும், பொதுவாக விவசாயிகளினுடைய பிரச்சினைகளைப் பற்றி பெருவாரியாக விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மக்கள் நமது அவையை அலங்கரிக்கிற காரணத்தாலே அவர்களுடைய குறையை எடுத்துரைத்துவிடுகிறார்கள்; ஆனால் மீனவ சகோதரர்களுடைய குறைகளை பெருவாரியாக எடுத்துரைக்காத காரணத்தினால் அந்தக் குறைகள் நிவர்த்தி ஆகாமல் இருந்து கொண்டிருக்கிறது. எனவே அரசு வழங்குகின்ற சலுகை ரூ. 10 ஆயிரம் தள்ளுபடி என்பதை, அரசு பரிவுடன் கவனித்து, அந்த 10 ஆயிரம் ரூபாய் கடனை வாங்கி யார் யாரெல்லாம் கட்ட முடியாமல் செயல் இழந்து இருக்கிறார்களோ அவர்களுடைய கடனை தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு மிக முக்கியமான பிரச்சினை. நான் தொடர்ச்சியாகக் கூறி வருவதுதான், இந்த சபையிலே. பொதுவாக எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் ஜூன் முதல் டிசம்பர் மாதம் வரைக்கும் கடல் கொந்தளிப்பாக இருக்கக்கூடிய காலக் கட்டம். அந்த நேரத்திலே அருமை மீனவச் சகோதரர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுவது உண்டு. இதன் காரணமாக அவர்கள் கேரளாவுக்கோ அல்லது வெளி மாநிலங்களுக்கோ, ஒரிசா பகுதிகளுக்குக் கூடச் செல்கிறார்கள். அங்கே போகின்றபோது, இவன் தமிழன் என்று சொல்லி,

அடித்துத் துரத்தப்படுகிறான். அதுமாத்திரம் அல்லாமல், உள்ளே மீன் பிடித்துக் கொண்டிருக்கிறவர்கள் கூட தொழிலுக்குப் போக முடியாமல் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே இவைகளைக் களைவதற்கு அந்தப் பகுதியில் மீன் பிடிக்கின்ற தூண்டில் வளைவு என்கிற ஒன்றை அரசு அமைத்து கொடுத்தது என்று சொன்னால், பெருவாரியான மீனவத் தொழிலாளர்களுக்கு அது பயனுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். கேரளா மாநிலத்தில் சின்ன சின்ன தூண்டில் வளைவுகளை நிறைய அவர்கள் அமைத்துக் கொடுத்து இருப்பதன் மூலம் அங்குள்ள மீனவர்கள் மீன் பிடிக்கவும் முடிகிறது, இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமலும் பார்த்து கொள்கிறார்கள். ஆண்டு முழுவதும் அவர்கள் வேலைக்குச் செல்ல முடிகிறது. எனவே நமது மாநிலத்தில் மாத்திரம் தான் இப்படி 6 மாதம் மீன் பிடிப்பது, 6 மாதம் வேலைக்கு செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அரசு அதில் தனியாகக் கவனம் செலுத்தி, அந்த தூண்டில் வளைவுகளை அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டும் என்று மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது.) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன்,

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசும்போது தமிழன் என்ற காரணத்திற்காக கேரளாவிலோ அல்லது ஒரிசாவிலோ அவர்கள் அடித்து விரட்டப்படுவதாகச் சொன்னார்கள். அது அவ்வளவு அலட்சியப்படுத்தக்கூடிய ஒரு பிரச்சினை அல்ல. மேலும் அதுபற்றிய விவரங்கள் இருந்தால் அதை இந்த அவைக்கு அவர்கள் தர வேண்டும். தமிழன் என்ற காரணத்திற்காக அவர்கள் கேரளாவுக்குச் சென்று மீன் பிடிக்கும்போதோ, ஒரிசாவிலிருந்தோ விரட்டப்பட்டு இருக்கிறான் என்று சொன்னால், இந்த அவை அதைச் சற்றுக் கடுமையாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது என் கையில் ஆதாரம் இல்லை. நீங்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிடமே, ஆண்டுதோறும் நடக்கிற லா அண்டு ஆர்டர் பிராப்ளம் எவ்வளவு என்று கேட்டால் சொல்வார்கள். உங்களுக்குத் தேவை என்று சொன்னால் நானே தருவதற்கு தயாராக இருக்கிறேன் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ், அதாவது, நீங்கள் 'என்னிடம் ஆதாரம் இல்லை' என்று



சொல்லிவிட்டு, இன்னொன்று ரிக்கார்டில் போவது நன்றாக இல்லை. (குறுக்கீடு) தயவுசெய்து, அதாவது நீங்கள் முதலில் சொல்லும் போதாவது 'இருக்கிறது, என்றாவது ஓங்கிச் சொல்ல வேண்டும் ஆதாரம் இல்லை என்று சொன்னால், அதைத் தவிர்க்கவும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கூட இரண்டு பேர்- லாரன்ஸ் என்கிற ஒரு நபரும், கில்பர்ட் என்கிற மற்றொரு நபரும், இடையம்புத்தம்துறைப் பகுதியைச் சேர்ந்த அவர்கள் கேரளாவிலே மீன் பிடிக்கச் சென்ற போது கொலை செய்யப் பட்டு இருக்கிறார்கள். காரணம், இங்கிருந்து 'நீ கேரளா எல்லைக்கு மீன் பிடிக்க வரக்கூடாது' என்பதுதான். ஆக நான் அதை ஆதாரத்தோடு தான் சொல்கிறேன். கட்டுக் கதையாகச் சொல்லவில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் நான் எதை நம்புவது? கொஞ்சம் நேரத்திற்கு முன்பு, 'என்னிடம் ஆதாரம் இல்லை' என்றும் சொல்கிறீர்கள். இப்போது 'நான் ஆதாரத்தோடுதான் சொல்கிறேன்' என்கிறீர்கள். அதாவது உங்களுடைய வாதமே ஏற்கெனவே நீங்கள் எடுத்து வைக்கிற வாதத்திற்கு வலு சேர்க்கிறமாதிரி இருக்கவேண்டும். வார்த்தைக்கு வார்த்தை வலு இழக்கிற வாதத்தை வைக்கக் கூடாது.

பிற்பகல் 4.40

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்கிற நேரத்தில் எல்லாம் ஆதாரம் வேண்டுமென்று நீங்கள் சொல்லி இருப்பீர்களானால் கொண்டுவந்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை, என்னிடம் ஆதாரம் இல்லையென்று நீங்களாகத்தான் சொல்கிறீர்கள். (சிரிப்பு).

டாக்டர் தே. குமாரதாஸ் : தற்சமயம் ஆதாரம் இல்லை. ஆனால் ஆதாரம் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் குமாரதாஸ் அவர்களே் இப்போது சமீபகாலமாக அவர்கள் சொன்னார்கள் இவர்கள்

சொன்னார்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே, கொஞ்சம் அதையெல்லாம் கையிலே வைத்துக்கொண்டு பேசினால் பொறுப்பேற்றுக் கொண்டு பேசினால் சரியாக இருக்கும். சில நேரங்களில் எதையாவது யோசித்துக்கொண்டு அவர் சொல்வது பிரச்சினைகளை உருவாக்குவதாக இருக்கிறது. எனவே, கையில் ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசினால் நன்றாக இருக்கும். அல்லது பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்றாவது அவர் சொல்ல வேண்டும்.

டாக்டர் தே. குமரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு காலையில் நீங்கள் அனுமதிப்பதாக இருந்தால் நான் ஜீரோ ஹவரில் உங்களுக்கு ஆதாரத்தோடு புரூப் பண்ணுவதற்கு தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் ரீதியாக மாநிலங்களுக்கிடையே போட்டி ஏற்படுவது சகஜம். அந்த வகையில் தொழில் ரீதியாக வேண்டுமானால் அந்தப் பிரச்சினை இருக்கலாம். ஆனால் திட்டமிட்டே தமிழன் என்பதற்காக யாரையும் தாக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் ரீதியாக போட்டி இருக்கலாம் என்று சொன்னார்கள். உண்மை, தொழில் ரீதியாக மாநிலங்களுக்கிடையே மட்டுமல்ல, இரண்டு குப்பங்களுக்கிடையே கூட தொழில் ரீதியாக போட்டி வந்து பெரிய தகராறு எல்லாம் ஏற்பட்டதை நாம் அறிவோம். ஆகவே, அதை பெரிது படுத்தி பேசவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவுக்கு தமிழ்நாட்டிலிருந்து போனால் தமிழன் என்று மீனவர்களை அங்கே தடுப்பதில்லை என்று



சொன்னார்கள். கடலில் எல்லை இருக்கிறது. கேரளாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இருக்கிற எல்லையைத் தாண்டி நம்முடைய மீனவர்கள் போனால், நம்முடைய மீனவர்களைப் பிடித்து வைத்து, துன்புறுத்தி அனுப்புகிறார்கள். அது தமிழன் என்று இல்லை. எல்லையைத் தாண்டினால் அந்தப் பிரச்சினை வருகிறது. இல்லையென்று சொல்ல முடியாது. பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. கோர்ட்டிற்கும் போயிருக்கிறார்கள். இல்லையென்று சொல்ல முடியாது. (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன்

திரு. பி.வி. இராஜேந்திரன் : தப்பு தப்பாக தகவலை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு பிரச்சினையை எடுத்துச் சொல்லி இருக்கிறார் அதில் தொழில் ரீதியாக போட்டி இருக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எனவே, அதற்கு மேலே எதுவும் வேண்டாம். மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் மட்டுமல்ல. ஆந்திராவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இருக்கிறது. அதைப் போல மகாராஷ்டிராவுக்கும் கோவாவுக்கும் இருக்கிறது. அது தொழில் ரீதியாக நடக்கும் போட்டியே தவிர, வேறு எந்த மாதிரியான போட்டியும் கிடையாது. தயவுசெய்து குமாரதாஸ் அவர்கள் இதை உணர்ந்து இதோடு முடித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. அதை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி. தொழில் ரீதியாக இருந்தாலும் சரி, வேறு எப்படி இருந்தாலும் சரி, ஆகவே, மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்களிடம் கேட்டால் கூட உண்மை தெரியும். எங்கள் மாவட்டத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. நான் வேண்டுமென்றே சொல்வதாக எண்ணாதீர்கள் சார். அப்படி நடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய விவாதத்திற்குச் செல்லுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : நீங்கள் சொன்னதைப் போல தொழில் ரீதியாக போட்டி இருக்கிறது என்று சொல்லி, தமிழன் அங்கே போய் மீன் பிடிக்கிறான் என்று சொல்லி, தமிழனை அடிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட சூழ்நிலை வந்து கொண்டிருக்கிறது. அவற்றை தவிர்க்க வேண்டும். அதற்காவது இந்த தூண்டில் வளைவை அமைத்துத்தரவேண்டும். ஏனென்றால் அவர்கள் அந்தப் பக்கம் போகாமல் இங்கேயே மீன் பிடிக்கும் வாய்ப்பு ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு உள்நாட்டு மீன் வளர்ப்பு மையம் இருந்து வந்தது. இப்போது தொடர்ச்சியாக பருவமழை பொய்த்ததன் காரணமாக அங்கே ஏரிகள் நிரம்பவில்லை என்ற காரணத்திற்காக அந்த மீன் வளர்ச்சி மையம் இப்போது செயல்படாமல் இருப்பதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. அப்படி இருக்குமானால், தென்மேற்கு, வடமேற்கு இரண்டு பருவமழைகளும் கிடைக்கக்கூடிய குமரி மாவட்டத்திற்கு இங்கே செயல்படாமல் இருக்கிற இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

அதைப்போல கால்நடை துறையைப் பொறுத்தவரையில் 40-க்கும் மேற்பட்ட கால்நடை மருந்தகங்களை மருத்துவமனைகளாக உயர்த்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

385 ஊராட்சி ஒன்றியங்களில் கிட்டத்தட்ட 600 கால்நடை மருத்துவமனைகள் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள். நன்றி, ஆனால் அதைத் குறைந்த பட்சம் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 5 என்ற வீதத்தில் உயர்த்தப்படுகிறபோது, அது கிராமங்களில் வாழ்கிற ஏழை விவசாயப்பெருங்குடி மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். எனவே, தற்சமயம் ஆண்டு ஒன்றுக்கு 10 மருத்துவமனைகள் ஆரம்பிப்பது என்று இருப்பதை, குறைந்தபட்சம் ஆண்டு ஒன்றுக்கு 25 என்கிற விதத்தில் நீங்கள் உயர்த்துவீர்கள் என்று சொன்னால், அதிலே பலவிதமான நன்மைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. படித்த டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பு வருவதுடன் கிராமப் புறப்பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். எனவே, இதை நான் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



பிற்பகல் 4.45

அதே போல், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகள் மாலை நேரத்திலும் இயங்குகின்ற விதத்திலே செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டு இருக்கிறேன். தற்போது காலையில் மாத்திரம்தான் இந்த மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அது மாலையிலும் இயங்குகிற வகையில் இருந்தால் நல்லது. பொதுவாக ஒரு மாடு சினையாகவேண்டும் என்று சொன்னால், 21 நாளைக்கு ஒரு முறைதான் சினைப்பிடிக்கிறோம். அந்த குறிப்பிட்ட 8 மணி நேரத்திற்குள்ளாக சினைக்கான ஊசியினைப் போட்டால்தான், அது கருத்தரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மருத்துவமனைகள் காலையிலும், மாலையிலும் இயங்குகின்ற விதத்தில் இருந்தால், விவசாயிகளுக்கு, அந்த மருத்துவமனைகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே மருத்துவமனைகள் மாலை நேரத்திலும் இயங்குவதற்கான உத்தரவினை நீங்கள் பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, அதிலே வெட்டரினரி டாக்டர்களாக பணியாற்றுகிற மருத்துவர்களுக்கு, நம்முடைய ஆங்கில முறை மருத்துவம் எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள், பி. டி.எஸ். படித்தவர்கள், பி.ஐ.எம். முடித்தவர்கள் இவர்களுக்கு எல்லாம் பேசிக் பே 2,200 ரூபாயாக இருக்கிறது. பேசிக் பே 2,000 ரூபாயாக இருக்கிறது என்கிற ஒரு மனக்குறை அவர்களிடத்திலே இருக்கிறது. எனவே அவர்களுக்கும் 2,200 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே பேசிக் கொண்டு இருந்தால் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியிருக்கும். சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எனவே அவர்களுக்கும் அந்த அடிப்படைச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

அதேபோல் சென்னையிலே உள்ள கால்நடை மருத்துவமனையிலே, சைதாப்பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனையிலே எல்லாம் நகரங்களிலே வாழ்கின்ற மக்கள் போன் செய்தோ அல்லது நேரிலே சென்றோ, எங்களுடைய இல்லங்களிலே இருக்கிற மாடுகள் நோய் வாய்ப்பட்டிருக்கின்றன என்று தகவல் கொடுப்பார்கள் என்று சொன்னால், இவர்களாகவே, மொபைல் வேனிலே போய், மருத்துவம் செய்கிறார்கள். அப்படிப் போகின்றபோது, வாகனத்திற்குரிய

ஆகவே புரட்சித் தலைவியினுடைய அரசைப் பொறுத்தமட்டில் அந்த 600 பேருக்கும் பணி பாதுகாப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களை மீண்டும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்தாலும் கொண்ட கொள்கையிலிருந்து என்றும் மாறாமல், எங்களுக்கெல்லாம் வழிகாட்டிக் கொண்டிருக்கும் திராவிட இயக்கத்தின் தென்புலத்து கலங்கரை விளக்கமே, நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணி வறண்டு கிடந்த நிலை மாறிட வாராது வந்த மாமழை போல் வந்துதித்த காவிரி தந்த கலைச் செல்வியே, எனது தெய்வத்தாய், மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களே,

'தரை மேல் பிறக்க வைத்தான், எங்களை தண்ணீரில் மிதக்க வைத்தான், என்றும், 'ஒருநாள் போவார், ஒரு நாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்' என்றும், மீனவர்களின் அவல நிலையை அன்றே புரட்சித் தலைவர் அவர்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். ஆதலால் தமிழகத்தின் காவல் தெய்வமாக விளங்கும் எனது இதய தெய்வம், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மீனவர்களுக்கு என தனியாக கட்டிட வசதியுடன் கூடிய மீனவர் கூட்டுறவு சங்கம் அமைத்துத் தருமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

மேலும் அரசால் மானியமாக வழங்கப்படும் வலை, கட்டுமரம் போன்றவை உரியவர்களை முறையாகப் போய் சேருவதில்லை. தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளிலே நாகப்பட்டினம் கடற்கரைப் பகுதியில்தான் அதிகமான மீன் ரகங்களும், இரால் வகைகளும் பற்பல வகைகளில் அதிகமாகக் கிடைக்கின்றன. ஆகவே நாகை கடற்கரைப் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடித் துறைமுகம் ஒன்று அமைத்துத் தருமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

பிடிக்கின்ற மீன்களை பதனிடுவதற்கு மீன் பதனிடும் நிலையம் (Fish curing shed), மீன் உலர்த்தும் கலம் (Fish Drying yard), உலர்த்தப்பட்ட மீன்களை இருப்பு வைப்பதற்கு கிடங்கு வசதிகள் செய்து (Godown) தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



கூட்டுறவு வங்கிகளின் மூலம் அருகாமையில் உள்ள நகரங்களுக்கு மீன்களை எடுத்துச் செல்ல வசதியாக வாகன வசதி செய்து தருமாறு வேண்டுகிறேன்.

எனது நாகை தொகுதியில் நாகூரிலிருந்து வேட்டைக்காரன் இருப்பு வரையிலான 13 கிராமங்கள் மீனவ சமுதாயத்தினர் வாழுகின்ற கிராமங்களாக அமைந்துள்ளன. அங்கே சுமார் 800 விசைப்படகுகள் இருக்கின்றன. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஆண்டுதோறும் வங்கக்கடலில் நாகைப் பகுதியில்தான் புயல் மையம் கொண்டு அவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது. ஆதலால் அவர்களுக்குப்பாதுகாப்பான வீடுகள் கட்டிக் கொடுத்து, அவர்களின் இருண்ட வாழ்வில் ஒளியேற்றி உதவிட பணிவுடன் வேண்டுகின்றேன். அரசுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கடல் நீர் உள்ளே புகுந்து உப்பளமாக மாறிவிடுகின்றது. அவற்றில் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக இரால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்து, அவற்றில் ஜப்பான், கனடா போன்ற நாடுகளில் பயிற்சி அளிப்பதைப் போன்று நம் நாட்டிலும், படித்த மீனவர்களுக்கும் படித்த இளைஞர்களுக்கும் தொழில் நுட்ப மீனவளப் பயிற்சி அளித்து, சுமார் 20 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட கடற்கரை வளத்தை தொழில் நுட்ப மீன்வள பயிற்சியின் மூலம் பொருளாதார வளர்ச்சி, அன்னிய செலாவணி, மற்றும் புரத உணவுப் பெருக்கத்திற்கும் வழிவகை செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர்கள் அமைத்தும், மீன்களை விற்பனை செய்வதற்கு களம் அமைத்துத் தருமாறும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். கட்டுமரங்களில் சென்று கடலில் மீன்பிடிக்கும் கட்டுமர மீனவர்கள் கட்டுமரத்தில் வெளியே பொருத்தும் இயந்திரம் பொருத்தி தொழில் புரிய ஆர்வமாக இருக்கிறார்கள். காரணம், வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் கட்டுமரத்தில் பொருத்தப்படுவதால் கட்டுமர மீனவர்கள் கடலில் வெகுதூரம் குறைந்த கால அவகாசத்தில் சென்று மீன்பிடித்து, அப்படி பிடித்த மீன்களை விரைவில் கரைக்குக் கொண்டு வந்து மீன் கெடாமல் விற்று அதிக வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளதால் வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் வழங்குவதால் அவர்கள் வாழ்க்கைத்தரம், பொருளாதாரம் மேம்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. தவிரவும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கட்டுமரங்களின் மூலம் மீன்பிடி தொழில் நடத்தி வரும் விசைப்படகு மீனவர்களுக்கு ஈடாக வருவாயை ஈட்ட வாய்ப்பு ஏற்படும். மேலும் தற்போது வெளிப் பொருத்தும் இயந்திரத்தின் விலை ரூபாய் 20,000/. அதன் அடிப்படையில் ரூபாய் பத்தாயிரம் வங்கிகளின் மூலம்

கட்டணத்தை மாத்திரம் வாங்கிக் கொண்டு மருத்துவச்
சிகிச்சை செய்கிறார்கள். இது ஒரு நல்ல திட்டமாக இருக்
இறது. ஏன் என்றால், கூலிக்கு ஆட்களைத் தேடிப்பிடித்து,
மாடுகளை மருத்துவமனைக்கு கொண்டு சென்று, மருத்துவம்
செய்து, வருவதற்கு காலதாமதம் ஆகக்கூடும். எனவே,
இந்தத் திட்டத்தை நடமாடும் கால்நடை மருத்துவம் செய்
கின்ற திட்டத்தை, தமிழகம் முழுவதும் விரிவுப்படுத்துகின்ற
போது, மக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். எனவே,
நீங்கள் செய்கின்ற தொண்டும் சிறப்பாக இருக்கும் என்ற
விதத்தில் தமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்தை அறிமுகப்
படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கால்நடைகளுக்கு, கோழிகளுக்குத் தேவையான
தீவனங்களை தனியாரின் நிறுவனங்களிடமிருந்து வாங்குகிறார்
கள். இந்தத்தனியார் நிறுவனங்கள் தயாரிக்கின்ற தீவனங்கள்,
அது மாடுகளுக்காக இருந்தாலும் சரி, அல்லது கோழிகளுக்
காக இருந்தாலும் சரி, அவர்கள் தயாரிக்கின்ற தீவனங்கள்
தரத்திற்கு கட்டுப்பட்டு இருக்கிறது என்ற அளவிற்கு எந்த
வரையறையையும் வகுக்கவில்லை. தரமற்ற தீவனங்களைக்கூட
தயாரித்து லாப நோக்கத்துடன் தயாரித்து வழங்குகிறார்
கள் எனவே கால்நடைகளுக்கு வழங்கக்கூடிய தீவனங்கள் தரக்
கட்டுப்பாடு உடையதாக இருக்க வேண்டும் என்கிற ஒரு
உத்தரவினை நீங்கள் கண்டிப்புடன் கடைப்பிடிக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வனத்துறையைப் பொறுத்தவரைக்கும் ஒரே
யொரு கோரிக்கையை வைத்து முடிக்கலாம் என்று கருது
கிறேன். 1982-ல் முன்னாள் முதல்வர் மறைந்த மரியாதைக்
குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த நேரத்திலே இந்த
சமூக வனப் பணியாளர்கள் என்கிற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்
பட்டு அதிலே திட்டத்தட்ட 1,200 பேர்கள் பணியாற்றிக்
வருகிறார்கள். அவர்களுக்கு மாத ஊதியம் 350 ரூபாய் என்று
கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எம்ப்ளாயிமெண்ட்லிருந்து
வேலைக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள். அவர்களுடைய வேலை
யும் இதுவரையில் நிரந்தரமாக்கப்படவில்லை ஒருவேளை
நாளைக்கு நீ வீட்டுக்கு போ என்று சொன்னால் அவர்
களுக்கு எம்ப்ளாய்மெண்ட் சீனியாரிடியும் போய்விடும்.
எனவே நீங்கள் இதிலே கவனம் செலுத்தி
அக்கறை காட்டி. இந்த 1,200 பேர்களையும் வேலையிலே
நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதோடு அவர்களுக்கு ஊதியத்
தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



அதேபோல் தோட்டக் காவலர்கள் என்று 5 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 10 வருடம், 15 வருடம் என்று ஆகியும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரம் ஆக்குகின்ற விதத்தில் உங்களுடைய கவனம் இருக்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன்.

அதேபோல், காடுகளைப் பராமரிக்கின்ற விதத்தில், காடுகளில் உள்ள செல்வங்கள் அழிக்கப்படாமல் பாதுகாத்தாலே மிகச் சிறப்பாக இருக்கும். (மணியடிக்கப்பெற்றது.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரமாகப் பேசுகிறீர்கள், பாருங்கள். சீக்கிரம் முடியுங்கள். 15 நிமிடங்கள் ஆகின்றன.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஆகவே, காடுகளில் இருக்கக் கூடிய மரங்கள் விழுந்துகிடந்தால், அவைகளைப் பற்றி, தலைமை டி.எம்.ஓ. போன்றவர்களிடம் தகவலைச் சொல்லி, அந்த மரங்களை எல்லாம் நீங்கள் ஏலம் விட்டு எடுப்பதன் மூலம் லாபம் கிடைக்க முடியும். அதற்குப் பதிலாக அந்த மரங்கள் அங்கே விழுந்து, சிதறடிந்து, சின்னாபின்னமாகி, ஒருவருக்கும் பயன் இல்லாமல் போய்விடுகிற நிலைமை இருக்கிறது. அதேபோல், சந்தனம், ஈட்டி, தேக்கு போன்ற விலை உயர்ந்த மரங்கள் எல்லாம் ஒவ்வொரு ஜூரிஸ்டிக்ஷனிலும், ஒவ்வொரு ரேஞ்சர் ஏரியாவிற்குள் எவ்வளவு மரங்கள் இருக்கின்றன என்ற கணக்கை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். 6 மாதத்திற்கு ஒரு முறையாவது அந்த மரங்கள் இருக்கின்றனவா அல்லது வெட்டப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பராமரிக்கும் விதத்தில் அதே பாரஸ்ட் ரேஞ்சரை வைத்து நீங்கள் ஒரு செக்கிங் பண்ணுவீர்கள் என்று சொன்னால், பெருவாரியான காடுகள் அழிக்கப்படாமல் தடுக்க முடியும் என்ற கோரிக்கையினை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 4.50

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்ட அரசு ரப்பர் தோட்டங்களில் பணியாற்றி வருகிற சி.எல்.ஆர். தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கோரி அவர்கள் தொடர்ச்சியாக பல போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். சி.எல். ஆர். ஆக பணியாற்றுகின்றபோது அவன் வேலை தெரிந்துதான் பணியாற்றுகிறான். ஆனால் அவனை நிரந்தரமாக மாற்றப்படக்கூடிய நேரத்தில், திரும்ப ஒரு இண்டர்வியூ வைத்து, அப்போது சி.எல்.ஆர். ஆக பணியாற்றி இருப்பவன் திரும்ப அனுப்பப்படுகிறான். (குறுக்கீடு)

சி.எல். ஆர். ஆக பணியாற்றுகிறவர்களை நீங்கள் அங்கே வேலை காலியாகின்ற நேரத்தில் அவர்களுக்கு அந்த நேரத்தில் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4, 5 டிவிஷன்கள் இருக்கின்றன. தோன்றுகிற நேரத்தில் அதிகாரிகளுக்கு தொழிலாளர்கள் மீது வெறுப்பு ஏற்படுகின்ற நேரத்தில், அவர்களை குலசேகரத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை நீ கடுக்கரைக்குப் போ என்று இப்படி தொலை தூர ஏரியாக்களுக்கு அனுப்பிவிடுவதனால் அவர்களுக்கு அதிக அளவில் பஸ் சார்ஜ் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம், கால்நடை, வளர்ப்பு, காட்டு வளம், காட்டு வளம் முறித்து மூலதனச் செலவு பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது என்து கருத்துக்களை வழங்க வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி எனது கன்னி உரையை துவக்குகிறேன்.

கனிமச் செல்வங்களாக இருந்தால் நமது வசதி வாய்ப்பை, தேவையை பொறுத்து அதை பூமியிலிருந்து வெட்டி எடுத்து நாம் அதை பயன்படுத்தலாம், அதை நாம் எடுக்காவிட்டாலும் அதை பின்னாளில் வரும் நமது சந்ததியினர்கள் தேவையைக் கருதி, அதை எடுத்து பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால், கால்நடைச் செல்வங்கள் அப்படியில்லை. அதை உரிய முறையில் பாதுகாத்து வந்தால்தான் பின்னாளில் அதை நம் சந்ததியினர் பயன்படுத்த உதவியாக இருக்குமென்பதை உணர்ந்து எனது தெய்வத்தாய் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நிதி நெருக்கடி உள்ள இந்த நேரத்திலும் அதிகத் தொகையை ஒதுக்கி கால்நடைச் செல்வங்களை காப்பாற்ற முனைந்து காவல் தெய்வத்திற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் ரூ. 11 கோடி செலவில் புதிய ஒருங்கிணைந்த கடல் மீனள மேம்பாட்டுத் திட்டம் ஒன்று அமைத்து, அதன் மூலம் 6,050



மீனவர்களுக்கு கட்டுமரங்கள், மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள், மீன்பிடி சாதனங்கள் ஆகியவை வழங்குவதன் மூலம் மீனவர்கள் வாழ்க்கைத் தரம் மேம்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அடுத்து, கடன் உதவி திட்டத்தின் மூலம், கால்நடைகள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படுவதால் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர அரசு வழிகாட்டுகிறது. இருந்தபோதிலும் கடனுதவி மூலம் வழங்கப்பட்ட கால்நடைகளின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பு இவைகளை கவனிக்க கால்நடை மருந்தகங்கள் மூலம் கண்காணிக்கப்பட்டால் கால்நடை வளர்ச்சி மட்டுமல்லாது ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் கட்டாயம் உயரும்.

புதியதாக கால்நடை மருந்தகங்கள் திறப்பது அரசுக்கு நிதிச் சுமையாக இருந்தாலும், அவ்வாறு திறப்பதன் மூலம் கால்நடை வளர்ச்சிக்கும், கால்நடைகளின் பராமரிப்புக்கும் மட்டுமல்லாது பொது மக்களின் தனி நபர் வருமானம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்கிறது.

தமிழகத்தில் பால் வளம் பெருகியுள்ளது. இருந்தாலும் பரவலாக பால்வளம் பெருகியிருக்கிறது என்று சொல்லமுடியாது. கால்நடை மருந்தகங்கள் உள்ள இடங்களில் மட்டும் தான் பெருகியுள்ளது.

மருத்துவ வசதியும், செயற்கை முறை கருவூட்டல் வசதியும் இல்லாத இடங்களில் கலப்பின கால்நடைகள் பெருக்கம் இல்லை. ஆனால் அங்கு பால்வள உற்பத்தியும் இல்லை.

கிராமப்புறங்களில் மருந்தகங்கள் இல்லாத இடங்களில் செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்காகவும், முதலுதவி சிகிச்சை அளிப்பதற்காகவும், கால்நடைக் கிளை நிலையங்கள் உள்ளன. இந்த கால்நடைக் கிளை நிலையங்கள் தற்போது காலையில் மட்டும்தான் செயல்படுகின்றது. மாலை நேரங்களில் மூடப்பட்டிருக்கிறது. கால்நடை கிளை நிலையங்களில் செயற்கை முறை கருவூட்டலுக்கு திரவ விந்து முன்பணம் கொடுக்கப்பட்டது. தற்போது அது மாறுபட்டு உறை விந்து கொடுக்கப்படுகிறது.

பசு, மற்றும் எருமைகளுக்கு சினைப் பருவம் வரும் பொழுது, அதாவது காலையில் சினைப் பருவம் வந்தால் மாலையிலும், மாலையில் சினைப் பருவம் வந்தால் மறுநாள் காலையிலும் சினை ஊசி போட்டால் தான் சினை பிடிக்கும்

என்பது ஒரு விஞ்ஞான உண்மை. சினைத் தருணம் ஆரம்பித்த 8 மணி நேரத்திற்குள் சினை ஊசி போடப்பட வேண்டும். அப்பொழுதுதான் சினை பிடிக்க வாய்ப்புண்டு.

மாலை நேரங்களில் கால்நடை கிளை நிலையம் திறக்காமலிருப்பதால், கிராமங்களில் காலை நேரங்களில் பருவத்திற்கு வரும் கால்நடைகளுக்கு சினை ஊசி போடாமல் சினைப் பிடிக்க வாய்ப்பில்லாமல் போகிறது. மாடுகள் 21 நாட்களுக்கு ஒரு முறைதான் பருவத்திற்கு வருகிறது. ஒரு முறை தவற விட்டால் 21 நாட்கள் வீணாகி விவசாயிக்கு நஷ்டம் ஏற்படு கிறது. கால்நடை கிளை நிலையங்களை மாலையிலும் திறந்து வைத்திருந்தால் பொது மக்கள் பலன் அடைய வாய்ப்புண்டு. இதனால் அரசுக்கு எந்த நஷ்டமும் கிடை யாது. கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் வயல் வேலைக்காகவும், தோட்ட வேலைக்காகவும் காலையில் எழுந்து செல்லும்போது தங்களுடைய மாடுகள் சினைக்கு வந்திருப்பதை அறிந்து, வயல் வேலைகளை முடித்துக்கொண்டு திரும்பி வந்து, தங்களுடைய மாடுகளை சினை நிலையத்திற்கு மாலை நேரத்தில் ஓட்டிச் சென்று ஊசிபோட முடியாத சூழ்நிலை உள்ளது. தற்போது மாலை நேரத்தில் சினை ஊசி போட கிளை நிலையங்கள் திறந்து இல்லாத காரணத்தி னால் மிகவும் அல்லல்படுகிறார்கள். ஆகவே பொதுமக்கள் பயன் பெறும் வகையில் கிராமப்புறங்களில் உள்ள கால்நடைக் கிளை நிலையங்கள் மாலை நேரங்களிலும் திறந்து வைத்து செயல்பட வேண்டும் என்ற பணிவான பரிந்துரையை தெரி வித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

விவசாயிகளின் தேவையை முன்னிட்டு தற்போது திரவ விந்துக்கு பதிலாக உறைவிந்து உபயோகப்படுத்தப்பட்டு சினை ஊட்டம் செய்யப்படுகிறது. திரவ விந்தை சினை ஊசிக்காக வழங்கியபொழுது ஒரு நாளைக்கு 2 அல்லது 3 மாடுகளுக்கு மேல் கால்நடை மருத்துவ நிலையங்களில் வருகின்ற மாடுகளுக்கு சினை ஊசி போட முடியாத சூழ்நிலையிருந்தது. ஆனால் தற்பொழுது உறை விந்து வழங்கியதன் மூலம் விவசாயிகள் எந்நேரத்திலும் எத்தனை மாடுகளுக்கு வேண்டுமானாலும் சினை ஊசிபோட்டுக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தியது பாராட்டுக்குரியது. தற் போது உறைவிந்து பயன்படுத்தப்படுவதால் கால்நடை கிளை நிலையங்கள் மாலை நேரத்திலும் திறந்து வைக்க ஆவன செய்ய வேண்டும் என்ற பணிவான பரிந்துரையை மீண்டும் வைக்கிறேன். உறைவிந்து பாதுகாப்பதற்கு 15 நாட்களுக்கு ஒரு முறை திரவ நைட்ரஜன் பயன்படுத்தப்பெறவேண்டும். இந்த திரவ நைட்ரஜன் பற்றாக்குறையினால் திரவ நைட்ரஜனை





சரியாக வினியோகிக்காமல் உறைவிந்து கெட்டு விடுகிறது. இதனால சினை பிடிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடு கிறது. மீண்டும் அதை பயன்படுத்தும் வாய்ப்பும் இல்லா மல் போய்விடுகிறது. திரவ நைட்ரஜனை ஒழுங்காக வினி யோகிப்பதற்கு அரசு வழி வகை செய்ய வேண்டும் என்ற பரிந்துரையை பணிவோடு சொல்லிக் கொள்கிறேன்.

தமிழகத்திலிருந்து அண்டை மாநிலமான கேரளாவிற்கு கோயம்புத்தூர், கம்பம், செங்கோட்டை போன்ற இடங் களின் மூலமாக இனவிருத்திக்கு உகந்த, பசுக்களும், எருமை களும், இளங்கன்றுகளும், தரமான வண்டி எருதுகளும், இறைச்சிக்காக கடத்தப்படுவதால் நமது தமிழகத்திலுள்ள கால்நடை செல்வங்கள் குறைவதோடு மட்டுமல்லாது பால் உற்பத்தியும் குறைகிறது. ஆகவே அண்டை மாநிலங்களுக்கு கால்நடைகள் கடத்தப்படுவதை நடைமுறையில் உள்ள சட்டங்களை கடுமையாக்கி கால்நடை பராமரிப்புத் துறை யின் கீழ் கண்காணிப்புக் குழுக்கள் எல்லை ஓரங்களில் ஏற் படுத்த வேண்டும். இதன் மூலமாக இறைச்சிக்காக மட்டும் உபயோகப்படும் கால்நடைகள் மட்டும், அனுமதிக்கப்பட்டு, தரமான கால்நடைகள் தடுத்து நிறுத்தப்பட்டு, தமிழகத்தில் கால்நடை செல்வம் குறையாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும் என்கிற பரிந்துரையை நான் இங்கே கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

இதைப்போலவே, கால்நடை தீவனங்களான வைக்கோல் போன்ற தீவனப் பொருட்கள் அண்டை மாநிலங்களுக்கு நிறைய கொண்டு செல்லப்படுகிறது. இதனால் கால்நடை தீவனம் தமிழகத்தில் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. மேற்படி கண்காணிப்பு குழு மூலம் இதையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தாராபுரம் தொகுதியிலிருந்தும் காங்கேயம் பொள்ளாச்சி போன்ற பகுதியிலிருந்தும் கேரளாவிற்கு நல்ல தரமான மாடுகளை இங்கேயிருந்து கடத்திக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயுள்ள கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி அவர் களுக்கும் பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் சந்திரசேகர் அவர்களுக்கும் இது நன்றாகத் தெரியும் என்பதை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தாராபுரம் தொகுதியில் அலங்கியம் கிராமத்தில் கால்நடை வளர்ப்போர் அதிக அளவில் உள்ளனர். கலப்பின கால்நடை பெருக்கம் அரசின் தீவிர முயற்சியால் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகில் அவைகளுக்கு ஏற்படுகின்ற பல் வேறு நோய்களுக்கு காரணங்களை உடனுக்குடன் ஆராய்ந்து சிகிச்சை மேற்கொண்டால் அதன் பயனாக கிராம

பொருளாதாரம் உயர்ந்து குறிப்பாக ஏழை விவசாயிகள் பயனடை வார்கள் என்ற கருத்தின் அடிப்படையிலும் எனது தொகுதி யில் அலங்கியம் என்ற கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்று துவக்க வேண்டும் என்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வெறிநோய் என்பது கால்நடைகளிலிருந்து, குறிப் பாக நாய்களிலிருந்து மனிதர்களுக்கு பரவும் ஒரு கொடிய நோய் என்பதை அனைவரும் அறிவார்கள். இந்நோயினால் தாக்கப்பட்ட மனிதர்கள் இறப்பது உறுதி என்பதும் அனை வருக்கும் தெரியும். இத்தகைய கொடிய நோய் நாய்களுக்கு ஏற்பட்டு அவை மனிதர்களை கடிப்பதால் உண்டாகிறது. இத்தகைய கொடிய நோய் மனிதர்களுக்கு வராமல் இருக்க நாய்களுக்கு கட்டாயமாக வெறிநோய் தடுப்பு ஊசிபோட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இப்பணியை தீவிரமாக செயல்படுத்தும் பொருட்டு மாவட்டம் தோறும் கோட்ட அளவில் வெறிநோய் தடுப்பு ஊசி போட்டு மனிதர்களுக்கு இந்நோய் பரவாமல் இருக்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டு இந்த மானிய கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிறபகல் 5.00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்) : திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழக மக்களுக் கெல்லாம் ஒரு தாயாகவும் ஒரு கைடாகவும், ஒரு கார்டிய னாகவும் ஒரு ஃபிரண்டாகவும் ஒரு ஃபிலாஸஃபராகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த பட்ஜெட்டில் கால்நடை பராமரிப்பு, மீன் வளம் போன்ற வற்றிற்கு ஒரு சிறப்பான இடத்தைக் கொடுத்திருப்பது வர வேற்கத்தக்க ஒன்றாகும். தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம், கேந்திர கிராம திட்டம், செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டம், கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு ஆகிய பல திட்டங்களைக் கொண்டு வந்து ஏழை விவசாயிகளின் வருமானம் பெருகும் அளவிலே ஒரு சிறப்பான இடத்தை கொடுத் திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். இன்றைக்கு நகர்ப் புறங்களிலே கிராமப்புறத்தில் இருப்பதைவிட ஜனத்தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் பால் அளவின் தேவை அதிகமாகியிருக்கிறது. இதை ஈடு கட்டுவதற்காகவும், தனி



நபர் வருமானத்தை பெருக்கும் வகையிலும் இன்றைக்கு நகர்ப்புறங்களிலே கால்நடை வளர்ப்பு என்பது அதிகமாகி யிருக்கிறது. அதாவது மக்கள் கால்நடைகளை அதிகமாக வளர்த்து வருகிறார்கள். அதே போல நாய், பூனை போன்ற வளர்ப்பு பிராணிகள் நகரங்களில் வளர்க்கப்படு கின்றன. இறைச்சிக்காக கோழி, முயல் போன்றவையும் வளர்க்கப்படுகின்றன. இவைகளை எல்லாம் பராமரிப்பதற் கும் விஞ்ஞானப்பூர்வமான ஆலோசனைகள் வழங்குவதற்கும் நகர்ப்புறங்களிலும், மாநகராட்சிகளிலும் உள்ள மருந்தகங்கள் போதுமானதாக இல்லை. எனவே, நகர்ப்புறங்களில் புதிய தாக கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால் இந்த கால்நடை மருந்தகங்கள் உள்ள இடங் களிலேதான் பால்வளம் மிகுதியாக பெருகியிருக்கின்றன.

இன்றைக்கு இருக்கின்ற 385 ஊராட்சி ஒன்றியங்களில் 734 கால்நடை மருந்தகங்கள் உள்ளன. இவை போதுமான தாக இல்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஏனென்றால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தது 5 கால்நடை மருந்தகங்களாவது இருந்தால்தான் குக்கிராமங் களில் இருக்கின்ற கால்நடைகளுக்கு மருத்துவ வசதி கிடைக்கக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது போலவே இன்று கிராமப்புறங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்குக் கூட 70 முதல் 80 வரையிலான கால் நடைகள் சிகிச்சைக்காக வருகின்றன. இந்த மாதிரி அதிக அளவிலே கால்நடைகள் பராமரிக்கப்பட வேண்டியிருப்பதால் அங்குள்ள 70-க்கு மேல் 80 வரை வருகின்ற, சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகள் இருக்கின்ற பகுதிகளிலே மருந்தகங் களையெல்லாம் மருத்துவ மனையாக தகுதி உயர்த்தப்பட வேண்டும். இன்றும் பல கிராம மருந்தகங்களிலே 40-க்கு மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சைக்காக வருகின்றன. இதற்கு ஊசிபோடுதல், நோய்களைத் தடுத்தல், ஆலோசனை வழங்குதல், மருந்து கலக்குதல் போன்ற எல்லாவிதமான பணிகளையும் ஒரே ஒரு மருத்துவர் செய்ய முடியாத நிலைமை இருந்து வருகிறது. இந்த மாதிரி மருந்தகங்களிலே இன்னும் ஒரு கால்நடை உதவி மருத்துவரை போட்டு அதை சிறப்பான முறையிலே நடத்தலாம் அல்லது இந்த மருந்து கலக்குதல், ரெக்கார்டுகளை மெயின்டெயின் செய்வது போன்ற வேலை களுக்கெல்லாம் ஒரு கால்நடை மருத்துவ கம்பவுண்டரை யாவது நியமிக்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல இந்த மருந்தகங்களுக்கெல்லாம் மருந்துகள் வாங்குவதற்கு 20,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால்,

இன்று கால்நடை வளர்ப்பு என்பது வளர்ந்து வருகின்ற இந்த நிலையிலே இந்த 20,000 ரூபாய் என்பது போதுமான மருந்து வசதியைச் செய்து கொடுக்க முடியாத நிலையிலே இருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, இன்றைக்கு வெறிநோய் என்பது கால்நடைகளிலிருந்து குறிப்பாக நாய்களிலிருந்து மனிதர்களுக்கு பரவும் ஒரு கொடிய நோய். இந்த நோயானது மனிதர்களுடைய உயிரை போக்க வல்லவை. இதை எப்படித் தடுக்கலாம் என்றால் இந்த நாய்களுக்கு வெறிநோய் தடுப்பு ஊசி போடுவதன் மூலமாக இந்த நோயைத் தடுக்க முடியும். இதற்காக மாவட்டந்தோறும் கோட்ட அளவிலே ஒரு வெறிநோய் தடுப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, இந்த கால்நடைகளுக்கும் கோழிப் பண்ணைகளுக்கும் வழங்கப்படுகின்ற தீவனமானது பெரும்பாலும் தனியார் நிறுவனங்களால்தான் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் தீவனங்களை விவசாயிகள் வாங்கும் போது அதனுடைய தரத்தினை பரிசோதித்து வாங்கக்கூடிய ஒரு நிலைமை இல்லை. இந்த மாதிரி தரம் இல்லாத தீவனங்களை உபயோகிப்பதால் விவசாயிகளுக்கான வருமானம் வெகுவாக பாதிக்கப்படுகிறது. கால்நடைகளுக்கும் நோய் ஏற்படுகிறது. எனவே அரசு முன்வந்து அரசின் மூலமாகவே கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் தீவனம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-05

இந்த கால்நடை பராமரிப்பில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கன்று என்ற முறையிலே இருந்தால்தான் தனி நபர் வருமானம பெருக வாய்ப்பு ஏற்படும். அதன் மூலம் நாட்டு வருமானம் பெருக வாய்ப்பு ஏற்படும்.

இன்று கிராமப்புறங்களில் பரவலாக மலட்டுத் தன்மை உடைய கால்நடைகள் மிகுந்து இருப்பதைக் காணலாம். இதைப் போக்குவதற்கு மாவட்டங்கள் தோறும் கோட்ட அளவில் ஒரு மலட்டுத் தன்மை சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த நம்முடைய அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்று கொள்ளை, கொலை மிகுந்து வருகின்ற இந்தக் காலத்தில் ஒவ்வொருவர் வீட்டிலும் நாய் வளர்ப்பது மிகுந்த அவசியம் ஆகிறது. மக்கள் இன்றைக்கு அதிக விலைகொடுத்து உயர்ந்த ஜாதி நாய்களை விலைக்கு



வாங்கி வளர்க்கிறார்கள். ஆகவே மக்களுக்கு உதவி செய்யும் வண்ணம் அரசாங்கமே உயர்ந்த வகை ஜாதி நாய்களை—பொமரேனியன், அல்சேஷன், டாபர்மேன் போன்றவற்றைக்கொண்டு நாய்ப்பண்ணை வைத்தால் அது பொது மக்களுக்கும் உபயோகமாக இருக்கும், அரசுக்கும் வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே இன்று, சென்னை நகரில் நடமாடும் கால்நடை மருந்தகம் இருப்பதால் அது மக்களுக்கு வெகுவாக பயன்படுகிறது. இதுபோன்ற நடமாடும் கால்நடை மருந்தகங்களை மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கிராமப்புறங்களில் கால்நடை மருத்துவ பட்டதாரிகள் விரிவாக்க பணியாளர்களாக நியமனம் செய்து அவர்கள் இன்றைக்கும் நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இன்று கிராமப்புறங்களில் பரவலாக இந்த கால்நடை வளர்ப்பிலே அதிக ஆர்வம் கொண்டவர்களாக பெண்கள்தான் இருக்கிறார்கள். இன்றைக்கு கால்நடைமருத்துவத்தை பல பெண்கள் படித்து வருகிறார்கள். அவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது).— இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் கிராமப்புறங்களில் பெண் மருத்துவர்களை கால்நடை மருத்துவம் பயின்ற பெண் மருத்துவர்களை பணியில் அமர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ராசிபுரம் தொகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருப்பதால் அங்கு விவசாயிகள் கோழி வளர்ப்பிலும், கால்நடை வளர்ப்பிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். இங்கு 16 லட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. கால்நடைகள் மிகுந்து காணப்படுகின்றன. இங்கு போதிய கால்நடை மருந்தகங்கள் இல்லாமல் இருக்கின்றன. ராசிபுரம் நகரில் உள்ள கால்நடை மருந்தகம் 1939-ல் துவக்கப்பட்டது. ஆனால் அது இன்று வரை வாடகைக் கட்டிடத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு நிலையான கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, ராசிபுரம் ஒன்றியத்தில் உளள சந்திரசேகரபுரம், வெண்ணந்தூர் ஒன்றியத்தில் உள்ள மடியம் பட்டி ஆகிய ஊர்களில் நிலம் எல்லாம் ஒப்படைக்கப்பட்டு அதற்கான பணம் எல்லாம் ஒப்படைக்கப்பட்டு தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு கால்நடை மருந்தகம் விரைவில் ஆரம்பிக்கப்படுமா என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, இந்த கோழிப்பண்ணைகளுக்கான மருந்தகங்களைப் பொருத்த வரைக்கும் இதை பல லட்சக் கணக்கான ரூபாய்க்கு அங்கு உள்ள விவசாயிகள் வாங்கி வருகிறார்கள். ராணிப்பேட்டையில் தயாரிக்கப்படுகின்ற இந்த தடுப்பு ஊசி மருந்துகளை ராசிபுரம் தொகுதியில் 2 டாக்டர்களை இதற்காக தனியாக நியமித்து கோழி நோய் தடுப்பு பற்றி எடுத்துக் கூறவும், இந்த மருந்துகளை விற்பனை செய்யவும் அனுமதித்தால் பல லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வரும் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதைப்போலவே, ராசிபுரம் தொகுதியில் ஆண்டலூர் கேட்டில் கோழி நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அங்கு அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் அங்கு பல லட்சக்கணக்கான கோழிகள் வளர்க்கப்படுகின்றன. ஆனால் கோழிகளுக்கு நோய் ஏற்பட்டால் அதை ஈரோட்டுக்கு கொண்டு சென்று தான் பரிசோதிக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. எனவே, இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர் கவனத்தில் கொண்டு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களைப் பொறுத்தவரையில் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு, சித்த மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் தங்களுக்கும் வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுடைய அடிப்படை ஊதியத்தை ரூ. 2,200 என்ற அளவிற்கு உயர்த்தித்தரவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள்.

அதுபோலவே, பல டெப்போகளில் வேலைசெய்கின்ற ஊழியர்களில் பாதி பேரை நிரந்தரமாக்கியும் இன்னும் பாதி பேர் நிரந்தரமாக்கப்படாத நிலையும் இருக்கிறது. அவர்களையும் நிரந்தரமாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்துள்ளார்கள். இந்தக் கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் ஆகியவற்றில் வேலை செய்யும் ஊழியர்களுடைய குறையைப் போக்கி, இந்தத் துறை நல்ல முறையிலே செயல்பட நம்முடைய அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 5.10

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ச்சுனன்):** திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்.

***திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் பாதுகாக்கப்பட்டால்தான் இந்த நாடு வளம் பெறும் என்ற கருத்துக்கு மாற்று கருத்து இருக்க முடியாது. என்னுடைய கம்பம் தொகுதியைப் பொறுத்த அளவிலே மலைகளால் சூழப்பட்ட இந்தத் தொகுதி, அந்த மலையடிவாரத்திலே வாழ்கின்ற மக்களுக்கு பல பிரச்சினைகள் இருப்பதை நாம் மறந்து விடக்கூடாது என்ற வகையிலேயும் நான் ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு, கேரளா எல்லையோரப் பகுதிகளிலே உள்ள அமராவதி, சுரங்கனார் ஏரியாக்களில் 1967 முதல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலம் வரை சுமார் 23 ஆண்டுக்காலமாக அந்த மலைப்பகுதிகளிலே குடியேறி அங்கேயிருந்த புல்வெளி நிலங்களை திருத்தி, அங்கே மா, பலா போன்ற இயற்கையான பல மரங்களை வளர்த்து அந்த மரங்களுக்கு அடியிலேயே ஏலம் மிளகு போன்ற நீண்டகால பயிர்களை வளர்த்து நிறைய ஏழை விவசாயிகள் அங்கே வாழ்ந்து வந்தார்கள். மேலும் இந்த விவசாயிகள் அனைவருமே புரட்சித் தலைவரை தெய்வமாக மதித்து வாழ்ந்து வந்தவர்கள் என்ற காரணத்திற்காக, இதற்கு முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆணையிட்டதின் பேரில் ஏழை விவசாயிகளை, ஒரு கற்பனை யான காரணத்தைச் சொல்லி, அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்ற ஒரு கற்பனையான ஒரு காரணத்தைச் சொல்லி, சுமார் 23 ஆண்டுகாலம் கஷ்டப்பட்டு, பாடுபட்டு வளர்த்த மிளகு கொடிகளையும் ஏலச் செடிகளையும் வெட்டி அழிந்ததோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய பழமையான வீடுகளையும், அதிலுள்ள உணவு, உடைமைகளையும் தீவைத்து கொளுத்தி நாசம் செய்திருக்கிறார்கள். இதைக் கேட்டதற்கு இவர்கள்மேல் ஒரு துப்பாக்கிச்சூடு கூட நடத்தப்பட்டிருக்கிறது. அந்தச் துப்பாக்கிச் சூட்டை நடத்தியது குறித்து பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் அவர்கள்கூட ஒரு நீதிவிசாரணை நடத்தி உள்ளார்கள். அந்தத் துப்பாக்கிச் சூட்டிலே, தேவர், லட்சுமணன், பெருமாள், கர்ணன், தேவராஜன் போன்ற 5 பேர்கள் காயமுற்று இருக்கிறார்கள். மேற்கண்ட ஏழை விவசாயிகள் விவசாயம் செய்து வந்து, குடியிருந்து வரும் இடத்திற்கு அருகிலேயே உச்சிக்காடு, மாவெடி, வட்டத் தொட்டி, மேகமலை, அமராவதி போன்ற பகுதிகளிலே நல்ல வசதி படைத்த கொழுத்த பணக்காரர்கள் வனத்துறையினரிடமிருந்து நீண்டகால குத்தகைக்கு காடுகளைப் பெற்று

20 ஏக்கர், 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று வனத்துறை யிடமிருந்து நீண்டகால குத்தகைக்கு பெற்று, ஆண்டு அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் அப்படி இருக்க, இந்த ஏழை விவசாயிகளை மட்டும் அந்த இடத்தி லிருந்து விரட்ட வேண்டுமென்ற காரணத்திற்காக இவர்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்ற பொய் காரணம் காட்டி இவர் களை வெளியேற்றுகின்ற முயற்சியிலே இந்த வனத்துறை ஈடுபட்டிருக்கிறது. வனத்துறை இவர்களை வெளியேற்றிய விதம்தான் மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. பெண்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். அவர்கள்மேல் பொய் வழக்கு போடப்படுகிறது. ஆண்கள் அடித்து அச்சுறுத்தப் படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை விவசாயிகள் நித்தமும் கவலை தோய்ந்த முகத்துடனும் வாழ்ந்து வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலை மாற்றப்படவேண்டுமானால் அந்தப் பகுதி களிலே தனக்கு பக்கத்திலே இருக்கின்ற பணக்காரர்கள் மட்டும் எந்தவித கஷ்டமும் இன்னலும் இல்லாமல் ஆண்டு அனுபவித்து வருகிறபோது, இவர்களை மட்டும் இடைஞ்சலுக்கு உள்ளாக்கப் படுகிற இந்த நிலை மாற வேண்டுமென்றால், இந்தக் காடுகளை நீண்டகால குத்தகைக்கு இந்த ஏழை விவசாயிகளுக்கு அளிப்ப தன் மூலம் நீங்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் பெற்றுக் தருகின்ற லாபங்கள் எத்தனையோ இருக்கின்றன. இவர்கள் வளர்க்கின்ற காப்பி, ஏல செடிகள் மூலம் அன்னிய செலவாணியை ஈட்டித்தருகிறார்கள். மேலும் இவர்கள் அங்கே இருப்பதாலேதான் திருடர்கள் அங்கே சென்று அங்குள்ள மரங்களை அழிக்காமல் இருக்கிறார்கள். இவர்கள் வெளியேற்றப்பட்ட மறு நிமிடமே அங்கே இருக்கின்ற மரங் களுக்கு பாதுகாப்பு கிடைக்காது. அந்த மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விடும் என்பதை இந்த மாமன்றத்தின்முன் னாலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு அருகிலேயுள்ள குமுளியிலிருந்து ஒன்னாவது மைல் வரை யிலுள்ள இடங்களில் சுமார் 39 குடும்பங்கள் கடந்த 10 ஆண்டு காலமாக பீன்ஸ், முட்டைக்கோஸ் போன்ற பயிர் வகைகளை விவசாயம் செய்து வந்தார்கள். அவர்களையும் வெளியேற்றும் நடவடிக்கை என்ற காரணத்திற்காக, அவர்களைத் துன்புறுத்தி, அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அவர் கள் கஷ்டப்பட்டு உழைத்து உருவாக்கிய பயிர்களை அழித் திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்த காரணத் தினாலேதான் இவர்கள் [illegible] கழகத்தை மதிப்பவர்கள் என்றும், புரட்சித் தலைவர் மேல் அன்பு கொண்டிருப்பவர்கள் என்ற வகையிலே முந்தைய அரசு திட்டமிட்டு இவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தது. இந்த நடவடிக்கை இன்றும் தொடர்ந்து வருகிறது.



பிற்பகல் 5.15

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

இதைத் தடுத்து நிறுத்தி, இவர்களை இந்த இடத்திலேயிருந்து வெளியேற்றினால், வனத்திற்குப் பாதுகாப்பு கிடைக்காது என்ற வகையிலே, இவர்களுக்கு அந்த இடங்களிலே உரிய வசதி களைச் செய்து கொடுத்து அவர்களுக்கு அந்த வனங்களிலே மீண்டும் நீண்ட காலக் குத்தகைக்குக் கொடுத்து அவர்களை விவசாயம் செய்ய வகை செய்வதன் மூலம் வனத்தைப் பாதுகாக்க மட்டுமல்லாமல், வனத்தை வளர்க்கவும் செய்வார் கள் என்பதை இந்த இடத்தில் திட்டவட்டமாக நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சல்லார்கோவில்வட்டு, ரம்பக்காரன்சகாய், கம்பமேட்டு, ராமக்கன்பேட்டு போன்ற பகுதிகளிலே 40 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சுமார் 2,000 ஏக்கர் புல் வெளி நிலங் களில் சுமார் 1000 ஏழை விவசாயிகள் கப்பை, வாழை, பீன்ஸ், கத்திரி போன்ற பயிர்கள் வளர்த்து அங்கே சுமார் பத்து ஆண்டுக்காலம் வீடுகள் போட்டு வாழ்ந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறார்கள். பலவகை பலன்தரும் பழவகை மரங்களை யும் வளர்த்துவந்தார்கள். ஆனால், முந்தைய அரசு 1991 இல் உள்நோக்கம் கருதி, விவசாயப் பயிர்களையும், வீடுகளையும் அழித்து, தீவைத்து நாசம் செய்தும், துப்பாக்கிச் சூடு நடத்தி யும் பலருக்குக் காயம் ஏற்படுத்தியும் துன்புறுத்தியது. ஏழை களின் வாழ்க்கையில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு மேலே கண்ட ஏழை விவசாயிகளுக்கு, வாழ வழியில்லாத ஆயிரம் குடும்பங்களுக்கு மேற்படி நிலங்களை நீண்ட காலக் குத்தகைக்குக் கொடுத்து ஏழைகளைக் காப்பாற்ற வேண்டுமாய் இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலே உள்ள புல்வெளிகளில் முந்தைய காங்கிரஸ் அரசு 1962-லே விவ சாயிகளுக்கு ''குமரிக்காடுத் திட்டம்'' என்ற திட்டத்தை ஏற் படுத்தி, அங்கே மரங்களை நட்டு அந்த மரங்களுக்கு ஊடே இவர்கள் பயிர் செய்து வளர்த்துக் கொள்ளலாம். மரங்கள் வளர்ந்த பின்பு அவர்கள் வெளியேறிக்கொள்ள வேண்டுமென்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. அந்தக் குமரிக் காடுத் திட்டத்தின்படி தேக்கு மரம், புளிச்ச மரம், புளிய மரம், உலகமரம் என்று பல மரக் கன்றுகள் மரங்களாக வளர்ந்து இன்று அரசுக்குப் பல இலட்சம் ரூபாய்களை வருமானமாக ஈட்டித்தந்து கொண்டிருக்கிறது.

கூடலூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரப் பகுதியிலே உள்ள புல் வெளிகளில் விவசாயம் செய்து வரும் சுமார் ஆயிரம் ஏழை விவசாயிகளின் பசியைப் போக்க, அந்தப் பகுதியில் வனத் துறை அதிகாரிகள் போடும் வனக் கன்றுகளை வளர்க்க அவர்களுக்கே அந்த உரிமைகளைக் கொடுத்து மீண்டும் குமரிக் காடுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அந்த ஏழைகளை அந்த இடத்தில் அமர்த்துவதன் மூலம் அவர்கள் கடலை, ராகி, பீன்ஸ், தட்டைப்பயிறு, சோளம் போன்ற பயிர்களைப் பயிர் செய்து பிழைக்க ஏதுவாகும்.

மேலும், இந்தப் பகுதியிலே வைத்த மரங்களை வளர்த்து இந்த வனப் பகுதியை மீண்டும் வளமையாக்க உறுதுணையாக இருப்பார்கள் என்று கூறிக்கொண்டு, அவர்களுக்கு மீண்டும் இந்தக் குமரிக்காடுத் திட்டத்தைக் கொண்டு வந்து அவர்களுடைய ஏழ்மையினைப் போக்க வேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரங்களிலே கசிவு நீர்க் குட்டைகளை ஏற்படுத்துவதன் மூலம் இங்கே வளரும் பயிர்களைப் பாதுகாக்கவும், அதற்குக் கீழே இருக்கின்ற கிணறு களுக்குப் போதிய நீர் கிடைக்கவும் ஏதுவாக அமையும். எனவே வனத் துறையினர் கசிவு நீர்க் குட்டைகளை மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரங்களிலே ஏற்படுத்த வேண்டுமாய் இந்த மாமன்றத்தில் நான் முறையிட்டுக் கொள்ளுகின்றேன்.

சமூக வனப் பணியாளர்கள் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே சுமார் 2,840 பேர் பணிக்கு அமர்த்தப்பட்டார்கள். அவர்களில் 600 பேரை சென்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு உள்நோக்கத்தோடு ஊரக வளர்ச்சித் திட்டத்துறைக்கு ஒப்படைத்தது. ஊரக வளர்ச்சித்துறை இவர்களுக்கு வருஷத்திற்கு 90 நாட்கள் மட்டுமே வேலை கொடுக்க முடியுமென்றும், இவர்களைக் குழி தோண்டவும், செடிகளுக்குத் தண்ணீர் விடவும் பணிக்கப்பட்ட [illegible] இதனால் இவர்களுடைய படிப்புக்குத் தகுந்த வேலையைத் தராமல், இவர்களுக்கு அவமதிப்பு செய்திருக்கிறார்கள். எனவே, இந்த 600 பணியாளர்களையும் மீண்டும் வேலையில் அமர்த்தி, 16—8—1989 ஆம் தேதியிட்ட அரசாணை எண். 592-ஐ ரத்து செய்து மீண்டும் இந்த 600 சமூக வனப் பணியாளர் களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கு ஊதிய உயர்வும், உரிய பணிப் பாதுகாப்பும் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொட்டில் குழந்தை முதல் தொண்டு கிழவர் வரை, ஆரோக்கியமான மனிதன் முதல் ஆஸ்பத்திரி நோயாளி



வரை அன்றாடம் உபயோகப்படுத்தும் பால் அத்தியாவசிய மான பொருள் என்பதில் ஐயமில்லை.

பிற்பகல் 5.20

இந்த பால் வழங்குகிற ஊற்றுக்கண்களாக இருக்கிற 'பிரைமரி மில்க் சொசைட்டிஸ்' பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று, மிக சங்கடமான நிலையில் இருக்கின்றன. ஆண்டுக்கு ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் உண்டாவதும், ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் அழிவதுமாக இருக்கிறது. இதனைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, இதிலே பணியிலே இருக்கிற பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமித்து அந்தப் பணியாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டத்தை முறைப்படுத்தி, அமல்படுத்தி, அவர்களைப் பாதுகாக்க வேண்டும். மேலும், இச்சங்கங்கள் உற்பத்தி செய்கின்ற பால், குறைந்த விலையில் ஒன்றியத்தினால் பெறப்படுகிறது. 60 பைசாவுக்கு, இந்த சங்கங்கள் உற்பத்தி செய்கிற பாலை வாங்குகிறார்கள். அதையும் எடைகுறைவு, தரம் குறைவு என்று சில நேரத்தில் இன்னும் விலையைக் குறைத்து விடுகி றார்கள். ஊழியர்களிடமிருந்து உபரி பால் கோரப்படுவ தால்,பிரச்சினைகள் எழுகின்றன. எனவே உபரி பால் கேட்பதைத் தவிர்க்க வேண்டும். அச்சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கு, சத்துணவு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல, ஒரு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் கொடுக்க வேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு, பழிவாங்கப்பட்ட பணியாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டும்.

அதேபோல், பால் வளத்துறை ஆதி திராவிடர்களுக்கான பிரத்தியேக நிதியுதவித் திட்டத்தின் மூலம், கறவைக் கடன் மானியம் வழங்குவதைப் போல பிற்பட்டோர், மிகவும் பிற் பட்டோர் ஆகியோருக்கும் இந்தக் கடன் வழங்கலை விரிவு படுத்தி, கிராம பால் சங்கங்கள் உற்பத்தி பெருக உதவ வேண்டுமாய் இந்த மாமன்றத்தைக் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது, காட்டைப் பற்றி நீண்ட நேரம் சொன்னார். அரசியல் சட்டத்தை உருவாக்கிய பெரியவர்கள் எல்லாம், மாநிலங்களுக்கு எந்த அதிகாரம் இருக்க வேண்டும்; மத்தி யிலே எந்த அதிகாரம் இருக்க வேண்டும் என்று வரையறுத்து

செய்திருக்கிறார்கள். இடையிலே வந்தவர்கள் மாநிலத்தினுடைய அதிகாரங்களை ஒன்றன்பின் ஒன்றாய் எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி எடுத்துக்கொண்டவுடனேதான், கல்வியையும், காட்டையும் மாநில அரசினுடைய பட்டியலிலே இருந்து பொதுப்பட்டியலுக்கு ஆக்கி விட்டார்கள். அப்படி, பொதுப்பட்டியலில் ஆக்கிவிட்டதனால்தான் காடுகளை பற்றி வருகிறபோது, அதிலே இருக்கிற ஆக்கிரமிப்புகளையும், காடுகளை யாருக்கும் கொடுப்பதற்கு எந்தவிதமான அதிகாரமும் இன்றைக்கு மாநில அரசாங்கத்திற்கு இல்லை. ஆகையினால்தான் பல இடங்களில் காடுகள் குறித்து, மாநில அரசு கடுமையாக இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்: ஆக்கிரமிப்பாளர்கள் அல்ல. இவர்கள் 20 அல்லது 25 ஆண்டு காலம் அந்த இடத்தில் இருந்து கொண்டிருப்பவர்கள். பொய்யான ஆக்கிரமிப்பாளர்கள் என்று தவறான காரணம் காட்டி, வெளியேற்றப்படுகிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை முற்றிலும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். காடு என்று சொல்லி விட்டால்— அது காடு என்று வரையறுக்கப்பட்டு விட்டால், அதற்கு பூரண அதிகாரமும் மத்திய அரசுக்கு வந்துவிடுகிறது. அது காடு இல்லாவிட்டாலும்கூட, இன்னும் சொல்லப் போனால், பிள்ளையைப் பெறுவதற்குத்தான் பெற்றோருக்கு உரிமை இருக்கிறது; கொல்வதற்கு உரிமை இல்லை என்பதைப் போல, காட்டை வளர்ப்பதற்கு மட்டும்தான் மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. காட்டை வெட்டுவதற்கோ அதை ஆக்கிரமிப்பு செய்வதற்கோ, அதற்கு பட்டா கொடுப்பதற்கோ எந்த அதிகாரமும் மாநில அரசுக்கு இல்லை; சட்டம் அப்படி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளம், மீன்வளத் துறை, வன வளத் துறை மூலமாக நடைபெறக்கூடிய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு அனுமதி தந்திருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் எனக்கு முன்னதாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைத்திருந்த போதிலும்கூட, இன்றைய தினம் வனத்துறையை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால்,



வனத் துறையைப் பாதுகாப்பதிலே நமது அரசு கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். வனத்துறை மிக அவசியமானது. வனத்துறையைப் பாதுகாத்தால்தான் மழை வளத்தைப் பாதுகாக்க முடியும். மழை வளத்தைப் பாதுகாத்தால்தான், நீர் வளத்தையும், நில வளத்தையும் கூட நாம் பாதுகாப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும். ஆக, நாம் தமிழகத்திலே இருக்கக் கூடிய வன வளங்களை, கொள்ளையரிடமிருந்து முதலிலே காபந்து பண்ண வேண்டும்; பாதுகாக்க வேண்டும். குறிப்பாக தமிழ்நாட்டில் காடுகளுக்கு, தமிழக அரசு தொடர்ந்து பல்லாண்டுகளாக, பல இலட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து, காடுகளை வளர்ப்பதற்காக திட்டமிட்டு இருந்த போதிலும்கூட அரசாங்கம் தன்னுடைய வருவாய்களை வருடத்திற்கு வருடம் பல கோடிக் கணக்கான ரூபாய்களை— இலாபத்தை எதிர்பார்க்கிற அதே நேரத்திலே. இன்றைக்கு காடுகளை வெட்டி அழிக்கக்கூடிய மோசமான நிலைமையைப் பார்க்கின்றபோது, மிகவும் வேதனை அடையக்கூடிய நிலைதான் இருக்கிறது.

பிற்பகல் 15.25

சந்தனமரக் கடத்தல் பேர்வழி வீரப்பனைப் பற்றித் தொடர்ந்து இந்த அவையிலே பல்வேறு விவாதங்கள் நடத்தியிருக்கிறோம். ஆனால் இதுவரையிலும் அந்த வீரப்பனை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்றைக்குச் சந்தன மரங்களைக் கடத்துகிற ஒரு மிகப்பெரிய மோசடியை அதுவும் தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் மிகப் பெரிய நஷ்டத்தினை உண்டாக்கக்கூடிய விதத்தில் வனத்துறை காவல் அதிகாரிகளோடு சேர்ந்து இன்றைக்கு பல்வேறு மரங்கள் தீவிரமாகக் கடத்தப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. குறிப்பாகப் பல ஆண்டு காலமாக, இங்கே நம்முடைய அதிகாரிகள் கொடுத்திருக்கின்ற கொள்கைக் குறிப்பைப் பார்க்கிற போது அலங்காரமாக எழுதி வைக்கப்பட்டிருக்கலாம். காடுகள் அதுபோன்று இருக்கிறதா என்று சொன்னால் அவ்வாறு இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆக, காடுகளைப் பாதுகாப்பதன் மூலமாகத்தான் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலும் கூட நீர் வளம், நிலவளம் ஆகியவற்றைப் பாதுகாக்க முடியும். அப்படிப் பாதுகாப்பதால், தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அடிப்படைக் காரணமாக அது உதவும்.

காடுகளை வளர்ப்பதில் அரசு கவனம் செலுத்துவதைப் போன்று, புதுப்புது ரகமான விதைகள் ஹெலிகாப்டர் மூலம் தெளிப்பதற்கு நாம் முயற்சிகள் எடுத்துக் கொள்ளுகிறோமே தவிர, மரங்களை வெட்டி அழிக்கிற மனிதர்களைப் பிடிப்பதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவில்லை

என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, அதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, தர்மபுரி, சேலம், கோவை, திருச்சி போன்ற இடங்களில் சந்தன மரங்கள் நிறைய இருக்கின்றன. மடித்துப்போன மரங்கள் இன்றைய தினத்திலே வெட்டப்பட்டிருக்கிற மரங்கள் இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்கள், ஏலம் விடப்படாமல் தேங்கிக் கிடப்பதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அப்படித் தேங்கிக் கிடக்கின்ற மரங்களையெல்லாம் காலத்தோடு ஏலம் விட்டால் அரசுக்கு லாபம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு இந்த அவையிலே நான் உரை நிகழ்த்துகிறபோது சொன்னேன். சந்தன மரங்களையெல்லாம் வெட்டி, பவுடர் ஆக்கி அடுக்கப்பட்டு, அதன் மூலம் மூட்டையாகக் கடத்தப்படுகிறது என்று சொன்னேன். மரங்களைக் கடத்தினால்தான் தெரிகிறது. பவுடராகக் கடத்தினால் தெரியாது என்கிற காரணத்தால், இன்றைக்கு சந்தனமரங்கள் தமிழகத்திலே அதிக அளவிலே வெட்டி கடத்தப்படுகிறது. தமிழகத்திலே இதுபோன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதையெல்லாம் தடுப்பதற்கு நமது அரசு முயற்சி எடுக்க வேண்டும். இவ்வாறான பாதுகாப்பு முயற்சிகளைச் செய்தால்தான் காடுகளை நாம் பாதுகாப்பதற்கு ஒரு முறையான திட்டமாக அமையும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக் கால்நடைத் துறையின் மீது எனக்கு முன்பு பல உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கால்நடை துறையை நவீனமாக்க வேண்டுமென்ற அளவிலே பல்வேறு திட்டங்களைச் செயற்குறிப்பிலே கொடுத்திருந்த போதிலும், அதற்கான முயற்சியை நமது அரசு எடுப்பதோடு, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஈச்சங்கோட்டையில் கால்நடைப் பராமரிப்பு நம்முடைய அரசின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையிலே, சிறப்பான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்திலே கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஒரத்தநாட்டில் உள்ள ஈச்சங்கோட்டையில் கால்நடை மருத்துவக் கல்லூரியைத் துவக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியில் கொருக்கை என்ற ஒரு இடம் தமிழகத்திலே கால்நடை அபிவிருத்தி அதிகமாக உற்பத்தியாகி, மிக அற்புதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது அதனால்தான், ஈச்சங்கோட்டை போன்ற இடங்களிலெல்லாம் அது பரவலானது. அந்தக் கால்நடைகள் நாளுக்குநாள் குறிப்பாக, மாடுகள் நலிவுற்ற நிலையிலே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்தக் கொருக்கை பசுப் பண்ணையை அபிவிருத்தி செய்து, அதைத் திரும்பவும் நல்ல நிலைக்குக் கொண்டுவந்து, அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களின் வேலைவாய்ப்புக்கும் திட்டங்களைத் துவக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நூற்றுக்கணக்கான ஏக்கர் அரசு நிலங்களில் போதுமான கால்நடைகள் வளர்ப்பதற்கு வசதியான இடங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. அதை நீங்கள் எடுத்துக் கொண்டு கால்நடை வளர்ப்பை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். .

கால்நடை மருந்தகங்களில் உள்ள நிலையை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மனிதர்கள் உடல்நிலை சரியில்லாதிருந்தால் உடனடியாக வாகன வசதியின் உதவியால் மருந்தகங்களுக்கு செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆனால் மாடுகள் நோயுற்றால், மருத்துவர்கள் அந்த மாடுகள் நோயுற்றிருக்கும் இடத்திற்கு வசதியாகச் சென்று வைத்தியம் பார்ப்பதற்கு ஏதுவான சூழ்நிலையில் கால்நடை மருந்தகங்கள் இல்லை. தொலைபேசி வசதி வழங்குவதன் மூலம் உடனடியாக கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மக்கள் மருத்துவர்களோடு தொடர்பு கொண்டு தங்களுடைய மாடுகளுக்கு வைத்தியம் பார்த்துக்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். ஆகவே நீங்கள் எல்லா மருந்தகங்களுக்கும் தொலைபேசி வசதியைச் செய்துகொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5.30

என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் இருக்கின்ற தாலுக்கா தலைநகரத்தில் இருப்பது மருந்தகமாக இருக்கிறது. அதை மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை இந்தத் தடவையாவது அரசு மருத்துவமனையாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீன்வளத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
கள் பலபேர் குறிப்பிட்டிருந்தபோதிலும் நம்முடைய தமிழ்
நாட்டில் இருக்கின்ற கடலோரம் என்பது அனேகமாக ஒரு
நீண்ட தூரக் கடலோரம். இன்றைக்கு மீன் மூலமாக பல
இலட்சக்கணக்கான ரூபாய் அரசுக்கு வருமானமாக வருகிறது.
அதோடு மட்டுமல்ல. மனிதனுடைய உணவில் 25 சதவீதம்
என்ற அளவுக்கு நீரிலிருந்து கிடைக்கக்கூடிய அந்த உணவைப்
பயன்படுத்தக்கூடிய வகையில் நம்முடைய கடலோரங்களில்
இரால் வளர்ப்புப் பண்ணையை நீங்கள் உருவாக்கவேண்டும்.
அதேபோன்று என்னுடைய தொகுதியில் தொண்டியக்காடு
ஒன்றியத்தில் தொண்டியக்காடு என்ற இடத்தில் இரால்
பண்ணை வளர்த்தார்கள். பல இலட்சம் ரூபாய் இலாபகர
மாக அந்தப் பண்ணை இயங்கிக்கொண்டிருந்தது. சமீபத்தில்
அதை நிறுத்திவிட்டார்கள். அதில் நூற்றுக்கணக்கான ஏக்கர்
நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை நீங்கள் திரும்ப
வும் இரால் வளர்க்க எடுத்துக்கொள்ளவேண்டும். அது ஒரு
வசதியான இடத்தில் அமைந்திருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்
பத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்பாகப் பேசியவர்கள் அந்த மருத்துவர்
களின் கோரிக்கைகளை எல்லாம் பற்றி இங்கே சொல்லி
யிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே வித்தியாசம் வேண்டிய
தில்லை. அவர்களும் டாக்டர்களுக்குப் படித்தவர்கள்தான்.
எனவே மருத்துவர்களுக்கிடையே இருக்கக்கூடிய வித்தியாசங்
களைப் போக்கி மற்ற மருத்துவர்களுக்கு இருக்கின்ற
சலுகைகள் அனைத்தும் இந்த கால்நடை மருத்துவர்களுக்கும்
நீங்கள் வழங்கவேண்டும். அதில் இருக்கின்ற குறைபாடு
களைப் போக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். சுமார் 1,500 டாக்டர் தமிழகத்தில்
இதுபோன்று இருக்கிறார்கள். டாக்டர்களுக்குள்ளே, அதா
வது படித்தவர்களுக்குள்ளே வித்தியாசம் காட்டுவதன்
காரணமாக பல்வேறு வேலைகளுக்கு அதாவது இந்தத்
தொழிலுக்கே வராமல் மற்றவற்றிற்குப் போகக்கூடிய நிலைமை
இருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் எப்படி
உற்பத்தி செய்கிறார்களோ விவசாய முன்னேற்றம் எப்படி
இருக்கிறதோ அதுபோல் பெரும்பகுதி இலாபகரமாக இருக்
கும் தொழில் இந்த கால்நடை வளர்ப்புத் தொழிலாக
இருக்கிறது. ஆனால் கால்நடைகளுக்கு இன்றைக்கு வரக்
கூடிய புதிய, புதிய நோய்களின் காரணமாக விவசாயிகள்
ஆயிரம், இரண்டாயிரம், ஐந்தாயிரம் ரூபாய் என்று நட்டப்படக்
கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. அதற்கான வைத்திய
முறைகள் போதாத காரணத்தால் கால்நடை வளர்ப்பதையே
இன்று குறைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆக நம்முடைய
மருத்துவர்கள் அவர்களுக்கு உதவுகின்ற வகையில் மாண்புமிகு



உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் குறிப்பிட்டது போல் மாலை நேரங்களில் கிராமப்புறங்களில் மருத்துவமனைகளைத் திறந்து வைத்தால் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் அந்த மாலை நேரங்களில் அந்த மாடுகளுக்கு வரக்கூடிய நோய்களுக்கு மருத்துவம் பார்த்துக்கொள்ளவும் ,புதிய விந்துக்களைச் சேர்ப்பதற்கும் வசதியாக இருக்கும். கால்நடை வளர்ப்பிலே அவர்கள் கவனம் செலுத்துவதற்கு வாய்ப்பாக அமையும். இல்லை என்றால் தாலுக்கா மருத்துவமனை மற்றும் மருந்தகங்களுக்குக் கொண்டு செல்வது இயலாது. அவ்வாறு கொண்டு செல்வது அவர்களுக்கு பெரிதும் சிரமமாக இருக்கிறது. அதேபோன்று தான் இங்கே பலரும் குறிப்பிட்டார்கள். ஒரு வருடத்திற்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 5 கால்நடை மருந்தகங்கள் என்று திறப்பதை 10 ஆகத் திறப்பது மிகவும் அவசியமாகும். அதிலே ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து அதற்கு நிதி வழங்கவேண்டும் என்று இருக்கிறது. அனேகமாக ஊராட்சி ஒன்றியங்களில் பொது நிதியே இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய பணிகளையே முழுமையாகச் செய்ய முடியவில்லை. மின்சாரம், லைட், குடிதண்ணீர் போன்ற விஷயங்களில் கூட அவர்கள் முழுமையாக கவனம் செலுத்த முடியாத இந்த நேரத்தில் கால்நடைகளுக்கு என்று எந்த அளவுக்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து நிதி பெற்று அதைப் பராமரிக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். அந்த வகையில் அரசே நேரடியாக அதைச் செய்வதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபட வேண்டும், ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு அனுமதி தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 5.35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ச. சுந்தரராஜ்.

**டாக்டர் ச. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு திட்டம், காட்டு வளத்துறை மற்றும் மீன் வளம் ஆகிய கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்பு பெரும்பாலும் கிராமங்களில் விவசாயிகள் பயன்படுத்தும் தொழிலாக இருந்து வருகிறது. அந்த விவசாயிகள் விவசாயத்தை மட்டும் நம்பி இராமல் நல்ல வருமானம், உபரி வருமானம் வருகின்ற ஒரு தொழிலாக

அது இருந்து வருகிறது. கிராமங்களில் ஆடு வளர்த்தல், மாடுகள் வளர்த்தல், கோழிகள் வளர்த்தல் இவ்வாறு பல்வேறு கால்நடைகளை வளர்த்து அவர்கள் ஆதாயத்தை பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாடு வளர்ப்பு உழவர்களுக்கும் உழுவதற்கும் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கும் மட்டுமின்றி பசுமாட்டிலிருந்து உணவாக பாலையும் நாம் பெறுகிறோம். கோழிகளிலே இருந்து உணவாக இறைச்சியையும், முட்டையையும் நாம் பெறுகிறோம். அந்த கால்நடை துறையைத் மிகத் திறமையாக நடத்துவதற்கு அரசு பல்வேறு திட்டங்களை நம் முன்னே வைத்துள்ளது.

உறை விந்து உற்பத்தியை அதிகப்படுத்துதல், மற்றும் தரமான கலப்பின கோழிகளை உற்பத்தி செய்தல், செயற்கை கருவூட்டுதலை விஸ்தரித்தல், உறை விந்து சேமிப்பு நிலையங்கள், தரமான தீவன உற்பத்தி பெருக்குதல் ஆகிய பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. இது மட்டுமின்றி செம்மறி ஆடுகள் வளர்ப்பதற்கும், வெள்ளாடுகளை வளர்ப்பதற்கும், கன்று வளர்ப்பதற்கும், கோழி வளர்ப்பதற்கும் பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறது. செம்மறி ஆடுகள் வளர்ப்பதற்கு நிலமற்ற விவசாயிகளுக்கு 25 பர்செண்ட் மானியமாகக் கூட கொடுக்கிறது. ஆகவே, இந்த மானியத்தைப் பயன்படுத்தி அனேக ஒன்றியங்களில் அந்த துறையில் இருப்பவர்கள் ஆடுகள் வாங்காமல் லோன்கள் வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இதிலே தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, அவ்வாறு ஆடுகள் வாங்காமல் வேறு தொழில் செய்வதை கட்டாயமாக தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்று வளர்ப்பு திட்டத்திற்காக மானியமாக அரசு நல்ல கன்றுகள் வளர்ப்பதற்கு கொடுக்கின்றது. அது மட்டுமல்லாமல் இந்த கால்நடை பராமரிப்பதற்காக வருடத்திற்கு ஒரு மருந்தகத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறது. ஆனால் அடிக்கடி முதல் யூனிட்டில் செய்கின்ற இந்த காலக் கட்டங்களில் இந்த பணம் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே அவ்வாறு அந்த மருத்துவமனைகளுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகையை 20 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரமாக உயர்த்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கிளை நிலயங்கள், சப்-செண்டர்கள் மாலையிலே செயல்படவேண்டும். ஏனென்றால் ஒரு 'அனிமல்' வீட்டுக்கு வரும்போது கிட்டத்தட்ட 6 மணியிலிருந்து 8 மணிக்குள் இன்செமினேசன் பண்ணவேண்டும். ஆகவே நடமாடும் இன்செமினேஷன் யூனிட் போன்று பல்வேறு யூனிட்டுகள் அமைத்து உடனுக்குடன் அது செயல்படுவதற்கு ஏற்றபடி



வைக்க வேண்டும். அதே சமயத்தில் சப்-செண்டர்கள் மாலையிலே திறந்து வைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வெடரினரி டாக்டர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கிட்டத்தட்ட 400 பேர்களுக்கு மேல் வழங்கப்படாமல் இருக்கிறது. சினை ஊசி போடுவதற்கு முன்பு ரூ. 5 என்று இருந்தது. இப்போது ரூ. 7.50 என்று ஆகியிருக்கிறது. ஒரு தடவை சினை பிடிக்கா விட்டால் மறுபடியும் சினை பிடிப்பதற்கு இலவசமாக அந்த ஊசியைப் போடுவதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும்.

ஆடு அறுக்கின்ற சில ஸ்லாட்டர் அவுஸ்களில் பெரும்பாலும் தண்ணீரே இல்லாமல் இருக்கிறது. ஆடுகளை ஸ்லாட்டர் அவுசிலிருந்து அறுத்து கடைகளுக்கு எடுத்துச் செல்லும்போது அதை கவர் பண்ணாமல் சைக்கிளில் வைத்துத்தான் ரோடுகளிலே கொண்டு செல்கிறார்கள். அது சுகாதார கேடு விளைவிக்கின்றது. ஆகவே ஒரு கவர் பண்ணின வண்டியில் அந்த ஸ்லாட்டர் அவுசிலிருந்து ஆடுகளை கொண்டு செல்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாயைப் பொறுத்தமட்டில், இப்போது ஒவ்வொரு வீட்டிலேயும் நகரங்களில் நாய் இருக்கின்றது. நாய் வளர்க்கிறார்கள். டோபர்மேன் போன்ற பல்வேறு நாய்கள் 2 ஆயிரம் ரூபாய்க்கு மேற்கொண்டு விற்கப்படுகிறது. அரசு திருட்டுக்களைப் பிடிப்பதற்குக் கூட இந்த நாயைப் பயன் படுத்துகிறது. சைதாப்பேட்டை போன்ற கால்நடை மருத்துவ மனை வளாகத்தில் ராஜபாளையம், கோம்பை போன்ற நாய்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. இங்கே இந்த நாய்களை வாங்குவதற்கு கிட்டத்தட்ட 200 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் பதிவு செய்து வைத்திருக்கிறார் கள். இவ்வாறு திருட்டினைப் பிடிப்பதற்கும் மற்றும் வளர்ப்பதற்கும் பயன்படுத்தும் நாய்களுக்கு அரசு முக்கியத் துவம் கொடுத்து நல்ல திட்டங்களை வகுத்து அதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆடு ஆராய்ச்சி நிலையம் ஒன்றுமே இல்லை. அது மட்டுமல்லாமல் கால்நடை ஆராய்ச்சி நிலையம் யுனிவர்சிட்டியில் செயல்படாமல்தான் இருக்கிறது. ஆகவே கால்நடை ஆராய்ச்சி நிலையம், ஆடு ஆராய்ச்சி நிலையம் ஆகியவை அங்கே ஒரே இடத்தில் வைக்க

வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.
பரமக்குடியில் மருத்துவமனை இல்லாமல் டிஸ்பென்சரி
மட்டும்தான் கால்நடைக்கு இருக்கிறது. ஒரு நாளைக்கு
60க்கு மேற்பட்ட கேஸ்கள் வருகின்றன. ஆகவே அங்கே
ஒரு வெடரினரி கிளினிக் சென்டர் ஆரம்பிக்க வேண்டும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
அது மட்டுமல்லாமல் நோய் ஆராய்ச்சிக் கூடமும் இராமநாத
புரம் மாவட்டத்திலே ஒன்று கூட இல்லை. ஆகவே இராம
நாதபுரம் மாவட்டம் கால்நடை பொறுத்தமட்டில் இந்த
மாநிலத்திலேயே அதிகமாக வளர்க்கக்கூடிய ஒரு மாவட்டமாக
இருக்கிறது. ஆகவே அங்கே கால்நடை நோய் ஆராய்ச்சிக் கூடமும்
கட்டாயம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
பல்வேறு கால்நடைகள் இருப்பதால். உறை
விந்து திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை
ஒன்றை அமைக்க வேண்டுமென்று இத்தருணத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பகல் 5.40

ஆடு மேய்ப்பவர்கள் பெரும்பாலும் இராமநாதபுரம்
மாவட்டத்தில் இருக்கின்ற நிலையில் அங்கே குடிப்பதற்குக்
கூட தண்ணீர் இல்லாமல் பல்வேறு பகுதிகளுக்கு அவைகளைக்
கொண்டு செல்கிறார்கள். அவர்கள் எப்போதுமே புரட்சித்
தலைவி அவர்களுக்கும், அற்தகு முன்னால் புரட்சித் தலைவர்
அவர்களுக்கும் தான் தங்கள் ஓட்டுக்களைப் போடுவார்கள்.
கடந்த அரசு ஒரு ரூபாய் என்று ஒரு ஆட்டுக்காக இருந்த
வீதத்தை 3 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. ஆகவே புரட்சித்
தலைவியை மட்டுமே நம்பியிருக்கின்ற யாதவ மக்களுக்கு
முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அப்படி உயர்த்தப்பட்ட
அந்தத் தொகையை ரத்து செய்து மறுபடியும் ஒரு ரூபாயாக
அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் பண்ணை வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில்
தரமான பாலை நியாய விலையில் கொடுக்க வழிவகை
செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் விலைவாசி எல்லாம்
ஏறியிருக்கும் சூழ்நிலையில் பால் பண்ணைத் தொழில் நடத்
துபவர்களுடைய பாலுக்கு அதிக விலை இல்லாததால்
அந்த பால் பண்ணை தொழில் மூலம் அவர்
கள் நஷ்டம் அடையும் நிலை உள்ளதால் கிராமப் புறங்
களில் மாடுகளை வைத்து வளர்க்கின்ற அந்த விவசாயிகளு
டைய பாலுக்கு நியாயமான, நல்ல விலை வழங்க வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடியுங்கள்.

**டாக்டர் ச. சுந்தரராஜ் :** ஒரு நிமிடம். எங்கள்
இராமநாதபுரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 7 ஆயிரம்



லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இராமேஸ்வரத்தில்
உற்பத்தி செய்யப்படுகிற பால் காரைக்குடிக்கு கொண்டு
செல்லப்பட்டு, அங்கே பதப்படுத்தப்பட்டு திரும்பவும்
இராமேஸ்வரம் வருகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அரசுக்கு
பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்
டத்திற்கும் இணையமும், அங்கேயே குளிரூட்டும்
மற்றும் பதப்படுத்தும் நிலையங்களையும் அமைக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காட்டு வளர்ப்புத் துறையைப் பொறுத்த
வரையில், உலகையே குளிரச் செய்கின்ற மற்றும்
வெப்பத்தைத் தணிக்கும் தொழிலை இந்தத் துறை செய்கின்ற
கிறது. அதற்காக, நீர் ஆதாரத்தைப் பயன்படுத்தி, அந்த
நிலத்தின் மூலம் மரம் வளர்ப்பதற்கும், தண்ணீர் கிடைப்
பதற்கும்........ (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தேனி பன்னீர்
செல்வம்.

***திரு. தேனி பன்னீர்செல்வம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் வர்க்கத்தின்
அனைவரோடும் தொடர்புள்ள இன்றியமையாத தொழில்களாக
இருக்கக்கூடிய கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்
வளம் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீது
பேசுகின்ற வாய்ப்பினை தந்தமைக்காக எங்களுடைய இதய
தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்
தலைவி அவர்களுக்கும், பேரவைத் தலைவராகிய தங்களுக்கும்
என்னுடைய பணிவான நன்றியையும், வணக்கத்தையும்
தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில்
இன்றைக்கு இந்தக் கொள்கைக் குறிப்பிலேயும், இங்கே வழங்
கப்பட்டிருக்கின்ற பல்வேறு புள்ளி விவரங்களிலும் பல்வேறு
நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தாலும், என்னுடைய
தொகுதியைப் பொறுத்தவரையில், போடிநாயக்கனூர் தொகு
தியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அவர்களுடைய தொகுதியாக இருக்கின்ற
இந்தத் தொகுதியை நல்ல முறையிலே பராமரிக்க வேண்டு
மென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ராசிங்காபுரம், தேவாரம் ஆகிய இரண்டு இடங்
களிலும் புதிதாக கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தித் தர
வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் பணிவோடு கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். அதேபோல பால் குளிரூட்டும்

நிலையங்கள் நகர்ப்புறத்தில் இருக்கின்றன. அதற்கு அடுத் தாற்போல் தேனியில் இருக்கிற ஒரு இடத்தில் ஒரு சிறிய பால் குளிரூட்டும் நிலையத்தை 10 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்த அதனுடைய விரிவாக்கப் பணி கள் இந்த ஆண்டு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருக் கிறது. அப்படி விரிவாக்கப் பணிகள் நடைபெறுகின்றபோது அதற்கான புதிய கட்டடங்கள் தேனி தொகுதியில் இருக்கிற வீரபாண்டியை அடுத்த மாரியம்மன் கோயில் திருவிழாவைக் கொண்டாடுகிற அந்த ஆற்றின் கரை ஓரத்திலே, அந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித் திருக்கிறார்கள். அது பொது மக்களுடைய வசதிக்கு இடை யூறாக இருக்கும். லட்சக்கணக்கான மக்கள், பக்தர்கள் கூடுகின்ற வீரபாண்டி மாரியம்மன் கோயில் திருவிழா நடை பெறும்போது அங்கே வருகின்ற பக்தர்களுடைய வசதிக்காக வாகனங்கள், மற்றும் தங்கும் இடம் போன்றவற்றுக்காக அந்த இடம் ஒதுக்கப்பட்டு, கடந்த பல நூறு ஆண்டுகளாக பயன் படுத்தப்பட்டு வரும் அந்த இடத்தை, பால் குளி ரூட்டும் நிலையம் ஏற்படுத்துவதற்கு தற்போது தேர்வு செய் திருப்பதாக நான் அறிகிறேன். செய்தால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பக்தர்களுடைய மனதைப் புண் படுத்திவிடும் என்பதை இந்த நேரத்தில் நான் அவையின் வாயி லாக எடுத்துக் காட்டி, வேறு இடத்தில், பக்கத்தில் இருக் கக்கூடிய பொருத்தமான இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்படுவதற்கும், அதனை அமைப்பதற்குமான தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

பிற்பகல் 5.45

இப்போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும், தனிப்பட்ட முறையிலும் பால் உற்பத்திச் சங்கங்கள் நிறைய செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பால் உற்பத்திச் சங் கங்கள் கூட்டுறவு முறையிலே செயல் படுத்தப்படும்போது கறவை மாடுகள் வாங்குவதற்கு தற்போது 3,500 ரூபாய் கடன் உதவி வழங்கப்படுகிறது. அந்த 3,500 ரூபாய்க் கடன் உதவியில் நிச்சயமாக நல்ல தரமான மாடுகள் வாங்கு வதற்கு இயலாது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லவிரும்புகிறேன். மேலும் தற்போது இருக்கும் யூனிட் காஸ்ட் என்று இருக்கும் கடன் உதவித் தொகையை 6,000 ரூபா யாக உயர்த்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல ஆடு வளர்ப்புக்காக யூனிட் காஸ்ட் அதாவது 20 ஆடுகள், 1 கிடா வாங்க வேண்டுமென்றால்,



6,000 ரூபாயில் தரமான ஆடுகளை வாங்க முடியாது. எனவே அதற்கான யூனிட் காஸ்டை 10,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மீன் வளத்தைப் பொறுத்தவரையில் உள் நாட்டு மீனவர் கள் சங்கம் என்று தற்போது கிராமப் பகுதிகளில் மீனவர் சங்கங்கள் இருக்கின்றன. அந்த உள் நாட்டு மீனவர் சங்கம் முறையான மீனவர்களைக் கொண்ட சங்கமாக பெரும்பாலும் இருப்பதில்லை. முறையான மீனவர் சங்கங்கள் பெரும் பாலும் கடற்கரை ஓரங்களில்தான் இருக்க முடியும். கிரா மங்களில் இருக்கிறவர்கள் மீன் பிடிக்க பயிற்சியைப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லி, போலியான தகவல் சொல்லி, கடந்த ஆட்சிக் காலத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பல்வேறு மீன் பிடி சங்கங்கள் முறைகேடாக நடந்து வருகின்றன. உதார ணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். அதிகாரிகள் ஒரு குளத்தை மீன் பிடிக்கவும், மீன் வளர்க்கவும் தேர்ந்தெடுத்து அங்கே இருக்கும் உறுப்பினர்களை அதற்குப் பொறுப்பாளி யாக்கி, மீன் குஞ்சுகளை குளத்திலே விடும்போது, அந்த மீன்களுக்குப் பாதுகாப்பாக மீனவர் சங்கங்கத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள். ஆனால் அப்படி அனுமதி பெற்றுவிட்டு, அரசு உதவியோடு மீன்களை வளர்த்து, இறுதியில் அதன்மூலம் அரசுக்கு வரவேண்டிய வருவாய் வராமல், மீன் பிடிச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஏமாற்றும் நிலை யில்தான் இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு சந்தர்ப் பங்களில் அரசு அதிகாரிகளைக் கைக்குள்ளே போட்டுக்கொண்டு மீன் பிடிச் சங்க உறுப்பினர்கள் அந்தப் பகுதியில் உள்ள உள்ளூர் செல்வாக்கை வைத்து அவர்கள் இஷ்டத்திற்கு, அவர்கள் சுய லாபத்திற்கு அவற்றை எடுத்துச் செல்லும் நிலைமை தற்போது இருக்கிறது. எனவே மீன் பிடி உள் நாட்டு மீனவர்கள் சங்கங்களுக்கு மீன் பிடிக்கும் உரிமையை வழங்கும்போது அதிலே உள்ள குறைபாடுகளை எல்லாம், பல்வேறு கிராம மக்களை அழைத்துப் பேசி, நீக்கி சீர் ருத்தம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய போடி தொகுதியில் மினாட்சி புறம் கண்மாய் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கண்மாயிலே மீன் பிடிப்பது சம்பந்தமாக தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு தனி நபருக்கும், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய 4,5 கிராம மக்களுக்கும் கடந்த 3 மாத காலமாக பிரச்சினைகள் இருந்து வருகிறது. அந்தக் கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள் தங்களுடைய தண்ணீர் தேவைக்காக குளத்தில்

நிறைய தண்ணீரைத் தேக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதே நேரத்தில் மீன் பிடிப்பு உரிமையைப் பெற்றுள்ள தனி நபர் தண்ணீரை நிறையத் தேக்கும் வாய்ப்புக்களைத் தடுத்து மழைக்காலங்களில் ஓடி வரும் தண்ணீரை ஆற்றிலே விடும் நிலைமையைச் செய்து கொண்டு வருகிறார்கள். அப்படிப் பட்ட நிலைமை காரணமாக விவசாயிகளுக்கும், மீன் பிடிக்கிற உரிமையைப் பெற்றிருக்கிறவர்களுக்கும் கடந்த 3 மாதக் காலமாக கடுமையான பகை இருந்து வருகிறது. இதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். நான் கூட 23-ஆம் தேதி கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறேன். அவை யிலே அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் வரும்போது நிறைய பேசலாமென்று கருதி, அடுத்து வனத் துறையைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வனத் துறையைப் பற்றி இங்கே பேசிய கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார் கள். வனத் துறையைப் பொறுத்தவரையில் ஏழை எளிய தொழிலாலர்களுக்காக வாதாடிய நிலையை நானும் உறுதி யாக ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கம்பம் பள்ளத் தாக்கிலே, மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த கம்பம், கூடலூர், லோயர் காம்ப், ஆண்டிப்பட்டி தொகுதியில் உள்ள மேக மலை, மயிலாடும்பாறை போன்ற மலைப் பிரததேசங் களில் கடந்த 25 ஆண்டுகளாக ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் குடியிருந்து வருகிறார்கள்.

5.50 பிற்பகல்

அப்படி இருப்பவர்களுடைய வாழ்க்கைக்கு எந்தவிதமான வருவாயும் இல்லாமல் இருக்கிற சூழ்நிலையில் அந்த மலைப் பிரதேசங்களில் கரடு, முரடாகவும், காடாகவும், மேடாகவும் இருந்த நிலங்களை எல்லாம் அவர்கள் சீர்திருத்தி வாழ்க்கைக்கு ஓர் உத்திரவாதம் வேண்டுமென்ற நிலையில் தங்களுக்குள் ளேயே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு அந்த மலைப் பிரதேசங்களில் 25 ஆண்டு காலமாக குடிசைகள், போட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் குடிசைகளுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய அரசுக்குச் சொந்தமான காடுகளில் ஒரு ஏக்கர் முதல் 2 ஏக்கர் வரை பயிர் செய்து அந்தப் பயிர்கள் மூலம் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

உதாரணமாக மிளகு, ஏலம், காப்பி, போன்ற பணப் பயிர் களை அங்கே விளைவிக்கிறார்கள். இவைகள் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற பணப் பயிர்கள் ஆகும். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது காடுகள் பொதுப் பட்டியலிலே வருகிறது. எனவே லீஸ்



காடுகளுக்கு நாம் அனுமதி வழங்க முடியாது என்று சொன் னார்கள். நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சில பணக்காரர்கள் உயர் நீதி மன்றத்தின் அனுமதியோடு தடை உத்தரவு வாங்கி நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை அவர்கள் கைவசம் வைத்துக் கொண்டுள்ளார்கள். அதே நேரத்தில் அன்றாடம் உழைத்துப் பிழைக்கிற ஏழை எளிய மக்கள் 1 ஏக்கர், அரை ஏக்கர் என்று வைத்துக் கொண்டு தங்களது குடிசைகளைச் சுற்றியிருக்கிற இடங்களில் பலா மரம், மாமரம் போன்ற பலன் தரும் மரங்களை வைத்து பயிரிட்டு அந்த மரங்களின் மூலம் கிடைக்கின்ற பலனை வைத்து தங்களுடைய வாழ்க்கையை சிரமத்துடன் இன்றை தினம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அங்கே தடை விதித்து, பணக்காரர்கள் மட்டும் அங்கே வாழ்வதற்கு வசதி செய்து கொடுத்தால், நிச்சயமாக அரசை நம்பிக் கொண்டி ருக்கிற இந்த அரசின் நம்பிக்கைக்குரிய தலைவியாக இருக் கக்கூடிய புரட்சித் தலைவி மீது மிகுந்த அன்பும், பாசமும் வைத்திருக்கிற அந்த மக்களுக்கு நாம் நியாயம் செய்வதாகாது. எனவே இந்தப் பிரச்சினையில் மனிதாபிமானத்தோடு நடந்து காடுகள் என்பது பொதுப் பட்டியலில் இருந்தாலும்கூட, அந்தப் பொதுப் பட்டியலில் இருக்கக்கூடிய நிலையிலிருந்து அதை மாற்றுவதற்கான முயற்சியை இந்த மாமன்றம் எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கக்கூடிய சாதாரண விவசாயிகள் .... (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்றைய மானியக் கோரிக்கைகளை முன்னிட்டு பதப்படுத்தப்பட்ட பாலும் கோவாவும், ஐஸ்கிரீமும், இறால், மீன் ஊறுகாய்களும், முந்திரிப் பருப்பும், தேயிலையும் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அவர்கள் பெற்றுக் கொண்டு அதே நேரத்தில் எந்தவித இயந்திரங்களின் உதவியும் இல்லாமல் தயாரிக்கின்ற ஏழை மீனவர்கள் பயன் படும் வகையில் அதை நீங்கள் சாப்பிட்டு முடிந்தவரை விளம் பரப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் அந்த ஊறு காய்களுக்கு டிமான்ட் ஏற்படுத்த வேண்டும். அதனால அந்த இனம் வாழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வேலையை மாண்புமிகு உறுப்பினர்கள் செய்ய வேண்டு மென்று பணிந்து கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியதற்கு நன்றி. உறுப்பினர்கள் கூடிய மட்டும் அவருடைய வேண்டுகோளை ஏற்று விளம்பரம் செய்யுங்கள்.

(குறுக்கீடு) அதை நீங்கள் உங்கள் வீட்டில் கொடுத்து உங்கள் வீட்டு அம்மா மூலம் விளம்பரப்படுத்த வேண்டுமென்று தான் கேட்கிறார். விவரமாகத் தான் அமைச்சர் கொடுத் திருக்கிறார். (சிரிப்பு).

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் குறிப்பிட்டபோது, அந்த ஏழை விவசாயிகளும், கூலித் தொழிலாளர்களும் வசிக்கின்ற அந்த இருப்பிடங்களை சொந்தமாக்கித் தரவேண்டும். அவர் கள் பயிர் செய்து வருகிற ஒரு ஏக்கர், அரை ஏக்கர், 2 ஏக்கர் வரை வைத்திருக்கிற நிலங்களை எல்லாம் அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால் நீண்ட காலக் குத்தகைக்கு அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த கோரிக்கையை நான் சொல்லும் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு ஆவின் பாலும், கோவாவும், ஐஸ் கிரீமும் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இங்கே அவைகளை உறுப்பினர்களுக்கு கொடுத்ததற்காக நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். அந்த நேரத்தில் நம்மை எல்லாம் தேர்ந்தெடுத்த அந்த ஏழை எளிய மக்கள் இந்த மாமன்ற த்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிற அந்த மக்களுக்கு உழைக்கும் வர்க்கத்திற்குச் சொந்தக்காரர்களான அவர்களின் கோரிக்கையையும் நீங்கள் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன். காரணம் காடுகள் பொதுப் பட்டியலில் வருகிறது என்று சொன்னார்கள். கேரளாவிலும் இதே நிலைமை இருக்கிறது. கேரளாவில் இருக்கும் அரசுக் காடுகளுக்கு, என்க்ரோச்மென்ட் நிலங்களுக்கு அரசு கடன்கள் வழங்குகிறார் கள். மானியத்தோடு கூடிய பல்வேறு உதவித் திட்டங்களை கேரள அரசு வழங்குகிறது. அந்த நிலங்களின் மூலம் அவர் கள் ஏலம், காப்பி, மிளகு போன்ற அன்னியச் செலாவணி ஈட்டித் தருகிற பொருள்களை விளைவிக்கின்றார்கள்.

பிற்பகல் 5.55

அதே நேரத்தில் தமிழ் நாட்டில் மட்டும் மேற்குத் தொடர்ச்சி மலையோரத்தில் இருக்கக்கூடிய இந்த ஏழை எளிய மக்களுடைய கோரிக்கைகளை ஏற்காமல் மறுப்பது எந்த வகையிலும் நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கிற அதிகாரிகளின் அச்சுறுத் துகின்ற நிலமை மாறவேண்டும். தேனியிலே வனத்துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயரிலே தான் சாந்தகுணம் இருக்கிறதே தவிர செய்கையிலே எந்த வகையிலும் சாந்தகுணம் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கே இருக்கிற ஏழை எளிய தாய்மார்களைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டுவதும், விபச்சாரத் தடைச் சட்டத்தின்கீழ் வழக்குப் போடுவோம் என்று மிரட்டுவதும் போன்ற செயல்களில்



வனத்துறை அதிகாரிகள் ஈடுபட்டு மிரட்டிக் கொண்டி ருக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரிகளை வீரப்பன் போன்ற கடத்தல்காரர்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்த லாமே தவிர, ஏழை எளிய மக்களை அன்றாடம் கூலிவேலை செய்து தங்களுடைய ஒருவேளைச் சோற்றுக்கு அல்லல் படுகின்ற விவசாயத் தொழிலாளர்களை மிரட்டுவதற்கு அனு மதிக்கக்கூடாது என்று பணிவோடு சொல்லி, கிடைத்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பால்வளம், மீன்வளம், வனவளம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது இந்த மன்றத்திலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் களுக்கும் எங்களுடைய தியாகத் தலைவர், தமிழக காங் கிரஸ் கமிட்டியினுடைய ஒப்பற்றத் தலைவர் வாழப்பாடி அவர் களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதுமே மலிவுவிலை மது ஒழிப்பு, கள்ளச் சாராயம் ஒழிப்பு, விடுதலைப் புலிகளைத் தமிழ்நாட்டிலிருந்து அகற்ற எடுத்த கடுமையான நடவடிக்கை ஊராட்சி ஒன்றியங்கள் எல்லா நிலையிலும் தன்னிறைவு பெறுதவற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் உதவி போன்ற புரட்சிகரமான திட்டங்களை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் கிராமப் பொருளாதாரம் என்பது விவசாயத் துறைக்கு அடுத்து பார்த்தால் ஏழை எளிய மக்களு டைய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் பயன்படுகின்ற துறை என்று சொன்னால் அது கால்நடை வளர்ப்புத் துறை தான். எனவே கிராமப்புறங்களில் இருக்கிற வேலைவாய்ப் பற்ற படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்ற வகையில் கால்நடைகள் வளர்த்தல், பால்பண்ணை அமைத்தல், மீன் வளர்த்தல், கோழி வளர்த்தல் ஆகிய தொழில் களைச் செய்வதற்கு இந்த அரசு அதிக அளவில் மானியத்துடன் கூடிய கடன் உதவி அளித்து அந்தச் சிறு தொழில்களைப் பெருக்க வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி நிதி உதவி அளிக்கும்போது அதிலே பல முறை கேடுகள் நடைபெறுகின்றன. அந்த முறைகேடுகள் நடக்காமல்

தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது கல்வி அறிவை வளர்ப்பதற்காக கிராமந்தோறும் பள்ளிக்கூடம் அமைத்ததைப்போல பால் பண்ணை அமைப்பும், மீன் வளர்ப்பும், கோழி வளர்ப்பும் அமைத்து கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்கள் வாழ்க்கை யில் வளம்பெற வெண்மைப் புரட்சியும் சிறுதொழில் புரட் சியும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத் துறை 1958-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்றைக்குத் தமிழ் நாடு பால்வளத்துறை 3 அடுக்கு முறையில் செயல்படுகிறது. அடிப்படையில் கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள், இடையில் மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியங்கள், மேல்மட்டத் தில் மாநில அளவில் அடங்கிய இணையம் என்ற வகையில் இயங்கி வருகிறது.

மாநில பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் பெரு நகர்வாழ் மக்களின் பால் தேவையைப் பூர்த்தி செய்வதோடு வெண்ணைய், நெய், யாலாடைக்கட்டி, களையூட்டப்பட்ட பால் ஆகியவைகளையும் விநியோகித்து வருகிறது. அதற்குத் தேவையான பாலை மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றி யங்களிலிருந்து கொள்முதல் செய்கிறது. மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் கிராமப்புற பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்கிறது. பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டு றவுச் சங்கங்கள் கிராமப்புறங்களிலே மக்களிடம் நேரடி யாகப் பாலை கொள்முதல் செய்து, ஒன்றியங்களுக்கு வழங்குகின்றன.

1981-ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பால் பெருக்குத் திட்டம் அமல்படுத்தப்பட்ட போது ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, பல ஆயிரக்கணக்கான சங்கங்கள் பதிவு செய்யப் பட்டன. 7,000-க்கு மேற்பட்ட சங்கங்கள் கிராமப் பகுதிகளில் உள்ளன. இப்படி கிராமப் புறங்களிலே உருவாகிய சங்கங் களில் பல இன்றைக்கு அழிந்த நிலையில் உள்ளன.

6.00 பிற்பகல்

இந்தச் சங்கங்கள் இப்படி அழிவதற்கு என்ன காரணங்கள் என்பதைக் கண்டறிந்து எந்த அதிகாரிகளும் காப்பாற்ற முயலவில்லை. சங்கங்கள் துவக்கப்படும்போது அந்த ஊரிலுள்ள முக்கிய நபர்களைக் கொண்டு நிர்வாகக் குழு அமைத்து



நிர்வாகம் அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவர்களில் ஒருசிலர் தங்கள் சுய நலம் கருதி அந்தச் சங்கத்தைச் [illegible] முக்கச் செய்து விடுகின்றனர். சங்கங்கள் ஒன்றியத்திற்குப் பால் வழங்கும்போது சங்கங்கள் அனுப்பிவைத்த பால் கெட்டுப்போனதாகவும், தரம் குறைந்ததாகவும், அளவு குறைந்ததாகவும் இருந்தது என்று சொல்லி பால் கிரையம் பிடிக்கப்படுவதால் அந்தச் சங்கங்கள் நஷ்டத்திற்கு ஆளா கின்றன. அடுத்து பால் குளிரூட்டும் நிலையங்களில் பாலை எடைபோட்டு வாங்காமல் கேன் நிறைய வாங்கிக் கொண்டு பிறகு அளவு குறைவு என்று காட்டி அவர் களுக்கு நஷ்டத்தை உண்டாக்குகிறார்கள். சங்கங்கள் துவக் கப்படும்போது உள்ளூர் இளைஞர்களை, படித்தவர்களை வேலைக்கு அமர்த்துகிறார்கள். அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பணியில் அமர்த்தப்படாததால் தினக் கூலியாகவே கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பணியாற்று கிறார்கள். எனவே, அந்தப் பணியாளர்களின் ஆர்வ மின்மையும் இந்தச் சங்கங்கள் அழிவதற்கு ஒரு காரணமாகும். எனவே, அந்தப் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் செய்து குறைந்த பட்சம் ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருக்கின்ற காடுகளைக் காப்பதன் மூலமும், மேலும் காடுகளை வளர்க்கவும் செய்து நாடு வளம் பெற்றால்தான் இயற்கை வளம் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். சமூகநலக் காடுகளில் பணிபுரிந்து வரும் 600 ஊழியர்கள் தி.மு.க. அரசு காலத்தில் பணிநீக்கம் செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வெற்றி பெற்ற பின்பும், இன்னும் அவர்கள் பணியில் அமர்த்தப்படாமல் இருக்கிறார் கள். மிகவும் கஷ்டப்படக்கூடிய அவர்கள் குடும்பத்திற்கு விளக்கேற்ற அவர்களுக்கு வேலைபோட்டுக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீன்வளம். எல்லா ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் குளங்களிலும் மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத் தின் மூலம் மீன் வளர்க்க ஏற்பாடு செய்து கிராமங்களில் வாழ்கின்ற கிராம மக்களின் தரத்தை உயர்த்தவும் பொரு ளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக என் னுடைய தொகுதியில் பல கிராமங்களில் உள்ள ஊருணி, குட்டைகள், ஏரிகள் ஆகியவைகளில் எல்லாம் மீன் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிமடம் தொகுதியில் கால்நடைகள் அதிக அளவில் வளர்க்கப்படுவதால் எல்லா கிராமங்களிலும், குறிப்பாக

குழுமூர், ஆவகைகுறிச்சி, வரதராஜன்பேட்டை, அழகாபுரம், இடையகுறிச்சி போன்ற கிராமங்களில் கால்நடை மருந்த கங்கள அமைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்திலே பல வகையான கல்லூரிகள் இருக்கின்றன. திருச்சியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. து. மூர்த்தி.

*' திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கிற தமிழகத்தின் காவல் தெய்வம், எங்கள் இதய தெய்வம், தமிழக மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் முதற்கண் தெரிவித் துக்கொள்கிறேன். இன்றைக்கு என்னை சட்டமன்ற உறுப்பின ராகத் தேர்வு செய்து உங்கள் மத்தியிலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்த எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், சீர்காழி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக இருப்பவர்கள் கூட புரட்சித் தலைவி அவர்க ளால் அடையாளம் காட்டப்பட்டுவிட்டால் சட்டமன்ற உறுப்பின ராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் ஆகலாம் என்ற பெரிய வரலாற்றை ஏற்படுத்திய பெருமை எங்கள் இதய தெய்வம் தமிழகத்தின் முதலவர் புரட்சித் தலைவி யைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். எனவே அந்த ஒப்பற்ற என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியை வணங்கி ஒரு சில கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு மீன்வளம், பால் வளத் திட்டங்கள், கால்நடை பராமரிப்பு, வனத்துறை, காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள் கிறேன். இந்தத் துறைக்கு பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒன்றாகும்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எனவே, ஏழையெளிய மீனவர்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிற இந்தத் துறை நல்ல முறையிலே செயல்பட வேண்டும். அப்படி நல்ல முறையிலே செயல்பட்டால்தான் ஏழை மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். இன்றைக்கு சீர்காழி தொகுதியில் கிழக்குப் பகுதி முழுவதும், கடற்கரை ஓரங்களில் அதிக மீனவர்கள் இருந்து கொண்டு வருகி றார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதார நிலையையும் பார்க்கும்போது மிகுந்த வேதனை யைத் தருகிறது. நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏழை மீனவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் நல்ல திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள். எனவே அந்தத் திட்டத்தின் மூலமாக அவர்கள் பொருளாதாரத் திலும் வாழ்க்கைத் தரத்திலும் உயர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 6-05

இன்றைக்கு என்னுடைய சீர்காழி தொகுதியில் திருமுல்லை வாசல் என்ற மீனவர் பகுதி இருக்கின்றது. அங்கே மீனவர்கள் அதிகம் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு விசைப் படகுகள் பெற்றுத் தரவும், மீன் பதப்படுத்தும் நிலையம் ஒன்றை அமைத்துத் தரவும், மீன் உலர்த்தும் தளம் ஒன்றை அமைத்துத் தரவும், மேலும் குளம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்த வசதிகளை நம்முடைய அரசு செய்து கொடுத்தால் மென்மேலும் அங்கே தொழில் செய்கிற மீனவர்களின் பொருளாதாரத்தையும் வாழ்க் கைத் தரத்தையும் உயர்த்த முடியும். எனவே இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் பழையாறு என்று ஒரு கிராமம் இருக்கின்றது. அங்கு மீன்கள் அதிகமாக பிடித்தாலும், அந்த முறையாக வைப்பதற்கும், அதை ஏற்றி வெளியே அனுப்பவும் முறையான நிலையம் கிடையாது. எனவே, அங்கு ஒரு நிலையத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றும், மீன் உலர்த்தும் நிலையம் ஒன்றும், படகு பழுது பார்க்கும் நிலையம் ஒன்றும், வலைகளைப் பின்னுவதற்கு களம் ஒன்றும் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் பழையாறு மீன்பிடி துறைமுகத்தை ஆழப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்தப் பகுதியிலே வாழ்கின்ற மீனவர்கள் இன்னமும்

முறையான வீடுகள் கட்டிக்கொண்டு வாழாமல், குடிசையிலேயே வாழ்ந்து வருகிறார்கள். எனவே அவர்களின் இந்த நிலைமை மாற்றி, அவர்களுக்கு அரசால் கட்டிக் கொடுக்கப்படும் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் தொகுதியில் உள்ள மீனவ கிராமங்களில் இன்னமும் குடிநீர் வசதி இல்லாமல் உப்புநீராகவே இருந்து வருகிறது. எனவே இதற்குமுன் இருந்த தி.மு.க. அரசு இதில் முழுமையான அக்கறை காட்டவில்லை. எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கருணை உள்ளத்தோடு ஏழை மீனவர்களுக்குக் குடிநீர் கிடைப்பதற்கு ஆவன செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் கொடியம்பாளையம், பழையாறு, வடவாமேடு, கொட்டாயமேடு, தாண்டவன்குளம், கூழையாறு, மடத்துக்குப்பம், சாவடிக்குப்பம், தென்னாம்பட்டி னம், முவர்க்கரை, நாயக்கர்குப்பம் போன்ற கிராமங்களுக்காக கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அரசின் செயற்குறிப்பில் இருக்கின்ற இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்தி விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கொடியம்பாளையம் என்ற மீனவ தீவிலிருந்து தென் ஆற்காடு மாவட்டம் இளந்திரைமேட்டை, இணைக்கும் பாலம் ஒன்றினை நம்முடைய அரசு கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தீவில் வாழ்கிற ஏழை மீனவர்கள் இன்ன மும் எந்தவிதமான போக்குவரத்து வசதியும் இல்லாமல் இருக் கிறார்கள். அந்த நிலை மாற, உடனே அவர்களுக்குப் பாலம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்பு மிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ராதாநல்லூர் என்ற கிராமத்தில் ஆசியா கண்டத்திலேயே இரண்டாவது இடத்தைப் பெற்று ஒரு இறால் பண்ணை இயல் படுத்தப்பட்டு வருகிறது. எனவே கடற்கரை ஓரங்களில் உள்ள தரிசு நிலங்களை எடுத்து அந்தப் பகுதியில் இறால் வளர்ப்பதன் மூலம் அன்னியச் செலாவணியை அதிகப் படுத்தவும், ஏழை மீனவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்தவும் அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கு வேலை கிடைக்கவும் வாய்ப்பாக அமையும். எனவே அங்கே செயல்பட்டு வருகின்ற இறால் பண்ணையை மேலும் தீவிரப்படுத்தி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் வாழ்கிற ஏழை மீனவர்களுக்கு அரசு வங்கிகள் மூலம் கடன் கொடுத்து அவர்கள் தொழிலைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



கோட்டையமேடு, கொடியம்பாளையம் ஆகிய தீவுக் கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் தொலை தூரம் செல்கி றார்கள். மேலும் படகுகளில் ஏறி, ஆற்றைக் கடந்து செல்கிறார் கள். எனவே அவர்களுடைய சிரமத்தைக் கருத்தில் கொண்டு அருகிலுள்ள மகேந்திரபள்ளி போன்ற அந்த தீவுக் கிராமங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசின் செலவில் நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களாக உள்ள அனைத்து மீனவர் களுக்கும், அவர்கள் விபத்தில் இறந்தாலோ, உடல் ஊனமுற்றாலோ அவர்களுக்கு முதலமைச்சரின் துயர் துடைப்பு நிதியாக ரூ. 5,000-ல் இருந்து 10 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதற்கு ஏழை மீனவர்கள் சார்பாக என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இன்றைக்கு மீனவர்கள் பகுதியில் இருக்கிற மக்கள், தங்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டாலோ, உடல் நலம் குறைந்தாலோ அவர்கள் ஹாஸ்பிடலுக்கு வரவேண்டுமானால் அங்கிருந்து சுமார் 15 கி.மீ. வரை கடந்து சீர்காழி மருத்துவமனைக்குத்தான் வர வேண்டும். இதனால் காலதாமதம் ஏற்பட்டு ஒருசிலர் இடையி லேயே இறக்க நேரிடுகிறது. எனவே, அவர்களைக் காப்பாற்றவும் அவர்களுக்காக, அவர்கள் மிகுதியாக வாழ்கிற பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு இதய தெய்வம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் ஆறுகளும், குளங்களும் இருக்கின்றன. இதில் எராளமான இடங்களில் (மணி அடிக்கப் பெற்றது) உள்நாட்டு மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் அவர்களுக்கும் மீனவர்களைப் போல் பண வசதி அளித்து வங்கிகள் மூலம் கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் அதன் மூலம் அவர்க ளுடைய பொருளாதாரம் மேம்படவும், அவர்களுடைய வாழ்க்கை உயரவும் முடியும் என்பதை தெரிவித்து, அதை உடனே நிறைவேற்றித்தர வேண்டுமென்று நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு எங்கள் பகுதியில் வாழ்கிற மீனவ மக்களுக்கு இன்னும் சொந்தமாக வீடு, குடி இருக்க பட்டா வழங்கப்படாமல் நீண்ட காலமாக இருந்து வருகிறது. எனவே உடன் அவர்களுக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் காலத்தி லேயே பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அதிகமாக மீனவ சமுதாய மக்களுக்கு நிரந்தரமாக வீடுகள் கிடையாது. அவர்கள் குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். அதில்

தங்கள் வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கான்கிரீட் வீடுகளை வழக்கமாக ஒதுக்குவதை விட, சீர்காழி தொகுதிக்கு அரசால் கட்டி கொடுக்கப்படும் குடியிருப்புகளைப்போல ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

அந்தப் பகுதியில் வாழும் ஏழை மீனவ மக்களுடைய குழந்தைகள் பள்ளிக் கல்வியில் இன்னும் குறைவான தரத்தில் இருந்து வருகிறார்கள். இந்த நிலையிலிருந்து இவர்களை மேம்பாடு அடையச் செய்யவும்,விழிப்புணர்ச்சி ஏற்பட நல்ல தரமான கல்வியை வழங்கவும் கூடுதல் கல்வி நிலையங்களை அவர்களுக்காக ஒதுக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் சரியாக கிடைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, எங்கள் பகுதியில் அருகில் இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் சர்க்கரை ஆலை கழிவின் மூலமாக கிடைக்கும் பொருளை வைத்து அங்கே தீவன தொழிற்சாலை ஒன்றை அமைத்தால் கால்நடைகளுக்குத்தீவனம் பற்றாக்குறை இல்லாமல் இருக்கும். இதனால் கால்நடைகளைப் பராமரிக்கவும், அதன் மூலம் பொருளாதாரத்தை உயர்த்தவும் வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

என்னுடைய தொகுதி பொருளாதாரத்தில் பின்தங்கிய தொகுதி ஆகும். எனவே, வைத்தீஸ்வரன்கோவில் சட்டநாதபுரம், குடவாசல், இராமாபுரம் போன்ற பல பகுதிகளில் கூட்டுறவு பால் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தீவன உற்பத்தி கொஞ்சம் குறைவாக இருப்பதால் பால் உற்பத்தி குறைவாக இருக்கிறது. முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதை வளர்ச்சி அடையச் செய்யாமல் அலட்சியப் படுத்தப்பட்டது. எனவே, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற இந்த நல்ல வேளையில் அங்கே இருக்கிற ஏழையெளிய மக்களுக்கு, வங்கிகளின் மூலமாக, ஒவ்வொரு சங்கத்தின் மூலமாக கறவை மாடுகள் வாங்குவதற்கு நிறைய கடன்களை கொடுத்து, அதன் மூலம் ஏழை விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்தவும், இந்த சங்கங்களை அதன் மூலம் வளர்ச்சி அடையச் செய்யவும், பால் கட்டுப்பாடு வராமல்



பார்த்துக் கொள்ளவும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அளித்த வாய்ப்புக்கு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. அர்ஜுனன்) :** உறுப்பினர் அவர்கள் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தைத் திசை திருப்புகிறீர்கள். அமைச்சரை டிஸ்டர்ப் செய்யாமல் தங்கள் தங்கள் இருக்கையில் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சரஸ்வதி, உங்கள் இருக்கையில் உட்கார வேண்டும். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்கள்.

*'திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று பால்வளம், கால்நடைத்துறை, வனத்துறை மானிய கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல அனுமதி தந்தமைக்கு என்னுடைய நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால்வளச் சங்கங்கள் முழுமையும் இன்றையதினம் தேர்தல் நடத்தப்படாமல், காலம் கடந்து கொண்டிருப்பதால் அந்த நிர்வாகத்தை சரியான முறையில் நிர்வாகம் செய்ய முடியாமல் பால் உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கும், பயனீட்டாளர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே, பால்வள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவாக தேர்தல் நடத்த அரசு முழு முயற்சியும் எடுகக வேண்டுமென்று கேட்டுக் சொள்கிறேன். இந்த கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களை குறைந்தபட்சம் ஒரு ஊராட்சிக்கு ஒரு சங்கம் என்ற அடிப்படையில்அமைப்பதற்கு அரசு நடவடிக்கை யெடுக்க வேண்டும்.

பால் மாடு கடன் வழங்குகிறபோது வங்கிகள் சில ஏரியாக் களை பிரித்துக் கொள்கிறார்கள். அப்படி ஏரியாக்களைப் பிரித்துக்கொண்டு கடன் வழங்குவதற்கு அரசு மானியம் அறிவித்த அந்த வங்கியில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னாலும் அந்த வங்கிகள் காலத்தில் கடன் வழங்குவது கிடையாது. இதனால் பால்மாடு பெறுகிற கடன் வாங்குகிற அத்தகைய அங்கத்தினர்கள் மிகவும் சிரமப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்தக் கடனை விரைவாக வழங்குவதற்கு அரசு துரித நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் சங்கங்கள் அமைக்கிறபோது அந்த பால் முழுவதையும் கொள்முதல் செய்வதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண் டும். சில இடங்களில் பால் அதிகமாக இருக்கிறபோது எடுக்க முடியாமல் நிலைமை வந்து, பாதி பால் எடுத்து, பாதிப் பாலை விற்கமுடியாமல் அந்தக் கடனைத் திருப்பிக் கட்டமுடியாமல் சங்கடங்கள் இருக்கின்றன. எனவே, இதைத் தவிர்த்து எந்த அளவுக்கு சங்கங்களை விஸ்தரித்து அமைக்கிறோமோ அந்த அளவுக்கு அந்த சங்கத்தில் உற்பத்தியாகிற பால் முழுவதையும் கொள்முதல்

செய்வதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும்.
அதே நேரத்தில் குறைந்தபட்சம் ஒரு தூர அளவுக்கு, ஒரு நகரத்தை
மையமாகக் கொண்டோ அல்லது பக்கத்தில் உள்ள பெரிய பேரு
ராட்சியை மையமாகக் கொண்டோ பால் குளிரூட்டும் நிலையங்கள்
அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான், பால் கெடாமல்
பெரிய நகரங்களுக்கு அனுப்புவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்
படுத்தமுடியும். அந்த வகையிலே எடுத்துக் கொண்டால் கிராமப்
புறத்தை மையமாகக் கொண்டிருக்கிற திருவாரூர் நகரத்தில் ஒரு
பால் குளிரூட்டும் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-15

நாம் மாடுகளைக் கொடுக்கிறோம். அந்த மாடுகளைக் கட
னுக்கு வாங்கிக் கொடுக்கிறோம். சங்கங்கள் அமைக்கிறோம்
ஆனால் அந்த அங்கத்தினர்களுடைய மாடுகளுக்கு நியாயமான
விலையிலே தீவனம் வழங்க முடியாத, கொடுக்க முடியாத ஒரு
நிலைமை என்பது இன்றையதினம் இருக்கிறது. நகரத்திலே
உள்ளவர்கள் தீவனங்களை வாங்கிவிட்டால் கூட, கிராமப்
புறத்திலே இருக்கிற அங்கத்தினர்கள், தங்கள் மாடுகளுக்கு நல்ல
தீவனங்களை வாங்கிப் போடுவதிலே பல்வேறு சிரமங்கள் இருக்
கின்றன. ஆகவே இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தரமான
தீவனங்களை வழங்குவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும், ஏற்பாடு
செய்யவேண்டும்.

இன்று உரங்களுக்குத் தரக்கட்டுப்பாடு இருக்கிறது. அதே
போன்று இன்றைய தினம் தீவனப் பொருட்களுக்கு தரக்கட்டுப்
பாடு என்பது கிடையாது. அந்த தீவனங்கள் முழுவதையும்,
இன்றைக்கு தனியார் கம்பெனிகள் உற்பத்தி செய்து, மோசமான
தீவனங்களை, தரக்குறைவான தீவனங்களை அதிக விலைக்கு
விற்று லாபம் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே,
அரசு கவனம் செலுத்தி, தரக்கட்டுப்பாடு சட்டத்தின் கீழ், இந்த
தீவன உற்பத்திக் கட்டுப்பாட்டையும் கொண்டுவர வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி கூட்டுறவுச் சங்கங்கள்
மூலமாக இந்த தீவனங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும்.

அடுத்து, கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் பாலை பெரிய
நகரங்களுக்கு எடுத்துச் செலவதற்கான வாகன வசதிகளை இந்தக்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.
ஏன் என்றால், இன்றையதினம் சைக்கிளிலே கொண்டுவந்து
கொடுப்பதிலே காலதாமதம், பல்வேறு சிரமங்கள், இப்படியான
நிலைமைகள் இருக்கின்றன. இதைத் தவிர்க்கிற வகையில்,
கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாகன வசதிகளை வழங்குவதற்கான
ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.



அங்கத்தினர்களுக்கு கறவை மாடுகளை விரைவாக வழங்கு
வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கால்நடைப்
பண்ணைகளைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு
உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கூறினார்கள். ஈச்சங்கோட்டை
யில் உள்ள கால்நடைப் பண்ணையில் தரமான மாடுகளை உற்பத்தி
செய்து, விவசாயிகளுக்கு வழங்கவேண்டும். அதேபோன்று, தர
மான உயரினக் கன்றுகளை உருவாக்கி, அந்தக் கன்றுகளைக்
கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்
கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். அதே சமயத்தில்
கிராமப்புறங்களில் கால்நடைப் பண்ணைகளை விஸ்தரிக்க
வேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதி என்பதற்குப்
பதிலாக, ஒரு மாவட்டம் என்று சொன்னால், 2, 3 இடங்களிலே
கால்நடைப் பண்ணைகளை விஸ்தரித்து அதிலே தரமான மாடு
களை உற்பத்தி செய்து, அந்தச் சங்கங்களினுடைய அங்கத்தினர்
களுக்கு வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும்.

அதேபோல், கால்நடை மருத்துவம் என்கிறபோது, இன்றைய
தினம் கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் மிகக்குறைவாக
இருக்கின்றன. அந்தக் கிளை நிலையங்கள் இருக்கிற இடத்திலே
கூட, மாடுகளுக்குத் தேவையான சினை ஊசி போடுவதற்கோ
அல்லது அந்த மாடுகளுக்கு இருக்கக்கூடிய நோய்களை ஆய்வு
செய்வதற்கோ ஒரு சரியான வசதியில்லாத இடங்களில் அவைகள்
அமைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த மாடுகளுக்குஆய்வு செய்ய
வேண்டும் என்றால்கூட சாதனங்கள் இல்லாத நிலைமை இருக்
கிறது. அந்தக் கிளை நிலையங்கள் எல்லாம் தனியார் இடங்
களிலே சிறிய கொட்டகை அல்லது ஒரு வீட்டினுடைய சார்பு
இதுபோன்ற இடங்களில் இருப்பதை பொதுவான இடங்களிலே
அரசினுடைய சொந்தக் கட்டிடங்களில் செயல்படக்கூடிய
அளவிற்கு, அந்த மருத்துவ மனைகளை ஏற்பாடு செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், அந்தக் கிளை நிலையங்களில் ஒரேயொரு
மருத்துவர்தான் இருக்கிறார். அவருக்குக் கம்பவுண்டர் கூட
கிடையாது. அந்த மாடுகளைப் பிடித்துக் கொள்வதற்கோ,
அல்லது மற்ற ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதற்கோ யாரும்
கிடையாது. அந்த மருத்துவரே பார்த்து, ஒரு ஆளை நியமித்துக்
கொள்ளலாம். அவருக்கு தினம் இரண்டு ரூபாய் சம்பளம்
கொடுக்கப்படுகிறது. மொத்தத்திலே மாதம் ஒன்றுக்கு 60
ரூபாய்க்கு பணியாற்றக்கூடிய ஊழியர்கள் என்ற நிலையை மாற்றி
அவர்களுடைய ஊதியத்தை எதிர்காலத்தில் உயர்த்திக் கொடுத்து
அவர்கள் நிரந்தரமாக இருப்பதற்கான ஒரு சூழ்நிலையை
உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மருத்துவமனை இருக்கிற இடங்களிலே
அரசுக் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்
கள் இன்றையதினம் எங்கெங்கோ இருந்து, வந்துசேருகின்ற ஒரு

சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்கிற வகையில் மருத்துவமனை இருக்கிற இடத்திலே, வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு, ஊதியம் குறைவு. இதர மருத்துவர்களுக்கு அளிக்கக்கூடிய ஊதிய அளவிற்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று நடமாடும் கால்நடை மருத்துவமனைகளை விஸ்தரிக்க வேண்டும். ஏன் என்றால், கடைக்கோடியான கிராமங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே போய்ச் சேர முடியவில்லை அங்கே இருந்து மாடுகளைக் கொண்டு வந்து மருத்துவமனைகளிலே சேர்க்க முடியவில்லை. அப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் நீங்கள் மாற்றுவதற்கு நடமாடும் மருத்துவமனைகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீன் வளம், மீன் வளத்தைப் பொறுத்தவரையில் எனக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள் குறிப்பாக இந்த மீன் வளம் என்கிறபோது, உள்நாட்டு மீனவர்கள் சங்கம் என்று வைக்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சங்கத்திலே ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்கள் யார்? உண்மையிலேயே மீன் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்களா என்றால் கிடையாது. ஆனால் மீன்பிடி தொழில் தெரியாதவர்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு இருக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். மீன் பிடித்துக் கொண்டு இருக்கக் கூடியவர்கள், அவர்களிடம் அத்துக்கூலி ஆட்களாகத்தான் வேலை செய்கிறார்கள். அப்படி மீன் பிடிக்கத் தெரியாதவர்கள் செலுத்துகின்ற ஆதிக்கத்திலிருந்து அந்த மீனவர் சங்கத்தை விடுவித்து, உண்மையிலே மீன்பிடிக்கக் கூடியவர்கள் கையிலே ஒப்படைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-20

அதேபோன்று கிராமங்களிலே குளங்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் கூட ஓரிரு குளங்களைத்தான் பஞ்சாயத்து பராமரிக்கிறது. அப்படி பஞ்சாயத்து பராமரித்து, பொது ஜன நன்மைக்காக வைத்திருக்கிற அந்தக் குளம் மீன் வளர்ப்பதற்கு விடப்படுகிறது. மீன் வளர்க்கிறபோது அதிலே நிறைய பல்வேறு பொருட்கள் எல்லாம் போடப்பட்டு, தண்ணீர் கெட்டு, அதனால் மக்கள் பயன்படுத்த முடியாத நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே பஞ்சாயத்துக்களுக்கு அரசு அதிகமான நிதி கொடுத்து குளங்களையெல்லாம் ஆழப்படுத்தி வைத்து, ஒரு சில குளங்களை



பொதுமக்களுக்கு பயன்படக் கூடிய வகையில் ஒதுக்கி, ஒரு சில குளங்களிலே மீன் வளர்ப்பதற்கான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கடலோரப் பகுதிகளிலே இரால் வளர்ப்பு என்ற பெயரிலே அந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு நாகப்பட்டினம் தாலுக்காவை எடுத்துக் கொண்டால், கடலோரப் பகுதி என்று சொல்லக் கூடிய திருப்பூண்டியிலேயிருந்து காலப்பிடாகை வரையிலும் ஏறத்தாழ 700 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த 700 ஏக்கர் நிலமும் உப்பு தண்ணீர் அன்றாடம் தேங்கி வடியக் கூடிய ஒரு சிறப்பான பகுதி. அதிலே முன்னால் அரசு இரால் வளர்ப்புப் பண்ணையாக, இரால் வளர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அது இப்போது அப்படியே நின்று போய் விட்டது. அந்த 700 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்தி, அரசுத் துறையிலே இரால் வளர்ப்போமேயானால் நிச்சயமாக அதிகமான வருவாய்களை அரசு பெறுவதற்கு ஒரு சிறப்பான வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மரம். எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். எப்படி காடு வளர்ப்பு நிதி ஒதுக்கி, அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதாக இருக்கிறோமோ அதுபோல் காட்டையே அழித்துக் கொண்டு ஒரு பகுதியிலே வந்து கொண்டிருக்கிறார்கள். இது ஏதோ தற்செயலாக நடந்து கொண்டிருக்கிறது என்று தயவு செய்து அரசு எண்ணக் கூடாது. இதற்கு என்ன பின்னணி? இதை எந்த அரசாலேயும் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. எவ்வளவோ பிரச்சினைகளை கண்டுபிடித்துக் கொண்டிருக்கக்கூடிய அரசு காவல்துறை ஒரு மரம் வெட்டக் கூடிய, காடுகளை அழிக்கக் கூடிய அந்த நபர்களைக் கண்டுபிடிக்க முடியாததற்கு ஒரு அடிப்படை காரணம் என்னவென்றால், அதனுடைய பின்னணி என்ன? அந்தப் பின்னணியை ஆராய்ந்து கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே காடு வளர்ப்பு என்ற பெயரால் மலைகளிலே வாழக்கூடிய, மலையடிவாரங்களிலே வாழக்கூடிய பூர்வீகக் குடியிருப்பு மக்களை வெளியேற்றக் கூடிய அபாயத்தைத் தடுக்க வேண்டும்.

அதே மாதிரி ஏரிகளிலே சமூகக் காடு என்ற பெயரால் வளர்ப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏரிகளிலே காடு வளர்க்கின்ற காரணத்தினால் ஏரிகளில் நீர் தேங்க முடியாமல் கீழே இருக்கக் கூடிய பூமியில் நீர் பிடிப்பு இல்லாமல் குடிதண்ணீருக்குக் கூட தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஏரிகளில் காடு வளர்க்கின்ற அந்தத் திட்டத்தை கைவிட வேண்டும்,

அதே மாதிரி சாகுபடிக்கு லாயக்கான பகுதிகளை, சாகுபடிக்கு விட்டுவிட்டு, கரம்பைப் பகுதிகளில் காடு வளர்ப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அதேமாதிரி தர்மபுரி, சேலம் போன்ற இடங்களில் சாகுபடி நிலத்தை காடு வளர்க்க எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அதேபோன்று ஆற்றங்கரைகளிலே வளர்க்கப்பட்ட தேக்கு மரங்கள் சிறப்பாக இருக்கின்றன. ஆனால் அதைத் தொடர்ந்து செல்வாக்கு உள்ளவர்களே ஏதோ ஒரு விதத்தில் பயன்படுத்திக் கொண்டு, அந்த மரங்களையெல்லாம் தொடர்ந்து வெட்டி அழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு அதில் துரித நடவடிக்கை எடுத்து, மரங்களை பாதுகாப்பதோடு, மேலும் ஆற்றங்கரைகளிலே அந்த தேக்குமரங்களை வளர்க்கக்கூடிய திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு கிராமங்களில் இருக்கின்ற புறம்போக்கு அல்லது ஆற்றங்கரை அல்லது ஏரிகள் இவைகளிலே அந்த கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்களே அந்த மரங்களை வைத்தால் அவர்களே அந்த மரங்களை சொந்தமாக அனுபவித்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பிக்குமேயானால், அந்த கிராமத்திலுள்ள மக்களே ஆளுக்கு ஒரு மரம் வைத்தால்கூட, அந்த ஊர் முழுமையும் சிறப்பான காடாக மாறுவதற்கான வாய்ப்பாக இருக்கும். அப்படி, அரசு எதிர்காலத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தின்மீது பேச அனுமதி கொடுத்த பேரவைத் தலைவருக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

**திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கும் திட்டங்கள், மீனளம், கால்நடை வளர்ப்பு, காட்டுவளம், காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேச அனுமதித்த தங்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு ஒரு சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.

ஒரு நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பாகம் காடுகள் இருக்க வேண்டுமென்று நியதி. அப்படியிருந்தால்தான், அந்த நாடு செழிப்பாக வளரமுடியும். இத்துறையானது மத்திய சர்க்காரின் கீழ் வந்தாலும் கூட, நமது தமிழ்நாடு அரசு வனவள்ச் சட்டத்தை 109 வருடங்களுக்கு முன்பாக அமைத்தது. ஆகவே அந்தச்சட்டத்தைசிறந்த பல விதிகளுடன் மாற்றியமைக்க வேண்டு



மென்று கேட்டுக்கொள்கிறேன். மரங்கள், காடுகள் வளர்க்கப் பட வேண்டும். தகுந்த முறையில் காப்பாற்றப்பட வேண்டும், சோலைகளையும் காடுகளையும் அழிக்கக் கூடாது. இவைகள் எல்லாம் இயற்கையின் செல்வங்களில் மிகவும் சிறந்தது என்பது நமக்குத் தெரியும்.

பிற்பகல் 6-25

Man of the trees என்று அழைக்கப்படும் Richard St. Barbe Baker உடைய நூற்றாண்டு விழா 1989ஆம் ஆண்டு சிறப் பாக உலகம் எங்கும் நடைபெற்றது. மரங்களை குழந்தைகளைப் போல் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னவர் அவர் தான். மரம் இருந்தால் மழை வரும், மழை பெய்தால் பயிர் செழிக்கும், பயிர் செழித்தால் நாடு முன்னேற முடியும் என்ற வகை உள்ளது. காடுகள் இல்லையேல் உணவே இல்லை. மரங்கள் நமக்கு பிராண வாயுவைக் கொடுத்து நாம் வெளியே விடும் கரியமில வாயுவை அவைகள் உட்கொள்ளுகின்றன. வருடத்திற்கு சுமார் 20 ஆயிரம் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன. வருடத்திற்கு சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. ஒரு மரம் கோடிக்கணக்கான தீக்குச்சிகளை செய்வதற்கு உதவுகிறது என்றாலும் ஒரு தீக்குச்சி கோடிக்கணக்கான மரங்களை அழிக்கிறது என்று நமக்குத் தெரியும். Prevention is better than cure என்ற வகையிலே அந்த மரச் செல்வங்களை நாம் காப்பதற்கு முயல வேண்டும். அது மிகவும் முக்கியம் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மரங்களை காப்பதன் மூலம் வன விலங்குகளையும் நாம் காப்பாற்ற கடமைப்பட்டிருக்கிறோம். இயற்கையின் சீற்றத்தினால் அழிந்த பல லட்சக்கணக்கான மரங் களை ஈடுகட்ட ஹெலிகாப்டரின் மூலம் விதைகளை தூவினால்கூட பத்து சதவீதம் மரம் அங்கு வந்தாலும்கூட அது நமக்கு மகிழ்ச்சி யைத் தரும். நாட்டின் செல்வத்தை அது அதிகரிக்கும். சமீப காலங்களில் மரங்கள் அதிகமாக திருடப்படுகின்றன. சந்தன மரங்களின் மூலமாக நமக்கு சுமார் 16 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அத்தகைய சந்தன மரங்கள் கடத்தப்படுகின்றன. நீல கிரி மாவட்டத்தில் கூடலூர் ஜென்மம் ஜமீன் சட்டம் 27-11-1974 முதல் அமலுக்கு வந்தது. ஜென்மம் நிலங்களின் மொத்த பரப்பு 32,400 ஹெக்டேர். அதில் 16,220 ஹெக்டேர் காட்டு பகுதி களாகும். அந்தப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு அதிகமாக இருக்கிறது. சந்தன மரங்கள் திருடப்படுவதோடு பல நல்ல மரங்களையும் திருடுகிறார்கள். அவைகள் காக்கப்பட வேண்டும். ஒரு ஏக்கா ஒன்றரை ஏக்கர் அல்லது 2 ஏக்கர் வைத்திருக்கும் ஏழை விவசாயி களை விட்டுவிட்டு நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில் ஏக்கர்கள் வைத்திருக்கும் அந்த ஆக்கிரமிப்புகளை வெளியேற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எச். எம். ராஜு] [1991 செப்டம்பர் 25

வனச் செல்வத்தைப் பாதுகாக்க அரசு தகுந்த பாதுகாப்புகளை செய்வதோடு சிறந்த பணியாளர்களுக்கு பரிசும் கொடுத்து அவர்களுடைய முன்னேற்றத்தில் அக்கறை காட்ட வேண்டும். அந்த வளர்ச்சியின் மூலமாக சுற்றுலாத் துறைக்கும் அதன் வளர்ச்சிக்கும் வனச்செல்வம் வகை செய்கிறது. Treking, Hiking, Rock—climbing, போன்றவைகள் சில உதாரணங்கள். வன விலங்கு இங்கே காப்பாற்றப்பட வேண்டுமென்றால் மரங்கள், சோலைகள், காடுகள் காப்பாற்றப்பட வேண்டும். கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மேய்ச்சல் நிலத்தில் வனத் துறையினர் தயவு செய்து மரங்களை நட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்திற்கு வனவள ஆராய்ச்சி மையம் ஒன்று அமைத்துத் தருமாறு நான் அரசைக் கேட்டு மத்திய அரசுக்கு இது குறித்து பரிந்துரை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். காட்டுப் பகுதிகளில் பையர்டவர் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அது போல எல்லா காட்டுப்பகுதிகளிலும் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளா மாநிலத்தைப் போல காட்டுப் பகுதிகளில் பையர் ஸ்டேஷன்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளாடுகள் சந்தன மரத்தைத் தின்று பயிர்களை நாசம் செய்கின்றன. அவைகளை தடுப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வனவளத்தை பாதுகாக்கும் சுமார் 2 ஆயிரம் பட்டதாரி பாரெஸ்டர்களுக்கு பதவி உயர்வு கடந்த 28 வருட காலமாக அளிக்கப்படவேயில்லை. அது மிகவும் வேதனைக்குரியது. அவர்களுக்கு உரிய பதவி உயர்வை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பாரெஸ்டு கார்டு அண்டு வாட்சர்களுக்கும் ரிஸ்க் அலவன்ஸ் கொடுப்பதுடன் அவர்களுக்கு நவீன கருவிகளையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செக்போஸ்டுகளில் காவல் பணிபுரியும் காட்டிலாகா பணியாளர்களின் அலுவலகம் மிருகங்களினால் தாக்கப்படுகிறது. அவர்களை பாதுகாப்பாக இருக்கச் செய்ய கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வருவாய்த் துறையிலும் காவல் துறையிலும் ரேஞ்சர்களுக்கு இணையாக தாசில்தார், இன்ஸ்பெக்டர் போன்ற பதவிகளுக்கு நேரிடையாக நியமனம் செய்யப்படுவதில்லை. பதவி உயர்வு மூலம்தான் உயர்த்தப்படுகிறார்கள். அதற்கு மாறாக, வனத்துறையில் ரேஞ்சர்களுக்கு நேரிடையாக தேர்வு செய்வதால் பாரெஸ்டர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதில்லை. ரூ. 1,600 வாங்கும் நம் எஸ்.ஐ. போன்றவர்களுக்கு கொடுக்கப்படுவதுபோல் பாரெஸ்டர்களுக்கும் எல்லாச் சலுகைகளையும் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பால் வளத்தை எடுத்துக் கொண்டால் நம்முடைய தமிழ்நாட்டில் 8,569 கூட்டுறவு பால் சங்கங்களும், 17 ஒன்றியங்களும் உள்ளன. இந்தத் துறையிலே மாடுகள் இறக்கும்பொழுது அந்த விவசாயிகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் வாங்குவதற்கு துரிதமாக செயல்பட வேண்டும். அது தாமதமாவதால் விவசாயிகள் மிகவும் துன்பப்படுகிறார்கள் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைகளைப் பொறுத்தவரையில் மருத்துவமனை டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று கால்நடைகளுக்கு மருத்துவம் பார்க்க வேண்டும். இப்போது நாம் குட்நெஸ் பால், குட்நெஸ் ஐஸ்கிரீம் சாப்பிட்டோம் மிக நன்றாக இருந்தது. அமுல் தயாரிப்பு தரத்திற்கு இவைகள் உயர்ந்துள்ளன. அந்த அளவிலே இருந்தாலும் கூட இதற்கெல்லாம் விளம்பரம் போதவில்லை. விளம்பரம் நல்ல வகையில் செய்ய வேண்டும். நமது விவசாயிகளையும் குஜராத்தில் உள்ள ஆனந்திற்கு கூட்டிக் கொண்டு சென்று வந்தால், இந்த பால் துறையிலே அதிக அளவிலே நாம் வளர்ச்சியடையலாம். மேலும் இந்தத் துறையிலே பணி புரிபவர்களுக்கு ஓய்வு ஊதியம், நிரந்தர பணி அலவன்ஸ்கள் எல்லாம் கொடுத்தால் இன்னும் நன்றாக இருக்கும். சிறப்பு கால்நடை இன விருத்தி திட்டத்தின் கீழ் கலப்பின பசுங்கன்று வளர்ப்பு திட்டத்தில் ஒன்பதாவது மாவட்டமாக நீலகிரி மாவட்டத்தையும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 25] [திரு. எச். எம். ராஜு]

பிற்பகல் 6-30

ஜெர்ஸி மாடுகள் டென்மார்க், ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுத்தால் இதன் மூலமாக அதிக பால் பெருகுவதுடன் அதனுடைய தரமும் நன்றாக இருக்கும். அவர்களுக்கு நல்ல அளவிலே நியாயமான விலையும் கொடுக்கலாம். பாலின் மூலமாகச் செய்யப்படும் ஐஸ்கிரீம், வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டி போன்றவைகளுக்கு நியாயமான விலையை கொடுக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களிலிருந்து, அதிக அளவிலே பால் வேண்டும், நெய் வேண்டும், பாலாடைக்கட்டி வேண்டும் என்று தமிழ்நாட்டிடம் கேட்கிறார்கள். உதாரணமாக கேரளாவைச் சொல்லலாம். அவர்களுக்கெல்லாம் சப்ளை செய்வதற்கு நாம் தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீன் வளத்தை எடுத்துக்கொண்டால் இத்துறையின் மூலம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியையும், அந்நியச் செலாவணியையும் அதிகரிக்க உதவுகிறது. ஊரக வருவாயை அதிகரிக்க உதவுகிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் எங்களது நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி என்ற இடத்திலே பிரசித்தி பெற்ற Trout Fish ட்ரவுட் ஃபிஷ் என்பது அதிக அளவிலே

இருக்கிறது. நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் அதைக் கொடுத்து உதவினால் மிகவும் நன்றாக இருக்கும். மீன் வளர்ச்சிக்காக எங்களுடைய மாவட்டத்தில் ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை அமைக்க கேட்டுக்கொள்கிறேன். கடல் மீனவர்கள் சேமிப்பு மற்றும் நிவாரணம் திட்டத்தின் மூலமாக 57,777 மீனவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் அரசுக்கு மாதம் 10 ரூபாய் வீதம் 9 மாதத்திற்கு கொடுத்தால், மீன் பிடிக்காத 3 மாதத்திற்கு அரசாங்கம் அவர்களுக்கு 60 ரூபாய் வீதம் தருகிறது. இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

அதே மாதிரி விபத்தில் மரணம் அடைந்த மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்புறுதித் தொகை ரூபாய் 15,000-லிருந்து 21,000 வரை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. அதே மாதிரி விபத்தில் ஊனம் அடைந்த மீனவர் குடும்பத்திற்கும் ரூ. 7,500 முதல் ரூ. 10,500 வரை உயர்த்தியிருக்கிறது. அதேமாதிரி நம்முடைய தமிழக அரசும் உடனடியாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை. கால்நடையைப் பொறுத்தமட்டில் மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக உள்ள இடங்களை நாம் எல்லோரும் கால்நடைகளுக்காக பயன்படுத்த வேண்டுமே ஒழிய, அந்த மேய்ச்சல் நிலங்களை நத்தமாகச் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஜெர்ஸி மாடுகள் அதிகமாக வாங்கவேண்டுமென்று ஏற்கனவே நான் சொன்னேன்.

நான் இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முயல் வளர்ப்பு மிகவும் ஒரு நல்ல திட்டம். அங்கோரா முயல் போன்றவைகளை வளர்த்தால் 15 நாட்களுக்கு ஒரு முறை அதனுடைய உரோமத்தை எடுக்கலாம். கிலோ ஒன்றுக்கு ரூ. 800 முதல் ரூபாய் ஆயிரம் வரைக்கும் கிடைக்கிறது. ஒரு முயல் 15 முதல் 20 குட்டிகளைப் போடுகிறது. எந்தெந்த இடத்தில் அந்த வளர்ப்பினைச் செய்ய விரும்புகிறோமோ அந்தந்த இடங்களில் பல கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து ஏழைகளுக்கு நாம் உதவலாம். அதனால் இந்த அங்கோரா முயல் திட்டத்தை அரசு உடனடியாக அமல்படுத்தி ஏழை மக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தரமான தீவனங்கள் நமது கால்நடைகளுக்கு வேண்டும். இலவச சினை ஊசி போட்டு கொடுக்க வேண்டும். மருத்துவர்களுக்கு குடியிருப்புகள் கொடுத்தால் தான் கிராமப்பகுதிகளிலே அவர்கள் தங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் ரிஸ்க் அலவன்ஸ் மற்ற அரசு ஊழியர்களுக்கு இருக்கும் அலவன்ஸ்கள் எல்லாம் கொடுத்தால் தான் இந்தத் துறையும் முன்னேறும்



என்பதைச் சொல்லிக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பத்தை அளித்த நமது பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. நா. சா. பழனிசாமி.

**திரு. நா. சா. பழனிசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, பால் பண்ணை வளர்ச்சித் துறை, காட்டு வளத்துறை, மீன் வளத்துறை ஆகிய துறைகளின் மீது பேசுவதற்கு, உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கால்நடை வளம் என்பது வேளாண்மைத் தொழிலுக்கு ஒரு பக்க பலமாக இருக்கின்ற, உறுதுணையாக இருக்கின்ற ஒன்று. வேளாண்மை சிறக்க கால்நடை அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். உலக நாடுகளிலே வேளாண்மை தொழில் செய்கின்றவர்கள் எல்லாம் கால்நடை செல்வத்தையும், பால் உற்பத்தி பட்டு உற்பத்தி, பன்றி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு என்று பல்வேறு துறைகளையும் இணைத்துத் தான் செய்கிறார்கள். அது தான் வேளாண்மைத்துறை என்று சொல்லப்படுகிறது.

பிற்பகல் 6-35

விவசாயத்திற்கு வேண்டிய இயற்கையான உரங்கள் கால்நடைகளுடைய கழிவிலிருந்துதான் நமக்குக் கிடைக்கிறது. அந்த கால்நடைகள் மனித உணவோடு போட்டிப் போடாமல் மனித உணவுக்கு எது எது எல்லாம் தேவைப்படுகிறதோ நாம் தானியத்தை எடுத்துக் கொள்ளுகின்ற போது கால்நடைகள் தட்டை எடுத்துக்கொள்கிறது; புல்லை எடுத்துக்கொள்கிறது. நமக்கு தேவையில்லாத பொருட்களை எடுத்து தான் கால்நடைகள் நமக்கு ஒரு செல்வமாக இருக்கிறது. ஆனால் இப்போது கால்நடைகளுக்கு உபயோகப்படுத்துகின்ற பொருள்கள் எல்லாம் இன்று மனிதனுக்கும் உபயோகம் ஆகின்ற ஒரு நிலைமை வந்திருக்கிறது. இன்று பாலைக் கொடுக்கின்ற மாடுகளுக்கு தவிட்டை உணவாகக் கொடுக்கிறோம்; பருத்திக் கொட்டையை உணவாகக் கொடுக்கிறோம்; வைக்கோலை உணவாகக் கொடுக்கிறோம். அந்தத் விட்டை இன்று எண்ணெய் எடுக்க பயன்படுத்துகிறார்கள். அப்படி எண்ணெய் எடுத்த பிறகு அது கோழிப் பண்ணைக்கு சென்று விடுகிறது. பருத்திக் கொட்டையில் எண்ணெய் எடுக்கிறார்கள். வைக்கோலில் பேப்பர் தயாரிக்கிறார்கள். இன்று கால்நடைகளுக்கு உணவாக பயன்படுகின்ற பொருட்கள் எல்லாம் பல்வேறு துறைகளுக்கு உபயோகிக்கின்ற நிலை இன்று தொழில் நுட்பம் உயர்ந்து இருக்கின்ற இந்த நேரத்தில் சென்று

விடுகின்றபோது, கால்நடைகளின் உணவினுடைய விலை அதிகரித்து கால்நடை உணவு தட்டுப்பாடு இன்று அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்திலே வேளாண்மைக்கு உழுகின்ற உழைப்பிற்கு உதவியாக கால்நடை பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்று டிராக்டர் போன்ற இயந்திரங்கள் வந்த பிறகு கால்நடையின் உழைப்புத் தேவை குறைந்து கால்நடையைப் பால் உற்பத்திக்கு நாம் இன்று பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம். பால உற்பத்தியில் நம்முடைய நாட்டு ரகங்களின் மூலம் பால் அதிகமாகக் கிடைப்பது இல்லை என்ற முறையில் ஜெர்ஸி, பெர்ஸியன் போன்ற கலப்பின கால்நடைகள் நம்முடைய இன கால்நடைகளோடு இனக்கலப்பு செய்து அதனுடைய பால் உற்பத்தித் திறன் அதிகரித்து இன்று பால் உற்பத்தியை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்று கிராமப் பகுதிகளில் இருக்கின்ற நிலமற்ற மக்கள் பலரும், விவசாயம் செய்ய முடியாமல் உள்ள பலருக்கு இன்று வாழ்க்கைத் தேவைக்கு ஒரு சில கறவை மாடுகளை வைத்து அதிலிருந்து பாலைக் கறந்து கூட்டுறவுச் சங்கங்களில் ஊற்றித்தான் அவர்கள் இன்று பிழைப்பை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

இன்று ஐ.ஆர்.டி.பி., கடனை கிராமங்களில் வழங்குகின்றபோது பார்ப்பீர்களானால் பால் மாடுகளுக்கு தேவையான கடன்களைத்தான் அதிகமாக கேட்கிறார்கள். ஆடுகள் வளர்ப்பதற்காகவும், கறவை மாடுகள் வளர்ப்பதற்காகவும் கிராமங்களில் இருக்கின்ற மக்கள் அதை ஒரு தொழிலாக இன்று நடத்தி வருகின்றார்கள். அப்படி பால் கறப்பவர்கள் தன்னுடைய வீட்டுக்குக் கூட, தன்னுடைய குழந்தைகளுக்குக் கூட அந்தப் பாலை வைத்துக் கொள்ளாமல் அதை முழுமையாக விற்பனைக்கு ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலை விற்றுத்தான் வாழ வேண்டிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்று நம்முடைய தமிழ் நாட்டினுடைய பால் உற்பத்தி நல்ல முறையில் உயர்ந்து இருக்கிறது. 1978–79 ஆம் ஆண்டில் ஒரு நபருக்கு கிடைத்த பால் 99 கிராம் என்கின்றபோது இன்று 1990–91 ஆம் ஆண்டு ஒரு நபருக்கு கிடைக்கும் பால் 169 கிராம் என்ற அளவுக்கு பாலினுடைய உற்பத்தி இன்றைக்கு அதிகரித்து இருக்கிறது. ஒரு நபருக்கு ஒரு ஆண்டுக்கு 16 முட்டைகள் கிடைத்துக் கொண்டிருந்தது; இன்று ஒரு நபருக்கு ஒரு ஆண்டுக்கு 46 முட்டைகள் கிடைக்கிறது. இப்படி பசுமைப் புரட்சியை நிகழ்த்திய அந்த விவசாய பெருமக்கள் இன்று வெண்மைப் புரட்சியை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி இந்த பால் மாடுகளை வளர்க்கும்போது அந்த மாடுகளுக்கு நல்ல பராமரிப்பு செய்து ஆகவேண்டும். அந்த மாடுகளுக்கு நல்ல தீவனம் கொடுத்து ஆகவேண்டும். இன்று ஒரு கலப்பு இன மாட்டை வாங்க, குறைந்த பட்சம் 4 லிட்டர் கறக்கின்ற



மாட்டை வாங்க 5 ஆயிரம் ரூபாய் விலை கொடுத்துத்தான் அந்த மாட்டை வாங்க வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட நேரத்தில் இந்த பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு இன்று பாலுக்கு கொடுக்கின்ற விலை தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகவும் குறைவாக இருக்கிறது.

பிற்பகல் 6-40

பால் கொள்முதல் விலை தமிழ்நாட்டிலே, இன்று எருமைப் பால் ஒரு லிட்டருக்கு 4 ரூபாய் 87 பைசா விலையாக கொடுக்கப்படுகிறது. பசும்பாலுக்கு 4 ரூபாய் 16 பைசா கொடுக்கிறார்கள். ஆனால் ஆந்திரா மாநிலத்திலே எருமைப் பாலை 5 ரூபாய் 70 பைசாவுக்கு கொள்முதல் செய்கிறார்கள். பீகாரிலே 5 ரூபாய் 77 பைசாவுக்கு கொள்முதல் செய்கிறார்கள். குஜராத்திலே 6 ரூபாய் 13 பைசாவுக்குக் கொள்முதல் செய்கிறார்கள். அரியானாவிலே 6 ரூபாய் 13 பைசாவுக்கு கொள்முதல் செய்கிறார்கள். மத்திய பிரதேசத்திலே 5 ரூபாய் 40 பைசாவுக்கு கொள்முதல் செய்கிறார்கள். மஹாராஷ்டிராவிலே 5 ரூபாய் 50 பைசாவுக்கு கொள்முதல் செய்கிறார்கள். இப்படி எல்லா மாநிலங்களிலும் தமிழகத்தைவிட பாலினுடைய கொள்முதல் விலையை அதிகமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே போல பால் உபயோகிப்பாளர்களுக்கு விற்பதிலும் மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டைவிட அதிகமான விலைக்குத்தான் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டிலே சென்னை மற்றும் நகரங்களிலே 3சத கொழுப்பு சத்துள்ள, 8.5 இதர சத்துள்ள பாலை 4 ரூபாய் 90 பைசாவுக்கு வழங்கப்படுகிறபோது, கர்நாடகாவிலே அது 6 ரூபாய் 50 பைசாவும், கேரளாவிலே 6 ரூபாயும், பம்பாயிலே சராசரியாக 6 ரூபாய் 50 பைசாவும் இப்படி மற்ற மாநிலங்களில் கொடுக்கப்படுகின்ற விலையும் அதிகமாகத்தான் கொடுக்கிறார்கள். நான் பால் உற்பத்தியாளர்கள் விவசாயிகள் தரப்பிலேயிருந்து பேசுபவன் என்கிற முறையிலே பாலை உற்பத்தி செய்கின்றவர்கள் எல்லாம் பெரிய பண்ணை வைத்து நடத்துகின்ற பெரிய பண்ணையாளர்கள் அல்ல. பாமர மக்கள்தான் ஒரு சில மாடுகளை வைத்து பிழைப்புக்காக இந்தப் பால் தொழிலை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். எனவே பாலுக்கான விலையை கூட்டிக் கொடுத்து, பாலினுடைய விற்பனை விலையை சற்று அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே 250 மிலி. பெப்சி கோலா 4½ ரூபாய்க்கு சராசரியாக, சாதாரணமாக வாங்கிக் குடிக்கிறார்கள். எந்தக் குளிர் பானமும் 3 ரூபாய் 75 பைசாவுக்குக் குறைவாக 250 மிலி. கிடைப்பதில்லை. ஆனால் ஒரு லிட்டர் பாலை இன்னும் 4 ரூபாய், 4½ ரூபாய்க்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பது என்ன நியாயம் என்பதை உற்பத்தியாளர்களின் தரப்பிலிருந்தும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த

நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பாலின் கொள்முதல் விலையை அதிகரிக்கின்றபொழுது அரசாங்கம் அதனுடைய விற்பனை விலையையும் அதிகரித்தால்தான் இந்தப் பால் துறையை லாபத்தோடு நடத்த முடியும். இன்று கிராமப் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 10 பைசாவைத்தான் ஒன்றியங்களிலிருந்து லாபமாகக் கொடுக்கிறார்கள். அதை வைத்து அந்த பால் கூட்டுறவுச் சங்கங்களை முறையாக நடத்த முடிவதில்லை. அதிலே லாபம் கிடைப்பதில்லை. அதனால் வாரக்கணக்கிலே, மாதக் கணக்கிலே பணம் கொடுக்காமல் இருக்கிறார்கள். இங்கே இந்தக் கொள்கைக் குறிப்பிலே பல மாவட்ட ஒன்றியங் களிலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒரு முறை தரத்தின் அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாதக் கணக்கிலே இன்னும் பல ஒன்றியங்களிலேயிருந்து பால் உற்பத்தியாளர் களுக்கு பணம் கொடுக்காத நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு பணத்தை முறையாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கையை எடுத்து, பால் உற்பத்தியாளர்களை பாது காக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கால்நடை மருத்துவர்களைப் பொறுத்தவரையில், கால்நடைக்கு நல்ல மருத்துவர்கள் இருந்தால்தான் இன்றைய உயரின பசுக்களை சரியான முறையிலே பராமரிக்க முடியும். அவர்களுக்கு, மனித மருத்துவர்களுக்கு இருகின்ற எல்லா சலுகைகளையும் வழங்க வேண்டும். உயரின கால்நடைகள் இன்று சினைக்கு வருகின்றபோது குறித்த காலத்திலே, அவற்றிற்கு சினை ஊசி போட்டால்தான் அவை சரியான நேரத்திலே சினை நின்று, குறுகிய காலத்திலே கன்றுகளை போட்டு, விவசாயிகளுக்கு அதை வளர்ப்பதற்கு நஷ்டம் இல்லாமல் தவிர்க்க முடியும். எனவே, இந்தக் கால்நடை யைப் பொறுத்த வரையில், பால் உற்பத்தியாளர்களுக்கு அதிகமான விலையை கூட்டிக்கொடுத்தால்தான், தமிழ்நாட்டை குஜராத்தைப்போல இன்று பால் துறையிலே ஒரு முன்னணியான மாநிலமாக மாற்ற முடியும். அதற்கு பாலினுடைய விலையை அரசாங்கம் கூட்டிக்கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, தேர்தல் அறிக்கையிலேகூட, 'லீன்-சீசன்'-இலே பால் விலையைக் கூட்டிக்கொடுக்கின்ற அந்த அறிவிப்பை இந்த அரசு வெளியிட்டு இருக்கிறது. எனவே பால் உற்பத்தியாளர்களுக்கு பரிவு காட்டி, அந்த விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.



பிற்பகல் 6-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஆசியாக் கண்டத்திலேயே தலைசிறந்த சந்தனக் கட்டைகள்— முதல் தரம் என்று சொல்லப்படும் சந்தனக் கட்டைகள் திருப்பத் தூர் தொகுதியிலுள்ள ஜவ்வாது மலைப் பகுதியிலே உள்ளது. அரசுக்கு பல கோடி ரூபாய் வருவாய் உள்ளது. விவசாயத்தை முதல் தொழிலாக நம்பிவாழும் மக்கள் பலன் பெறும் வகையிலே ஒரு தொழிற் சாலையைத் துவங்கி, மிகவும் பின் தங்கிய தொகுதி மக்கள் முன்னேற்றம் அடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, ஜவ்வாது மலையிலுள்ள சந்தனக் கட்டைகளை, தி.மு.க. ஆட்சியில் உள்ளவர்களே கடத்திச் சென்ற பல வழக்குகள் உள்ளன. அதன் அடிப் படையிலே, மேற்படி விஷயத்திற்காக விசாரணைக் கமிஷன் வைத்து, கடும் நடவடிக்கையெடுத்து, இந்தக் கடத்தலை ஒழிக்கும் பெருமையைப் பெற்றது புரட்சித் தலைவி ஆட்சி என்று அந்தப் பகுதி மக்களும், அரசு அதிகாரிகளும் பாராட்டத் தக்க வகையிலே நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சுமார் பத்தாண்டுக் காலமாக, திருப்பத்தூர், தர்மபுரி, சேலம், சத்தியமங்கலம் ஆகிய வனக் கோட்டங் களில் பிடித்து, பதிவு செய்யப்பட்ட சந்தனக் கட்டை களின் மதிப்பு பல கோடிக் கணக்கிலே உள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட சந்தனக் கட்டைகள் சம்பந்தமாக குற்ற வழக்குகள் விசாரணை செய்யப்படாமலயே நீதிமன்றங் களிலே நிலுவையில் உள்ளதால், கைப்பற்றப்பட்ட சந்தனக் கட்டைகள் அப்படியே ஆங்காங்கே வனச் சரக் அலுவலகங்களிலே வைக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னால் கண்டு பிடிக்கப்பட்டு, குற்ற வழக்கிலே கைப்பற்றப்பட்ட சந்தனக் கட்டைகளை மட்டும் தனியாக அரசு ஆணை பிறப்பித்து, அரசு எடுத்துக்கொண்டு ஏலம் விட்டால் உடனடியாகப் பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானமாகக் கிடைக்கும்.

மேலும் சந்தனக் கட்டைகளைக் கடத்திச் செல்லும் வாகனங்கள், சந்தனக் கட்டைகளுடன் கைப்பற்றப்பட்டால் கர்நாடக அரசு வனத்துறை கைப்பற்றிய வாகனங்களை

உடனே அரசுக்குச் சொந்தமாக்கி விடுகிறது. நம் தமிழ்நாடு அரசு வனத் துறையிலே அவ்வித நடவடிக்கை களை எடுக்க முடியவில்லை. நீதிமன்றத்திலே உத்தரவை எதிர்பார்த்து, வாகனங்கள் பல வருடங்களாக வனச் சரக அலுவலகத்திலே நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு சேதமாகி விடுகிறது. இதை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் துறையைப் போலவே வனத்துறையும் இரவு பகல் பாராமல் பணிபுரிந்து வருகிறது. எனவே, போலீஸ் துறைக்குக் கொடுத்துள்ள அனைத்துச் சலுகைகளையும் வனத்துறையில் உள்ள அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டு மென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஃபாரஸ்ட் ரேஞ்சர் பதவியிலிருந்து உதவி வனப் பாது காவலர் பதவிக்கு கொடுக்கப்படும் பதவி உயர்வுகளும் தாமதமாகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இதையும் உடனடியாகக் கொடுத்து, ஃபாரஸ்ட் ரேஞ்சர்களை ஊக்கு விக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்தான் பால் உற்பத்தியிலே, இந்தியாவிலே தமிழகம் இரண்டாவது இடத்தை வகித்தது. இதன் மூலம் கிராம அடித்தள மக்கள் பயன் பெறும் இந்தச் சங்கத்திற்கு நிரந்தர கட்டிடமோ, பாதுகாப்போ இல்லாத காரணத்தினால் ஒவ் வொரு சங்கத்திலும் அரசு கட்டிடம் கட்டித் தந்து, இரண்டாவது இடத்திலுள்ள பால் உற்பத்தியை முதலாவது இடத்திற்குக் கொண்டு வந்து, புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே தன்னிறைவு பெறவும், வெளிநாட்டு இனப் பசுக்களைச் சங்க உறுப்பினர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கி பால் வளத்தைப் பெருக்கவும், வறட்சி நிலையிலுள்ள கிராமத்தை வளத்துடன் வாழ வழி வகுக்கும்படி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பால் உற்பத்தியாளர் சங்கத் தேர்தல் நடைபெற்றது. அதுசமயம், ஒரு நபர் சங்கத்திலே 120 நாட்கள் அல்லது 300 லிட்டர் பால் உற்பத்தி செய்தால் மட்டுமே அவர்களைத் தகுதி வாய்ந்த உறுப்பினர்களாகக் கருதலாம். ஆனால் கறவை மாடு இல்லாமலும், பால் ஊற்றாத நபர்களும், தேர்தலிலே தகுதி வாய்ந்தவர்களாகச் சேர்ந்து தலைவர் மற்றும் இயக்குநர் களாக வெற்றி பெற்றார்கள். அவ்வாறு தகுதியற்ற நபர் களைச் சங்க உறுப்பினர்கள் பதவியிலிருந்து நீக்கி, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



திருப்பத்தூர் தொகுதியிலிருந்து அதிகமான பால் உற்பத்தியாகி ஆம்பூருக்குச் செல்கிறது. இது நீண்ட தூரம் உள்ளதால் ஏலகிரி மலை, புதூர் நாடு, ஜமுனாமரத்தூர் மலைவாழ் மக்களுக்குப் பாதிப்பாக உள்ளது. இதனால், என் தொகுதியாகிய திருப்பத்தூரில் ஒரு புதிய பால் குளிர் பதன நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் பணி யாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-05

நம் நாட்டில் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு, பெரும் பான்மையாக வயிற்றுப் போக்கு, வெக்கை நோய், அம்மை, போன்ற நோய்களால் பெருமளவிலே இறந்து விடுகின்றன. இதற்கு முன்னெச்சரிக்கையாக, அரசாங்கம் கால்நடை மருத்துவ மனையிலே தடுப்பூசி சரியான நேரத்திலே போடாததாலும், மருந்துகள் வழங்காததாலும், இந்த கால் நடை இழப்பு நேரிடுகிறது. இதனால், கால்நடைகளையே முக்கிய தொழிலாக நம்பி வாழும் விவசாயப் பெருமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நஷ்டத்தை நினைத்து, அதிகமான பசு, எருமைகளை வெளி மாநிலங்களில் தரகர்கள் மூலம் விற்று விடுகிறார்கள். அவ்வாறு விற்பத னால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கால் நடைகளுக்கு சிகிச்சை அளித்து, மேலும் கால்நடைகளுக்கு மானிய விலையிலே தீவனங்கள், தீவன விதைகள் கொடுக்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆடு, கோழி, முயல், பன்றி, மாடு போன்ற கால்நடை களுக்கு மானியத்துடன் கூடிய கடன் கொடுத்து, கிராமப்புற மக்களை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி யில் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் பல உள்ளன. இச்சங்கங்களுக்கு சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டத்தின்கீழ், ஆடு வளர்க்க அதிக மானியம் அளித்து, தொகுதி மக்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஜோலார்பேட்டை பகுதியில் கால்நடை மருத்துவ மனை ஒன்று அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. க. குப்பன், சுருக்கமாக.

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளம், மற்றும் கால்நடை பராமரிப்பு, மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை அவர்களுடைய பாதங்களிலே சமர்ப்பித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மீனவர்கள் தொழில் செய்யும்போது இறந்தால், 15 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, இன்றைக்கு 21 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி, மீனவர்களுடைய நலனிலே அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல், மீனவர்களுக்கு, 11 கோடி ரூபாய் அளவில் சலுகைகள் அளித்து, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கடன் என்ற வகையிலே, அவர்களுக்கு கட்டுமரம், வலை, மோட்டார் வாகனங்கள் பெறுகின்ற வகையில் 11 கோடி ரூபாய் அளவில் இன்றைக்கு கடன் உதவி அளித்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல், மீனவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் வீடுகள் கட்டித் தருவதாக அறிவித்திருக்கிற புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல், 10 மீனவ கிராமங்களை மாதிரி கிராமங்களாக ஆக்குவோம் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல ; என்னுடைய கோரிக்கையாக ஒரு சில கோரிக்கைகளை நான் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். மீனவர்களுடைய நீண்டகால கடனை— விவசாயிகளுக்கு கடன்களை ரத்து செய்வதுபோல— அவர்களுடைய கடன்களை 1960 ஆம் ஆண்டு வழங்கிய அந்த கடன் இன்று வரை கட்டமுடியாமல் இருக்கிற ஏழை எளிய மீனவர்களுக்கு, அவர்கள் மீது அன்பு காட்டுகிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கருணை கூர்ந்து, அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல், என்னுடைய தொகுதி மீனவ கிராமங்கள் அதிகமாக இருக்கிற தொகுதியாகும். மீனவர்கள் அதிகமாக வாழ்கிற பகுதியிலே, கடலரிப்பு ஏற்பட்டு ஆண்டொன்றுக்கு, குறிப்பாக 5 கிராமங்கள், 10 கிராமங்கள் என்ற அளவிலே, கடலிலே அடித்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருப்பதால், கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து, மீனவர்களை காப்பாற்ற வேண்டுமாய் மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், அவர்களுக்கு நிரந்தரமாக மாற்று இடத்தை ஏற்பாடு செய்து, அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-55

திருவொற்றியூர் தொகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவுநீர் எம்.பி.எல்., எம்.ஆர்.எல்., எம்.எல்.எல். மற்றும் இதரத் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவுநீர் கடலில் கலப்பதால், எங்கள் மீனவ சமுதாய மக்கள், மீன் இனம் அழிந்துவிடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே, அந்தக் கழிவுநீரை, மீனினமே அழியக்கூடிய வகையில் வருகின்ற கழிவுநீரைத் தடுப்பதற்குத் தேவையான வழிவகைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்தித் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மீன்பிடி துறைமுகத்திற்கு சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மீன்பிடி துறைமுகம் என்ற பெயரை வைக்க வேண்டுமாய் நான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவ சமுதாய மக்கள் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களிலும் உறுப்பினராக இருப்பவர்களுக்குத்தான் கடன் உதவி வழங்கப்பட வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறபோது **போன்றவர்கள் இன்றைக்கு............(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கே. குப்பன் : மீனவர் சமுதாயத்திற்கு அப்பாற்பட்டவர் இன்றைக்கு அவருக்கு இரண்டு மீன்பிடி கப்பல்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கின்றன. அவைகள் எப்படி வந்தன என்பதை நான் அறிய விரும்புவது மட்டுமல்ல, மீனவர் சமுதாயத்திலே இருக்கின்றவர்கள், நான் கூட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருக்கின்றேன். மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலே அங்கத்தினராக இருப்பவர்கள் மட்டும்தான் கடன் வாங்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கின்றபோது இப்படிப்பட்டவர்கள், சமுதாயத்திற்கு அப்பாற்பட்டவர்கள், மீனவர்களே அல்லாதவர்கள், இன்றைக்கு மீன்பிடி கப்பல்களை வைத்திருப்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர்களும், தமிழக அரசிலே உள்ள மீன்வளத் துறையின் மூலமாகத்தான் அந்தக் கடன்களை மத்திய அரசிலே பெற வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கின்றபோது, அப்படிப்பட்டவர்கள் இன்றைக்குக் கடனைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் எந்த மீனவர் சங்கத்திலே உறுப்பினராக இருக்கின்றார்கள். அவர்களுக்கு எப்படிக் கடன் வழங்கப்பெற்றது என்பதை விசாரிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவரக் கடமைபட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இதுமட்டுமல்ல மீன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள், ஒரு கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. க. குப்பன் : இதுமட்டுமல்ல. முன்னாள் உள்துறைச் செயலாளர் அவர்கள் கூட, மீன்பிடி கப்பலை வைத்திருக்கின்றார்கள் என்ற செய்தியையும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரி என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட மாதவரம் நகரத்திற்குட்பட்ட பகுதியிலே அமைக்கப்பட இருக்கிறது. அந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்குப் பாரத ரத்னா எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் எம்.ஜி.ஆர். பெயரிலே, எம்.ஜி.ஆர். கால்நடை மருத்துவக் கல்லூரி என்று பெயரை வைக்க வேண்டுமென்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவா : திரு. தா. வேடியப்பன்.



*திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறி, இன்று மீன் வளம், பால் வழங்கு திட்டங்கள் கால்நடை, வனத்துறை, போன்ற கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

மீன் வளத் துறையைப் பொறுத்தவரை, பல வகை குளில் பல மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு, அதனை விற்பனை செய்வதன் மூலம் அரசுக்கும் வருமானம் வருகின்ற நிலை இருக்கிறது. அதேபோல, பொதுமக்களும் அந்த மீன் இறைச்சிகளை வாங்கி உபயோகப்படுத்துகின்றார்கள். அதனால், மக்களுக்கும் அது பயன்படுகிறது. அரசுக்கும் வருமானம் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தை அதிகமாக்க முன் முயற்சி எடுத்து வளர்ச்சி (இம்ப்ரூவ்மென்ட்) செய்து இதனை மேம்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று ஒவ்வொரு ஒன்றியத்திலும் மீன் ஓவர்சியர் என்ற மீன் பார்வையாளர் ஒருவரை நியமித்து, கிராமப் பகுதிகளில் உள்ள குளம் குட்டைகளில், கசம் போன்ற பல பகுதிகளில் மீன் குஞ்சுகளை வளர்த்து, ஊராட்சி மக்கள், ஏழை எளிய மக்கள் சாப்பிடும் அளவுக்கு ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அதே நேரத்தில் அதனை ஏலம்விடும்போது ஊராட்சியினுடைய நல்ல பல திட்டங்களுக்கு அதனுடைய வருவாய் ஈட்டப்படுகின்றது அதனை மேலும் அதிகமாக வளர்ச்சி (இம்ப்ருவ்மென்ட்) செய்து, அதனை நல்ல நிலையில் கொண்டுவர அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பால் வளம். பால் வளத்தைப் பொறுத்த வரையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். வடாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் என்று உள்ளது. இதில் எங்களது திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில்தான் அதிகமான பால் உற்பத்தியாகிறது. அதிலும் குறிப்பாக எங்கள் மாவட்டம் தான் தமிழ்நாட்டிலேயே முதலாக உள்ள மாவட்டம் என்று இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 7-00

எங்களுடைய மாவட்டத்திற்கு இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்கள் தான் இருக்கின்றன. ஒன்று திருவண்ணாமலை,

அடுத்து செய்யாறு. எங்கள் மாவட்டத்தின் மையப் பகுதியான போளூர் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்தி பால் வளத்தை மேம்படச் செய்யவேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி (ஐ.ஆர்.டி.பி.) திட்டத்தின் கீழும் தாட்கோ திட்டத்தின் கீழும் அரசின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலும், வங்கிகள் மூலமாகவும் கடன்கள் வழங்கப்பட்டு ஏழை விவசாய மக்கள் இன்றைய நிலையில் அதாவது வறட்சியான நிலையிலும் அதிகமான சிறப்பான பாலை உற்பத்தி செய்து வயிற்று ஜீவனம் பிழைக்கும் வகையில் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அந்த ஏழை மக்களைக் காக்க நமது தமிழக அரசு ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலும் 50 மாடுகளை வழங்கி இந்த ஏழை விவசாய மக்கள் பயனடையும்வகையில் சிறப்புறச் செய்ய வேண்டுமென்று என்னுடைய கருத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதியிலும், நகரப்பகுதியிலும் பெண்களுக்காக ஒவ்வொரு பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி ஏற்படுத்தப்பட்டால் மிகவும் பயனுடையதாக இருக்கும். எனவே இன்றைய நிலையில் பெண்களுக்காக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த வேண்டும், என்பதை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில், இந்தக் கறவை மாடுகளுக்கு தீவனம் உற்பத்தி செய்யும் வகையில் தனியாகவோ, அரசின் மூலமாகவோ புறம்போக்கு இடங்களில் புல் நிறுவனங்களை ஏற்படுத்தி தீவனங்கள் உற்பத்தி செய்து கொடுக்க நமது தமிழக அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாடுகளுக்கு தேவையான தீவனங்களை உற்பத்தி செய்யும் வண்ணம் பல தொழிற்சாலைகளை ஆங்காங்கே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தி அங்கிருந்து அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த தீவனங்கள் சென்றடைய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டம் பெரும்பகுதியான விவசாயப் பகுதியாகும். எனவே விவசாயிகள் கால்நடைகளை நோயின்றிப் பராமரிக்கும் வண்ணமும், கால்நடைகள் மற்றும் கறவை மாடுகளைப் பொறுத்தவரையில் அன்றாடம் நோயின்றி அவற்றைப் பாதுகாக்கும் வண்ணமும் ஒவ்வொரு கிராமப் பகுதியிலும் அதிகமாக கால்நடைகள் உள்ள இடங்களிலும்



ஒரு சப் சென்டர் ஏற்படுத்தவேண்டும். அப்படி கால்நடைகளுக்காகக் கூடுதல் மருந்தகங்களை ஏற்படுத்தி, கால்நடை மருந்தகத்தில் உள்ள மருத்துவரின் கீழ் ஒவ்வொரு இடத்திற்கும் குறைந்தது 10 டாக்டர்களை நியமித்து அந்த கால்நடை மருந்தகத்தின் மூலம் அனைத்துப் பகுதி மக்களின் கால்நடைகளையும் பராமரிக்கும் வண்ணம் சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வன வளம். வன வளத்தைப் பொறுத்த மட்டில், இன்றைய நிலையில் மழை பெருகவேண்டும் விவசாய மக்கள் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு வன வளத்தைப் பெருக்க இன்று வனத்துறையில் பலவிதமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு காடுகளில் மரக்கன்றுகளை வைத்து வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று இங்கே நேற்று நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூறியது போல் எங்களது பகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் அதிகமான சந்தனக் கட்டைகளை இரவோடு இரவாக கடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இதில் தனிக் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும். அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் தற்போதுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் மீது பலவிதமான குற்றச்சாட்டுகளை ஏற்படுத்தி வருகிறார்கள். எனவே இதில் அரசு தனிக் கவனம் செலுத்தி இந்தக் குற்றச்சாட்டுகளை நீக்கும் வண்ணம் உரிமைப் பிரச்சினையை முக்கியமாகக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்காக என்று, தனியாக, ஃபாரஸ்ட் டிப்பார்ட்மென்டில் சந்தன மரங்களை யாரும் கடத்தாத வகையில் கண்காணிக்கும் வகையில் ஒரு துறையை ஏற்படுத்த வேண்டும். இரவிலும் பகலிலும் (மணியடிக்கப் பெற்றது) காக்கின்ற வகையில் தனித்துறையை ஏற்படுத்தி அந்தச் சந்தனக் கட்டைத் திருட்டைத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த நேரத்தில் எனக்கு இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்த சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 7-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே முதன்முதலாக மீன் வளத்திலே ஒரு சில கருத்துக்களை சொல்ல

முன்வந்துள்ளேன். மீன் துறையைப் பொறுத்த அளவிலே மீனவ மக்கள் எந்த அளவிலே நசுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற உண்மையை சம்பவத்தை சொல்லக் கடமைப்பட்டிருக்கிகிறேன். எனக்கு முன்னாலே பேசிய நண்பர் குமாரதாஸ் அவர்கள் பேசும்போது 'தமிழன்' என்று தாக்குகிறார்கள் என்று சொன்னால், அது கேரளாவிலே தாக்குகிறார்கள். எங்களுடைய பகுதியிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து போகின்ற மீனவர்களுக்கு இங்கே மீன் பிடிக்க வசதியில்லை என்ற காரணத்தினாலே கேரளா செல்கினின்றார்கள். 'தமிழன்' என்று சொல்லியே தாக்குகிறார்கள் என்பதை சொன்னார்கள். அதை நான் பல தடவை மாதத்திற்கு ஒரு முறை எர்ணாகுளத்திற்கு, கொச்சினுக்கு போகவில்லை என்றால், என்னால் இருக்கமுடியாது. அந்த அளவுக்கு அங்கே பிரச்சினைகள். அங்கே மலையாளி தமிழன் பிரச்சினையை உருவாக்குகிறார்கள். ஆனால் இன்று எங்களுடைய பகுதியில் கன்னியாகுமரி பகுதியில் சின்னமுட்டத்தில் இருக்கின்ற மீன்பிடி துறைமுகத்தை ஏறத்தாழ 6, 7 ஆண்டுக் காலமாக வேலை முடியாமல் இருக்கிறது. அந்த வேலை முடிந்தால்கூட அந்த மீனவர்கள் கேரளவாசிகளாக இருப்பார்கள். அதுபோல, ஆந்திரா மாநிலத்திலேகூட நம்முடைய மீனவர்கள் சென்றால் அங்கே பிடித்து வைத்துவிட்டு ரூ. 25 ஆயிரம், 30 ஆயிரம் கொடு என்று கேட்டு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். நான் கழிந்த அரசிலேகூட நான் பல்வேறு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொண்டுவந்திருக்கிறேன். அந்த தீர்மானங்களிலே பேசும்போதுகூட இந்த பிரச்சினை சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே மண்டபத்திலே இருக்கின்ற மீனவர்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளுடைய தொல்லை அதேபோல சிலோனிலே இருக்கின்ற ராணுவத்தினுடைய தொல்லை, அப்படி இந்த அளவிலே அந்த பகுதி மீனவர்களும் கஷ்டத்திலே உள்ளாகியிருக்கிறார்கள். இத்தகைய கஷ்டப்படுகின்ற காலங்களிலே மீனவர்களுக்கு கொடுத்த கடனில் நிலுவையிலுள்ள கடன் ஏறத்தாழ ரூபாய் ஐந்து கோடியே எழுபது இலட்சம். ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக கொடுக்கப்பட்ட இந்த கடனை நிச்சயமாக இந்த அரசு ரைட் ஆப் செய்துவிடலாம். கடந்த அரசிலே கூட, நம்முடைய ஜனதா சர்க்காரிலே கூட, 10 ஆயிரம் ரூபாய் வரை ரைட் ஆப் செய்வதாகச் சொன்னார்கள். அதிலே மீனவாகளுடைய கடனை எல்லா பகுதியிலும் ரைட் ஆப் செய்யப்படவில்லை. ஆகையால் ஏறத்தாழ ஐந்து கோடியே எழுபது லட்சம் ரூபாய் தான் இந்த மீனவர்களுக்குக் கொடுத்த பணத்திலே நிலுவையிலே உள்ளது. அந்த பணத்தை ரைட் ஆப் செய்வதிலே எந்த தவறும் இல்லை. அதை ரைட் ஆப் செய்துவிட்டு புது லோன்



கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு கொடுக்கின்ற பணங்களை சரியான முறையிலே பயன்படுத்தப்படாமல் திருப்பி போவதாக பல்வேறு புகார்கள் இருக்கின்றன. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குற்றமாகச் சொல்லவில்லை. மத்திய அரசு கொடுக்கின்ற பணத்தை செலவு செய்ய சில நார்ம்ஸ் சொல்கிறார்கள். அதைக் கொடுக்கும்போது அந்த பணத்தை சரியான முறையில் செய்யாமல் திருப்பிப்போவதாக மத்திய அரசிலே இருக்கின்ற அதிகாரிகள் என்னிடத்திலே சொல்கிறார்கள். அதனால் தான், சொல்கிறேன். மேலும் இன்று புதிதாக 'சர்பேஸ் வாட்டர் பிஷ்ஷிங்' என்று இருக்கிறது. அதிலே இதுவரையில் மீன் பிடிப்பது எர்த் லெவலிலே சென்று மீன் பிடிக்கிறார்கள். அதற்காக மானியம் கொடுக்கப்படவில்லை. இப்போது சர்பேஸ் வாட்டர் பிஷ்ஷிங் என்று சொன்னால் 75 சதவிகிதம் மானியமாக மத்திய அரசு கொடுக்கிறது. 25 சதவிகிதம் நம்முடைய அரசு மானியமாக கொடுத்தால் அந்த மீனவர்களுக்கு பிரியாகவே போட்டுக் கொடுக்க முடியும். அந்த திட்டம் புதிதாக வந்திருக்கிறது. அதை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ் வி.ஓ.வி.ஸ்கீம் என்று சொல்கிற அதில் இரண்டு 'போட்'கள் தான் நம்முடைய மாநிலத்திற்கு இருக்கின்றன. அந்த ஸ்கீமிலே மத்திய அரசிடம் இருந்து வந்த பணம், அதாவது 75 பர்சென்ட் சப்சிடியாக வந்த பணத்திலே இந்த வி.ஓ.வி. ஸ்கீமிலே இரண்டு போட்கள் என்று இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியவர்கள் கவனித்துக் கொண்டு இருக்கிறபோது அங்கே பக்கத்திலே போய் தொந்தரவு செய்யக்கூடாது. இது எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும். மானியக் கோரிக்கை விவாதங்கள் எடுக்கப்படுகிறபோது அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலே சென்று அவர்களிடத்திலே பேச்சு கொடுப்பதை உறுப்பினர்கள் தவிர்க்கவேண்டும். டாக்டர் மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரத்தாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நிலையிலே அதை போல நம்முடைய மத்திய அரசிலேயும் சரி மாநில அரசிலேயும் சரி மீனவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதாக சொல்கிறார்கள். 2 ஆயிரம் வீடுகள் என்று சொல்கின்றார்கள். இதுவரையிலும்

நம்முடைய கொள்கை குறிப்பிலே கொடுக்கப்பட்டு இருப்பதைத்தான் நான் சொல்கிறேன். நேரடியாகப் பார்த்தால் தெரியும், அந்த வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்படுவதில்லை. ஏதோ 2 ஆயிரம் வீடுகள் என்று சொன்னால், 500, 600 கூட கட்டி கொடுப்பதில்லை. கொடுக்கின்ற வீடோ எந்த குவாலிட்டியும் கிடையாது. குறிப்பாக என்னுடைய பகுதியிலே நீரோடை என்று ஒரு கோஸ்ட்டல் பெல்ட்-லே இருந்து பார்த்தால் தெரியும். நான் 4 தடவை சென்று இருக்கிறேன். கலெக்டரைக்கூட கொண்டு சென்று காண்பித்து இருக்கிறேன். அந்த பகுதியைப் பொறுத்தவரையில் இந்த உப்பு மண் என்று சொல்கிறார்களே அதாவது 'சால்ட் சேண்ட்' என்பார்கள், அதிலே பில்டிங் கட்டினால் நிச்சயமாக நிற்காது என்று. அந்த கட்டடங்களைக் கட்டி எந்த பிரயோசனமும் இல்லை. ரூ. 15 ஆயிரம் அளவுக்கு வீடு கட்டிக்கொடுத்தால் அந்த மீனவர்களுக்கு அது நல்ல பலனாகப் போய் சேரவில்லை. இதனால் இந்த வீடு கட்டிக்கொடுக்கிற திட்டத்தை மாற்றியமைத்து அவர்களுக்கு நல்ல முறையில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே, கேரள மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு மீனவன் மிஸ்ஸிங் என்று சொன்னாலும்கூட ஹெலிகாப்டர் ஆப்பரேட் செய்து அவனைத் தேடிப் பார்க்கிறார்கள். அப்படி நாம் செய்யவேண்டும். நம் நாட்டிலே இத்தனை மீனவர்கள் இருந்தும்கூட ஒரு மீனவன் அல்ல பத்து மீனவர்கள் போட்டு போனால்கூட ஒரு விசைப் படகுகூட கையிலே கிடையாது. இதை கடந்த அரசிலேயே கூட சொல்லிக்கொண்டிருந்தேன். அவர்கள் செய்யவில்லை. இந்த அரசு நிச்சயமாக அந்த அளவுக்கு ஒரு மீனவன் என்று சொன்னாலுங்கூட கேரளாவிலே இருப்பதுபோல் ஒரு போட் சென்றாலும்கூட நீங்கள் பார்ப்பதற்கு ஒரு ஹெலிகாப்டர் இந்த இலாகாவுக்கு சொந்தமாக வாங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அதே போல, இங்கே பார்த்திருக்கிறார்கள். மீனை கேரளாவிலே கொண்டு போய்தான் அவர்கள் எக்ஸ்போர்ட் செய்கிறார்கள். நமக்கு அந்நிய செலாவணி வருவதாகத் தெரியவில்லை. ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு கோஸ்ட்டல் பெல்ட் இருந்தும்கூட நாம், மண்டபத்திலே இருந்தும்கூட, கேரளாவிற்குப் பக்கத்திலே உள்ள பாரசாலையில் இருந்து கொண்டுவருகிறார்கள். ஏன் நமக்கு என்று ஒரு தொழிற்சாலை தொடங்கக் கூடாது? தொழில் துறையை முன்னேற்ற வேண்டுமென்ற மாண்புமிகு



முதல்வர் அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப அந்த எண்ணம் நிச்சயமாக இந்த இலாகாவுக்கு இல்லை. ஆங்காங்கே கிடைக்கின்ற மீன்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை உருவாக்கினால் வேலைவாய்ப்பும் கிடைக்கும்., அந்நியச் செலாவணியும் கிடைக்கும். அதற்காக பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-10

அடுத்து, இந்த இலாகாவுக்கு ஒரு அட்மினிஸ்ட்ரேட்டிவ் போர்டு. அதாவது பொதுமக்கள் சேர்ந்து, அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு குழுவை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியில் அங்கத்தினர்களாக இருந்தால் இறந்து போகின்றவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கிடைக்கும. அப்படி அங்கத்தினர்களாக இல்லையென்று சொன்னால் முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய்தான் கிடைக்கும். ஆனால் சொசைட்டிகள் சரியாக இயங்குவதில்லை. ஏனென்று சொன்னால், ஒருவர் சொசைட்டி பிரசிடென்ட் ஆனால், அவருடைய பதவிக்கு ஆபத்து வந்து விடும் என்பதால் ஏழை மீனவர்களை அங்கத்தினர்களாக சேர்ப்பதில்லை. இது எல்லா பகுதிகளிலும் நடக்கிறது. ஆகவே, இப்போது ஸ்பெஷல் ஆபிசர்ஸ் இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போதாவது எல்லா மீனவர்களையும் அங்கே அங்கத்தினர்களாக சேர வைக்க வேண்டும். அப்படி அங்கத்தினர் களாக சேர்ந்தால்தான் முதலமைச்சர் அவர்கள் அறிவித் திருக்கிற 25 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அவர்கள் அப்படி அங்கத்தினர்களாக சேரவில்லையென்று சொன்னால், நான் முன்பே இதுபற்றி கேள்வி கேட்டிருந்தேன். 10 ஆயிரம் ரூபாய் தான் கிடைக்கும். ஆகையினால் நம்முடைய இலாகா அதிகாரிகள், அந்த ஏழை மீனவர்களையும் சேர வேண்டு மென்று பிரச்சாரம் செய்து எப்படியாவது சேர்த்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகள், ஏ.டி. எல்லாம், எல்லா டிஸ்ட்ரிக்டு களிலும் இருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்லியும் இவர்கள் அங்கத்தினர்களாக சேரவில்லை. சொல்லிச் சொல்லித்தான் பார்க்கிறார்கள். மீனவர்களே, அங்கத்தினர்களாக சேருங்கள். இல்லையென்றால் அரசினுடைய திட்டங்கள் உங்களுக்கு வந்து சேராது என்று சொன்னாலும் அவர்கள் சேரத் தயாராக இல்லை. ஆகவே இந்த அரசு உடனடியாக அதிகாரிகளிடம் சொல்லி, மீனவர்கள் படிக்காதவர்கள், அவர்களை எல்லாம் மீனவர் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளிலே அங்கத்தினர்களாக சேர்க்க தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியானால்தான் நம் முடைய அரசு, முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற 25 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து சின்னமுட்டம் பிஷ்ஷிங் கார்ப்பரேஷன் பற்றி சொன்னேன். அதுபோலவே என்னுடைய பகுதியிலே தேங்காப்பட்டணம் என்று சொல்கிற பகுதி இருக்கிறது. அது கிள்ளியூர் என்கின்ற என்னுடைய சட்டமன்ற தொகுதி யிலுள்ள ஒருபார்டர் பகுதி. அங்குள்ள பிரச்சினையைப் பற்றி பல முறை நான் அமைச்சர் அவர்களிடம் கூட சொல்லியிருக்கிறேன். தேங்காப்பட்டணத்தில் ஒரு நேச்சுரல் பிஷ்ஷிங் கார்ப்பரேஷனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் மத்திய அரசிடம் இருக்கிற அதிகாரிகள் தான் குறுக்கே நிற்பதாகச் சொன்னார்கள். கடந்த முறை கூட, 1986-ல் கேட்டபோது கூட, நம்முடைய பெங்களூரில் இருக்கிற ஒரு நிறுவனம், அவர்கள் இதனை தமிழகத்திற்கு விடுவதற்கு தயாராக இல்லை என்று நினைக் கிறேன். பகுதி மத்திய அரசின் பணமும், பகுதி மாநில அரசினுடைய பணமும் வைத்து இது அமையும். ஆனால் பெங்களூரில் இருக்கிற அந்த நிறுவனம் எதற்கு எடுத்தாலும் இப்படி குறுக்கே நிற்கிறதாக எனக்குத் தெரிய வருகிறது. அவர்களைக் கேட்டால் 'வயபிள்' இல்லையென்று சொல் கிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால் மணல் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதைவிட மோசமான இடங்களில், கேரளாவில் கட்டியிருக்கிறார்கள். ஆனால் கேரளாவைப் பார்த்தால் எங்களுடைய பகுதி கேரளத்திற்கு பக்கத்தில்தான் இருக்கிறது. அவர்கள் எந்த அளவுக்கு இந்தத் துறையை வளர்த்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட நாம் இத்துறையை வளர்க்கவில்லை. பணம் ஒதுக்கப்படுவதில் குறைவில்லை. ஆனால் இந்த இலாகா சரியாக செயல்படவில்லை என்று நினைக்கிறேன். குறை சொல்வதல்ல. மேலும், இவர்கள் ஒதுக்குகிற பணத்தைக்கூட சரியாக செலவு செய்வதில்லை. வருகிற பணத்தை எல்லாம் 'அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைட்'- செலவு செய்து விடுவதால் அது ஏழையெளிய மீனவர்களைச் சென்று அடைவதில்லை. ஏனென்று சொன்னால், இதை தான் பல தடவை வற்புறுத்தியிருக்கிறேன். ஒரு 'நேச்சுரல் பிஷ்ஷிங் கார்ப்பரேஷன்' இருக்கிறது என்று சொன்னால், அதற்கு ஏதாவது ஒரு முட்டுக்கட்டை என்று சொல்லி ஒரு கேள்வி கேட்டால், வயபிள் இல்லை, இடம் இல்லை, அந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்று சொல்லிவிட்டு விடுகிறார்கள். இதை நான் கேட்கத் தயாராக இல்லை. 1985, 1986-ல் கூட கேட்டிருக்கிறேன். அப்போதும் இதே பிரச்சினை தான் வந்திருக்கிறது. ஆகவே, அந்த முறையிலே



நீங்கள் மீனவனுக்கு வசதிகள் அதிகமாக செய்து கொடுக்க வேண்டும். அந்த லோனை ரைட் ஆப் செய்து கொடுக்க வேண்டும். அதுபோல பக்கத்து மாநிலத்துப் பிரச்சினை என்று மீனவனுக்கு வரும்போது நீங்கள் அவனுக்கு உறுதுணையாக இருந்து காப்பாற்றினால்தான் அந்தச் சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும்.

மேலும் 'மீன் எங்கே இருக்கிறது' என்று கண்டுபிடிப்ப தற்கான ஒரு இலாகா, ஒரு குழு, ஒரு அதிகாரிகள் குழு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் எந்த பிரயோஜன மும் இல்லை. இன்றைக்கு கன்னியாகுமரியில் இருக்கிற மீனவர்கள் கேரளாவிற்கு சென்று மீன் பிடித்தால் தான் சாப்பிட முடியும். அதுபோல சென்னையில் இருக்கின்ற மீனவன் ஆந்திரா மாநிலத்திற்கு சென்றால் தான் மீன் பிடிக்க முடியும். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே எங்களுடைய பகுதியிலே, தமிழகத்திலேயே ரப்பர் இருக்கின்ற ஒரே பகுதியாக இருப்பது கன்னியாகுமரி மாவட்டம் தான். ஏறக்குறைய 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் ரப்பர் உற்பத்தி செய்கின்ற என்னுடைய பகுதியிலே இருக்கின்ற ஒரு பிரச்சினையை இன்று காலையிலே கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இன்று இங்கே அங்கு இருக்கின்ற ரப்பர் கழகத்தைப் பற்றி யாரும் பேசி யிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதனால் தான் இப்போது அதைப்பற்றி பேச வந்தேன். அந்த அரசு ரப்பர் கழகத்தைப் பொறுத்தவரையில் வேடிக்கையாக இருக்கிறது. அதாவது, 2,500 தொழிலாளிகள் அங்கே வேலை செய்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் 501 பேர் இருக்கிறார்கள். இப்படி இருந்தால் இந்த இலாகா உருப்படுமா? நீங்கள் எவ்வளவு கோடி ரூபாய் கொட்டினால் கூட இந்த இலாகா உருப்படுமா என்று கேட்கிறேன். 2,500 ஒர்க்கர்ஸ்க்கு 501 அதிகாரிகள் என்று சொன்னால், டி.எப்.ஓ. ரேங்கில் உள்ளவர்கள், அதற்கு மேல் பிரான்ச் ஆபிசர்ஸ், ரேன்ச் ஆபிசர்ஸ், பாரஸ்ட் ஆபிசர்ஸ், எல்லாம் இருக்கிறார்கள். அங்கே மொத்தம் 10 டிவிசன்கள் இருக் கின்றன என்று வைத்துக் கொண்டால் என் தொகுதியில் மட்டும் 4 டிவிசன்கள் இருக்கின்றன. எந்த அதிகாரியும் அந்த மலைக்கு உள்ளே போனதில்லை. என்னிடம் மக்கள் சொல்வார்கள், அங்கே பால் வெட்டுவதில்லை. இங்கே உரம் போடுவதில்லை. அங்கே மென்யூரிங் போடுவதில்லை என்று எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் இவ்வளவு பகுதி யும் தனியாரிடம் இருந்திருந்தால் இன்றைக்கு 200 கோடி

ரூபாய்க்கு மேல் லாபத்தை ஈட்ட முடியும். ஆனால் அங்கே இப்போதுள்ள நிலைமை ஏன் வருகிறது என்றால் அங்கே போய் பணியாற்ற அதிகாரிகளுக்கு விருப்பம் கிடையாது. அவர்கள் டு கெட் டிரான்ஸ்பர் டு ரப்பர் கழகம் என்று சொன்னால் அங்கு வருவார்கள், நாகர்கோயிலுக்கு தான் வர வேண்டும். இட் ஈஸ் ஏ பனிஷ்மெண்ட் என்று சொல்லி வரும்போது ஆர்டர் வரும்போதே எப்படியோ சமயத்தை கழிக்கலாம் என்று தான் வருகிறார்கள். அதனால்தான் அவர்கள் எதுவும் செய்ய தயாராக இல்லை. இந்த அளவுக்குத் தேவையா? 2,500 தொழிலாளிகளை சூப்பர் விசன் செய்ய 501 அதிகாரிகள் என்று சொன்னால், அதில் கெசடட் ஆபிசர்ஸ் கூட அதிகமாக இருக்கிறார்கள்.

பிற்பகல் 7-15

இந்த அளவுக்கு இருந்தால் வருமானம் எந்த அளவுக்கு அரசுக்கு வந்து சேரும் என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கிறது. நிச்சயமாக இவ்வளவு ஆட்கள் தேவையில்லை. அங்கே 11,000 ஏக்கர்தான் இருக்கிறது. 11,000 ஏக்கர் பரப்பளவில்தான் ரப்பர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் 11,000 ஏக்கருக்கு இத்தனை சூப்பர்வைசர்ஸ் தேவை யில்லை. அங்கே இரண்டு ஏக்கர் ரப்பர் தோட்டம் வைத் திருப்பவர்கள் சுகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஒரு குடும்பம் நடத்த ஒரு ஏக்கர் ரப்பர் போதும் எங்கள் பகுதியிலே. ஆனால் இவர் கள் 11,000 ஏக்கர் பயிர் செய்கிறார்கள். 2,500 தொழி லாளர்கள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் இவர்களை ஒழுங்காக கவனிக்கிறார்களா என்றால் இல்லை. ஒரு டிவிஷனிலே 3 மாதமாக ஸ்டிரைக். அந்த அதிகாரிகளுக்கு No idea about rubber. இவர்கள் படித்திருக்கிறார்கள். நான் குறை சொல்வதாக நினைக்காதீர்கள். நான் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அதனால் சொல்கிறேன். இவர்களுக்கு ரப்பரைப் பற்றி ஒன்றும் தெரியாது. கன்னியா குமரி மாவட்டத்திற்கு வந்த பிறகுதான் ரப்பரைப் பற்றி இவர்களுக்குத் தெரியும். நம்முடைய தமிழகத்திலே ரப்பர் கிடைப்பது கன்னியாகுமரி மாவட்டத்திலேதான். 90 சத விகிதம் ரப்பர் கேரளாவிலே கிடைக்கிறது. பக்கத்தில் எங்கள் மாவட்டத்திலும் கிடைக்கிறது. இவர்கள் ரப்பரைப் பற்றி காலேஜில் படித்திருக்கலாம். ஆனால் எங்கள் மாவட்டத்திற்கு வந்த பிறகுதான் ரப்பரைப் பார்க்கிறார்கள். என்வே அவர்களுக்கு என்ன தெரியும் அதைப்பற்றி? நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அவர்களை அங்கே டிரான்ஸ்பர் செய்வதைவிட லோக்கலாகப் படித்தவர்கள் இருக்கிறார்கள்; அவர்களை ரெக்ரூட் செய்யலாம்.





இவ்வளவு அதிகாரிகள் அங்கே தேவையில்லை. ஒரு
டி.எப்.ஓ. கையிலே கொடுத்தால் போதும். தகுதி வாய்ந்த
பலர் அங்கே எஸ்டேட் நடத்துகிறார்கள். டி.ஐ. சைக்கிள்
கம்பெனி போன்றவர்கள், அதிலே பயிற்சி பெற்றவர்கள்,
அவர்களுக்கு 4,000 ஏக்கர் இருக்கிறது. 100, 150 தொழி
லாளர்கள்தான் இருப்பார்கள். அந்த முறையில் அதிகாரி
களைக் குறைத்து, அந்தத் தொழிலாளர்களுக்குச் சம்ப
ளத்தைக் கூட்டிக் கொடுத்து, நம்முடைய வருமானத்தை
ஈட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். They have
no idea about rubber. After seeing Kanniyakumari District only they
are seeing what is rubber. அவர்கள் எந்த அளவுக்கு
சூப்பர்வைசர்ஸ் செய்வார்கள்? அவர்கள் மலை ஏறிப்
போவதில்லை. என்னுடைய தொகுதியில், அந்தப் பகுதி
யில் யானை எல்லாம் தங்குகிறது, அதனால் போகத்
தயாராக இல்லை என்று சொல்கிறார்கள்.
அதனால் அந்தத் தொழிலாளர்கள்தான் கஷ்டப்படுகிறார்கள்.
நான் கேட்கிறேன், 3 மாதமாக ஒரு டிவிஷனில் ஸ்டிரைக்
நடப்பதை இந்த அதிகாரிகளால் தீர்க்க முடியவில்லை.
இது மாண்புமிகு அமைச்சரவர்களிடம் வந்திருக்காது.
நிச்சயமாகச் சொல்கிறேன். அவர்கள் எந்த இன்டரஸ்டும்
எடுப்பதில்லை. ஏன் ஸ்டிரைக் செய்கிறார்கள் என்று
அமைச்சரவர்கள் கேட்டால் சொல்லுவார்கள். அந்த
அதிகாரி இங்கே வந்திருக்கிறாரா என்பது தெரியாது. அந்த
அதிகாரி யார் என்று எனக்குத் தெரியாது. அந்த அதிகாரி
களை நாம் பார்க்க முடியாது. நாகர்கோவிலுக்குப்
போனால், கேம்ப் என்று சொல்லுவார்கள். நான் தோழமைக்
கட்சிக்காரன். இதற்குமேல் சொல்லத் தயாராக இல்லை.
அது நம்முடைய அரசின் தவறல்ல.

இப்போதுள்ள அரசு ரப்பர் தோட்டக் கழகம் 1984
வரையில் அரசாங்கத்திடம் இருந்தது. பாரஸ்ட் டிப்பார்ட்
மென்டில் இருந்தது. 1984 க்குப் பிறகு கழகமாக
ஆகியிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிலாளர்களுக்கு 1976
லிருந்து பி.எப். செட்டில் ஆகவில்லை. ஒரு தொழிலா
ளிக்குக்கூட லோன் கிடைக்கவில்லை. பல டி.டி.சி. கூட்டங்
களில் நான் கேட்டிருக்கிறேன். அதற்கு ஏ. ஜி. ஆபீசில்
இருக்கிறது என்று சொல்லுவார்கள், அரசிடம் இருக்கிற
தென்று சொல்லுவார்கள், செக்ரட்டேரியட்டில் இருக்கிற
தென்று சொல்லுவார்கள். அந்த ஏழை அப்பாவித் தொழி
லாளர்களுக்கு பி.எப். லோன்கூட எடுக்க முடியாது.
அந்தப் பகுதியில் இருக்கின்ற தனியார் தோட்டங்களில்
20 சதவிகிதம் போனஸ் கொடுக்கிறார்கள். நம்முடைய
அரசாங்கத் தோட்டத்தில் 8.33 சதவிகிதம்தான் கொடுக்
கிறார்களே தவிர அதிகமாகக் கொடுக்கத் தயாராக இல்லை.

மேலும் பல கோடி ரூபாய் தேக்கு மரத்தை வெட்டிய பிறகுதான் அவர்கள் ரப்பரை பயிர் செய்கிறார்கள். ஆனால் இப்போதும் ஒரு ஹெக்டருக்கு 2,500 ரூபாய் எடுத்துக் கொண்டு, லாபம் இல்லை என்று காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பக்கத்திலே தனியார் கொடுப்பதுபோல 20 சதவிகிதம் அந்தத் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே 76 வாச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். அவர்கள் செய்யமாட்டார்கள். அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் சொல்லி, அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே உள்ள அதிகாரிகள் உள்ளே சென்று தோட்டத்தைக் கவனித்தால் பல கோடி ரூபாய் லாபம் வருகின்ற ஒரு நிறுவனமாக இந்த ரப்பர் கார்ப்பரேஷன் இயங்க முடியும். எத்தனை கோடி ரூபாய் டெண்டர் கோரினாலும், இந்தத் தோட்டத்திற்கு தனியார் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு உலகத்திலேயே சிறந்த ரப்பர் கிடைக்கும் இடம் இது. இந்தியாவில் அல்ல, உலகத்திலேயே சிறந்த இடம். கேரளாக்காரர்கள் ஒரு ஏக்கருக்கு 3 இலட்சம் கொடுத்து வாங்குகிறார்கள். அந்த அளவுக்கு உள்ள ஏரியாவில் இந்த அளவுக்கு மோசமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன், இதைப் பற்றி யாரும் பேச மாட்டார்கள் என்பதால் சொல்கிறேன். என்னுடைய பகுதி கேரளா பார்டரில் இருக்கிறது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள தேக்கு மரத்தையும், ரோஸ் மரத்தையும் கேரளாக்காரன் கடத்துகிறான். யாரிடம் சொல்வது? ஒரு பென்சிங் போடுங்கள். இதைத் தடுக்க வழி செய்யுங்கள். இப்போது ஒரு ரேன்ஜர் போட்டிருக்கிறார்கள். அந்த ரேன்ஜரும் பிரயோசனமில்லை. தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு பென்சிங் போட வேண்டும். மேலும் காவல் துறைக்கும் வனத் துறைக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. தினம்தினம் அவர்களுக்குள்ளே கிளாஷ் இருக்கிறது. எஸ்.பி. அவர்களையும் டி.எப்.ஓ. அவர்களையும் பார்த்து பேசத்தான் எங்களுக்கு நேரமிருக்கும். அவர்களுக்குள் கோவார்டினேஷன் கிடையாது. இவர் சொன்னால் அவர் கேட்பதில்லை, அவர் சொன்னால் இவர் கேட்பதில்லை. இப்படி பல்வேறு அரசுத் துறைகளின் இடையே கருத்தொற்றுமை இல்லாமல் இருக்கிறது. இதை





இப்படியே விட்டுவிட்டால் நமது காடுகளில் இருக்கும் ரோஸ் வுட், தேக்கு மரங்கள் எல்லாம் கேரளாவுக்குக் கடத்தப் பட்டுவிடும். அப்படிப்பட்ட நிலைமைகளை நான் சி.சி.எப். முன்னிலையில் தெரிவித்து இருக்கிறேன். ஆகவே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-20

மேலும் கால்நடைப் பராமரிப்பு பற்றி அதிகம் நான் பேசப்போவதில்லை. கால்நடை மருந்துவர்களுக்கு, ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் கால்நடை மருத்துவம் படித்துத்தான் வந்திருக்கிறார்கள். அவர்கள் அரசுத் துறைகளில் 28 வருடங்களாக பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் மற்ற அலுவலர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பட்டதாரிகளாகவும், இருக்கிறார்கள் அவர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். பிரமோஷன் இல்லை, ஊதிய உயர்வு இல்லை. அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் தங்கள் கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் இருந்த நிகழ்ச்சியெல்லாம் நடந்தது. அவர்களிடம் நான் பேசிவிட்டுக்கூட வந்தேன். அவர்களுடைய பிரச்சினைகளை எல்லாம் இந்த அரசு முடித்து வைக்க, வேண்டுமென்று கேட்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்மா என்றால் அன்பு,

அப்பா என்றால் அறிவு,

ஆசான் என்றால் கல்வி

என்ற உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில், எங்களின் மீது அன்பையும் எங்களுக்கு அறிவையும், எங்களுக்கு அரசியல் கல்வியும் பயிற்றுவித்து, அம்மாவும், அப்பாவும், ஆசானும், தாயும், தந்தையும், ஆசிரியரும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை முதலிலே பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்களின் உள்ளங்களில் இயக்கு சக்தியாக இருந்து, எங்களை இயக்கிக் கொண்டிருக்கும் இதய

தெய்வமே, நாங்கள் எல்லாம் நிலத்திலே தெய்வமாக யாரையாவது வணங்கிக் கொண்டிருக்கிறோம் என்றால் அது மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களைத் தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடியவர்களின் கூடாரமாக, முரடர்களின் மடமாக, சட்டத்தை மீறி செயல்புரிகின்றவர்களின் உறைவிடமாக இருந்த தமிழகத்தை, புனித பூமியாக மாற்ற வேண்டுமென சபதம் பூண்டு, புனிதமாக்கினார் புரட்சித் தலைவி. கண்ணகி யின் கோபத்திற்கு ஆளான மதுரை மாநகரில் மிஞ்சும் இடமாக சிறிதாவது இருந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். ஆனால் இங்கே கொடியவர்கள் அப்புறப் படுத்தப்பட்டனர். கொள்கை வீரர்கள், வீராங்கனைகள் மட்டும் களத்தில் வெற்றி கண்டு, புரட்சித் தலைவியின் கொள்கை முரசினை அறைகின்ற பேரிகைகளாக, முரசு களாக இங்கே வீற்றிருக்கும் காட்சி என்னை சிலப்பதிகாரக் காலத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

என்போன்ற ஏழை மீனவர்களின், மிகவும் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தில் பிறந்து உழல்கின்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கூட, இந்த மாமன்றத்தில், வரலாறு படைத்த இந்த சட்டமன்றத்தில் உரையாற்றுகின்ற பேறு பெற்றேன் என்றால், அந்தச் சிறப்பு, பெருமை அத்தனையும் புரட்சித் தலைவி அவர்களின் இதயத்தில் வீற்றிருக்கும் அன்பு, கருணை, தயை, பொங்கும் உள்ளார்ந்த மனித நேயத்திற்கு மட்டுமே சொந்தம்., கருணை காட்டுவது மனித இயல்பு. அன்பு காட்டுங்கள் என்று ஏங்குகின்ற பிற்பட்ட சமுதாயத் திற்கு அன்பினை அருவியாக, பேரருவியாக விழச் செய்து புதுமை படைத்தவர் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

எளியவர் முதல் உயர்ந்தவர் வரை, படித்தவர் முதல் பாமரர் வரை வாழ்வில் வளம் பெற, நீதி, நேர்மை நியாயம் என்னும் தீபத்தினை கையில் ஏந்தி, தமிழக மக்களின் ஒப்பற்ற ஒரே தலைவியாக, தனது வாழ்க்கை யினையே தமிழ்நாட்டிற்காகவும், தமிழக மக்களுக்காகவும் தன்னைத் தேய்த்து மணம் தரும் சந்தனமாக விளங்கு கின்றார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். எனவே, அவர்களின் பொற்பாதங்களை சிரம் தாழ்த்தி, வணங்கி எனது உரையை இந்த மாமன்றத்தில் தொடங்கு கிறேன். எங்களின் இதய தெய்வம் தொட்ட இடம் துலங்கும். கால் பட்ட இடந்தனில் வளம் கொழிக்கும். வரலாறு காணாத வெற்றியைப் பெற்றவர் எங்கள் தங்கத் தலைவி. அரசியல் வானில் ஒளி வீசும் விடிவெள்ளி. குப்தர் காலம் பொற்காலம், மௌரியர் காலம் பொற்காலம்



என்றெல்லாம் வரலாற்று ஏடுகளில் இதுவரை படித் துள்ளீர்கள். இதுவரை படித்ததுபோக இனிவரும் காலங்களில் புனிதமான ஆட்சி, பொற்கால ஆட்சி என்றெல்லாம் படிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

பால்வளம், மீன்வளம், கால்நடை வளம், வனவளம் உயர்ந்தோங்கி வளர, இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கியும், புரட்சித் தலைவியின் மீது நம்பிக்கைவைத்து, தமிழகத்தின் முதல் தொகுதியான இராயபுரத்தில் இருந்து என்னைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பிய இராயபுரம் தொகுதி மக்களுக்கு நன்றி கூறி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 7-25

கோரிக்கை எண். 10 பால் வளம். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் பேரில் வெண்மைப் புரட்சியின் மூலமாக தமிழகத்தில் பால் பெருக்குத் திட்டத்தை தீவிரப்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் பால்வள மேம்பாட்டு நடவடிக்கைகளை பால் வளத் துறை மேற்கொண்டுள்ளது.

இன்றைய நிலையில் நமது மாநிலத்தில் 8,569 ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுடன் இணைக்கப்பட் டுள்ளன. 23.60 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பால் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக பதிவு செய்யப் பட்டு நாளொன்றுக்கு 14.87 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போதைய பால் உற்பத்தி அளவான நாளொன்றுக்கு 13.50 இலட்சம் லிட்டரில் 3 இலட்சம் லிட்டர் கிராமங்களில் தினமும் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 10.50 லட்சம் லிட்டர் பால் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. நடப்பு பால் உபரி காலத்தில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 14.50 லட்சம் லிட்டர் என்ற இலக்கை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வருடத்தில் கூடுதலாக 350 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மகளிர் மேம்பாட்டில் ஆழ்ந்த கவனம் கொண்ட நமது இதய தெய்வத்தின் ஆட்சியில் இப்புதிய கூட்டுறவுச் சங்கங்களில் 100 சங்கங்கள் மகளிர் சங்கங்களாக இருக்கும். முதல் மகளிர் சங்கம் பர்கூரில் துவங்க ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

[திரு. டி. ஜெயகுமார்] [1991 செப்டம்பர் 25

கடந்த ஆண்டு நாளொன்றுக்கு 11.64 லட்சம் லிட்டர் என்ற இலக்கிலிருந்து இந்த ஆண்டு 12.60 இலட்சம் லிட்டர் என்ற அளவை அடைய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தரமான உயர் இனக் கன்றுகளை செயற்கை கருவூட்டல் வசதி மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க திட்டம் இடப்பட்டுள்ளது. இது வரையில் 2,391 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வசதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 400 கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வசதி நீட்டிக்கப்படவுள்ளது. இதன் பயனால் சுமார் ஒரு இலட்சத்து அறுநூற்றைம்பது உயர் இன கிடாரிக் கன்றுகள் பிறப்பதற்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயத் தொழிலாளர்களும் சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளும் இதனால் பயன் அடைவார்கள்.

கடந்த ஆண்டு மாவட்ட அளவில் பால் விற்பனை, நாளொன்றுக்கு 4.5 இலட்சம் லிட்டராக இருந்தது, இவ்வாண்டு நாளொன்றுக்கு 5.5 இலட்சம் லிட்டராக அதிகரிக்கப்படவுள்ளது. சென்னை நகரில் சென்ற ஆண்டில் நாளொன்றுக்கு 6.6 இலட்சம் லிட்டராக இருந்தது இவ்வாண்டு 7.2 இலட்சம் லிட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மேலும் அதிகப்படியாக பால் பாலிதீன் பைகள் மூலம் 50,000 லிட்டர் பால், சென்னை நகரில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதலாக 50,000 புதிய பால் அட்டைகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

'ஆவின்' பால் பொருட்களான வெண்ணெய், நெய், பால்பொடி, போன்றவை சென்னை நகரிலும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களிலும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு டில்லி மாநகரில் பால் பற்றாக்குறைக்கு உதவும் பொருட்டு அங்குள்ள தாய் பால் பண்ணைக்கும், டில்லி பால் வழங்கும் திட்டத்திற்கும் சுமார் 800 மெட்ரிக் டன் வெண்ணெய் விற்பனை செய்யப்பட்டது.

சென்னையில் தற்போது 531 பால் வழங்கும் மையங்களும் 135 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களும் மற்றும் 52 பால் விற்பனை நிலையங்களும், பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்து வருகின்றன. நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்க 'டெட்ரா பேக்' மூலம் 200 மில்லி முதல் ஒரு லிட்டர் வரை அட்டைப் பெட்டிகளில் விற்பனை செய்யப்படுகிறது.



1991 செப்டம்பர் 25] [திரு. டி. ஜெயகுமார்]

தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் பாலை பதப்படுத்தி விற்பனை செய்வதற்காக 15 இலட்சத்து 87 ஆயிரம் லிட்டர்கள் கொள்திறன் கொண்ட 15 பால் பண்ணைகளும், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள 7 இலட்சத்து 43 ஆயிரம் லிட்டர்கள் 46 பால் குளிரூட்டும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு பால் பண்ணைகளில் உபரி பாலை பால் பொருட்களாக மாற்ற வசதிகள் அமைக்கப்பட்டு உள்ளன. மேலும் பால் விநியோகத்தில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் விளைவால் இவ்வரசு பதவி ஏற்றபின் 49 நபர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் 'சோளிங்கநல்லூரில்' 4 இலட்சம் கொள்திறன் கொண்ட புதிய பால் பண்ணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் திருச்சியிலும், விழுப்புரத்திலும் 1.50 லட்சம் லிட்டர்கள் மற்றும் 50,000 லிட்டர்கள் முறையே கொள் திறன் கொண்ட புதிய பால் பண்ணைகளும் நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான வேலைகளும் நடந்து வருகிறது. இதைத் தவிர அம்பத்தூர், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை, கோவை, வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள பால் பண்ணைகளை விரிவாக்கம் செய்யவும் திட்டம் தீட்டப்பட்டு உள்ளன. கூடுதலாக 12 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

பிற்பகல் 7-30

பால் பெருக்கத் திட்டம் அமுலில் இல்லாத 6 தென் மாவட்டங்களில் பால்வள மேம்பாட்டிற்காக 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், 5 கோடி ரூபாய்க்காக திட்டம் வகுக்கப்பட்டு. 1991-92 ஆம் ஆண்டில் 5 லட்சம் ரூபாய் செலவிட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஏழைகளின் வாழ்க்கையில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆதிதிராவிட நலத் திட்டத்தின் கீழும், நலிந்த பிரிவினருக்கான சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழும் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக கறவை மாடுகள் வாங்க மானியம் வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள். இதன் பயனால் 800 ஆதி திராவிட குடும்பங்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டு இருக்கின்றது. இதன் மூலம் ரூ. 128 லட்சம் வழங்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

[திரு. டி. ஜெயகுமார்] [1991 செப்டம்பர் 25

மத்திய சிறப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 387.38 லட்சம் செலவில் 24,211 கறவை மாடுகள் வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் எந்த ஒரு மண்ணையும் இழக்க மாட் டோம் என்றும், இழந்த கச்சத்தீவை மீண்டும் பெறுவோம் என்றும் சுதந்திர தின நாளில் முழக்கமிட்ட எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மீனவர்களுக்காக நல்ல பல திட்டங்களை வகுத்துத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) நீலப் புரட்சி என்ற புரட்சியின் அடிப்படையில் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பொருளாதாரத்தை மேம் படுத்தவும் அயராது பாடுபட்டு வருகின்றார்கள்.

தமிழ்நாடு 1000 கி.மீ. நீளமுள்ள கடற்கரையையும், 41,412 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள கடற்படு நிலத் தொடரையும் உடையது. நாட்டின் மொத்த மீன் உற்பத்தி யில் தமிழ்நாட்டின் பங்கு 15 விழுக்காடாகும். மீனவர்களின் சமுதாய நலத்தில் அக்கறை கொண்ட எங்கள் அன்புத்தெய்வம் இலவச வீடுகள் கட்டித் தரவும், மீன்வளத்தை அபிவிருத்தி செய்யவும் பல திட்டங்களைத் தீட்டியுள்ளார்.

உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க தரமான மீன் குஞ்சுகள் தேவை. இதற்காக வெளிநாட்டு உதவியுடன் 70 மில்லியன் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க ஆணையிட்டுள்ளார்கள். தனியார் நிறுவனங்கள் மூலமும் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய வழிவகை செய்யப் படவுள்ளது. பர்கூர் சட்டமன்ற தொகுதியில் இதுவரை 34 நீர் நிலைகள் மீன் வளர்ப்பதற்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. இவைகள் தவிர இன்னும் 2 நீர் நிலைகள் மீன் வளர்ப்பதற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) ஐரோப்பிய பொருளாதாரக் குழு இத்திட்டத்திற்கு உதவ முன் வந்துள்ளது. ஆரம்ப கட்டமாக 15 தனியாருக்கு மீன் குஞ்சு உற்பத்தி செய்ய பண்ணை அமைத்திட 25 விழுக்காடு மானியமாக பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு 150 லட்சம் மீன் குஞ்சுகள் எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தம் மானியத் தொகை ரூ. 3.75 லட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடல் மீன்வளத்தைப் பெருக்க மீன்பிடி படகுகள் அதிகம் வழங்க வேண்டும் என மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் கள் உத்திரவிட்டுள்ளார்கள். விசைப்படகுகள், கட்டு மரங்கள், மரைன் பிளைவுட் படகுகள் வாங்குவதற்காக



1991 செப்டம்பர் 25] [திரு. டி. ஜெயகுமார்]

20 சதவிகிதம் மானியம்
செலவிடப்படும் தொகையில்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்
வழங்கப்பட வேண்டுமென
கள் உத்தரவிட்டுள்ளார்கள். நடப்பு நிதியாண்டில் கன்னியா
குமரி மாவட்டத்தில் 28 அடி நீளமுள்ள மரைன் பிளைவுட்
படகுகள் அண்மைக் கடல் மற்றும் தூரக்கடல் மீன் பிடிப்
பிற்குப் பயன்படும் வகையில் 20 சதவிகிதம் மானியத்தில்
வழங்கப்படவுள்ளது. மேலும் உள் மற்றும் வெளிப்பொருத்
தும் இயந்திரங்கள் வாங்க 50 சதவிகிதம் மானியம் வழங்கப்
பட்டு வருகிறது. இதன் உச்சவரம்பு தொகையை ரூ.7,500
லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்த வேண்டுமென எங்கள்
இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்
ளார்கள்.

மீன்பிடி படகுகளுக்கு தங்குதள வசதிகள் 10 இடங்களில் ஏற்
படுத்தப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்ன
முட்டம் என்ற இடத்திலும், மற்றும் இராமநாதபுரம் மாவட்
டத்தில் வாலிநோக்கம் என்ற இடத்திலும் மீன்பிடித்
துறைமுகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை
யிலும் மீன்பிடித் துறைமுகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.
மீன்பிடித் துறைமுகம் மீன்பிடி இறங்கு தளங்களிலும்
உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது
போன்ற வசதிகளை தஞ்சையில் உள்ள பூம்புகார்
வெள்ளிப்பள்ளம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வள்ள
விளை, கோடிமுனை ஆகிய இடங்களிலும் வசதிகளை ஏற்
படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு
பரிசீலித்து வருகிறது.

அந்நியச் செலாவணி அதிகரிக்கும் வண்ணம் இறால் வளர்ப்
பிலும் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இறால்
மையம் ஒன்று உருவாக்கப்பட்டு தேவையான அனைத்து வசதி
களையும் அளித்து வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுத்தருதல்,
இறால் வளர்ப்பில் உதவிடுதல் ஆகிய பணிகளை மேற்
கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு
ரூ. 30,000 மானியமாக இறால் வளர்ப்பவருக்கு அளிக்கப்படும்.
இத்திட்டம் தொழில்மயத்தைப் போன்ற ஒரு திட்டமாகும்.
இதனை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் செயலாக்கம்
செய்திட ரூ. 25 இலட்சம் மூலதன உதவியாக அளித்திட
மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில்
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 7.35

மேற்கூறிய திட்டங்களைத் தவிர மீனவர்களின் நலன்
கருதி 12,582 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்
போது திருச்சினாங்குப்பத்தில் 492 மீனவர் குடியிருப்புகள்

கட்ட ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு மீனவரிடமும் ரூ. 10 வீதம் 9 மாதங்களுக்கு வசூலிக்கப்பட்டு அதற்கு இணையாக அரசின் பங்குதொகை ரூ. 90-ஐயும் சேர்த்து மீன்பிடிப்பு இல்லாத மாதங்களில் மாதம் ரூ. 60 வீதம் மூன்று மாதங்களுக்கு அதாவது—அக்டோபர், நவம்பர், டிசம்பர்—திரும்பித் தரப்பட்டு வருகின்றன. ஆனால் மேலும் உதவி செய்யும் எண்ணத்தில் எங்களது இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் நாள் ஒன்றுக்கு ரூபாய் 1½ வீதம் மாதத்திற்கு ரூ. 45 வீதம், எட்டு மாதங்களுக்கு வசூலிக்கப்பட்டு, அதற்கு ஈடான தொகையை மத்திய மற்றும் மாநில அரசுகளால் அளிக்கப்பட்டு, மொத்தத் தொகையான ரூ. 1,080-ஐ மீன் பிடிக்காலம் இல்லாத நான்கு மாதங்களில் மாதத்திற்கு ரூ. 270-வீதம் திருப்பி வழங்க திட்டம் தீட்டப்படவுள்ளது.

மீனவர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கடலிலோ அல்லது தரையிலோ விபத்தினால் மரணமடைந்தால், மீனவர் குடும்பத்திற்கு ரூ. 15,000 என்றும் ஊனமுற்றால் ரூ. 7,500 என்றும் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கான பிரிமியத் தொகையை மாநில அரசும், மைய அரசும் சரிபாதியாகப் பங்கிட்டு மீனவருக்கு ரூ. 9 வீதம் செலுத்தப்படுகின்றது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மீனவர்களின் நலன் கருதி இத்தொகையை ரூ. 21,000 என்றும் ரூ. 10,500 என்றும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு பிரிமியத் தொகையாக ரூ. 10.84 என மீனவர் ஒருவருக்கு செலுத்தப்பட வேண்டும். இத்திட்டத்திற்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இது நமது பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் பாத்திரமான இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி.)

மேலும் மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்கள், உபகரணங்கள், குளிர்பதன பெட்டிகள் போன்ற சாதனங்களை தரவும் அரசு திட்டமிட்டுள்ளது. இடைத்தரகர்கள் இலாபம் பெறுவதைத் தடுத்து, ஏழை மீனவர்களை அவர்கள் பிடியிலிருந்து தளர்த்தி, உதவி செய்திட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நமது தாயுள்ளம் கொண்ட அன்பு தெய்வம் அவர்களின் ஆட்சியில் ரூ. 1 இலட்சம் பங்கின் மூலதனமாக ஒவ்வொரு மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கும் வழங்கப்படும். நடப்பாண்டில் 10 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இத்திட்டங்களைத் தவிர மெரினா கடற்கரையில் ரூ. 3 கோடி செலவில் கடல் மீன் அருங்காட்சியகம் அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி; இது பொழுது போக்கு சாதனமாக மட்டுமல்லாமல் கடல் மீனை ஆராய்ச்சி செய்யும் கல்வி மையமாகவும் விளங்கும். இதற்காக ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 7-40

கால்நடை வளர்ப்பு, ஏழை விவசாயிகள் நலன் கருதி கால்நடை பராமரிப்புத் திட்டங்களை புரட்சித் தலைவியின் அரசு செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தில் கால்நடைகளை வாங்கவும், பராமரிக்கவும் தேவையான வசதிகள் செய்து தரப்படுகின்றன. இதனால் ஏழை விவசாயிகளுக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதோடு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதாரத்தையும் உயர்த்த வழிவகை செய்யப்படுகிறது. இத்துறையின் முக்கிய நோக்கங்களாக தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தி திறனை அதிகரித்து, அவைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை செய்து கொடுத்து, கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது. இதன் பயனாக 1978-79 ஆம் ஆண்டு கிடைத்த பாலின் அளவு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 99 கிராமில் இருந்து, 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டில் 169 கிராமாக உயர்ந்துள்ளது. முட்டை உற்பத்தியும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 16 முட்டை என்ற எண்ணிக்கையிலிருந்து 46 முட்டையாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் கால்நடைகளில் பசுக்கள் மற்றும் எருமைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. கிராமப்புற விவசாயிகள் இவைகளின் மூலம் கணிசமான வருவாயை பெறுகின்றனர். எனவே கால்நடை பராமரிப்புத்துறை தமிழ்நாட்டிலுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளை அயலின உயர்தர ஜெர்சி மற்றும் பெரிசியன் பொலி காளைகளைக் கொண்டும், முர்ரா பொலி காளைகளைக் கொண்டும் இனவிருத்தி செய்து, பசுக்கள் மற்றும் எருமைகள் பால் உற்பத்தி திறனை அதிகரிக்க செய்ய ஏற்பாடுகள் செய்து வருகிறது. 2770 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் மூலம் இக் கால்நடைகளின் அபிவிருத்தி அதிகரிக்கப்பட்டு வருகிறது. இவைகளில் 1,936 நிலையங்களில் உறைவிந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள நிலையங்களில் திரவ விந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

1992 ஆம் ஆண்டு உலக வங்கி நிதி உதவியுடன் பெரிய அளவிலான கால்நடை வளர்ப்புத் திட்டத்தை 5.04 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் பேரில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும் கால்நடைகளின் பெருக்கத்தைக் கருத்தில் கொண்டு பராமரிப்புக்காக ஓசூர், ஊட்டி, மற்றும் ஒரத்தநாடு பசுந்தீவனப் பண்ணைகளில் மாட்டுத் தீவனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பசுந்தீவனங்கள் கிடைக்காத காலங்களில் உபயோகப்படுத்த உபரியாக உள்ள பசுந்தீவனங்களை மொலாசஸ் மற்றும் உப்பு ஆகியவைகளைக் கலந்து, கெடாத வண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் பசுந்தீவன உற்பத்தியை அதிகப்படுத்த, பசுந்தீவன நறுக்குகள், பசுந்தீவன மரக்கன்றுகள், பசுந்தீவன விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், கால்நடை பராமரிப்புத்துறை விரிவாக்கப் பணியை தீவிரப்படுத்த, தொலைக்காட்சி, வீடியோ, மற்றும் படச்சுருள்கள் மூலம் மக்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன. கால்நடைகளுக்கு ஏற்படும் வியாதிகளை கண்டறிய பிரத்யேகமான பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளது.

ஆடு வளர்ப்புத் திட்டம் விவசாயிகளிடையே மிகவும் பிரபலமடைந்து வருகிறது. உள்ளூர் இன ஆடுகளை தேர்ந்தெடுத்து இனவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஐரோப்பிய பொருளாதார திட்ட நிதி உதவியுடன், (Europeon Economic Community Development) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, வட ஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் பெரிய அளவிலான ஆடு வளர்ப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. பர்கூரிலும் ஆடு வளர்ப்புத் திட்டத்தை இந்த நடப்பு ஆண்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பர்கூர் தொகுதியில் மட்டும் 200 சிறு ஆட்டுப் பிரிவுகள் ரூ. 18.23 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி.) இத்திட்டத்தில் பங்கேற்கும் 200 இந்து ஆதி திராவிடர்கள் மானியமாக ரூ. 10.23 லட்சம் நிதி உதவி பெறுவர். இதய தெய்வம், புரட்சித் தலைவியின் ஆட்சியில், இத்திட்டத்தின் சிறப்பு அம்சமானது, மொத்தப் பயனடைபவர்களில் 50 விழுக்காடுகள் மகளிர் என்பதாகும். இதனால் இப்பகுதியில் ஆடுகளில் இறைச்சி உற்பத்தித் திறன் கணிசமாக உயரும். இந்த உற்பத்தித் திறனால் ஏராளமான விவசாயிகள் பயன் பெறுவர். பல விவசாயிகள் கொட்டில் முறையில் வெள்ளாடுகள் வளர்க்கவும், துவங்கியுள்ளனர்.

தமிழகத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி வாரியம் நிதி உதவியுடன் ரூ. 120.60 கோடி செலவில் 90 கோழி



வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களிலும் 90 பேர் பயனடைவார்கள். மொத்தமாக 90 கூட்டுறவுச் சங்கங்களில் 8,100 குடும்பங்கள் பயன் அடையும். உபதொழிலாக 50,000 குடும்பங்கள் பயனடையும்.

தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் தொகுதியில் ரூ. 134 லட்சம் செலவில் ஒரு கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படும். இதன் வாயிலாக 90 குடும்பங்கள் பயன் அடையும்.

கால்நடைகளின் உடல்நலம் பேணும் கருத்தின் அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் துறை தமிழ்நாட்டில் 837 கால்நடை மருந்துவமனைகளையும், 2,226 கால்நடை கிளைநிலையங்களையும் உண்டாக்கி செவ்வனே பணிகள் செயல்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர 11 இடங்களில் நோய் புலனாய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. 13 இடங்களில் மருத்துவ ஆய்வுக் கூடங்களை இயக்கி கால்நடை உதவி மருத்துவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 50 இடங்களில் நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் உள்ளன. இவ்வருடம் 20 புதிய கால்நடை மருந்தகங்களை நிறுவ மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் திட்டமிடப்பட்டுள்ளன. பாரதி கண்ட கனவை நனவாக்கிடும் வகையில் நல்லாட்சி புரிந்துவரும் இதய தெய்வத்தின் பர்கூர் தொகுதியில் எலத்தகிரி என்ற இடத்தில் கால்நடை மருந்தகம் புதிதாகத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிர மாநிலத்தில் 10 கால்நடை கிளை நிலையங்களை மருத்துவமனைகளாக தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட உள்ளது.

சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் மூலம் சிறிய விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை விவசாயிகள் அனைவரும் ஆடுகள், பன்றிகள், கோழிகள் மற்றும் கலப்பினக் கன்றுகள் வளர்க்க எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் 25 விழுக்காடிலிருந்து 33½ விழுக்காடு வரை மானியம் வழங்கப்படுகிறது. ஆதி திராவிட வகுப்பை சேர்ந்த விவசாயிகளுக்கு தனியாக சிறப்பு மத்திய உதவித் திட்டம் ஒன்றை சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர, எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதேபோல் மலைப்பகுதிகளில் வாழும் ஏழை விவசாயிகளுக்கு

ஒருங்கிணைந்த மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திலே 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் 75 சதவீதம் மானியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 7.45

தென்கிழக்கு ஆசியக் கண்டத்திலேயே முதன் முதலாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு அப்பல்கலைக்கழகத்தின் ஆளுமையில் கால்நடை உற்பத்தி, மருத்துவம், நோய் தடுப்பு ஆகியவற்றுடன் கோழி, வாத்து, முயல் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ச்சி முதலியவற்றின் அறிவியலைப் பெருக்கிட மாநிலத்தில் உள்ள பல்வேறு இடங்களில் கல்லூரிகளும், விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையங்களும் செயல்பட்டு வருகின்றது. இப்பல்கலைக் கழகத்தின் தலைமை இருப்பிடம் மாதவரத்தில் இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் 133.50 ஏக்கர் நிலம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிட வளாகத்திற்கு மொத்த செலவு சுமார் ரூ. 40 கோடி என்றும், Administrative (நிர்வாக) கட்டிடத்திற்கு ரூ 2.38 கோடி என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தலாம் என இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்து அதற்கான வேலையும் துவங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இப்பல்கலைக் கழகத்தில் வளாகம் கட்டப்பட்டவுடன் மேலும், மேலும் வளர்ந்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு ஆகிய அறிவியல்களில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டங்களைக் கற்பித்தல், வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பால், முட்டை இறைச்சி, மீன் போன்ற உணவுப் பொருட்களைப் பெருக, பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், வேளாண்குடி மக்கள் வேலை வாய்ப்பு பெறுதல் போன்றவைகளும், இப்பல்கலைக் கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும். இப்பல்கலைக் கழகம் தொழில்நுட்ப அறிவுரைகளையும், பல்வேறு ஆக்கப் பணிகளையும் வழங்கி வருகின்றது.

வனத் துறை, ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க அவர்களின் ஏக்கங்களை நீக்க சபதமேற்று நல்ல பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் திட்டங்களில் பசுமைப் புரட்சி என்ற



கால்நடைகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சிறப்பாகத்தான் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டிலேயே ஒரே ஒரு கால் நடை மருத்துவக் கல்லூரிதான் இருக்கிறது. ஆகையினால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஈஞ்சங்கோட்டையில் கால்நடை மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கூறியது குறித்து தற்போது அரசிடம் திட்டம் எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் ஆட்டோமேடிக்வெண்டிங் மெஷின் பொருத்தப்பட்ட பூத்துக்கள் இருக்கின்றன. அதில் கொடுக்கப்படும் பால் தண்ணீர் உள்ளதாக இருக்கிறது. அளவும் குறைவாக இருப்பதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. என்னுடைய தொகுதியில் 050 என்ற பூத்தில் இந்தக் குறை கண்டுபிடிக்கப்பட்டு அது ரிப்போர்ட்டும் செய்யப்பட்டுவிட்டது ஆனால் அதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத், தலைவர் அவர்களே, பொதுவாக பால் விநியோகம் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டதின் பேரில் திடீரென்று சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதன்மூலமாக பல ஆட்டோமேடிக் மில்க் வெண்டிங் பூத்துக்களை பறிமுதல் செய்திருக்கின்றோம் அந்த வகையில் தண்டனைத் தீர்வுகளும் அளிக்கப்பட்டு நஷ்டமும் வசூலித்து இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர். தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற பொழுது நமது புதிய அரசு வந்த, பிறகு விபத்தில் மரணம் அடைகின்ற மீனவர்களுக்கு 21 ஆயிரம் ரூபாய்

கொடுப்பதாக அறிவித்து இருக்கின்றார்கள். அது பாராட்டுக்குரிய செய்தி. ஆனால் மீனவர்கள் மீன் பிடிக்கின்றபொழுது விபத்தில் மரணம் அடைந்து கரைக்கு உடல்கள் வந்து சேருவதற்கு இரண்டு, மூன்று தினங்கள் ஆகிவிடுவது உண்டு. அப்படிப்பட்ட நிலையில்கூட அதைப் போஸ்ட் மார்ட்டம் பண்ணித்தான் பணம் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு சூழ்நிலை இருப்பதை இந்த அரசு பெரிய மனது கொண்டு, போஸ்ட் மார்ட்டம் இல்லாமலேயே பணத்தைக் கொடுப்பதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 8.10

மாண்புமிகு திரு. டி.ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் பயன்அடையும் மீனவர்களிடமிருந்து சான்றிதழ்களை தேசிய வேளாண்மைக் குழு நிர்ணயித்தபடிதான் நாங்கள் கேட்டு வருகிறோம். அந்த வகையில் சான்றிதழ்கள் கேட்குமாறு அவர்கள்தான் பணித்திருக்கிறார்கள். அந்த வகையில் உரிய சான்றிதழ்கள் அளிப்பதன் மூலமே அந்த உதவிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சா. பன்னீர் செல்வம்.

திரு. சா. பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே திண்டிவனத்திலே நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருந்த பால் குளிரூட்டு நிலையம் இப்பொழுது மூடிக்கிடக்கிறது. அது மீண்டும் திறக்கப்படுமா என்று மாண்புமிகு. அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

(ஆ) கோரிக்கை எண்—10 பால் வழங்கு திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு மா சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் . இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளய் பெற்றது டாக்டர் தே. குமாரதாஸ். தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறரா என்பதை அறிய விரும்புகிறேன்

டாக்டர் தே. குமாரதாஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின்அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்''பால் வழங்கு திட்டங்கள் பற்றிய 10-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 4,47,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க.—(இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இ) கோரிக்கை எண் 21 மின்வளம்

மாண்புமிகு பேரவைத்தலைவர் மானியக் கோரிக்கை எண். 21—மீனளம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்பு கிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம். இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது டாக்டர் தே. குமாரதாஸ். தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுருத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம். பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது திரு ஜி. பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஜிபழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

''மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 14,10,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.(ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(மேசையைத் தட்டும் ஒலி.)

கோரிக்கை எண் 22 கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் மானியக் கோரிக்கை எண். 22— கால்நடை வளர்ப்பு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு மா சுத்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன்



திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது குமாரதாஸ். தன்னுடைய வெட்டுத்தீர் மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்தே.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தே குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது திரு. ஜி. பழனிசாமி.தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுற்த விரும்புகிறாரா எனபதை அறிய விரும்ர்

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ழ்ளப்பெற்றது.

''கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 63,96,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க.— (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க.—(இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(மேசையைத் தட்டும் ஒலி).

(ட)கோரிக்கை எண் 45— காட்டுவளத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் மானியக் கோரிக்கை எண். 45— காட்டுவளத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன்

திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது

''காட்டுவளத் துறை பற்றிய 45-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 35,44,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீரமானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க(.ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க.(இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(மேசையைத் தட்டும் ஒலி.)

(ஊ) கோரிக்கை எண் 59 காட்டுவளம் குறித்து மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்:மானியக் கோரிக்கை எண். 59—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எச்.எம்.ராஜு.

திரு. எச்.எம். ராஜு. இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எச்.எம். ராஜு அவர்களுடையவெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது. திரு. ஜி. பழனிசாமி. தன்னுடைய வெட்டுத்தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்



திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஜி.பழனிசாமிஅவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது

''காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 29,66,17,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி.)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை (26—9—1991) முற்பகல் 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 8-15 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

8. பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஆ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

113. வேளாண்மைத் துறையில் 14—8—1985 ஆம் நாளிட்ட 11(2) ஏஜி-4558/85 எண் அறிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 20—8—1990 ஆம் நாளிட்ட 641 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

114. 1990 ஆம் ஆண்டு தமிழ் நாடுநாட்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 12—06—1990 ஆம் நாளிட்ட 587- ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

115. 1988-89 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72-(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

107. கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம் (தமிழ். ஆங்கிலம்).

108. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண். 22—கால்நடை பராமரிப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

110. கால்நடைப் பராமரிப்புத் துறை குறித்த செயல் முறைத் திட்டம், 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

111. கோரிக்கை எண். 45—காட்டு வளத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92(தமிழ், ஆங்கிலம்)

112. காட்டு வளத்துறை குறித்த செயல் முறைத் திட்டம், 1991--92 (ஆங்கிலம்).

113. கோரிக்கை எண். 21—மீன்வளத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991—92 (தமிழ், ஆங்கிலம்,.

114. மீன்வளத்துறை குறித்த செயல் முறைத் திட்டம், 1991-92 (ஆங்கிலம்).



115. பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1991-92.

116. பொது நிறுவனங்கள் குழுவின் பனிரெண்டாவது அறிக்கை, 1991-92.

117. பொது நிறுவனங்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை, 1991-92.

இணைப்பு— 1.

(54..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொதுவிற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்.

முகவுரை :

இம்மாநிலத்தின் மொத்த வருவாய் இனங்களில் சுமார் 70 சதவீதம் விற்பனை வரிகள் மூலம் அரசுக்குக் கிடைப்ப தால் விற்பனை வரிகள் அரசின் மிகப்பெரும் வருவாய் ஆதாரமாக விளங்குகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் வணிக வரி மூலம் ரூ. 2,167.16 கோடி வசூலாகியது. 1989-90-ல் இவ்வகையில் ரூ. 1,759.02 கோடி வசூலாகியது. இது, முந்தைய ஆண்டைவிட ரூ. 408.14 கோடி அதிகமாகும். அதாவது 23.2 சதவீத வருவாய் அதிகரித்துள்ளது. வரித் தொகையை ஒழுங்காக செலுத்துபவர்களுக்கு மதிப்பளித்து வரித்தொகையை செலுத்தாமல் ஏய்ப்பவர்களுக்கு தண்டனை அளிப்பதற்கு வகைசெய்யும் வரி விதிப்பு முறை ஒன்றை அரசு கொண்டுவர கருதியுள்ளது. இந்த ஏற்பாடு வரித் தொகையை ஒழுங்காகச் செலுத்துபவர்களுக்கு ஊக்கமளித்து அதன் மூலம் வரி வசூலை அதிகரிக்க உதவும். இந்நோக் கோடு தற்போதுள்ள வரி வீதங்களை சீரமைக்கவும், வரி வசூல் நிருவாக அமைப்பை மேம்படுத்தவும் குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்படும்.

சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட "முடிவுற தாக கருதப்படும் வரிவிதிப்பு முறை" சீராகச் செயல்பட வில்லை என்பதால் வரிவசூல் நிருவாக அமைப்பை மேம் படுத்த "தன்மதிப்பீடு" முறை என்னும் புதிய முறையை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய தன்மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் முறைகேடுகள் ஏதும் புரியாதவராகவும் துறை விற்பனை செய்யும் குறிப்பிட்ட சில படிவங்களை வாங்கிப் பயன்படுத்தாதவராகவும் உள்ள

(ஆ) சென்னை மாநகரில் மாதந்தோறும் (1989 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து) பொருள் வாரியான வியாபாரத் தொகை மற்றும் அரசுக்கு வரப்பெற்ற வருவாய்.

(இ) சோதனைச் சாவடிகளிலிருந்து (1990 ஆம் ஆண்டு ஜனவரி முதல்) திரட்டிய தகவல்களைத் தொகுத்தல்.

(ஈ) பொருள் வாரியான வியாபாரத் தொகை மற்றும் அரசுக்கு கிடைக்கப்பெற்ற வருவாய் (பல்வேறு வகையான 791 பொருட்களுக்கு).

(உ) 1990-91 ஆம் ஆண்டு முடிவில் பொருள் வாரியான வியாபாரத் தொகை மற்றும் அரசுக்குக் கிடைக்கப் பெற்ற வருவாய்.

(ஊ) அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சரிபார்க்கும் முறையில் முடிவுற்றதாகக் கருதப்படும் வரிவிதிப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வரி மதிப்பீட்டு செய்யப்பட்ட நேர்வுகள்.

(எ) 1989-90 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் மிக அதிக பட்ச வரி விதிப்பிற்குள்ளான 100 வரி விதிக்கப்பட்டவர்களிடமிருந்து கிடைத்த வருவாய்.

(ஏ) 2,240 திரையரங்குகளின் திரையரங்கு வாரியான விவரப் புத்தகம்.

இத்துறையில் ஒரே சமயத்தில் 25 இடங்களில் பயன்படுத்தும் அமைப்புடைய "விப்ரோ-286" சிறு கணிப்பொறியினைக் கொண்ட (WIPRO Main Frame Mini Computer with 25 Terminals) கணிப்பொறி மையமொன்று உள்ளது. இம்மாநிலம் முழுவதிலுமுள்ள வரி விதிப்பு வட்டங்களிலிருந்து சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் இங்கு கணிப்பொறியில் செலுத்தப்படுகின்றன. பொருள்கள் வாரியான வியாபாரத் தொகை, அரசு வருவாய், வணிகர்கள் தொடர்பான விவரப் புத்தகத்தை அச்சிடுதல் மற்றும் இன்றைய நாள் வரையிலும் தொகுத்து சரி செய்தல், சோதனைச் சாவடி ஆவணங்கள் முதலியவற்றை கணிப்பொறி மயமாக்கிச் சரிபார்த்தல் ஆகியவற்றுக்கு இக்கணிப்பொறி மையம் தற்போது பயன்படுத்தப் பட்டு வருகிறது.



**9. விற்பனை வரி விதிப்பு முதலியவற்றை கணிப்பொறி மயமாக்குவது பற்றிய ஆய்வுக் குழு :**

கணிப்பொறி மயமாக்கும் அதே நேரத்தில், விற்பனை வரி விதிப்பு தொடர்பாகக் கணிப்பொறி முறையினை அறிமுகம் செய்தல், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் இடம் பெற்றுள்ள பதிவுகளைச் சீரமைத்தல், எளிமையாக்குதல் ஆகியவை பற்றி ஆய்வு செய்வதற்காக, திரு. எஸ். ஜெயராமன், இ.ஆ.ப., (ஓய்வு) தலைமையில் முதல் நிலைக் குழு (First Class Committee) ஒன்றை அரசு நியமித்துள்ளது. இக்குழு 3—7—1971 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

**10. வணிகர் நல வாரியம் :**

வணிகர்களுக்கு உதவுவதற்காக வணிகர் நல வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. இதற்குத் தலைவர், வணிகவரித் துறையின் பொறுப்பை வகிக்கும் மாண்புமிகு முதல்வராவார்கள். இவர்களைத் தவிர துணைத் தலைவர் ஒருவர் உள்ளார். மேலும் அதிகாரிகளும் அதிகாரிகளல்லாதவர்களும் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக நியமனம் பெற்று உள்ளனர். இந்த வணிகர் நல வாரியம் இதுவரை 1,550 வணிகர்களைப் பதிவு செய்துள்ளது. அரசு இவ்வாரியத்திற்கு 2 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இதில் 1.95 கோடி ரூபாய், வட்டி கிடைக்கக் கூடிய பொது வைப்பீட்டில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வட்டித் தொகை இவ்வாரியத்தின் செலவுகளுக்கும், வணிகர்களின் நலத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும். இதன் நடவடிக்கைகளை செம்மையாகச் செய்வதற்காக ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது வறிய நிலையிலுள்ள வணிகர்களுக்கான நலத்திட்டங்களை நிறைவேற்ற வழி வகுக்கும்.

**11. குறை கேட்புப் பிரிவு:**

வணிகர்கள் தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்காக குறை கேட்புப் பிரிவு என்னும் ஓர் அமைப்பு 1984 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவுக்கு இணை ஆணையர் (நிருவாகம்) தலைவராவார். இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் இணை ஆணையர் (சட்டப் பிரிவு) ஆகியோர் இதன் உறுப்பினர்களாவார்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த அமைப்புக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்ட மனுக்களின் விவரங்கள் வருமாறு :—

வர்கள் தாக்கல் செய்யும் வரி மதிப்பீட்டு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு செய்து கொள்ளப்படும் வரி மதிப்பீட்டு ஆவணங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சரிபார்க்கப்படும். இப்புதிய தன்மதிப்பீட்டு முறையின் மூலம் நடைமுறை கடுமைகளுக்கு உட்படாமல் பெரும்பாலான வணிகர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரி அமைப்பு, வரி விகிதங்கள், தற்போதைய வரிவிதிப்பு முறை ஆகியவற்றை நீண்டகால நடவடிக்கையாக விரிவாக ஆய்வு செய்து, திறமையான, நேர்மையான வரிவிதிப்பு முறையை ஏற்படுத்துவதற்காக வல்லுநர்கள் அடங்கிய ஓர் உயர்நிலை வணிகவரி சீரமைப்புக் குழு ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

வணிகவரித் துறை பின்வரும் வரிவிதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது :—

(1) தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம்.

(2) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரிச் சட்டம்).

(4) 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள்-தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.



(10) தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் மோட்டார் வாகன நுழைவு வரிச் சட்டம்.

**2. 1986-91 ஆம் ஆண்டுகளில் வணிக வரித்துறை வசூல் செய்த வருவாயும் துறைக்கு ஏற்பட்ட செலவும் வருமாறு :—**

| ஆண்டு. (1) | வருவாய். (2) | செலவு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்). | |
| 1986-87 .. .. | 1,172.44 | 15.88 |
| 1987-88 .. .. | 1,313.49 | 17.35 |
| 1988-89 .. .. | 1,502.73 | 20.77 |
| 1989-90 .. .. | 1,759.02 | 23.28 |
| 1990-91 .. .. | 2,167.16 | 28.30 |

**3. வணிக வரி அலுவலகங்களுக்கும் சோதனைச் சாவடிகளுக்கும் அரசு கட்டடங்கள் கட்டுதல்.**

வணிக வரித்துறை அலுவலகங்கள் அனைத்தும் அரசுக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இந்நோக்குடன் வணிகவரித் துறைக்காக படிப்படியாகக் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிருவாகம் மற்றும் செயலாக்கம் ஆகிய இரு பிரிவுகளிலுமுள்ள எல்லா துணை வணிகவரி ஆணையர் அலுவலகங்களுக்கும், புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, கரூர் மற்றும் விழுப்புரம் நீங்கலாக ஏனைய வட்டார உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் தற்போது அரசுக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. விழுப்புரத்திலுள்ள செயலாக்கப்பிரிவு உதவி ஆணையர் (வணிக வரி) அலுவலகம் நீங்கலாக இதர அனைத்து செயலாக்க பிரிவு உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகங்களும் அரசு கட்டடத்தில் அமைந்துள்ளன. 301 வரி விதிப்பு வட்டங்களில் 137 வட்டங்கள் அரசுக் கட்டடங்களில் அமைந்துள்ளன.

பின்வரும் இடங்களில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது:—

(i) தூத்துக்குடியில் உள்ள வணிகவரி அலுவலகத்தில் சுற்றுச் சுவருடன் கூடுதல் கட்டடம் ஒன்று கட்டுதற்காக, அரசு 13.60 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது கட்டுமானப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

(ii) இராசிபுரத்தில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் தற்போதுள்ள வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் இரண்டாவது மாடி கட்டுவதற்காக, அரசு 10.50 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

(iii) சங்ககிரியில் தற்போதுள்ள கட்டடத்தில் 12.10 இலட்சம் ரூபாய் செலவில் மாடி ஒன்று கட்டுவதற்காக அரசு அனுமதித்துள்ளது. இக்கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது தமிழ்நாட்டில் 48 வணிகவரிச் சோதனைச் சாவடிகள் செயல்படுகின்றன. அவற்றுள் பின்வரும் வரிசையில் முதலில் உள்ள 13 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசுக் கட்டடங்களிலும் கடைசியில் குறிப்பிட்டுள்ள சோதனைச் சாவடி ஓரளவு நிரந்தர அரசுக் கட்டடத்திலும் செயல்படுகின்றன.

1. இரும்புலியூர்—தாம்பரம்
2. பூவிருந்தவல்லி
3. புழல்
4. இராணிப்பேட்டை
5. ஒசூர்
6. கே. ஜி. சாவடி
7. மீனாட்சிபுரம்
8. காட்பாடி
9. சின்ன சேலம்
10. புளியறை
11. சன்னாரப்பட்டி
12. கடம்பர் கோயில்
13. களியக்காவிளை
14. தோப்பூர்.





மற்ற 34 சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களில் அல்லது புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகைகளில் செயல்படுகின்றன.

மொத்தமுள்ள 48 சோதனைச் சாவடிகளுள் 20 பெரிய சோதனைச் சாவடிகளாகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஒசூர், கே. ஜி. சாவடி, இராணிப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள நான்கு சாவடிகளும் இருவழிச் சோதனைச் சாவடிகளாகும்.

4. வரி விதிப்பு வட்டங்களை ஒழுங்குபடுத்துதல், பிரித்தல் மற்றும் சீரமைத்தல்.

மாநிலத்தில் தற்போது 301 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் 102 துணை வணிகவரி அலுவலர் தலைமையிலும், 193 வணிகவரி அலுவலர் தலைமையிலும் ஏனைய 6 வணிகவரி உதவி ஆணையாளர் தலைமையிலும் இயங்குகின்றன. வரிவிதிப்புத் தரத்தை உயர்த்தும் நோக்குடனும் வரி வசூலை அதிகரிக்கும் நோக்குடனும், அதிக வேலைப் பளுவுள்ள 15 வரிவிதிப்பு வட்டங்கள் பிரிக்கப்பட்டு, கூடுதலாக 11 வரிவிதிப்பு வட்டங்களை ஏற்படுத்தி, அவை ஒவ்வொன்றும் வணிகவரி அலுவலரின் தலைமையின்கீழ் பின்வரும் இடங்களில் இயங்கச் செய்ய கருதப்பட்டுள்ளது. அவை வருமாறு:—

| தற்போதுள்ள வரிவிதிப்பு வட்டங்களின் பெயர். | புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கும் வட்டங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. வணிகவரி அலுவலர், இராயபுரம். | 1. வணிகவரி அலுவலர், இராயபுரம். |
| 2. வணிகவரி அலுவலர், வண்ணாரப்பேட்டை. | 2. வணிகவரி அலுவலர், வண்ணாரப் பேட்டை-I. |
| 3. வணிகவரி அலுவலர், தண்டையார்பேட்டை. | 3. வணிகவரி அலுவலர், தண்டையார் பேட்டை-I. |
| | 4. வணிகவரி அலுவலர், வண்ணாரப் பேட்டை-II (புதியது). |

| (1) | (2) |
|---|---|
| 4. வணிகவரி அலுவலர், திருவான்மியூர். | 1. வணிகவரி அலுவலர், திருவான்மியூர். |
| | 2. வணிகவரி அலுவலர், வேளச்சேரி (புதியது). |
| 5. வணிகவரி அலுவலர், அசோக் நகர். | 1. வணிகவரி அலுவலர், அசோக் நகர். |
| 6. வணிகவரி அலுவலர், போரூர். | 2. வணிகவரி அலுவலர், போரூர். |
| | 3. வணிகவரி அலுவலர், சாலிகிராமம் (புதியது). |
| 7. வணிகவரி அலுவலர், அம்பத்தூர். | 1. வணிகவரி அலுவலர், அம்பத்தூர். |
| | 2. வணிகவரி அலுவலர், கோயம்பேடு (புதியது). |
| 8. வணிகவரி அலுவலர், எழும்பூர். | 1. வணிகவரி அலுவலர், எழும்பூர்-1. |
| 9. வணிகவரி அலுவலர், நுங்கம்பாக்கம். | 2. வணிகவரி அலுவலர், நுங்கம்பாக்கம். |
| | 3. வணிகவரி அலுவலர், எழும்பூர்-II. (புதியது). |
| 10. வணிகவரி அலுவலர், தியாகராயநகர் (தெற்கு). | 1. வணிகவரி அலுவலர், தியாகராயநகர் (தெற்கு). |
| | 2. வணிகவரி அலுவலர், நந்தனம் (புதியது). |



1991 செப்டம்பர் 25]

| (1) | (2) |
|---|---|
| 11. வணிகவரி அலுவலர், மந்தவெளி. | 1. வணிகவரி அலுவலர், மந்தவெளி. |
| | 2. வணிகவரி அலுவலர், ஆழ்வார்பேட்டை (புதியது). |
| 12. வணிகவரி அலுவலர், கோயம்புத்தூர் (ஊரகம்). | 1. வணிகவரி அலுவலர், போத்தனூர். |
| | 2. வணிகவரி அலுவலர், பேரூர் (புதியது). |
| 13. வணிகவரி அலுவலர், பீளமேடு. | 1. வணிகவரி அலுவலர், பீளமேடு (தெற்கு). |
| | 2. வணிகவரி அலுவலர், பீளமேடு (வடக்கு) (புதியது). |
| 14. வணிகவரி அலுவலர், உடுமலைப்பேட்டை. | 1. வணிகவரி அலுவலர், உடுமலைப்பேட்டை (தெற்கு). |
| | 2. வணிகவரி அலுவலர், (வடக்கு) (புதியது). |
| 15. வணிகவரி அலுவலர், திருப்பூர், கொங்குநகர். | 1. வணிகவரி அலுவலர், திருப்பூர், கொங்குநகர். |
| | 2. வணிகவரி அலுவலர், திருப்பூர், இலட்சுமி நகர் (புதியது). |

இவ்வாண்டு சென்னையிலுள்ள 4 மத்திய வரிவிதிப்பு வட்டங்களிலும் கோயம்புத்தூரிலுள்ள 2 மத்திய வரிவிதிப்பு வட்டங்களிலும் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு துணை வணிகவரி அலுவலரை நியமித்து இந்த வட்டங்களை வலுப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்துறையின் முழுமையான திருவாகத்தையும் கண்காணிப்பையும் மேம்படுத்தும் வகையில், சென்னை தெற்குக் கோட்டத்தை 2 வணிகவரி

மண்டலங்களாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்படும் வரிவிதிப்பு மண்டலம், உதவி ஆணையாளர் பதவித்தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் தலைமையில் செயல்படும். இந்த மூன்று திட்டங்களுக்கும் தொடரின செலவு ரூ. 57.99 இலட்சமும், தொடரா இனச் செலவு ரூ. 18.25 இலட்சமும் ஏற்படும்.

5. செயலாக்கப் பிரிவை நவீனப்படுத்துதல்.

செயலாக்கப் பிரிவுகளிலுள்ள தகவல் தொடர்பு வசதிகளை வலுப்படுத்துவதும், நவீனப்படுத்துவதும் அரசின் கொள்கையாகும். இவ்வாண்டு, 3 பெரிய சோதனைச் சாவடிகள், 4 சிறிய சோதனைச் சாவடிகள் சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலுமுள்ள 14 நடமாடும் பிரிவுகள் ஆகியவற்றிற்கு கம்பியில்லாத் தந்தி வசதி அளிக்க கருதப் பட்டுள்ளது. கிரிம்ஸ் சாலையிலுள்ள மத்திய செயலாக்கப் பிரிவு அலுவலகத்திற்கும் கம்பியில்லாத் தந்தி வசதி செய்து கொடுக்கப்படும். இதற்கு ரூ. 6.50 இலட்சம் செலவாகும்.

6. மேல்முறையீட்டுப் பிரிவின் இயக்கம்.

மேல்முறையீட்டுப் பிரிவு, விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரின் முழுக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகிறது. இதில் 18 மேல்முறையீட்டு உதவி ஆணையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். வழக்குகளைத் தீர்வு செய்வது தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் விற்பனைவரி தீர்ப்பாயத்தின் தலைவரது அறிக்கையைப் பெற்று அரசு ஆய்வு செய்து வருகிறது.

7. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்.

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் 1982-ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகிறது. இது வணிகவரித் துறை அலுவலர்களின் நிருவாகத் திறமையை மேம்படுத்தி பணியாளரின் செயல்திறனை உயர்த்துவதற்குப் பயிற்சி அளிப்பதற்காக நிறுவப்பட்டதாகும். இந்நிலையத்தின், ஆசிரியர் குழுவுக்கு வணிகவரித் துணை ஆணையாளர், ஒருவர் தலைவராகவுள்ளார். அவருக்கு உதவியாக வணிக வரி உதவி ஆணையர், இருவரும், வணிகவரி அலுவலர் ஒருவரும் பணியாற்றுகின்றனர். இப்பயிற்சி நிலையம் உதவி வணிகவரி அலுவலர் முதல் வணிகவரி அலுவலர் வரையுள்ள அலுவலர்களுக்கு நினைவுகூர் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.





இந்நிலையம் பயிற்சி பெறுபவர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிப்பதோடு, வணிகவரித் துறையின் செயல்பாடுகள் சம்பந்தமான குறிப்பிட்ட தலைப்புகளை குறித்து அந்தந்த வல்லுநர்கள் வாயிலாக சிறப்பு விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. அவர்களுக்குப் பயிற்சியின் இறுதியில் செயல்திற மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்படுகிறது.

வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்தில், வணிக வரி அலுவலர் பதவித் தரத்தில் விரிவுரையாளர் ஒருவரை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் முதற் கட்டப் பணியாக, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் அனைத்து வணிகவரி அலுவலர்களுக்கும் உதவி ஆணையாளர்களுக்கும் அதாவது 75 உதவி ஆணையாளர்களுக்கும் (மேல்முறையீட்டுப் பிரிவிலுள்ளவர்கள், நீங்கலாக) சுமார் 250 வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்பியுள்ளார்களா என்பதை உறுதி செய்ய கணிப்பொறி பற்றிய தெளிவும் அறிவும் தேவைப் படுகிறது. எனவே, சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தில், வணிகவரித்துறை இணை ஆணையாளர்கள் துணை ஆணையாளர்கள் ஆகியோருக்கு ரூ. 37,440 செலவில் கணிப்பொறிப் பயிற்சி வழங்குவதற்குரிய செயற் குறிப்புகளுக்கு அரசு இந்த ஆண்டு ஏற்பளித்துள்ளது.

இப்பயிற்சித் திட்டம், 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. உதவி ஆணையாளர்களுக்கும், இதற்கு குறைவான பதவித்தரத்திலுள்ள அலுவலர்களுக்கும் வணிக வரித்துறை கணிப்பொறி அடிப் படையிலான பயிற்சியை, சென்னை, வணிக வரிப்பணியாளர் பயிற்சி நிலையத்தில் வழங்குவதற்குரிய செயற்குறிப்புகளுக்கு அரசு இந்த ஆண்டு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்குள் ரூ. 1.43 இலட்சம் தொடரினச் செலவும் ரூ 3.31 இலட்சம் தொடரா இனச்செலவும் மேற்கொள்ளவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

8. கணிப்பொறி மையம்:

சேகரித்து வைத்த தகவல்களை மீண்டும் பெற்று, நடைமுறைப்படுத்தி பாதுகாத்து வைக்கும் பொருட்டு, பின்வரும் தகவல்களைக் கணிப்பொறி மயமாக்கும் திட்டம் ஒன்றை வணிக வரித் துறை மேற்கொண்டுள்ளது.

(அ) மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வணிகர்களின் விவரங்களடங்கிய புத்தகம்.

| ஆண்டு. | பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை. | நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1988 .. .. .. | 105 | 105 | இல்லை. |
| 1989 .. .. .. | 119 | 117 | 2 |
| 1990 .. .. .. | 94 | 93 | 1 |
| 1991 (ஜூன் வரை) .. | 19 | 9 | 10 |

12. விற்பனை வரி ஆலோசனைக் குழு:

விற்பனை வரி நிருவாகம் குறித்துப் பொதுமக்களின் கருத்தை அறிய உதவும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் பல்வேறு நிலைகளில் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைவர்களாவர். இக்குழுவில் அரசு அலுவலர்களும் அரசு சார்பற்ற உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்; வர்த்தகசபை, வர்த்தகச் சங்கங்கள் கூட்டுறவுகளை, வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். வணிகவரிச் சட்டங்களினால் வர்த்தகத் துறையில் எழும் பல்வேறு பிரச்சினைகளை விற்பனை வரிச் சட்டம் விதிகள் தொடர்பானவை ஆகியவற்றை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்துவதற்கும், வணிக சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இக்குழுவின் தீர்மானங்களும் அவை தெரிவிக்கும் ஆலோசனைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுவை மாற்றியமைக்க அரசு கருதுகிறது. இதனால் விற்பனை வரிச் சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தும்போது பல்வேறு வணிகங்களின் பிரதிநிதிகள் தங்கள் முறையீடுகளைத் தெரிவிக்க வாய்ப்பு கிடைக்கும்.



13. மேல்வரி வசூலிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல :

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், ஏனைய நகராட்சிகள் பேரூராட்சிகள், நகரியங்கள் ஆகியவற்றில் ஒவ்வோராண்டும் வசூலிக்கப்படும் விற்பனை மீதான மேல்வரியில் 20 சத வீதத் தொகை மக்கள் தொகையின் அடிப்படையில் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமாக வழங்கப்படுகின்றது. அத்துடன் சென்னை மாநகர எல்லைக்குள் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரியில் 50 சத வீதத் தொகை சென்னை மாநகராட்சிக்கு மானியமாக வழங்கப்படுகிறது.

14. பல்வேறு சட்டங்களின்கீழ் வணிக வரித் துறை வசூலித்த தொகை குறித்த விவரம் வருமாறு :

(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம். :

1985-86 ஆம் ஆண்டு முதல் 1990-91 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கிடைத்த வரவு பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வரவு. (ரூபாய் கோடியில்). |
|---|---|
| (1) | (2) |
| 1985-86 .. .. .. .. .. | 824.46 |
| 1986-87 .. .. .. .. .. | 937.47 |
| 1987-88 .. .. .. .. .. | 1,062.08 |
| 1988-89 .. .. .. .. .. | 1,218.86 |
| 1989-90 .. .. .. .. .. | 1,426.04 |
| 1990-91 .. .. .. .. .. | 1,779.05 |
| 1991-92 (30-6-1991 வரை) .. .. .. | 499.83 |

(ஆ) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனைவரிச் சட்டம் :

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 1985-86 முதல் 1990-91 வரையில் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரம் :—

| ஆண்டு. (1) | மொத்த வருவாய். (ரூபாய் கோடியில்) (2) |
|---|---|
| 1985-86 .. .. .. .. .. | 150.06 |
| 1986-87 .. .. .. .. .. | 171.65 |
| 1987-88 .. .. .. .. .. | 184.90 |
| 1988-89 .. .. .. .. .. | 213.00 |
| 1989-90 .. .. .. .. .. | 240.04 |
| 1990-91 .. .. .. .. .. | 276.07 |
| 1991-92 .. (30-6-1991 வரை) .. | 79.45 |

(இ) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் :

| ஆண்டு. (1) | மொத்த வருவாய் (ரூபாய் கோடியில்). (2) |
|---|---|
| 1985-86 .. .. .. .. .. | 53.28 |
| 1986-87 .. .. .. .. .. | 57.98 |
| 1987-88 .. .. .. .. .. | 60.21 |
| 1988-89 .. .. .. .. .. | 63.21 |
| 1989-90 .. .. .. .. .. | 68.64 |
| 1990-91 .. .. .. .. .. | 69.62 |
| 1991-92 (30-6-1991 வரை) .. .. .. | 16.43 |



(ஈ) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம் :

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ஆம் நாள் முதல் சென்னையிலும் (கிண்டி), உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை தமிழ்நாடு அரசின் குதிரை பந்தயத் துறை எடுத்துக் கொண்டுள்ளது.

1985-86 முதல் 1990-91 வரையில் மேற் குறிப்பிடப் பட்டுள்ள சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் வருமாறு :

| ஆண்டு. (1) | மொத்த வருவாய். (ரூபாய் கோடியில்). (2) |
|---|---|
| 1985-86 .. .. .. .. .. | 4.55 |
| 1986-87 .. .. .. .. .. | 2.58 |
| 1987-88 .. .. .. .. .. | 3.52 |
| 1988-89 .. .. .. .. .. | 4.72 |
| 1989-90 .. .. .. .. .. | 5.70 |
| 1990-91 .. .. .. .. .. | 5.66 |
| 1991-92 (30-6-1991 வரையில்) .. .. | 0.81 |

(உ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி விதிப்புச் சட்டம்:

1985-86 முதல் 1990-91 வரையில் மேற்குறிப்பிடப் பட்டுள்ள சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :

| ஆண்டு. (1) | மொத்த வருவாய். (ரூபாய் கோடியில்). (2) |
|---|---|
| 1985-86 .. .. .. .. .. | 2.72 |
| 1986-87 .. .. .. .. .. | 2.69 |
| 1987-88 .. .. .. .. .. | 2.70 |
| 1988-89 .. .. .. .. .. | 2.87 |
| 1989-90 .. .. .. .. .. | 17.98 |
| 1990-91 .. .. .. .. .. | 17.04 |
| 1991-92 (30-6-1991 வரையில்) .. .. | 3.90 |

(ஊ) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம் :

இச்சட்டம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. 1987-88 முதல் 1990-91 வரை இச்சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் :

| ஆண்டு. (1) | மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்). (2) |
|---|---|
| 1987-88 .. .. .. .. .. | 8.00 |
| 1988-89 .. .. .. .. .. | 7.44 |
| 1989-90 .. .. .. .. .. | 6.89 |
| 1990-91 .. .. .. .. .. | 7.00 |
| 1991-92 (30-6-1991 வரையில்) .. .. | 1.00 |



(எ) தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்களின் மீதான நுழைவு வரி விதிப்புச் சட்டம்:

இச்சட்டம் 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் இதுவரை பெறப்பட்ட வருவாய் விவரம் வருமாறு :

| ஆண்டு. (1) | மொத்த வருவாய். (ரூபாய் கோடியில்). (2) |
|---|---|
| 1989-90 .. .. .. .. .. | 0.55 |
| 1990-91 .. .. .. .. .. | 19.67 |
| 1991-92 .. .. .. .. .. (30-6-1991 வரையிலும்). | 4.61 |

15. 1991-92 ஆம் ஆண்டிற்கான வரிச் சலுகைகளும் கூடுதல் நிதி ஆதாரங்கள் திரட்டுதலும் :

I. 1991-92 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் பின்வரும் அறிவிப்புகள் 5-9-1991 முதல் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளன :—

(அ) தமிழ்நாட்டில் வரிவிதிப்புக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் விற்பனையில் ரப்பர் விற்பனை சேர்க்கப் படவில்லை. ஆனால் கேரள மாநிலத்தில் ரப்பருக்கு வரி விதிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே ரப்பர் உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாக விளங்குகிறது. எனவே, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பிரிவு 2 (r)-ஐத் திருத்தி ரப்பர் விற்பனையை வரிவிதிப் பிற்குட்பட்டதாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும் 8 சாதாரண ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு விலக்களிக்கப் படும். பெரிய தோட்டச் சொந்தக்காரர்கள் மட்டுமே வரி செலுத்த வேண்டி வரும்.

(ஆ) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி சட்டத்தில் பிரிவு 3(3) (i)-க்குட்பட்ட பல பொருட்களுக்கு சலுகை விகிதத்தில் வரி விதிக்கப்படுவதால் இப்பொருட் களைத் தயாரிக்கப்பயன்படும் மூலப் பொருட்கள் வாங்கப் படும் போது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இச்சலுகை விலக்கிக் கொள்ளப்பட்டு அப்பொருட்களுக்கும் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரி வீதம் விதிக்கப்படும்.

[1991 செப்டம்பர் 25

(இ) வேலை ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படும்போது அதற்காக வாங்கப்படும் பொருட்கள்மீது, பிரிவு 3(3) (iii)-இன் கீழ் சலுகை நிலையில் 3 சதவீத வரி விதிக்கப் படுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் வேலை ஒப்பந்தப் பணிகளில் பயன்படுத்தப்படும் பொருட்கள்மீது அவற்றுக் குரிய வழக்கமான வரி விதிக்கவேண்டியது அவசியமாகிறது. ஆகவே, வேலை ஒப்பந்தப் பணிகளில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கான சலுகையை மீளப் பெறுவதற்கு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 3(3) (iii) திருத்தப் படவுள்ளது.

(ஈ) பின்வரும் பொருட்களின் மீது அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விற்பனை வரி குறைக்கப் பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| (i) | மிளகாய் .. .. .. | 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (ii) | புளி .. .. .. | 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (iii) | மஞ்சள் .. .. .. | 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (iv) | கொத்துமல்லி .. .. | 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (v) | சீயக்காய் .. .. .. | 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (vi) | தங்கப்பாளம் .. .. | 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதம். |
| (vii) | தங்க முலாம் பூசிய நகைகள். | 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதம். |
| (viii) | துருப்பிடிக்கா எஃகுப் பாத்திரங்கள். | 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (ix) | மருந்துகள் மற்றும் மருந்து பொருட்கள். | 8 சதவீதத்திலிருந்து 6 சதவீதம். |
| (x) | காகித உறைகள் | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |



1991 செப்டம்பர் 25]

| | | |
|---|---|---|
| (xi) | காலி சாக்குகள் .. .. | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (xii) | துத்தநாகம் .. .. | 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதம். |
| (xiii) | மூன்று சக்கர மோட்டார் வண்டிகள். | 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதம். |
| (xiv) | இழுவை ( Trailer ) உதிரிப்பாகங்கள். | 15 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (xv) | முழுமையாக கட்டப்பட்டு விற்கப்படும் வாகனங்கள். | 15 சதவீதத்திலிருந்து 7 சதவீதம். |
| (xvi) | உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள். | 3.5 சதவீதத்திலிருந்து 3 சதவீதம். |
| (xvii) | கையினால் செய்யப் படும் சோப்பு. | 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (xviii) | தங்கம் மற்றும் வெள்ளி யினால் செய்யப்படும் பொருட்கள். | 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதம். |

(உ) பின்வரும் பொருட்களுக்கும் மற்றும் உயிர்காக்கும் மருந்துகளுக்கும் விற்பனை வரி விதிப்பிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டுள்ளன.

(i) பார்லி (Barley)

(ii) மாட்டு வண்டிகள்.

(iii) மோட்டார் பொருத்தப்படாத மிதி இழுவண்டி. (Cycle rickshaw).

(iv) காய்ந்த இலைகள்.

(v) சைக்ளோஸ்போரின் (Cyclosporine.)

(vi) ப்ளியோமைசின் (Bleomycin).

(vii) சைடோஸைன் அரபிநோசைட் (Cytosine Arabinoside)

(viii) அஜாதியோப்ரின் (Azathioprine).

(ix) நைட்ரோகிளிசரின் (Nitroglicerine).

(x) பென்டாக்ஸைபிலின் (Pentoifyline.

ஊ) பின்வரும் பொருட்களுக்கு வரி வீதங்கள் அவற்றிற்கெதிரே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்டுள்ளன :—.

| | | |
|---|---|---|
| (i) | காகிதம் மற்றும் காகித அட்டை (பத்திரிகை காகிதம் நீங்கலாக). | 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதம். |
| (ii) | சோப்பு .. ... .. | 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதம். |
| (iii) | இந்தியாவில் தயாரிக்கும் வெளிநாட்டு மது வகைகள. | 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதம். |
| (iv) | டீசல் (Diesel) .. .. | 14 சதவீதத்திலிருந்து 16 சதவீதம். |
| (v) | எஃகு உடைசல் (Scrap) வரிவிலக்கை நீக்கி. | 2 சதவீதம். |

(எ) மாநிலங்களிடையே விற்பனை செய்யப்படும் பின்வரும் பொருட்களுக்கு அவற்றிற்கெதிரே குறிப்பிடப் பட்டுள்ளவாறு விற்பனை வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. இக்குறைப்பு "C" படிவம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொருந்தும்.

| | | |
|---|---|---|
| (i) | அலுமினியப் பாத்திரங்கள் | 10 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |
| (ii) | பத்திரிகை காகிதம் .. | 10 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். |

(ஏ) தற்போது பச்சைத்தோல் மீது 2 சதவீதமும் பதனிடப்பட்ட தோல் மீது 2 சதவீதமும் வெவ்வேறு கட்டங்களில் வரிவிதிக்கப்படுகிறது. இவ்வரி விகிதத்தை சீரமைக்க இனிமேல் பச்சைத் தோல்மீது கடைசியாக மாநிலத்தில் வாங்கப்படும் கட்டத்தில் 4 சதவீத வரி விதிக்கப்படும். பதனிடப்பட்ட தோலின் மீது முதல் விற்பனைக் கட்டத்தில் 4 சதவீத வரி விதிக்கப்படும். பச்சைத் தோல் வாங்கும்போது 4 சதவீத வரி செலுத்தப் பட்டிருந்தால், பதனிடப்பட்ட தோல்மீது வரி செலுத்த வேண்டியதில்லை.





(ஐ) மாநிலத்தில் அனைத்துப் பகுதியிலும் இனி 15 சதவீத மேல்வரி விதித்து வரி சீரமைப்பு செய்யப்படுகிறது. இதனால் கிடைக்கும் கூடுதல் வருவாயிலும் இருபது சத வீதம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியமாக அளிக்கப்படும்.

(ஒ) இதுவரை 900 கன சென்டிமீட்டர் வரையிலுள்ள மோட்டார் வண்டிகளுக்கு கூடுதல் விற்பனை வரியிலிருந்து அளிக்கப்பட்ட விலக்கு அகற்றப்பட்டுள்ளது.

II. தற்போது மாநிலத்தில் கொண்டுவரப்படும் வண்டிகள் மீது நுழைவு வரி (Entry Tax) விதிக்கத் தனிச் சட்டம் செயலாக்கப்படுகிறது. மோட்டார் வண்டி வர்த்தகம், மாநிலத்திலிருந்து வெளியே செல்வதனால் ஏற்படும் வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்த வரி விதிக்கப்படுகிறது. நுழைவு வரி விகிதம் விற்பனை வரிச் சட்டத்தில் கொடுக்கப் பட்டுள்ள வரி வீதத்திற்குத் தொடர்புடையதாக உள்ளது. இந்த நிலையை மாற்றி நுழைவு வரிச் சட்டத்திலேயே வரி வீதம் குறிப்பிடப்படும்.

16. விற்பனை வரி, அரசு கருவூலத்திற்கு முக்கிய வருவாய் ஆதாரமாக இருப்பதால் வணிகவரித் துறை அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் பொது நலனில் அக்கறை கொண்டு, நேர்மையுடனும் திறமையுடனும் முனைப்புடனும் தங்கள் கடமைகளைத் தொடர்ந்து ஆற்றுவர்.

## இணைப்பு— உ.

### 1991—92 ஆம் ஆண்டிற்கான பால் பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்.

கோரிக்கை எண். 10.

பால் பெருக்குத்துறை.

(119 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

முன்னுரை :

பால்வளத்துறை 1958 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால்பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. 1—7—1972 முதல் பால் வளத் திட்டங்கள் அனைத்தும், குஜராத் மாவட்டத்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்கு கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் சங்கமாகவும், இடையில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும் மேல் மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

குறிக்கோள்—பால் வளத்துறையில் முக்கியமான குறிக்கோள்கள்—(அ) நிலையான மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம், பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

நடவடிக்கைகள்—மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை கருத்தில் கொண்டு பின்வரும் நடவடிக்கைகள் பால்வளத் துறை எடுத்து வருகிறது.

(அ) பால் கூட்டுறவு சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் வைத்திருக்கும் கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி அளித்தல்/செயற்கை முறை கருவூட்டல் நடத்துதல், சரிவிகித கால்நடை தீவனம் அளித்தல், அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல், இவைகள்



அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும் அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து அதிக பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும் பதப்படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும் தகுந்த அளவில் உள்ளீடு வசதிகள் (Intrastructure facilities) அளித்தல் பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், பால் துகள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள மற்றும் நவீன பால் விற்பனை முறை ஆகியவைகள் நுகர்வோர்கள் நலனுக்காக அமைத்தல் ஆகியவைகள் அடங்கும்.

பால் வளத்துறையின் வணிக சம்பந்தமான பால் கொள்முதல் பக்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால் வள நிறுவனத்திடம் 1—7—1972 முதல் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் இந்நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள். இணையம் ஆக 1—2—1981 முதல் மாற்றப்பட்டது. தமிழ்நாடு பால் வள நிறுவனம் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் இவ்விணையம் மேற்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.

இவ்விணையம் பால்வளத் திட்டங்களை, பால் பெருக்குத் திட்டங்கள் தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியம் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள 15 மாவட்டங்களில் சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். தென்னாற்காடு, வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம் தர்மபுரி, கோயம்புத்தூர் நீலகிரி, பெரியார், மதுரை திண்டுக்கல்—அண்ணா, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றி வருகின்றன

பால் வளத் திட்டங்கள் எஞ்சியுள்ள 6 மாவட்டங்களான கன்னியாகுமரி திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன்முத்துராமலிங்க தேவர் மற்றும் காமராசர் மாவட்டங்களில் மாநில திட்ட நிதியிலிருந்து நிறைவேற்றப்படுகின்றன.

மேலும் சில சிறப்பு திட்டங்களான மேற்குமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆதிதிராவிட நலத் திட்டம் முதலியன சம்பந்தப்பட்ட நிதி நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 11 துணைப்பதிவாளர் (பால்பதம்) அலுவலகங்கள் இயங்கி

வருகின்றன. மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் வசதி அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்பு குழுக்களும், 13 நடமாடும் கால்நடை மருந்தகங்களும் பால் பெருக்குத் திட்டம் செயல் படாத மாவட்டங்களிலும் பால் பெருக்குத் திட்டங்கள் செயல்படும் தஞ்சை புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப் பள்ளி மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

பால்வளத்துறை தற்போது முக்கியமாக பால் உற்பத்தி யாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல் அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊரக கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றி யங்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணை யம் ஆகியவைகளை கட்டுப்படுத்தும் பணிகளை கவனித்து வருகிறது.

தற்போதுள்ள அரசு கொள்கையின்படி, கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே ஆரம்பிக் கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும். பாலைமேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங் கும் பாலை பரிசோதித்து அதன் தரத்தின் அடிப்படையில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில், அவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி கொள்முதல் மற்றும் மருத்துவ வசதிக் குழுக்களில் இருக்கும் கால்நடை மருந்துவர்கள் மூலம் அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப் படுகின்றன. உறைவிந்து குச்சிகளை திரவ நைட்ரஜன் குப்பி களில் செயற்கை முறை கருவூட்டல் செய்யும் வகையில் எப் போதும் தயாராக வைக்கப்படுகின்றன. இச்சங்கத்தின் செய லாளர்கள் சங்க உறுப்பினர்கள் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்கள் சொந்த செலவில் முதலுதவி பெட்டிகள் வைத்துள் ளது. இக்கிராம சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ர் உபயோகத்திற்கு வைத்துக்கொண்டது போக எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றது. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒருமுறை தரத்தின் அடிப்படையில் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது.



பால்வளத்துறையின் முன்னேற்றம் :

மாநில திட்டத்தின் கீழ் தமிழநாட்டில் எட்டாவது ஐந் தாண்டுதிட்டத்தின் (1990—95) கீழ் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இதில் 1990—91-ம் ஆண்டிற்கு ரூ.5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிதி உதவி யுடனும், மற்றும் இதர சிறப்பு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுடனும் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் பால்வளத்துறையில் அடைந்துள்ளன.

கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் பால்வளத்துறை யில் அடைந்துள்ளது.

| வ. எண். | பெயர். | 1989-90-ம் ஆண்டு முடிவில். | 31-3-91 வரை முன் னேற்றம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | முதன்மை சங்கங்களின் எண்ணிக்கை (எண்). | 8302 | 8569 |
| 2. | மாவட்ட ஒன்றியங்கள்(எண்) | 17 | 17 |
| 3. | உறுப்பினர்களின் எண்ணிக்கை (எண்). | 23.53 (லட்சம்) | 23.60 (லட்சம்) |
| 4. | பால் உற்பத்தி (சங்க அளவில்) | 15.30 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு. | 14.87 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு. |
| 5. | பால் கொள்முதல்(ஒன்றியம் அளவில்). | 12.82 (லட்சம்) | 11.64 |
| 8. | சென்னை நகரத்தில் பால் விற்பனை. | 6.10 (லட்சம்) | 6.50 (லட்சம்) |
| 7. | பால் பதப்படுத்தப்படும் (எண்) | 16 | 16 |
| | (திறன்) .. | 15.87 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு. | 15.87 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8. குளிரூட்டும் நிலையங்கள்— | | | |
| எண் | .. .. | 42 | 42 |
| திறன் | .. .. | 7.43 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு | 7.43 லட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| தானியங்கி பால் நிலையம் (எண்) | | 135 | 135 |

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி.**

1990-91-ல் புதியதாக 801 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1991-92-ல் 350 கூடுதல் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும் :—

தமிழகத்தில் உள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்கள்-ஒன்றியங்கள்:—

| | |
|---|---|
| (அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் | 8,492 |
| (ஆ) பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் .. | 18 |
| (இ) கூட்டுறவு பால் பண்ணைகள் .. | 2 |
| (ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் | 55 |
| (உ) கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள் | 2 |
| (ஊ) மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள். | 17 |
| (எ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (மாநில அளவு இணையம்). | 1 |



எட்டாவது ஐந்தாண்டு திட்டம் :

எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1990—95) பால் பெருக்குத் துறையில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற ரூ. 500 லட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது:

| | (ரூபாய் லட்சங்களில்.) |
|---|---|
| (1) திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டம். | 46.00 |
| (2) காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சித் திட்டம். | 147.00 |
| (3) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் பால் பவுடர் ஆலை நிறுவுதல். | 200.00 |
| (4) பால் பெருக்கத் திட்டம் அமுல்படுத்தாத மாவட்டங்களில் 200 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதி செய்தல். .. .. .. | 75.00 |
| (5) பால் பெருக்குத் திட்டம் அமுல்படுத்தாத மாவட்டங்களில் 5 பால்பண்ணை மற்றும் 5 பால் குளிரூட்டும் நிலையத்திற்கு சூரியசக்தி அடுப்புகள் வழங்குதல் .. | 30.00 |
| | 498.00 |
| மொத்தம் ... | (அ) 500.00 |

**பால்பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள்:**

1. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சி திட்டம்—பால் பெருக்குத் திட்டம் செயல் படும் மாவட்டங்களில் இருக்கும் பால் பண்ணைக்கு இணை யாக உள்ளீட்டு வசதிகளை திருநெல்வேலி—கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏற்படுத்தப்படுவதற் கென ரூ. 7.05 கோடி திட்டம் மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத் தினை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், புதுடில்லி

ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்பீட்டில் 70 சதவிதம் கடனாக வழங்கும். மீதம் 30 சத விகிதத்தை மாநில அரசு மானியமாக– பங்கீட்டுத் தொகையாக வழங்கும் இத்திட்டம் 1987—88 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.—(1) 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

(2) மேலும் கூடுதலாக 73.000 கால்நடைகளை கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொண்டு வருதல்.

(3) 651 கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

(4) மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

(5) தற்போதுள்ள திருநெல்வேலி பால் பதப்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

(6) நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனை செய்தல். இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு 28,000 லிட்டரிலிருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

அரசு தன் பங்குத் தொகையான ரூ. 211.50 லட்சத்தில் ரூ. 165.876 லட்சங்கள் 31—3—1990 வரை ஒப்பளிப்பு செய்துள்ளது. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன பங்குத் தொகையான ரூ. 493.50 லட்சத்தில் 31—3—1990 முடிய ரூ. 147.00 லட்சம் அந்நிறுவனத்தாரால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மீதி வழங்கப்படவேண்டிய அரசு மானியம் பங்குத் தொகை ரூ. 46.00 லட்சத்தினை 31—3—1992-க்குள் வழங்கப்படும்.

2. பால் பெருக்குத் திட்டம் அமுல்படுத்தாத மாவட்டங்களிலுள்ள பால் கூட்டுறவு சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகள் தமிழ்நாட்டிலுள்ள 21 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில், தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியம் மூலம் வழங்கப்படும் நிதி ஆதாரத்தினைக் கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மூலம் பல்வேறு பெருக்குத்திட்டங்கள் அமுல் படுத்தப்படுகின்றன. ஆனால் எஞ்சியுள்ள ஆறு மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி—கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்



இராமநாதபுரம் மற்றும் காமராசர் மாவட்டங்களில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் பால் பெருக்கு திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை திருநெல்வேலி மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தாரின் நிதி உதவியுடன் ரூ. 7.05 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்த தமிழக அரசு அங்கீகரித்துள்ளது. மேற்கூறிய ஆறு மாவட்டங்களில் உள்ள 200 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகள் அதாவது பால் பரிசோதனைக் கருவிகள், மேலாண்மை மானியம், பால் பரிசோதனைக்குரிய இரசாயனப் பொருட்கள், திரவ அமோனியா, செயற்கை முறை கருவூட்டும் கருவிகள், கால்நடை உறைவிந்து குழல்கள் முதலியன வழங்குவதற்கு எட்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1990—91 ஆம் ஆண்டிற்கு மேற்கூறிய இராமநாதபுரம் பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் காமராசர்ர் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 50 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகள் செய்வதற்கு ரூ. 2 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு அத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

3. புதிய திட்டங்கள் : <u>(1) காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்</u>—ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் காமராஜர் மாவட்டத்திலுள்ள வில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் கொள்ளளவு, கொண்ட பால் பண்ணை ஒன்று நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையான ரூ. 490 லட்சத்தினை தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திலிருந்து நிதி உதவிபெற்று நிறைவேற்றிட திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 21—1—1991, 22—1—1991 ஆகிய தேதிகளில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன மதிப்பீட்டுக் குழு இத்திட்டத்தினை பற்றி ஆய்வு செய்து இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கூறிய குழு 24—6—1991 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலைக்கு சொந்தமான 2.8 ஏக்கர் நிலத்தினை ஆய்வு செய்து பால் பண்ணையினை அமைக்கும்படி பரிந்துரை செய்துள்ளது. மேற்படி திட்டத்தினை அரசு ஒப்புதல் செய்தவுடன் செயல்படுத்தப்படும்.

4. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.—இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு உள்ளிருப்பு வசதிகள் செய்வதற்கு ரூ. 6 லட்சத்திற்கு நிதி ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

5. கறவை மாடுகள் மானியத் திட்டம்—ஆதி திராவிட நலத் திட்டச் சிறப்பு மத்திய உதவி.—இத்திட்டத்தின் கீழ் பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஆதி திராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு என ஆதி திராவிடர் நலத்துறை வரவு-செலவுத் திட்டத்தின் கீழும் சிறப்பு மத்திய உதவியின் கீழும் தாட்கோ நிறுவனம் அளிக்கும் மானிய தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆதிதிராவிட உறுப்பினர்க்கும் ஒவ்வொரு கறவை மாட்டு விலையில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு கறவை மாட்டின் விலை ரூ. 3,200 ஆக நிர்ணயம் செய்து 50 சதவீத அரசுத் தொகை மானியமாகவும் எஞ்சிய தொகையை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளினால் கடனாகவும் வழங்கப்படுகிறது.

ஆதி திராவிட நல வரவு-செலவு திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 106.70 லட்சம் நிதி உதவி பெற்று 7,804 பேர் பயனடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. 1991—92 ஆம் ஆண்டில் ரூ. 128.00 லட்சம் நிதி உதவி பெற்று 8,000 பேர்கள் பயனடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

1990—91 ஆம் ஆண்டிற்கு சிறப்பு மத்திய நிதி உதவியின் கீழ் ரூ. 252.33 லட்ச தொகையினை 24,211 ஆதி திராவிட உறுப்பினர்கள் பயனடையும் வகையில் தாட்கோ நிறுவனம் மூலம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. 1991—92 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 24,211 கறவை மாடுகள் வாங்க ரூ. 387.38 லட்சம் நிதி உதவி பெற்று செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட இனத்திலிருந்து கிறிஸ்துவர்களாக மதம் மாறியவர்களுக்கு 1990—91 ஆம் ஆண்டில் 124 உறுப்பினர்கள் பயனடையும் வகையில் ரூ. 1.50 லட்சம் வழங்கப்பட்டது 1991—92 ஆம் ஆண்டில் ரூ. 1.50 லட்சத்தினை 93 உறுப்பினர்கள் பயனடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.

பால் பெருக்கத் திட்டம் மூன்று அடுக்கு 'ஆனந்த' பாணி முறையில் செயல்படுத்துவதற்காக கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு, மாவட்ட அளவில் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு இணையமும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வழி பால் உற்பத்தியை பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு லாபகரமான (கட்டுப்படியான) விலையை அளிக்கவும் நகரங்களில் வாழ்கிற மக்களுக்கு தரமான பாலை நியாயமான விலையில் விற்பதும் கொள்கையாகும்.





தற்போது பால் பெருக்குத் திட்டத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்களே செயல்படுத்தி வருகின்றன சேலம், பெரியார், கோயம்பத்தூர், நீலகிரி மாவட்டங்களில் 1981 ஆம் வருடத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் 1982 ஆம் வருடத்திலும் செங்கல்பட்டு எம்.ஜி. ஆர், தென்ஆற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் 1983 ஆம் வருடத்திலும், முன்னாள் வட ஆற்காடு மாவட்டத்தில் 1984 ஆம் வருடத்திலும், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 1985 ஆம் வருடத்திலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 1987 ஆம் வருடத்திலும் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்துவதை அந்தந்த ஒன்றியங்கள் ஏற்று செயல்படுத்தி வருகின்றன. மேலும் இவ்விணையம் உறுப்பினர் ஒன்றியங்களுக்காகத் தேவையான திரவ நைட்ரஜன் உறைவிந்து நிலையம், பொலிகாளை பேணல், கால்நடைத் தீவனம் முதலிய பொதுவான வசதிகளை அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது.

தற்சமயம் இவ்விணையத்தின் கீழ் 3 பால் பண்ணைகள் அம்பத்தூர், மாதவரம் மற்றும் அயனாவரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பால் பண்ணைகளின் திறன் நாளொன்றுக்கு 3 லட்சம் லிட்டர்—அம்பத்தூர், 1.75 லட்சம் லிட்டர்—மாதவரம், 12,000 லிட்டர்—அயனாவரம் ஆகும். அம்பத்தூர் மற்றும் மாதவரம் பால் பண்ணைகளில் பாலைப் பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதின் பைகளின் மூலமாகவும், தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அயனாவரம் பால் பண்ணையில் பால் உப பொருட்களாகிய ஐஸ்கிரீம், யோகர்ட் லஸ்ஸி மற்றும் கோவா உற்பத்தி செய்யப்படுகின்றன.

இது தவிர மாவட்ட பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சொந்தமான கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மற்றும் மதுரை ஆகிய 4 பால்பண்ணை மற்றும் பால்பொடி தயாரிக்கும் ஆலைகளின் மூலமாக பிற பால் உற்பத்தி பொருட்கள் அதாவது பால்பொடி, வெண்ணெய், நெய் மற்றும் பாலாடை கட்டி ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு 'ஆவின்' பெயரால் தமிழ் நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்விணையம் மற்ற ஒன்றியங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவி அவ்வப்பொழுது அறிவிப்பதுடன், திட்ட ஆக்க விபரம் ஒப்பந்தப்புள்ளி அட்டவணை மேலும் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றை தாமே மேற்கொள்வதுடன், தேவைப்படின் விஸ்தரிப்பு வேலையையும் லாப நோக்கமின்றி ஒருவர் சார்பில் மற்றவர் பெற்றுக்கொள்வது போன்ற அடிப்படையில் மேற்கொள்கிறது.

மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால் :

| வரிசை எண். மாவட்டம் | 1988-89 | 1989-90 | 1990-91 |
|---|---|---|---|
| | (நாளொன்றுக்கு சராசரியாக ஆயிரம் லிட்டர்களில்.) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். | 54 | 66 | 64 |
| 2. தென்ஆற்காடு .. .. | 71 | 90 | 89 |
| 3. வடஆற்காடு-அம்பேத்கார் திருவண்ணாமலை-சம்புவராயர். | 189 | 235 | 246 |
| 4. தர்மபுரி .. .. .. | 71 | 89 | 81 |
| 5. சேலம் .. .. .. | 156 | 193 | 175 |
| 6. பெரியார் .. .. | 103 | 133 | 115 |
| 7. கோயம்புத்தூர் .. .. | 78 | 106 | 89 |
| 8. நீலகிரி .. .. .. | 24 | 29 | 25 |
| 9. திருச்சி .. .. .. | 54 | 69 | 68 |
| 10. தஞ்சாவூர் .. .. | 14 | 17 | 15 |
| 11. புதுக்கோட்டை .. | 3 | 5 | 3 |
| 12. திண்டுக்கல்-அண்ணா .. | 29 | 48 | 41 |
| 13. மதுரை .. .. .. | 74 | 99 | 79 |
| 14. இராமநாதபுரம் .. .. | 20 | 26 | 15 |
| 15. காமராஜர் .. .. | 13 | 17 | 11 |
| 16. திருநெல்வேலி-கட்டபொம்மன் | 28 | 47 | 38 |
| 17. கன்னியாகுமரி .. .. | 12 | 14 | 10 |
| மொத்தம் .. | 996 | 1,283 | 1,164 |



பால் விலை :

(அ) கொள்முதல் (உற்பத்தியாளர்களுக்கான விலை).

பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும் கொள்முதல் விலை விவசாயிகளுக்கு அவ்வப்போது கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது.

| காலம் | எருமைப்பால் கிலோ (கொழுப்பு) ஒன்றுக்கு | பசும்பால் கிலோ (மொத்ததிட பொருள்) ஒன்றுக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| 16-8-87 முதல் 14-10-87 வரை | 50.00 | 24.00 |
| 15-10-87 முதல் 31-10-87 வரை | 48.00 | 24.00 |
| 1-11-87 முதல் 31-3-88 வரை | 48.00 | 23.00 |
| 1-4-88 முதல் 2-11-88 வரை | 50.00 | 24.00 |
| 3-11-88 முதல் 30-11-90 வரை | 58.00 | 28.00 |
| 1-12-70 முதல் 14-5-91 வரை | 64.25 | 30.75 |
| 15-5-91 முதல் இன்று வரை .. | 67.15 | 32.30 |

(ஆ) விற்பனை விலை :

அதிகப்படியான கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும் பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலிதீன் பை அடைப்பான் விலை அதிகரித்ததாலும் பணியாளர்களின் சப்ளை விகிதம் அதிகரித்ததாலும் விற்பனை விலையை கீழ்க்கண்டவாறு அவ்வப்பொழுது மாற்றி அமைக்கப் பட்டது.:—

| | 8-8-1987 முதல் | 1-11-1987 முதல் | 16-11-1988 முதல் |
|---|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (1) | (2) | (3) | (4) |
| பால் அட்டை .. | 4.20 | 4.50 | 5.00 |
| ரொக்கத்திற்கு .. | 4.36 | 4.60 | 5.20 |

மாதவரம் பால் பண்ணையில் அமைந்துள்ள கால்நடைத் தீவன ஆலையானது நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறனுடையது. தற்போது இந்த ஆலை மாதம் சராசரி 2,000 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்து வருகிறது. மேற்சொன்ன தீவனம் பால் உற்பத்தி யாளர்கள் கால்நடை பராமரிப்புத் துறை சார்ந்துள்ள கால் நடைப் பண்ணைகள் பொலிகாளை நிலையம் மற்றும் சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்களுக் கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குசொந்த மான நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்யக்கூடிய கால் நடைத் தீவன ஆலை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தினால் குத்தகை அடிப்படையில் 30—6—1991 வரை இயங்கப்பட்டு வந்தது. மேற்சொன்ன ஆலை குத்தகை காலம் முடிவுற்றதின் காரண மாக 1—7—1991 முதல் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை யிடம் ஒப்படைக்கப்பட்டது.

நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட மற்றொரு கால்நடைத் தீவன ஆலை, ஈரோட்டில் பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றி யத்தின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றுக்கு சராசரி 2,000 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்கிறது. இந்த ஆலை சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களின் தேவைகளுக்கு ஏற்ப தீவனம் உற் பத்தி செய்து வழங்கி வருகிறது. மாற்று வழி தீவனம் ( By pass protein ) எனப்படும் சத்து செறிவுள்ள தீவனமும் இவ்வாலையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

மேற்சொன்ன கால்நடைத் தீவன ஆலைகளைத் தவிர நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன்கொண்ட கால்நடைத் தீவன ஆலையொன்று பால் பெருக்குத் திட்டத் தின் கீழ் மதுரை மாவட்டம் கப்பலூரில் அமைக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.





மேற்சொன்ன கால்நடைத் தீவன ஆலைகளில் 1990—91 ஆம் ஆண்டில் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் வருமாறு :

| | 1990—91 | | |
|---|---|---|---|
| இருப்பிடம். | உற்பத்தி. | விற்பனை | மெ.டன். |
| மாதவரம் .. .. | 19,089 | 19,137 | தொடக்க இருப்பு உட்பட. |
| ஆம்பூர் .. .. | 7,371 | 7,073 | |
| ஈரோடு .. .. | 25,444 | 25,488 | |
| மொத்தம் .. | 51 .904 | - 51,698 | |

**பால் மற்றும் பால் பொருட்கள் விற்பணை:**

சென்னையிலுள்ள பால் பண்ணைகள் 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்தும் 8.5 விழுக்காடு கொழுப்புச் சத்தில்லாத திடச்சத்தும் உள்ள நிலைப்படுத்திய பாலை விற்பனை செய்து வருகின்றன. கடந்த ஆண்டில் சென்னையில் நாளொன்றுக்கு 6.60 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இது 1989-90 ஆம் ஆண்டு நாளொன்றுக்கு சராசரி யாக 6.12 லட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. இவ்வாண்டு இதை 7.09 இலட்சம் லிட்ட ராக உயர்த்தி திட்டமிடப்பட்டுள்ளது. 536 பால் விற்பனை நிலையங்கள, 51 பாலகங்கள் 135 தாயினியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 100 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி. டேங்க்) இவைகளில் மூலமாக வாடிக்கை நிறு வனங்களுக்கு மொத்த விற்பனை யாகவும் தனி வாடிக்கை யாளர்களுக்கு 1-2 லிட்டர் 1 லிட்டர் பாலிதீன் பைகளி லும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. பால் நுகர்வோர் களைப் பால் விற்பனையில் ஈடுபாடு கொள்ளச் செய்யவும் உபயோகிப்பவர்களுக்கு சேவையின் தரத்தை உயர்த்தவும் 32 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட் டுள்ளன.

சென்னை மற்றும் மாவட்டங்களில் தற்போதுள்ள தினசரி பால் விற்பனை அளவாகிய 11.00 லட்சம் லிட்டர் 1994 ஆம் ஆண்டில் 17.00 இலட்சம் லிட்டராக உயரும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் பொருட்கள் விற்பனை விபரம் பின்வருமாறு :

| இனங்கள். | 1988—89 | 1989—90 | 1990—91 (எண்கள் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பால் நாளொன்றுக்கு சராசரி (லிட்டர்களில்). | 5.86 | 6.12 | 6.60 |
| வெண்ணெய் (கிலோ கிராமில்). | 11.31 | 10.39 | 8.45 |
| நெய் (கி. கிராம்) | 1.31 | 1.54 | 1.29 |
| பால் பொடி (கி. கிராமில்) | 4.34 | 13.60 | 1.38 |

1989—90 மற்றும் 1990—91 ஆம் ஆண்டுகளில் பிற மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்ட பால் பொருட்களின் விற்பனை விபரம் பின்வருமாறு :

| | 1989—90 | 1990—91 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பால்பொடி (டன்களில்) .. .. | 6866 | 520 |
| வெண்ணெய் (டன்களில்) .. .. | 50 | .. |
| நெய் (டன்களில்) .. .. .. | 2175 | 2288 |

இணையத்தின் மொத்த விற்பனை 1990—91 ஆம் ஆண்டு ரூ. 149.17 கோடி.

பால் பெருக்கத் திட்டம் 1 :

பால் பெருக்கத் திட்டம் முதல் கட்டமாக ஜூலை 1972 முதல் மார்ச் 1981 வரை செயல்படுத்தப்பட்டது. இதற்காக இத்திட்டங்களின் கீழ் ரூ. 15.64 கோடி தேசிய பால்வள வாரியம் வழங்கியதில் ரூ. 15.48 கோடி செலவிடப்பட்டுள்ளது.



பால் பெருக்கத் திட்டம் 2:

பால் பெருக்கத் திட்டம் 1-ன் தொடர்ச்சியாக பால் பெருக்கத் திட்டம் 2 துவங்கப்பட்டது. பால் பெருக்கத் திட்டம் 3-ன் கீழ் முன்னேற்பாடு செயல்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்னிருந்த 9 மாவட்டங்கள் தவிர திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏப்ரல் 1985 முதல் துவங்கப்பட்டது.

இத்திட்டம் முடிவுற்ற நிலையில் 12 மாவட்டங்களில் பால் உபரிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு 10.15 இலட்சம் லிட்டர் பாலை 5,170 கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு 8.19 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்ட காலத்தில் ரூ. 26.26 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பால் பெருக்கத் திட்டம் 3 :

ஆனந்த பாணியில் ஒருங்கிணைந்த கூட்டுறவில் ஒரு நிலையான எதிர்கால வளர்ச்சியை உருவாக்க, 13 மாவட்டங்களையும் நகர்புற பால் பண்ணைகளையும் உள்ளடக்கிய கருத்துரு ஒன்று ரூ. 68.19 கோடி செலவில் தேசிய பால்வள வாரியத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

சேலம் திருச்சி தென்னாற்காடு தர்மபுரி மதுரை கோயம்புத்தூர் வடஆற்காடு, பெரியார் மாவட்டங்களில் திட்டத்திற்கும் தென் சென்னையில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணை அமைப்பதற்கும் அம்பத்தூர் பால் பண்ணையை நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டராக பதப்படுத்தும் திறனுக்கு விரிவுபடுத்தும் திட்டத்திற்கும் தேசிய பால்வள வாரியம் முறையான ஒப்புதல் அளித்துள்ளது.

இதுவரை தேசிய பால்வள வாரியம் இந்த 9 மாவட்டங்களுக்கும் இணையத்திற்கும் 54.27 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மீதமுள்ள 4 மாவட்டங்களான உதகமண்டலம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல்—அண்ணா ஆகிய மாவட்டங்களின் கருத்துருக்கள் தேசிய பால்வள வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

மூன்றாவது பால்பெருக்கத் திட்டத்தின் கீழ் வரும் திட்டப் பணிகள் :

சென்னை மாவட்டம் :

(1) அம்பத்தூர் பால் பண்ணை விரிவாக்கம் (நாளொன்றுக்கு 3.30 இலட்சம் லிட்டரிலிருந்து 4.0 இலட்சம்

லிட்டராக உயர்த்த, 50 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களையும் உள்ளடக்கியது.) பத்து தானியங்கி நிலையங்கள் முடிவடைந்துள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 258.14 இலட்சம் 1993 ஆம் ஆண்டு முடிவில் முடிவடையும்.

(2) 3 வது பால் பண்ணை சென்னை (நாளொன்றுக்கு 4.0 இலட்சம் லிட்டர் கொள்திறனுள்ளது) 150 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களை உள்ளடக்கிய திட்டம், தேசிய பால்வள நிறுவனத்தினரால் நிறுவப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 18.9 கோடி.

மார்ச் 1991 முதல் வேலைகள் ஆரம்பித்து, கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

வட ஆற்காடு மாவட்டம் :

(1) வேலூர் பால் பண்ணை விரிவாக்கம் (70 ஆயிரம் லிட்டரிலிருந்து ஒரு இலட்சம் லிட்டருக்கு) கொள்திறனுடன் நிறுவப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 14.75 இலட்சம்.

1.5 இலட்சம் லிட்டருக்கு திருத்தி அமைக்கப்பட தேசிய பால்வள வாரியத்தின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

(2) திருவண்ணாமலை குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து ஒரு லட்சம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது).

செலவின் மதிப்பீடு : ரூ. 87.41 இலட்சம்.

கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து விட்டது.

(3) ஆம்பூர் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது).

செலவின் மதிப்பீடு : ரூ. 36.26 இலட்சம்.

கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

(4) அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் நாளொன்றுக்கு 20 ஆயிரம் லிட்டரிலிருந்து 60 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.



செலவின் மதிப்பீடு : ரூ. 26.95 இலட்சம்.

கட்டுமானப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன, தோராயமாக 1991 ஆம் ஆண்டில் முடிவடையும்.

(5) கொடக்கல் பால் குளிரூட்டும் நிலையம் (புதியதாக சோளிங்கருக்கருகில் நிறுவப்படவுள்ளது) 30 ஆயிரம் லிட்டர் கொள திறன் கொண்டது.

செலவின் மதிப்பீடு : ரூ. 58.16 இலட்சம்.

பெரியார் மாவட்டம் :

1. 50 டன் நாளொன்றுக்கு திறனுள்ள பால்பொடி ஆலை, ஈரோடு.

செலவின் மதிப்பீடு : ரூ. 807.82 இலட்சம் கட்டுமானப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இயந்திரம் நிறுவும் வேலை ஆரம்பிக்க உள்ளது. சில இயந்திரங்கள் வந்துள்ளன.

2. சங்கராண்டாம்பாளையம் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது).

செலவின் மதிப்பீடு : ரூ. 43.51 இலட்சம்.

சேலம் மாவட்டம் :

1. சேலம் பால்பண்ணை விரிவாக்கம் (2.0 இலட்சம் லிட்டரிலிருந்து நாளொன்றுக்கு 3.0 லட்சம் லிட்டராக உயர்த்துதல்) தேசிய பால்வள வாரியத்தினரால் நிறுவப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 102.90 இலட்சம்.

2 ஆத்தூர் பால் குளிரூட்டும் விரிவாக்கம் (50 ஆயிரம் லிட்டரிலிருந்து 80 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது).

செலவின் மதிப்பீடு : ரூ. 47.49 இலட்சம்.

3, நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்த) தேசிய பால்வள வாரியத்தினால் நிறுவப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 99.32 இலட்சம்

இடத்திற்கான தேர்வு நடந்துகொண்டிருக்கிறது.

1. கோயம்புத்தூர் மாவட்டம் :

1. கோயம்புத்தூர் பால்பண்ணை விரிவாக்கம் (1.0 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக உயர்த்த) தேசிய பால்வள வாரியத்தினால் நிறுவப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு ரூ. 99.32 இலட்சம்.

2. சண்முகாபுரம் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது).

செலவின் மதிப்பீடு : ரூ. 45.52 இலட்சம்.

கட்டுமான வேலைகள் ஆரம்பித்துள்ளன.

3. சுல்தான்பேட்டை பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.).

செலவின் மதிப்பீடு : ரூ. 45.57 இலட்சம்.

கட்டுமான வேலைகள் ஜூலை 91-ல் துவங்கியுள்ளது.

தர்மபுரி மாவட்டம் :

1. கிருஷ்ணகிரி பால்பண்ணை விரிவாக்கம் (1 இலட்சம் லிட்டரிலிருந்து 1.5 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது).

செலவின் மதிப்பீடு : ரூ. 36.54 இலட்சம்.

கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

டிசம்பர் 91-ல் முடிவடையும்.

2. தர்மபுரி பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் (நாளொன்றுக்கு 40 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது).



செலவின் மதிப்பீடு : ரூ. 8.20 இலட்சம்.

கட்டுமானப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அக்டோபர் 91-ல் முடிவடையும்.

மதுரை மாவட்டம் :

1. மதுரை பால்பண்ணை விரிவாக்கம் (நாளொன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.)

செலவின் மதிப்பீடு : ரூ. 60.10 இலட்சம்.

2. மதுரைக்கு அருகில் உள்ள கப்பலூர் மாட்டுத் தீவன ஆலை 100 டன் நாளொன்றுக்கு கொள்திறனுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 143.56 இலட்சம்.

எல்லா வேலைகளும் முடிந்து முதன்மை ஓட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

தேனி பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம்(நாளொன்றுக்கு) 10 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.)

செலவின் மதிப்பீடு ; ரூ. 84.50 இலட்சம்.

இடத்திற்கான தேர்வு நடந்துகொண்டிருக்கிறது.

தென்ஆற்காடு மாவட்டம் :

விழுப்புரம் பால் குளிரூட்டும் நிலையம் ஒரு பால் பண்ணையாக மாற்றியமைக்கப்படவுள்ளது. (30 ஆயிரம் லிட்டரிலிருந்து ஒரு லட்சம் லிட்டராக உயர்த்த) தேசிய பால்வள நிறுவனத்தினரால் நிறுவப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 174.20 இலட்சம்.

திருச்சி மாவட்டம் :

1. திருச்சி பால்பண்ணை 1.5 இலட்சம் லிட்டர் கொள்திறன் உள்ளது. தேசிய பால்வள நிறுவனத்தினரால் நிறுவப்படவுள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 538.18 இலட்சம். விமான நிலையத்தருகில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான தணிக்கை சான்று கிடைத்துள்ளது. சில இயந்திரப் பொருட்கள் வந்து விட்டன.

2. பெரம்பலூர் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் நாளொன்றுக்கு 8 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு ; ரூ. 113 இலட்சம்.

3. கரூர் பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 8 ஆயிரம் லிட்டரிலிருந்து 30 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 68.01 இலட்சம்.

செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம் :

1. புக்கத்துறையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் திறன் கொண்ட புதிய குளிரூட்டும் நிலையம் நிறுவப்படவுள்ளது.

செலவின் மதிப்பீடு : ரூ. 53.25 இலட்சம்.

2. காக்களூர் குளிரூட்டும் நிலையத்தை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் திறன் கொண்ட பதப்படுத்தும் பண்ணையாக மாற்றி அமைத்தல்.

செலவின் மதிப்பீடு : ரூ. 15.50 இலட்சம்.

மூன்றாவது பால்பெருக்குத் திட்டத்தின் முடிவான 1984ஆம் வருடத்தில் தமிழகத்தில் பால்கொள்திறன் நாளொன்றுக்கு 28.41 இலட்சம் லிட்டர் திறனுடையதாக இருக்கும். மேலும் 1994 ஆம் ஆண்டிற்குள் பால் விற்பனையை சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டராகவும், மாவட்டங்களில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டராகவும் அதிகரிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

க்ால்நடை, தொழில் நுட்ப உள்ளிட்ட பணி—பால்பெருக்கு மேம்பாட்டு நடவடிக்கைக்ள் :

1990-91 ஆம் ஆண்டு இந்த இணையத்தில் நாளொன்றுக்கு 11.64 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக 81 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் 1990—91 ஆம் ஆண்டு நிறுவப்பட்டன. 13.60 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவையான மானியம், நோய்க்



கட்டுப்பாடு ஆகிய வசதிகள் அளிக்கப்பட்டன. கிராம அளவில் செயற்கை இனவிருத்தி செய்ய கிராம பணியாளர் களை செயற்கை இனவிருத்தி முறையில் பயிற்சி அளித்து உறைவிந்து மூலம் 1990-91 ஆம் ஆண்டு 6,71,000 கறவை இனங் களுக்கு உறைவிந்து செலுத்தப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டு மாவட்ட பால் ஒன்றியமானது நல்ல தேர்ச்சி பெற்ற கால் நடை மருத்துவர்கள் மூலம் 75 நடமாடும் கால்நடை சிகிச்சை பிரிவுகளின் மூலம் 4,80,000 கால்நடைகளுக்கு அவர்கள் இல்லத்தில் வாயிற்படி அளவிலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் 36 அவசர சிகிச்சை பிரிவுகளின் மூலம் தேவைப்படும் அவசர சிகிச்சைகளும் உடனடியாக அளிக்கப்பட்டன. உறை விந்து மூலம் 1990-91 ஆம் ஆண்டு 84,363 கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள எருமை இனங்கள் சிறந்த எருமை இனங்கள் அல்ல. எனவே நமது மாநிலத்தில் உள்ள எருமை கள் முர்ரா இன எருமைகளோடு இனவிருத்தி செய்யப் படுகின்றன. இதற்காக ஈரோட்டில் எருமை உறைவிந்து நிலையம் நிறுவப்பட்டது. எருமை உறைவிந்து குச்சி தயாரிக்க தற்போது ஈரோட்டில் 69 முர்ரா இன எருமைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் உதகை மைய ஜெர்சி கால்நடையில் பண்ணையில் 10.80 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. மற்றும் ஈரோடு எருமை உறை விந்து நிலையத்தில் 3.04 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யபபட்டன.

மரபு வழி வம்சத் திட்டம் :

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமான பொலி காளைகள் தேவைப்படுகின்றன. இந்தத் தேவையை நிவர்த்தி செய்வதற்காக பொலி காளைகள் மரபு வழியாக நாம் பெற் றுள்ள திறனை நம் சந்ததிக்கு அளிக்கக்கூடிய திறனாகவும் இருக்கின்றனவா என்பதை கணக்கிடுவதற்காக ஈரோட்டை தலைமையாகக் கொண்டு மரபு வழி வம்சத் திட்டம் தொடங் கப்பட்டது. தற்போது தென்ஆற்காடு, சேலம், கோவை, பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் எருமை இனக் காளைகளுக்கான வம்சாவழிப் பரிசோதனைத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது. மதுரை, திண்டுக்கல்-அண்ணா, தஞ்சை, வடஆற்காடு ஆகிய மாவட்டங்களில் கலப்பினங் களுக்கான வம்சாவழித் திட்டம் நடைமுறையில் உள்ளது.

**சிறப்பு கால்நடை இனவிருத்தி திட்டத்தின் கீழ் கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம்:**

தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் அதாவது தென்னாற்காடு, வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மற்றும் திண்டுக்கல்-அண்ணா மாவட்டங்களில் தமிழ்நாடு பால்உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தினால் கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

நான்கு மாத வயது முதல் பத்து மாத வயதிற்குள் உள்ள கலப்பின பசுங்கன்றுகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும், ஒரு கன்று வளர்க்க மானியம் தீவனமாக அளிக்கப்படுகிறது.

1990–91 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் 2,500 கன்றுகள் வளர்க்க ரூ. 98.663 இலட்சம் செலவு செய்துள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 246.810 இலட்சங்கள் செலவில் 3,500 கலப்பின பசுங்கன்றுகளும் 2,000 எருமைக் கன்றுகளும் (இவ்வருடத்திய புதிய திட்டமாக) வளர்ப்பதற்கு மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை :**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது பால் கூட்டுறவு தணிக்கை வாரியம் நீக்கப்பட்டபின் தணிக்கை வாரியம் மேற்கொண்ட தணிக்கைப் பணியினை தேசிய பால் பண்ணை வாரியம் (முந்தைய தேசிய பால் பண்ணைக் கழகம்) அளித்த ஆலோசனையின் பேரில் 1-10-1987 முதல் இயங்கி வருகிறது. இத்துறையானது, பால் வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாநிலத்தின் அனைத்து பிரதம பால்உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் ஒரு தலைமை இணையமான தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் லிட். ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்து சான்று வழங்குகிறது.

**2. தணிக்கை முன்னேற்றம் :**

(அ) பிரதம பால் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை (i) 1990–91-க்கான இறுதித் தணிக்கை.—8341 பிரதம பால் கூட்டுறவு சங்கங்களின், 4514 சங்கங்களின் தணிக்கை



25–8–1991 முடிய முடிக்கப்பட்டுள்ளது மீதமுள்ள கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையினை 31—10—1991-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைப்பு கூட்டங்கள் அடிக்கடி நடத்தி தணிக்கையினை விரைவில் முடிப்பதற்கான வாய்ப்புகளைப் பரிசீலித்து ஆவன செய்யப்பட்டுவருகிறது.

(ஆ) மாவட்ட பால் கூட்டுறவு உற்பத்தியாளர்களின் ஒன்றியங்களில் தணிக்கை (i) இறுதித் தணிக்கை 1989–90, 1989–90 ஆம் ஆண்டு வரைக்கான 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் இறுதி தணிக்கை முடிக்கப்பட்டு விட்டன.

(ii) இறுதித் தணிக்கை 1990–91, 1990–91 ஆம் ஆண்டிற்கான 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் இறுதித் தணிக்கையில் மூன்று ஒன்றியத்தின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒன்றியங்களின் தணிக்கையினை 31–10–1991-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் தணிக்கை (i) 1985 ஆம் ஆண்டு தணிக்கை-தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான தணிக்கை பட்டய கணக்கர்களால் (சார்டர்டு அக்கவுண்டன்டுகள்) நடத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. சோதனை தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச்சான்று வழங்கப்பட்டுள்ளது

(ii) 1986 ஆம் ஆண்டிற்கான தணிக்கை–பட்டய கணக்கர்களால் 1986 ஆம் ஆண்டின் தணிக்கை நடத்தப்பட்டு வருகிறது. அவர்களால் தணிக்கை முடிக்கப்பட்டு, அறிக்கை பெறப்பட்டதும் சோதனைத் தணிக்கை செய்து தணிக்கைச் சான்று வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(iii) 1987 ஆம் ஆண்டிற்கான தணிக்கைக்கான கூட்டுறவு தணிக்கைத் துறையிலிருந்து தணிக்கையாளர்கள் பெறப்பட்டு, தணிக்கைநடத்தப்பட்டு வருகிறது. 12–12–1990-ல் துவக்கப்பட்டு தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது. இதனை 31-10-1991-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3. தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி 127 கட்டணம் வசூலிப்பதில் உள்ள முன்னேற்றம் :**

(அ) தணிக்கை கட்டணம் அரசினரால் நிர்ணயிக்கப்பட்ட தொகை பால் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது. 25—8—1991 முடிய உள்ள காலத்தில் ரூ. 5,21,922-க்கு கேட்பு எழுப்பப்பட்டதில் ரூ. 5,02,407 தணிக்கை கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அடிப்படை விதி கட்டணம்—அடிப்படை விதி 127-ன்கீழ் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர் கட்டணம் பெரிய சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படுகிறது. இதில் தணிக்கையாளரது முழுமையான ஊதியம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இத் தலைப்பின் கீழ் 25-8-1991 முடிய ரூ. 27,19,028-க்கு கேட்பு எழுப்பப்பட்டதில் ரூ. 26,25,629 வசூல் செய்யப் பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டிற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைகளை வசூல் செய்ய திட்ட மதிப்பீடும், 25-8-1991 முடிய வசூல் செய்யப்பட்ட தொகை விவரமும் பின்வருமாறு :—

| திட்ட மதிப்பீடு 1991-92. | 25-8-91வரை முன்னேற்றம். | நிலுவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 62.00 | 31.28 | 30.72 |

31-3-1992-க்குள் திட்டமிட்டப்படி வசூல் செய்ய சிறப்பான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.



இணைப்பு - 3.

(119 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கொள்கை—விளக்கக் குறிப்பு.

1991-92.

1. முன்னுரை :

தமிழ்நாடு 1,000 கி.மீ. நீளமுடைய கடற்கரையும் 41,412 ச.கி.மீ. பரப்புடைய கடற்படு நிலத்தொடரையும் (Continental Shelf) உடையது. புரதச்சத்து மிகுந்த மீன் உணவை சுமார் 80 விழுக்காடு மக்கள் உட்கொள்ளு கிறார்கள். நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ் நாட்டின் பங்கு 15 விழுக்காடாகும். மொத்தமுள்ள 4.97 இலட்சம் கடல் மீனவ மக்களில் 1.1 இலட்சம் பேர் தீவிர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 35,000 பேர் இம்மாநிலத்தின் உள்நாட்டு மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

2. மீன்வளம் குறித்த அரசின் கொள்கை :

2.1. மீன்வள அபிவிருத்தி மற்றும் மீனவர்களின் சமூ தாய நலத்தினை மேம்படுத்துதல் மாநில அரசின் கொள்கை யாகும். மீனள அபிவிருத்தியின் முக்கிய குறிக்கோள் களாவன :—

(அ) மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் :

(ஆ) குறைந்த விலையில் எளிதில் கிடைக்கக்கூடிய புரத சத்துள்ள மீன் உணவை அளித்தல் ;

(இ) தற்போது ஈட்டப்படும் இந்திய செலாவணியை அதிகரித்தல் ;

(ஈ) வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் ;

(உ) மீனவர்களின் வாழ்கை தரத்தை உயர்த்துதல் மற்றும்

(ஊ) அரசு வருவாயை அதிகரிக்க உதவுதல்.

2.2. ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக செயல் படுத்தியதால், இம்மாநிலத்தில் மீன் உற்பத்தி வெகுவாக அதிகரித்துள்ளது. 1951-52-ல் 0.46 இலட்சம் டன்னாக

இருந்த மீன் உற்பத்தி, 1990-91 இறுதியில் 2.92 இலட்சம் டன் கடல் மீன், மற்றும் 0.82 இலட்சம் டன் உள்நாட்டு மீன், ஆக மொத்தம் 3.74இலட்சம் டன் உற்பத்தியை எட்டப்பட்டுள்ளது. 1991-92-ல் மீன் உற்பத்தி 3.89 இலட்சம் டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 2.99 இலட்சம் டன் கடல் மீன் மற்றும் 0.90 இலட்சம் டன் உள்நாட்டு மீன் உற்பத்தியையும் அடங்கும்.

2.3. ஊட்டச்சத்து மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இருக்கின்ற மீன்வள வாய்ப்புகளை பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதுதான் துறையின் முக்கிய கொள்கையாகும். மீன்பிடித்தல், மீனைப் பதப்படுத்துதல், மீன் விற்பனை, மீன்பிடி படகுகளை பழுது பார்த்தல், உள்ளமைப்பு வசதிகள் அமைத்துக் கொடுத்தல் ஆகியவற்றில் படிப்படியான முன்னேற்றம் காண்பது முக்கிய குறிக்கோளாகும். இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு, எட்டாவது திட்ட காலத்தில் பல்வேறு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. மீன்வள வாய்ப்புகள் :

3.1. உள்நாட்டு மீன்வளம்.—தமிழ்நாட்டிலுள்ள 7.98 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர்நிலைகளில் 3.71 இலட்சம் ஹெக்டேர் மட்டுமே மீன்வளர்ப்பிற்கு உகந்தது. உள்நாட்டு மீன் உற்பத்தித் தொழிலுக்கு தரமான மீன் குஞ்சுகள் முக்கியத் தேவையாகும். 28 மீன் விதைப் பண்ணைகளிலிருந்து பொறிப்பக முறையின் மூலம் 40 மில்லியன் குஞ்சுகளும், இயற்கையாக கிடைக்கும் மீன் குஞ்சுகளை சேகரிப்பதன் மூலம் 19.35 மில்லியன் மீன் குஞ்சுகளும், மீன்துறை உற்பத்தி செய்கிறது. 54,000 ஹெக்டேர் பரப்புள்ள நீர்த்தேக்கங்கள் மீன் உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை 32,000 ஹெக்டேர் பரப்புள்ள பாசனக் குளங்களில் மட்டுமே மீன் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தவிர மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மூலம் தீவிர மீன்வளர்ப்பிற்கு 4,512.89 ஹெக்டேர் சிறுகுட்டைகள் மீன்வளர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஓரளவு தவிர மீன் உற்பத்தி மூலம் ஒரு ஹெக்டேர் பரப்பில் ஆண்டு மீன் உற்பத்தியை அதிகரித்தல், மேலும் அதிகமான நீர்ப்பரப்பை மீன் உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகியவைகள் நன்னீர் மீன்வளர்ப்பின் வளர்ச்சிக்கென மீன்துறை எடுத்துக் கொண்ட முக்கிய முயற்சிகளாகும். இவ்வுமுறை மீன் குஞ்சுகளின் உற்பத்தியைப் பெருக்கி அவைகளின் தரத்தையும் உயர்த்துவதாகும்.



3.2. கடல் மீன் உற்பத்தி.— தற்போது தமிழ்நாட்டு கடற்கரை நெடுகிலும் 8,107 விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள் மற்றும் 42,467 நாட்டுப் படகுகள் கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள 362 மீன் இறக்குமிடங்களிலும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. சுமார் 1.1. இலட்சம் மீனவர்கள் தீவிரமாக மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார எல்லைப் பகுதிகளிலுள்ள தூரக் கடல் பகுதியில் தீவிர மீன்பிடிப்பு இனிமேல்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். நமது கடல் மீன்வளம் 8.00 இலட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இக்குறியீட்டினை எய்த மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை மற்றும் உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும்.

3.3. கடலோர மீன்வளர்ப்பு.—0.56 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உவர்நீர் பரப்பும், அதனையொட்டிய தாழ்வான நிலப் பகுதியும் தமிழ்நாட்டிலுள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. முன்மாதிரி ஆய்வின் மூலம் இருக்கின்ற மொத்தப் பரப்பில் சுமார் 0.16 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு மீன் பண்ணைகள் அமைத்திட உகந்தவை எனத் தெரிய வந்துள்ளது. மேலும் நுண்ணிய ஆய்வினை இத்துறை மேற்கொண்டு 3,000 ஹெக்டேர் நிலப்பரப்பு இறால் வளர்ப்பிற்கு உகந்ததென தேர்ந்தெடுத்துள்ளது.

4. நிதி நிலை.—மீனளத் துறையின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 24.00 கோடி ஆகும். ஆனால் ரூ. 26.44 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1990-91-ல் ரூ. 841.29 இலட்சம் துறையின் செலவினமாகும். 1991-92-க்கு ரூ. 750.24 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. இதில் பகுதி இரண்டு திட்டத்தில் புதிய திட்டங்களுக்கென ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ. 46.73 இலட்சமும் அடங்கும் தவிரவும், திட்டமில்லா பணிகளுக்கென ரூ. 779.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீனவ சமூகத்தினரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன், கடல், உள்நாட்டு மற்றும் கடலோர மீன்வள உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களுக்கு இந்த ஆண்டுத் திட்டம் முக்கியத்துவம் அளிக்கும். 1991-92-ம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் சுருக்கமாக கீழே விவரிக்கப் பட்டுள்ளன.

5. நன்னீர் மீன் வளம் : : தமிழகத்திலுள்ள 7.98 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர் நிலைகளில் 3.71 இலட்சம்

மில்லியன் மீன் குஞ்சுகள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது சராசரி ஆண்டு அளவான 60 மில்லியன் மீன் குஞ்சு உற்பத்தியிலிருந்து 170 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. இரண்டு தேசீய மீன் விதைப் பண்ணைகள் பவானிசாகர் மற்றும் மணிமுத்தாறில் கட்டி முடித்ததும் மேலும் இதர மீன் பண்ணைகளின் செயல் திறனை அதிகரிப்பதன் மூலமும் மீன் குஞ்சு உற்பத்தியின் அளவை ஆண்டுக்கு 100 மில்லியன் அளவிற்கு உயர்த்தலாம் எனக் கருதப்படுகிறது. எஞ்சியத் தேவையான 70 மில்லியன் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வெளி நாட்டின் நிதியுதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த திட்டமொன்றை கூட்டுறவுகளின் வழியாக செயல்படுத்தி அதன் மூலம் 20 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 30 மில்லியன் மீன் குஞ்சுகள் தனிப்பட்ட நிறுவனங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும். இதற்கான திட்ட அறிக்கையினை ( phase ) தயாரிப்பதற்காக அரசு, டில்லியிலுள்ள வெப்ப மண்டல மீன் வளர்ப்பு ஆலோசனைப் பணிகள் அமைப்பு நிறுவனத்தாருக்கு பணி வழங்கியுள்ளது. இத்திட்டமானது ஐரோப்பியரது பொருளாதாரக் குழுவின் உதவியுடன் தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக நிறைவேற்றப்படும். மீன் குஞ்சுகள் உற்பத்தியில் அரசு முதலீட்டினை குறைக்கும் வகையில், தனியார் மூலம் மீன், குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் மேற் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**5.2. மீன் குஞ்சு உற்பத்திக்கென தனியார் துறையில் மீன் குஞ்சு வளர்ப்போருக்கு உதவியளித்தல் :** மாநிலத்திற்குத் தேவையான மீன் குஞ்சுகளைப் பெறுவதற்கு ஒரு வழியாக மீன் குஞ்சு உற்பத்தி மேற் கொள்ளத் தேவையான நிலம் மற்றும் நீர் வசதியுள்ள தனியாருக்கு ஊக்க உதவி அளித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவிலான தொழில் நுட்ப வசதியுடன் 10 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்திட தனியார் மீனவருக்கு ஊக்கமளிக்கப்படும். 10 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய 40 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். 40 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் பெற்றிட 250 கி.கி. சினை மீன்கள் தேவைப்படும். இந்த 250 கி.கி. சினை மீன்களை இருப்பு செய்திட 1,600 சதுர மீட்டர் பரப்பளவுள்ள சினை மீன்கள் இருப்புப் பரப்பு தேவை. வருடத்திற்கு மும்முறை அறுவடை என்ற விகிதத்தில் மீன் குஞ்சு அறுவடை செய்திட 1,800 சதுர மீட்டர் நீர்ப் பரப்பு



தேவை. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனடைவோர் (மீனவர்) அருகாமையிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களில் துறையினால் பயிற்சி அளிக்கப்படுவர். 10 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்திட மீன் குஞ்சு பண்ணை அமைத்திடத் தேவையான மூலதனம் ரூ. 1.80 இலட்சம் ஆகும். 15 தனியார் மீன் குஞ்சு உற்பத்தி செய்வோருக்கு மூலதனச் செலவில் 25 சதவீதம் மானியமாக அளித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த மானியத்தின் உச்சவரம்பு ரூ. 0.25 இலட்சம் என்ன நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 15 நபர்களுக்கான மொத்த மான்யம் ரூ. 3.57 இலட்சம் ஆகும். அலங்கார வண்ண மீன்கள் உற்பத்தி செய்வதும் இத்திட்டத்தில் அடங்கும். தனியார் துறையில் மீன் குஞ்சு உற்பத்தி மேற்கொள்வோர் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முறையான பயிற்சி அளிக்கப்படுவர்.

**5.2. பெரும் நீர்த்தேக்க மீன்வளம் :** தமிழ்நாட்டிலுள்ள 54 பெரும் நீர்த்தேக்கங்களிலும், விரைவில் வளரும் தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து, அவற்றை பாதுகாத்து மீன் வளத்தைப் பெருக்கி உரிய நேரத்தில் மீன் பிடிப்பு செய்வதே பெரும் நீர்த்தேக்க மீன் வளத் திட்டத்தின் நோக்கமாகும். தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நீர்த் தேக்கங்களிலும் இருந்து ஆண்டொன்றிற்கு 1,500 டன் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**5.3. தீவிர உள்நாட்டு மீன் வளம் மற்றும் விற்பனைத் திட்டம் :** தமிழ்நாடு உள்நாட்டு மீன் உற்பத்தியை பெருக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக தீவிர உள்நாட்டு மீன் வளத் திட்டத்தின் கீழ் தென்னாற்காடு மற்றும் மதுரை மாவட்டங்களில் 1984 ஆம் ஆண்டு முதல் பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறையின் பெரும் பாசன நீர் நிலைகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தென்னாற்காடு மாவட்டத்தில் 22,000 ஹெக்டேர் மற்றும் மதுரை மாவட்டத்தில் 11000 ஹெக்டேர் பரப்பளவுள்ள நீர் நிலைகளில் மீன் குஞ்சு இருப்பு செய்து அப்பகுதியிலுள்ள மீனவர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பங்கு மீன் பிடிப்பு முறையில் மீன் பிடிப்பு நடத்தப்படுகின்றது. 1990-91-ல் 28,375 இலட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1,04,025 கி.கி. மீன்கள் பிடிக்கப்பட்டு, அதில் 57,351 கி.கி. மீன்கள் மீனவர் பங்காக அளிக்கப்பட்டது. விரைவில் வளரக் கூடிய அதிகமான மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வதன் மூலம் இத்திட்டம் தீவிரமாக தொடரப்படவுள்ளது.

**5.5. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் :** இத்திட்டத்தின் முதன்மையான குறிக்கோளானது. ஊரகப்

பகுதியில் இருக்கும் எல்லா நீர் நிலைகளையும் உபயோகப்படுத்தி விஞ்ஞான முறைப்படி மீன் வளர்ப்பது, குறைந்த விலையில் ஊரகப் பகுதி மக்களுக்கு புரதச் சத்து மிகுந்த மீன் உணவை போதுமானதாக வழங்குவது, ஊரகப் பகுதியிலுள்ள பொருளாதார நிலையில் நலிந்த பிரிவினர் மற்றும் கீழ்மட்ட மக்கள் இவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது, இதைத் தவிர ஒரு ஹெக்டேருக்கு 1,000 கிலோ மீன் உற்பத்தி அளவினை அதிகரிப்பது ஆகும். அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் மத்திய அரசு நிதியுதவியுடன் பதிமூன்று மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் பஞ்சாயத்து மற்றும் பிற துறைகளிடமுள்ள குளங்களை நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் எடுத்து மீன் வளர்ப்போருக்கு தரப்படுகின்றது. இதற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மீனவர்களுக்கு கலப்பின மீன் வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. குளம் சீரமைக்கவும் இடுபொருள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் குஞ்சுகள் வாங்கவும் கடன் மற்றும் மானிய அடிப்படையில் பொருளாதார உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1990-91 முடிய 4,627 ஹெக்டேர் பரப்பளவுள்ள குளங்கள், 5,201 மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் அட்டவணைப் பிரிவினர் 1,245 பேரும் மலைவாழ் மக்கள் 19 பேரும் அடங்குவர். நவீன முறையில் மீன் வளர்க்கும் தொழில் நுணுக்கத்தில் 5,534 மீன் வளர்ப்போர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 1990-91-ல் ரூ. 2?7 இலட்சம் மதிப்புள்ள ?.459 டன் மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1990-91-ல் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 1,029 கிலோ மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**6. கடல் மீன்வளம்:**

6.1 20 சதவிகிதம் மானியத் திட்டம்: தற்போது தமிழ்நாட்டில் 8,107 விசைப் படகு மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன் பிடிக்கலன்களைக் கொண்டு கடல் மீன் பிடிப்பு உற்பத்தியில் சுமார 52 விழுக்காடு அளவில் உள்ளது. படகு கட்டுமானப் பொருள்களின் விலை ஏற்றத்தாலும், வங்கிக் கடன் பெற இயலாமை மற்றும் அரசுக் கடன்களைத் திரும்பப் பெற இயலாமை ஆகியவற்றினால் அரசு புதிய திட்டம் வகுத்து 20 சதவீதம் மானியம் வழங்க ஆணை பிறப்பித்தது. 1990-91 வரை அரசின் 20 சதவீதம் மானியத் திட்டத்தின் மூலம் 85 மரத்திலான படகுகள், 35 கண்ணாடி



இழையிலான படகு கலரயேற்றும் படகுகள், 9 பெரிய அளவிலான படகுகள் 18 பிளைவுட் (Marine Plywood) படகுகள், 570 கட்டுமரங்கள், 10 வள்ளங்கள் வாங்குவதற்கு மானியமான ரூ. 100.28 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 20 சதவீதம் அரசு மானியம் 20 சதவீதம் பயனடைவோர் பங்கு மற்றும் 60 சதவீதம் வங்கிக் கடனாக மேற்கண்ட கலன்கள் வாங்கிக் கொள்ள திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதுவரை 8 மரத்தாலான படகுகள்' 8 பெரிய அளவ்ளான படகுகள் மற்றும் 342 கட்டுமரங்களுக்கு மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, புதிய... அறிமுகப்படுத்தியுள்ள, 'மெரைன் பிளைவுட்' படகுகள் 28 அடி நீளமுடையவை கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரபலமடைந்து வருகிறது. இப்படகுகள் இலேசானதாக இருப்பதால், அண்மைக்கடல் மற்றும் தூரக் கடல் மீன் பிடிப்புக்கு இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்படகில் பாய்மரம் பொருத்த வசதியுள்ளதால், சாதகமான காற்றுள்ளபோது பாய் கொண்டு மீன் பிடித்தலுக்கும் இயந்திர ஓட்டத்தின் மூலம் காற்று சாதகமில்லாத தருணங்களிலும் அவசரமான சூழ்நிலைகளிலும் கரைக்கு திரும்பவும் ஏதுவான அமைப்பு உள்ளது. ஒரு படகு மற்றும் வலையின் மதிப்பு ரூ. 1.00 இலட்சமாகும். 1991-92 ஆம் ஆண்டில் 20 விழுக்காடு மானியத்துடன் 10 மெரைன் பிளைவுட் படகுகள் வாங்கி கொள்ள ரூ. 2.00 இலட்சம் வரை மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6.2. பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திர மயமாக்குதல்.—பாரம்பரிய மீனவர்களுக்கு உதவும் மற்றுமொரு திட்டம் யாதெனில், அவர்களின் மீன்பிடி கலன்களுக்கு உள்ளே/வெளியே பொருத்தும் இயந்திரம் வாங்க உதவி அளித்தல் ஆகும். வெளிப் பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரம் ஒவ்வொன்றிற்கும் 50 விழுக்காடு மான்யமாக ரூ. 7,500-க்கு மேற்படாமல் வழங்கும் இத்திட்டத்திற்கான செலவில் 1987-88-லிருந்து மத்திய அரசு சம பங்கு ஏற்கிறது. இதுவரை 1962 இயந்திரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது இம்மானியத்தினை 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 7,500-லிருந்து ரூ. 10,000 உயர்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.3. மீன்பிடித் துறைமுகங்களும் மீன் இறங்கு துறைகளும்.—தமிழ்நாட்டின் கடற்கரை நெடுகிலும் உள்ள, 362 மீன் இறங்கும் இடங்களில், பல்வேறு அளவுகளிலான சுமார் 8,107 மீன்பிடி விசைப் படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. பருவநிலை மோசமாகவுள்ள காலங்களில் மீன்களைக் கரையிறக்கவும் படகுகளுக்கான எரிபெண்ணெய்

நிரப்பவும், இப்படகுகளுக்கு பத்திரமான தங்கு தளங்கள் தேவைப்படுகின்றன. தவிரவும் பிடித்து வந்த மீனை உபயோகிப்பாளர்களுக்கு அனுப்பும் வரை அவைகளைப் பாதுகாக்கவும், படகுகளைப் பழுது பார்க்கவும், மீனை ஏலமிடவும், கரையில் வசதிகள் தேவைப்படுகின்றன. மீன்பிடி படகுகளின் மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இம்மாநிலத்தில் 10 இடங்களில் பெரிய மீன் பிடித் துறைமுகங்களும், மீ. இறங்கு துறைகளும், கரையோரச் சுவர்களும், ரூ. 1,6./.71 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இத்துறைமுகங்களும், இறங்கு துறைகளும் 1,279 விசைப் படகுகள் மற்றும் 60 நாவாய்கள் தங்குவதற்கும், மீனைக் கரையிறக்கவும், வசதியளிக்கின்றன. இம்மாதிரி வசதிகள் மேலும் இரண்டு இடங்களில் அதாவது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்திலும் ரூ. 845 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வசதிகள் முடிவுற்று உபயோகத்திற்கு வரும்போது மேலும் 390 விசைப் படகுகளும் 10 நாவாய்களும் அவற்றில் தங்க இயலும். கோட்டைப்பட்டினத்தில் மேலும் ஒரு படகுத்துறை மாநில துறைமுகத் துறையால் 1991-92-ல் கட்டுமானத்திற்கென எடுக்கப்படவுள்ளது.

6.4. கரையோர வசதிகள்.—ஒவ்வொரு மீன்பிடித் துறைமுகத்திலும், படகுத் துறையிலும் உள்ளமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. முக்கியமாக பனிக்கட்டி உற்பத்தி நிலையம், படகு பழுது பார்க்கும் கூடம், சமுதாயக் கூடம், மீன் உலர வைக்கும் கூடம், வலை பின்னும் கூடம், அணுகு சாலைகள் முதலியன இவ்வசதிகளில் அடங்கும். மேலும் மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்கு இயலாத முக்கியமான மீன் இறங்குமிடங்களில் மீன் ஏலமிடுதல் மற்றும் மீனை சிப்பங்களில் அடைக்கும் கூடம், வலை செப்பனிடும் கூடம், சமுதாயக் கூடம், பனிக்கட்டி உற்பத்தி நிலையம், படகு பழுது பார்க்குமிடம், அணுகு சாலைகள், சுற்றுச்சுவர், தண்ணீர் மற்றும் மின்சாரம் போன்ற உள்ளமைப்பு வசதிகளும் படிப்படியாக செய்து கொடுக்கப்படுகின்றன. இம்மாதிரி வசதிகள் பழையாறு, முட்டம், தொண்டி, ஏர்வாடி ஆகிய இடங்களில் ஏற்கனவே செய்து தரப்பட்டுள்ளன. வாலிநோக்கத்தில் இவ்வசதிகள் தற்போது கட்டப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பூம்புகார் மற்றும் வெள்ளப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வள்ளவிளை மற்றும் கோடிமுனை ஆகிய இடங்களிலும் இவ்வசதிகளை ஏற்படுத்துவதற்கான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.



6.5. மீனவர் பயிற்சி நிலையங்கள்:— நம்மிடமுள்ள பயிற்சி பெற்ற மனித ஆற்றலை விசைப்படகினை நடத்துவதற்கும், அதனை பராமரிப்பதற்கும் மற்றும் நவீன மீன் பிடி கருவிகளை இயக்குவதற்கும் வசதி செய்யும் வகையில் தமிழ்நாட்டில் இடங்களில் மீனவர் பயிற்ச்சி நிலையங்களை மீன்துறை நிறுவியுள்ளது. ஒவ்வொரு மீனவர் பயிர்ச்சி நிலையமும் மீனவர் சமூகத்தைச் சேர்ந்த 50—60 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் போதுமான வசதியைக் கொண்டது இத்துடன், சிறுதரக் கம்மியர் 3 பயிற்சியும் மீனவர் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. இம்மீனவர் பயிற்சி நிலையங்களில் மீன்பிடிக் கலன்களில் பயிற்சி பெற்றவர்கள் கடற்கரைப்படை, துறைமுகக் கழகம், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் கடற்படை ஆகிய பிரிவுகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

மீனவர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கான உதவித் தொகையை மாதமொன்றுக்கு ரூ. 75 லிருந்து ரூ. 100 ஆக அரசு உயர்த்தி உள்ளது. மேலும் கடலில் செல்லும்போது அளிக்கப்பட்டு வந்த கடல் தினப்படி 50 பைசாவிலிருந்து 75 பைசாவாக 1-4-1990 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

6.6. கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983.—தமிழ்நாடு கடல் மீன்வள சீரமைப்புச் சட்டம் 1983 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 6 ஆம் நாள் அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் படகுகளை பதிவு செய்தல், மீன் பிடிப்பை ஒழுங்குபடுத்துதல், தமிழக கடலோரப் பகுதிகளில் விசைப் படகுகள் மீன் பிடிப்பதைத் தடுத்தல் போன்றவை செயல்படுத்தப்படுகின்றன. மீன் துறையின் அங்கீகாரம் பெற்ற அலுவலர்களால் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

7. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு.— இம்மாநில மீன் துறையானது இந்திய அரசு நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து உவர் நீர்ப்பரப்புகளில் இறால் மற்றும் மீன் வளர்ப்பின் தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்துள்ளது. சுமார் 16,000 ஹெக்டேர் உவர்நீர் இறால் மற்றும் மீன் வளர்ப்புக்கு ஏற்றதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதுநாள் வரை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் 150 ஹெக்டேர் உவர்நீர் பரப்பினை வளர்ப்பிற்கு எடுத்துக் கொண்டுள்ளன. மீனவர்களிடையே இந்தத் தொழில் நுட்பத்தை விளக்கி அவர்களுக்கு நவீன முறை உவர்நீர் இறால் வளர்ப்பில் ஆர்வம் ஏற்படுத்தி இறால் வளர்ப்பில் ஈடுபடுத்தும் நோக்குடன் தமிழ்நாட்டின் ஆறு கடலோர

மாவட்டங்களில் ஒன்பது விளக்கப் பண்ணைகளை இத்துறை நிறுவியுள்ளது. இந்தப் பண்ணைகள் ஒவ்வொன்றும் 1-லிருந்து 2 ஹெக்டேர் பரப்பு கொண்டவை. இத்துறை 1986-ம் வருடத்தில் கிள்ளையில் 5 ஹெக்டேரில் ஒரு குளமும் அமைத்தது. 1990-91-ல் இந்தப் பண்ணைகளில் மொத்தம் 6,447.945 கி.கி. இறால்கள் உற்பத்தி செய்யப் பட்டன.

இறால் வளர்ப்பில் விரைவான முன்னேற்றம் ஏற்படுத்த தமிழக அரசு இறால் வளர்ப்பிற்காக அரசு நிலங்களை குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்கியது. இந்த ஆணை வழங்குகையில் அரசு நிலங்களை ஒதுக்கீடு விண்ணப்பங்களை தெரிவு செய்ய ஒரு உயர் மட்டக் குழுவையும் நியமித்தது. இறுதி ஒதுக்கீடு ஆணைகள் சுற்றுப்புறச் சூழல்துறை மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து ஒப்புதல் பெற்று 1,232 ஹெக்டேர் நிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இறால் வளர்ப்பினைப் பற்றிய விவரங்களைத் தெரிவிப்பதற்காக, சென்னை, தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இறால் வளர்ப்புக் கருத்தரங்குகள் நடத்தப் பட்டன. இக்கருத்தரங்குகளை தொடர்ச்சியாக மத்திய உவர்நீர் உயிரின வளர்ப்பு நிலையம் மற்றும் கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் தொடர் பயிற்சிகளை நடத்தி வருகின்றன.

செங்கற்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழக உதவியுடன் ரூ. 1.63 கோடி மதிப்பீட்டில் இறால் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்க ஒரு திட்டக் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

7.2. உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைத்தல் : தென்னாற்காடு, தஞ்சாவூர் மற்றும் வ. உ. சிதம்பரனார் மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஏற்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. இந்த முகமைகள், சங்கங்களின் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு முகமையும் ஒரு ஹெக்டேர் மற்றும் 5 ஹெக்டேர் பரப்பினை கொண்டதாக 50 ஹெக்டேர் உவர்நீர் பரப்பினை அபிவிருத்தி செய்யும், ஒவ்வொர் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டுமுகமையும் ஒரு ஆட்சிக் குழுவினால் நிர்வகிக்கப் படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவ்வாட்சிக் குழுவிற்குத் தலைவராக இருப்பார். உவர்நீர் மீன்வளர்ப்போர்



மேம்பாட்டு முகமை கீழ்க்கண்ட பணிகளுக்கு அதாவது தகுதியான உவர்நீர் பரப்பினையும் பயனடைவோரையும் தேர்ந்தெடுத்தல், பயனடைவோருக்காக வங்கித் திட்டத்தைத் தயாரித்தல், அவர்களிடமிருந்து கடன் விண்ணப்பங்களைப் பெற்று வங்கிகளிடமிருந்து கடன்பெற்றுத் தருதல் இறால் குஞ்சு, உணவு, நீர் பராமரிப்பு, தரக் கட்டுப்பாடு முதலிய தொழில் நுட்பங்களில் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல், அரசு மானியத்திற்கு ஏற்பாடு செய்தல் உற்பத்தியானவற்றை சந்தையில் விற்க விலை விவரங்களை அறிவித்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகும், ஒரு ஹெக்டேருக்கு ரூ. 30,000/- மானியமாக ஒவ்வொரு வளர்ப்போரும் பயன்பெறுவர். இதுவரையில் 58 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

7.3. இறால் வளர்ப்பிற்கென உவர்நீர் மீனவத் தொழில் மையம் அமைத்தல் (தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு மூலதன உதவி அளித்தல்) ; உவர்நீர் மீனளத் தொழில் மையம் ஒன்று மாநிலத்தில் அமைப்பது, இறால் வளர்ப்பில் ஒரு ஏற்றத்தினை ஏற்படுத்தும் இத்திட்ட செயலாக்கத்திற்கென 200 ஹெக்டேர் அரசு நிலங்கள் தேர்ந்தெடுக்கப் படும். அரசு நிலம் கிடைக்காத நிலையில், தனியார் நிலங்கள் பேச்சு வார்த்தை மூலம் விலைக்கு வாங்கப்பட்டு தேவையான சாலை, நீர் மற்றும் மின் வசதிகள் போன்ற உள்ளமைப்பு வசதிகளுடன் கூடிய தொழிற்மையம் ஏற்படுத்தப்படும். 200 ஹெக்டேர் பரப்பளவுள்ள ஒரு தொழிற்மையம் ஏற்படுத்திட ரூ. 4 கோடி செலவினம் ஆகும். அரசின் சார்பாக இத்திட்டம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் செயலாக்கம் செய்யப்படும். இறால் வளர்ப்பினை மேற்கொள்ள இந்த புதிய முன்னோடித் திட்டத்தின் செயலாக்கத்திற்கென 1991-92-ம் ஆண்டுத் திட்டத்தில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 25.00 இலட்சம் மூலதன உதவியாக அளித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. மீனவர் நல்வாழ்வுத் திட்டம் :

8.1. மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம்.—1975—76ஆம் ஆண்டில் தமிழக அரசு, மீனவர்களின் துயர் துடைக்க அவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. அவ்வமயம் 48,214 மீனவர் குடும்பங்கள் குடிசைகளில் வசித்து வந்ததாக கணக்கெடுக்கப்பட்டது. இந்த மீனவர்களுக்கு 3,000 வீடுகளை நல்ல முறையில் கட்டிக்கொடுக்க 1989—90-ல் அரசு உத்தரவிட்டது. அதேபோல் 1990—91-லும் 3,000

வீடுகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்தது. மொத்தத்தில் இதுவரை 17,893 வீடுகள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றுள் 12,582 வீடுகள் 31—7—1991 முடிய உள்ள காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருச்சினாங்குப்பத்திலுள்ள 492 குடியிருப்புகள் உட்பட மீன்துறையின் பொறியியல் பிரிவால் கட்டப்பட உள்ளது. திருச்சினாங்குப்பத்திலுள்ள தொகுப்பு அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்ட அரசு ரூபாய் 1.53 கோடிக்கு திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டதும் பணி மேற்கொள்ளப்படும்.

8.2. தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்: —மத்திய அரசு மாநிலங்களில் உள்ள மீனவ கிராமங்களில் முன்னேற்றத்திற்காக இந்த திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு கடலோர மாநிலங்களிலுள்ள சில கிராம மக்களைத் தேர்ந்தெடுத்து, அங்குள்ள மீனவர்களுக்கு வீடுகள், சமுதாயக் கூடம், குடிநீர் வசதி, கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்காக ஆதார நிதி (seed money) போன்றவற்றை வழங்க இந்த நிதியிலிருந்து 50 சதவீதத் தொகையை மானியமாக வழங்குகிறது. 1987—88 ஆம் ஆண்டு வள்ளவிளை, இரட்சண்யபுரம், கீழ்த்தோட்டம், டி. வி. எஸ். பேட்டை, நயினார்குப்பம் போன்ற 5 கிராமகளுக்கு இந்த வசதிகள் செய்துத்தர தேர்ந்தெடுக்கப்பட்டன. 1989- 90-ல் சாவடிக்குப்பம், கூனிமேடு, கோபாலபட்டினம், காரங்காடு, இரவிப்புத்தன்துறை ஆகிய 5 கிராமங்களில் இந்த வசதிகள் செய்துத்தர தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டத்தில் மொத்த செலவினமாக ரூபாய் 64.14 இலட்சத்தில் மத்திய அரசின் பங்கு ரூபாய் 32.07 இலட்சமாகும். கிராமங்களுக்கு செய்துத்தர வேண்டிய மேற்கண்ட நான்கு வசதிகளில் வீடு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. ஆதார நிதியும் 4 மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. மற்றப் பணிகளான சமுதாய நலக் கூடம் கட்டுதல், குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஆகியவை அவற்றிற்கான திருத்திய மதிப்பீடுகளை மத்திய அரசு அங்கீகரித்ததும் துவங்கப்படும். 1990-91 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள மேலும் 10 கிராமங்களில் ரூபாய் 1.66 கோடி செலவில் மாதிரி கிராமங்களுக்காக உருவாக்கப்படவுள்ளன.

8.3. அணுகு சாலைகள்.— கடலோரப் பகுதிகளிலுள்ள மீனவர் கிராமங்களிலிருந்து மீன்களை பிரதான சாலைகளின் வழியாக சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு இணைப்பு சாலைகள் தேவைப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு,



ரூ. 300.90 இலட்சம் செலவில் 113 இணைப்புச் சாலைகள் அமைக்க நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் இதுவரை 110 இணைப்புச் சாலைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

8.4. கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்: மீன்பிடிப்பு இல்லாத மாதங்களில் அல்லல்படும் மீனவர் துயர் நீக்க அரசு இந்தக் கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவுள்ள ஒவ்வொரு மீனவரிடமும் மாதம் ரூபாய் 10 வீதம் ஒன்பது மாதங்களுக்கு வசூலிக்கப்பட்டு அதற்கு இணையாக அரசின் பங்குத் தொகை ரூபாய் 90-ம் சேர்த்து மொத்தம் ரூபாய் 180ஐ அந்த மீனவருக்கு மீன்பிடிப்பு இல்லாத மாதங்களில் மாதம் ரூபாய் 60 வீதம் திருப்பித்தரப்படும். மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டம் மீனவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் 57,777 மீனவர்கள் சேர்ந்துள்ளனர்.

தேசிய நலத்திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டிலிருந்து மீனவர்க்கென சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தினை மத்திய அரசு சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. மத்திய அரசின் விதி வழிகளின்படி மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள கடல் மீனவர்களிடமிருந்து (நாளொன்றுக்கு ரூபாய் 1½ வீதம் சேமிப்பு) ஒரு மாதத்திற்கு ரூபாய் 45 வசூலிக்கப்படும். இத்தொகை வருடத்தில் 8 மாதங்களுக்கு வசூலிக்கப்படும். இவ்வாறு வசூல் செய்யப்பட்ட ரூபாய் 360-க்கான ஈடான தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் அளிக்கப்படும். இந்த மொத்தத் தொகையான ரூபாய் 1,080 (360×3) மீன்பிடி காலமில்லாத 4 மாதங்களில், மாதத்திற்கு ரூபாய் 270 வீதம் பயனடைவோருக்கு சரிசமமாக திருப்பி வழங்கப்படும். இத்திடடம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இது விரைவில் செயலாக்கப்படும்.

8.5. மீனவர் விபத்து காப்புறுதித் திட்டம். —1983-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் விபத்தினால் மரணம் அடையும்/ஊனமுறும் மீனவர்கள் பயன் பெறுகின்றனர். இதற்காக செலுத்தப்படும் ஆண்டு பிரிமியத் தொகையான ரூபாய் 9 ஒவ்வொரு மீனவருக்கும் செலுத்தப்படுகிறது. இந்தத் தொகையை மீனவர்களிடம் வசூலிக்காமல் மத்திய மாநில அரசுகளால் சமபங்காக பகிர்ந்து செலுத்தப்படுகிறது. விபத்தினால் மரணமடையும் அல்லது முழுமையாக ஊனமுறும் மீனவரின் குடும்பத்திற்கு ரூபாய் 15,000 காப்புறுதித் தொகையாக வழங்கப்படுகிறது. ஒரு கண்

கால் அல்லது கை ஆகியவற்றை விபத்தினால் இழக்கும் மீனவருக்கு ரூபாய் 7,500 நிவாரணமாக இத்திட்டத்தின் கீழ் 1,66,312 மீனவர்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளனர். இது வரை 902 மீனவ குடும்பங்களுக்கு ரூபாய் 1,27,00,000 நிவாரணமாக (26—8—1991 வரை) இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

விபத்தில் மரணமடைந்த மீனவர் குடும்பத்திற்கு வழங்கப் படும் காப்புறுதித் தொகை ரூபாய் 15,000-லிருந்து ரூபாய் 21,000 ஆக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. விபத்தில் ஊனமடைந்த மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்படும் காப் புறுதித் தொகை ரூபாய் 7,500-லிருந்து ரூபாய் 10,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டமும் அரசின் பரிசீலனை யிலுள்ளது. இதுவும் விரைவில் செயலாக்கப்படும்.

மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினரல்லாத மீனவர்கள் விபத்தில் இறந்தாலோ, நிரந்தரமாக ஊனமுற்றாலோ வழங்கப்படும் ''முதலமைச்சரின் துயர் துடைப்பு நிதி'' ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 மாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர் அல்லாத வரும் மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தில் சேராதவரும் பயன்பெறுவர். இவ்வாறு மீனவர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராக இருந்தாலும், இல்லாவிடினும் அனைத்து மீனவர்களுக்கும் விபத்தில் மரணமடைந்தாலோ அல்லது ஊனமுற்றாலோ காப்புறுதி உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**8.6. மீன்பிடி விசைப்படுக்ள் பயன்படுத்தும் டீசல் எரி எண்ணெய் மீதான ஆயத்தீர்வை குறைத்தல்.**—1990-91-ம் ஆண்டு மத்திய நிதியுதவியுடன் கூடிய திட்டங்களின் கீழ் 20 மீ. நீளத்திற்கும் குறைவாக உள்ள மீன்பிடி விசைப் படகுகள் பயன்படுத்தும் டீசல் எரியெண்ணெய் மீதான ஆயத்தீர்வை குறைத்திடும் திட்டம் ஒன்றிற்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் பங்கு 80 : 20 என்ற விகிதத்தில் உள்ளது. இதனை மாநில அரசும் ஏற்று அனுமதியளித் துள்ளது. விசைப் படகுகளுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான எரியெண்ணெய் 11,650 கிலோ லிட்டர் எனவும். ஒரு லிட்டர் எரியெண்ணெய்க்கு வரிக்குறைப்பு 0.35 பைசா வீதம் கணக்கிடப்பட்டு, மாதாந்திரத் தேவை யான எரியெண்ணெயின் மீதான ஆயத் தீர்வை குறைப்பு மாதத்திற்கு ரூ. 40.00 இலட்சம் எனவும் கணக்கிடப் பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் இத்திட்டம் செய லாக்கத்திற்கென மத்திய அரசு ரூ. 20.00 இலட்சமும், அளித்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயலாக்கப்படும்.



9. மீனவர் கூட்டுறவு.—மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங் களில் தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கின்றன. கூட்டுறவு இயக்கம் அவர்களை வளர்ச்சிப் பணியில் ஒருமுகப்படுத்த முயல்கிறது. இக்கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர்களுக்கு கடன்வசதி அளித்தல். மீன்பிடி கருவிகள், தளவாடங்கள் ஆகியவற்றை விநியோகம் செய்தல் ஆகியவைகளோடு அவர் களின் பிடிக்கும் மீன்களை விற்பனை செய்யவும் உதவு கின்றது. அவைகளில் சில இன்றியமையாத பொருட்களை கூட விநியோகம் செய்கின்றன. மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு கடன், இடுபொருள் வசதி, விற்பனை வசதி ஆகியவை இந்த கூட்டுறவுச் சங்கங்களில் ஒருங்கிணைக்கப் படுகின்றன.

தமிழ்நாட்டில் தற்போது 648 பதிவு பெற்ற மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அவற்றில் 1,52,013 மீனவர்/மீனவ மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 0.25 இலட்சம் வீதம், மொத்தம் ரூ. 5.00 இலட்சங்களுக்கு மேற்படாத தொகையை பங்கு மூலதன உதவியாக அரசு அளிக்கிறது. ஏனைய வகை வங்கிகள், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகிய அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியை பயன்படுத்திக் கொள்ளும் சக்தியை மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகரிக்கச் செய்வது தான் அரசு பங்கு மூலதன உதவி செய்வதன் உள்நோக்க மாகும்.

**9.2. மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிர்ச்சி அளித்தல்.**—கூட்டுறவு சங்கங்களுக்கு புத்துயிர் அளிப்பதன் மூலம் அவைகளை திறன் மிக்கதாய் மாற்றுவதே அரசின் நோக்கமாகும். 1978-79 ஆம் ஆண்டு முதல் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள், நாட்டுப் படகுகள், மீன்பிடி சாதனங்கள், மீன்களை எடுத்துச் செல்வதற்கான மோட்டார் வண்டிகள், கிடங்குகள் கட்டுதல், மீன்களை பதனிடுதல் மீன் விற்பனை செய்தல் போன்றவை களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மிகப் பெரிய அளவில் நிதியுதவி செய்து வருகிறது. இதுவரை 98 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திடமிருந்து ரூ. 468.00 இலட்சங்கள் நிதியுதவி பெற்றுள்ளன

**9.3 ஒருங்கிணைந்த கடல் மீன்வளத் திட்டம்**— மீனவர் களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தை உண்டுபண்ணவும் மீன் உற்பத்தியைப் பெருக்கவும் பிடிக்கப்

படும் மீன்களின் விற்பனைத் தொகைகளில் அதிக அளவில் பங்கு பெற்று அவர்களது பொருளாதார வசதியைப் பெருக்கு வதற்காகவும், கடலோர மீனவ ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களி லுள்ள மீனவ கிராமங்களில் பல்வேறு வகையான மீன்பிடி சாதனங்கள் உபகரணங்கள் குளிர்பதன பெட்டிகள் வெளிப்பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரங்கள். மரப்பலகைகளிலான கண்ணாடி இழைப் படகுகள் ஆகியவை இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும். இத்திட்டம் தமிழ் நாட்டிலுள்ள ஐந்து கடலோர மாவட்டங்களான செங்கற் பட்டு-எம்.ஜி.ஆர். தஞ்சாவூர், இராமநாதபுரம் சிதம்பர னார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயலாக்கப் படும். மேற்கண்ட ஐந்து கடலோர மாவட்டங்களிலுள்ள 4.638 இலட்சம் மீனவர் எண்ணிக்கை கொண்ட 34 கிராமங்களிலுள்ள 27 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் இத்திட்டம் செயலாக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் நேரடியாக 6,050 மீனவர்கள் பயனடைவார்கள். இத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.72 கோடியாகும். மேலும் இது ஒரு ஐந்தாண்டு காலத் திட்டமாகும்.

9.4. பத்து மீன்வர் கூட்டுறவு சங்கங்களுக்கு பங்கு முதல் உதவி அளித்தல்.— மீனவர் கூட்டுறவு சங்கங்களின் நிதி நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இருப்பினும் சில மீனவர் கூட்டுறவு சங்கங்கள்நியாயவிலைக் கடைகளின் மூலம் பொது விநியோகமுறையை கடைப்பிடிக்கின்றன. சில சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள் விநியோகம் செய்வதை மேற்கொண்டுள்ளன.

உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தினர் களின் நலனை முன்னிட்டு அந்தந்தப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் மீன்பிடி உரிமம் எடுத்துள்ளது. தேவையான நிதி வசதி இல்லாத காரணத்தால் மேற்குறிப்பிட்ட பணி களை மேற்கொள்வது மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடினமாக உள்ளது. எனவே இப்பணிகளை மேற்கொள்ள பங்கு முதலாக நிதி வசதி தேவைப்படுகிறது. மேலும் நிதி பற்றாக்குறையினால் மீன்பிடி உபகரணங்கள் வாங்கிடத் தேவையான நிதியுதவி பெறுவதற்கென மீனவர்கள் இடைத் தரகர்களை அணுகுகின்றனர். பெற்ற கடனுக்குப் பதிலாக இடைத்தரகர்கள் நிர்ணயம் செய்யும் குறைந்த விலையில் தாங்கள் பிடித்த மீன்களை விற்கின்றனர். இதனைத் தவிர்ப்பதற்காக மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங் களை மீனவர் கூட்டுறவு சங்கமே வழங்கி அவர்கள் பிடித்த மீன்களை பதிலுக்குப் பெறலாம். சங்கம் மீனவர்கள் பிடித்த



மீன்களை அவர்களுக்கு அதிக பயனளிக்கும் விதம் விற்பனை செய்வதோடு மட்டும் அல்லாமல் அவர்களுக்கு வழங்கப் பட்ட மீன்பிடிச்சாதனங்களின் விலையை பிடித்தம் செய்து கொள்ளலாம். இவ்வாறு இடைத் தரகர்கள் பிடியிலிருந்து ஏழை மீனவர்களை காப்பாற்ற ஏதுவாக நல்ல நிலையில் இயங்கும் சில சங்கங்களுக்கு மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் வழங்கிடும் பொருட்டு ரூ. 1.00 இலட்சம் பங்கு முதலாக வழங்கப்படும். பிடித்த மீன்களை விற்பதன் மூலமாகக்கிடைக்கும் வருவாயிலிருந்து இடைத்தரகர்களுக்கு சேரவேண்டிய கடனை அடைத்து அவர்கள் பிடியிலிருந்து மீளவும் வழிவகை ஏற்படும். இத் திட்டத்திற்கென 1991-92 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. மீனவ மகளிர் விரிவாக்கப் பணி.— மீனவ சமு தாயத்தின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்து வதற்கென அச்சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் மீனவ மகளிரையும் மேம்பாட்டில் ஈடுபடச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலில் இத்திட்டம் மூன்று மீனவ கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டு தங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் கூடுதல் வருவாய் ஈட்டிடவும் ஏதுவாக மீனவ மகளிரே மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களை நிர்வகிக்க ஊக்குவிக்கப்பட்டனர். மற்ற கரை யோர மீனவ மகளிர் இதில் அதிக ஆர்வம் காட்டிய தால் தற்போது தமிழ்நாட்டில் 61 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

மீனவ மகளிருக்கு மீன் விற்பனை செய்யும் பொருட்டு கடனுதவி செய்து தருதல், கைவினைப் பொருட்கள் செய்வ தற்கு பயிற்சி அளித்தல், நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியமான பொருட்களை விற்பனை செய்தல், மருத்துவ வசதி அளித்தல் முதியோர் கல்வித் திட்டத்தை மேம்படுத்துதல், வேலை வாய்ப்பு அளித்தல், குழந்தைகள் காப்பகங்களைப் பராமரித்தல், மீனவ மகளிரிடையே சேமிப்புத் திட்டத்தின் பழக்கத்தினை ஊக்குவிப்பது குறித்து சமூக நலக் கூட்டங்களின் மூலம் எடுத்துரைத்தல் ஆகியவையாகும். இச்சங்கங்களின் இம்மாதிரியான நடவடிக்கைகள் மூலம் மீனவ மகளிருக்கு கூடுதலான வருவாய் ஈட்டவும் கல்வி அறிவினை மேம்படுத்தவும் உதவியாக உள்ளது.

11. விரிவாக்கம் மற்றும் கல்வித் திட்டம்.— விரிவாக்கம். மற்றும் கல்வித் திட்டம் மீன்வளத்தை மேம்படுத்தவும் மீனவர் சமுதாயம் சமூக பொருளாதாரத்தில் மேம்படு வதற்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. மீன் பண்ணை அமைத்தல் மற்றும் மீன் வளர்ப்பில் நல்ல தொழில் யுக்திகளை

பயன்படுத்த தனியாருக்கும் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கும் செய்திப் படங்கள் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது. விரிவாக்கத் திட்டத்தின் மூலம் மாநில மற்றும் மாவட்ட அளவில் கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இதைத் தவிர மீனவர்கள் மற்றும் மீனளத் தொழில் ஈடுபாடு கொண்ட தனியாருக்கு மீனளத் தொழில் நுட்பம் மற்றும் இதர செய்திகள், அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக் காட்சி மூலம் வழங்கப்படுகின்றன. பல்வேறு திட்டங்கள் மூலம் மீன் வளத்தில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்தும் அரசு மற்றும் பிற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் நிதி உதவிகள் குறித்த விவரம் விரிவாக்கப்பணி மூலம் தெரிவிக்கப்படுகிறது.

12. மெரினா கடற்கரையில் கடல் மீன் அருங்காட்சியகம் ஏற்படுத்துதல் (Oceanarium) :— இந்த கடல் மீன் அருங்காட்சியகத்தில் பல்வகை கடல் வாழ் உயிரினங்களின் வாழ்க்கை முறை காட்சிப் பொருளாக விளக்கப்படும். இந்த அருங்காட்சியகம் சிறார் மற்றும் பெரியோருக்கு பொழுதுபோக்குச் சாதனமாக மட்டும் விளங்காமல் கடல் மீனள ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான மையமாக விளங்கும். சென்னைக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் இடமாக விளங்கும். சென்னையில் அமைக்கப்படும் இந்த காட்சியகம் மாநகரத்தின் அழகினை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பொழுது போக்கு மற்றும் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையமாகவும் விளங்கும். தற்போது மெரினாவில் ஒரு மீன் காட்சியகம் உள்ளது. இதற்கு பொருத்தமானதொரு இடம் தேர்வு செய்யப்படும். இதற்கான சாத்தியக் கூற்றினை ஆராய்ந்திட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் 1991-92 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்.

முன்னுரை :

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. முதலில் இக்கழகம் 11—6—1974 அன்று வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் என 1956 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. பிறகு 1—10—1977 அன்று வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இதன் பதிவு அலுவலகம் சென்னை-6 ஆயிரம் விளக்கு, கிரீம்ஸ் சாலையில் 67 எண்



கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் மூலதனம் ரூ. 500 இலட்சம். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 292 இலட்சம்.

2. இக்கழகம் தற்போது கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

(1) கிழக்கு கடற்கரையில் விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு நான்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு நாவாய்களை இயக்குதல்.

(2) மீன்பிடிப்பு துறைமுகங்களில் மீனவர்களுக்கு டீசல் விற்பனை செய்தல்.

(3) சாத்தனூர், பவானிசாகர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி நகர், உப்பார், பாலார், பொறுந்தலாறு மற்றும் மஞ்சளாறு ஆகிய இடங்களிலுள்ள நீர்த்தேக்கங்களில் பராமரித்தல் மற்றும் தரமான, விரைவாக வளரும் மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல் மற்றும் வணிக ரீதியில் மீன் பிடிப்பு நடத்திப் பராமரித்தல்.

(4) நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல்.

(5) சென்னை, மண்டபம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்ப்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களைப் பராமரித்தல்.

(6) சில்லரை மீன் விற்பனை நிலையங்களின் மூலம் சென்னை மற்றும் இதர முக்கிய நகரங்களில் தரமான மீனை, சுகாதாரமான முறையில், நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்தல்.

(7) இராயபுரத்திலுள்ள மீன்வலை தயாரிப்பு நிலையத்தை நிர்வகித்தல் மற்றும் மீனவர்களுக்கு தரமான வலைகளை தயாரித்து விற்பனை செய்தல்.

(8) வணிக ரீதியில் இரால் மீன் குஞ்சுகளை நிலங் கரையில் உற்பத்தி செய்து இரால் வளர்ப்போர்களுக்கு விற்பனை செய்தல்.

(9) ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அடிப்படையில் வளர்ப்பு மூத்து தயாரித்தல்.

53-332—39

3. கடல் வளம் :

இரால் மீன்பிடிப்பு : தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், "தஞ்சை" மற்றும் "நெல்லை" எனும் மெக்ஸிகோவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரு மீன்பிடி நாவாய்களின் மூலம் விசாகப்பட்டினத்தினை மையமாகக் கொண்டு இரால்மீன் பிடிப்பு நடத்தி வந்தது. 1990-91 மத்தியில் மேற்கு வங்க மீன்வளர்ச்சிக் கழகத்திடமிருந்து இரு பழைய மீன்பிடி நாவாய் களை இக்கழகத்தில் ரூ. 25.00 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது. அதில் ஒன்று சில பழுது பார்ப்புப் பணிகளுக்கு பின்பு டிசம்பர் 1990-ல் இயக்கி வைக்கப்பட்டது. மற்றொன்று பழுதுகள் சரி செய்த பின் 1991 ஜூலை திங்களில் இயக்கி வைக்கப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டில் நாவாய்கள் மூலம் 76 டன்கள் இரால் மற்றும் 87 டன்கள் மீன் பிடிக்கப்பட்டு ரூ. 102.40 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் முடிய 12.12 டன்கள் இராலும் 5.95 டன்கள் மீனும் பிடிக்கப்பட்டு ரூ. 20.28 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

4. உள்நாட்டு மீன்வளம்:

(1) நீர்த்தேக்கங்கள் : கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் மீன் வளத்திற்கான பராமரிப்பு நீண்ட கால குத்தகை அடிப்படையில் இக்கழகத்திடம் உள்ளது.

(1) சாத்தனூர் அணை.
(2) பவானிசாகர்.
(3) ஆழியார்.
(4) அமராவதி.
(5) திருமூர்த்தி.
(6) உப்பார்.
(7) மஞ்சளாறு.
(8) பாலாறு-பொறந்தலாறு.

1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் 829 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 63.29 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன. 1991-92 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முடிய 216.37 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 22.94 லட்சங்கள் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

(2) மீன் குஞ்சு உற்பத்தி—சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் பண்ணைகளில், மீன்குஞ்சு உற்பத்தியுடன் மீன் குஞ்சு வளர்ப்பு



பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆழியார், அமராவதி, திருமூர்த்தி, மஞ்சளாறு, பாலாறு-பொறந்தலாறு மற்றும் உப்பாறு பண்ணைகளில் ம்ன் குஞ்சு வளர்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தூண்டுதல் முறை மூலம் தரமான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து ,விரலளவு குஞ்சுகளாக வளர்த்து இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவது மட்டுமின்றி, மீன்துறைக்கும் பயன்படுத்தப்பட்டன. 1990-91 ஆம் ஆண்டில் 398 இலட்சம் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. 1991 ஆம் ஆண்டில் ஜூலை திங்கள் முடிய 242 இலட்சங்கள் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டது.

5. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் 5 பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களையும், 3 மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகிறது. இந்த ஐந்து பனிக்கட்டி உற்பத்தி நிலையங்களும் தினசரி 38 டன் எடையுள்ள பனிக்கட்டிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. சென்னை, மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று உலர வைப்பு பதனிடும் நிலையங்கள் தினசரி 20 டன் மீன்களை பதனிடும் திறன் கொண்டவை. இவற்றில் 160 டன் எடையுள்ள பதனிட்ட மீன்களை சேமித்து வைக்க முடியும். பதனிடும் நிலையங்கள் மூன்றும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. சென்னை மீன்பிடி துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள 50 டன் குளிர்பதன கிடங்கு மற்றும் 200 டன் உறைவைப்பு பதனிடும் கிடங்கும் ஆகியவை அடங்கிய 100 டன் உற்பத்தி திறன் கொண்ட பனிக்கட்டி நிலையமும் அடையாறில் அமைக்கப்பட்டுள்ள 50 டன் உறைவைப்பு பதனிடும் கிடங்கும் விரைவில் விற்பனை அடிப்படையில் இயக்கி வைக்கப்படும். 1990-91 ஆம் வருடம் 5,022 டன் பனிக்கட்டி உற்பத்தி செய்யப்பட்டதுடன், ரூ. 25.83 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முடிய 1,577.52 டன் பனிக்கட்டி உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 8.79 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது.

6. டீசல் விற்பனை நிலையங்கள் : மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகுகளை இயக்குபவர்கள் ஆகியவர்களின் நன்மைக்காக இக்கழகம் தூத்துக்குடி, மல்லிப்பட்டினம், இராயபுரம் மற்றும் பழையாறு ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களில் 5 டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 10.780 கிலோ லிட்டர் டீசல் ஆயில் விற்பனை செய்து ரூ. 12.12 இலட்சம் தரகுத் தொகையை இக்கழகம் ஈட்டியுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் ஜூலை திங்கள் முடிய 4,548.87 கிலோ லிட்டர் டீசல் ஆயில் விற்பனை செய்யப்பட்டு ரூ. 4.84 இலட்சம் தரகுத் தொகையாக ஈட்டியுள்ளது.

7. மீன் விற்பனை நிலையங்கள் :— இக்கழகம், சென்னை, மதுரை, கோவை, பெரியார், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 86 சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1990-91 ஆம் ஆண்டில் 941 டன்கள் மீன்கள் விற்பனை செய்ததோடு ரூ. 136.04 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முடிய 253.98 டன் மீன் விற்பனை செய்யப்பட்டு ரூ. 47.38 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8. உலர் மீன் இடங்கு, தூத்துக்குடி.— கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி மேம்பாட்டுக்குழு நிறுவனத்தால் உலர் மீன் ஏற்றுமதியாளர்கள் நலனுக்காக தூத்துக்குடியில் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கை இக்கழகம் பொறுப் பேற்று நடத்தி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 0.37 இலட்சம் வாடகையாக வசூலிக்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில் ஜூலை மாதம் முடிய ரூ. 0.15 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

9. மீன் வலை தயாரித்தல்.— இராயபுரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 54 டன் மீன் வலை தயாரிக்கும் திறனுடன் இயக்கி வரும் மீன் வலை தயாரிப்பு நிலையத்தில் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 63.18 இலட்சம் மதிப்புள்ள 54 டன் நைலான் வலையும் எச்.டி.பி.இ. வலையும் உற்பத்தி செய்யப் பட்டு விற்பனை செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் ஜூலை மாதம் முடிய 18.38 டன் நைலான் மற்றும் எச்.டி.பி.இ. வலைகள் தயாரிக்கப்பட்டு ரூ. 23.55 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

10. இறால் மீன்குஞ்சு பொறிப்பகம்.— இக்கழகம் சென்னைக்கு அருகிலுள்ள நீலங்கரையில் ஆண்டுதோறும் 16 மில்லியன் உற்பத்தித் திறன் உடைய இறால் மீன்குஞ்சு பொறிப்பகம் ஒன்றை இயக்கி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 8.00 இலட்சம் இறால் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 0.68 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முடிய 1.45 இலட்சம் இறால் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 0.15 இலட்சம் வருவாய் ஈடடப்பட்டுள்ளது.

11. 1990-91 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்டுள்ள புது திட்டங்கள் — வளர்ப்பு முத்து தயாரித்தல்.— அரசு



அமைக்கப்பட்ட மதிப்பீடு கமிட்டியில் பரிந்துரைத்துள்ளபடி இக்கழகம் 1—8—1990 முதல் மண்டபத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அடிப்படையில் வளர்ப்பு முத்துக்களை, தயாரிக்கும் திட்டத்தினை மீண்டும் துவக்கியுள்ளது. தூத்துக்குடியின் தொலைவிலுள்ள இயற்கை படுகைகளிலிருந்து இதுவரை 6.37 இலட்சம் முத்துச் சிப்பிகள் சேகரிக்கப்பட்டு அவைகளில் 0.71 இலட்சம் முத்துச் சிப்பி களில் மே 1991 திங்கள் முடிய உட்கரு பொருத்தப்பட்டது.

29—6—1991 அன்று நடைப்பெற்ற சோதனை அறு வடையின்போது 9,659 முத்துச்சிப்பிகளிலிருந்து பலதரப் பட்ட அளவுகள் மற்றும் வகைகளிலான 2,558.25 காரட்டு முத்துக்கள் சேகரிக்கப்பட்டது.

(2) தொழில் நுட்ப ஆலோசனைப் பிரிவு :

பலதரப்பட்ட மீன்வள திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகள் தயாரித்தலில் நல்வாய்ப்புடைய நிறுவனங் களுக்கு உதவும் பொருட்டு தொழில் நுட்ப ஆலோசனைக் குழு ஒன்றை இக்கழகம் 1—7—1990 முதல் துவக்கியிருக் கிறது.

12. கழகத்தின் எதிர்கால திட்டங்கள் :

(1) மேல்நாட்டு மீன்பிடி கப்பல்களை ஒப்பந்த முறையில் இயக்குதல்.— இக்கழகம் தனித்த இந்தியப் பொருளாதார எல்லைக்குள் ஒப்பந்த முறையில் மீன்பிடிப்பதற்காக 4 அயல்நாட்டு ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களை இயக்க இந்திய அரசின் அனுமதிக்காக விண்ணப்பித்திருப்பதுடன் அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

(2) இறால் வளர்ப்பு பண்ணை அமைத்தல்.— இராம நாதபுரம் மாவட்டம், காரங்காட்டில் 11 ஹெக்டேர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இறால் வளர்ப்பு பண்ணையை மீன் துறையிடமிருந்து கழகம் எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது. அயல்நாட்டு நிபுணத்துவத்துடன் ஒரு ஹெக் டேரில் குறைந்த பட்சம் 5 டன் இறால்களை உற்பத்தி செய்யும் வகையில் இது முனைப்புடன் இயக்கி வைக்கப் படும்.

13. கழகத்தின் நிதி நிலை.— 1990-91 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ. 398.51 இலட்சம் செலவினத்திற்கு ரூ. 415.96 இலட்சம் வருமானமாக ஈட்டியுள்ளது. நிகர வருவாய் ரூ. 11.45 இலட்சமாகும். 1991-92 ஜூலை மாதம் முடிய மொத்த வருவாய் ரூ. 133.52 இலட்சத்தில் செலவுத் தொகை ரூ. 134.47 இலட்சமாக உள்ளது.

## இணைப்பு - 4.

(119ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கால்நடை பராமரிப்புத் துறை.

### கால்நடை பராமரிப்புத் துறையின் கொள்கை விளக்கம்.

### 1991—92

### கோரிக்கை எண்.— 22

### பாகம் 1.

### பொது விபரம்.

**1. முன்னுரை :**

தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு கிராமப்புற விவசாயிகளின் வாழ்க்கையிலும், கிராமப்புற பொருளாதாரத்திலும் வெகு காலமாக இன்றியமையாததாக இருந்து வருகிறது. மாடுகள் விவசாயத்திற்குத் தேவைப்படும் உழவுச் சக்தியைக் கொடுப்பதோடு, இயற்கை உரமும் கொடுக்கிறது. சரக்குகளை ஏற்றிச் செல்லவும் பயன்படுகிறது. தவிர, கால்நடை உற்பத்தி பொருள்களான பால், இறைச்சி மற்றும் முட்டை பொது மக்களுக்கு இன்றியமையாததாக தேவைப்படும் புரதச் சத்து அடங்கிய உணவுப் பொருள்களைக் கொடுப்பதோடு, கிராமப்புற பொருளாதாரத்திற்கும் உதவியாக உள்ளது.

சில வருடங்களுக்கு முன், கால்நடை வளர்ப்பு நல்ல லாபகரமாக இல்லாமல் இருந்து வந்தது. தமிழ்நாட்டிலிருந்து பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்ததே இதற்குக் காரணமாகும். இருப்பினும் சமீப காலங்களில் தரம் உயர்த்தப்பட்ட இனங்களினால் இந்நிலை மாறி வருகிறது. நல்ல



முறையில் அமைக்கப்பட்ட கறவை பசு பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள் மற்றும் கோழிப் பண்ணைகள் தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் தோன்றி பொது மக்களுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்து அடங்கிய உணவுப் பொருள்களைப் கொடுப்பதோடு கிராமப்புரங்களிலுள்ள ஏராளமான விவசாய குடும்பங்களுக்கு உபரி வருமானம் கொடுக்கக்கூடிய உப தொழிலாக மாறியுள்ளது. கால்நடை வளர்ப்பின் மூலம் கிடைக்கக் கூடிய உபரி வருமானத்தினால் கிராமப்புற பொருளாதாரம் மேன்மையடைந்துள்ளது.

தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறை செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பலனாக தமிழ்நாட்டிலுள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளில் உற்பத்தித் திறன் அதிகரித்த காரணத்தால், தமிழ்நாட்டில் பால், இறைச்சி, முட்டை உற்பத்தியும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்குக் கிடைக்கக் கூடிய பாலின் அளவு 1978-79 ஆம் ஆண்டு 99 கிராமாக இருந்தது. 1990-91 ஆம் ஆண்டு 169 கிராமாக உயர்ந்துள்ளது. மற்றும் ஒரு வருடத்திற்கு ஒரு நபருக்கு கிடைக்கக் கூடிய முட்டையின் அளவு 16-லிருந்து 46 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகள் மிகவும் பிரபலமடைந்து தற்போது அகில இந்திய அளவில் மொத்த முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. கோழிப் பண்ணைகளைப் பராமரிப்பதன் மூலம் தமிழ்நாட்டில் ஏராளமான விவசாயக் குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனடைந்து வருகின்றன.

கால்நடை பராமரிப்புத் துறை தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குச் சிகிச்சையும், நோய்த் தடுப்புப் பணிகளையும் பல்வேறு தால்நடை நிலையங்கள் மூலமாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள மாடுகள், ஆடுகள், வெள்ளாடுகள் மற்றும் கோழிகளை தொற்று நோயிலிருந்து காப்பாற்றுவது இலாகாவின் முக்கிய பணியாகும். இவ்விதம் கால்நடைகள் மற்றும் கோழிகளை தொற்று நோயிலிருந்து காப்பாற்றுவதால் அவைகள் நல்ல உடல் நிலையில் பராமரிக்கப்பட்டு அவைகளுடைய பால், இறைச்சி, முட்டை உற்பத்தியும் நல்ல முறையில் கிடைத்து வருகிறது. இதைத் தவிர கால்நடை பராமரிப்புத் துறை தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களிலுள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி அதன் உற்பத்தியை அதிப்படுத்தி வருகிறது. பசும் தீவன உற்பத்தி கால்நடை

வளர்ப்பில் ஒரு முக்கிய அம்சமாகும். எனவே, கால்நடை பராமரிப்புத் துறை கிராமப்புறங்களில் பசும் தீவன உற்பத்தியை பெருக்குவதற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கால்நடைகளின் நலனைக் கருதி, பொதுவாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் தவிர கால்நடை பராமரிப்புத் துறை தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களில் ஏராளமான விவசாயக் குடும்பங்களின் நன்மையைக் கருதி பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

## பகுதி 2.

### துறையின் முக்கியப் பணிகள்.

### I. ஆவின அபிவிருத்தி.

**1. ஆவினங்களின் எண்ணிக்கை :**

தமிழ் நாட்டில் மாடுகள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை வெகு அதிக அளவில் உள்ளது. 1989 ஆம் ஆண்டு கால்நடைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்த பசுக்கள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை முறையே 9.35 மில்லியன், 3.13 மில்லியன் ஆகும். தமிழ்நாட்டில் இனவிருத்திக்கு தகுதியான பசுக்கள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கை முறையே 31.48 இலட்சம், 16.17 இலட்சம் ஆகும். கால்நடை பராமரிப்புத் துறை கிராமப் புறங்களிலுள்ள நாட்டுப் பசுக்களின்/எருமைகளின் தரத்தை உயர்த்துவதற்காக அயல் இனங்களான ஜெர்சி மற்றும் பிரிசியன் மற்றும் முர்ரா பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி திட்டம் ஒன்றை வெகு காலமாக செயல்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் பலனாக ஏராளமான கலப்பின பசுக்களும் தரம் உயர்த்தப்பட்ட எருமைகளும் தற்போது உள்ளன.

**2. ஆவின இனவிருத்தி கொள்கை.**

(அ) மாநில அரசின் ஆவின இனவிருத்தி கொள்கை பின் வருமாறு :-

உள்நாட்டு ஜாதிப் பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி மாடுகளை அவை அதிகமாகக் காணப்படும் பாகங்களில் தெரிவு செய்யப்பட்ட முறையில் இனவிருத்தி செய்தல் (Pure Breeding of Kangeyam Umbalachery Breeds in the Breeding Tracts).





(ஆ) நாட்டின பசுக்களை அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய அயலின ஜெர்சி மற்றும் பிரிசியன் பொலி காளைகளை கொண்டு இனவிருத்தி செய்தல்.

(இ) கிராமப் புறங்களிலுள்ள எருமைகளை முர்ரா பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்து தரம் உயர்த்தல்.

(ஈ) தமிழ்நாட்டில் தற்போதுள்ள கலப்பினப் பசுக்களை கலப்பின காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்தல்.

தவிர பொதுக் கொள்கையாக ஜெர்சி இன பொலி காளைகளை இனவிருத்தி உபயோகத்திற்காக கன்னியாகுமரி மாவட்டம் தவிர மற்ற எல்லா சமவெளி பகுதிகளிலும் பிரிசியன் காளைகளை எல்லா மலைப் பகுதிகளிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சமீப காலங்களில் நகர் பகுதிகளில் பசுக்களுக்கு நல்ல போஷாக்கு கிடைக்கும் காரணத்தால் நகரப் பகுதியிலுள்ள பசுக்களை, பிரிசியன் இனப் பொலி காளைகளைக் கொண்டும் இனவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

**3. தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் :**

பசுக்கள் மற்றும் எருமைகளின் ஒருங்கிணைந்த அபி விருத்திக்காக கால்நடை பராமரிப்புத் துறை 12 இடங்களில் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. இத்திட்டம் மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, பன்ருட்டி, தாம்பரம், சிதம்பரம், உடுமலைப்பேட்டை, ஈரோடு முதலிய பகுதி களில் செயல்பட்டு வந்தது. இத்திட்டப் பகுதிகளில் உயர் ரக ஜெர்சி, பிரிசியன் பொலி காளைகளைக் கொண்டு செயற்கைமுறை இன அபிவிருத்தி பணியும் பசுந் தீவன உற்பத்திக்காக முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. இத் திட்டப்பகுதியிலுள்ள 11.74 இலட்சம் இனவிருத்திக்குத் தகுதி வாய்ந்த பசுக்களும், எருமைகளும் 26 மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் மற்றும் 687 கிளை நிலையங்கள் வாயிலாக பயன்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவுற்றல் செய்வதோடு சினை பரிசோதனையும் பிறந்த கன்றுகள் சரிபார்க்கும் பணியையும், பசுக்கள் மற்றும் எருமைகளின் உடல் நலம் பேணும் பணிகளோடு, பசுந்தீவன உற்பத்தி பணிகளையும்

இணைத்து செயல்படுத்துகிறார்கள். திட்டப் பகுதிகளில் 1990-91 ஆம் வருடம் 6,93,233 செயற்கை முறை கருவுற்றல் செய்யப்பட்டுள்ளன. 1,77,379 கலப்பின கன்றுகளும் தரம் உயர்த்தப்பட்டு எருமை கன்றுகளும் பிறந்த உடன் சரிபார்க்கப்பட்டுள்ளன. தவிர 145.16 இலட்சம் தீவன பயிர் நறுக்குகளும் 21.89 இலட்சம் தீவன மரக் கன்றுகளும் 168.49 மெட்ரிக் டன் தீவன விதைகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

4. கேந்திர இராமத் திட்டம் :

தமிழ்நாட்டில் நாகர்கோவில், கோவில்பட்டி, சிவகங்கை இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, மன்னார்குடி பகுதிகளில் கேந்திர கிராமத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இத்திட்டம் 62 கேந்திர கிராம நிலையங்கள் மற்றும் 583 கிளை நிலையங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் திட்டப் பகுதியிலுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளை செயற்கைமுறை கருவூட்டல் மூலம் இன அபிவிருத்தி செய்து பிறக்கும் கன்றுகளின் உற்பத்தி திறனை பெருக்குவதே ஆகும். தவிர, திட்டப் பகுதியிலுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு, கால்நடை உடல்நலம் பேணும் பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன.

1990-91 ஆம் வருடம் 4,64,234 செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளன. அதன் பயனாக, 1,03,711 கலப்பின கன்றுகள் பிறந்த உடன் சரிபார்க்கப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த உலக வங்கி உதவியுடன் கூடிய கால்நடை வளர்ப்பு திட்டங்களை கால்நடை பராமரிப்புத் துறை செயல்படுத்துகிறது. மாநிலம் முழுவதும் அனைத்து நிலையங்களுக்கும் ஆவினம் மற்றும் எருமையின வளர்ச்சியையும், செயற்கைமுறை கருவூட்டலில் உறைவிந்து உத்தியை விரிவடையவும் தனிக்கவனம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் கால்நடை தீவினப் பெருக்கம், கால்நடை நோய்த் தடுப்பு பணியுடன் இணைந்து செயல்படுகிறது. எனவே குறிப்பிட்ட இடங்களில் தீவிர கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராம திட்டங்களில் பணிபுரிந்த பணியாளர்கள் அனைவரையும் 20 மாவட்டங்களில் பணியில் அமர்த்தி கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவனப் பெருக்கப் பணியினை தொடர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



5. பசுக்கள் மற்றும் எருமைகளின் இனப்பெருக்கம்:

தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறை 2,770 நிலையங்கள் மூலமாக பசுக்கள் மற்றும் எருமைகளின் இன அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது இந்த செயற்கைமுறை கருவூட்டல் பணி 2,770 நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றுள் 1,936 நிலையங்களில் உறைவிந்து உபயோகப்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 834 நிலையங்களில் பதப்படுத்தப்பட்ட திரவ விந்து உபயோகப்படுத்தப்படுகிறது. பசுக்கள் மற்றும் எருமைகளின் இன விருத்தியில் உறைவிந்து உபயோகப்படுத்தலிலுள்ள அனுகூலங்களைக் கருத்தில் கொண்டு கால்நடை பராமரிப்புத் துறை உறைவிந்து உபயோகத்தை எல்லா நிலையங்களுக்கும் விரிவுபடுத்த உள்ளது.

6. பொலி காளை நிலையங்கள்:

கால்நடை பராமரிப்புத் துறையில் தற்போது 38 இடங்களில் பொலி காளை நிலையங்கள் உள்ளன. இந்தப் பொலி காளை நிலையங்களில் ஜெர்சி, பிரிசியன், காங்கேயன், முர்ரா பொலி காளைகள் வைக்கப்பட்டு அவைகளிலிருந்து விந்து தயாரிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட விந்து செயற்கை முறை கருவூட்டல் பணிக்காக பல்வேறு செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இப்பொலி காளை நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் விந்தின் தரம் ஆய்வு செய்யப்பட்டு அதிக அளவில் பசுக்கள் சினையாகி கன்றுகளை பிறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. பசுக்கள் மற்றும் எருமைகளின் செயற்கைமுறை கருவூட்டல் பணியில் உறைவிந்து உபயோகம்:

கால்நடை பராமரிப்புத் துறையில் நான்கு உறைவிந்து நிலையங்கள் —

(1) ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
(2) அபிஷேகப்பட்டி (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் )
(3) ஓசூர் (தர்மபுரி மாவட்டம்)
(4) உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

ஆகிய இடங்களில் செயல்புரிந்து வருகின்றன. உயரின அயலின ஜெர்சி, பிரிசியன், பொலி காளைகள் கலப்பினப் பொலிக்காளைகள் சிந்தி, காங்கேயம், அலிகார் பொலி காளைகள் மற்றும் முர்ரா எருமை பொலிகாளைகள், இந்த உறைவிந்து உற்பத்தி நிலையத்தில் பராமரிக்கப்பட்ட அவற்றிலிருந்து உறைவிந்து தயாரிக்கப்படுகிறது. இதந்

வருடம் முதல்முறையாக உம்பளாச்சேரி பொலி காளையிலிருந்து உறைவிந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள பழைய பொலிகாளைகளை மாற்றி புதிய பொலிகாளைகள். வாங்குவதற்காக ரூ. 50 இலட்சம் பணம் வழங்கி இருந்தது. இந்த நிதியை உபயோகப்படுத்தி கால்நடை பராமரிப்புத் துறை டென்மார்க் மற்றும் ஜெர்மன் நாடுகளிலிருந்து மிக அதிகத் தரம் வாய்ந்த, மிக அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய திறன் பெற்ற குடும்பங்களிலிருந்து 140 உயரின ஜெர்சி மற்றும் பிரிசியன் பொலிகாளைகளை இறக்குமதி செய்துள்ளது. இந்தப் பொலிகாளைகள் ஈச்சங்கோட்டை, உதகமண்டலம் மற்றும் ஒசூர் உறைவிந்து நிலையங்களில் வைக்கப்பட்டு உறைவிந்து உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுளன்து.

தமிழ்நாடு அரசு, பசுக்கள், எருமைகளின் செயற்கைமுறை இன அபிவிருத்தியில் உறைவிந்து உபயோகத்தை மேலும் 300 நிலையங்களுக்கு விஸ்தரிக்க 1990-91-ஆம் ஆண்டில் ரூ. 47.20 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த வருடம் 10.92 இலட்சம் டோஸ் உறைவிந்தும் 1.32 லிட்டர் திரவ நைட்ரஜனும் இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் தயாரிக்கப்பட்டு பல்வேறு நிலையங்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது.

8. உட்கரு மாற்றல் உத்தியை அறிமுகப்படுத்துதல்:

ஈச்சங்கோட்டை அயலின கால்நடை வளர்ப்பு பண்ணையில் ஆரம்பிக்கப்பட்ட உட்கரு மாற்றம் நிலையம் இந்த வருடமும் தொடர்ந்து பணி செய்து வருகிறது. உட்கல மாற்றல் பணிக்காக எல்லா ஆரம்ப வேலைகளும் முடிக்கப் பட்டு பசுக்களிலிருந்து கரு சேகரிக்கும் பணியும் ஆரம்பிக்கப் படடுள்ளது.

தேசிய பால்வள மேம்பாட்டுக் கழகம் உட்கரு மாற்றம் பயிற்சி திட்டத்தை இந்த வருடம் ஒசூர் மற்றும் ஈச்சங் கோட்டையிலுள்ள கால்நடை அலுவலர்கள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்களின் பயிற்சிக்காக ஒசூர் பண்ணையில் ஜனவரி, பிப்ரவரி 1991 மாதங்களில் ஏற்பாடு செய்தது.

9. வம்சாவழி ஆய்வுத் திட்டம் :

சிந்தி இன ஆய்வு ஒசூர் பண்ணையிலும், முர்ரா எருமை பொலிகாளைகளை தேர்ந்தெடுக்க ஒரத்தநாடு பண்ணையிலும் ஒரு வம்சாவழி ஆய்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



10. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கால்நடை அபிவிருத்தி திட்டம் :

கால்நடை பராமரிப்புத்துறை இதுவரை செயல்படுத்திய கால்நடை அபிவிருத்தித் திட்டங்களின் பலனை சீராக வைத்துக்கொள்ளவும் மேலும் பசுக்களில் பால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும் ஒரு கால்நடை அபிவிருத்தி திட்டம் தயாரித்துள்ளது. இந்தத் திட்டத்தை உலக வங்கி பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை செயல்படுத்த தேவைப்படும் நிதி ரூ. 46.62 கோடி வழங்க முன்வந்துள்ளது. இந்தத் திட்டம் 1991-92-லிருந்து ஏழு வருட காலத்திற்குச் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கங்கள் பின்வருமாறு :—

1. ஈச்சங்கோட்டை மற்றும் ஒசூர் உறைவிந்து நிலையங்களை பலப்படுத்தி அந்த நிலையங்களில் உறைவிந்து உற்பத்தியை அதிகப்படுத்துதல்.

2. ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு மற்றும் ஒசூர் பண்ணைகளிலுள்ள வசதிகளைப் பெருக்கி நல்ல தரமான பொலிகாளைகள் மற்றும் கலப்பின பொலிகாளைகளை உற்பத்தி செய்தல்.

3. பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு உறைவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டலை தமிழ்நாட்டிலுள்ள 3,063 நிலையங்களுக்கும் விஸ்தரித்தல்.

4. தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து நிலையங்களில் உறைவிந்து சேமிப்பு நிலையங்கள் (Banks) ஏற்படுத்தி அந்த நிலையங்களில் உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் சேகரித்து வைத்து மற்ற நிலையங்களுக்கு விநியோகித்தல்.

5. தமிழ்நாட்டில் பசுந்தீவன உற்பத்தியை தீவிரப் படுத்துதல்.

6. கால்நடை பராமரிப்பில் விஸ்தரிப்பு பணிகளை தீவிரப்படுத்துதல்.

7. மண்டல நோய் புலனாய்வு பிரிவும், கால்நடை நோய் பரவுவதை கண்டறியவும் பிரிவு அமைத்தல்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலமாக தமிழ்நாட்டிலுள்ள பசுக்களின் பால் உற்பத்தி திறன் வெகுவாக அதிகரித்து கறவை பசுக்கள் பராமரிப்பு நல்ல வருவாயை கொடுக்கக்கூடியதாக மாறும்.

**11. டானிடா திட்டம் :**

கால்நடை பராமரிப்புத்துறை, புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் ஒன்றியத்தில் டானிடா நிதி உதவியுடன் ஒரு கால் நடை வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்தத் திட்டப் பகுதியிலுள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டத்தில் ஏழை விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பிலும் சம்பந்தப்பட்ட மற்ற துறைகளிலும் தீவிர பயிற்சி அளிப்பது முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் ரூபாய் 4.4 கோடி செலவில் 5 வருட காலத்திற்கு செயல்படுத்தப்படும்.

**12. மக்கள் தொடர்பு முகாம் :**

கால்நடை பராமரிப்பு செயற்பாடுகளை உள்ளார்ந்த கிராம மக்கள் அறிவதற்காக களப்பணியாளர்கள் கிராம அளவில் மக்கள் தொடர்பு முகாம்களை முறையாக நடத்தி வருகின்றனர். சிகிச்சை அளித்தல், பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், தடுப்பூசிகள் போடுதல், கன்றுகள், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் போன்ற வழக்கமான பணிகளை ஆற்றுவதுடன் கால்நடை பராமரிப்பினைப்பற்றி அறிவுறுத்தல் சாதனமாகவும் மக்கள் தொடர்பு முகாம் பயன்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 14,621 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

## பாகம்-II.

**1. செம்மறி ஆடு வளர்ப்பு :**

தமிழ்நாட்டிலுள்ள மொத்த செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 58.81 இலட்சமாகும். தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் செம்மறி ஆடுகள் வளர்ப்பு பிரபலமடைந்து வந்துள்ளது. இந்தச் செம்மறியாடு வளர்ப்பு வறட்சி காலங்களில்கூட ஏழை விவசாயிகளுக்கு வருவாய் பெற்றுத் தந்துள்ளது. கிராமப்புற விவசாயிகளின் வாழ்வில் செம்மறி ஆடு வளர்ப்புக்கு உள்ள முக்கியத்துவத்தைக் கணக்கில் கொண்டு கால்நடை பராமரிப்புத் துறை பல்வேறு செம்மறியாடு வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம், தீவிர கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.



**2. ஆட்டுப் பண்ணைகள் :**

கிராமப்புறங்களிலுள்ள செம்மறி ஆடுகளின் தரத்தை தெரிவு செய்யப்பட்ட இனவிருத்தி மூலம் (Selective Breeding) அபிவிருத்தி செய்து அதன் மூலம் செம்மறி ஆடுகளின் இறைச்சி உற்பத்தி தரத்தை அதிகரிக்கலாம். எனவே கால் நடை பராமரிப்புத்துறை சின்னசேலம் (தென்னாற்காடு மாவட்டம்), சாத்தூர் (காமராஜர் மாவட்டம்) மற்றும் புதுக்கோட்டை, செட்டிநாடு, அபிஷேகப்பட்டி, ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணைகளில் செம்மறி ஆடு வளர்ப்பை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள செம்மறி ஆடு இனங்களான கீழ்க்கரைசல், மேச்சேரி, மாண்டியா, இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர் இன, ஆடுகள் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு தெரிவு செய்யப் பட்ட இனவிருத்தி (Selective Breeding) செய்யப்படுகின்றது. இவ்விதம் இனவிருத்தி செய்யப்பட்ட ஆடுகள் தமிழ்நாட்டில் பல்வேறு பாகங்களிலுள்ள விவசாயிகளுக்கு கிராமப்புற செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப் படுகின்றன.

**3. செம்மறி ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் :**

ஆடு வளர்ப்பு பெரும்பாலும் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள் ஆகியோரின் பராமரிப்பிலேயே உள்ளது. இந்த விவசாயிகள் குறுகிய காலத்தில் எல்லா உள்ளிடுகள் மற்றும் ஆடுகளுக்குத் தேவைப் படும் வசதியைப் பெற்றால்தான் ஆடு வளர்ப்பை லாபகர மாக நடத்த முடியும். ஆகவே, செம்மறி ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் மாவட்டத்தில் பல்வேறு பாகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 1,655 கூட்டுறவு சங்கங் கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத்துறை செயல்படுத்தும் பல்வேறு ஆடு வளர்ப்பு திட்டங்களில் பயன் பெற இந்தக் கூட்டுறவு சங்க அங்கத்தினர்கள் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்.

**4. செம்மறி ஆடுகளுக்கு உடல்நலம் பேணும் பணி திட்டம் :**

ஆடுகளின் இறைச்சி உற்பத்தி திறன் அவற்றின் உடல் ஆரோக்கியத்தைப் பொருத்தது. ஆடுகளின் வயிற்றில் குடல் புழுக்கள் இருந்தால் ஆடுகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். அதனால் ஆடுகளின் உடல் எடை குறைந்து அவைகளின் இறைச்சி உற்பத்தியும் குறையும். இதனால் ஆடு வளர்ப்பில் விவசாயிகளுக்கு கிடைக்கும் வருவாயும் குறையும். ஆகவே செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட

வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, கால்நடை பராமரிப்புத்
துறை ஏழை விவசாயிகளின் ஆடுகளுக்கு அரசின் செலவிலேயே
குடற்புழு நீக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.
இந்த திட்டம் சேலம், தென்னாற்காடு, வடாற்காடு—அம்
பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், திருநெல்வேலி—
கட்டபொம்மன், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., சிதம்பரனார்
மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 1990-91-ல் ரூ. 25.50
இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது.

5. ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக் குழு நிதி உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் :

ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக் குழு நிதி உதவி
யுடன் செயல்படுத்தப்படும் இந்த செம்மறி ஆடு வளர்ப்புத்
திட்டம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆற்காடு—அம்பேத்
கார், திருவண்ணாமலை–சம்புவராயர், தென்னாற்காடு,
தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் திட்டப்
பகுதியிலுள்ள செம்மறி ஆடுகளின் இறைச்சி உற்பத்தித்
திறனை அதிகப்படுத்துவதே ஆகும். இந்த இறைச்சி உற்
பத்தித் திறனை அதிகரிக்க :

(1) உள்ளூர் செம்மறி ஆடு இனங்களைத் தெரிவு
இனவிருத்தி செய்தல் (Selective Breeding).

(2) உள்ளூர் இன செம்மறி ஆடுகள் அயலின நாடு
களிலிருந்து இறக்குமதி செய்த டார்செட் இன ஆடுகளைக்
கொண்டு இனவிருத்தி செய்தல்.

(3) செம்மறி ஆடுகளுக்கு வேண்டிய மேய்ச்சல்
வசதியை ஏற்படுத்துதல்.

(4) உடல்நலம் பேணும் பணிகளைத் தீவிரப்படுத்துவது
போன்ற பணிகள் செயல்படுத்தப்படும்.

அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டார்செட்
இன ஆடுகள் ஓசூர் கால்நடைப் பண்ணையில் வளர்க்கப்
படும். செம்மறி ஆடு கிடாக்களை உற்பத்தி செய்வதற்காக
இராணிப்பேட்டை, சின்னசேலம், ஓசூர் பண்ணைகளில் செம்
மறி ஆடு உற்பத்தி செயல்படுத்தப்படும். இந்தப் பண்ணை
களிலிருந்து தரம் உயர்ந்த கிடாக்கள் கிராமப்புற ஆடுகளின்
தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
இந்த திட்டத்தின் பலனாக ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள
ஏராளமான விவசாயிகள் பயன் பெறுவார்கள்.



III. வெள்ளாடு வளர்ப்பு :

தமிழ்நாட்டில் 57.20 இலட்சம் வெள்ளாடுகள் உள்ளன.
தமிழ்நாட்டில் வெள்ளாடு வளர்ப்பு விவசாயிகளிடையே
பிரபலம் அடைந்து வருகிறது. சில முற்போக்கு விவசாயிகள்
வெள்ளாடுகளை கொட்டில் முறையில் வளர்க்க ஆரம்பித்
துள்ளனர். தமிழ்நாட்டில் வெள்ளாடுகளின் இறைச்சி
மற்றும் பால் உற்பத்தி திறன் அதிகரிக்க அவைகளைத்
தெரிவு செய்யப்பட்ட இனவிருத்தி செய்தும் (Selective Breeding)
உயர் ரக வெள்ளாட்டோடு கலப்பின் விருத்தி செய்யவும்
வேண்டியுள்ளது. ஆகவே கால்நடைப் பராமரிப்புத் துறை
புதுக்கோட்டை, செட்டிநாடு மற்றும் சின்னசேலம் பண்ணை
களில் வெள்ளாடு வளர்ப்பு பண்ணைகள் ஆரம்பித்துள்ளது.
புதுக்கோட்டை பண்ணைகளில் தலைச்சேரி ஆடுகளும்,
சின்னசேலம், செட்டிநாடு ஆகிய பண்ணைகளில் ஜமுனாபாரி
ஆடுகளும் வளர்க்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் கொருக்கை
பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாட்டு பிரிவு ஒன்று ஏற்
படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பண்ணைகளில் இனவிருத்தி செய்த வெள்ளாடுகள்
தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பாகங்களிலுள்ள நாட்டின்
வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு
வழங்கப்படுகின்றன.

IV. (1) கோழி வளர்ப்பு :

கால்நடைப் பராமரிப்புத் துறை தமிழ்நாட்டில் 2 குஞ்சு
பொரிப்பு நிலையங்களையும் 27 கோழி விஸ்தரிப்பு நிலையங்
களையும் செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையங்களில்
வெள்ளை லகான் கோழி குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு
விவசாயிகளுக்கு புழக்கடை கோழிப் பண்ணைகள் வைக்க
(Backyard poultry units) வழங்கப் படுகிறது.
இந்த கோழி விஸ்தரிப்பு நிலையங்கள் விஸ்தரிப்பு
பண்ணைகளில் ஈடுபட்டு கிராமப்புற விவசாயிகளுக்கு கோழிப்
பண்ணைகள் அமைக்க உதவி வருகின்றன. தமிழ்நாட்டில்
வியாபார நோக்கோடு கோழிப் பண்ணைகள் ஆரம்பிக்கப்
படும் இந்தத் தருணத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையில்
இயங்கி வரும் கோழி விஸ்தரிப்பு நிலையங்கள் வியாபார
நோக்கோடு முட்டை உற்பத்தி நிலையங்களாகவும், முயல்
வளர்ப்பு பண்ணைகள் ஆகவும் மாற்றப்பட்டு உள்ளன.

(2) கோழி நோ[illegible] கண்டறியும் ஆய்வுக்கூடம் :

கோழிப்பண்ணை வைத்துள்ள விவசாயிகளுக்கு கோழி
நோயைக் கண்டறியவும் கோழி நோயைத் தடுக்க எடுக்க
வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவுரை கூறவும் ஒரு

கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஈரோட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த ஆய்வுக்கூடம் இந்தப் பகுதியில் கோழி நோய்களைக் கண்டறிந்து கோழி நோய்கள் பரவாமல் தடுக்க எடுக்க வேண்டிய முன் அறிவிப்பு நடவடிக்கையைப் பற்றி விவசாயிகளுக்கு விவரித்து உதவி வருகிறது. 1990-91ஆம் வருடம் இந்த ஆய்வுக் கூடத்தின் அலுவலர்கள் 502 கிராமங்கள் மற்றும் 971 தனியார் பண்ணைகளுக்குச் சென்று கோழி நோயைக் கண்டு அறியும் பணிகளில் ஈடுபட்டனர்.

V. பன்றி வளர்ப்பு :

பொதுவாக பன்றிகள் கிராமப்புறங்களிலுள்ள ஏழை விவசாயிகளின் பராமரிப்பிலேயே உள்ளது. கிராமப்புறங்களிலுள்ள நாட்டுப் பன்றிகளின் இறைச்சி உற்பத்தித் திறனை அதிகரிக்க அவற்றை உயர்ந்த ரக பன்றிகளான லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் (Laige white yoikshire) பன்றியுடன் இனவிருத்தி செய்வது அவசியம் ஆகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை சைதாப்பேட்டை (சென்னை), ஓசூர் மற்றும் புதுக்கோட்டை போன்ற இடங்களில் பன்றி பண்ணைகள் அமைத்து யார்க்ஷயர் பன்றிகள் வளர்த்து அவைகளை தெரிவு செய்யப்பட்ட இனவிருத்தி (Selective Breeding) செய்து வருகிறது. இந்தப் பண்ணைகளிலுள்ள பன்றிகள் கிராமப்புற விவசாயிகளுக்கு நாட்டுப் பன்றிகளின் தரத்தை உயர்த்துவதற்காக வழங்கப்படுகிறது. சிறப்பு கால்நடை இனவிருத்தி திட்டத்தின்கீழ் பயன் பெறும் விவசாயிகளுக்கு இந்தப் பண்ணைகளிலிருந்து பன்றிகள் வழங்கப்படுகின்றன.

VI. பசும் தீவண உற்பத்தி :

கால்நடை அபிவிருத்திப் பணிகளில் பசுந்தீவன உற்பத்தி ஒரு முக்கியமான பணி ஆகும். கறவைப் பசுக்களுக்கு அதிக அளவில் பசுந் தீவனம் கொடுத்து அடர் தீவனத்திற்கு ஆகும் செலவினைக் குறைத்தால்தான் கறவைப் பசு வளர்ப்பு நல்ல லாபகரமாக இருக்கும். ஆகவே கால்நடைப் பராமரிப்புத் துறை பசுந்தீவன உற்பத்திக்காக அதிக கவனம் செலுத்தி வந்துள்ளது. முக்கியமான தீவிர கால்நடை முனைப்புத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டப் பகுதிகளில் பசுந்தீவன உற்பத்திப் பணிகள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டப் பகுதியில் பணிபுரியும் கால்நடைப் பராமரிப்புத்துறை அலுவலர்கள், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பசுந்தீவன உற்பத்தியில் ஈடுபட்டு நிரந்தரமாக பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்வதற்காகத் தேவையான விஸ்தரிப்பு பணியில் ஈடுபட்டு பசுந்தீவன நறுக்குகள், பசுந்தீவன மரக்கன்றுகள், பசுந்தீவன விதைகள்





விவசாயிகளுக்கு விநியோகம் செய்கிறார்கள். தவிர கால்நடைப் பராமரிப்புத் துறை இடங்களில் தீவன விதை உற்பத்தி நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1990-91 ஆம் வருடம் 296.93 இலட்சம் பசுந்தீவன நறுக்குகள் 461.45 மெட்ரிக் டன் பசுந்தீவன விதைகளும், 38.75 இலட்சம் பசுந்தீவன மரக்கன்றுகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேலும் 1990-91-ல் யூரியாவைக் கொண்டு (Urea) வைக்கோலின் தரத்தை அதிகப்படுத்தும் தொழில் நுணுக்கத்தை கிராமப்புற விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்வதற்காக ரூ. 0.50 இலட்சம் செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இவ்விதம் வைக்கோலை யூரியாவை உபயோகித்து பயன்படுத்துவதால் வைக்கோலின் சத்து அதிகரிப்பதோடு பசுக்கள், எருமைகள் வைக்கோலை நல்ல முறையில் ஜீரணிக்கவும் முடிகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை இவ்விதம் செயல்படுத்தப்படும் பசுந்தீவன உற்பத்தித் திட்டங்களால் தமிழ்நாட்டில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்து அதனால் பசுக்கள், எருமைகள், பால் உற்பத்தியையும் அதிகரிக்கும். பால் உற்பத்தி விலையும் கணிசமாகக் குறையும்.

VII. சிறப்புத் திட்டங்கள் :

கால்நடைகள் வளர்ப்பின் மூலமாக கிராமத்தில் உள்ள ஏழை விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கத்துடன் பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்களை கால்நடை பராமரிப்புத் துறை நிறைவேற்றி வருகின்றது. கால்நடை பராமரிப்புத் துறை செயல்படுத்தும் முக்கிய திட்டங்கள்.—

1. சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம் :

மத்திய அரசின் நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கீழே கண்டுள்ள பணிகள் செயல்படுத்தப்படுகின்றன :—

(அ) செம்மறி ஆடு உற்பத்தித் திட்டம்.— இத்திட்டத்தைக் கால்நடைப் பராமரிப்புத் துறை வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 25 விழுக்காடு, 33 1/3 விழுக்காடு மானியம் முறையே வழங்கப்படுகிறது. தேர்ந்

தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 8,000 மதிப்புள்ள 20 பெட்டை ஆடுகளும், ஒரு கிடாவும் அடங்கிய ஆடு வளர்ப்புத் பிரிவு ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்து தரப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 2,102 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு ரூ. 86.313 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டு உள்ளது. இதனால் 2,102 குடும்பங்கள் பயனடைந்து உள்ளனர். திட்டத்தில் சேர்ந்த விவசாயிகள் தேசிய வங்கி களின் மூலம் நிதி உதவியும் அரசிடமிருந்து மானியமும் பெற உதவி அளிப்பதுடன், இத்திட்டத்தில் பயன் அடை வோரின் ஆடுகளுக்கு உடல் நலம் பேணும் பணிகளையும் கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து வருகிறது.

(ஆ) பன்றி உற்பத்தித் திட்டம்.— கால்நடைப் பராமரிப்புத் துறை இத்திட்டத்தில் மதுரைமாவட்டத்தில் இந்த வருடம் 30 பிரிவுகள் ஏற்படுத்தப்பட உள்ளது. தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு ரூ. 6,000 மதிப் புள்ள 3 பன்றிகள் அடங்கிய பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த மானியம் உதவி அளிக்கிறது. இத்திட்டம் 1990-91 ஆம் ஆண்டு செயல்படுத்த ரூ. 3,374 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 0.600 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

(இ) கன்று வளர்ப்புத் திட்டம்.— இத்திட்டத்தை வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், சேலம், தென்னாற்காடு, கோயம்புத்தூர் மதுரை மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி இணையம் செயல்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கலப்பின இடேரி கன்றுகளுக்கு, மாதம் முதல் 32 மாதம் வரை பராமரிப்பதற்கான அடர் தீவனம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. 1990-91ஆம் ஆண்டு 2,500 கன்றுகளுக்கு கலப்பின தீவனம் ரூ. 98.663 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 69.122 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) கோழி வளர்ப்புத் திட்டம்.— கோழி வளர்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில், தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது 1990-91ல் 335 கோழிப் பண்ணைகள், மதுரை, வட ஆற்காடு - அம்பேத்கார், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தர்மபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராஜர், சிதம்பரனார்,



திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 11.79 இலட்சம், செலவில் நிறுவப்படும் இத்திட்டத்தில் முட்டையிடும் கோழி மற்றும் இறைச்சிக் கோழிகள் வளர்ப்பதும் அடங்கும்.

2. மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் பசுந்தீவன பயிர் வளர்ப்பிற்காக நடவடிக்கைகள் கோயம்புத்தூர், திண்டுக்கல்-அண்ணா, மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் பயன்பெறுவோருக்கு பசுந்தீவன நறுக்குகள், விதைகள் மற்றும் பசுந்தீவன மரக்கன்றுகள் மானிய விலையில் வழங்கப் பட்டு நிரந்தரமாக தீவன பயிர் சாகுபடி செய்வதற்கு, ஊக்கம் அளிக்கப்படுகிறது.

3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1990-91 ஆம் ஆண்டு ரூ. 7.90 இலட்சம் செலவில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. உதகமண்டலம், மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தீவன உற்பத்தித் திட்டம். | .. | 2.80 |
| 2. குருத்துக்குழி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தீவன உற்பத்தித் திட்டம். | .. | 2.10 |
| 3. குருத்துக்குழி பண்ணைக்கு சாலை அமைத்தல் | .. | 3.00 |
| மொத்தம் | .. | 7.90 |

[1991 செப்டம்பர் 25

4. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

மாவட்ட ஊரக அபிவிருத்தி நிறுவனங்களினால் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள விவசாயிகளுக்கு கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் மற்றும் வேலை மாடுகள் மானியத்தோடு வழங்கப்படுகின்றன.

5. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் :

இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், தருமபுரி, புதுக்கோட்டை, சிதம்பரனார் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளில் வாழும் விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டு தீவனப் பயிர் அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்த ரூ. 5.74 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் சேலம், தருமபுரி, வட ஆற்காடு அம்பேத்கார் தென்னாற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் 10 மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் நலனிற்காக மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டு 190 கறவை மாடுகள் 205 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகள் 40 கன்றுகளுக்கு கலப்பு தீவனம் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 435 விவசாயக் குடும்பங்கள் பயன் அடைகின்றன. இந்தத் திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு மொத்தத் திட்டச் செலவான ரூ. 60.18 இலட்சத்தில் 50 சதவிகிதம் மானிய உதவி அளிக்கப்படுகிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலையில் மட்டும் 75 சதவிகிதம் மானிய உதவி அளிக்கப்படுகிறது. இது தவிர பழங்குடியினர் பகுதிகளில் 9 கால்நடை மருந்தகங்கள் 9 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் 9 உறைவிந்து நிலையங்கள் மற்றும் 3 கிளை நிலையங்கள் மூலம் இப்பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், பசுக்கள் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணியும் செய்யப்படுகிறது.



1991 செப்டம்பர் 25]

7. சிறப்பு மத்திய உதவித் திட்டம் :

ஆதி திராவிட சமுதாயத்திற்கு உட்பட்ட விவசாயிகள் மட்டுமே பயன்பெறும் நோக்கத்துடன் மத்திய அரசின் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகளுக்கு 20 பெட்டை செம்மறி ஆடும், ஒரு கிடாவும் 50 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 1,641 ஆடு வளர்ப்பு பிரிவுகள் ரூ. 63.94 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

8. ஒருங்கிணைந்த மாதிரி அளவீட்டுத் திட்டம் (மாநில அளவில்) :

முக்கிய கால்நடை உற்பத்தி பொருள்களான பால், முட்டை, மற்றும் இறைச்சி உற்பத்தியை மதிப்பீடு செய்து இவற்றின் உபயோக முறைகளையும், பசு, எருமையினங்களின் வளர்ப்பு முறைகளையும் மதிப்பீடு செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் கோடை, மாரி, குளிர் ஆகிய மூன்று பருவங்களிலும் அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 10 இடங்களில் ஒவ்வொரு கணக்கெடுப்பாளர்களின் மூலம் விபரங்கள் சேகரிக்கப்படுகிறது. இவற்றின் முடிவுகள் வருடாந்திர மற்றும் 5 ஆண்டு திட்டங்களை வகுப்பதற்கு மிகவும் உபயோகமாக உள்ளன.

1990-91 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அளவீடுகளின் முடிவுகள் பின்வருமாறு.

| (1) | கோடை. (2) | மாரி. (3) |
|---|---|---|
| (அ) பால் உற்பத்தி மதிப்பீடு ('000' டன்கள்). | 1,049.024 | 975.899 |
| (ஆ) முட்டை உற்பத்தி மதிப்பீடு (மில்லியன்). | 838.2 | 834.0 |
| (இ) இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் கிலோ). | 12.586 | 13.338 |

| | ஜனவரி (4) | மொத்தம் (5) |
|---|---|---|
| (அ) பால் உற்பத்தி மதிப்பீடு ('000' டன்கள்). | 1,349.740 | 3,374.668 |
| (ஆ) முட்டை உற்பத்தி மதிப்பீடு (மில்லியன்). | 878.5 | 2,550.7 |
| (இ) இறைச்சி உற்பத்தி மதிப்பீடு (மில்லியன் கிலோ). | 13.670 | 39.594 |

9. மாதிரி அளவீட்டுத் திட்டம் (மாவட்ட அளவில்) :

தென்ஆற்காடு, திருச்சி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சேலம் மாவட்ட மாதிரி அளவீட்டுத் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றது. முக்கிய கால்நடை உற்பத்தி பொருள்களான, பால், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியை அதிக எண்ணிக்கை கிராமங்களில் மதிப்பீடு செய்வதும், பால், முட்டை உற்பத்தி செலவை கணிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

10. இடைக்கால கணக்கெடுப்பு :

மாநிலம் முழுவதும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கால்நடை கணக்கெடுப்பு செய்யப்படுகிறது. அந்த இடைக்காலங்களில் கால்நடைகளின் பிறப்பு இறப்புகளினால் ஏற்படும் மாறுதல்கள் ஏற்ற தாழ்வுகள் ஆகியவைகளை மதிப்பீடு செய்வதே இந்த கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

பகுதி—3.

கால்நடை வளர்ப்பு.

1. கால்நடைப் பண்ணைகள் :

தமிழகத்தின் கால்நடை அபிவிருத்தி மேற்கொள்ளும் பொருட்டு அறிவியல் முறையில் பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் பன்றிகள் இனப்பெருக்கம் செய்வதற்காக கால்நடை பராமரிப்புத்துறை 7 இடங்களில் மாவட்ட பண்ணைகளைச் செயல்படுத்தி வருகின்றது. இந்தப் பண்ணைகள் ஒசூர் (தர்மபுரி மாவட்டம்), புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்), ஒரத்தநாடு, கொருக்கை (தஞ்சாவூர் மாவட்டம்), அபிசேகப்பட்டி (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்), செட்டிநாடு (பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்), உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) ஆகிய இடங்களில் செயல்படுத்தப்படுகின்றன. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் மாதவரத்தில் ஒரு பால் பண்ணை இயங்கி வருகிறது.



ஒசூர் மற்றும் புதுக்கோட்டைப் பண்ணைகளில் சிந்தி இன மற்றும் கலப்பின மாடுகளும், ஒரத்தநாடு மற்றும் அபிசேகப் பட்டி பண்ணைகளில் முரா எருமை இனமும், செட்டிநாடு, பண்ணையில் சிந்தி மற்றும் தார்பார்கர் இன மாடுகளும், கொருக்கை பண்ணையில் உம்பளச்சேரி இன மாடுகளும், உதக மண்டலம் பண்ணையில் பிரிசியன் இன மாடுகளும் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

2. அயல் இன கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை:

அயல் இன ஜெர்சி காளைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் நோக்குடன் இப்பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3. உறைவிந்து வங்கி :

செயற்கைமுறை கருவூட்டல் மூலம், பசு, எருமை, இனப் பெருக்கும் நோக்குடன் 1,936 இடங்களில் உறைவிந்து நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட நிலையங்களுக்குத் தேவையான உறைவிந்து தஞ்சை மாவட்டத்தில் ஈச்சங்கோட்டையிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் அபிசேகப் பட்டியிலும், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்திலும் தர்மபுரி மாவட்டத்தில் ஒசூரிலும், உற்பத்தி செய்கின்றது. இத்துறை 140 உயர் அயலின ஜெர்சி, பிரிசியன், காளைகளை டென்மார்க், ஜெர்மனி, போன்ற அயல்நாடுகளிலிருந்து ரூ. 50 இலட்சம் மதிப்பில் இறக்குமதி செய்துள்ளது. இக்காளைகளை ஈச்சங்கோட்டை, ஒசூர், உதகமண்டலம் உறைவிந்து நிலையங்களில் உறைவிந்து சேகரிப்பதற்காக பராமரிக்கப்படுகின்றன. இவ்வகையில் உயர்ந்த பொலிகாளைகளை, பசுக்களின் செயற்கை முறை இனவிருத்தியில் ஈடுபடுத்துவதால் பிறக்கும் கன்றுகள் வெகு அதிக அளவில் பால் கொடுக்கும் திறன் பெற்று இருக்கும்.

1990-91 ஆம் ஆண்டு 1.32 இலட்சம் லிட்டர் திரவ நைட்ரஜனும், 10.92 இலட்சம் டோஸ் உறைவிந்தும், இந்த நிலையங்களில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

4. அரசு பால் பண்ணை, மாதவரம் :

இப்பண்ணை, சென்னை நகரத்தில் புறப்பகுதியில் அமைந்துள்ளது. இங்கு ஓங்கோல் கலப்பினங்கள் மற்றும் ஜெர்சி இன பசுக்கள் பராமரிக்கப்படுகின்றன. இங்கு குறைவான கட்டணத்தில் தனியார் மாடுகளை பராமரிக்கும் தனிப்பிரிவும் உள்ளது. இப்பண்ணை 1—3—1991 முதல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது.

பகுதி 4.

கால்நடை நலப் பணிகள்.

1. கால்நடை மருத்துவ நிலையங்கள் :

(அ) கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள், இளை நிலையங்கள்:

தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளும் கோழியினங்களையும் நோயிலிருந்து பாதுகாப்பதற்கான பணியை கால்நடை பராமரிப்புத்துறை மேற்கொண்டுள்ளது. இதன் பயனாக கால்நடைகளும், கோழிகளும் நல்ல முறையில் அதிக அளவு பால், இறைச்சி, முட்டை உற்பத்தியை கொடுக்க முடிகின்றது. கால்நடை பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்கள் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு, கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இந்த நிலையங்களில் அறுவை சிகிச்சை, மருத்துவச் சிகிச்சை, இனவிருத்தி சம்பந்தப்பட்ட குறைகளை கவனித்தல், பயனற்ற காளைகளுக்கு ஆண்மை நீக்கம் செய்தல், கால்நடை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி போடுதல் போன்ற பணிகள் ஆற்றப்படுகின்றன. மதுரை தல்லாக்குளத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையில் எக்ஸ்ரே கதிர்படம் எடுப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் 837 மருத்துவ நிலையங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு உள்ளன :—

| மருத்துவ நிலையங்களின் விபரம். | எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| 1. பிரதம மருத்துவமனைகள் .. .. .. | 22 |
| 2. கால்நடை மருத்துவமனைகள் .. .. | 55 |
| 3. கால்நடை மருத்துவமனைகள் கூடிய கேந்திர கிராம நிலையங்கள். | 2 |
| 4. கால்நடை மருந்தகங்கள் .. .. | 734 |
| 5. கால்நடை மருந்தகம் கூடிய கேந்திர கிராம நிலையங்கள். | 24 |
| மொத்தம் .. | 837 |



1990—91 ஆம் வருடம் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் 20 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன.

| கால்நடை மருந்தகத்தின் பெயர். | பஞ்சாயத்து யூனியன். | மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. திருக்கோஷ்டியூர் | திருப்பத்தூர் | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர். |
| 2. சாலைக்கிராமம் | இளையான்குடி | ஷெ |
| 3. காட்டாம்பட்டி | கிணத்துக்கடவு | கோவை. |
| 4. சடையாம்பட்டி | பொன்னமராவதி | புதுக்கோட்டை |
| 5. வடக்காடு | திருவரன்குளம் | ஷெ |
| 6. சங்கரன்பந்தல் | செம்பனார்கோயில் | தஞ்சாவூர் |
| 7. ஆலத்தூர் | மதுக்கூர் | ஷெ |
| 8. கோடாரிகருப்பூர் | டி. புதூர் | திருச்சிராப்பள்ளி |
| 9. கந்தமண்ணடி | கோழியனூர் | தென்ஆற்காடு |
| 10. சாலவாக்கம் | உத்திரமேரூர் | செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். |
| 11. விரகனூர் | புள்ளம்பாடி | திருச்சிராப்பள்ளி |
| 12. தரடப்பட்டு | தண்டராம்பட்டு | திருவண்ணாமலை-சம்புவராயர். |
| 13. வேடப்பட்டி | பேரூர் | கோவை. |
| 14. மேல்மயில் | கே. வி. குப்பம் | வடஆற்காடு அம்பேத்கார். |
| 15. முத்தியாபுரம் | தூத்துக்குடி | சிதம்பரனார் |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 16. கோத்தங்குடி | கும்பகோணம் | தஞ்சாவூர் |
| 17. பெருங்குடி | பரங்கிமலை | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். |
| 18. அரச்சலூர் | மொடக்குறிச்சி | பெரியார் |
| 19. மரமடக்கி | அறந்தாங்கி | புதுக்கோட்டை |
| 20. மலையூர் | கரம்பக்குடி | புதுக்கோட்டை |

பசு, எருமை இனங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் முதலுதவி சிகிச்சை அளிக்கும் பொருட்டு மொத்தம் 2,226 கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டு 135.06 லட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையும், 5.56 லட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும் 168.08 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசியும் செயல்படுத்தப் பட்டுள்ளது.

(ஆ) கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் :

இம்மாநிலத்தில் 11 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன. இந்த பிரிவுகள் கால்நடை நோய்களை கண்டறிந்து அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்க ஆலோசனைகள் களப்பணியாளர்களுக்கு அளித்து வருகின்றன. மேலும் கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான தடுப்பு மருந்து தேவைகளைப் பற்றியும் அறிவித்து உதவி வருகின்றன. இப்பிரிவுகள் மண்டல வாரியாக தேவைப்படும் தடுப்பூசி மருந்துகளை முன் அறிந்து சேமித்து வைக்கின்றன.

1990-91 ஆம் ஆண்டு இப்பிரிவுகளில் ஆற்றப்பட்ட பணி விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1. திடீர் நோய் அறிக்கைகள் கவனிக்கப்பட்டது | 283 |
| 2. சோதிக்கப்பட்ட மாதிரிகள் .. .. | 1,78,608 |
| 3. காச நோய்க்காக சோதிக்கப்பட்டவை | 2,040 |
| 4. கருச்சிதைவுக்காக சோதிக்கப்பட்டவை .. | 8,577 |
| 5. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்தடுப்பு மருந்து நிலையத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவை. | 659 |
| 6. சென்னை கால்நடை மருத்துவ கல்லூரிக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவை. | 1,835 |



(இ) நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் :

உள்ளமைந்த கிராமங்களில் உள்ள விவசாயிகள் நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மாநிலத்தில் பல்வேறு இடங்களில் 50 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. செயற்கை முறைகருவூட்டல் பணிகளும் இவற்றில் நடைபெறுகிறது.

1990—91 ஆம் ஆண்டு இப்பிரிவுகளில் ஆற்றப்பட்ட பணி விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| (1) சிகிச்சை அளிக்கப்பட்டவை .. .. | 2,54,232 |
| (2) ஆண்மை நீக்கம் செய்யப்பட்டவை .. | 43,050 |
| (3) குடற்புழு நீக்கம் செய்யப்பட்டவை .. | 6,92,244 |
| (4) தடுப்பூசிகள் போடப்பட்டவை .. | 4,65,860 |
| (5) செயற்கை முறை கருவூட்டல் செய்யப் பட்டவை. | 26,652 |

(ஈ) நோய்த்தடுப்பூசி மருந்துகளை பாதுகாக்க குளிர்சாதன வசதி அமைத்தல் :—

கால்நடை மற்றும் கோழிகளுக்கு ஏற்படும் தொற்றுநோய்களைத் தடுக்க தேவைப்படும் மருந்துகளை குளிர்சாதன வசதிகளுடன் நல்ல முறையில் தேர்வு செய்யப்பட்ட 6(ஆறு) நிலையங்களில் சேமித்து வைக்க 1990—91 ஆம் ஆண்டு ரூ. 4.20 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் பயனாக களப்பணியாளர்களுக்கு கால்நடை நோய்களை தடுக்க தேவைப்படும் தடுப்பு ஊசி மருந்துகள் உடனே கிடைக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் தடுப்பூசி மருந்துகளை இராணிப்பேட்டை கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்திலிருந்து கொண்டுவர ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்படும்.

2. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் :—

இம்மாநிலத்தில் வெக்கை நோய் ஒழிப்பதற்காக 20 மாவட்ட குழுக்கள், 10 கண்காணிப்பு பிரிவுகள் மற்றும் 10 சோதனைச் சாவடிகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

(அ) வெக்கை நோய் மாவட்ட குழுக்கள் :

இந்தக் குழுக்கள் 20 மாவட்டங்களில் உள்ள பசு, எருமை இனங்கள் மற்றும் ஆடுகளுக்கு வெக்கை நோய் தடுப்பூசி போட்டு வெக்கை நோய் தடுப்பு சக்தி அதிக அளவில் உண்டாவதற்கு செயல்படுகின்றன. இந்த பணி தக்க முறையில் திட்டமிடப்பட்டு மாவட்டத்தில் கண்காணிப்புக்குழு பணிபுரியும் பகுதி தவிர மற்ற எல்லா பகுதிகளிலும் மூன்று ஆண்டுக்கு ஒருமுறை தடுப்பூசி போட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(ஆ) வெக்கை நோய் கண்காணிப்புக் குழுக்கள் :

மாநில எல்லைக்குள் 15 கி.மீ. சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு காலமுறைப்படி தடுப்பூசி போட்டு இதன்மூலம் மாநில எல்லைப் பகுதிகளில் நோயற்ற நிலை உருவாக்கும் பொருட்டு 10 சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன. 1990–91 முடிய உள்ள ஆண்டில் வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 57.93 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

3. கோமாரி நோய் தடுப்புத் திட்டம் :—

(அ) கால்நடைப்பராமரிபுத் துறையின் மூலம் செயல்படுத்தப்படுவது:

ஏழை விவசாயிகளின் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் திட்டம் கால்நடை பராமரிப்புத்துறையினால் செயல்படுத்தப்படுகின்றது. இதற்காகும் தடுப்பூசி மருந்தின் விலையில் 50 சதவிகிதம் மத்திய மற்றும் மாநில அரசுகளினால் சமமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மீதமுள்ள விலையான 50 சதவிகிதம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. 1990–91 ஆம் ஆண்டில் 1.34 லட்சம் கால் நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

(ஆ) தேசிய பால்வள அபிவிருத்தி வாரியத்தின் மூலம் செயல்படுத்தப் படுவது:

இத்திட்டத்தின்கீழ் தேசிய பால்வள அபிவிருத்தி வாரியத்தின் மூலம் மாடுகள் மற்றும் எருமைகளுக்கு இலவசமாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகின்றது. தடுப்பூசி போடும் செலவை கால்நடை பராமரிப்புத்துறை ஏற்றுக்கொள்ளுகின்றது. 1990–91 ஆம் ஆண்டில் 4,34,22,968 கோமாரி நோய் தடுப்பூசிகள் நீலகிரி, தஞ்சாவூர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம், காமராஜர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் கால்நடைகள் செல்லும் மாவட்டங்களான



திருநெல்வேலி, பெரியார், மதுரை, திண்டுக்கல், சேலம், திருச்சி, புதுக்கோட்டை, முதலிய மாவட்டங்களின் வாரியத்தின்மூலம் போடப்பட்டுள்ளன.

4. கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப் பேட்டை—

(அ) தடுப்பு மருந்து உற்பத்தி :

தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகள் உடல்நலனைக் காப்பாற்றி, அவைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படாமல் இருக்க அவ்வப்போது தடுப்பு ஊசி போடுவது கால்நடைப் பராமரிப்புத் துறையின் முக்கிய பணியாகும். இதற்கு தேவையான தடுப்பு ஊசி மருந்துகள் எல்லாம் இராணிப் பேட்டையிலுள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன.

தற்போது இந்நிலையத்தில் 7 நுண்கிருமி கொல்லி தடுப்பூசி மருந்துகளும், 11 நச்சுக்கிருமி கொல்லி தடுப்பூசி மருந்துகளும், 11 வகையான நோய் கண்டறியும் மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

இங்கு கீழ்க்கண்ட முக்கிய நோய்களுக்கு தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன :—

| | | | |
|---|---|---|---|
| (1) மாடுகளுக்கு | .. | வெக்கை நோய், அடைப்பான், | தொண்டை சப்பைநோய் |
| (2) ஆடுகளுக்கு | .. | ஆட்டம்மை, துள்ளுமாரி. | வெக்கை நோய், |
| (3) நாய்களுக்கு | .. | வெறிநாய்க்கடி, | டிஸ்டம்பர். |
| (4) கோழிகளுக்கு | . | கோழிக்கழிச்சல், வாத்து பிளேக். | கோழி அம்மை, |

1990—91 ஆம் ஆண்டில் 56.34 லட்சம் டோஸ் பாக்டீரியல் தடுப்பு மருந்துகளும், 368.16 லட்சம் டோஸ் வைரஸ் தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) நோய் கண்டறிதல் :

இராணிப்பேட்டை நிலையத்தில், கால்நடை நோய்களை கண்டறியும் பிரிவும் உள்ளது. மாநிலத்தில் கால்நடைகளுக்கு, தொற்றுநோய் ஏற்பட்டுள்ளதைத் தெரிவிக்கப்பட்டதுடன் இந்த

பிரிவிலுள்ள அலுவலர்கள் பாதிக்கப்பட்ட கிராமத்திற்குச் சென்று கால்நடை மற்றும் கோழியினத்துக்கு ஏற்பட்டிருக்கும் தொற்று நோய்களை கண்டறிந்து தடுப்பு முறைகளுக்கான ஏற்பாடுகளை எடுக்க உதவி புரிகின்றனர்.

5. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களின் சீரிய கட்டுப்பாடு :—

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக 1984-85-ல் மத்திய அரசின் 50 சதவிகிதம் நிதி உதவியுடன் கூடிய திட்டமொன்று செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் செயல்படும் பணிகள் பின் வருமாறு :—

(அ) நோயற்ற மண்டலம் ஏற்படுத்துதல் :

தமிழகத்தின் தென் மாவட்டமான கன்னியாகுமரியில் கால்நடைகளையும் கால்நடைகளைச் சார்ந்த பொருட்களையும் இப்பகுதியிலிருந்து ஏற்றுமதி செய்ய ஏற்றவாறு, நோயற்ற பகுதி நிறுவப்பட்டுள்ளது. முதற்படியாக இத்திட்டம் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பிரிவுகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவையாவன :—

(1) கால்நடைகளுக்கு முழுமையாக தடுப்பூசி போடுதல்.

(2) சோதனைச் சாவடிகளை நிறுவுதல்.

(3) நோய் கடுங்கண்காணிப்பு மற்றும் நோய் தடுப்பு பிரிவுகளை நிறுவுதல்.

(ஆ) முழு தடுப்புத் திட்டம் :

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டம் வரை 40 கி.மீ. சுற்றுவட்டாரத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் வெக்கை, கோமாரி முதலிய நோய்த்தடுப்பு ஊசிகள் காவல்கிணறு சோதனைச் சாவடியிலிருந்து இலவசமாகப் போடப்பட்டு வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டு வரை கீழ்க்கண்ட எண்ணிக்கையில் கோமாரி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| கன்னியாகுமரி மாவட்டம் | .. | .. 78,755 |
| சோதனைச் சாவடி காவல்கிணறு | .. | .. 16,458 |
| | | .. 95,213 |



(இ) சோதனைச் சாவடிகள் :

மாநிலங்களுக்கு இடைப்பட்ட வெளியில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு செல்லும் கால்நடைகளின் எண்ணிக்கையைக் கண்காணிக்க சோதனைச் சாவடி அமைத்துள்ளது. நோயற்ற பகுதிகளுக்கு செல்வதற்கு முன்பு வெக்கை நோய் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன. 1990-91 வரை 1,05,876 கால்நடைகளுக்கு வெக்கை நோய் தடுப்பூசிகள் போடப்பட்டு உள்ளன.

(ஈ) கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு :

மத்திய அரசின் 50 விழுக்காடு பொருள் உதவியில் இத்திட்டம் இயங்கி வருகிறது. மாநிலத்தில் நோய்களால் தாக்கப்படும் கால்நடைகளின் விபரங்களை சேகரித்து, எங்கெங்கு என்ன என்ன நோய்களில் தீவிரம் இருந்தது என்றும் அறிந்து ஆய்ந்து அதன் அடிப்படையில் முன்கூட்டியே அந்த நோய்கள் வருமுன் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு, நோய் புலனாய்வு நிலையம் இத்திட்டத்தின் கீழ் இயங்குகிறது. பல்வேறு பருவ காலங்களில் கால்நடைகளிடையே பரவும் தொற்று நோய்களைப் பற்றிய விபரங்கள் அடங்கிய நோய் பற்றிய அட்டவணை தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம் எந்தெந்த காலங்களில் எந்தெந்த நோய்கள் பரவக்கூடும் என முன்கூட்டியே அறிய முடியும்.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் பல கலைப்புலமும் பல வளாகங்களையும் கொண்டு தமிழ்நாடு அனைத்திற்கும் கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் மீன் வளம் முன்னேற்றத்திற்கான பணிகளை செய்து வருகிறது. இந்தியாவில் முதன் முதலாகத் தொடங்கப்பெற்ற இப்பல்கலைக்கழகம் 20—9—1989 ஆம் தேதியில் இருந்து சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் தலைமையகத்தை மாதவரத்தில் அமைக்க அரசு நிர்ணயித்துள்ளது. உள்ளிருப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்ட பின்னர் இப்பல்கலைக்கழகம் மாதவரத்தில் இயங்கும். கால்நடை அறிவியல் கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்திக் கால்நடை, கோழி மற்றும் மீன் உற்பத்தியையும் உற்பத்திப் பொருள்களையும் பெருக்கி மனித இனத்திற்கு ஊட்டச்சத்துணவை அளிப்பது மட்டுமின்றிக் கால்நடை, கோழி மற்றும் மீன் வளர்ப்பாளர்களுக்கு அதிக வருவாயையும் ஈட்ட வழிவகுத்து மாநிலத்தின் பொருளா

தாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்த உதவு கிறது. இவை இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும், கால்நடை உபதொழில்கள், முத்து வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, இறால் மற்றும் நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் ஏற்றுமதி மேம்படுத்தல், சுயவேலை வாய்ப்பை உருவாக்குதல் ஆகியவற்றில் இப்பல்கலைக்கழகம் கவனம் செலுத்தும். அனைத்துப் பயிற்சித் திட்டங்களும் தமிழ்நாடு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்பு திட்டத்திற்கு வழி வகுக்கும் வகையில் அமையும்.

1990-91 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீடு ரூ. 684.23 இலட்சம் என்றாலும் 1990-91 ஆம் ஆண்டின் திருத்தி அமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைக் கருத்தில் கொண்டு அரசு ரூ. 1,063.61 இலட்சம் அளித்தது. திட்டத்தில் சேரா மற்றும் திட்டங்களுக்கான 1991-92 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கு ரூ. 896.80 இலட்சம் அளித்துள்ளது. கால்நடை மருத்துவக் கல்லூரியில் உயர் கல்விக்கு என்றும், மூன்று ஆராய்ச்சிப் பண்ணைகளுக்கும், ஆராய்ச்சித் திட்டச் செயல்களுக்காக வளர்க்கப்படும் கால்நடைகளைப் பராமரிப்பதற்கும் விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் விரிவாக்கம் செய்யவும் ஏற்கெனவே செய்யப்பட்டு வரும் வசதிப் பணிகளுக்கு ஆக 1991-92 ஆண்டுக்கான திட்டத்தில் சேராதது முதலீட்டுத் தொகை ரூ. 400.00 இலட்சம் ஆகும். ரூ. 40.00 இலட்சம் வரவு செலவுத் திட்ட அளிப்புடன் கூடிய தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத் துறைக்குக் கட்டுப்பாட்டிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்ட மாதவரத்தில் உள்ள 133.31 ஏக்கர் பரப்பில் பல்கலைக் கழகப் பால்பண்ணை ஒன்று நிறுவப்பட்டு 1—3—1991 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது. மூன்று கல்லூரி வளாகங்களிலும் உயர்க்கல்விக்காகவும் புதியன புகுத்துவதற்காகவும் நல்ல உள்ளமைப்பு வசதிகள் செய்து தரவும், ஐந்து ஆராய்ச்சிப் பண்ணைகளிலும் ஆராய்ச்சி உள்ளமைப்பு வசதிகளைப் பெருக்கிடவும் நம் மாநிலத்தில் பெரும்பாலும் பின் தங்கிய மாவட்டங்கள் அமைந்த கால்நடை ஆராய்ச்சி மேம்பாட்டு நிலையங்கள் ஐந்தும், கோழியின ஆராய்ச்சி மேம்பாட்டு மையங்கள் ஏழும், கால்நடை வளர்ப்போர் பயிற்சி நிலையங்கள் மூன்றும், வாத்து ஆராய்ச்சி மேம்பாட்டு மையங்கள் இரண்டும், மாட்டினக் கருச்சிதைவுக் கட்டுப்பாட்டு மையங்கள் இரண்டும், செம்மறி ஆட்டின ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் ஒன்றும் ஆகப் பல்கலைக்கழகத்தின் 20 மையங்களில் பண்ணை அளவிலான பயிற்சிகள் போன்றவை தருவதன் மூலம் ஏழ்மையிலும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்குக் கால்நடை தொடர்பான அறிவினைச் சிறந்த முறையில் ஊட்ட வசதிகள் மிகுதிப்படுத்தவும் ஆழ்ந்து சிந்தித்து ரூ. 496.80 இலட்சத்திற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத்



திட்டக் காலத்தில் நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தொடங்கப்பட்ட ரூ. 1.53 கோடி மதிப்புள்ள கட்டடங்களான கல்விப் புலக்கூடம்-1 பல்நோக்கு கூடம் மற்றும் விடுதி ஆகியவை கட்டிமுடிக்கப் பெற்றன. கல்விப் புலக் கூடம் 2 மற்றும் 3, சிகிச்சைக்கூடம், ஆசிரியர் குடியிருப்பு ஆகியவை கட்டுவதற்கு ஏற்கெனவே அளித்த ஒப்புதல்படி ரூ. 1.94 கோடி தர இசைவு தந்துள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் மூன்று கல்லூரிகளிலும் 1,200-க்கு மேற்பட்ட மாணாக்கர் இளநிலை மற்றும் முதுநிலை வகுப்புகளில் பயின்று வருகின்றனர். இவ்வாண்டு 233 மாணாக்கர் பி.வி.எஸ்.சி. பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 62 பேர் மாணவியர். எம்.வி.எஸ்.சி.யில் 60 பேரும், பி.எச்.டி.யில் 54 பேரும சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மீன்வளக் கலைப்புலத்தைப் பொறுத்தவரை பி.எப்.எஸ்.சி. யில் 20 மாணவர்களும், எம். எப். எஸ்சி. யில் 19 மாணவர்களும். பி.எச்.டியில் 5 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். சுமார் 700 மாணவர்கள் மாநில அரசு அல்லது இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் அல்லது தனியார் நிறுவனங்களில் படிப்பு உதவித் தொகை/நிறுவன உதவித் தொகை/உதவித்தொகை பெறுகின்றனர்.

அப்படி பெறுகின்றவர்களில் 98 விழுக்காட்டினர் பிற்பட்ட வகுப்பு, மிகவும் பிற்பட்ட வகுப்பு, தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் ஆவர். இப்பல்கலைக் கழகத்தில் பயின்றோர் தேசிய மற்றும் உலக அளவில் பரந்து இருந்து நல்ல புகழ் பெற்று விளங்குகிறார்கள்.

1991-92 ஆம் ஆண்டிற்காக புதிய திட்டத்தில் அளிக்க பட்ட ரூ. 16.08 லட்சத்தில் ரூ. 13.33 இலட்சம் கால்நடை மருத்துவக் கலைப்புலத்திற்காகவும் ரூ. 2.75 இலட்ச மீன்வளக் கலைப்புலத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது காட்டுப்பாக்கத்தில் திறந்த வெளி செம்மறி ஆடுகள் இடை சிறந்த ஆடுகளைத் தேர்ந்து இனப் பெருக்கம் செய்யு திட்டம், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகும மாவட்டங்களில் மீன் வளர்ப்பாளர் பயிற்சிகள் பங்கேற்கு திட்டம் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு உயர்நி தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்தி கால்நடை மற்று மீன் உற்பத்தியைப் பெருக்குவது முக்கியக் குறிக்கோளாகு இத்திட்டங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களி வறுமை ஒழிப்புத் திட்டத்தின் அங்கங்களாக அமைக்கின்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், இந்திய அரசு உ தொழில் நுட்பத்துறை வேளாண் ஆராய்ச்சி மற்றும் கூட்டுற துறை, கடல் மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு அறிவியல் மற் தொழில் நுட்பக் கழகம், காத்ரெஜ் போன்ற தனிய

நிறுவனங்கள் ஆகியன பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதன் மூலம் பல்கலைக் கழகத்தை அங்கீகரித்திருக்கின்றன. இங்கிலாந்து (யு.கே.), அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து பன்னாட்டு ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.

அரசு நிறுவனங்கள்.

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ரூ. 100 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் முழுவதும் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக 12—7—1973-இல் நிறுவப்பட்டது.

2. இந்நிறுவனம் வீரிய இனக் கோழிக் குஞ்சுகள் மற்றும் இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் ஆகியவற்றை பொரித்து விற்பனை செய்வதிலும், தரமான கோழித் தீவனத்தை தயாரித்து விற்பனை செய்வதிலும், முட்டைகள், கோழிக்குஞ்சுகள், ஜப்பானியக் காடை முட்டைகள் மற்றும் ஜப்பானிய காடை ஆகியவற்றை விற்பனை செய்வதிலும் தங்களை ஈடுபடுத்தி வருகிறது.

3. டாப்கோவின் குஞ்சு பொரிப்பகங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசூரிலும் மதுரை மாவட்டத்தில் கப்பலூரிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொட்டப்பட்டியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கே இக்குஞ்சுப் பொரிப்பகங்கள் வணிகத் தன்மையுடன் கூடிய வீரிய இன கோழிக்குஞ்சுகளை பொரித்து வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றன. வீரிய இன கோழிக்குஞ்சுகளை அறிமுகப்படுத்தியதால் மாநிலத்தில் கோழிப்பண்ணைகளில் வளர்ச்சி அதிகரித்து வருகின்றன. இந்நிறுவனம் கோழிக்குஞ்சுகள் அதிகரித்து வரும் தேவைக்கேற்ப கோழிக்குஞ்சுகளை வழங்க முயற்சி எடுத்துவருகிறது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காமராஜர் மாவட்டத்தில் உள்ள இராஜபாளையத்தில் ரூ. 30.95 இலட்சம் மதிப்பீட்டில் (50 விழுக்காடு மானியம், 50 விழுக்காடு கடன் என்ற முறையில்) ஒரு கோழிக் குஞ்சு பொரிப்பகம் துவக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் குஞ்சு பொரிப்பகத்தை அனுப்பங்குளத்தில் நிறுவ அரசு அனுமதி வழங்கியது. கால்நடை பராமரிப்புத்துறையின் நுழைவு அனுமதி பெறப்பட்டு உரிய வேலைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விரைவில் ஆரம்பிக்க உளளது. இத்திட்டத்தின்கீழ் 32.45 இலட்சம் மதிப்பீட்டில் (50 விழுக்காடு பங்குத் தொகை 50 விழுக்காடு கடன் என்ற



முறையில்) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1990-91 ஆம் ஆண்டில் ஒரு கோழிக்குஞ்சு பொரிப்பகம் துவக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஜப்பானியக் காடைகளின் தேவை அதிகமாக இருப்பதால் செங்கல்பட்டில் ஒரு ஜப்பானியக் காடை பொரிப்பு நிலையம் நிறுவப்பட்டு 1989 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள தெக்குப்பாளையத்தில் மேலும் ஒரு ஜப்பானிய காடைக்குஞ்சு பொரிப்பகம் நிறுவப்பட்டு ரூ. 3.00 இலட்சம் மதிப்பில் ஜூலை 1991 முதல் செயல்பட்டு வருகிறது.

4. டாப்கோவின் தீவனக் கலவை நிலையங்கள், நந்தனம், திருப்பூர் மற்றும் கப்பலூரில் அமைந்துள்ளன. தற்போது இருக்கும் பழைய இயந்திரத்தை மாற்றி ரூ. 21 இலட்சம் செலவில் புதிய இயந்திரம் மத்திய அரசு செயல்படுத்தும் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட உள்ளது. இதன் காரணமாக தரமான தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை அதிகரிக்க வகை செய்யப்பட உள்ளன.

5. டாப்கோ தனது விற்பனை மையங்களை சென்னை, கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, வேலூர், நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் நிறுவி உள்ளது. தேசிய திட்டத்தின் கீழ் ஊனமுற்றவர்களுக்கும், வேலையற்ற நபர்களுக்கும் சுய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு சில்லறை விற்பனைக்காக விற்பனை முகவர்களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் 96 நபர்கள் இதுவரை பயன் பெற்றுள்ளனர்.

6. தரமான தாதுக் கலவைகளை உற்பத்தி செய்து கோழிப் பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்காக 1990-91-ஆம் ஆண்டு ஒரு தாது கலவை நிலையம் சேலம் மாட்டம் சேசன்சாவடியில் துவக்கப்பட்டது.

7. சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டம் : மத்திய அரசால் செயல்படுத்தப்படும் இத்திட்டம் 1977-88 ஆம் ஆண்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஏழாவது திட்டத்தின் கீழ் துவக்கப்பட்ட இத்திட்டம் எட்டாவது திட்டத்திலும் தொடருகிறது. செங்கற்பட்டு -எம்.ஜி.ஆர்., வடாற்காடு அம்பேத்கார், மதுரை மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஆரம்பத்தில் 720 கறிக்கோழிப்பண்ணைகள் துவக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பின்னர் இத்திட்டம் தருமபுரி, தென் ஆற்காடு, பசும்பொன் முத்துராமலிங்க தேவர், இராமநாதபுரம், காமராஜர் மற்றும் வ.உ.சி. ஆகிய மாவட்டங்களில் 200 மற்றும் 500 முட்டைக் கோழிப்பண்ணைகள் துவக்குவதற்காகவும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் 600 பண்ணைகள் நிறுவ அரசு ரூ. 43.20 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

8. கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள தெக்குப்பாளையத்தில் ''கோழி உரிக்குப் நிலையம்'' ரூ. 4.50 இலட்சம் செலவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட உள்ளன. கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இது 1991-92 ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

9. ஒருங்கிணைந்த மலை சாதியினர் நலத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம் கல்வராயன் மலை வாழ்பகுதியில் 25 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ. 7.48 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கோழியின வளர்ப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூடங்கள் ஜனவரி 1991 முதல் செயல்படத் துவங்கியுள்ளன.

இச்சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டம் தற்போது கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

### தமிழ் நாடு இறைச்சி நிறுவனம், சென்னை-35.

தமிழ்நாடு அரசின் மேற்பார்வையின்கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களில் தமிழ்நாடு இறைச்சி நிறுவனமும் ஒன்றாகும். இந்நிறுவனம் வேளாண்மைத் துறையின் 1979-ம் ஆண்டு மார்ச் 2-ம் நாளிட்ட அரசு ஆணை எண். 423-இன் படி துவக்கப்பட்டு, 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1979ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டது.





இந்நிறுவனம் தொடங்கியதன் முக்கிய நோக்கங்களாவன :

(அ) இறைச்சிக்கென கால்நடைகளை திறமையான மற்றும் சுகாதாரமான முறையில் வெட்டுவதற்கான வசதிகள் அளிக்கும் பொருட்டு தெரிந்தெடுக்கும் இடங்களில் நவீன இறைச்சிக் கூடங்களை அமைத்தல்.

(ஆ) கால்நடைகளின் உபபொருட்களைச் செயல்முறைப் படுத்துவதற்காக நவீன சுகாதார வசதிகளை அளித்தல்.

(இ) நவீன இறைச்சிக் கூடத்திலிருந்து இறைச்சியினை நகரத்திலுள்ள மொத்த விற்பனை அங்காடிகளுக்கு எடுத்து செல்ல வசதி செய்து கொடுத்து இறைச்சி நுகர்வோருக்கு தரமான இறைச்சியினை அளித்தல்.

இந்நிறுவனம் சென்னை மாநகராட்சியிடமிருந்து கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ள இறைச்சிக்கூடங்களை 1—4—1981 முதல் ஏற்று நடத்தி வருகிறது.

(1) பெரம்பூர்.

(2) வில்லிவாக்கம்.

(3) பேசின்பாலம்.

(4) சைதாப்பேட்டை.

பேசின்பாலத்திலுள்ள பன்றிகள் அறுவைக்கூடம் தற்சமயம் தடை காரணமாக இயங்கவில்லை.

1990-ஆம் ஆண்டு சுமார் 45,390 மாடுகளும், 7,20,769 ஆடுகளும் இறைச்சிக் கூடங்களில் அறுக்கப்பட்டன. 1989 ஆம் ஆண்டு 54,699 மாடுகளும், 6,16,613 ஆடுகளும் வெட்டப் பட்டன. ஓராண்டிற்கு வெட்டப்படும் ஆடு, மாடுகளின் தனிக் குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. இதன் மூலம் இந்நிறுவனத்திற்கு ரூ. 24.82 இலட்சங்கள் 1990-91ம் ஆண்டு கிட்டியுள்ளது. ஆனால் 1989-90-ஆம் ஆண்டு ரூ. 20.46 இலட் சங்களே கிடைத்தது. இந்நிறுவனம் ரூ. 8.75 இலட்சங் கள் இறைச்சிக் கூடங்களின் முன்னேற்ற வேலைக்காக செல விட்டுள்ளது. ''டாப்கோ'' நிறுவனத்தின் கட்டட பணிகள் இந்நிறுவனத்தால் செய்யப்படுவதால் ரூ. 2 இலட்சங்கள் இந் நிறுவனத்திற்கு லாபமாக கிடைத்துள்ளது.

இந்நிறுவனம் ரூ. 350 இலட்சம் செலவில் தற்சமயம் பெரம்பூரில் இயங்கி வரும் மாடு மற்றும் ஆடு அறுவை கூடத் தினை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக மாடு அறுவை கூடத்தினை ரூ. 60 இலட்சம் மதிப்பில் நவீனப்

படுத்த மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50 : 50 சதவீத உதவித் தொகையை இந்நிறுவனம் பெற உள்ளது. மாநில பொதுப்பணித் துறை இத்திட்டத்திற்காகும் செலவினை ரூ. 70 இலட்சம் என மதிப்பிட்டு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகள் தமது பங்காக ரூ. 11 இலட்சங்களை மொத்தம் ரூ. 22 இலட்சம் தந்துள்ளது மொத்த பணமான ரூ. 22 இலட்சத்தினை பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்து கட்டட வேலைகள் ஆரம்பமாகும் நிலையில் உள்ளது,

அரசு தனது ஆணை எண். 554 (கால்நடை பராமரிப்பு), தேதி 22—11—1989-ன்படி தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தை தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்துடன் இணைக்கும்படி உத்தரவிட்டுள்ளது. இவ்வரு நிலையங்களின் இணைப்பு பற்றிய குறிப்பு கம்பெனிகள் சட்ட விதி குழுமத்திற்கு ஏப்ரல் 1991-ல் அனுப்பப்பட்டு அக்குழுமத்தின் ஒப்புதலை எதிர் நோக்கியுள்ளது. அதிகப்படியான செலவினங்கள் முடியுமான அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டிற்கு இந்நிறுவனம் அதிக வருமானத்தை திரட்டி, தேவையற்ற செலவினங்களைக் குறைத்து லாபம் ஈட்ட திட்டமிட்டுள்ளது.

## இணைப்பு-5.

(119 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## வனத்துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

வனங்கள், உலகத்தை குளிர்ச்சியாகவும், வளமுடைய தாகவும் வைத்திருக்கும் அருஞ் செல்வங்கள் ஆகும். அவை இல்லாவிடில், பூமியானது வெறுமையானதாவும், வளமற்ற தாகவும் இலங்கும். வனப் பாதுகாப்பின் முதன்மையான பணி நில ஆதாரங்களைப் பேணிப் பாதுகாப்பதாகும். அதனால் பலரும் பயன்பெறத்தக்க மரம், தண்ணீர், தீவனம் வனவிலங்கு மற்றும் மன மகிழ்வு அம்சங்கள் பயன்தரத்தக்க உயரளவிற்கு பயன்பாட்டளவு ஆகிய ஐந்தினையும் பெற முடியும், தாவர இனங்கள் விலங்கினங்கள், பூச்சி இனங்கள் மற்றும் பறவை இனங்கள் போன்ற இயற்கையின் வடிவம் ஒவ்வொன்றும், வனப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியின் ஒரு முக்கிய கூறாக அமைகிறது. மனித நாகரிகம் நிலைத்திருக்க இது இன்றியமையாதொன்றாகும். காட்டு வளத்தை



அழிக்காமலேயே மேம்படுத்துவதும், பாதுகாப்பதும், அதன் உற்பத் தியைப் பெருக்குவதும், மாநில வனத் துறையின் நோக்கங் களாகும். இயற்கைச் சூழல் நிலையில் உள்ள நுண்ணிய சமச் சீர் நிலையைப் பராமரிப்பதில் வனங்கள் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன.

1.2 காட்டு வளங்களின் அவசியத்தைப் பற்றி தமிழ்நாடு நீண்ட நாட்களுக்கு முன்னரே ஆய்ந்து அறிந்துள்ளதோடு, அவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான பல்வேறு நட வடிக்கைகளையும் உருவாக்கியுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (அ) பாதுகாப்புக் காடுகள், (ஆ) மீட்புக் காடுகள், (இ) உற்பத்திக் காடுகள், (ஈ) சமுதாயக் காடுகள், (உ) முன்னிலைக் காடுகள், போன்ற முக்கிய கருத்துருக்களுக்கு நேரடி முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(அ) பாதுகாப்புக் காடுகள் :

தாவர இனங்களும், விலங்கினங்களும் அதிகமாக வாழ் வதற்கேற்ற சூழலுள்ள மையப் பகுதிகளின் சுற்றுத் தன்மையை முற்றிலும் பாதுகாப்பது மற்றும் இயற்கை வளத்தை மேம் படையச் செய்வது ஆகியவற்றிற்கு முக்கிவத்துவம் அளிக்கப் படும்.

(ஆ) மீட்புக் காடுகள்.

இடைவெளிகளில், மரங்களை நடுவது, வான் வழியாக விதை களைத் தெளிப்பது, நடப்பட்டுள்ள மரங்களை இயற்கையாகவே மீண்டும் வளர முக்கியத்துவம் அளிக்கக்கூடிய ஏனைய தொழில் உத்திகளைப் பின்பற்றுவது போன்ற செயற்கை மற்றும் இயற்கை முறையின் மூலம் தரம் தாழ்ந்த காட்டு நிலப்பகுதி களை உயிரினங்கள் வாழும் தன்மைக்கேற்ப மேம்படுத்துவதற் கும் அவற்றைப் பாதுகாத்து மீட்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(இ) உற்பத்திக் காடுகள் :

விரைவில் வளரக்கூடியதும் ஒரே மரபைச் சேர்ந்ததும், உயர் இனத்தைச் சேர்ந்ததுமான மர இனங்களை நட்டு ஏற்கனவேயுள்ள வன நிலங்களின் வளத்தின் பெருக்கத்தை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும், முனைப்பான நடவடிக்கைகளைப் பின்பற்றுவதுடன் தீவிர பராமரிப்புத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி யைப் பெறமுடியும்.

(ஈ) சமுதாயக் காடுகள் :

மக்களை ஈடுபடுத்தி, தரிசு, சாகுபடி செய்யப்படாத கிராம ஊராட்சி மற்றும் சமுதாய நிலங்களில் மரங்களை வளர்க்க இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் தரிசு நிலங்களில் மர வளர்ப்பை ஊக்குவிப்பது, உள்ளூர் மக்களின் எரிபொருள் மற்றும் மரவகைத் தேவையைப் பூர்த்தி செய்வது சுற்றுப்புறச் சூழல் மற்றும் நிலத்தின் பசுமைத் தன்மையை மேம்படுத்துவது போன்றவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

(உ) முன்னிலைக் காடுகள் :

புதிய அனுகுமுறையைப் பின்பற்றவும் தொழில் நுட்ப உத்திகளைத் துறைக்கு மாற்றவும் வேண்டி, ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கம் போன்ற முன்னேற்ற ஏற்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. ஒரே இன விதைத் தொகுதிகளின் மூலம் தாவர இனங்களின் தரத்தை உயர்த்துதல், ஒட்டுமுறை தொழில் நுட்ப உத்தி, விதைகள் குறித்த தாவரவியல் ஆராய்ச்சி, தரமுள்ள விதைகள் வழங்குதல், வேளாண்மைக் காடுகளில் களப்பணிச் சோதனைகளை மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் இந்த நிர்வாக அமைப்பின்கீழ் கருதப்பட்டுள்ளன.

1.3. 1987 ஆம் ஆண்டில், வன நிலங்களின் நிலைமை குறித்த ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. மொத்தமாகவுள்ள காட்டு நிலப் பகுதியில் சுமார் 26 சதவீதம் பரப்பளவில் அடர்த்தியான காடுகள் அடங்கியுள்ளன என்றும், எஞ்சிய பரப்பளவில் மரங்கள் பரவலாக (அதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக) வளர்ந்துள்ளன என்றும், மேற்சொன்ன ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது, கடந்த காலத்தில் நம் முயற்சியின் பயனாக மகசூல் பெறமுடிந்தது. ஆனாலும், இவ்வாறு கிடைக்கும் மகசூல் போதுமானதல்ல. நம்மிடமுள்ள காட்டு நிலங்களை நல்ல முறையில் நிருவகித்து, அவற்றின் முழுப் பயனையும் பெறவேண்டும். இதன் நோக்கம், வனப் பாதுகாப்புச் செயலுடன் கூடியதாக இருக்கவேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே, தற்போதுள்ள பகுதிகளை மேம்படுத்துவதுடன் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்ய இயலும். அந்த முறையில், இத்திட்டத்தின்கீழ் நாம் எடுக்கும் அனைத்து வகை முயற்சிகளும் நல்ல முறையில் திட்டமிட்டு, செயல்படுத்த கருதப்பட்டுள்ளது.

1.4. ஏறத்தாழ இரண்டு இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் கூழ்மரத் தோட்டங்கள், மிலாறுத் தோட்டங்கள் மற்றும் ஏனைய மலைத் தேட்டங்களுக்கென பயன்படுத்தப்பட்டு,



காட்டுவள உற்பத்திக்கு கவனம் செலுத்தப்படும். இந்த மலைத் தோட்டங்களிலிருந்து சுமார் 2—21 இலட்சம் டன் அளவிற்கு மரங்கள் கிடைக்கப்பெற்று, காடுபடு பொருள்களைச் சார்ந்துள்ள தொழில்களின் தேவைக்கு வழங்கப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 18 முதல் 20 கோடி அளவிற்கு வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1988-ஆம் ஆண்டு தேசிய வனக் கொள்கையின் விதிமுறைகளைக் கருத்தில் கொண்டு வணிக வகையிலான வனத் தோட்டங்களின் பரப்பளவை மேலும் விரிவாக்கப்படாமல் அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் உற்பத்தியளவு கணிசமாக உயர்த்தப்படும். பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், ரயான், தாகிதம், தோல் பதனிடுதல் மற்றும் ஏனைய தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களின் உற்பத்தியளவை உயர்த்த வேண்டியுள்ளது.

1.5. கிராமங்களுக்குத் தேவைப்படும் சிறிய அளவிலான வெட்டுமரங்கள், விறகு மரங்கள், தீவன தாவரங்கள் ஆகியவற்றிற்குரிய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இன்னொரு வகை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் வருவாய்க் கிராமங்கள் 17,000 உள்ளன. இவற்றில் வனங்களைச் சார்ந்துள்ளவை 3,070 கிராமங்கள் ஆகும். உயிரியல் இடையூறுகள் காரணமாக; வன வளங்களைத் தொடர்ந்து அழிப்பதை அனுமதிக்கக் கூடாது. ஏனெனில், அவ்வாறு அழிக்கப்பட்டால் நாட்டின் சுற்றுப்புறச் சூழலும், தாவர இனங்கள், விலங்கினங்கள் வாழ்வதற்கேற்ற சூழலும் பாதிக்கப்படும். குறிப்பாக வறிய நிலையில் உள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, சேமக் காப்பு வனப் பகுதிகளுக்கு வெளியே வனத் தோட்டங்கள் ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். சமுதாய நிலங்களின் சமூகக் காடு வளர்ப்பு, சேமக் காட்டுப் பகுதியில் இடைநிலை வன அமைப்பு ஏற்படுத்துவது பழங்குடியினர் நலனுக்கென்று காடுபடு சிறுபொருள்கள் தோட்டங்களை உருவாக்குவது போன்ற மக்கள் நலத் திட்டங்களை, வனத்துறை செயல்படுத்தி வருகிறது.

1.6. வனத் துறையில் தேவைப்படும் மேம்பாடு குறித்துத் தெளிவான நிருவாக நடவடிக்கையைப் பெறவேண்டுமாயின் 1991—92 முதல் 2000—2001 வரையிலான பத்தாண்டுத் தொலை நோக்குத் திட்டத்தை தீட்டுவது அவசியமென்று கருதப்பட்டு அதற்கிணங்க அத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

2. வனப் பகுதிகள்:

2.1. தமிழ்நாட்டின் நிலப்பகுதி 1,30,057 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில், வனப்பகுதி 22,698.51 சதுர கி.மீ.

ஆகும். இது தேசிய வனக் கொள்கைப்படி, குறைந்தது 33 சதவீதம் வனப்பகுதி இருக்கவேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கையில், தற்போதைய வனப்பகுதி சுமார் 17.45 சதவீதம் மட்டுமே ஆகும்.

2.2. வனப் பாதுகாப்புச் சட்டம் என்பது மத்திய அரசுச் சட்டமாகும் இச்சட்டம் 1980 அக்டோபர் முதல் செயலிலுள்ளது. பின்னர் காடு வளர்ப்பு அல்லாத பிற நோக்கங்களுக்காக வன நிலங்களை வழங்குமாறு கோரி 4,687 எக்டேர் பரப்பளவு தொடர்பான 157 நேர்வுகள் மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டன. 1,893 எக்டேர் நிலம் சம்பந்தப் பட்ட 119 இனங்களுக்கு அனுமதியளிக்கப் பட்டது. 19 இனங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 1991 ஆகஸ்டில் 10 இனங்கள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன.

3. புதிய திட்டங்கள் —ஒழுங்குமுறைப்படுத்துதல் :

இயற்கை வளங்களையும் எப்போதும் நிலையாக இருக்கின்ற வளர்ச்சிகளையும் பாதுகாப்பதன்மூலம் உலக அளவில் வெப்பத்தைக் கட்டுப்படுத்த முடியும். காடுகள் அழிக்கப்பட்ட வன நிலங்களைத் தரம் உயர்த்துதல், மரம் நடும் பணிகளை மேம்படுத்துதல், நீர்ப்பிரி முகடு மேம்பாடு, ஆற்று நிலம் மற்றும் கடற்கரை நிலம் ஆகியவற்றின் மேம்பாடு உற்பத்தியைப் பெரிதும் உயர்த்துதல் ஆகியவை வனத்துறையின் நோக்கங்களாகும். இந்நோக்கங்களை எய்தும் பொருட்டு, துறை பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது; அவற்றின் விவரங்கள் வருமாறு:—

(அ) தமிழ்நாட்டில் நீலகிரி, ஆனமலை, பழனிமலை, மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதி ஆகிய இடங்களில் ஐந்தாண்டுக் காலத்தில் 1,07,000 எக்டேர் பரப்பளவில் ரூ. 120 கோடி மூலதனச் செலவில் காடுகள் வளர்ப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1989—90, 1990—91 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கான ரூ. 287 இலட்சம் மூலதனச் செலவிலான முன்னோடி திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. இந்த முன்னோடித் திட்டம், 4,000 எக்டேர் பரப்பளவில் செய்து முடிக்கப்பட்டது.

(ஆ) ரூ. 10 கோடி செலவில் நீர்ப்பிரி முகடு மேம்பாடு ஆராய்ச்சித் திட்டம்.

(இ) தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ. 47.99 கோடி செலவில் வனப் பகுதிகளில் காடுகள் மற்றும் நீர்ப்பிரி முகடு மேம்பாடு தொடர்பாக இரண்டு சிறப்புக் கூறுகள் உள்ளன. 1990—91 ஆம் ஆண்டில் விதை சேகரித்தல், நாற்று



வளர்த்தல் குறித்து முன் கூட்டியே நடவடிக்கை எடுப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அதன்படி, 1990—91 ஆம் ஆண்டில் ரூ. 20.54 இலட்சம் செலவு செய்யப்பட்டது. முழுமையான அளவில் வேலைகள் 1991—92 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

சில திட்டங்களை முன்னறிவிப்பதற்கு, இதற்குமுன் எடுத்த நடவடிக்கைகள், நல்ல பயனை அளித்துள்ளன; பின் வரும் திட்டங்களை மேற்கொள்வதற்காக 1990—91-ல் மத்திய அரசு நிதி அனுமதித்துள்ளது :—

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | முலதனச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (அ) | விதை சேகரித்தலும், சான்றளிக்கும் மையமும் | 12.63 |
| (ஆ) | காடுபடு சிறு பொருள்கள் உற்பத்தித் திட்டம் | 13.50 |
| (இ) | வனத் தீ நவீன கட்டுப்பாட்டு முறை | 8.00 |
| (ஈ) | இம் மாநிலத்தில் சந்தன மரப் பாதுகாப்புக்கான அடிப்படை வசதிகள் | ..40.00 |
| | மொத்தம் .. | 74.13 |

4. வருவாய்-செலவு :

1989-90 (கணக்குகள்), 1990-91 (கணக்குகள்), 1991-92 (வரவு-செலவுத் திட்டம்) ஆகிய மூன்றாண்டுகளுக்கான வருவாய் மற்றும் செலவுகள் குறித்த விவரங்கள் வருமாறு :

| (1) | 1989— 90 (கணக்குகள்.) (2) | 1990— 91 (கணக்குகள்.) (3) | 1991— 92 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| வருவாய் .. | 4,937.00 | 4,583.00 | 4,382.00 |
| செலவு .. | 5,087.00 | 6,274.00 | 6,511.00 |

5. காடுபடு பொருள்கள் வழங்கலும், விற்பனையும் :

5.1. காகிதக்கூழ் மரம் :

இம்மாநிலத்தில் காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு தொழிற்சாலைகளுக்கு, தமிழ்நாடு வனத் துறை மூலப்பொருள்களைப் பெருமளவில் வழங்கி வருகிறது. கற்பூர மரம் (Blue Gum) ரோசா தைலமரம் (Rose Gum) மைசூர் கம் (Mysore Gum) தோல் உரிக்கப்பட்ட மிலாறு மரம், மூங்கில், நாணல் வகைகள், மிலாறு பட்டை, தனுக்கு மரம், போன்ற மூலப் பொருள்கள் பல்வேறு தொழிற்சாலை களுக்கு அனுப்பப்படுகின்றன.

1989-90 ஆம் ஆண்டில் 1.94 இலட்சம் டன் பல்வேறு காடுபடு பொருள்கள் அத்தொழிற்சாலைகளுக்கு வழங்கப் பட்டன. அதன் மூலம் ரூ. 14.19 கோடி வருவாய் கிடைத்தது. 1990-91 ஆம் ஆண்டில் 2.22 இலட்சம் டன் காடுபடு பொருள்களை வழங்கியதில் ரூ. 19.00 கோடி வருவாய் கிடைத்தது. 1991-92ஆம் ஆண்டில் 2.71 இலட்சம் டன் கூழ் மரங்கள் பல்வேறு தொழிற்சாலைகளுக்கு வழங்க ஒதுக்கிய தன் மூலம் ரூ. 20.00 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1990-91, 1991-92 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அரசு வரையறுத்துள்ளவாறு தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படு கிற பல்வேறு மூலப் பொருள்களுக்கான விகிதங்கள் பின் வருமாறு :—

| மர இனங்களின் பெயர். | அரசு வரையறுத்துள்ள விதங்கள். 1990-91. | 1991-92. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (டன் ஒன்றுக்கு ரூபாய்) | |
| கற்பூர மரம் .. .. | 925 | 1,065 |
| யூகலிப்டஸ் கிராண்டிஸ் .. | 800 | 920 |
| தோலுரிக்கப்பட்ட மிலாறு மரம் | 600 | 690 |
| யூகலிப்டஸ் ஹைபிரிட் .. | 450 | 520 |
| மூங்கில் .. .. .. | 330 | 380 |
| மிலாறு பட்டை.. .. .. | 2,200 | 2,300 |
| பைனஸ் படூலா .. .. | 660 | 760 |



5.2. விறகு மரம் :

மக்கள் தொகை பெருக்கம், அவர்களின் விறகுத் தேவை ஆகியவற்றின் காரணமாக காடுகள் அழிக்கப்படுவதும் அதிக மாகி வருகிறது. பல்வேறு கிராமங்களில் முன்னர் ஏற்படுத்தப் பட்ட பண்ணைக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் ஏற்கெனவே, வளர்க்கப்பட்ட சமுதாயக் காடுகளிலிருந்து வெட் டப்படும் மரங்களின் மூலம் நகர, நகரியப் பகுதியிலுள்ள மக்களின் விறகுத் தேவை ஓரளவு நிறைவு செய்யப்படுகிறது. வழங்கப் பெறும் விறகு மரங்களின் அளவும், அதன் மூலம் கிடைத்த வருவாய் பற்றிய விவரமும் பின்வரும் விவர அட்ட வணையில் குறிக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | கிடைக்கும் மரங்களின் அளவு (டன்களில்.) | வருவாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) |
| 1988—89 .. .. .. | 2,49,763 | 4,71.48 |
| 1989—90 .. .. .. | 2,66,408 | 649.02 |
| 1990—91 .. .. .. | 3,47,214 | 716.00 |

5.3. சந்தன மரங்கள் :

வடாற்காடு-அம்பேத்கார், சம்புவராயர், தருமபுரி, சேலம், பெரியார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பீடபூமி, மலைப் பகுதிகளிலும், கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் சிறிய பரப்பளவிலும் சந்தன மரங்கள்; இயற்கையாகவே வளர்கின்றன. பட்டுப்போன மரங்கள் மட்டுமே வெட்டியெடுக்கப்படுகின்றன. அவை திருப்பத்தூர் சேலம், சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள மரக் கிடங்குகளில் (Depots) சுத்தப்படுத்தப்படுகின்றன. சுத்தப் படுத்தப்பட்ட சந்தன மரங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப் படுகின்றன.

விற்பனை செய்யப்படும் சந்தன மரங்களின் அளவு, அதன் மூலம் கிடைக்கும் வருவாய் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | விற்பனை செய்யப்பட்ட சந்தன மரத்தின் அளவு. | கிடைத்த வருவாய். | டன் ஒன்றின் சராசரி விலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (மெட்ரிக் டன்.) | (ரூபாய் லட்சத்தில்.) | ரூ. |
| 1988 .. .. | 500.500 | 580.31 | 1,15,945 |
| 1989 .. .. | 967.600 | 1,273.44 | 1,31,608 |
| 1990 .. .. | 642.700 | 1,283.80 | 1,97,903 |

5.4. காடுபடு சிறு பொருள்கள் :

காடுபடு சிறு பொருள்கள் விற்பனை மூலம் 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 95 லட்சம் வருவாய் கிடைத்தது. ஆனால், மேற்சொன்ன வகையில் 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 107 லட்சம் வருவாய் கிடைத்தது. மேலும் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 123 இலட்சம் வருவாய் கிடைத்தது. புளி, கடுக்காய் போன்ற காடுபடு சிறு பொருள்களைச் சேகரிக்கும் பணி, பழங்குடியினர் பெரிய அளவிலான பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிடம், நியாய விலையில் 10 சதவீதம் தள்ளுபடி செய்து குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

6. திட்டப் பணிகள் :

6.1. எதிர்கால எதிர்பார்ப்புகள் :

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மீண்டும் தயாரிப்பதற்கான பணிகள் தொடங்கி செயற்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னர், 1990-91ஆம் ஆண்டில் தொடங்கவேண்டிய ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 191.00 கோடி ஒப்பளிக்கப்பட்டது.

6.1.2. 1990-91 ஆம் ஆண்டில் செலவு ரூ. 2,913.48 இலட்சம் ஆகும். 1991-92-ல் ரூ. 3,334.11லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கீடு



செய்யப்பட்டுள்ள தொகைகள் குறித்த ஒப்பு நோக்கு விவர அட்டவணை வருமாறு :—

| திட்டங்கள். | 1990-91. | 1991-92. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| (1) | (2) | (3) |
| (அ) மாநில மண்வளப் பாதுகாப்பு | 159.21 | 116.26 |
| (ஆ) மாநில காடு வளர்ப்புத் திட்டம் | 2,913.48 | 3,334.11 |
| (இ) மத்திய அரசு பொறுப்பேற்பவை | 142.28 | 134.06 |
| (ஈ) மத்திய அரசு பொறுப்பேற்பவை (50 : 50) | 293.25 | 273.51 |
| (உ) தன்னாட்சி நிறுவனங்கள் .. | 6.01 | .. |
| (ஊ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 243.06 | 224.75 |
| (எ) மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | 510.10 | 220.02 |
| மொத்தம் .. | 4,267.39 | 4,302.71 |

இவ்வாறு 1991-92 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

6.1.3. 1990-91 ஆம் ஆண்டில் 42,943 எக்டேர் பரப்பளவில் புதிதாகக் காடு வளர்ப்புப் பணியும், 16,000 எக்டேர் பரப்பளவில் விமானத்திலிருந்து விதைகள் தெளிப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டன. 1991— 92ஆம் ஆண்டில் 44,000 எக்டேர் பரப்பளவில் புதிதாகக் காடு வளர்க்கும் பணியும், 18,000 ஹெக்டேர் பரப்பளவில் விமானம் மூலம் விதைகள் தூவும் பணியும் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

6.2. மாநிலத் திட்டங்கள் :

6.2.1. 1990-91 ஆம் ஆண்டில் மாநிலத் திட்டத்தின் கீழ், பல்வேறு திட்டங்களும் ரூ. 2,913.48 இலட்சம் செலவில் செயற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 28,588 எக்டேர் பரப்பளவில் தொகுப்புத் தோட்டங்களும் 425 கி.மீ. சாலை

பகுதிகளில் வரிசைத் தோட்டங்களும் வளர்க்கப்பட்டன. 1990-91ஆம் ஆண்டில் மொத்த சாதனை ரூ. 4,267.39 இலட்சம் ஆகும். மொத்தம் 42,943 எக்டேர் தொகுப்புத் தோட்டங்களும், 873 கி.மீ. வரிசைத் தோட்டங்களும் வளர்க்கப்பட்டுள்ளன.

6.2.2. இயற்கைச் சூழல் பாதுகாப்பு, வனவிலங்குப் பாதுகாப்பு, கட்டிடங்கள், சாலைகள் முதலியவற்றைப் பாதுகாத்தல் போன்ற ஏனைய பல்வேறு துறை நடவடிக்கைகள் உட்பட தொகுதியாக மரங்கள் வளர்க்கும் திட்டத்தின் கீழ், 30,000 எக்டேர் பரப்பளவிலும், சாலையோரங்களில் மரங்கள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் 55 கி.மீ. தொலைவிற்கும் ரூ. 33,34.11 இலட்சம் மொத்தச் செலவில், பல்வேறு திட்டங்களை 1991-92-ல் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

6.2.3. 1991-92 ஆம் ஆண்டில், மாநில, மத்திய அரசுத் துறைகளின் கீழ், பல்வேறு திட்டப்பணிகளை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டப் பணிகள் பாதுகாப்பு, புதுப்பித்தல், உற்பத்தி, சமுதாயக் காடுகள், முன்னிலை காடுகள் போன்ற ஐந்து பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு வகைப்படுத்துவதன் மூலம் இட்டத்தின் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த முக்கியக் குறிக்கோள்களை எய்த இயலும்.

**6.2.4. வனப் பாதுகாப்பு :**

வனப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ். 1991-92 ஆம் ஆண்டில். கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | 1991—92 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம். (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. வைகை மற்றும் மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்க நீர்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள். | 116.26 |
| 2. இயற்கை வனப் பாதுகாப்பு .. .. | 23.00 |
| 3. நீலகிரி மாவட்டத்திலுள்ள தார் சரணாலயத்தை மேம்படுத்துதல். | 6.98 |



| (1) | (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 4. பிச்சாவரம், வெப்ப மண்டல சதுப்பு நிலக் காடுகளை மேம்படுத்துதல், பாதுகாத்தல். | 1.50 |
| 5. கோடியக்கரை சரணாலயத்தை மேம்படுத்துதல் | 5.00 |
| 6. முண்டந்துறை சரணாலயத்தை மேம்படுத்துதல் | 11.00 |
| 7. ஆனைமலை சரணாலயத்தை மேம்படுத்துதல் | 4.00 |
| 8. களக்காட்டிலுள்ள சிங்கவால் குரங்கு சரணாலயத்தை மேம்படுத்துதல். | 7.00 |
| 9. முதுமலை வனவிலங்கு சரணாலயத்தை மேம்படுத்துதல். | 8.00 |
| 10. புலிகள் காப்பிடம் .. .. .. | 70.49 |
| 11. கரிக்கிளி பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்துதல். | 2.00 |
| 12. ஆனைமலை, முதுமலைக் காடுகளிலுள்ள யானைகள் பாதுகாப்புத் திட்டம். | 0.34 |
| 13. முதலை வளர்ப்புப் பண்ணை .. .. | 2.17 |
| 14. கோட்ட நிருவாகத்திற்கான பணித் திட்டத்தைத் தயாரித்தல். | 2.01 |
| 15. தகவல் தொடர்பு கட்டிடங்கள் .. .. | 35.00 |
| 16. தமிழ்நாட்டின் கடற்கரை நெடுக மரங்களை வளர்த்தல். | 5.00 |
| 17. வனங்களை ஒருங்கிணைத்தல் .. .. | 8.00 |
| 18. வனங்களைப் பாதுகாத்தல் | 48.00 |
| 19. தொழிலாளர் பணியாளர்களுக்கான வசதிகள் | 4.00 |
| 20. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்தல். | 95.50 |

| (1) | (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 21. இண்டி தேசிய பூங்காவை மேம்படுத்துதல் | 5.00 |
| 22. நீலகிரி உயிரினச் சூழல் பாதுகாப்புத் திட்டம் | 0.01 |
| 23. தேசிய கடல் வாழ் உயிரினப பூங்கா.. .. | .. |
| 23.(அ) மன்னார் வளைகுடா கடல் வாழ் உயிரினக் காப்பிடம் ஏற்படுத்துதல். | 0.01 |
| 24. சௌசிங்கா (நான்கு கொம்புகள் கொண்ட மான்) இனத்தை அடைப்புகளில் வளர்த்தல். | 1.00 |
| 25. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்துதல். | 0.01 |
| 26. பழவேற்காடு பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்துதல் கடல் வாழ் உயிரினப் பூங்காவை மேம்படுத்துதல். | 0.01 |
| 27. காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த நவீன முறைகளைச் செயல்படுத்தல். | 0.53 |
| 28. சட்ட விரோதமான முறையில் வனவிலங்குகளை வேட்டையாடி விற்பனை செய்தலைத் தடை செய்தல். | 0.01 |
| 29. வெப்பமண்டல சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாத்தல், பராமரித்தல். | 1.01 |
| 30. கல்வி மற்றும் பொருள் விளக்கத் திட்டத்திற்கான உதவி. | 0.01 |
| 31. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் | 306.52 |
| 32. வன விளம்பரம் .. .. .. .. | .. |
| மொத்தம் .. | 778.37 |

உயிரினச் சூழல் காப்புப் பகுதிகள், வன விலங்குச் சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்கள் ஆகியவற்றில் மாநில சு மற்றும் மத்திய அரசுத் துறைகளின் கீழ் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொள்வதுடன் சுற்றுச் சூழலைச் சீரமைக்க இத்திட்டங்களின் கீழ் 1,100 எக்டேரில் மரங்கள் வளர்க்கப்படும். சில பெரிய அளவிலான நீர் தேங்கும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். வனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அவை பாதுகாக்கப்படும். தாவர இனங்கள் மற்றும் விலங்கினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலின் தன்மையைப் பாதுகாக்க தேசிய கடல் வாழ் உயிரினப் பூங்கா, புலிகள் காப்பிடம்.



நீலகிரி உயிரினச் சூழல் பாதுகாப்புப் பகுதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. வன விலங்குகளுக்கான 'சுற்றுச்சூழல்' பாதுகாப்பு முயற்சியாக, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல்' பூங்கா மேம்பாடு அமையும், தரம் குறைந்த காடுகளில் மீண்டும் மரங்களை வளரச் செய்வதையும். அவற்றை பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு காடு வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

6.2.5. வனங்களைச் சீரமைத்தல் :

வனங்களைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ், 1991-92ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம் (2) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. விறகு மரக்காடு வளர்ப்பு .. .. | 168.00 |
| 2. தரம் குறைந்த காடுகளில் மீண்டும் மரங்களை வளரச் செய்தல். | 90.00 |
| 3. விறகு மரங்கள் மற்றும் தீவனப் பயிர் சாகுபடி | 15.00 |
| 4. நகர விறகு மரக்காடு வளர்ப்பு .. | 165.00 |
| 5. விமானங்களின் மூலம் விதைகளைத் தெளித்து உயிரினச் சூழலைத் தரம் உயர்த்தல், சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல். | 22.00 |
| 6. மேற்கு மலைத் தொடர் பகுதிகளில் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடு. | 0.02 |
| 7. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் | 220.00 |
| 8. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் .. .. | 233.90 |
| 9. தாவர இன பராமரிப்பு உய்விடங்கள் ஏற்படுத்துதல். | 2.00 |
| மொத்தம் .. | 935.92 |

18,000 எக்டேர் பரப்பளவில் விமானங்கள் மூலம் விதைகள் தெளிப்பதன் மூலம், உயிரினச் சூழலைத் தரம் உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திண்டுக்கல்-அண்ணா, மதுரை, காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியகுமரி ஆகிய மாவட்டங்களில் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற குறிப்பிட்ட பகுதியை மையமாகக் கொண்ட திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

6.2.6. உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட காடு வளர்ப்பு :

மூன்றாவது முக்கியப் பகுதி உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட காடு வளர்ப்பு ஆகும். இதன் கீழ் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1991—92 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம். |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில்.) |
| 1. கூழ் மரத் தோட்டங்கள் .. .. .. | 158.00 |
| 2. மென்மரத் தோட்டங்கள் .. .. .. | 4.50 |
| 3. சந்தன மரத்தோட்டங்கள் .. .. | 42.00 |
| 4. மிலாறு மரத்தோட்டங்கள் .. .. | 14.00 |
| 5. தேக்கு மரத் தோட்டங்கள் .. .. .. | 15.00 |
| 6. காடுபடு சிறு பொருள் தோட்டங்கள் .. | 73.00 |
| 7. மூங்கில் தோட்டங்கள் .. .. .. | 8.75 |
| 8. மரம் வெட்டும் பணிகள் .. .. .. | 3.25 |
| 9. முந்திரி மரத் தோட்டங்கள்.. .. .. | 9.00 |
| மொத்தம் .. | 327.50 |



வரையறுக்கப்பட்ட வனப் பகுதிகளுக்குள் வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வரக்கூடிய மரங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவென்றே குறிப்பாக நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒன்பது திட்டங்களின் கீழ் 6,100 எக்டேர் பரப்பளவில் காடு வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்படும். மிலாறு மரங்களின் அடர்த்தியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

6.2.7. சமூகக்காடு வளர்ப்பு—மக்கள் பங்கேற்கும் திட்டம் :

இந்தத் திட்டத்தின் கீழ், செயல்படுத்தக் கருதப்பட்டுள்ள திட்டங்களாவன :—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம். |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் லட்சத்தில். |
| 1. 'சிடா' வின் உதவி பெறும் சமுதாயக் காடு வளர்ப்பு .. .. .. .. | 1,955.00 |
| 2. பழங்குடியினர் துணைத் திட்டம் .. | 117.01 |
| 3. பரவலாக்கப்பட்ட மக்கள் நாற்றங்கால் திட்டம் | 70.00 |
| 4. இளங்கன்றுகளையும், நாற்றுகளையும் வழங்குதல் .. .. .. .. | 5.25 |
| மொத்தம் .. | 2,147.26 |

மேலே தெரிவித்தவாறு, மக்கள் பங்கேற்கும் இத்திட்டங்கள், மாநிலம் முழுவதிலுமுள்ள புறம்போக்கு நிலங்களிலும், சொற்ப அளவேயுள்ள நிலங்களிலும், இம்மாநிலத்திலுள்ள வடாற்காடு—அம்பேத்கார், திருவண்ணாமலை—சம்புவராயர், சேலம், தருமபுரி, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி போன்ற ஆறு மாவட்டங்களிலுள்ள பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

'சிடா' நிதி உதவியுடன் செயல்படும் சமூகக் காடுகள் திட்டம், 1981-82 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்டப்பணிகள், 1981-82 ஆம் ஆண்டிலிருந்து 1987-88 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மேற்கொள்ளப்பட்டன. ரூ 45.00 கோடி மூலதனச் செலவு செய்யக்

கருதப்பட்டிருக்க, இத்திட்டத்தின் முதல் கட்டப் பணியில்
ரூ. 57.00 கோடி முதலீட்டில், 1.38 இலட்சம் எக்டேர் பரப்ப
வில் காடுகள் வளர்க்கப்பட்டன. இத்திட்டத்தின் இரண்டாவது
கட்டப்பணி ஐந்தாண்டு கால அளவுக்கு (1988-89-லிருந்து
1992-93 வரை) வகுக்கப்பட்டது. இந்த இரண்டாம் கட்டப்
பணிகள் ரூ. 85.40 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன. இதில் புன்செய் நிலங்களில் வேளாண்மைக் காடுகள்
வளர்ப்பு, மரப்பட்டா திட்டம் சமுதாய தரிசு நில மேம்பாட்டுத்
திட்டம், சேமக் காடுகளில் இடைமுகத் தளக்காடு வளர்க்கும்
திட்டம், விதை நாற்று உற்பத்தி விரிவாக்க திட்டம், இதற்கு
ஆதரவான நடவடிக்கைகளான கண்காணித்தல், விளம்பரம்,
பயிற்சி ஒத்துழைப்பு, ஆராய்ச்சி முதலிய பணிகள் ஆகியவை
அடங்கும்.

மண்வள, நீர் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளோடு காடு
வளர்ப்பை ஒருங்கிணைத்து வனப் பகுதிகளை ஒட்டியுள்ள கிராம
மக்களின் தீவிர முழு மனதுடன் கூடிய ஒத்துழைப்பையும் பங்
கேற்பையும் நாடுவதும் பல்நோக்கு அணுகுமுறையுடன் கூடிய
தும், தொன்றுதொட்டு பின்பற்றப்படும் முறையில் அமைந்திராத
தும், வனப் பகுதியில் இடைமுகப்பு காடு வளர்க்கும் புதுமையான
இத்திட்டம் 1988-89 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு
வருகின்றது. கிராமங்களை அடுத்துள்ள அழிந்து பட்ட காடு
களின் உயிரினச் சூழலை மேம்படுத்தி உயர்த்துவதே இத்
திட்டத்தின் புதிய அணுகுமுறையாகும். மேலும் அருகிலுள்ள
கிராம மக்கள் பயன்பெறுவதையும் அதே சமயத்தில் இந்த
உள்ளூர் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதையும்
இத்திட்டம் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில், கடந்த இரண்டு
ஆண்டுகளாகக் கிடைத்த அனுபவம், மிகவும் ஊக்கமளிப்பதாக
வுள்ளது மொத்தத்தில் பல இடங்களிலுள்ள வனப்பகுதி
களை அடுத்துள்ள கிராம மக்களுடன் குறிப்பிடத்தக்க
தொடர்பை ஏற்படுத்தவும், காடுகள் அளவிற்கதிகமாகப் பயன்
படுத்தப்படுவதைத் தவிர்க்கவும், அதுபோலவே அழிந்துபட்ட
காடுகளில் மரங்களை மீண்டும் வளர்க்கவும் துறைக்கு உதவியாக
உள்ளது. முதல் மூன்று ஆண்டுகளில் இடை முகப்பு காடு
வளர்க்கும் நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வரவேற்பையொட்டி
இத்திட்ட நல்ல செயலாக்கம் பெற்று ரூ. 853.00 இலட்சம்
செலவில் 1991-92 ஆண்டில் இத்திட்டம் நீடிக்கப்பட
வேண்டும் எனக் கருதப்பட்டது.

1991-92 ஆம் ஆண்டில், ரூ. 19.55 கோடி செலவில் இத்
திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது

சமுதாய நிலங்கள், ஏரியின் கரையோரங்களில் வளர்க்கப்
பட்டுள்ள மரங்களை விற்பதன் மூலம் கிடைக்கும் வருவாயை





1989-90 ஆம் ஆண்டு வரையில், 50 : 50 என்ற விதத்தில்
ஊராட்சிகளுடன் வனத்துறை பங்கீட்டுக் கொண்டுள்ளது.
1990-91 ஆம் ஆண்டின் முதற்கொண்டு, வருவாய் பங்கீட்டு
விதமானது 60 : 40 என்ற விதத்தில் ஊராட்சிகளுக்கு சாதகமாக
அதிகரிக்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
இறுதிவரையில், வனத்துறை பல்வேறு ஊராட்சிகளுக்கு அவற்
றின் வருவாய் பங்குத் தொகையாக ரூ. 312.83 இலட்சம்
அளித்துள்ளது.

தமிழ்நாட்டிற்குத் தேவையான விறகு மரங்களின் ஒரு பகுதி
இந்த மலைத்தோட்டங்களிலிருந்து கிடைக்கின்றன. சேமக்
காப்பு வனப் பகுதிகளுக்கு வெளியே சமூகக் காடுகளை வளர்ப்
பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு சேமக் காப்பு வனங்
களின் தேவை நெருக்கடி குறைக்கப்பட்டுள்ளது.

பழகுடியினர் பகுதி துணைத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ், ஆறு மாவட்டங்களில் பழங்குடியினர்
பகுதிகளில், மேம்பாட்டுப்பணிகளை நிறைவேற்றுவதன் மூலம்
மக்கள் பங்கேற்கும் மற்றொரு திட்டமும் நிறைவேற்றப்பட்டு
வருகிறது. இந்த நடவடிக்கைகள், பழங்குடியினருக்கு நலம்
பயப்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. மலைத்
தோட்டங்கள், குறிப்பாக காடுபடு சிறு பொருட்கள் மலைத்
தோட்டங்கள் வளர்த்தல், பள்ளிகள், மருந்தகங்கள், கூட்டுறவுச்
சங்கங்கள் போன்ற பல நலன்களைப் பயக்கும் வசதிகளுக்கு
வகை செய்தல், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கு
சத்துணவு வழங்குதல், நியாயமான அடிப்படை வீட்டுத் தேவை
களுக்கு சிறிய மரங்கள், மூங்கில்கள் போன்ற மூலப் பொருட்களை
எடுத்துக்கொள்ள பழங்குடியினருக்கு அனுமதி வழங்குதல்,
சலுகை விலை வீதங்களில் காடுபடு சிறு பொருட்களை விற்
பனை செய்தல் போன்றவை தமிழ்நாட்டின் ஆறு மாவட்டங்
களிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்
பட்ட நல நடவடிக்கைகளாகும்.

வனத்துறை நடத்தி வரும் பள்ளிகளில், சுமார் 2,500 மாண
வர்கள் பயிலுகின்றனர். வனத்துறை பள்ளிகளில் முதல் வகுப்பி
லிருந்து மேல்நிலைப்பள்ளி வகுப்பு வரையில் கல்வி வசதிகளும்,
பழங்குடியினரின் குழந்தைகளுக்குச் செய்து தரப்படுகின்றன.
மாணவர்கள் இல்லங்கள், இலவசமாக புத்தகங்கள் வழங்குதல்
முதலிய பல வசதிகளும் அவர்களுக்குச் செய்து தரப்படுகின்றன.

பரவலாக்கப்பட்ட மக்கள் நாற்றங்கால் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் நிலம் வைத்துள்ள உழவர்களும், கிராம
மக்களும் விற்பனை நோக்கு நாற்றங்கால்களை வளர்க்கவும்
அவ்வாறு வளர்த்த நாற்றங்கால்களை அங்காடி நிலவரத்திற்

கேற்ப விற்பனை செய்யவும் ஊக்குவித்து, இதன் மூலம் அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள், ஏனையோர் வளர்க்கும் நல்ல தரமான நாற்று ஒன்றுக்கு 45 காசு என்ற வீதத்தில் மத்திய அரசு உதவித்தொகை வழங்குகின்றது. இத்திட்டத்தின் பயனீட்டாளர்கள் அங்காடி நிலவரத்திற்கிணங்க தங்களுடைய செடிகளின் விலையை தீர்மானித்து விற்பனை செய்யலாம். இதனால் அவர்களுக்கு வருமானம் கணிசமான அளவிற்கு கிடைப்பதோடு, அவர்களுடைய பொருளாதார நிலையும் மேம்படுகின்றது. 1990-91 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 70.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. 1991-92 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர கருதப்பட்டுள்ளது. கிராம மக்கள், உழவர்கள் மூலம் பல்வேறு மாவட்டங்களில் சுமார் 300 இலட்சம் நாற்றுகள் வளர்க்கப்படும். நலிந்த பிரிவினர் பலர் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

6.2.8. முன்னிலை காடுகள்:

இத்திட்டத்தின்கீழ், 1991-92 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டப்பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1991—92 ஆம் ஆண்டிற்குரிய மூலதனச் செலவு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. வன ஆராய்ச்சி .. .. .. .. | 70.01 |
| 2. ஆராய்ச்சி, பயிற்சி, கல்வி மற்றும் விரிவாக்கம் | 28.58 |
| 3. மாநில வன ஆராய்ச்சி நிலையம் .. .. | 14.93 |
| 4. தென்பிராந்திய வனச் சரகர் கல்லூரி .. | 0.01 |
| மொத்தம் .. | 113.53 |



1991-92 ஆம் ஆண்டில் வனப்பகுதிகளின் வன மர வகைகள் சோலை மர வகைகள், ஆகியவை குறித்த ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அறிவியல் அறிஞர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் காடு வளர்ப்பு குறித்த ஆராய்ச்சி பெருந்திட்டங்களை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில், ஆய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க, ஆய்வு நிலையம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

6.2.9. பகுதி II — திட்டங்கள்

1991-92 ஆம் ஆண்டில் 10 புதிய திட்டங்களை ரூ. 41.59 இலட்சம் செலவில் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. சேலத்தில் வனம் சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கவனிக்க நீதிமன்றம் ஏற்படுத்துதல், வண்டலூரில் தமிழ்நாடு வன ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்தல், செடி வளர்க்கும் இடங்களை அமைத்தல் போன்ற புதுமையான திட்டங்களை 1991-92 ஆம் ஆண்டில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

6.2.10 :

வனத்துறை 1991-92 ஆம் ஆண்டில் 18,000 எக்டேர் பரப்பளவில் விமானங்களைக் கொண்டு விதைகளைத் தூவுதல், 44,000 எக்டேர் பரப்பளவில் காடு வளர்த்தல் ஆகியவற்றுடன் பல்வேறு மேம்பாட்டு பணிகளையும் மொத்தம் ரூ. 4,302.71 இலட்சம் மூலதனச் செலவில் மேற்கொள்ளக் கருதியுள்ளது.

7. இருபது அம்சத் திட்டம் செயல்படுத்துதல் :

7.1. சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரையும், கிராமப்புற ஏழை மக்களையும் முன்னேற்றுவதற்காக, பொதுமக்களை முழு அளவில் ஈடுபடுத்தி அதிக அளவில் மரங்களை வளர்ப்பதும், வன வளத்தைப் பெருக்குவதும் புதிய 20 அம்சத் திட்டத்தின் 16 ஆம் இனத்தில் இடம் பெற்றுள்ளவையாகும். இத்திட்டத்தின் 1981 — 82 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படுகிறது. இந்த பத்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டின் வனத்துறை 3.25 இலட்சம் எக்டேருக்கும் அதிகமான பரப்பில் சுமார் 12,500 இலட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளது. (1981-82, 1990-91).

7.2. 1991-92 ஆம் ஆண்டில் நமது இலக்குகள் வருமாறு :

(அ) நடப்படவுள்ள மரக்கன்றுகள்—800 இலட்சம்.

(ஆ) நடப்படவுள்ள பரப்பு—54,000 எக்டேர்.

8. தென் பிராந்திய வனச் சரகர் கல்லூரி :

1987 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழிருந்து தென்பிராந்திய வனச்சரகர்கள் கல்லூரியை, 1990 ஆம் ஆண்டு பிப்ரவரியில் நமது அரசு எடுத்துக் கொண்டது. வன தொழில் பழகுநர், வனச்சரகர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்கான சாத்தியக் கூறுகள்பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதற்கிடையில் சமூகக்காடு வளர்ப்பதற்கான பயிற்சி வகுப்புகளும், அதிகாரிகள், வனச்சரகர்களுக்கான அதிகச் செயல்திறம் பற்றியும் இக்கல்லூரியில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

9. தமிழ்நாடு வன ஆராய்ச்சி நிலையம் :

இயற்கையான காட்டுச் செல்வத்தைப் பாதுகாப்பதற்கும், காடுபடு பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் ஏற்றவகையில், வன ஆராய்ச்சி, சுற்றுப்புறச் சூழல் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றில் தற்போது நாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, வன ஆராய்ச்சி-பயிற்சி இயக்கம் ஒன்று 1991—92ல் ஏற்படுத்தப்பட்டது, இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஆராய்ச்சி நிலையம், தங்குமிடங்களுக்கான வளாகம் ஆகியவற்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான பல்வேறு பணிகளையும் தொடங்குவதற்காக நமது அரசு 1991-92 ஆம் ஆண்டு பகுதி இத்திட்டத்தின் கீழ் ரூ. 17.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

மொத்தம் ரூ. 35 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களுக்கும், தற்போதுள்ள பணியாளர்களுக்கும் ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 17.50 கோடி செலவு ஏற்படும். தேவைப்படும் கூடுதல் நிதி ஒதுக்கீடு சுமார் ரூ. 17.50 கோடி ஆகும், விரிவான ஆராய்ச்சித் திட்டங்களை நாம் மேற்கொள்ள இயலும் வகையில் இத்திட்டத்திற்கு வெளி உதவியும் கோரப்படும். தொழில்நுட்பத்தை களப்பணியில் பயன்படுத்துதல் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக நிதியை முதலீடு செய்வது நல்ல பலனைத் தரும்.

10. சட்ட நிலைமை :

வனப்பாதுகாப்பு-நிருவாகம் ஆகியவற்றுக்காகத் தமிழ்நாட்டில் பின்வரும் சட்டங்கள் செயலிலுள்ளன :—

(அ) தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டம்.



(ஆ) தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு தனியார் வனப்பாதுகாப்புச் சட்டம்.

(இ) தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு மலைப்பகுதி பாதுகாப்பு (மரங்களைப் பாதுகாத்தல்) சட்டம்.

(ஈ) 1972 ஆம் ஆண்டு வன உயிரின் (பாதுகாப்புச்) சட்டம்.

(உ) 1980 ஆம் ஆண்டு வனம் (பாதுகாப்பு) சட்டம்.

முந்தைய பல சட்டங்கள் ஏற்கெனவே இயற்றப்பட்டு நீண்ட காலத்திற்கு முன்னரே செயலுக்கு வந்துள்ளன. மக்களுக்கு காடுபடு பொருள்களின் மீதுள்ள வேட்கை எப்போதும் அதிகரித்து வரும் நவீனப் போக்காலும், இச்சட்டங்களிலுள்ள சில குறைபாடுகளாலும் சட்டத்தை தகுந்த முறையில் திருத்த வேண்டியதாயிற்று. கள்ளத்தனமாக மரங்களை வெட்டுதல், கடத்துதல் வனவிலங்குகளை கள்ளத்தன்மாக வேட்டையாடுதல் ( Poaching ) ஆக்கிரமிப்பு ஆகியவற்றிலிருந்து நமது வனங்களைப் பாதுகாக்க நம் சட்டங்களில் திருத்தங்கள் செய்வது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

11. தகவல் தொடர்பு முறை :

தீ விபத்து போன்ற இயற்கை காரணங்கள் உட்பட கொள்ளையடித்தல், அழித்தல் போன்ற பல்வேறு கூறுகளிலிருந்து வனத்தைத் திறம்படப் பாதுகாக்க தகவல் தொடர்பு முறை மிகவும் அவசியமாகும். இதைக் கவனத்தில் கொண்டு, முதலில் நீலகிரி மாவட்டத்தில் உயர் அலை கம்பியில்லாத தந்தி தகவல்தொடர்பு சாதனங்கள் நிறுவப்பட்டன. இதனால், அந்தப் பகுதியில் தந்தங்களுக்காக யானைகளைக் கள்ளத்தனமாக வேட்டையாடுதல், சந்தன மரங்களைக் கடத்தல் ஆகியவை பெருமளவில் குறைந்துள்ளன. இரண்டாம் நிலையில் தருமபுரி, சேலம், பெரியார் மாவட்டங்களில் அச்சாதனங்கள் நிறுவப்பட்டன. மொத்தம் 18 உயர் அலை கம்பியில்லாத் தந்திச் சாதனங்களும் ஏழு நிலையான கம்பியில்லாத் தந்திச்சாதனங்களும் இப்பகுதியில் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி, திருச்சி, வேலூர் வட்டங்களில் நிறுவ மேலும் 25 உயர் அலை கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள் 25 நிலையான கம்பியில்லாத் தந்திசாதன நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக 1990-91-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வனங்களுக்கு தீங்கு ஏற்படத் தக்க ஏனையப் பகுதிகளுக்கும் இத்தகைய நவீன வசதிகளை விரிவுபடுத்தும் வகையில், திட்டங்களையும், திட்டப்பணிகளையும் உருவாக்குவதன் மூலம் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. வனப் பாதுகாப்பு நடவடிக்கைகள் :

12.1. வனப் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை) :

1983-84 ஆம் ஆண்டில் காவல்துறைத் துணைத் தலைவர் ஒருவரின் தலைமையில் குற்றப் புலனாய்வுத்துறை இந்த மாநிலத்தில் உருவாக்கப்பட்டது. காவல்துறைத் துணைத் தலைவர் பதவி 1986 ஆம் ஆண்டு ஏப்ரலில் நிலை உயர்த்தப்பட்டது. இந்தப் பிரிவு இரண்டு காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், 104 ஏனைய அதிகாரிகள் ஆகியோருடன் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, வனம் சம்பந்தப்பட்ட முக்கியமான குற்றங்களையும், பன்மாநிலக் குற்றங்களையும் புலனாய்வு செய்கிறது. பிரிவு துப்பறிந்து கண்டுபிடிக்கும் சிறிய குற்றங்கள் வனத்துறைக்கு மாற்றப்படுகின்றன. வனத்துறையால் துப்பறிந்து கண்டுபிடிக்கப்படும் அதிகத் தொகை சம்பந்தப்பட்ட அல்லது பன்மாநிலக் குற்றங்கள் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் வனப் பிரிவிற்கு மாற்றப்படுகின்றன. பெருகிவரும் வனப் பொருட்கள் கடத்தலினால் ஏற்படும் அச்சுறுத்தலை சமாளிக்க வன குற்ற புலலனாய்வு பிரிவை பலப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் ரூ. 78.47 இலட்சம் மதிப்புள்ள காடுபடு பொருள்கள் சம்பந்தப்பட்ட 110 வழக்குகளை இப்பிரிவு கண்டு பிடித்துள்ளது. இதில் ரூ. 34.40 இலட்சம் மதிப்புடைய 23.39 டன் சந்தன மரங்கள் சம்பந்தப்பட்ட 13 வழக்குகள் வனத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டு குற்றப் புலனாய்வுத் துறையின் வனப்பிரிவிற்கு மாற்றப்பட்டன.

12.2. சந்தன மரம் சம்பந்தப்பட்ட குற்றங்கள் :

அண்மை ஆண்டுகளில் சந்தன மரத்தின் விலை அதிகரித்ததால், சந்தனமரக் கடத்நல் அதிகமாக உள்ளது. சந்தன மரத்தின் விலை கடந்த பத்தாண்டுகளில் டன் ஒன்றுக்கு ரூ.20,000 விருந்து ரூ. 2,00,000 ஆக அதாவது பத்து மடங்காக உயர்ந்துள்ளது. சந்தன மரக் கடத்தலை தடுப்பதற்கு தமிழக அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(அ) வன அதிகாரிகளும் அவர்களுடைய பணியாளர்களும் இரவும், பகலுமாக நன்கு திட்டமிட்டு சோதனை செய்ததன் விளைவாக 1991-ஆம் ஆண்டு மார்ச் 31 முடிய 2,385 சந்தன மரக் கடத்தல் குற்றங்களைக் கண்டுபிடித்து ரூ. 1,147.08 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 734 டன் சந்தன மரத்தைக் கைப்பற்றினர்,



(ஆ) பின்வரும் பன்மாநில எல்லைகளிலும், கடத்தல் செய்யப்படும் முக்கியமான பகுதிகளிலும் சுற்றி சோதனை செய்யும் மூன்று சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.—

1. ஓசூர்-பெங்களூர் எல்லைப்பகுதி (கர்நாடக எல்லை).

2. கோயம்புத்தூர்-பாலக்காடு எல்லை(கேரள எல்லை).

3. திருப்பத்தூர்-ஆலங்காயம் சிங்காரப்பெட்.

(இ) ஆயுதந்தாங்கிய சந்தன மரக்கடத்தல்காரர்களின் அச்சுறுத்துதலைச் சமாளிக்கும் பொருட்டு மத்திய உதவி ரூ. 210 இலட்சம் பெறுவதற்காக மாநில அரசு அனுப்பிய செயற் குறிப்புகளின் அடிப்படையில் 1990-91 ஆம் ஆண்டில் ஆயுதங்களும், கம்பியில்லாத் தந்திச் சாதனங்களும் வாங்குவதற்காக மத்திய அரசு ரூ. 40.00 இலட்சத்திற்கு அனுமதியளித்துள்ளது.

12.3 வனக் குற்றங்கள் :

சந்தன மரங்கள் தொடர்பான குற்றங்கள் மட்டுமல்லாது ஏனைய வனக் குற்றங்களையும் துறை அதிகாரிகள் கண்டு பிடித்தனர். 1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் 37,710 வனக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ. 43.00 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்படடது.

13. வனக் கழகங்கள் :

13.1. இம்மாநிலத்தில் மூன்று வனக் கழகங்கள் உள்ளன. அவையாவன :—

(அ) தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், திருச்சிராப்பள்ளி.

(ஆ) தமிழ்நாடு தேயிலைத்தோட்டக் கழகம், குன்னூர்.

(இ) அரசு ரப்பர் கழகம், நாகர்கோயில்.

13.2. இரு கழகங்களின் பணிகளை கணிசமான அளவுக்கு அதிகரிப்பதற்கு 1990-91 ஆம் ஆண்டில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

1. சின்கோனா துறையின் பணி தமிழ்நாடு தேயிலைத் தோட்ட கழக பணியுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. அந் நிலத்தின் ஒரு பகுதி தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகப் பொறுப்பில் விடப்பட்டது. மரங்கள் அடர்ந்த நிலங்களை வனத்துறை எடுத்துக் கொண்டது.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் 110 எக்டேர் பரப்பில் வளர்க்கப்பட்ட கிராம்புத் தோட்டங்கள், நாகர்கோயில் அரசு ரப்பர் கழகத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன.

**13.3. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சி :**

13.3.1. இக்கழகம் 13—6—1974 அன்று ஏற்படுத்தப்பட்டு திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும். அரசு அளித்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 72.06 இலட்சமாகும்.

13.3.2. தமிழ்நாடு வனத்துறை தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பசும்பொன்முத்துராமலிங்கத்தேவர் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 71,669 எக்டேர் நிலப்பரப்பை தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு குத்தகை அளித்துள்ளது. இக்கழகம், இம்மாநிலத்திலுள்ள காடுபடு பொருட்கள் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு காகிதக் கூழ் மரங்களை அளிக்கும் முக்கியமான நிறுவனமாகும்.

13.3.3. 1990-91 ஆம் ஆண்டில் இக்கழகத்தின் பணிகள் வருமாறு :—

(அ) திருவாளர்கள் சேஷசாயி காகித ஆலைக்கு 42,000 டன் காகிதக்கூழ் மரங்களும், திருவாளர்கள் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு 38,000 டன் காகிதக்கூழ் மரங்களும் வழங்குமாறு அரசு ஆணை பிறப்பித்தது. காகிதக்கூழ் மரத்தின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 450 என்றும் நிர்வாகக் கட்டணம் 5 சதவீதம் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழிற் சாலைகளுக்கு காகிதக்கூழ் விற்பனை செய்வதன் மூலம் ரூ. 3.78 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 30,000 எக்டேர் பரப்பளவில் உயர்விளைச்சல் தரும் தைல மரத் தோட்டங்கள் (கூழ்மரம்) வளர்ப்பதற்கென ஒரு பெருந்திட்டம் தயாரித்துள்ளது. இத்திட்டம் ரூ. 84.73 கோடிகள் முதலீட்டுடன் 6 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. ஆண்டொன்றுக்கு 5,000 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேம்படுத்தப்பட்ட நுட்பங்களைக் கையாண்டும், கூழ்மர உற்பத்தி விளைச்சலை அதிகமாகவும் அதன் மூலம் கூழ் மர விநியோகத்தை அதிகரிக்கவும் இத்திட்டத்தின் மூலம் வாய்ப்பு உண்டு. காடுகளைச் சார்ந்த தொழிற்சாலைகளிடம் கூழ்மரத் தேவை மிகுந்து வருகிறது. இத்திட்டத்தின் உத்தேச விளைச்சல் ஆண்டிற்கு 4 இலட்சம் டன்கள் ஆகும்.



(இ) இத்திட்டம் வங்கி நிதி நிறுவனங்கள் நிதியுதவியுடன் 1991-92 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு நிதி உதவி பெறுவதற்காக வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

(ஈ) இக்கழகம் வனத்துறையிடமிருந்து குத்தகைக்கு பெற்றுள்ள நிலங்களுக்கு வழங்கவேண்டிய குத்தகைத் தொகை பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

முந்திரி தோட்டம் அமைந்த பகுதி— ஆண்டு ஒன்றுக்கு எக்டேருக்கு ரூ. 800 வீதம்.

முந்திரி அல்லாத பகுதி— ஆண்டு ஒன்றுக்கு எக்டேருக்கு ரூ. 400 வீதம்.

13.3.4. 1990-91 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரவு-செலவுச் சுருக்கம் பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மொத்த வருவாய் .. .. .. .. | 696.73 |
| மொத்த செலவு .. .. .. .. | 354.32 |
| குத்தகைத் தொகை கொடுப்பதற்கு முன்னர் இருந்த ஆதாயம். .. | 342.41 |
| குத்தகைத் தொகை .. .. .. .. | 246.75 |
| நிகர இலாபம் .. .. .. .. | 78.75 |

**13.4. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர் :**

13.4.1. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு தற்போது தமிழ்நாட்டில், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் சுமார் 6,100 எக்டேர் நிலங்கள் உள்ளன. இக்கழகத்தில் மொத்தம், சுமார் 660 பணியாளர்களும், 6,600 நிரந்தரத் தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றனர். இவர்களைத் தவிர, இக்கழகம் தற்காலிக அடிப்படையில் சுமார் 3,500 தொழிலாளர்களை பணியமர்த்தியுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 கோடியாகும். இதில் ரூ. 2.74 கோடி செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ஆகும்.

இக்கழகம் தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமானதாகும். இக்கழகத்தில் தற்போது 14 தொழிற்பிரிவுகள் உள்ளன. மேலும் 10 பிரிவுகளைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப் பிரிவுகள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புகள் முழுவதையும் தமிழ்நாட்டிலுள்ள குன்னூரில் அமைந்துள்ள பதிவுபெற்ற அலுவலகம் நிருவகித்து வருகின்றது.

13.4.2. இக்கழகம் முதலில் 1968 பிப்ரவரியில் அரசினர் தேயிலைத் தோட்டமாகத் தொடங்கப்பட்டது. பின்னர் 1-4-1976 ஆம் நாளிலிருந்து இது (1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அரசு கம்பெனியாக) ஒரு கழகமாக மாற்றப் பட்டது. சாஸ்த்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தின்படி தாயகம் திரும்பிய இலங்கை தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற் காகவே இத்திட்டம் முதலில் தொடங்கப்பட்டது. தொடக்கத் தில் இதில் 5 பிரிவுகள் செயல்பட்டு வந்தன. சுமார் 1,500 எக்டேர் பரப்பு கொண்டதாக இருந்தது. இது பின்னர் பல நிலைகளில் விரிவுபடுத்தப்பட்டது. தாயகம் திரும்பியோர் மறு வாழ்வு இயக்ககம் ஒதுக்கீடு செய்த 2,442 குடும்பங்களுக்கு இதில் மறுவாழ்வு கொடுக்கப்பட்டது. தாயகம் திரும்பியோர் வந்து சேர்வதற்கு முன்னர் அடிப்படை பணிகளை மேற் கொள் வதற்காக கொண்டுவரப்பட்ட, தாயகம் திரும்பியோரல்லாத 25 குடும்பங்கள் நிரந்தரத் தொழிலாளர்களாகப் பணியமர்த் தப்பட்டுள்ளனர். தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு திட்டத் தின் கீழ் 2,423 எக்டேர்களில் ஏற்படுத்தப்பட்ட தேயிலைத் தோட்டங்களுடன், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திடடத்தின் கீழ் 347 எக்டேரில் ஏற்படுத்தப்பட்ட தேயிலை தோட்டங்கள் இக்கழகத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். இதனால் 471 தொழிலாளர்கள் கூடுதலாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை யிலிருந்து தாயகம் திரும்பியோராவார். இது தேயிலை வளர்ப்புத் திட்டத்திற்காக நேரடியாக ஏற்படுத்தப்பட்ட தன்று.

13.4.3. 1990 ஏப்ரல் திங்களில் சின்கோனாத்துறை, தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் இணைக்கப்பட்டது. மூன்னாள் சின்கோனாத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்கள் அனைத்தும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தின் பொறுப்பில் விடப்பட்டன. இருந்தபோதிலும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இன்றைய தேவைகளை மதிப் பிடுவதும், அத்தேவைகளுக்கான நிலங்களை இக்கழகத்தின் கட்டுப் பாட்டின்கிழ் மாற்ற வேண்டியதும் அவசியமென்று கருதப்பட் டது. காடுகள் வளர்ந்துள்ள ஏனையப் பகுதிகளையும், உயிரின் வாழ்க்கை சூழல் எளிதில் ஊறுபடத்தக்க பகுதிகளையும்,



வனத்துறைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கெனத் தனி
அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் மொத்தமுள்ள 6,40,908
எக்டேர் பரப்பில், நீலகிரி கோயம்புத்தூர். மாவட்டங்களில்
மட்டும் அடங்கியுள்ள 3,338.75 எக்டேர் பரப்பு உரிமை
மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு தேயிலைத்தோட்டக் கழகத்
தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அதே
வேளையில் 3,070.33 எக்டேர் பரப்பு தமிழ்நாடு வனத்துறையின்
கட்டுப்பாட்டின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. இந்த சின்கோனா
தோட்டங்கள் தொடர்பாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்
கழகத்தில் கூடுதலாக 1,500 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்
டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அன்றைய
சின்கோனாத் துறையில் பல்வேறு திட்டங்களின் கீழ்
மறுவாழ்வு அளிக்கப்பட்ட இலங்கையிலிருந்து தாயகம்
திரும்பியோராவர். ஆனைமலை மற்றும் நீலகிரியில்
1990-91 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 5 முதல்
6 ஆண்டுகளில் சுமார் 60 கோடி ரூபாய் செலவில் தேயிலை
வளர்ப்பதற்காக சின்கோனாத்துறையிலிருந்து மாற்றம் செய்யப்
பட்ட 3,000 எக்டேர் நிலத்தை உபயோகிக்கக் கருதப்பட்டுள்ளது.
அதில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக நிதியிலிருந்து
ரூ. 50.00 கோடியும் எஞ்சியுள்ள தொகை தேசிய
வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (Nabard) இல்
இருந்து கடனாகவும் பெறபடும். இத்திட்டத்தின் மூலம் 7,500
மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அவற்றுள் 75 சதவீதம்
பெண்களாகும்.

13.4.4. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தேயிலை
பயிரிடுவதுடன் சுமார் 50 எக்டேர் பரப்பில் ஏலமும் தற்
போதுள்ள தேயிலைத் தோட்டப்பகுதியில் இரண்டாம் பயிராக
சுமார் 1,000 எக்டேர் பரப்பில் மிளகும் பயிரிடுகிறது.
மலேரியா எதிர்ப்பு மருந்தான கொயினா சல்பேட் தயாரிப்
பதற்காக சுமார் 160 எக்டேர் பரப்பில் தமிழ்நாடு தேயிலைத்
தோட்டக் கழகம் சின்கோனா பயிரிட்டு வருகிறது.

13.4.5. தற்போது 4 தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்
பட்டு வருகின்றன. தேயிலை தோட்டங்களில் உற்பத்தியாகும்
பச்சைத் தேயிலையை பதப்படுத்துவதற்காகத் தற்போதுள்ள
தொழிற்சாலைகளுடன் மேலும் இரண்டு தொழிற்சாலைகளை
நிறுவ இக்கழகம் உத்தேசித்துள்ளது. இந்த இரு தொழிற்
சாலைகளுக்கான தோராயமான மொத்த முதலீடு கிட்டத்தட்ட
ரூ. 5 கோடியாகும். இக்கழகம் தற்போது ஆண்டொன்றுக்கு
சுமார் 6 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி

செய்கிறது. பதப்படுத்தப்பட்ட தேயிலை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1990-91 | | |
|---|---|---|---|
| | விற்பனை செய்த அளவு (கிலோ கிராமில்). | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | சராசரி விலை. (ரூபாய் இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) |
| ஏல விற்பனை. | | | |
| 1. சேரங்கோடு தேயிலைத் தொழிற்சாலை .. .. | 16,28,150 | 599.14 | 36.80 |
| சேரம்பாடி தேயிலைத் தொழிற்சாலை .. .. | 14,53,878 | 535.21 | 36.81 |
| பாண்டியாறு தேயிலைத் தொழிற்சாலை .. .. | 15,12,604 | 571.96 | 37.81 |
| ஹைகர்டல் தேயிலைத் தொழிற்சாலை, குன்னூர் .. | 10,88,620 | 389.46 | 35.78 |
| 2. சரக்கு ஒப்படைக்கப்பெறுவதன் பேரில் பெறும் விற்பனைத்தொகை | 2,80,084 | 92.68 | 33.09 |
| 3. தேயிலைப் பொட்டல விற்பனை .. .. | 67,803 | 29.46 | 43.45 |
| 4. ஏற்றுமதி விற்பனை | 3,200 | 1.35 | 42.19 |
| மொத்தம் .. | 60,34,339 | 2,219.26 | 36.78 |

13.4.6. தொழிலாளர் நல்லுறவை வளர்ப்பதற்காக தொழிலாளர்களுடன் 3 ஆண்டுகால ஒப்பந்தமொன்றை இக்கழகம் செய்துகொண்டுள்ளது. இக்கழக தொழிலாளர்களுக்கு தனியார் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு இணையாக ஊதியக் கொடையும், கருணைத் தொகையும் வழங்கப்பட்டுள்ளன.

அப்பகுதியிலுள்ள தனியார் தொழிற்சாலையில் தற்போதுள்ள ஊதிய வீதமும், அதாவது நாள் ஒன்றுக்கு சுமார் 25 ரூபாய் அளவிலான ஊதிய வீதமும், கழகத்தின் தற்போதைய



ஊதிய வீதமும், ஒன்றேயாகும். இவற்றுடன் இக்கழகம் மின் வசதியுடன் கூடிய இலவச வீட்டு வசதி, துப்புரவு, குடிநீர் வழங்கல், மருத்துவம், கல்வி போன்ற சட்டபூர்வமான அனைத்து வசதிகளையும் ஏனைய வசதிகளையும் தொழிலாளர்களுக்கு வழங்குகிறது. மேலும், இக்கழகத்தின் தொழிலாளர்களுக்கு மேம்படுத்திய மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கும் வகையில் சட்டபூர்வமான கடப்பாடுகளை மேற்கொள்வதற்காக, இக்கழகம் இரு பெரிய மருத்துவ மனைகள் கட்டுவதற்காகத் திட்டங்கள் வகுத்துள்ளது. இப்பணி இவ்வாண்டிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டங்களை முடித்த பின்னர், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் சேரம்பாடியில் 72 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவ மனையையும் கோத்தகிரியில் 15 படுக்கை வசதியுடன் கூடிய மற்றொரு மருத்துவ மனையையும் கொண்டிருக்கும்.

13.4.7. இவ்வாண்டு இக்கழகம், தனது தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்கும் பொறுப்பை நிறைவு செய்ய பணிக்கொடை நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில சுமார் 75 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டது. இந்நிதியின் வாயிலாக முந்தைய தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழக தொழில் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 5,000 தொழிலாளர்கள் முதற்கண் பயனடைந்தனர். கூடுதலாக 74 இலட்சம் ரூபாயை முதலீடு செய்யவும், அரசாணையின்படி தமிழ்நாடு தேயிலைத்தோட்ட கழகத்தால் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள முந்தைய சின்கோனாத் துறையின் பணியாளர்களுக்கு இத்திட்டத்தை நீட்டிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

13.4.8. 1—4—1990-லிருந்து 31—3—1991 வரையிலான கால அளவில் தேயிலை விளைச்சல் (அதாவது தயார் நிலைத் தேயிலை) 61.92 இலட்சம் கிலோ கிராம் ஆகும். இக்கால அளவில் கிடைத்த பெருமொத்த வருவாய் 2,300.00 இலட்சம் ரூபாயாகும். இக்கால அளவில் குத்தகைத் தொகை மற்றும் மதிப்புக் குறைகள் போக ஏற்பட்ட பெருமொத்த செலவு 1,732.00 இலட்சம் ரூபாயாகும்.

13.5. அரசு ரப்பர் தோட்ட கழகம், நாகர்கோயில் :

13.5.1. ரப்பர் தோட்டங்கள் வளர்ப்பதற்கு நம்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டமே சிறந்த இடமாகும். தமிழ்நாடு வனத்துறை கன்னியாகுமரி மாவட்டத்தில் 1960 ஆம் ஆண்டிலிருந்து 1979-80 வரையிலான கால அளவில், சுமார் 4,705 எக்டேர் பரப்பளவில் ரப்பர் பயிரிடப்பட்டது. 30—9—1984 வரை கீரிப்பாறை, மணலோடை ஆகிய இடங்களிலிருந்து ரப்பர் தோட்டங்களும், ரப்பர் தொழிற்சாலைகளும் அரசின் வனத்துறை நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தன. இதனை ஒரு கழகமாக நடத்துவதற்கான பொருளாதார நிலை, நிலத்து

நிற்கும் தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு 1—10—1984-லிருந்து தனிக்கழகம் ஒன்று அமைக்கப்பட்டது. அனைத்து ரப்பர் தோட்டங்களும், தொழிற்சாலைகளும் இக்கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. ரப்பர் பால் சேகரித்தல், அதனை உற்பத்தி பொருட்களாக்குதல், விற்பனை செய்தல், ஆகியவற்றை இக்கழகம் மேற்கொள்கிறது. வணிக நிருவாகத்திற்காக இக்கழகத்தின் அமைப்பின் கீழுள்ள 110 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட கிராம்புத் தோட்டத்தை நிர்வகிக்கும் பணியை இக்கழகம் 1—4—1990-ல் மேற்கொண்டது.

13.5.2. ரப்பர்பால் வடிப்பவர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள், ஏனையோர் அடங்கிய 2,500 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகள், தேசிய விடுமுறை நாட்கள், மழை நாட்கள் ஆகிய நாட்கள் நீங்கலாக மற்ற நாட்களில் ரப்பர் மரங்களில் பால் வடிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு ரப்பர் தோட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட அடர்த்தி வகை ரப்பர் பால், விரிப்பு, ரப்பர், நீடித்துழைக்கும் ரப்பர் போன்றவற்றையும் ஏனைய பொருட்களையும் உற்பத்தி செய்வதற்காக, கீரிப்பாறை, மணலோடை ஆகிய இடங்களிலுள்ள இரப்பர் தொழிற்சாலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

13.5.3. இக்கழகம் 2,500 தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ளது. இவர்களில் 285 தொழிலாளர்கள் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் ஆவர். வீட்டு வசதி, மின் வசதி, குடிநீர் வழங்கல், மருத்துவப் பராமரிப்பு பற்றிய கல்வியறிவு, மனமகிழ் மன்றங்கள், குழந்தைகள், காப்பகங்கள் குடிநீர் வசதிகள், குழந்தைகளுக்குச் சத்துணவு முதலியன போன்ற அனைத்து வசதிகள் தங்கள் தொழிலாளர்களுக்கு செய்து கொடுப்பதில் அரசு இரப்பர் தோட்டக் கழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. தொழிலாளர் நல நடவடிக்கைகளுக்காக 1990-91 ஆம் ஆண்டில் 39.57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

13.5.4. இக்கழகம் ஏழு பள்ளிகளை நிருவகித்து வருகிறது. இப்பள்ளிகளில் 1,144 மாணவர்கள் பயில்கின்றனர். கீரிப்பாறையில் 10 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை ஒன்றும் சித்தூரில் 6 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை ஒன்றும் ஆக இரு தோட்ட மருத்துவ மனைகள் (Garden Hospitals) உள்ளன. இக்கழகத்தின் கீழ் 7 மருந்தகங்கள் உள்ளன.

13.5.5. உற்பத்தி நாட் கூலிக்குப் பதிலாக மாத ஊதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி தொழிலாளர்கள் 19—10—1990 முதல் 21—12—1990 வரை வேலை நிறுத்



தம் செய்ததால் 1990-91 ஆம் ஆண்டின் உற்பத்தியில் தடை ஏற்பட்டது. இவ்வேலை நிறுத்தத்தால், 65 நாட்களில் ரப்பர் உற்பத்தி இழப்பு ஏற்பட்டது.

13.5.6. கடந்த 3 ஆண்டுகளில் மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை வருவாய் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு. | உற்பத்தி (மெட்ரிக் டன்னில்). | விற்பனை (மெட்ரிக் டன்னில்.) | வருவாய் (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1988-89 .. .. | 3.160 | 3,500 | 767.77 |
| 1989-90 .. .. | 3,196 | 3,347 | 836.43 |
| 1990-91 .. .. | 2,531 | 2,142 | 653.00 |

13.5.7. கடந்த மூன்று ஆண்டுகளில் ரப்பர் விற்பனையில் எய்திய ஆதாயம் மற்றும் இழப்பின் ஆண்டு வாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவை:—

(ரூபாய் இலட்சத்தில்.)

| ஆண்டு. | ரப்பர் விற்பனை. | செலவினம். | நிகர ஆதாயம். | வரி விதிப்பதற்கு பின்னர் ஏற்பட்ட உபரி. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1988-89 .. | 779.75 | 667.71 | 112.04 | 67.42 |
| 1989-90 .. | 861.44 | 714.13 | 147.31 | 52.58 |
| 1990-91 .. | 896.79 | 853.37 | 51.60 | .. |

14. பணியாளர் நலம் :

14.1. வனச் செல்வம் அழிக்கப்படாமல் பாதுகாத்து அதன் [illegible] தரத்தைத் குறையாமல் காக்கும் பொருட்டு ஆர்வத்துடன் அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணிபுரிவதில் நம் அதிகாரிகளும், வனப்பணியாளர்களும் பெருமிதம் கொள்ளச் செய்வதோடு மட்டுமல்லாமல் சாத்தியமான அளவுக்கு அவர்கள் அமைதியான முறையில் நலமுடன் வாழ்வழி செய்வதும் நம்முடைய நோக்கங்களாகும். வனப்பணியாளர்களின் சில கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவையாவன:

(அ) வனச் சரகர்களின் சம்பள வீதத்தை ரூ. 1,640—2907 என்பதிலிருந்து ரூ. 2,000—3,200 ஆக உயர்த்துதல்.

(ஆ) வனவர்களுக்கு ரூ. 1,200—2,040 என்ற வீதத்திலிருந்து ரூ. 1,400—2,500 ஆக உயர்த்துதல்.

802 16609
D V2 11, 31 ...
2




(இ) வனப்பு[illegible]ப்பை வலுப்படுத்துதல் மற்றும் வனங்
கள[illegible] பாது[illegible] போன்ற இருநோக்கங்களுடன் 20 வரு
டங்களுக்கும் மேலாக பதவி உயர்வுக்காக காத்திருக்கும் வனப்
பணியாளர்கள் பலரின் மனக்குறையைப் போக்கி, தேக்க
நிலையைக் குறைப்பதற்கு, வனச்சரகர்கள் பணியிடங்களைக்
கணிசமான அளவுக்கு உயர்த்துதல், வனவர் பதவிகள் 150-ஐ
வனச்சரகர்கள் பதவிகளாக உயர்த்த அரசு ஏற்றுக்கொண்
டது. இதை அடிப்படையாகக் கொண்டு முதல் கட்டமாக,
1990-91-ஆம் ஆண்டுகளில் வனவர் பதவிகளை 50-ஐ வனச்
சரகர்கள் பதவிகளாக நிலை உயர்த்த அரசு ஒப்புதல்
அளித்தது. ஒவ்வொரு ஆண்டும், 50 பதவிகளை நிலை
உயர்த்தும் பணி 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டுகளில்
தொடரப்படும்.

15. முடிவுரை :

15.1. தேசிய வனக் கொள்கையை மனதில் கொண்டு நமது
மாநிலத்தில் உயிரின வாழ்க்கைச் சூழலை மேம்படுத்த நம் வனங்
களையும் தரிசு நிலங்களையும் பசுமையாக்குவதே நமது முயற்சி
யாக இருக்கும். காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், இத்தொலை
நோக்குத்திட்டத்தை முறைப்படுத்தி 10 ஆண்டுகளில் அவற்றை
முடிப்பதன் வாயிலாக நம்முடைய திட்ட அணுகுமுறை சிறந்த
தாக்கப்படும் நம் திட்ட அணுகுமுறை இயற்கை வளங்கள்
நிலைபேறு அடையும் வகையில் நல்ல முறையில் நிருவகிக்கக்
கூடியதாய் இருக்கும்.

15.2. சுற்றுச் சூழலை நிலைப்படுத்தி உயிரினங்களின்
வளர்ச்சியைச் சமநிலைப்படுத்தி அவற்றை மேம்படுத்துவதன்
மூலம் உள்ளவர், இல்லாதவர் என்ற வேறுபாடின்றி அனை
வரின் வாழ்க்கைத் தரத்தினையும் எல்லாவகையிலும் உயர்த்த
நம் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இருப்
பினும் காடுகள் அழிக்கப்பட்டு வருவதை மிகுதியாகக் குறைத்து
அதன் மூலம் வசதி இல்லாத ஏழை மக்களுக்கு அவர்களு
டைய வாழ்க்கை வசதியை மேம்படுத்தி, உணவு, உறையுள்,
உடை ஆகியவற்றிற்கு நிலையான வருமானம் கிடைக்கச்
செய்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த
நமது அரசு பல அரிய முயற்சிகளை மேற்கொள்ளும். மேலும்
கிராம மக்களுக்கு காடுகள் நேரிடையாகவோ, மறைமுக
மாகவோ வேலை வாய்ப்புகள் கிடைக்க வகை செய்கின்றன.
ஊக்கத் தொகை மற்றும் மானியம் வழங்குவதன் மூலம் மக்களி
டையே காடுகள் அழிப்பதைத் தடுத்து மரங்கள் வளர்க்க
வேண்டும் என்ற உணர்வை வளர்க்க நமது அரசு முயற்சிக்கும்
அதிக பரப்பில் காடுவளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வ
தால் மாநில சுற்றுச் சூழல் பாதுகாப்பும் கிராமங்களிலுள்ள
ஏழை மக்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பும் கிடைப்பதற்
கான வாய்ப்புகள் பெருகும் என்பது உறுதி.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigal, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.